॥ श्रीः ॥

शाश्वतधर्मगोप्त्रे श्रीमते वासुदेवाय नमः ॥



# जातक द्वादशभाव फलनिर्णयः ॥

# ஜாதகத்வாதசபாவ பலநிர்ணயம்.

## முதற்பாகம்.

1ம் பாவம் முதல் 5ம் பாவம்முடிய.

இதில் பராசரஸம்ஹிதை, ஸாராவளி, ஸர்வார்த்த
சிந்தாமணி, ஜாதகதத்துவம், பலதீபிகை
இவற்றிற் சொல்லிய பாவபலன்கள்
தமிழுரையுடன் அடங்கியிருக்கின்றன.

இச்சிறந்த உரை
மஹாமஹோபாத்தியாய வேதாந்தகேஸரி
பங்காருடு ப்ரம்ஹஸ்ரீ கணபதி சாஸ்திரிகள்
அவர்களின் முக்கிய சிஷ்யரும், வியாகரண வேதாந்த
சாஸ்திர பாரங்கதரும், பாகவத பகவத்கீதோபன்யாஸகரும்,
சோதிட மந்திர சாஸ்திர வித்வானும் 'ஆர்யமதஸம்வர்த்தனி'
பத்திராதிபருமான

**ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள்**

அவர்களால் இயற்றி
தமது ஆர்யமத ஸம்வர்த்தனீ அச்சு இயந்திரசாலையில்
அச்சியற்றி சென்னையிற் பிரசுரஞ்
செய்யப்பட்டது.

காபிரைட்.] 1928. [விலை ரூ. 3-0-0.

ஆர்யமத ஸம்வர்த்தனீ பிரஸ்,
72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

श्रीमते वासुदेवाय नमः ॥



# ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம்.

## முகவுரை.

अर्थार्जने सहायः पुरुषाणामापदर्णवे पोतः ।
यात्रायामपि मन्त्री जातकमपहाय नास्त्यपरः ॥

"புருஷர்களுக்குப் (ஜீவர்களுக்கு) பொருள் தேடும் விஷயத்தில் உதவிகருவியாகவும், ஆபத்தாகிற கடலைத்தாண்டும் விஷயத்தில் கப்பலாகவும், சத்துருஜயத்தை நாடிச் செல்லுங்கால் மந்திரியாகவும் ஆகக்கூடியது ஜாதகமேயொழிய ஜாதகத்தைத் தவிர்த்துப் பிறவொன்றுமாகாது" என்றதால் ஊழ்வினைப் பயனாய் உலகிற் பிறந்த மனிதஜீவனுக்கு ஜாதகமென்பது ஒருற்ற துணையாகவாகின்றதெனத் தெளிவாகின்றது. மாதாவின் வயிற்றினின்றும் வெளிவரும் ஸமயத்தில் உதயமான ராசி எதுவோ அதுவே ஜன்மலக்கினமெனப்படும். சூரியன் முதலிய கிரஹங்கள் எந்தெந்த ராசிகளில் இயற்கையாக ஸஞ்சாரத்திலிருந்து வருகின்றனவோ அந்தந்தராசிகள் ஜன்மலக்கினம் தொட்டு எத்துணையாவது வீடாகவாகுமோ ஜன்மலக்கினத்திற்கு அத்துணையாவது வீட்டில் அவைகளிருப்பதாகக் கொள்ளப்பட்டு தத்தமது ஆக்ஷி, உச்ச, நீச, மூலத்திரிகோண வீடுகளுக்கும் அப்பொழுதிருக்கும் வீட்டுக்கும் உள்ளநிலையை முன்னிட்டு அக்கிரஹங்கள் பலனைத்தருவனவாகவும் கொள்ளப்படும். இவ்விதம் ஒரு ஜீவன் ஜனித்த ஸமயத்திலுதயமான ராசியை ஜன்மலக்கினமாகவும், அதற்கடுத்துள்ள வீடுகளைக் குடும்பம், ஸஹோதரம், பந்து, புத்திரன் முதலியபாவங்களாகவும் அறிய வேண்டும்.

ஆகவே இவ்விதம் அந்தந்த விடங்களிலிருக்கும் கிரஹம், அவற்றைப்பார்க்கும் கிரஹம், அந்தந்த விடத்திற்குடையவனு

டன் சேர்க்கையை யடையும் கிரஹம், ஓரிடத்திருக்கும் கிரஹத்திற்கும் மற்றோரிடத்திருக்கும் கிரஹத்திற்குமுள்ள கேந்திரத்திரிகோணாதி ஸம்பந்தம் முதலியவற்றைக் கொண்டு ஜீவனது வாழ்நாளில் குடும்பாதிகள்மூலம் நேரும் சுபாசுபபலன்களை யறிவிக்கும் சாஸ்திரம், ஜாதகமெனப்படும். அஃதுடன் சாஸ்திரமூலம் பலனையறிவதற்காகச் சூரியாதிக்கிரஹங்களுடன்கூடின லக்கினாதி 12 பாவங்களாகக் கொள்ளப்பட்ட 12வீடுகளுள்ள ஓர்கட்டிடத்தையும் ஜாதகமென்று சொல்லுவதுண்டு. ஆகவே ஜாதகத்திலமைந்துள்ள ஜீவனுடைய உதயலக்கினத்தை (1) 1ம் பாவமாகவும், அதற்கடுத்துள்ள வீட்டை 2ம் பாவமாகவும், இவ்விதமே 3ம் பாவம், 4ம் பாவம், 5ம் பாவம், 6ம் பாவம், 7ம் பாவம் 8ம் பாவம், 9ம் பாவம், 10ம் பாவம், 11ம் பாவம், 12ம் பாவம் முதலியவற்றையும் கணிதசாஸ்திரமுறைப்படிக் கணித்துக் கண்டு கொள்ளவேண்டும். இவ்விதம் பாவநிர்ணயம் செய்து கொண்ட பின்னர் ஜீவனது ஜனனகாலத்திலமைந்துள்ள சூரியாதிக்கிரஹங்களைக் கொண்டு அவனது வாழ்நாளில் அந்தந்தபாவமூலம் நிகழக்கூடியவை இன்னின்னதென்பதை இந்நூலில் விளக்கியிருப்பதால் இதற்கு ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம் என தனிப் பெயர் கொடுத்தது பொருத்தமாகவாகிறது. மேலும், தசாபுக்தியாதிகளையும், கிரஹகோசரத்தையும் கொண்டு அப்பலன் இன்னின்ன ஸமயத்தில் நிகழும் என்பதையும் கண்டுகொள்ள வேண்டும். (2) ஆகவே ஜீவனது ஜனனகாலத்திலுதயமான லக்கினம், அக்காலமமைந்துள்ளக் கிரஹங்களின் நிலை இவற்றைக் கொண்டு அவனது வாழ்நாளில் நேரும் பலன்களையறியும் விஷயத்தில்,

---

(1) இங்கு லக்கினம் முதலியபாவங்கள் பொதுவாகச் சொல்லப்பட்டிருப்பதால் இத்துடன் நின்றுவிடாமல் கணிதசாஸ்திரமூலம் லக்கினாதி 12 பாவங்களையும் முறைப்படிஸ்புடம் செய்து நிர்ணயித்துக் கொள்ள வேண்டுவது மிகவுமவசியமானது.

(2) தசாபுக்திபலன்களை நமது உடுதசாபல நிர்ணயம் என்ற புஸ்தகத்திலும், கோசரபலன்களை கோசர பலநிர்ணயம் என்ற புஸ்தகத்திலும் பரக்கக்காண்க.

(1)சூரியன், (2)ப்ரம்ஹா, (3)வியாஸர், (4)வஸிஷ்டர், (5)அத்திரி, (6) பராசரர், (7) காஸ்யபர், (8) நாரதர், (9) கர்க்கர், (10) மரீசி, (11) மனு, (12) அங்கிரஸ், (13) ரோமசர், (14) பௌருகுத்ஸர், (15) ச்யவனர், (16) யவனர், (17) பிருகு, (18) சௌனகர் என்ற 18 மஹருஷிகள் ஜ்யோதிஸ் சாஸ்திரத்தைச் செய்து உதவியிருக்கின்றனர். அவ்விதம் முக்காலங்கண்ட அம்மஹான்களா லியற்றப் பெற்ற நூல்களை ஆதாரமாகக் கொண்டு பின்னர் வந்துள்ள வராஹமிஹிராசிரியர் முதலியபெரியார் பிருஹத்ஜாதகம் முதலிய பற்பலநூல்களை வெகு சுருக்கமாகவும், தெளிவாகவும் செய்தருளியிருக்கின்றனர். வாழையடிவாழையாய் அவர் பின் வந்த கல்லியாணவர்மா, மந்திரேஸ்வரர், வெங்கடேஸ்வரர், மஹாதேவர் (இவர்சோதிட சாஸ்திரநிபுணரான ஓர்பண்டிதர்) முதலிய மஹான்கள் முறையே ஸாராவளி, பலதீபிகை, ஸர்வார்த்தசிந்தாமணி ஜாதகதத்துவம் முதலிய பற்பலநூல்களை இயற்றி யருளினர். இவ்விதம் இப்பெரியாரா லியற்றப்பெற்ற நூல்கள்யாவும் வடமொழியிலிருப்பதன்மூலம் அதன் கண் அமைந்துள்ள பொருளை எளிதில் எவரும் சுளுவாக அறிந்து பயனடைய முடியாதிருப்பதையும், ஒரேசமயத்தில் ஒரேபாவ விஷயமாக மேற்கூறிய பெரியாரின் அபிப்பிராயத்தைச் சுளுவில் ஒரேபுஸ்தகமூலம் அறிந்து பயனடைய முடியாதிருப்பதையும் உணர்ந்து லக்கினம் முதலிய அந்தந்த பாவவிஷயமாக அவரவர் சொல்லியிருக்கும் சுலோகங்களை அந்தந்தபாவத்தில் சேர்த்தெழுதி தமிழில் அவற்றைப் பெயர்த்து ஜாதக த்வாதசபாவ பலநிர்ணம் என அதற்குத் தனிப்பெயர் கொடுத்து வெளியிடத்தொடங்கி இந்தமுதலாவது புஸ்தகத்தில் (1) லக்கினபாவம், (2) தனபாவம், (3) ஸஹோதரபாவம், (4) பந்துபாவம், (5) புத்திரபாவம், ஆகிய 5 பாவபலன் விஷயமான வசனங்களைமட்டும் தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிட்டிருக்கிறோம். ஆனால் ஒரேபாவவிஷயமாகப் பலநூற்களிலுள்ள வசனங்களை மொழிபெயர்த்தெழுதி யிருக்குமிடத்து ஒரேவிஷயமாக ஒருவர் சொல்லுவதற்கும், மற்றவர் சொல்லுவதற்கும் சில முறண்பாடுகள் காணப்படுகின்றன வாயினும்.

विफलान्यन्यशास्त्राणि विवादस्तेषु केवलम् ।
प्रत्यक्षं ज्यौतिषं शास्त्रं चन्द्रार्कौ यत्र साक्षिणौ ॥

என்றபடி இது அனுபவசாஸ்திரமாகையால் அவரவர் அனுபவத்தில் பெரும்பாலும் ஒத்துவருவதையே அவரவர்வெளியிட்டிருப்பதால் நாமும் அவ்விதமே அனுபவத்திலொத்துவருவதையே அவ்விஷயத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுவது அவசியம் என்றெற்படுகின்றது. இவ்விஷயமான உண்மையறியாது சில ஸாதுக்கள் பின் வருமாறு சொல்லுகின்றனர். அதாவது: சோதிடசாஸ்திரமானது பொதுவாய் அவரவர் புத்திக்கெட்டியதைக் கொண்டு ஒருவாறு கல்பித்து எழுதபட்டதே யொழிய உண்மையான சாஸ்திரமாக இது ஒருபொழுது மாவதற்கிடமில்லை. அவ்விதமுண்மையான சாஸ்திரமாக இது இருக்குமானுல் ஓரேவிஷயத்தில் ஒருவர் சொன்னபடி மற்றவரும் ஏன் சொல்லியிருக்கக்கூடாது. 5ந்துடன் 5ந்தைக் கூட்டினுல் ஒருவர்க்கு 10 ஆகவும், மற்றவர்க்கு 9 ஆகவும் ஆகமுடியுமோ? ஒருபொழுதும் முடியாது என்பது போலவே அன்றே இந்தப் பலசாஸ்திரமும் இருக்கவேண்டும். இந்தச் சாஸ்திரமோ அவ்விதமிருப்பதாகத் தெரியவில்லை. மேலும், ஒருவனுக்கு ஒரு காலத்தில் இன்னின்ன பலன்தான் நடக்கும் என இந்த 9 கிரஹம், 12 ராசி, 27 நக்ஷத்திரங்களைக் கொண்டு நிர்ணயமாகச் சொல்லுபவரை இதுகாறும் கண்டதுமில்லை. ஆகவே இந்தப் பலசாஸ்திரம் ஒருவாறு ஊஹித்தெழுதப்பட்டதே யொழிய கணிதசாஸ்திரம் போல அவ்வளவு நிர்ணயமான சாஸ்திரமாகவாகமாட்டாது என்பதாம்.

இவ்விதம் சொல்லுபவர்க்குச் சமாதானம் சொல்லுகிறோம். நமது இந்தியாவை மட்டும் எடுத்துக்கொள்வோம். இந்தியாவில் சற்றேறக்குறைய 33 கோடிமனித ஜீவர்களிருக்கின்றனர். இவர்களுள் ஓரேகுடும்பத்தில் ஓரேதாயின் வயிற்றினின்றும் பிறந்தவர்களுள் ஒருவர்க்கிருந்தபடி மற்றவர்கில்லாமல் சுகதுக்கானுபவமும் அவற்றையுண்டாக்கும் வஸ்துக்களின் சேர்க்கையும் மாறிமாறி ஏற்படுவதை எவரும் மறுக்கவியலாது. இவ்விதம்

மாறுன அனுபவமிருப்பதற்குக் கண்கூடான காரணமொதையும் சொல்லிச் சாதித்து விடமுடியாது. காரணமொன்றில்லாமல் காரியமானது நிகழ்வதில்லை என்பதையோ எவரும் ஒப்பியே தீரவேண்டும். அம்மாறுன அனுபவத்திற்குக் காரணம் யாதெனை ஆலோசிக்குங்கால் முந்தின ஜன்மத்திற் செய்த புண்ணியபாப கர்மங்களேயே அதன்காரணமாகச் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு யோஜிப்போம். ஒருவனுக்கு நிகழும் காரியங்களான சுகதுக்கங்களோ கண்கூடாகக்காணப்படுகின்றன. அதன் காரணங்களான புண்ணிய பாபங்களோ கண்கூடாகக் காணமுடியாதனவாய்ப் பலனைக்கொண்டு ஊஹித்தறிய வேண்டியனவாயிருப்பன பற்றி அப்புண்ணியபாபங்கள் நித்யபரோக்ஷங்கள் (ஒருபொழுதும் கண்கூடாக காணக்கூடியனவன்று) எனப்படுகின்றன. ஆகவே ஒருவனுக்குக்காரியமான சுகம்வந்ததென்றோ, துக்கம்வந்ததென்றோ வைத்துக்கொள்ளுவோம். எம்மாதிரியான புண்ணியத்தால் இந்தச் சுகம்நேர்ந்தது, எம்மாதிரியான பாபத்தால் இந்தத்துக்கம் நேர்ந்தது எனக் காரணத்தைப் பற்றிய நிர்ணயக்ஞான மேற்படுவதற்கிடமில்லாதவர்களாய் புண்ணியம் என்றும், பாபம் என்றும் பொதுவாகவே காரணத்தைப்பற்றிய தோற்ற மேற்படக்கூடிய நிலையில் நாமிருக்கிறோம்.

இவ்விதமிருக்கும் பொழுது 12 ராசி, 24 ஹோரை, 36 திரேஷ்காணம், 108 நவாம்சம், 360 திரிம்சாம்சம், 144 துவாதசாம்சம், 9 பிரதானக்கிரஹங்கள், 27 நக்ஷத்திரங்கள் இவைகளைக் கொண்டு முற்கூறியபடி ஒருவருடைய புண்ணியபாப கர்மமிருந்தபடி மற்றவர்க்கில்லாத நிலையிலுள்ள 33 கோடி மனித ஜீவர்களுக்கு அவரவர் புண்ணியபாபகர்மமூலம் மாறிமாறிவருவனவற்றை ஒருவாறு குறிப்பிடுவதைத் தவிர்த்து நிர்ணயமாக எவ்விதம் ஒருசாஸ்திரத்தில் எழுதமுடியும். அவ்விதமும் எழுதுவதானால் அந்நூல்களுக்கு முடிவுதானேற்படுமோ? ஆகவே மேற்கூறியவாறு 12 ராசிமுதலியவற்றைக் கொண்டு ஒருவாறு பொதுப்பலனைகச் சொல்லியிருப்பதில் பற்பலமாறுபாடிருப்பதையும் ஆலோசித்தறிந்து அதுடன் முன்பின் அனுபவத்தையும்

கலந்து கொண்டு இஷ்டதேவதாத்தியானத்துடன் ஒருவன் பலன் சொல்ல வேண்டுமென்பதற்காகவேதான் மஹான்கள் பொதுப் பலன் காணும்முறையாக இம்மாதிரி நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். ஆகவே மேதாவிகூறுகிறபடி குறிப்பாய் நிர்ணயமானபலன் கூறவில்லை என்றாலும், இதுசாஸ்திரத்திற்கு ஒரு குறையாக வாகாது. ஆனால் உண்மையில் பொதுப்பலன் கூறும் முறையிலுங் கூட முற்கூறிய மஹான்கள் நிர்ணயமானபலனையே தான் உபதேசித்துமிருக்கின்றனர். ஆனால் அந்தந்தச்சாஸ்திரவசனங்களைக் கொண்டு நிர்ணயமானபலன் சொல்லுவது பலஜாதக விஷயங்களில் தவறிவிடுகிறதே இதற்கு யாதுசொல்லுவீர்களெனலாம். அதனுண்மையைப் பின்வருமாறுகாண்க. அதாவது:

சாஸ்திரங்கள் இன்னலக்கினம்,இன்னநவாம்சாதிகள் இவற்றில் இன்னின்னக்கிரஹங்கள் இன்னின்னவிதமான அமைப்புடனிருக்கப் பிறந்தவனுக்கு இன்னின்னபலன் நடக்கும் எனத் தெரிவிக்கின்றன. அவ்விதம் பலன்சொல்லித்தவறின ஜாதகங்களில் ஏதோ தவறிருந்து அதன் மூலம் இந்தச் சாஸ்திரவசனம் அனுபவத்தில் ஒத்துவரவில்லையென்று கொள்ளவேண்டுமே யொழிய ஸர்வக் ஞர்களான பெரியார் சொல்லிய நிர்ணயத்தில் ஆசங்கை கொள்ளுவது ஒருபொழுதும் பொருந்தாது என்கிறோம். ஏனெனில் மேற்கூறிய சாஸ்திரவசனங்களை யாதாரமாகக் கொண்டு சொல்லும் பலன்கள் 100ல் 10 பேருக்காவது நிர்ணயமாக நடக்கும் பொழுது மற்றவர் விஷயத்தில் தவறுவதற்கு ஜாதகத்திலுள்ள லக்கினாதிகளின் தவறு காரணமாகுமே யொழிய சாஸ்திரமே தவறாக எவ்விதமாகக்கூடும். ஒருபொழுதும் ஆக மாட்டாது. அதுடன் ஷெ சாஸ்திரங்களைப் படித்து அதன் மூலம் தமக்குண்டான ஒருமாதிரியான அறிவைக் கொண்டுப் பலன்சொல்லும் சோதிடவித்வான்களைப் பொருத்ததாகவும் இதில் சிலவிஷயமிருக்கிறது. ஆகவே சாஸ்திரத்திற் சொல்லிய நிர்ணயமான பலன் ஓரிடத்தில் ஒற்றுவராததற்கு ஜாதகத்தவறும், சோதிடவித்வான்களின் தவறும் காரணமே யொழிய அது சாஸ்திரத்தின் தவறாக ஒருபொழுது மாகமாட்டாது என்று கொள்ளவும்.

மேலும், காரணமும், அதன் காரியமும் எங்குகண்கூடாகக் காணப்படுகின்றனவோ அவ்விடத்தில் காரணகாரிய விஷயமாக எத்துணை பேருபதேசிக்கத் தொடங்கினாலும் அவரவர் பாஷை யிலும், உபதேசஞ்செய்யும் முறையிலும் வேறுபாடு காணப்படு மே யொழிய முக்கியமான காரணகாரியவிஷயத்தில் மாறுபாடு இருப்பதற்குநியாயமில்லை. எங்கு காரியம் மட்டுமே கண் கூடா கக் காணப்பட்டு அதன் காரணமானது ஊஹித்தறியக் கூடிய நிலையிலிருக்கின்றதோ அவ்விடத்தில் காரணத்தைப் பற்றிய உப தேசமாறுபாடுக ளிருக்கத்தானிருக்கும். இதுபோலவே எங்கு காரணமானது கண்கூடாகவாகி அதன் காரியமானது ஊஹித் தறியப்படுமோ அங்கும் காரியத்தைப்பற்றிய உபதேசமாறுபாடு களிருப்பதில் யாதும் தடையில்லை. ஆகவே காரணமான ஊழ் வினையாது நித்யபரோக்ஷ மாயிருப்பதுபற்றி பரோக்ஷமாயுள்ள ஊழ்வினையை நவக்கிரஹங்களின் கதியைக்கொண்டு அறியும் முறையை ஒருவாறு மஹான்களுபதேசித்திருப்பதால் அதை விரிவுபடுத்தி உபதேசிக்கவேண்டி அம்மஹான்கள் சொல்லிய வற்றை ஆதாரமாகக்கொண்டுப்பின்னுள்ள ஆசிரியர்கள் ஊஹித் துப் பலன் கூறுவதில் சிற்சில மாறுபாடுகளிருப்பதில் தவறு எதுவுமில்லை என்றே எண்ணுகிறோம்.

சங்கை—அங்ஙனமாயின் சோதிடசாஸ்திரமானது வெரும் ஊஹமே யொழிய நியதமான பொருளுள்ளதன்று என்று கூறி யது உறுதிசெய்யப்பட்டதாக வன்றோ ஆகின்றது. எனின்?

உத்தரம்—அநியதமான ஊழ்வினையாகிற காரணமூலமேற்ப டும் காரியமான சுகதுக்கரூபபலனை யுபதேசிக்க வேண்டி இந்தச் சோதிடசாஸ்திரமானது ஏற்பட்டிருப்பதால் நியதமாக (அழியா ததாக)இல்லாதிருக்கின்ற ஸ்வர்க்கநரகாதிகளையுபதேசிக்கும் கர்ம காண்டங்கள் போலவே தான் இந்தச் சோதிடசாஸ்திரமுமாவ தால் நியதப்பொருளற்றிருத்தல் என்பது அதனியல்பே யொ ழிய அதைச் சாஸ்திரத்தின் குற்றமாகக் கொள்ளமுடியாது என் கிறோம். ஆகவே இந்தச் சோதிட சாஸ்திரமானது தானுபதே சிக்கத் தொடங்கிய விஷயத்தை வெகுதெளிவாகவே தானுபதே

**

சிக்கின்ற தென்றும், ஒரேவிஷயத்தில் மாறுமாறான உபதேசம் காணப்படுவது அதன் பொருளின் நிலையற்றதன்மை மூலமேற்பட்டதென்றும் கண்டு கொள்ளவும். மேலும், சோதிடசாஸ்திரமானது வெரும் ஊஹமாகவே இருக்கட்டும். அவ்வூஹத்தாலும் நமக்கொரு நன்மையேற்படும்பொழுது அதைப் பயனற்றதெனத் தள்ளிவிடமுடியுமோ? ஒருபொழுதும் முடியாது.

ஆகவே எவரும் தமது ஊழ்வினை மூலம் நேரும் எதிர்காலப்பலனை இந்நூல்கள் மூலமறியவேண்டுவது மிகவுமவசியமானதாகவே ஏற்படுகிறது. இவ்விதம் இந்நூலைத் தமிழ் மக்கள் யாவர்க்கும் பயன் படுத்தவேண்டிப் பற்பல நூல்களிலுள்ள ஸ்லோகங்களை இந்த ஒரே நூலில் அந்தந்தப்பாவபலன் கூறுமிடத்து எழுதி மொழிபெயர்த்து நாம் வெளியிடவாரம்பித்திருப்பதில் பின்னும் எத்துணையோ பாடுபட்டு பற்பல விளக்கமெழுதி வெளியிடவேண்டுவது அவசியமாயிருப்பதுடன் அவ்விதமே செய்யவேண்டுமென்ற ஆவலும் நமக்கிருக்கின்றதாயினும், போலி நாவல்களுக்கும், ஜாதிமதச்சண்டைகளுக்கும், மற்றும் சிலவற்றுக்கும் பேருக்கமளித்து ஆதரித்துவரும் இத்தமிழ்நாடு எம்மைச்சற்றுத் திரும்பிப் பார்த்திருக்குமானல் இது விஷயமாய் எத்துணையோ விளக்கங்களை நாமே எழுதியோ, அறிஞர்களைக்கொண்டு எழுதச் சொல்லியோ அதை நாம் வெளியிட்டிருப்போம். இதுவரை நமக்குத் தமிழ்நாடு செய்திருக்கும் உதவிக்கு எம்மால் எவ்வளவு வேலை செய்யக்கூடுமோ அவ்வளவு செய்து விட்டோம். இனியேனும் அத்தகைய உதவி தமிழ்நாட்டினின்றும் போதியவளவு கிடைக்குமானல் 2, 3-வது புத்தகங்களில் அவ்விளக்கத்தை உறுதியாய் செய்தே தீருவோம் என்பதை மட்டும் இப்பொழுது தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அத்துடன் நந்தமிழ்ப்புலவர்க்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அதாவது: நாம் வடமொழியிலுள்ள ஆபூர்வமான சாஸ்திரங்களை வெகுபாடுபட்டுப் பிறருதவியின்றித்தமிழில் பெயர்த்துத் தமிழ்மக்களுக்கு அதன் பொருளை விளக்கவேண்டி வெளியிட்டுவரும் இக்காரியத்தில் தமிழ்பாஷையில் சிற்சில

பிழைகளிருப்பின் அதைத்தாங்கள் பொருட்படுத்தாது எமது நோக்கத்தைக் குறித்து களிப்படையவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோமென்பதாம். மேலும், மஹான்களாலியற்றப் பெற்ற மூலக்கிரந்தங்களுடைய பொருளை எமது புத்திக்கெட்டியவளவு தமிழில் பெயர்த்தெழுதியிருப்பதில் எவர்க்கேனும் நாம் எழுதியிருப்பதை விட அதிகமான பொருள் தோன்றக் கூடுமாதலால் அதற்கு உதவியாக விருக்கவேண்டியே தனி மொழிபெயர்ப்பை மட்டும் வெளியிடாமல், மூலஸ்லோகங்களையும் கூடியவரைதிருத்தி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். நாம் எழுதிய பொருளில் எவர்க்கேனுமாக்ஷேபமிருந்தால் அவர் அப்பொருளை விடுத்து வேறுபொருள் கொள்ளுவதற்கு இம்மூலஸ்லோகங்களின் வெளியீடு அவர்க்கு வெகு உதவியாகவிருக்குமென்றே நாம் எண்ணுகிறோம். எவ்விதமேனும் இம்மாதிரியான புராதன நூல்களின் கருத்துக்கள் தமிழுலகில் பரவவேண்டுமென்பது நமது முக்கிய நோக்கமேயல்லாது நமது புகழ்பரவ வேண்டுமென்ற நோக்கம் நமக்கில்லை.

இந்நூலில் வெளியிட்டிருக்கும் ஸாராவளியும் பராசரஸம்ஹிதையும் வெகு உயர்ந்தநூல்களாயினும் அவற்றைச் செய்த கல்லியாணவர்மா பராசரர் இவர்கள் இன்று திரும்பிவந்து பார்த்தார்களானல் தன்தலையிலடித்துக் கொண்டு கதறும்படியான அவ்வளவு கேவலமான நிலையில் அதன் சுலோகங்களை ஒருப்பிரதியில் கண்ட நாம் எமது புத்திக்கெட்டியவளவு திருத்தி அவற்றை அச்சிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் நண்பர் எவரேனும் சுத்தமான ஸாராவளிப்பிரதியோ, பராசரஸம்ஹிதைப்பிரதியோகிடைத்து எமக்கு அவற்றை யனுப்பினல் அதை வந்தனத்துடன் ஏற்று சுத்தமான முறையில் அவற்றை அச்சிட்டு, சோதிட சாஸ்திரத்தினுடையவும், கல்லியாணவர்மா பராசரர் இவர்களுடையவும் கவுரவத்தைக் குன்றாது காக்கச்சவுகரியம் எமக்கேர்ப்படக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும், ஸர்வார்த்த சிந்தாமணி, ஜாதகதத்துவம், சிலவிடங்களில் பலதீபிகை இவற்றையும் தமிழில் பெயர்த்திருப்பதிலும், மூலத்தை அச்சிட்டிருப்பதிலும் நேர்ந்துள்ள குற்றங்

குறைகளையும் எமக்கு அறிவிக்கும் நண்பர்களின் நன்றியைப் பாராட்டி மறுபதிப்பில் அதைத்திருத்தி அச்சிட்டு வெளியிட்டு விடுவோம்.

இங்ஙனம்.

கடலங்குடி நடேசசாஸ்திரிகள்.

ஆரியமத ஸம்வர்த்தனீ பத்திராதிபர்

22-11-28

சென்னை.

# பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சோதிட சாஸ்திரத்தில் லக்கினுதி 12 பாவங்களேயும் ஒன்றன்பின்னென்ருக அமைத்திருப்பதின் கருத்தைக் கார்யகாரண பாவமுறையை யனுஸரித்து விரிவாய் நிரூபித்தல் ... | 1—2 |
| ஒவ்வொரு பாவபலனேயும் எவ்விதமாருய வேண்டும் என்பது ... | 3 |
| பலதீபிகையிற் சொல்லிய 12 பாவங்களின் பொது விதிகள் ... | 4 |
| இன்னின்னக் கிரஹம் இன்னின்ன பலன்களுக்குக் காரகன் என்பது ... | 11 |
| இன்னின்னூர் இன்னின்ன பாவத்திற்குக்காரகர் என்பது | 12 |
| ஸாராவளியிற் சொல்லிய முதல் பாவபலன் ... | 17 |
| லக்கினுதிபன் லக்கினுதி 12 பாவங்களிலிருப்பதன் பலன் | ,, |
| சூரியாதிக் கிரஹங்கள் லக்கினத்தைப் பார்ப்பதால் காணவேண்டிய பலன்கள் ... | 19 |
| லக்கினபாவத்தின் விரிவான பலன்கள் ... | 23–27 |
| பராசர ஸம்ஹிதையிற் சொல்லிய லக்கின பாவபலன் ... | 28 |
| லக்கினுதிபதி 12 பாவங்களிலிருப்பதன் பலன் ... | 30 |
| ஜாதக தத்துவத்திற் சொல்லிய லக்கினபாவ பலன் ... | 31 |
| பாவபலனே பார்க்கும்பொழுது கவனிக்கவேண்டியவை.. | 32 |
| சரீரம் இளைத்தலின் யோகம் ... | 33 |
| சரீரம் புஷ்டியாயிருத்தலே அறிதற்குரிய யோகம் ... | ,, |
| சரீரம் உயரமாயும் குட்டையாயுமிருத்தலின் யோகம்... | 34 |
| வாமன யோகம் ... | 35 |
| அங்கக்குறைவு யோகம் ... | ,, |
| தேஹத்தில் கெட்டநாற்ற முண்டாகுதலின் யோகம் ... | 36 |
| லஜ்ஜையற்றிருத்தலின் யோகம் ... | ,, |

| | | பக்கம். |
|---|---|---|
| லஜ்ஜை யுள்ளவனுகுதலின் யோகம் | ... | 37 |
| கபடியாகுதலின் யோகம் | ... | ,, |
| கபடமற்றவனுகுதலின் யோகம் | ... | ,, |
| வெளிக்கு நல்லவனும், உள்ளில் கபடியுமாகுதல் | ... | 38 |
| சூரனுகுதலின் யோகம் | ... | ,, |
| பயந்தவனுகுதலின் யோகம் | ... | ,, |
| கோபியாகுதலின் யோகம் | ... | 39 |
| சண்டையிடுவதில் பிரியமுள்ளவனுகுதலின் யோகம் | ... | ,, |
| துரோஹியாகவாவதின் யோகம் | ... | ,, |
| திருடனுகவாவதின் யோகம் | ... | 40 |
| எப்பொழுதும் வியஸனி யாகுதலின் யோகம் | ... | ,, |
| வியஸனமற்றவனுகுதலின் யோகம் | ... | ,, |
| கோபாலனுய் (பசு மேய்ப்பவனுய்) ஆவதின் யோகம் | ... | 41 |
| நம்பிக்கை யற்றவனுகுதலின் யோகம் | ... | ,, |
| காமியாகும் யோகம் | ... | ,, |
| வீர்யக் குறைவுள்ளவனுகுதலின் யோகம் | ... | ,, |
| அலி (நபும்ஸக) யாகுதலின் யோகம் | ... | 42 |
| வீர்யம் ஒழுகுதலின் யோகம் | ... | 43 |
| உன்மாத (காக்கைவலிப்பு) முள்ளவனுகுதலின் யோகம் | | ,, |
| அதிகமாய்ச்சாப்பிடுதல், சுகபோஜனம் செய்தல், சிராத்தபோஜனம் செய்தல், கொஞ்சம் சாப்பிடுதல், சீக்கிரம் சாப்பிடுதல், அதிகநேரம் சாப்பிடுதல் இவற்றின் யோகம் | ... | 44-45 |
| தீர (தைர்யமுள்ள) வனுகுதலின் யோகம் | ... | 45 |
| பிசுன (கோட்சொல்லுபவ) னுகுதலின் யோகம் | ... | 46 |
| சில்பி (கைத்தொழில் செய்பவ) யாகுதலின் யோகம் | ... | ,, |
| க்ஞாதி பீடையுண்டாகும் யோகம் | ... | 47 |
| ஜாதிவிட்டு நீங்குதலின் யோகம் | ... | ,, |
| சோம்பலுள்ள வனுகுதலின் யோகம் | ... | 48 |
| நேத்திரரோகம் முதலிய நேத்திரஸம்பந்தமான பலன் | ... | 49 |
| குருடனுகுதலின் யோகம் | ... | 50 |

| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| செவிடனுகும் யோகம் | ... | 53 |
| நாஸிகை (மூக்கு) அறுபடுதலின் யோகம் | ... | 54 |
| முகத்தில் கெட்டநாற்ற முண்டாகுதலின் யோகம் | ... | ,, |
| ஊமையாகுதலின் யோகம் | ... | ,, |
| வாக்மீ (பேசும்திறமை யுள்ளவனு) யாகுதலின் யோகம் | | 55 |
| ஜிஹ்வா (நாக்கில்) தோஷமுண்டாகுதலின் யோகம் | ... | 56 |
| பல்லில் விகாரமேற்படுதலின் யோகம் | ... | ,, |
| கை நாசமாகும் யோகம் | ... | 57 |
| அண்ட வியாதியுள்ளவனுகுதலின் யோகம் | ... | ,, |
| முழங்கால் முறிபடுதலின் யோகம் | ... | ,, |
| நொண்டியாகும் யோகம் | ... | 58 |
| பராசர ஸம்ஹிதையிற் சொல்லிய லக்கின பாவபலன் | ... | 59 |
| ஸர்வார்த்த சிந்தாமணியிற் கூறிய லக்கின பாவபலன் | ... | 61–70 |
| தசவர்க்க நிரூபணம் | ... | 71 |
| ஷஷ்டியம்ச நிரூபணம் | ... | 73 |
| உத்தமம், ஸிம்ஹாஸனம், பாரிஜாதம், பாராவதம், தேவலோகம், ஐராவதம், வைசேஷிகம், என்ற ஸம்க்ஞைகளின் அர்த்தத்தை வெளியிடுதல் | ... | 75 |
| ஸ்தானபல நிரூபணம் | ... | 76 |
| திக்பலம், காலபலம், சேஷ்டாபலம் இவற்றை நிரூபித்தல் | | 77 |
| நிஸர்க்க பலம் திருஷ்டி பலம் இவற்றின் நிரூபணம் | ... | 78 |
| சூரியன் சந்திரன் இவர்களின் பலநிரூபணம் | ... | ,, |
| செவ்வாய் புதன் இவர்களின் பலவிவரணம் | ... | 79 |
| குரு சுக்கிரன், சனி, இவர்களின் பலநிரூபணம் | ... | 80 |
| ராஹு கேதுக்களின் பலநிரூபணமும், கேந்திராதி ஸ்தானஸ்திதி மூலமேற்படும் பலநிரூபணமும் | ... | 81 |
| கிரஹங்களின் அவஸ்தைகளும், அவற்றின் நிரூபணமும் | | 82 |

## இரண்டாம் பாவம்.

| | | |
|---|---|---|
| ஸாராவளியிற் சொல்லிய இரண்டாம் பாவபலன் | ... | 83 |
| இரண்டாம் பாவமூலம் காணவேண்டியவைகள் | ... | ,, |

பக்கம்.

மேஷாதி ராசிகள் இரண்டாம் பாவமாகவமைவதின் மூலம் கண்டறிவேண்டிய பலன்கள் ... 83
2 மிடத்ததிபன் லக்கினாதி பாவங்களிலிருப்பதன் மூலம் காணவேண்டியவைகள் ... 86
2 மிடத்தை சூரியாதிக்கிரஹங்கள் பார்ப்பதன் மூலம் காணவேண்டியவைகள் ... 89
பல், தாலு, இவற்றில் ரோகமும், காது அறுபடுதலு முண்டாகும் யோகம் ... 90
நிர்த்தனன் (பணமற்றவன்) தனிகன் இவர்களாயாகு தலின் யோகங்கள் ... 91
அநேகம் பெயர்களைக் காப்பாற்றுபவனாகவும் தனிக னாகவும் ஆகும் யோகம் ... 92
கணிதமறியும் யோகம் ... 93
தாரித்திரிய யோகம் ... 94
ராஜ தண்டம், தர்மம் இவற்றால் தனநாசமுண்டாகுதல்.. ,,
பொய், முகவியாதி, இவையுண்டாகும் யோகம் ... ,,
பிக்ஷாடன யோகம் ... 95
2மிடத்திலிருக்கும் கிரஹங்கள் மூலம் பார்வையின் குணமறிதல் ... ,,
சிராத்த போஜன யோகம் ... 96
போஜன யோகம் ... ,,
நாயினால் கடிபடும் யோகம் ... 97
பாம்பினால் பயமுண்டாகும் யோகம் ... ,,
நேத்திரத்திற்குக் கெடுதலுண்டாகும் யோகம் ... 98
பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 2ம் பாவபலன் ... 100
2க் குடையவன் லக்கினாதிபாவங்களி லிருப்பதன் பலன் 103
ஜாதக தத்துவத்திற்சொல்லிய 2-வது பாவபலன் ... 104
தனிகனாகுதலின் யோகம் ... ,,
ஆயிரம் நிஷ்காதிபதியாகும் யோகம் ... 106
இரண்டாயிரம் நிஷ்காதிபதியாகும் யோகம் ... ,,
பதினாயிரம் நிஷ்காதிபதியாகும் யோகம் ... 107

| | பக்கம். |
|---|---|
| லக்ஷாதிபதி யாகும் யோகம் ... | 107 |
| கோடீசுவரனுகும் யோகம் ... | ,, |
| பால்யத்தில் வெகுதனலாபமுண்டாகும் யோகம் ... | 108 |
| புதையல் கிடைக்கும் யோகம் ... | ,, |
| தானே பொருள் ஸம்பாதித்துத் தனிகனுகும் யோகம் | ,, |
| பிராதாவின் தனம் கிடைக்கும் யோகம் ... | 109 |
| தாயின் தனம் கிடைக்கும் யோகம் ... | ,, |
| புதையல் கிடைக்கும் மற்ருெரு யோகம் ... | ,, |
| பந்துவினுலோ, கிருஷியினுலோ தனம் கிடைத்தல் ... | ,, |
| புத்திரன் மூலம் தனம் கிடைக்கும் யோகம் ... | ,, |
| சத்துரு மூலம் தனப்பிராப்த்தி யுண்டாகும் யோகம் ... | 110 |
| களத்திர மூலம் தனபபிராப்தி யுண்டாகும் யோகம் ... | ,, |
| பொதுவில் தனப்பிராப்த்தி யோகங்கள் ... | ,, |
| தனநாச முண்டாகும் யோகம் ... | 111 |
| ராஜதண்டத்தால் தனநாசமுண்டாகும் யோகம் ... | 112 |
| நிர்த்தன (தனமற்றவனுகும்) யோகம் ... | 113 |
| பாபமூல முண்டாகும் தனநாச யோகம் ... | ,, |
| தர்மமூலம் தனக்குறைவுண்டாகும் யோகம் ... | ,, |
| சத்துரு, ஸ்திரீ, ஸஹோதரன், புத்திரன், பிதா, தாய், இவர்கள் மூலமும், பொதுவிலும் தனநாசமுண்டாகும் யோகம் ... | 114 |
| கெட்டநடத்தை, போஜனம், இவைமூலமும், மற்ற வழியிலும் தனநாசமுண்டாகும் யோகம் ... | 115 |
| நிர்த்தன (தனமற்றிருத்தலின்) யோகம் ... | ,, |
| மஹாதாரித்ரிய யோகம் ... | 116 |
| ராஜபுத்திரனும் தரித்திரனுகும் யோகம் ... | ,, |
| ஸம்பத்தியுண்டாகும் யோகம் ... | ,, |
| குடும்பியாகும் யோகம் ... | 117 |
| 50, 20, 30 ஜனங்களுக்குத் தலைவனுகும் யோகம் ... | ,, |
| அவமரியாதை யுண்டாகும் யோகம் ... | 118 |
| தனம், பரிவாரம் இவையற்றிருத்தலின் யோகம் ... | ,, |

***

| | பக்கம். |
|---|---|
| ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய 2ம் பாவபலன்... | 118 |
| நேத்திர ஸம்பந்தமான பலன்களைப் பற்றிய யோகங்கள் | 119 |
| வாக்கு ஜீவனம் தலைவனாகுதல் இவற்றைப் பற்றிய யோகங்கள் ... | 122 |
| முகத்தைப் பற்றிய பலன்களும், கோபியாகுதல் யுக்திமானாகுதல்,வாக்மியாகுதல் முதலிய பலன்களும்... | 123 |
| ஊமையாகும் யோகம் ... | 124 |
| வாசாலனாகும் யோகம் ... | ,, |
| ஸபையில் ஜடனாகும் யோகம் ... | 125 |
| சோதிட வித்வானாகும் யோகம் ... | ,, |
| கணக்கில் நிபுணனாகும் யோகம் ... | 126 |
| தர்க்க சாஸ்திரம் படிக்கும் யோகம் ... | ,, |
| வியாகரண பண்டிதனாகும் யோகம் ... | ,, |
| வேதாந்த பண்டிதனாகும் யோகம் ... | 127 |
| 6 சாஸ்திரமறியும் யோகம் ... | ,, |
| வஞ்சகனாகும் யோகம் ... | ,, |
| பரிஹாஸ குசலனாகும் யோகம் ... | ,, |
| க்ரமாந்தவேதாத்யயனம் சாஸ்திர பாண்டித்யம் இவையுண்டாகும் யோகம் ... | 128 |
| தனலாப முண்டாகும் யோகம் ... | ,, |
| புதையல் கிடைக்கும் யோகம் ... | 129 |
| ஸ்வார்ஜித தனமுண்டாகும் யோகம் ... | ,, |
| பிராதாவின் தனம் கிடைக்கும் யோகம் ... | 130 |
| தன்முயர்ச்சி, மாதா, பிராதா, புத்திரன் சத்துரு, களத்திரம், தானம், தர்மம் இவைமூலம் தனலாபமுண்டாகும் யோகம் ... | 131 |
| ராஜதண்டம், திருடன், லோகாபவாதம், நெருப்பு, இவைமூலம் தனநாசமுண்டாகும் யோகம் ... | 133 |
| நிர்த்தன யோகம் ... | 134 |
| சிறிதளவு தனமும், தனநாசமு முண்டாகும் யோகம்... | 135 |
| தனலாபம், தனநாசம் இவையுண்டாகும் யோகம் ... | 136 |

பக்கம்.
ஆயிரம் நிஷ்காதிபதி யாகும் யோகம் ... 137
லக்ஷாதிபதி யாகும் யோகம் ... 138
கோடீசுவரனுகும் யோகம் ... ,,
கடன் கொடுப்பவனுகவும், கடனுளியாகவு மாகுதல் ... 139
தந்த ஸம்பந்தமான பலன்களின் யோகம் ... 140
மோவாய் கட்டையில் ரோகம், கண் பிடுங்கப்படல் காது அறுபடல் இவற்றைப்பற்றிய யோகங்கள் ... ,,
போஜன பாத்திரத்தைக் கண்டறியும் யோகம் ... 142
அதிக போஜனம் செய்யும் யோகம் ... 143
சுகபோஜனம் செய்வதற்குரிய யோகம் ... 144
அன்னதானம் செய்யும் யோகம் ... 145
மிதாஹாரம் செய்யும் யோகம் ... ,,
பிறர் அன்னத்தைப் புஜித்தல், அதைத் தூஷித்தல் இவற்றிற்குரிய யோகம் ... ,,
சிராத்த போஜனம், கெட்ட போஜனம், சீக்கிரபோஜனம், தாமதித்த போஜனம் இவற்றின் யோகங்கள். 146
நெருப்பு, கொப்பளம் இவற்ருல் பயமுண்டாகும் யோகம் ,,
கெட்ட ரக்த முண்டாகும் யோகம் ... ,,
நாயினுல் பயமுண்டாகும் யோகம் ... 147
பாம்பினுல் பயமுண்டாகும் யோகம் ... ,,
புதையல் கிடைக்கும் யோகம் ... ,,
வாக்கில் உறுதியின்மை, வாயு, பீடை இவற்றின் யோகம் 148
விஷப்பிரயோக முண்டாகும் யோகம் ... 148

## மூன்றும் பாவபலன்.

ஸாராவளியிற் சொல்லிய மூன்றும் பாவபலன் ... 149
மூன்றும் பாவமூலம் கண்டறிய வேண்டியவைகள் ... ,,
மேஷாதி ராசிகள் மூன்றும் பாவமாகவமைவதின் மூலம் கண்டறியவேண்டிய பலன்கள் ... ,,
மூன்றும் பாவாதிபதி லக்கினுதிகளிலிருப்பதா லுண்டாகும் பலன்கள் ... 152

பக்கம்.

மூன்றும் பாவத்திற்கு ஸூரியாதி கிரஹங்களின் திருஷ்டியாலேற்படும் பலன்கள் ... 155
மூன்றும் பாவத்திற்கு வேறுகிரஹங்களின் சேர்க்கை முதலியவற்ரு லுண்டாகும் பலன்கள் ... 156
ஸஹோதர விஷயமான பலன்காணும் யோகம் ... 158
ஸஹோதரரின் எண்ணே அறிதலுக்குரிய யோகம் .. ,,
சனி, சுக்கிரன், புதன் இவர்கள் 3 மிடத்திலிருந்து, செவ்வாய், குரு, சூரியன் இவர்களால் பார்க்கப் படுவதின் பலன் ... 159
ஸஹோதர ஸஹோதரிகளுக்குக் கண்டறிய வேண் டிய பலன்கள் ... 160
இன்னின்னவிடம் ஸஹோதரஸ்தானமாகும் என்பன முதலியன ... 162
பராசர ஸம்ஹிதையிற் சொல்லிய மூன்றும் பாவபலன்... 164
பராசர ஸம்ஹிதையிற் சொல்லிய 3ம் பாவாதிபதி லக் கினுதி பாவங்களிலிருப்பதா லுண்டாகும் பலன்... 166
ஜாதக தத்துவத்திற் சொல்லிய மூன்றும் பாவபலன் ... 168
அதிகம் ஸஹோதரர், பிராதிரு ஸுகம், பிராதிரு லா பம், இவையுண்டாகும் யோகம் ... ,,
பிராதாவின் ஸ்னேஹம், வைரம், ஆண், பெண் என்ற பிரிவினே இவற்றை அறிவதின் யோகம் ... 169
ஸஹோதரர்களின் எண்ணேக் காணும் யோகம் ... ,,
ஸஹோதர விஷயத்தில் ஆண், பெண் இவற்றைக் காண்பதற்கு உபாயம் ... ,,
பிராதா அற்றிருத்தல், பிராதிருநாசம் இவற்றின் யோகம் ... 170
ஸஹோதர ஹீனனுகும் யோகம் ... 171
பிராதாவுக்கு ரோகம், பிராதிரு ஸுகமற்றிருத்தல் இவற்றின் யோகம் ... ,,
ராஜஸேவகனுகவும், கூலிவேலைக்காரனுகவு மாகும் யோகம் ... ,,

| | பக்கம். |
|---|---|
| தாஸர்களுடன் கூடியிருத்தலின் யோகம் ... | 172 |
| பராக்கிரமமுள்ளவனாகும் யோகம் ... | ,, |
| பிரஸித்தகர்மத்தால் ஜீவித்தல், விரகு கல் இவற்றை வியாபாரம் செய்தல் இவற்றின் யோகம் ... | ,, |
| பிக்ஷுகனாகும் யோகம் ... | 173 |
| நீசவிருத்தியால் ஜீவிக்கும் யோகம் ... | ,, |
| இன்னின்ன யோகத்தில் இன்னின்னார்மூலம் தனலாபமுண்டாகும் என்பது ... | 174 |
| ஒவ்வொரு நாளும் செய்தொழில் காணும் யோகம் ... | 176 |
| ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய மூன்றும் பாவ பலன் ... | ,, |
| மூன்றுமிடத்தைக் கொண்டு அறியவேண்டியவைகள் ... | ,, |
| ஸஹோதராரிஷ்ட யோகங்கள் ... | 177 |
| ஸஹோதர லாபயோகம் ... | 179 |
| ஆண், பெண் நபும்ஸக ஸஹோதர லாப யோகம் ... | 180 |
| ஸஹோதர ஸங்கியையைக் காணும் யோகம் ... | 181 |
| தீரனாகும் யோகம் ... | 182 |
| 3க் குடையவனுக்கு அந்தந்தக் கிரஹங்களின் சேர்க்கை மூலமுண்டாகும் பலன்கள் ... | 183 |
| நாற்கால் பிராணிகளிடமிருந்து பயம், விஷபாதை, இவையுண்டாகும் யோகம் ... | 184 |
| போஜனபாத்திரம், கழுத்திலும் காதிலும் ரோகம், வாயுவினால் பீடை இவைவிஷயமான யோகங்கள் ... | 185 |
| கர்ணபூஷண லாபயோகம் ... | ,, |

## நான்காம் பாவபலன்.

| | |
|---|---|
| ஸாராவளியிற் சொல்லிய நான்காம் பாவபலன் ... | 186 |
| நான்காம் பாவமூலம் கண்டறியவேண்டிய பலன்கள் ... | ,, |
| மேஷாதிராசிகள் நான்காம்பாவமாய் வருவதின் பலன் | 187 |
| 4ம் பாவத்திற்கு சூரியாதிக்கிரஹங்களின் பார்வை மூலம் கண்டறியவேண்டியவைகள் ... | 189 |

பக்கம்.

| | |
|---|---|
| 4க் குடையவன் லக்கினம் முதலியவற்றி லிருப்பதா லுண்டாகும் பலன் ... | 191 |
| தாயுடன் சேருதலுக்குரிய யோகம் ... | 194 |
| உடன்கட்டை ஏறுதலுக்குரிய யோகம் ... | ,, |
| மாதாவுக்கு அரிஷ்டயோகம் ... | ,, |
| பரிவாரநாசமுண்டாகும் யோகம் ... | 195 |
| மாதாவுக்கு சுகம், கஷ்டம் இவையுண்டாகும் யோகம் ... | ,, |
| மாதாவுக்கு ஒப்பானவளுடன் சேருதலுக்குரிய யோகம் | ,, |
| ஸஹோதரியுடன் சேருதலுக்குரிய யோகம் ... | ,, |
| மாதாவின் நடத்தையில் தோஷத்தைக் காண்பிக்கும் யோகம் ... | 196 |
| மாதா பதிவிரதையாக விருத்தலைக்காணும் யோகம் ... | ,, |
| தாய் இன்னின்ன ஜாதிபுருஷனிடம் பற்றுள்ளவளா யிருப்பாள் என்பதை அறிவிக்கும் யோகம் ... | ,, |
| மாதாவுக்குத் தீர்க்காயுளேற்படும் யோகம் ... | 197 |
| மாதாவுக்கு அற்பாயுளும் மரணகாலத்தில் தாய்க்கு உபகரிக்காமையும் ஏற்படும் யோகம் ... | ,, |
| தகப்பன் பரஸ்திரீலோலனுவதற்குரிய யோகம் ... | 198 |
| மாதாவுக்குத் தீர்க்காயுளேற்படும் யோகம் ... | ,, |
| மாதிருநாசமுண்டாகும் யோகம் ... | 199 |
| மாதிரு பக்தியுண்டாகும் யோகம் ... | ,, |
| புத்திரன் மாதாவுக்குச் சத்துருவாகுதலுக்குரிய யோகம் | 200 |
| நல்லசித்தம், கெட்டசித்தம் இவையுள்ளவனுகுதல் ... | ,, |
| மனதில் கபடமுள்ளவனுயிருத்தல் ... | ,, |
| நல்லசித்த முள்ளவனுகுதல் ... | ,, |
| துக்கமுள்ளவனும், பணமுள்ளவனுயு மிருத்தல் ... | 201 |
| வாஹனுதி லாபயோகம் ... | ,, |
| நரவாஹன லாபயோகம் ... | 202 |
| தேசாதிபதியாக வாகும் யோகம் ... | 203 |
| வாஹனவிஷயமான குறைவின் யோகம் ... | 204 |
| பண்டிதனுகும் யோகம் ... | ,, |

பக்கம்.

பந்துபூஜ்யனுகும் யோகம் ... 204
பந்துவர்க்கங்களுள் சிறந்தவனுகுதல் ... ,,
பந்துக்களுக்கு உபகாரியாக வாகுதல் ... 205
பந்துக்களால் விடப்படல் ... ,,
பந்துக்களால் நிந்திக்கப்படுதல் ... ,,
பந்துத்வேஷியா யாகுதல் ... ,,
ஸாமந்த கேஹத்தைக் கொண்டு காணவேண்டிய பலன்கள் ... 206
ஜாதகனின் கிருஹம் இத்தகையதாக விருக்கும் என்பது 207
வீட்டின் கதவு இத்தகையதாக விருக்கும் என்பது ... 208
ஜாதகனின் கிருஹத்திற்கு எந்தப் பாகத்தில் கோயி விருக்கும் என்பது ... ,,
வீட்டில் ஆமை, கோட்டான் இவை பிரவேசித்தல் ... 209
நரி, பன்றி, முயல் இவற்றை வீட்டில் காணல் ... ,,
ஜாதகனுக்கு சொந்த வீடுண்டா இல்லையா என்பது ... ,,
ஜாதகனுக்கு இன்னின்ன மரங்களிருக்கு மென்பது ... 210
கிருஹ லாபயோகம் ... ,,
கிருஹ நாசமுண்டாகும் யோகம் ... 211
அநேகவிடங்களில் கிருஹலாப முண்டாகும் யோகம் ... ,,
இவ்வளவு வீட்டிற்கு நாசமுண்டாகும் என்பது ... ,,
இவ்வளவு வீட்டிற்கு நன்மையுண்டாகும் என்பது ... 212
ஜலகண்ட யோகம் ... ,,
கல்விஞ லடிபடுதலுக்குரிய யோகம் ... ,,
பூமிவிருத்தியாகும் யோகம் ... 213
ஸஹோதரனின் பூமி கிடைப்பதற்குரிய யோகம் ... ,,
ஸ்வப்பிரயத்தினத்தால் பூமிலாபமுண்டாகும் யோகம்... 214
பார்யை மூலம் பூமிலாப முண்டாகும் யோகம் ... ,,
சத்துரு மூலம் பூலாப முண்டாகும் யோகம் ... ,,
அதிக பூமியுள்ளவனுகுதலின் யோகம் ... ,,
கிருஹலாப யோகம் ... 215
பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும் யோகம் ... ,,

| | பக்கம். |
|---|---|
| பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 4-வது பாவபலன் ... | 216 |
| கிருஹலாபம், கிருஹநாசம் இவற்றின் யோகம் ... | ,, |
| இன்னின்னக் கிரஹங்களைக் கொண்டு இன்னின்ன பலன்களை ஆராயவேண்டும் என்பது ... | ,, |
| ஸுகம் வாஹனம் இவற்றின் விருத்தி ஏற்படுதல் ... | 217 |
| ஜாதகனின் வீட்டின் நிலை ... | ,, |
| பந்துக்களால் பூஜிக்கத் தகுந்தவனாகுதல் ... | ,, |
| மாதாவுக்கு தீர்க்காயுளேற்படும் யோகம் ... | ,, |
| பூலாப யோகம் ... | 218 |
| பண்டிதனாகும் யோகம் ... | ,, |
| பசு, எருமை இவற்றின் லாபயோகம் ... | ,, |
| ஊமையாக வாகுதல் ... | ,, |
| நரவாஹன லாபயோகம் ... | 219 |
| பராசரஸம்ஹிதையிற் சொல்லிய, 4க் குடையவன் லக்கினம் முதலிய பாவங்களிலிருப்பதன் பலன் ... | ,, |
| ஜாதக தத்துவத்திற் சொல்லிய நான்காம் பாவபலன் ... | 221 |
| மாதாவுக்கு பால்வற்றிப்போகுதல், மாதிருஸுகமற்றிருத்தல் இவற்றின் யோகம் ... | ,, |
| மாதாவுக்கு நாசமேற்படும் யோகம் ... | 222 |
| மாதாவுக்கு தீர்க்காயுள் யோகம் ... | ,, |
| மாதா பதிவிரதையாகுதலின் யோகம் ... | 223 |
| மாதா வியபிசாரியாகுதலைக் காட்டும் யோகம் ... | ,, |
| மாதிரு ஸ்னேஹமேற்படல் ... | ,, |
| மாதாவின் எண்ணை அறிதல் ... | 224 |
| நாற்கால் பிராணிகள் மூலம் ஸுகமுண்டாகுதல் ... | ,, |
| ஜாதகனுக்கு இன்னின்ன ஸமயத்தில் ஸுகமுண்டாகும் என்பது ... | ,, |
| ஸுகியாகுதலின் யோகம் ... | 226 |
| துக்கியாக வாகுதல் ... | 227 |
| ஜாதனின் வீடு இத்தகையதாக விருக்கும் என்பது ... | 228 |
| கிருஹலாப யோகம் ... | ,, |

பக்கம்.

வீட்டில் தீபிடித்தல் ... 229
கிருஹநாச யோகம் ... ,,
ஜாதகன் பலவீடுகளில் வஸிப்பானு ஒரே வீட்டில் வஸிப்பானு என்பது ... 230
பொதுவில் வீட்டைப் பற்றிய பலன்கள் ... ,,
பூமிலாப யோகம் ... 231
இன்னின்னுர் மூலம் பூமிலாபமுண்டாகும் என்பது ... ,,
பூமிமுதலியவற்றிற்கு நாசமுண்டாகும் யோகம் ... 232
மற்றவர்களின் சிநேஹத்தை யடைதல் ... 233
பந்துபூஜ்யனுகுதல் ... ,,
பந்துக்களுக்கு உபகாரியாக வாகுதல் ... ,,
பந்துக்களால் விடுபட்டவனுகுதல் ... 234
படுக்கையைப் பற்றியயோகம் ... ,,
ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய நான்காவது பபாவபலன் ... 235
நான்காமிடத்தைக்கொண்டுகண்டு கொள்ளவேண்டியவைகள் ... ,,
கிருஹலாப யோகம் ... 236
கிருஹநாச யோகம் ... 237
பந்து பூஜ்யனுகும் யோகம் ... ,,
பந்துக்களுக்கு உபகரிக்கும் யோகம் ... ,,
பந்துக்களால் விடுபடும் யோகம் ... 238
பந்துக்களால் நிந்திக்கப்படும் யோகம் ... ,,
பந்துக்களின் போகானுபவ யோகம் ... ,,
பந்துத்வேஷியாகும் யோகம் ... ,,
பந்து பூஜ்யனுகும் யோகம் ... 239
பலவீடுகளில் வாஸமேற்படுதலின் யோகம் ... ,,
ஸ்திரக்கிருஹ வாஸ யோகம் ... 240
கிருஹநாச கிருஹலாப யோகங்கள் ... ,,
வெகு நெல்விளையும் பூமியுண்டாகும் யோகம் ... ,,
இன்னின்னுர் மூலம் பூலாபமுண்டாகும் என்பது ... 241

****

| | | பக்கம். |
|---|---|---|
| பூமிக்கு நாசமுண்டாகும் யோகம் | ... | 243 |
| சுகியாகும் யோகம் | ... | 244 |
| துக்கியாகும் யோகம் | ... | 245 |
| கவனக்குறைவால் கிரஹம், தனம், இவற்றிற்கு நாச முண்டாகும் யோகம் | ... | ,, |
| பாபியாகவாகும் யோகம் | ... | ,, |
| போகானுபவம் செய்யும் யோகம் | ... | 246 |
| புண்யசாலியாக வாகும் யோகம் | ... | ,, |
| ஜலத்தில் விழும் யோகம் | ... | ,, |
| கல்லாலடிபடும் யோகம் | ... | 247 |
| மாதிருகமனம் செய்யும் யோகம் | ... | ,, |
| ஸஹோதரீ ஸங்கம யோகம் | ... | 248 |
| மாதாவினிடம் தோஷத்தைத் தெரிவிக்கும் யோகம் | ... | ,, |
| மாதாவின் பாதிவிரத்யத்தைக் காட்டும் யோகம் | ... | 249 |
| மாதா இன்னின்ன புருஷனுடன் சேருவாளென்பது | ... | ,, |
| பிதா விடனுகவாகுதலைக் காட்டும் யோகம் | ... | ,, |
| பிறர்க்குப் பிறப்பதின் யோகம் | ... | 250 |
| மாதாவுக்குத் தீர்க்காயுள் யோகம் | ... | ,, |
| மாதிரு நாச யோகம் | ... | 251 |
| மனதில் கபடியாகும் யோகம் | ... | 252 |
| நிஷ்கபட யோகம் | ... | 253 |
| மாதிரு ஸ்னேஹ யோகம் | ... | 254 |
| ஜாதகன் மாதாவுக்குச் சத்துருவாகுதலின் யோகம் | ... | ,, |
| வாஹனலாப யோகம் | ... | 255 |
| கெட்ட ஸைன்ய முள்ளவனுகுதலின் யோகம் | ... | 256 |
| வாஹனுதி லாபயோகம் | ... | ,, |
| ஸிம்ஹாஸன லாபயோகம் | ... | 257 |
| கிருஹலாப யோகம் | ... | ,, |
| வாஹனுதிபதியாகும் யோகம் | ... | 258 |
| வாத்யானுபவ யோகம் | ... | 260 |

பக்கம்.

## ஐந்தாம் பாவபலன்.

பலதீபிகையிற் சொல்லிய புத்திரபாவபலன் ... 261
புத்திரதோஷ பரிஹாரம் செய்யும் முறை ... 266
புத்திரனுண்டாகும் காலம் ... 269
பிறந்த புத்திரனைப்பற்றிய பலன் ... 271
ஸாராவளியிற் சொல்லிய புத்திரபாவ பலன் ... ,,
ஐந்தாமிடத்தைக் கொண்டு அறியவேண்டிய வைகள் ... 272
மேஷாதி ராசிகள் புத்திர ஸ்தானமாகவமைவதின் பலன் ... 273
5ம் பாவாதிபதி லக்கினாதி பாவங்களிலிருப்பதன் மூலம் காணவேண்டிய பலன்கள் ... 275
5 மிடத்தைக் கிரஹங்கள் பார்ப்பதின் பலன் ... 278
புத்திரலாபயோகம் ... 279
ஔரஸ புத்திராதி 12வித புத்திரர்களின் லாபயோகம் ... 280
அதிகமாய் ஸ்திரீப் பிரஜை, புருஷப் பிரஜை இவை யுண்டாகும் யோகம் ... 282
வம்சச்சேத யோகம் ... ,,
புத்திரநாச முண்டாகும் யோகம் ... 283
அற்பபுத்திர, பஹுபுத்திர லாபயோகங்கள் ... ,,
இரண்டாம் தாரத்தினிடம் பிள்ளையுண்டாகும் யோகம் ... 284
பொதுவில் புத்திரபாவத்தைப் பற்றியவைகள் ... ,,
ஜாரனுக்குப் பிறந்தவனாகுதலின் யோகம் ... 285
மந்திரஸித்தி அஃதின்மை இவற்றைப்பற்றிய யோகங்கள் 286
இன்னின்ன ஜாதகனுக்கு இன்னின்ன தேவதோபாஸனம் சித்தமாகும் என்பது ... 287
புத்திரனில்லாமைக்குரிய யோகம் ... 288
வம்சச்சேத யோகம் ... 289
புத்திரன் சத்துருவாகவோ, மித்திரனாகவோ, ஸமனாகவோ, ஆகும் யோகம் ... 290
வெகுகாலம் சென்று புத்திரனுண்டாகும் யோகம் ... 291
புத்திரன் மூலம் பாக்கியமுண்டாகும் யோகம் ... ,,

| | பக்கம். |
|---|---|
| இன்னின்ன வயதில் புத்திரனுண்டாகும் என்பது ... | 292 |
| புத்திர நாசகாலம் ... | ,, |
| வெகு புத்திரலாப யோகம் ... | 293 |
| புத்திரலாப யோகம் ... | 295 |
| வெகு ஸ்திரீப் பிரஜாலாப யோகம் ... | 296 |
| புத்திரனின் எண்ணை அறிதலின் யோகம் ... | ,, |
| 5 மிடத்திலிருக்கின்ற கிரஹங்களை யனுஸரித்துப் புத்திர ஸங்கியையைக் கூறல் ... | 297 |
| ஸ்திரீ புருஷப் பிரஜைகளின் எண் முதலியன ... | 298 |
| பொதுவில் புத்திர பாவத்தைப் பற்றியவைகள் ... | 299 |
| புத்திரனுண்டாகும் காலம் ... | 300 |
| ஸ்வீகிருத புத்திரலாப யோகம் ... | 301 |
| தத்தபுத்திர மூலம் ஸந்ததி விருத்தியுண்டாகும் யோகம் ... | 302 |
| புத்திரஹீனனாகும் யோகம் ... | 303 |
| ஸர்ப்பசாபத்தால் புத்திரநாசமேற்படும் யோகம் ... | 304 |
| ஸர்ப்பசாபதோஷ பரிஹாரம் செய்யும் முறை ... | 305 |
| பிதிருசாபத்தால் புத்திரநாச மேற்படும் யோகம் ... | 306 |
| பிதிரு சாபதோஷத்திற்குப் பரிஹாரம் ... | 307 |
| மாதிரு சாபத்தால் புத்திர தோஷமேற்படும் யோகம்... | 308 |
| மாதிரு சாபதோஷ பரிஹாரம் ... | 309 |
| பிராதிரு சாபத்தால் புத்திரதோஷ மேற்படுதல் ... | 311 |
| பிராதிரு சாபநிவிருத்திக்காகச் செய்யவேண்டியவை ... | 312 |
| மாதுல சாபத்தால் புத்திரநாச முண்டாகும் யோகம் ... | ,, |
| மாதுல சாபதோஷ பரிஹாரம் ... | 313 |
| பிராம்மண சாபத்தால் புத்திரநாச மேற்படுதல் ... | 314 |
| பிராம்மண சாபதோஷ பரிஹாரம் ... | 315 |
| பத்தினீ சாபத்தால் புத்திரதோஷ முண்டாகும் யோகம் | 316 |
| பத்தினீ சாபதோஷ பரிஹாரம் ... | 317 |
| மந்திரசாபம், பிரேதசாபம், இவைகளால் புத்திர தோஷமுண்டாகுதல் ... | 318 |

| | பக்கம். |
|---|---|
| பிரேத சாபதோஷ பரிஹாரம் ... | 319 |
| பராசரஸம்ஹிதையிற் சொல்லிய புத்திர பாவபலன் ... | 320 |
| புத்திரலாப யோகம் ... | ,, |
| காகவந்த்யாத்வ யோகம் ... | ,, |
| கஷ்டத்தால் புத்திரனுண்டாகும் யோகம் ... | 321 |
| தத்த புத்திரலாப யோகம் ... | ,, |
| பஹு புத்திரலாப யோகம் .... | 322 |
| பஹு புத்திரீலாப யோகம் ... | ,, |
| பிறர்க்குப் பிறவியை யறிதலின் யோகம் ... | ,, |
| புத்திர பாக்கிய யோகம் ... | 323 |
| புத்திரலாப காலம் ... | ,, |
| புத்திர நாசகாலம் ... | 324 |
| புத்திரனின் எண்ணை அறிதல் ... | 325 |
| 5க்குடையவன் லக்கினாதிபாவங்களிலிருப்பதன் பலன்... | 326 |
| ஜாதக தத்துவத்திற் சொல்லிய புத்திரபாவ பலன் ... | 327 |
| புத்திமானாகும் யோகம் ... | ,, |
| மறதியற்றவனாகுதலின் யோகம் ... | 328 |
| பொதுவில் புத்தியைப் பற்றியபலன்கள் ... | ,, |
| ஜடனாகும் யோகம் ... | 329 |
| யாக்ஞிகன், மாந்திரிகன், வைத்தியன், ரஸவாதம் செய்பவன், கிரந்தமெழுதுபவன், இலக்கணமறிந்தவன் மீமாம்ஸை யறிந்தவன், தார்க்கிகன், ஸாங்கிய மறிந்தவன், ஸங்கீதமறிந்தவன் இவர்களாகும் யோகம் ... | 330 |
| கணித மறிந்தவனாகுதல் ... | 331 |
| சோதிட மறிதலுக்குரிய யோகம் ... | 332 |
| பொதுவில் இன்னின்ன வித்யைகளில்த் தேர்ந்தவனாவான் என்பதை அறிதற்குரிய யோகம் ... | ,, |
| வேதாந்த சாஸ்திரக்ஞான யோகம் ... | 333 |
| ஆறு சாஸ்திரங்களிலும் நிபுணனாவதற்குரிய யோகம் ... | ,, |
| வேதாந்த மறிந்தவனாகுதலின் யோகம் ... | 334 |

| | பக்கம். |
|---|---|
| ஸர்ப்ப சாபத்தால் புத்திரனற்றவனாகுதல் ... | 335 |
| பிதிரு சாபத்தால் புத்திரதோஷ மேற்படுதல் ... | 336 |
| மாதிரு சாபத்தால் புத்திரனற்றிருத்தல் ... | ,, |
| புத்திரனற்றவனாகுதலின் யோகம் ... | 337 |
| கர்ப்பம் தரியாமைக்குரிய யோகம் ... | ,, |
| புத்திர நாச யோகம் ... | 338 |
| வம்சவிச்சேத யோகம் ... | 339 |
| புத்திர ஸுகமற்றிருத்தலின் யோகம் ... | 340 |
| புத்திரனற்றிருத்தலின் யோகம் ... | 341 |
| குலதைவ தோஷத்தால் புத்திரனற்றவனாகுதல் ... | ,, |
| புத்திர சுகமுண்டாகி நாசமடைதல், தாமதித்தோ, சீக்கிரமாகவோ, பிரஜையுண்டாகுதல் இவற்றின் யோகம் ... | 342 |
| புத்திரலாப யோகம் ... | ,, |
| வெகுகாலம் சென்றும், கஷ்டப்பட்டும் புத்திர லாப முண்டாகுதல் ... | 344 |
| இத்தனை வயதிற்குப் பிறகுஸந்ததியுண்டாகும் என்பது | ,, |
| முதற்பிறப்பது பிள்ளையா? பெண்ணா? என்பதை யறிதலின் யோகம் ... | ,, |
| பெண் ஆண்குழந்தைகளின் எண்ணை அறிதலின் யோகம் ... | 345 |
| அனேகம் பெண்குழந்தைபிறத்தலின் யோகம் ... | 346 |
| வெகுபுத்திர லாபயோகம் ... | ,, |
| வெகுபுத்திரீ லாபயோகம் ... | ,, |
| புத்திரனின் குணமறிதலின் யோகம் ... | 347 |
| ஔரஸாதி புத்திரலாபயோகம் ... | 348 |
| ஸர்வார்த்தசிந்தாமணியிற் சொல்லிய ஐந்தாம் பாவ பலன் ... | ,, |
| 5 மிடத்தைக் கொண்டு காணவேண்டியவைகள் ... | ,, |
| புத்திரலாப யோகம் ... | 349 |
| புத்திரநாச யோகம் ... | 351 |

| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| புத்திரஸித்தி யோகம் | ... | 351 |
| வம்சவிச்சேத யோகம் | ... | 352 |
| காலம் சென்று புத்திரனுண்டாகும் யோகம் | ... | 353 |
| தீவ்ரபுத்தி யுள்ளவனுகும் யோகம் | ... | 354 |
| கிரஹணுதி ஸமர்த்தனுகும் யோகம் | ... | 355 |
| புத்திநாச யோகம் | ... | ,, |
| புத்திசாலியாக வாகுதலின் யோகம் | ... | 356 |
| முதலில் ஆண் குழந்தை யுண்டாகும் யோகம் | ... | 357 |
| முதலில் பெண் குழந்தை பிறத்தலின் யோகம் | ... | ,, |
| புத்திரனின் எண்ணே யறிதலின் யோகம் | ... | ,, |
| புத்திரனின் குணமறிதலின் யோகம் | ... | 358 |
| அன்னதானம் செய்யும் யோகம் | ... | 359 |
| ஹிருதய ரோகமுண்டாகும் யோகம் | ... | ,, |

குறிப்பு—இப்புஸ்தகத்தின் முதற்பாகத்தைப் படிப்பவர், 2, 3-வது பாகங்களேயும் தவருமல் படிக்கவேண்டும். 2-வது பாகத்தில் 6, 7, 8 ஆகிய 3 பாவ பலன்களும், 3-வது பாகத்தில் 9, 10, 11, 12 ஆகிய 4 பாவ பலன்களும் அடங்கியிருக்கும்.

பொருளடக்கம் முற்றிற்று.



कडलंगुडि नटेश शास्त्री
ज्यौतिषिकः
व्याकरण वेदान्त शास्त्र पारंगतः, भागवत भगवद्गीतोपन्यासकः
आर्यमत संवर्द्धनी मत्रिका संपादकः



## ॥ जातकद्वादशभावफलनिर्णयः ॥

# ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம்.

### அவதாரிகை

ஒவ்வொரு ஜாதகத்திலும் (1) லக்னபாவம், (2) குடும்பபாவம், (3) ஸஹோதரபர்வம், (4) வித்யாபாவம், (5) புத்திரபாவம், (6) சத்ருபாவம், (7) களத்திரபாவம், (8) ஆயுர்ப்பாவம், (9) பாக்கியபாவம், (10) கர்மபாவம், (11) லாபபாவம், (12) வியயபாவம் என 12 பாவங்களமைகின்றன. இவ்விதம் அமையும் இந்த 12 பாவங்களையும், அந்தந்த பாவாதீசர்களான கிரஹங்களையும் கொண்டு ஒருஜீவன் உலகிற் பிறந்ததுமுதல் அவனது முடிவு வரையுள்ள காலங்களில் நிகழும் பலன்கள் இன்னின்னவையெனத் தெளிவாய் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. மேலும், ஜீவன் தாயின் வயிற்றினின்றும் வெளிவந்தானாயின் அவனைப்பற்றி அவனது தாய்தந்தையர்கள் பின்வருமாறு எண்ணுகின்றனர். அதாவது:—(1) இவனது சரீரம், அதன்நிறம், ஆகிருதி இவை எத்தகையதாக விருக்கும், (2) இவனது குடும்பம் எத்தகையது. (3) இவனுக்கு உடன்பிறந்தோர் எவ்வளவு, அவர்களின்நிலை எத்தகையது. (4) இவனது அன்னை, படிப்பு பூமி, இவை எம்மாதிரியிருக்கும். (5) இவனது புத்தியின்நிலை எப்பேர்ப்பட்டது என ஒருவாறு எண்ணுகின்றனர். அவ்வித எண்ணமுள்ள இவர்க்கு இவன் பிறந்தகாலத்தி லுதயமான லக்னத்தைக்கொண்டு (1) வதான சரீராதிகளையும், அதற்கு இரண்டாம்

பாவத்தைக் கொண்டு குடும்பாதிகளையும், 3ம்பாவத்தைக் கொண்டு ஸஹோதராதிகளையும், 4ம் பாவத்தைக் கொண்டு இவனது அன்னை, பூமி, படிப்பு முதலியவற்றையும், 5ம் பாவத்தைக் கொண்டு இவனது புத்திமுதலியவற்றையும் அறிந்து கொள்ளவேண்டுமெனவும், அதை யறிந்து கொள்ளும் முறை இம்மாதிரியெனவும் இந்த சாஸ்திரம் உபதேசிக்கிறது. இவ்விதம் ஒரு ஜீவனுடைய யௌவனம் வரையுள்ள நிலையறியப்பட்டதாகவாகிறது. அதற்குப்பின்னர் அந்தஜீவன் ஆணுனல்தக்கவயதுவந்ததும்மணக்க வெண்ணங் கொள்ளுகிறுன். அவ்வித எண்ணமுதயமானதும் தனக்கு வரும் மனைவியின் ரூபம், குணம்,முதலியவற்றை அவனறிய விரும்புங்கால் அதன் விவரத்தை 7ம் பாவமானது தெளிவாயுபதேசிக்கிறது. ஆனுல் அந்த 7ம் பாவத்திற்கு இரண்டு பக்கங்களுள் ஒன்றில் ரோகமும், மற்றொன்றில் மரணமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—7ம் பாவத்திற்கு 12 மிடமானது லக்கினபாவம் முதல் 6ம் பாவமாக வருவதாலும் அந்த பாவம் ரோகத்தையும், 7ம் பாவத்திற்கு 2 மிடமானது லக்கினம் முதல் 8ம் பாவமாக வருவதாலும் அந்தப்பாவம் மரணத்தையும் உபதேசிக்கின்றன என்பதாம். ஆகவே இவ்விதம் மனையாளை மணந்த பின்னர் அவளைத் தொடர்ந்தே ரோகமும், மரணமும் வரக்கூடுமாதலால் அவ்விரண்டும் நேராதபடி மனையாளிடத்தில் இவன் நடந்து கொள்ள வேண்டுவது மிக்க அவசியம் என்பது இதனுலுபதேசிக்கப் பட்டதாக வாகின்றது. ஆகவே இந்த 7ம் பாவபலனை யடைந்த பின்னர் அதாவது: மனைவியை யடைந்த பின்னர் என்பதாம். இவன் சொந்தமாகக் குடும்பம் நடத்த வேண்டியவனுகிறுன். அப்பொழுது "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை அருளிலார்க்கவ்வுலகமில்லை யாங்கு காண்" என்றபடிபொருள் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுவதிலிருந்து எந்தெந்த மாதிரியான பாக்கியம் கிட்டும் என அறிய விரும்புங்கால் 9-வது பாவமானது அதன் விவரத்தை விளக்குகின்றது. "முயற்ச்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்றும் "उद्योगिनं पुरुषसिंहमुपैति लक्ष्मीः தக்க முயர்ச்சி செய்பவர்க்கே லக்ஷ்மீ (பொருள்) கிட்டுகின்றது" என்றும் தெரிவதால் பாக்கியம் கிட்டுவதற்

குப் போதிய வழியில் வேலைசெய்ய வேண்டியவனாகிறான். எங்கெந்த மாதிரியான வேலைசெய்தல் வேண்டும் என இவனது வேலையின் விவரத்தை 10-வது பாவம் விளக்குகின்றது. வேலை செய்த பின்னர் அதினின்றும் கிடைப்பது எவ்வளவு என்பனவற்றை 11ம் பாவம் விளக்குகின்றது. இவ்விதம் லாபம் கிடைப்பதற்கு கையிலிருந்து ஏதேனும் பொருளைச் செலவு செய்து லாபத்தையடைய வேண்டுமா? அல்லது வேறு ஜன்மத்திற் செய்த புண்ணிய வசத்தால் தானே பொருளுண்டாகுமா? என்ற விவரத்தை 12-வது பாவம் விளக்குகின்றது என்றேற்படுகின்றது. ஆகவே ஒரு ஜாதகத்தின் பாவங்களை 3 விதமாகப் பிரித்துக் கொள்ளவேண்டுமென் றேற்படுகின்றது. அதாவது: 1 முதல் 5ம் பாவம் முடியவுள்ள 5 பாவங்களை 1-வது பிரிவாகவும், 6, 7, 8 இம்மூன்று பாவங்களை 2-வது பிரிவாகவும், 9, 10, 11, 12 இந்நான்கையும் 3-வது பிரிவாகவும் வைத்துப் பலன் சொல்ல வேண்டும் என்றேற்படுகின்றது. இவ்விதம் பாவபலனைப் பார்க்கும்பொழுது

भावस्थितैः प्रथमतः खचरैस्तदूर्ध्वं
तद्द्रष्टृभिस्तदनु तत्पतिभिर्ग्रहैश्च ।
तत्कारकैश्च सकलं किल शोधयित्वा
भावप्रयुक्तफलमित्थमितीति वाच्यम् ॥

முதலில் அந்தந்த பாவத்திலிருக்கும் கிரஹங்களைக் கொண்டும், பின்னர் அதைப் பார்க்கும் கிரஹங்களைக் கொண்டும், பின்னர் பாவாதிபதியான கிரஹங்களைக்கொண்டும், பின்னர் பாவகாரகர்களான கிரஹங்களைக் கொண்டும் அந்தந்த பாவ விஷயமான பலன்களை நன்கு சோதித்தறிந்து பின்னர் இன்னின்ன பாவத்திற்கு இன்னின்ன பலன் நடக்கும் என உறுதியாகச் சொல்ல வேண்டும் என்றும் ஏற்படுகின்றது. மேலும் இனி எழுதப்படும் லக்னாதி பாவபலனைப் பார்ப்பதற்கு முன்னர் இலக்கினாதி பன்னிரு பாவங்களின் பொதுப்பலனைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாதலால் அது விஷயமாய் பலதீபிகையிற் சொல்லியிருப்பதை இங்கு எழுதுகிறோம். அதாவது:—

## பாவபலன் பார்ப்பதில் பொதுவிதிகள்.

## भावचिन्ताविधिः ॥

भावाः सर्वे शुभपतियुता वीक्षिता वा शुभेशै-
स्तत्तद्भावाः सकलफलदाः पापदृग्योगहीनाः ।
पापाः सर्वे भवनपतयश्चेदिहाहुस्तथैव
खेटैः सर्वैः शुभफलमिदं नीचमूढारिहीनैः ॥ १ ॥

तत्तद्भावत्रिकोणे स्वसुखमदनभे चास्पदे सौम्ययुक्ते
पापानां दृष्टिहीने भवनपसहिते पापखेटैरयुक्ते ।
भावानां पुष्टिमाहुः सकलशुभकरीमन्यथा चेत्प्रणाशं
मिश्रं मिश्रैर्ग्रहेन्द्रैः सकलमपि तथा मूर्तिभावादिकानाम् ॥ २ ॥

नाशस्थानगतो दिवाकरकरैर्लुप्तस्तु यद्भावपो
नीचारातिगृहं गतो यदि भवेत्सौम्यैरयुक्तेक्षितः ।
तद्भावस्य विनाशनं वितनुते तादृग्विधोऽन्योऽस्ति चे-
त्तद्भावोऽपि फलप्रदो न हि शुभश्चेन्नाशमुग्रग्रहः ॥ ३ ॥

लग्नादिभावाद्रिपुरन्ध्ररिःफे पापग्रहास्तद्भवनादिनाशम् ।
सौम्यास्तु नात्यन्तफलप्रदाः स्युर्भावादिकानां फलमेवमाहुः ॥ ४ ॥

यद्भावनाथो रिपुरन्ध्ररिःफे दुःस्थानपो यद्भवनस्थितो वा ।
तद्भावनाशं कथयन्ति तज्ज्ञाः शुभेक्षिते तद्भवनस्य सौख्यम् ॥ ५ ॥

भावाधीशे च भावे सति बलरहिते चग्रहे कारकाख्ये
पापान्तःस्थे च पापैररिभिरपि समेतेक्षिते नान्यखेटैः ।
पापैस्तद्बन्धुमृत्युव्ययभवनगतैस्तत्त्रिकोणस्थितैर्वा
वाच्या तद्भावहानिः स्फुटमिह भवति द्वित्रसंवादभावात् ॥ ६ ॥

तत्तद्भावपराभवेश्वरखरद्रेष्काणपा दुर्बला
भावार्यष्टमकामगा निजदशायां भावनाशप्रदाः ।
पापा भावगृहात्त्रिशत्रुभवगाः केन्द्रत्रिकोणे शुभा
वीर्याढ्याः खलु भावनाथसुहृदो भावस्य सिद्धिप्रदाः ॥ ७ ॥

राश्योर्जन्मविलग्नयोर्धृतिपतिर्मृत्युस्थतद्वीक्षकौ
मन्दक्रूरदृगाणपौ गुलिकपस्तैर्युक्तराश्यंशपाः ।
राहुश्चैष सुदुर्बलः स जनने भावानभीष्टस्थितः
पापालोकितसंयुतो निजदशायां भावनाशावहाः ॥ ८ ॥

भावस्योदयपाश्रितस्य कुशलं यद्भावपेनोदय-
स्स्वामी तिष्ठति संयुतोऽपि कलयेत्तद्भावजातं फलम्।
दुःस्थाने विपरीतमेतदुदितं भावेश्वरे दुर्बले
दोषोऽतीव भवेद्बलेन सहिते दोषाल्पता जल्पिता ॥ ९ ॥

यद्भावेष्वशुभोऽपि वोदयपतिस्तद्भाववृद्धिं दिशे-
द्दुःस्थानाधिपतिः स चेद्यदि तनोः प्राबल्यमन्यस्य न।
अत्रोदाहरणं कुजे सुतगते सिंहे झषे वा स्थिते
पुत्राप्तिं शुभवीक्षिते झटिति तत्प्राप्तिं वदन्त्युत्तमाः ॥ १० ॥

द्विस्थानाधिपतित्वमस्ति यदि चेन्मुख्यं त्रिकोणर्क्षजं
तस्यार्द्धं स्वगृहेऽथ पूर्वमुभयोर्यत्तद्दशादौ वदेत्।
पश्चाद्भावमिहापरार्धसमये युग्मे गृहे युग्मजं
त्वोजस्थे सति चौजभावजफलं शंसन्ति केचिज्जनाः ॥ ११ ॥

यद्भावेशस्याधिशत्रुग्रहो वा यो वा खेटो विन्दुशून्यर्क्षयुक्तः।
तत्तत्पाके मूर्तिभावादिकानां नाशं ब्रूयाद्दैववित्प्राश्निकाय ॥ १२ ॥

स्वोच्चे सुहृत्क्षेत्रगतो ग्रहेन्द्रः षड्भिर्बलैर्मुख्यबलान्वितोऽपि।
संधौ स्थितः सन्नफलप्रदः स्यादेवं विचिन्त्यात्र वदेद्विपाके ॥ १३ ॥

भावेषु भावस्फुटतुल्यभागस्तद्भावजं पूर्णफलं विधत्ते।
संधौ फलं नास्ति तदन्तराले चिन्त्योऽनुपातः खलु खेचराणाम् ॥

सूर्यादात्मपितृप्रभावविरुजं शक्तिं श्रियं चिन्तये-
च्चेतोबुद्धिनृपप्रसादजननीसंपत्करश्चन्द्रमाः।
सत्वं रोगगुणानुजावनिरिपुज्ञातीन्धरासूनुना
विद्याबन्धुविवेकमातुलसुहृद्वाक्कर्मकृद्बोधनः ॥ १५ ॥

प्रज्ञावित्तशरीरपुष्टितनयज्ञानानि वागीश्वरा-
त्पत्नीवाहनभूषणानि मदनव्यापारसौख्यं भृगोः।
आयुर्जीवनमृत्युकारणविपद्भृत्यांश्च मन्दाद्वदे-
त्सर्पेणैव पितामहं तु शिखिना मातामहं चिन्तयेत् ॥ १६ ॥

द्युमणिरमरमन्त्री भूसुतः सोमसौम्यौ
गुरुरिनतनयारौ भार्गवो भानुपुत्रः।
दिनकररविजेज्या जीवभानुज्ञमन्दाः
सुरगुरुरिनसूनुः कारकाः स्युर्विलग्नात् ॥ १७ ॥

सुहृदरिपरकीयस्वर्क्षतुङ्गस्थितानां फलमनुपरिचिन्त्यं लग्नदेहादिभावैः ।
समुपचयविपत्ती सौम्यपापेषु सत्यः कथयति विपरीतं रिःफषष्ठाष्टमेषु ॥

पापग्रहाः षष्ठमृतिव्ययस्थास्तद्भाववृद्धिंकथयन्ति दोषैः ।
शुभास्तु तद्भावलयं हि तस्माच्छत्र्वादिभावोत्थफलप्रणाशः ॥ १९ ॥

भावस्य यस्यैव फलं विचिन्त्यं भावं च तं लग्नमिति प्रकल्प्य ।
तस्माद्वदेद्द्वादशभावजानि फलानि तद्रूपधनादिकानि ॥ २० ॥

एवं हितत्कारकतो विचिन्त्यं पितुश्च मातुश्च सहोदरस्य ।
तन्मातुलस्यापि सुतस्य पत्युर्भृत्यस्य सूर्यादिखगस्थितर्क्षात् ॥ २१ ॥

सूर्यस्थितर्क्षाज्जनकस्वरूपं वृद्धिं द्वितीयेन तु तत्प्रकाशम् ।
तद्भ्रातरं तस्य गुणं तृतीयात्तन्मातरं चापि सुखं चतुर्थात् ॥ २२ ॥

बुद्धिं प्रसादं सुतभाच्च षष्ठात्पीडां पितुर्दोषमरिं च रोगम् ।
कामं मदं तस्य तु सप्तमेन दुःखं मृतिं मृत्युगृहात्तदायुः ॥ २३ ॥

पुण्यं शुभं तत्पितरं शुभेन व्यापारमस्यैव हि कर्मभावात् ।
लाभं ह्युपान्त्यात्क्षयमन्त्यभावाच्चन्द्रादिकानां फलमेवमाहुः ॥ २४ ॥

तत्तद्भावात्कारकादेवमूह्यं तत्तन्मातृभ्रातृपित्रात्मजाद्यम् ।
तस्मिन्भावे कारके भावनाथे वीर्योपेते तस्य भावस्य सौख्यम् ॥ २५ ॥

धर्मे सूर्यः शीतगुर्बन्धुभावे शौर्ये भौमः पञ्चमे देवमन्त्री ।
कामे शुक्रश्चाष्टमे भानुपुत्रः कुर्यात्तस्य क्लेशमित्याहुरन्ये ॥ २६ ॥

लग्नेश्वरो यद्भवनेशयुक्तो यद्भावगस्तस्य फलं ददाति ।
भावे तदीशे बलभाजि तेन भावेन सौख्यं व्यसनं बलोने ॥ २७ ॥

यद्भावप्रभुणा युतो बलवता मुख्याङ्कगो लग्नप-
स्तद्भावानुभवं शुभं वितनुते यद्भावगस्तस्य च ।
संयुक्तो बलहीनभावपतिना निन्द्याङ्कभाजा फलं
कुर्यात्तद्विपरीतमेवमुदितं सर्वेषु भावेष्वपि ॥ २८ ॥

दुःस्थानपस्तदितरस्वगृहस्थितश्चेत्स्वक्षेत्रभावफलमेव करोति नान्यत् ।
मन्दो मृगे सुतगृहे यदि पुत्रसिद्धिः षष्ठाधिपत्यकृतदोषफलं न चात्र ॥ २९ ॥

राशौ स्थितिर्मिथो योगो दृष्टिः केन्द्रेषु संस्थितिः ।
त्रिकोणे वा स्थितिः पञ्चप्रकारो बन्ध ईरितः ॥ ३० ॥

(க—ரை) பொதுவாய் லக்கினம் முதலிய எல்லாபாவங்களும்,
சுபரான தனது பதியுடன் சேர்ந்தோ, சுபமான பாவாதிபதிகளாற்

(அதாவது: 6, 8, 12 மிடங்களைத் தவிர்த்து மீதமுள்ள பாவாதிபதிகளாற்) பார்க்கப்பட்டோ, பாபக்கிரஹஙகளின் பார்வை, சேர்க்கை இவையற்றோ இருக்குமானால் அந்தந்த பாவங்கள் பூர்ணமான பலனைத் தரும். ஆனால் பாபக் கிரஹங்கள் யாவும் அந்தந்த பாவாதிபதிகளாகவே இருப்பாரானாலும் அந்தந்த பாவங்கள் பூர்ணமான பலனையே தரும் என்றே சொல்லுகின்றனர். நீசமாகவோ, அஸ்தங்கதமாகவோ, சத்துருவீட்டி லிருப்பதாகவோ இல்லாத எல்லாக்கிரஹங்களாலும் இதே சுபபலன் தானுண்டாகும் என்றும் சொல்லுகின்றனர். அதாவது: அந்தந்த பாவாதிபதியான கிரஹம் சுபனாயினும் சரி அசுபனாயினும் சரி நீசனாகவோ, அஸ்தங்கதனாகவோ, சத்துருவீட்டி லிருப்பவனாகவோ இல்லாதிருந்தால் முற்கூறிய சுபபலனே தானுண்டாகும் என்பதாம்.

(2) அந்தந்த பாவங்களுக்கு திரிகோணமும், 2, 4, 7, 10 இந்த இடங்களும் சுபக்கிரஹங்களுடன் சேர்ந்தும், பாபர் வீக்ஷணம் சேர்க்கை இவற்றைப் பெறாமலும், பாவாதிபதியுடன் சேர்ந்தும் இருக்குமானால் அந்த பாவங்களுக்கு பூர்ண சுபத்தைச் செய்யத் தகுந்த புஷ்டியுண்டெனச்சொல்லுகின்றர். முற்கூறியதற்குமாறாக விருக்குமானால் அந்தப் பாவங்களுக்கு நாசத்தைச் சொல்லுகின்றனர். அதாவது:—எந்தப் பாவத்திற்கு 5, 9, 2, 4, 7, 10 மிடங்கள் சுபருடன் சேராமலும், பாபர்வீக்ஷணம் சேர்க்கை இவற்றைப் பெற்றும் சுபரும் அசுபருமாகக் கலந்துள்ள அந்தந்தப் பாவாதிபருடன் சேராமலுமிருந்தால் என்பதாம். ஆகவே கிரஹங்கள் முற்கூறிய விடங்களிலிருந்தால் லக்கினம் முதலிய பாவங்களின் பலன் யாவும் சுபம் அசுபம் இரண்டும் கலந்ததாகவே தானிருக்கும்.

(3) எந்தப்பாவாதிபதியான கிரஹம் சூரியனில் அஸ்தங்கதனாய் 8 மிடத்திலிருக்கின்றதோ, அல்லது சுபரின் சேர்க்கை பார்வை இவற்றைப் பெறாமல் நீசவீடு, சத்துருவீடு இவற்றிலிருக்குமோ அந்தக்கிரஹம் அந்தப் பாவத்திற்கு நாசத்தை உண்டாக்குவதாகவாகும். இவ்விதமே வேறு சுபக்கிரஹமானது 8 மிடத்ததிபனுடன் சேர்ந்தும், அஸ்தங்கதக் கிரஹத்துடன் சேர்ந்தும், நீச

னாகவும், சத்ருவீட்டி லிருப்பவனுமான (அதாவது: சத்ருவுமான) கிரஹத்துடன் சேர்ந்தும் ஒரு பாவத்திலிருக்குமானல் அந்தப் பாவமும் நல்லபலனைத் தருவதில்லை. மேற்சொன்னபடி பாபக்கிரஹ மிருக்குமானல் அந்தப் பாவத்தின் நாசத்தைத் தரும். இவ்வித முபதேசித்ததிலிருந்து எந்த பாவாதிபதியான கிரஹம் அஸ்தங்கதாதி தோஷமடையுமோ அந்தப்பாவம் நாசமடையுமென்றும், வேறு ஒரு சுபக்கிரஹமாயினும் அஸ்தங்கதாதி தோஷத்தையடைந்து எந்தப் பாவத்திலிருக்குமோ அந்த பாவம் நல்ல பலன் தருவதில்லை என்றும், அவ்விதமே வேறு ஒரு பாபக்கிரஹம் அஸ்தங்கதாதி தோஷமடைந்து எந்தப்பாவத்திலிருக்குமோ அந்தப் பாவம் நாசத்தையே யடையும் என்று மேற்பட்டது.

(4) லக்னம் முதலியபாவங்களுக்கு 6, 8, 12ல் பாபக்கிரஹமிருந்தால் அந்த பாவாதிகளுக்கு நாசமுண்டாகும். சுபக்கிரஹங்கள் அவ்விதம் 6, 8, 12 லிருந்தால் அதிகமான சுபபலனைத் தருவதில்லை என பாவாதி பலன்களை இவ்வித முபதேசிக்கின்றனர்.

(5) எந்தப் பாவாதிபன் (தனக்கு) 6,8,12 லிருக்கின்ருனே, அல்லது 6, 8, 12க்குடையவன் எந்த வீட்டிலிருக்கின்ருனே அந்தப்பாவத்திற்கு நாசத்தை அறிஞர் சொல்லுகின்றனர். சுபரால் பார்க்கப்படுவாராயின் இங்கு சொல்லியபலன் மாறியே(அதாவது: அந்தபாவத்திற்கு விருத்தியே) நடக்கும்.

(6) பாவாதிபதியும், பாவமும், பலமற்றிருந்து பாவகாரகக் கிரஹமானது பாபக்கிரஹங்களுக்கு நடுவிலிருந்து (அதாவது: 12 மிடம், 2 மிடம் இவற்றில் பாபக்கிரஹம் இருந்தால் என்பதாம்) பாபரின் சேர்க்கை, வீக்ஷணம் இவற்றையும் பெற்று சுபரின் வீக்ஷணம் சேர்க்கை இவற்றைப் பெருமலு மிருந்து பாபக்கிரஹங்கள் பாவாதீசனுக்கோ, அல்லது பாவத்திற்கோ, அல்லது காரக கிரஹத்திற்கோ, 4, 8, 12லோ, அவற்றிற்கு 5, 9 மிடங்களிலோ இருந்தாரானல் அந்த பாவத்திற்கு நாசத்தைச் சொல்ல வேண்டும். இங்கு சொல்லியவற்றில் இரண்டு மூன்று ஒத்து வருவதைக்கொண்டு பார்த்தால் இந்த பலன் தெளிவாகவாகும்.

(7) அந்தந்த பாவங்களுக்கு 6, 8, 12 மிடத்ததிபர்களோ, 22-வது திரேஷ்காணதிபதியோ துர்பலர்களாயிருந்து அந்தந்த பாவத்திற்கு 6, 8, 7 மிடங்களி லிருந்தார்களானல் அவரது தசையில் அந்தப் பாவத்திற்கு நாசத்தைத் தருவர். மேலும், பாபக்கிரஹங்கள் தமது பாவவீட்டினின்றும் 3, 6, 11 மிடங்களிலிருந்து, 1, 4, 6, 10, 9, 5 மிடங்களில் சுபக்கிரஹங்களிருந்து அவர்கள் பலம் பெற்றிருந்து பாவாதிபதிக்கு மித்திரர்களாகவும் இருப்பாரானல் அந்தப் பாவத்திற்கு ஸித்தியைத் தருவர்.

(8) ஜன்மலக்கின, சந்திரலக்கினங்களுக்கு 3 மிடத்ததிபதியான கிரஹமும், 8 மிடத்திலிருக்கும் கிரஹமும், அந்த 8மிடத்தைப் பார்க்கும் கிரஹமும், சனியும், 22-வது திரேஷ்காணதிபதியும், குளிகனிருக்கும் வீட்டிற்குடைய வனும். இதுவரை கூறிய கிரஹங்களுடன் கூடின ராசி, அம்சம் இவற்றினதிபர்களும், மிக்க துர்பலனும் ஜனனகாலத்தில் அந்தந்த பாவங்களுக்கு 6,8, 12 லிருப்பவனும், பாபரின் வீக்ஷணம், சேர்க்கை இவற்றை யடைந்தவனுமான ராகுவும் ஆகிய இவர்கள் தமது தசையில் அந்தப்பாவத்திற்கு நாசத்தைத்தருவர்.

(9) ஜன்மலக்கினதிபதி எந்தப் பாவத்திலிருக்கின்றானே அந்தப் பாவத்திற்குச் சவுக்கியமுண்டு ஜன்ம லக்னதிபதியானவன் எந்த பாவாதிபதியுடன் சேர்ந்தோ, அல்லது எந்தப்பாவாதிபரின் பார்வையை யடைந்தோ இருக்கின்றானே அவன் அந்தபாவத்திற்கு விதித்துள்ள பலனையுண்டாக்குவான். லக்கினதிபன் அந்தந்த பாவத்திற்கு 6, 8, 12மிடங்களிலிருந்தால் முற்கூறிய பலன் மாறியே நடப்பதுடன் (அதாவது: அந்தப் பாவபலனுண்டாகாததுடன் என்பதாம்.) பாவாதிபன் துர்ப்பலனுகவு மிருந்தால் அந்தப்பாவத்திற்கு அதிகமான தோஷமுமுண்டாகும். பாவாதிபன் பலம்பெற்றிருந்தால் முற்கூறிய தோஷம் ஸ்வல்பமாகவேதானிருக்கும்.

(10) எந்தப்பாவங்களில் பாபியாயினும் ஜன்மலக்கினதிபதி இருக்கின்றானே அவன் தானிருக்கும் பாவங்களுக்கு விருத்தியை (பெருக்கை) தருவன். அந்த ஜன்மலக்கினதிபனுக்கு 6, 8, 12மிடத்தாதிபத்தியமிருந்த போதிலும் ஜன்மலக்கினதிபத்தியம்

முக்கியமாகுமேயொழிய வேறிடத்தாதிபத்தியம் முக்கியமாகாது. இவ்விஷயத்திலுதாஹரணம் கூறுவாம்—மேஷலக்கினம், விருச்சிகலக்கினம் இவற்றிற் பிறந்தவர்க்கு செவ்வாய் லக்கினுதிபதியாகவாவதுடன், முறையே 8, 6க் குடையவனுகவும் ஆகிறுன். ஆயினும் அந்தசெவ்வாய் மேஷத்திற்கு 5 மிடமான சிம்மத்திலும், விருச்சிகத்திற்கு 5 மிடமான மீனத்திலும் இருந்தால் புத்திரப்ராப்தியைத் தருவான். ஷஷ்டஸ்தானங்களிலிருந்து சுபக்கிரஹ வீக்ஷணம் பெற்ருல் வெகு சீக்கிரத்தில் புத்திரனைத் தருவன் என சோதிடமறிந்த பெரியோர் சொல்லுகின்றனர்.

(11) ஒரு கிரஹத்திற்கு இரண்டு ஸ்தானுதிபத்தியம் நேருமானுல் அவற்றுள் திரிகோணுதிபத்தியமே முக்கியமானது. அந்த இரண்டு ஸ்தானுதிபத்யத்திற்குள் சொந்த கிரஹாதிபத்யமும், திரிகோணுதிபத்தியமும் ஒருகிரஹத்திற்கு வருமிடத்து சொந்தக் கிரஹாதிபத்தியமானது பாதி முக்கியமானதாக வாகும். (அதாவது: திரிகோணுதிபதியா யிருத்தலாலுண்டாகும் பலனில் பாதி பலனே உண்டாகும் என்பதாம்.) மேலும், அந்த இரண்டு ஸ்தானுதிபத்தியங்களுள் முதலிலுள்ள ஆதிபத்திய பலன் யாதுண்டோ அது அந்த கிரஹத்தினுடைய தசையின் ஆதியில் (முற்பாகத்தில்) நடக்கும். வேறுபாவபலனுனது தசையின் பிற்பாதியில் நடக்கும். அவற்றுள் இரட்டைப்பட்டாராசி ஜன்மலக்கினமானுல் முதலில் இரட்டைப்பட்ட ராசிபலனும், ஒற்றைப்பட்டராசி ஜன்மலக்கினமானுல் முதலில் ஒற்றைப்பட்டராசி பலனும் நடக்கும் எனச் சிலர் சொல்லுகின்றனர்.

(12) எந்தக் கிரஹமானது எந்தப் பாவேசனுக்கு * அதிசத்துருக் கிரஹமோ, எந்தக் கிரஹம் அஷ்டகவர்க்க பிந்து சூன்யமான வீட்டிலிருக்குமோ அந்தந்த கிரஹத்தின் தசையில் லக்கி

---

* ஒருகிரஹத்திற்கு மற்ருெருகிரஹம் 1,5,6,7,8,9 இவ்விடங்களிலிருந்தால் அது அதற்குத் தத்கால சத்துருக் கிரஹம் எனப்படும். இந்தக் கிரஹம் நிஸர்க்க சத்துருவாகவு மிருக்குமானுல் அந்தக் கிரஹம் அதிசத்துருக் கிரஹம் என சொல்லப்படும். இது விஷயமாய் நமது பிருஹத் ஜாதகமொழிபெயர்ப்பு 2-வது அத்தியாயம் 18-வதுசுலோகத்தில் தெளிவாயெழுதி யிருப்பதால் அவ்விடத்திற்காண்க.

னம் முதலியபாவங்களுக்கு நாசமுண்டாகும் என ஜாதக பலன் கேட்போர்க்கு சோதிடவித்வான் சொல்லக்கடவன், (பிரச்னங் கேட்பவர்க்கும் இது பொருந்தும்.)

(13) கிரஹமானது தனது உச்சவீட்டிலிருப்பினும், சொந்த வீட்டிலிருப்பினும் 6 (2)விதவலுவுபெற்றிருப்பினும், ஸந்தியிலிருப்பானுனல் அவனது தசையில் பலனைத்தரமாட்டான். இவ் விஷயத்தில் நன்கு ஆலோசித்தறிந்துபலன் சொல்லவேண்டும்.

(14) பாவங்களில் (பாவாதிபன்) பாவஸ்புடத்திற்கு ஸமமான பாகத்திலிருப்பானேயானுல் அந்தப்பாவத்தாலுண்டான பூர்ண பலனைத்தருவன், பாவஸந்தியிலிருந்தால் பலனில்லை. பாவஸ்புடத்திற்கும் பாவஸந்திக்கும் இடையிலிருந்தால் (3)திரைராசிகஞ் செய்து அவன் தரும்பலனை யறியவேண்டும்.

## இன்னின்ன கிரஹம் இன்னின்ன பலனுக்குக் காரகன் என்பது.

(15) சூரியனைக்கொண்டு ஆத்மா, பிதா, பிரபாவம், ரோகமின்மை, சக்தி, ஐசுவரியம் இவற்றைக் கண்டறிய வேண்டும். (அதாவது: சூரியன் இவற்றிற்கு காரகன் என்பதாம்.)மேலுள்ளவிடங்களிலும் இவ்விதமே காண்க. சந்திரனைக் கொண்டு சித்தம், புத்தி, அரசன், பிரஸாதம், தாய், ஸம்பத், இவற்றையறிய வேண்டும். செவ்வாயைக் கொண்டு ஸத்வம், ரோகம், குணம், உடன் பிறந்தோர், சத்துரு, ஞாதி இவர்களை பறியவேண்டும். புதனைக்கொண்டு வித்யை, பந்து, விவேகம், அம்மான், ஸுஹிருத், வாக், கர்ம இவற்றை யறியவேண்டும்.

(16) குருவைக் கொண்டு பிரக்ஞை (ஸமயோசித புத்தி) பணம், சரீரபுஷ்டி, புத்திரன், அறிவு இவற்றை யறியவேண்டும். சுக்கிரனைக் கொண்டு பத்னீ, வாஹனம், பூஷணம், காமசுகம், இவற்றை யறியவேண்டும். சனியைக் கொண்டு ஆயுள், ஜீவனம், மரண காரணம், விபத், பிருத்யர் (வேலைக்காரர்) இவர்களை

---

(2) இதுவிஷயமாய் நமது பிருஹத்ஜாதகம், 106ம் பக்கம் முதல் 120ம் பக்கம் முடியவுள்ள பக்கங்களிற் காண்க.

(3) திரைராசிகம்செய்யும் முறையை நமது பிருஹத்ஜாதகம் 248 முதல் 250 வரையுள்ள பக்கங்களிற் பார்க்க

யறியவேண்டும். ராஹுவினல் தகப்பனின் பிதாவான பாட்டனையும், கேதுவினல் தாயின் பிதாவான பாட்டனையும் அறிய வேண்டும்.

### பாவகாரகக் கிரஹங்கள்.

(17) 1ம் பாவத்திற்கு சூரியனும், 2ம் பாவத்திற்கு குருவும், 3ம் பாவத்திற்கு செவ்வாயும், 4க்கு சந்திரன் புதன் இவர்களும், 5க்கு குருவும், 6க்கு சனி, செவ்வாய் இவர்களும், 7க்கு சுக்கிரனும், 8க்கு சனியும், 9க்கு சூரியன், சனி, குரு இவர்களும், 10க்கு குரு, சூரியன், புதன், சனி இவர்களும், 11க்கு குருவும், 12க்கு சனியும் காரகர்களாவர்.

(18) * மித்திரன்வீடு, சத்துருவீடு, ஸமன்வீடு, சொந்தவீடு, உச்சவீடு இவற்றிலிருக்கின்ற கிரஹங்களுக்கு லக்னம் முதலேற்படுகின்ற சரீரம், குடும்பம் முதலிய பாவங்கள் மூலம் பலனைக் கொடுத்தலானது கிரஹங்களிருக்கின்ற க்ஷேத்திரங்களை அனுஸரித்து ஊஹித்தறியத்தக்கது. ஸத்தியாசாரியர் சுபர், பாபர் இவர்கள் லக்கினத்திலிருந்தால் சுபரிருக்கின்ற பாவத்திற்கு விருத்தியையும், பாபர் இருக்கின்ற பாவத்திற்கு நாசத்தையும் சொல்லுகிறார். 6, 8, 12 மிடங்களிலிருந்தால் முற்கூறியதற்கு மாறான பலனே நடக்கும். அதாவது: பாபர் 6, 8, 12 லிருந்தால் விருத்தியையும், சுபர் இருந்தால் நாசத்தையும் செய்வர் என்பதாம்.

(19) பாபக்கிரஹங்கள் 6, 8, 12 லிருந்தால் அந்தப் பாவங்களுக்கு விருத்தியைச் செய்வர். சுபர் இருந்தால் அந்தப் பாவங்களுக்கு நாசத்தைச் செய்வர். ஆனது பற்றி சத்துருவாதி பாவமூலமேற்படும் பலனில்லை என்றேற்படுகின்றது. அதாவது:— 6ல் பாபரிருந்தால் துக்கம், கடன், ரோகம், சத்துரு இவற்றின் பெருக்கைத் தருவர். சுபர் இருந்தால் மேற்கூறியதே கிடையாவென்றும், 8ல் பாபரிருந்தால் ஆயுள் விருத்தியைச் செய்வர்.

---

* இந்த சுலோக விஷயமாய் நமது பிருஹத்ஜாதக மொழிபெயர்ப்பு 534, 535, 536ம் பக்கங்களில விரிவாய் எழுதியிருப்பதைப் பார்க்கவும்.

சுபர் இருந்தால் ஆயுளைக் குறைப்பர் என்றும் கண்டுகொள்ள வேண்டும் என்பதாம்.

(20) எந்தப் பாவத்திற்குப் பலன் பார்க்கவேண்டுமோ அந்தப் பாவத்தை லக்கினமாகக் கொண்டு அது முதல் ரூபம், தனம் முதலிய 12 பாவங்களின் பலன்களையும் ஊஹித்தறிய வேண்டும்.

(21) இதுபோலவே அவ்வவற்றின் காரகர்களான சூரியாதி கிரஹங்களிருக்குமிடத்தை அந்தப் பாவத்தின் லக்னம் முதலியதாகக் கொண்டு அவர்களின் பிதா, மாதா, ஸஹோதரன், அம்மான், புத்திரன், பதி, வேலைக்காரன், இவர்களுடைய பலனையும் கண்டுகொள்க. (22, 23, 24) சூரியனிருக்கும் ராசியைக்கொண்டு பிதாவின் ஸ்வரூபத்தையும், 2 மிடத்தைக்கொண்டு பிதாவின் விருத்தியையும், பிரகாசத்தையும், அவரது பிராதா, குணம் இவற்றை சூரியனுக்கு 3 மிடத்தைக் கொண்டும், அவரது அன்னை, சுகம் இவற்றைச் சூரியனுக்கு 4 மிடத்தைக் கொண்டும், புத்தி, பிரஸாதம் இவற்றைச் சூரியனுக்கு 5 மிடத்தைக் கொண்டும், பீடை, தோஷம், சத்துரு, ரோகம் இவற்றை 6 மிடத்தைக் கொண்டும், காமம், மதம் இவற்றை 7 மிடத்தைக் கொண்டும், துக்கம், மிருத்யு, ஆயுள் இவற்றை 8 மிடத்தைக் கொண்டும், புண்ணியம், சுபம், அவரது பிதா இவற்றை 9 மிடத்தைக் கொண்டும், தொழிலை 10 மிடத்தைக்கொண்டும், லாபத்தை 11 மிடத்தைக் கொண்டும், நாசத்தை 12 மிடத்தைக் கொண்டும் ஊஹித்தறிய வேண்டும். பிதாவின் பலனை காரகனான சூரியனிருக்குமிடத்தைக் கொண்டு பார்ப்பதுபோலவே சந்திராதி கிரஹங்கள், எந்தெந்த விஷயங்களுக்கு காரகர்ளாகின்றனரோ அவ்வவற்றின் பலனையும் சந்திரன் முதலியோர் இருக்குமிடங்களை லக்கினமாகக் கொண்டு அங்கிருந்து 12 பாவபலன்களையும் காணவேண்டுமென்கின்றனர்.

(குறிப்பு) பகலுக்கு சூரியனும், இரவுக்கு சனியும் பிதுருகாரகர் என்றும், பகலில் சுக்கிரனும், இரவில் சந்திரனும் மாதிருகாரகர்களென்றும் பிருஹத் ஜாதகத்தில் சொல்லியிருப்பதால் பகலில் ஜனித்த ஜாதகர் விஷயத்தில் சுக்கிரனிருக்குமிடம் தொட்டு மாதிருபாவ பலனையும், இரவில் ஜனித்த ஜாதகர் விஷயத்

தில் சனியிருக்குமிடந்தொட்டு பிதிருபாவ பலனேயும் பார்க்க வேண்டும். மற்றும் இது விஷயமான விசேஷத்தை நம்து பிருஹத்ஜாதகம் 151, 152, 153ம் பக்கங்களிற் காண்க.

(25) அந்தந்த பாவத்தினின்றும், காரகர்களிருக்கு மிடத்தினின்றும், அவரவரின் மாதா, பிராதா, பிதா, புத்திரன் முதலியோரை ஊஹித்தறிந்து கொள்ள வேண்டும். அந்தப் பாவமோ, காரகனே, பாவநாதனே வலுவுபெற்றிருந்தால் அந்தப் பாவத்திற்கு ஸவுக்கியமுண்டாகும்.

(26) 9ல் சூரியனும், 4ல் சந்திரனும், 3ல் செவ்வாயும், 5ல் குருவும், 7ல் சுக்கிரனும், 8ல் சனியும் இருந்தால் அந்தப் பாவத்திற்கு கிலேசத்தைத்தரு மென்கின்றனர்.

(குறிப்பு) இரவில் ஜனித்தஜாதகர்க்கு 9ல் சூரியனிருந்தால் பிதாவுக்கு எவ்வித தோஷமும் உண்டாவதில்லை. இது போலவே பகலில் ஜனித்தவர்க்கு 4ல் சந்திரனிருந்தாலும் தாய்க்கு தோஷமில்லை என்று கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

(27) ஜன்ம லக்கினதிபதி எந்தப் பாவாதிபதியுடன் கூடி எந்தப் பாவத்திலிருக்கின்றனே அப்பாவபலனேத் தருவான். அந்த பாவமோ, பாவாதிபதியோ பலம் பெற்றிருந்தால் அந்த பாவத்தால் ஸவுக்கியத்தையும், பலம் குறைந்திருந்தால் துக்கத்தையும் தருவர் என்பதாம்.

(28) லக்னதிபதியானவன் பலம் பெற்ற எந்தபாவாதிபதியுடன் சேர்ந்து அதிகப்*பரலுள்ள ராசியிலிருக்கின்றனே அந்த பாவானுபவமூலமுண்டான சுபத்தைச் செய்வான். அத்துடன், அவ்விதம் லக்கினதிபன் முற்கூறியபடி இருக்குமிடம் லக்கின பாவம் முதல் எத்துணையாவது பாவமாகுமோ அப்பாவத்திற்கும் அதேபலனேச் செய்வான். இதற்கு மாருக பலமற்ற(துர்பலனன) பாவாதிபதியுடன் சேர்ந்து ஸ்வல்பப்பரலுள்ள ராசியிலிருப்பானல் முற்கூறியதற்கு மாருக அசுபபலனேயே செய்வான். இங்கு சொல்லியதை எல்லாப்பாவங்களிலும் பொருத்திப்பார்த்துக்கொள்ளவும்.

---

* இவ்விஷயத்தை அஷ்டகவர்க்கம் போட்டு அதன் மூலமறிய வேண்டும்.

(29) துஸ்தானதிபன் அவற்றைத் தவிர தனது சொந்தவீட்டிலிருந்தால் ஸ்வக்ஷேத்திரம் எந்த பாவமாகவாகுமோ அந்தபாவ பலனைத் தருவானேயின்றி துஸ்தானபலனைத் தரமாட்டான். உதாஹரணம்—கன்னியா லக்கின ஜாதகத்திற்கு மகரம் 5மிடமாயும், கும்பம் 6மிடமாயும் ஆகும். இதில் சனிக்கு 6ம் பாவாதிபத்தியம் கிடைத்து அவன் 5ம் பாவமானமகரத்தில் ஸ்வக்ஷேத்திரத்திலிருந்தால் புத்திரஸித்தி யுண்டாகுமேயொழிய 6ம் பாவாதிபதி 5லிருப்பதாற் பொதுவாகக் கூறப்பட்ட புத்திர தோஷபலனைச் செய்யமாட்டான்.

(30) கிரஹங்கள் ஒருவர் ராசியில் மற்றவர் இருப்பது. (1) ஒருவரோடொருவர் சேர்ந்திருப்பது (2) ஒருவரை யொருவர் பார்ப்பது.(3) ஒருவருடைய கேந்திரத்தில் மற்றவர் இருப்பது(4) ஒருவருடைய திரிகோணத்தில் மற்றவர் இருப்பது(5)ஆகிய இவ்வைந்தும் கிரஹங்களின் ஸம்பந்தம் எனப்படும். ஆகவே இந்த சாஸ்திரத்தில் ஒருகிரஹத்திற்கு வேறுகிரஹத்தின் ஸம்பந்த மூலம் பலன் சொல்லுமிடத்தில் முற்கூறிய 5 துவிதமான ஸம்பந்தத்தையும் சோதித்தறிந்து கொண்டு அப்பலனைக்கண்டறிய வேண்டும் என்றேற்பட்டது.

பொதுவிதி முற்றிற்று.

## ஸாராவளியிற் சொல்லிய லக்ன பாவபலன்.

### अथ तनुभावफलम् ॥

रूपं तथा वर्णविनिर्णयश्च चिह्नानि जातेर्वयसः प्रमाणम् । सुखानि दुःखान्यपि साहसं च लग्ने विलोक्यं खलु सर्वमेतत् ॥ तनुपतिस्तनुगो मदनानुगं गतरुजं कुरुते बहुजीवितम् । अतिबलो नृपतेः कुलमन्त्रिणं सुखविलास युतं सधनं सदा ॥ तनुपतिर्धनभावगतो भवेद्धनयुतं पृथुदीर्घशरीरिणम् । विलघुजीवितमन्त्रकुटुम्बिनं विविधधर्मयुतं कुरुते नरम् ॥ तनुपतिस्सहजे सहजप्रदो भवति मित्रयुतोऽपि पराक्रमम् । बलयुतश्च सदानपवित्रतां शुभवचश्शुभदृष्टिवशान्नृणाम् ॥ सुखगते तनुते तनुपे सुखं विविधभक्ष्य विलाससुपूजितम् । नृपतिपूज्यतमं जननीसुखं गजरथाश्वसुखं सुरशासि-

नम् ॥ तनुपतिस्सुतगस्तनुते सुतान् विनयधर्मयुतान्बहुजीवितान्। विविध मिश्रफलं शुभकर्मणा भवति गानकलासु रतंनरम्॥ रिपुगतस्तनुपस्सरिपुं नरं सहज मायसुतं सुखमातुलम्। पशुकृतं जननीसुखसंभृतं कृपणमेव धनैर्विविधैर्युतम् ॥ प्रथमलग्नपतिर्मदगः स्त्रिया सुखधनैश्शुभ शील विला सिनम्। सविनयं वनितोपयुतं चहि सकलरूपयुतं कुरुते सदा ॥ प्रथम-भावपतिर्मृतिगो मृतिं प्रकुरुते कृपणं धनवञ्चकम्। विविधकष्टयुतंशुभ दृष्टितो भवति मानयुतः कृतवान्सुधीः॥ तनुपतिस्तनुते तपसा युतस्सहज मित्रवदान्यविशेषकृत्। सुखसुशीलयुतश्च यशोनिधिर्नृपतिपूज्यतमो मनु-जो नृणाम् ॥ दशमधामगते तनुनायके जनकमातृसुखं नृपतेस्समम्। सकल भोगसुखं शुभकर्मभिः कविवरं गुरुपूजनकं नरम् ॥ सुबहुजीवित आयगते नरः तनुपतौ शुभभावसमन्वितः। गजरथाश्वसकोशनृपात्सुखं विविध-कीर्ति विवेकविचारणः॥ तनुपतिर्व्ययगः कटुवाक् पुमान् खलसमागम दाहकरोऽघृणी। व्ययकरस्सहजे परदेशगस्सहजगोत्ररिपुर्ह्यरिसंयुतः ॥

## ॥ अथ दृष्टिफलम् ॥

रविदृष्टे प्राग्लग्ने विक्रान्तः स्त्रीप्ररोषणः क्रूरः। पितृपक्षलब्धविभ-वो नरेन्द्रसेवी भवेत्ख्यातः॥ स्त्रीणां वश्यः सुभगो दाक्षिण्यमहोदधिः प्रचुररोचिः। चन्द्रेक्षिते विलग्ने मार्दवजलपण्यभाग्भवति॥ साहससंग्राम-रुचिः चण्डस्स्फुटबान्धवोऽतिधर्मरतः। उदये कुजसन्दृष्टे भवति नरःस्थू-लशोफाश्च ॥ बुधदृष्टे प्राग्लग्ने शिल्पकलाविद्यया समभिपूर्णः। भवति नरो निपुणमतिःकीर्त्यक्षयमानसंसक्तः॥ याज्याव्रतनियमपराःनृपपूज्या मुख्य-कीर्तयो मनुजाः। लग्ने सुरगुरुदृष्टे सज्जनगुर्वतिथिसंयुक्ताः॥ वेश्यासक्ता-श्चपलास्सुभगास्संपन्नभोगधनसौख्याः। शुक्रेक्षिते विलग्ने भवन्ति मनुजा-स्सुरूपाश्च ॥ घोराध्वरोगतप्ता धान्यव्ययमरणविगतसुखाः। मन्देक्षिते वि-लग्ने मलिना मूर्खाश्च जायन्ते॥ पश्यन् ग्रहःस्वलग्नं सर्वं विदधाति सौख्य मर्थश्च। प्रायो नृपप्रियत्वं पापः पापं शुभश्च शुभम्॥ एकेनापि न दृष्टं सम स्तगुणवर्जितं नरविलग्नम्। स्वगृहस्वभावसहितं जनयति खलु केवलं नित्यम्॥ द्व्यादिग्रहैः सन्दृष्टं प्रायेण शुभावहं भवति लग्नम्। एकेनापि शुभेनच न तु पापेन च परीक्ष्यते सद्भिः॥ सर्वैर्गगनभ्रमणैः दृष्टे लग्ने भवे-न्महीपालः। बलिभिः समस्तसौख्यो विगतभयो बहुलजीवितवयाः ॥

ஸாராவளியிற் சொல்லிய தனு (லக்ன) பாவபலன்.*

இந்த முதலாவதுபாவத்திற்கு (1) லக்னம், (2) விலக்னம், (3)உதயம், (4)ஹோரா, (5)க்ஷிதி, (6) பவம், (7)தனு, (8) மூர்த்தி, (9) சிரஸ், (10) கல்பம் என இந்த சாஸ்திரத்திற் பெயரிடப்பட்டிருக்கின்றது. இந்த முதலாவது பாவத்தைக் கொண்டு, ரூபம், வயது, நிறத்தின் நிர்ணயம், வடுக்கள், ஜாதி,வயது இவற்றின் பிரமாணம்,சுகம்,துக்கம்,ஸாஹஸம், ஆகிய இவையாவையும் ஆலோசித்தறியவேண்டும். தநுபாவாதிபதி லக்கினத்திலிருந்தால் மதனபீடையுள்ளவனையும்,வெகுகால ஜீவிதமுள்ளவனையும்,லக்கினாதிபதி அதிகம் வலுவுபெற்றிருந்தால் ராஜகுலமந்திரியையும், எப்பொழுதும் சுகவிலாஸத்துடன் கூடினவனையும், தனத்துடன் கூடினவனையும் உண்டாக்குகிறான். அதாவது: லக்கினாதிபதி லக்கினத்திலிருக்கப் பிறந்தவன் மேற்சொல்லியவாறு இருப்பான் என்பதாம்.

லக்கினாதிபதி இரண்டாவது பாவத்திலிருப்பவனாக ஆவானானால் அப்பொழுது பிறந்தவனை லக்கினாதிபன் தனத்துடன்கூடினவனாகவும்,பெருத்தும் நீண்டுமிருக்கின்ற சரீரமுள்ளவனாகவும்,மிக்கலகுஜீவனஞ் செய்யும் மந்திர குடும்பத்திற் பிறந்தவனாகவும், பற்பலதர்மமுள்ளவனாகவும் செய்கிறான். லக்கினாதிபதி மூன்றுமிடத்திலிருந்தால் ஸஹோதரனைத் தருபவனாகவாகிறான். மித்திரனுடன் கூடியிருந்தால் பராக்கிரமத்தைத் தருகிறான். அங்கு பலம்பெற்றிருந்தால் தானத்துடன் கூட பவித்திர (பரிசுத்த) னாகுதலைச் செய்கிறான். சுபரின் திருஷ்டியிருக்குமானால் மனிதர்க்கு சுபமான வார்த்தையைத் தருகிறான். நான்காமிடத்திலிருக்கும் லக்கினாதிபன் சுகத்தையும், பற்பலவிதமான பக்ஷயம், விலாஸம் இவற்றால் பூஜையையும், ராஜாக்களாற் மிக்கப் பூஜிக்கப்படுதலையும், தாயின் ஸவுக்யத்தையும், யானை, தேர், குதிரை இவற்றால் ஸவுக்கியத்தையும், தேவ்ஸரையும் கட்டளையிடும் தன்மையையும் செய்கிறான். (இதை தேவஸ்தான தர்மகர்த்தா, அல்லது டிரஸ்டி

---

* இங்கு ஸாராவளியிலுள்ள சுலோகங்கள் வெகு அசுத்தமாகயிருப்பதை எம்மாற் கூடியவரை திருத்தி அச்சிட்டிருக்கிறோம். ஆயினும் வேறுபிரதிகிடையாமைபற்றி திருத்த முடியாத சிலபிழைகளுமிருக்கின்றன.

என இக்காலத்திற்கேற்றாற் போல் பொருள் கொள்ளலாம்.) ஐந்தாமிடத்திலிருக்கும் லக்கிணாதிபன் விநயம், தர்மம் இவற்றுடன் கூடினவும், வெகுகாலம் ஜீவிக்கின்றவுமான புத்திரர்களைத் தருகிறான். அத்துடன் பற்பலவிதமான சுபகர்மங்களுடைய பல ஸம்பத்துடன் கூடினவனாகவும், கானவித்யையில் பற்றுள்ளவனாகவும் மனிதனைச் செய்கிறான். ஆறாமிடத்திலிருக்கும் ஜன்ம லக்கிணாதிபதியானவன் சத்துருவுள்ளவனும், ஸஹஜ (உடன் பிறந்த) மாமையுள்ள புத்திரனுள்ளவனும், சுகந்தரும் அம்மானுள்ளவனும், பசுத்தொழில் செய்பவனும், தாயின் சுகநிறைவுள்ளவனும், பற்பலவிதமான தனங்களுடன் கூடினவனாயினும் கிருபணனுமான மனிதனை யுண்டுபண்ணுகிறான்.

ஜன்ம லக்னாதிபதியானவன் ஸ்திரீராசியான ஏழாமிடத்திலிருந்தால் ஸ்திரீயினாலும், சுகம், தனம், இவற்றினாலும், சுபமான ஒழுக்கத்துடன் விளங்குகின்றவனும், விநயத்துடன் கூடினவனும், ஸ்திரீயுடன் கூடினவனும், எப்பொழுதும் எல்லாவிதமான ரூபத்துடன் கூடினவனும் (அதாவது: எப்பொழுதும் தன்னையும், ஸ்திரீயையும் அலங்கரித்துக் கொள்ளுவதில் பிரியமுள்ளவனும்) ஆன மனிதனைச் செய்கிறான். ஜன்மலக்கிணாதிபதி எட்டாமிடத்திலிருந்தால் மரணத்தைச் செய்வதுடன், மனிதனைக்கிருபணனாகவும், தனவிஷயத்தில் ஏமாற்றக்காரனாகவும், பற்பல கஷ்டத்துடன் கூடினவனாகவும் செய்கிறான். சுபர்பார்வை இருக்குமானால் ஜாதகன் கவுரவத்துடன் கூடினவனாகவும், நற்காரியஞ்செய்கின்றவனாகவும், நல்ல புத்திக்கூர்மை யுள்ளவனாகவும் ஆகிறான். ஒன்பதா மிடத்திலிருக்கிற லக்கிணாதிபன், ஸஹஜன், மித்திரன் சிறந்த கொடையாளி இவர்களைத் தருவான். அத்துடன் ஜாதகன், சுகம், நல்லொழுக்கம் இவற்றுடன் கூடினவனாகவும், கீர்த்திக்கு இருப்பிடமாகவும், ராஜாக்களால் மிக்கப் பூஜிக்கத்தக்கவனாகவும் ஆகிறான். பத்தாமிடத்திலிருக்கும் ஜன்மலக்கிணாதிபன் ராஜனுக்கு ஒப்பாயிருக்கும் தாய் தந்தையினிடமிருந்து சுகத்தையும், சுபகர்மங்களைச்செய்து ஸகலபோக சுகத்தையும், சிறந்த கவனஞ் செய்யும் திறமையையும், குருபூஜை செய்தலையும் பெற்ற மனிதனை யுண்டாக்குகிறான்.

லக்கினாதிபதியானவன் பதினொன்றாமிடத்திலிருந்தால் ஜாதகன் வெகுகாலம் ஜீவிப்பவனாகவும், சுபமான சித்தவிருத்தியுள்ளவனாகவும், யானை, தேர், குதிரை, கோசம் (பொக்கிஷம்) இவற்றுடன் கூடின அரசனிடமிருந்து சுகத்தை யடைகின்றவனாகவும், பற்பலவிதமான கீர்த்தி, விவேகம் (பகுத்தறிவு) விசாரம் (ஆலோசனை) இவையுள்ளவனாகவும் இருப்பான். லக்கினாதிபதி பன்னிரண்டா மிடத்திலிருந்தால் கடுமையான வாக்குள்ளவனாகவும் துஷ்டருடன் சேர்க்கையுள்ளவனாகவும், தீயச்செயலுள்ளவனாகவும் தயையற்றவனாகவும், வேறு தேசஞ் செல்லுகின்றவனாகவும், உடன் பிறந்தவன், கோத்திரம் இவற்றிர்க்கு சத்துருவாகவும், சத்துருவுடன் சேர்ந்தவனாகவும் இருப்பான். அத்துடன் இவனுடைய ஸஹோதரனுடைய நாசத்தைச் செய்கின்றவனாகவும் இருப்பான்.

குறிப்பு—இவ்விதம் லக்கினாதிபதி 12 பாவங்களிலிருக்கும் பலனை ஸாராவளியிற் சொல்லியிருப்பதை ஒருவாறு மொழி பெயர்த்திருக்கிறோம். ஆயினும் இந்த ஸாராவளிக் கிரந்தத்திலுள்ள சுலோகங்கள் வெகு அசுத்தமாயிருப்பதாலும், வேறு பிரதி கிடைக்காததாலும் நம்மால் கூடியவரை பிழையைத் திருத்தியும், அவற்றை மொழிபெயர்த்தும் இருக்கிறோம். ஆயினும் ஸாராவளீ செய்தவரே திருத்தக் கூடிய வேறு பிழைகளும் இந்த கிரந்தம் முடிய ஆங்காங்கு மலிந்துகிடப்பதால் இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் அவ்வப்பொழுது வேறு பிரதி சுத்தமாய் கிடைக்குமானால் அதன்படி மூலசுலோகத்தைத் திருத்தி அதன்படி அதன் பொருளையும் கண்டுகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## கிரஹதிருஷ்டி பலன்.

சூரியன் லக்கினத்தைப் பார்த்தால் பௌருஷமுள்ளவனாகவும், ஸ்திரீயுக்குக் கோபத்தை யுண்டு பண்ணுகின்றவனாகவும், குரூரனாகவும், தகப்பன் வழியினின்றும் கிடைத்த ஐசுவரியமுள்ளவனாகவும், ராஜஸேவை செய்பவனாகவும் இருப்பான். சந்திரன் லக்கினத்தைப் பார்த்தால் ஸ்திரீகளுக்கு வசப்படுபவனாகவும், அழகுள்ளவனாகவும், வெகு தாக்ஷிண்ணிய முள்ளவனாகவும்,

அதிக காந்தியுள்ளவனுகவும், மெதுவானதும், ஜலம் போன்றது மானவற்றின் வியாபாரஞ் செய்பவனுகவுமாகிருன்.(இதை இக்காலத்திற் சிகற்ருர்போல் பெட்ரோல் ஸ்பிரிட் முதலியவற்றை வியாபாரம் செய்பவன் என்றும் சொல்லலாம்.)செவ்வாய்லக்கினத்தைப் பார்த்தால் ஸாஹஸம், சண்டை இவற்றில் ருசியுள்ளவனுகவும், மிக்கக் கோப முள்ளவரென ப்ரசித்தமானவருடன் பந்து பாவத்தை யுடையவனுகவும், அதிகம் தர்மபற்றுள்ளவனுகவும், ஸ்தூலமான ஆண்குறி யுள்ளவனுகவும் இருப்பான். புதன் லக்கினத்தைப் பார்த்தல், சிற்பவித்யை வெகு நன்ருகக் கற்றவனுகவும், நிபுணமான புத்தியுள்ளவனுகவும், கீர்த்திக்குக் குறைவற்ற வெகுமானத்துடன் கூடினவனுகவும் மனிதனிருப்பான். லக்கினம் குருவினுற் பார்க்கப்பட்டால் யாகம், விரதம், நியம் இவற்றில் பற்றுள்ளவர்களாகவும், ராஜ பூஜ்யர்களாகவும், முக்கியமான கீர்த்தியுள்ளவர்களாகவும், ஸாது ஜனங்கள், குருக்கள், அதிதி இவர்களுடன் கூடினவர்களாகவும் மனிதர்கள் ஆகின்றனர். சுக்கிரன் லக்கினத்தைப் பார்த்தால் வேசியின் சேர்க்கை யுள்ளவர்களாகவும், சபலர்களாகவும், அழகு பொருந்தியவர்களாகவும், போகம், தனம், சவுக்கியம் இவற்றுடன் கூடினவர்களாகவும் மனிதர்களாகின்றனர். சனியினுல் லக்கினம் பார்க்கப்பட்டால் பயங்கரமான வழி, ரோகம் இவற்ருல் பீடிக்கப் பட்டவர்களாகவும், தான்யவியயம், மரணம், இவை மூலம் சுகமற்றவர்களாகவும், மழுங்கினவர்களாகவும், மூர்க்கர்களாகவும் ஆகின்றனர். கிரஹமானது தனது சொந்தவீட்டைப் பார்க்குமாயின் சவுக்கியம், அர்த்தம் ஆகிய இவையாவையும் செய்வதுடன் பெரும்பாலும் ராஜப்பிரியனுகுதலையும் செய்யும். அவ்விதம் லக்கினத்தைப்பார்க்கும் கிரஹம் பாபக்கிரஹமானுல் பாபபலனையும், சுபக்கிரஹமானு சுபபலனையும் செய்யும். மனித லக்கினமானது ஒரு கிரஹத்தாலும் பார்க்கப்படாவிடில் எவ்விதகுணமு மற்றவனும், தனது வீட்டிற்குரிய ஸ்வபாவமுள்ளவனுமாய் மனிதனைச் செய்யும். இரண்டு முதலிய கிரஹங்களால் லக்கினம் பார்க்கப்படுமானுல் பெரும்பாலும் சுபத்தையே தரும். ஆனுல் பார்க்கும் கிரஹம் ஒரு சுபனுயினும் பாபர் பார்வை யில்லாதிருக்கின்றதா ? என

ஸாதுக்கள் பரீக்ஷித்தறிதல் அவசியம். எல்லாக் கிரஹங்களும் லக்கினத்தைப் பார்க்குமானால் ராஜனாகவாகிறான். அந்த எல்லாக் கிரஹங்களும் பலம் பெற்றிருந்தால் எல்லாவித ஸவுக்கியமுள்ளவனாகவும் பயமற்றவனாகவும், நீண்டகாலம் ஜீவிக்கின்ற வயது (சரீரம்) உள்ளவனாகவும் இருப்பான்.

### கிருஹதிருஷ்டி பலன் முற்றிற்று.

लग्नाधिपो वा जीवो वा शुक्रो वा यदि केन्द्रगः। तस्य पुत्रस्य दीर्घायुस्सोऽपि स्याद्धनवान्भवेत्॥ लग्नेशे स्वोच्चराशिस्थे शुभग्रहनिरीक्षिते। कीर्ति श्रीमान्महाभोगी देहपुष्टिसमन्वितः॥ जीवशुक्रबुधा श्चन्द्रलग्ने सौरिसमन्विताः। लग्नात्केन्द्रगताश्चैव राजलक्षणसंयुतः॥ लग्नाधिपोऽतिबलवान् शुभखेटयुक्तःस्वोच्चस्सुहृद्ग्रहयुतस्स्वनवांशके वा। कर्माधिपेन सहितेयदि भाग्य नाथेसद्भाग्यकीर्तिधनधान्यचिरायुरेति॥२४॥परमोच्चगतेविलग्ननाथेतनुभावे शुभखेचरेण दृष्टे। उडुपे बलसंयुते च केन्द्रे शतमायुः प्रवदन्ति बुद्धिमन्तः॥ केन्द्रत्रिकोणनिधनेषु न यस्य पापाः लग्नाधिपस्सुरगुरुश्च चतुष्टयस्थः। भुक्त्वा सुखानि विविधानि सुपुण्यकर्मा जीवेच्च वत्सरशतं स विमुक्तरोगः ॥ २६ ॥ कुले नृपालो विपुलायुरेवाऽभयेन युक्तोऽरिकुलस्य हन्ता। सौम्यास्त्रयो लग्नगता यदिस्युः कुर्वन्ति जातं नृपतिं विनीतम्॥ पापास्त्रयो-दुःखदरिद्रयोगैर्युतं नितान्तं बहुभक्षकं च। नीचारिमूढादिवशाच्च चिन्त्यं षष्ठाष्टमान्त्याधिपसंयुताच्च॥ लग्ने शुभे शोभनदृष्टियुक्ते बाल्ये सुखं तन्नहि पापयोगात्। सुखी भवेत्पापबहुत्वयुक्ते लग्ने तु बाल्ये मरणाय चिन्त्यम्॥ वर्गोत्तमांशे यदि लग्ननाथे स्वक्षेत्रगे स्वोच्चयुतांशके वा। शुभान्विते वा शुभदृष्टियुक्ते सुखी भवत्यामरणान्तकालम्॥ मेषे शशाङ्कः कलशे शनिश्च भानुर्धनुःस्थश्च भृगुस्थितश्च। परस्य वित्तं न कदापि भुङ्क्ते स्वबाहुवीर्येण नरो वरेण्यः॥ चतुर्षु केन्द्रेषु भवन्ति सौम्याः वित्तस्थितश्चापि च पापखेटः। नरो दरिद्रोऽतितरां निरुक्तो भयङ्करश्चात्मकुलोद्भवानाम्॥ सुतस्थितो वा यदि मूर्तिवर्ती बृहस्पतीराज्यगतश्शशाङ्कः। नरस्तपस्वी विजितेन्द्रियश्च स्याद्राजसो बुद्धिविराजमानः॥ कन्यायां च तुलाधरे सुरगुरुर्मेषे वृषे वा भृगुः सौम्यो वृश्चिकराशिगश्शुभखगैर्दृष्टः कुलश्रेष्ठताम्। नूनं याति नरोऽपि चारचतुरश्चौदार्यजातादरः नित्यानन्दमयो गुणैर्वरतरो निष्ठापरो वित्तवान्॥ षष्ठे च राशौ भवतो बुधारौ नरो भवेच्चौरपरो नितान्तम्। कुकर्मसामर्थ्यविधेर्विशेषात् परान्नपाणिः कुगणस्थितश्च॥ प्रसूतिकाले किल यस्य जन्तोः कर्केर्कजश्चेन्मकरे महीजः। चौर्यप्रसङ्गोद्भव

चण्डदण्डश्शाखादिदण्डाश्च भवन्ति नूनम्॥ कुम्भे च मीने मिथुनाभिधाने शरासने स्युर्यदि पापखेटाः। कुचेष्टितस्स्यात्पुरुषो नितान्तं वज्रेण नूनं निधनं हि तस्य॥ यस्य प्रसूतौ किल नैधनस्थः सौम्यग्रहस्सौम्यनिरीक्षितश्च। तीर्थान्यनेकानि भवन्ति तस्य नरस्स सौम्यांशगतिमाश्रितश्च॥ बुधत्रिभागेन युते विलग्ने केन्द्रस्थचन्द्रेण निरीक्षितेच। राजान्वये यद्यपि जातजन्मा स्यान्नीचकर्मा मनुजः प्रकामम्॥ भानुर्द्वितीये भवने शनिश्च निशीथिनीशो गगनाश्रितश्च। भूनन्दने चैव मदे तदानीं स्यान्मानवो हीनकलेबरश्च॥ शशी दिनेशस्य यदा नवांशे भवेद्दिनेशश्शशिनो नवांशे। एकत्र संस्थौ यदि तौ भवेतांलक्ष्मीसमेतः सभवेच्च नूनम्॥ ४१॥ जीवांशकस्था स्सकला ग्रहेन्द्राः केन्द्राश्रिता धर्मधनाश्रिता वा। जातो नरः प्रव्रजितः स बाल्ये युगान्तमायुर्बहुशास्त्रकर्ता॥ मन्दांशकस्था रविभौमजीवाः कर्माश्रिता धर्मयुता बलाढ्याः। राशेस्समाप्तौ हिमगौ विलग्ने युगान्तमायुश्श्रियमादधाति॥ धर्मेश्वरे धर्मगते च यस्य भौमांशकस्थे हि मगुप्रदृष्टे। मुनीश्वरोऽयं मुनियोगजातः शास्त्रार्थकर्ता युगमादधाति॥ लग्नेश्वरे कर्कगते दिनेशे लग्नान्वितेशोभनखेचरेन्द्रैः। युक्तेप्रदृष्टे तनुपे स्वतुङ्गे सत्कीर्तिमाहुर्मुनयोऽत्र तज्ज्ञाः॥ पापे विलग्नेशपतौ सराहौ केन्द्रस्थिते कर्मणि पापखेटे। नीचग्रहे लग्नगतेऽर्किदृष्टे दुष्कीर्तियुक्तस्सभवेत्तदानीम्॥ लग्नेशो दुर्बलो यस्य (1)शुष्कराशिसमन्वितः। कृशगात्रोष्णदेहश्च सदालस्यसमन्वितः॥ रविचन्द्रौ यदैकस्थावेकांशकसमन्वितौ। द्विमातृभिरसौ बालः द्विपितृभ्यां प्रपोषयुक्॥ दुःस्थानगे पापविलग्ननाथे विलग्नभे वा सति रोगभाक्स्यात्। पापोविलग्ने यदि तुङ्गहीने लग्नेश्वरे रोगनिपीडितस्स्यात्॥ यदि भवन्ति हि कार्श्यतनुर्भवेत् तनुगता रविराहुकुजार्कजाः। रुधिरपाण्डुपरः परतापदः शुभतमागमदानकरो भवेत्॥ लग्नेश्वरः क्रूरसमन्वितश्चेत् देहस्य सौख्यादिविनाशमाहुः। तादृक्फलं नाशगतेऽपि तस्मिन् शुभेक्षितश्चेत्फलमन्यथा स्यात्। दुस्थानपेनापि युते विलग्ननाथे विलग्ने सति रोगभाक्स्यात्। बलैर्विहीने सति लग्ननाथे केन्द्रत्रिकोणेन तु रोगभाक्स्यात्॥ लग्नेचरे तद्भवनेश्वरो वा चरस्थिते संचरति प्रजातः। स्थिरे स्वदेशे बहुभाग्ययुक्तस्स्थि(2)रग्रहेणाति धनान्वितस्स्यात्॥

(1) कन्या मिथुन सिंहास्तु सदा निर्जल राशयः इति हौरिकचन्द्रिकायाम्॥

(2) स्थिरस्सूर्यश्चरश्चन्द्रस्तूग्रश्चारश्च चन्द्रजः। मिश्रो,मृदुर्गुरुश्शुक्रो लघुस्तीक्ष्णश्शनैश्चरः॥ சூரியன் ஸ்திரன், சந்திரன் சரன், செவ்வாய் உக்கிரன், புதன் மிச்ரன், குரு மிருது, சுக்கிரன் லகு, சனி தீக்ஷ்ணன், என ஹொளரிக சந்திரிகையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

संचारशीलश्चरभे विलग्ने लग्नांशकेचैव मुदाहन्ति। विदेशभाग्यं चरभे विलग्ने चरे तदीशे चरखेटदृष्टे॥ लग्नेश्वरे वीर्ययुते स्वतुङ्गे गम्भीरगामी पुरुषोऽन्यथा स्यात्। दीने तदीशे सजडश्शुभैस्तु दृष्टे युते वा न तथाविधोभवेत्॥ सप्तेन्द्वाख्यसमे विधुस्सुखकरः सूर्यस्तिथौपीडनं भौमो बाण अरिष्टकालकृदथाकीर्तिं बुधो यच्छति। सत्सूनुं कृतिवत्सरे सुरगुरुर्दैत्येश्वरस्सप्तभूदाराढ्यः परतश्शराकितमसारिष्टं करोति ध्रुवम्॥

லக்னுதிபனே, குருவோ, சுக்கிரனே கேந்திரத்திலிருந்தால் அந்தப் புத்திரனுக்கு நீண்டவாயு ளிருப்பதுடன் அவன் தனவானுகவு மாவான். லக்கினுதிபதி தனது உச்சராசியிருந்து சுபக்கிரஹங்களாற் பார்க்கப்படுவானுயின் கீர்த்தி, தனம், மஹாபோகம், தேஹபுஷ்டி இவற்றுடன் கூடினவனுக ஆவான். குரு, சுக்கிரன், புதன் இவர்களும் சனியுடன் கூடின சந்திரனும் லக்கினத்திலிருந்தாலும், லக்கினத்திற்கு கேந்திரத்திலிருந்தாலும், ராஜலக்ஷணம் பொருந்தியவனுக வாவான். லக்கினுதிபன் அதிக பலமுள்ளவனுய் தனது உச்சவீட்டிலோ, மித்திரக்கிரஹத்துடன் கூடி ஸ்வநவாம்சத்திலோ இருந்தாலும், 9க் குடையவன் 10க் குடையவன் இவர்களுடன் சேர்ந்தோ இருந்தாலும், நல்லபாக்கியம், கீர்த்தி, தனம், தான்னியம், நீண்ட ஆயுள் இவற்றை யடைகிருன். லக்கினுதிபதி * பரமோச்சனுய் லக்கினத்திலிருந்து சுபக்கிரஹங்களாற் பார்க்கப்பட்டாலும் சந்திரன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்தாலும் நூறுவயது ஆயுளுண்டென புத்திமான்கள் சொல்லுகின்றனர். கேந்திரம், திரிகோணம், 8 மிடம் இவ்விடங்களில் பாபக்கிரஹங்களில்லாதிருந்து லக்கினுதிபனும் குருவும் 1, 4, 7, 10 மிடங்களுள் ஒன்றிலிருந்தால் அவன் பற்பல சுகங்களை யனுபவித்தும் புண்ணியமான கர்மாவைச் செய்தும், வியாதியற்றவனுய் நூறுவருஷம் ஜீவிப்பான். மூன்று சுபக்கிரஹங்கள் லக்கினத்திலிருப்பாராளுல் குலத்தில் ராஜனுயும், நீண்டவாயுளுள்ளவனுயும், பயமில்லாதவனுயும், சத்துரு குலத்தை யழிக்கின்றவனுயும் ஆவான். ஆகவே அந்த யோகமானது பிறந்தவனை வணக்கமுள்ள ராஜனுகச் செய்கின்றது. மூன்று

---

* இன்னின்ன கிரஹம் பரமோச்சன் என்பதை நமது பிருஹத் ஜாதகம் 1-வது அத்தியாயம் 13-வது சுலோகம் பார்க்கவும்.

பாபர்கள் லக்கினத்திலிருந்தால் துக்கம், தாரித்ரியயோகம் இவற்றுடன் கூடினவனுகவும், மிக்க அதிக ஆஹாரம் சாப்பிடுகின்றவனுகவும், ஆவான். மேலும், கிரஹங்கள் நீசனுகவோ, சத்துருவாகவோ, சூரியனில் அஸ்தங்கதமாகவோ, இருப்பதைக்கொண்டும் 6, 8, 12 லிருப்பதைக்கொண்டும் மேற்சொன்ன வாருகிய பலனை ஊஹித்தறிய வேண்டும். லக்கினத்தில் அதிகம் பாபிகளின் சேர்க்கையிருந்தால் சுகியாக விருப்பானுயினும் பால்யத்தில் அந்த யோகம் மரணத்தைத்தரும்.

லக்கினுதிபதி வர்க்கோத்தமாம்சத்திலோ, ஸ்வக்ஷேத்திரத்திலோ, ஸ்வஉச்சநவாம்சத்திலோ, சுபருடன் சேர்க்கை, பார்வை இவற்றையடைந்தோ இருந்தால் மரணம் வரும்வரை சுகியாகவேயாகிறுன் மேஷத்தில் சந்திரனும், கும்பத்தில் சனியும், சூரியன் சுக்கிரன் இவர்கள் தனுஸ்ஸிலும், இருந்தால் பிறர்பணத்தை ஒருபொழுதும் அனுபவிப்பதில்லை. தனதுதோள்வலிமை கொண்டேபொருள் தேடி மனிதன் சிறந்தவனுகிறுன். 1, 4, 7, 10 ஆகிய இந்நான்கிடங்களிலும் சுபக்கிரஹங்களிலிருந்து பாபக்கிரஹம் 2 மிடத்திலிருந்தால் மனிதன் மிக்கதரித்திரனுகவாகிறுன் என்று சொல்லப் பட்டிருப்பதுடன் தனது குலத்துதித்தவர்க்குப் பயங்காரனுகவும் ஆகிறுன். குரு 5லோ, அல்லது லக்கினத்திலோ இருந்து 10ல் சந்திரனிருந்தால் மனிதன் தபஸ்வியாகவும். ஜிதேந்திரியனுகவும், ராஜஸகுணமுள்ளவனுகவும், புத்தியினுல் பிரகாசிக்கின்றவனுகவும் ஆகிறுன். கன்னியிலோ, துலாத்திலோ, குருவும், மேஷத்திலோ, விருஷபத்திலோ சுக்கிரனும், புதன் விருச்சிகத்திலுமிருந்து சுபராற்பார்க்கப்பட்டால் குலசிரேஷ்டனுகுதலை நிச்சயமாய் மனிதனடைவதுடன் மறைந்து விஷயமறிவதில் சதுரனுகவும் (ரஹஸ்யப்போலீஸ் என்று சொல்லலாம்) ஔதார்யத்தில் மிக்கப்பற்றுள்ளவனுகவும், நித்தியானந்த மயனுகவும், குணங்களால் மிக்கச் சிறந்தவனுகவும், மனதையடக்குவதில் முயற்சியுள்ளவனுகவும், தனவானுகவும் ஆகிறுன். 6-வது வீட்டில் புதனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் மனிதன் நிச்சயமாய் திருடுவதிலேயே பற்றுள்ளவனுக யிருப்பான் (இதை பிறர் சொத்தைக்கவருவதில் பற்றுள்ளவன் என்றும் ஜாதகத்திற்குத்

தக்கபடி மாற்றிப் பொருள்கொள்ளலாம்) கெட்டகாரியஞ் செய்வதிலுள்ள திறமையை முன்னிட்டு விசேஷமாக பரான்னம் புஜிப்பதிலேயே செல்லும் கையை யுடையவனுகவும் கெட்ட கூட்டத்திலேயே (எப்பொழுதும்) இருப்பவனுகவும் இருப்பான். எவன் ஜனித்த காலத்தில் கடகத்தில் சனியும், மகரத்தில் செவ்வாயும், இருக்கின்றனரோ அவன் திருட்டுத்தொழிற் செய்வதன் மூலம் கிடைத்த உக்கிரமான சிக்ஷையை யடைபவனுகவும், மரத்திற் கட்டி யடித்தல் முதலிய சிக்ஷையை யடைபவனுகவும், ஆகிறுன் என்பது நிஶ்சயம். கும்பத்திலும், மீனத்திலும், மிதுனத்திலும், தனுஸ்ஸிலும், பாபக்கிரஹங்க ளிருக்குமானுல் அப்பொழுது பிறந்த மனிதன் கெட்ட நடத்தையுள்ளவனுக இருப்பதுடன் இடி விழுதலால் அவனுக்கு மரணமுண்டாவதும் நிஶ்சயம்.

எவனது ஜன்மகாலத்தில் 8ல் சுபக்கிரஹமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கவும் படுகின்றதோ அவனுக்கு அனேகம்புண்ணிய தீர்த்தஸ்னுன சித்தியுண்டாவதுடன் அந்த மனிதன் சுபமான கதியை (மோக்ஷம் முதலியவற்றை) அடைந்த வனுகவும் ஆகிறுன். லக்கினத்தில் புதத்திரேஷ்காணத்தில் ஒருவன் ஜனித்து சந்திரனுலும் அந்த புதத்திரேஷ்காணம் பார்க்கப்படுமானுல் ராஜகுலத்தில் இவன் பிறந்தவனுயினும் மனிதன் மிகவும் இழிவு தொழில்செய்பவனுகவே இருப்பான். (ஒருவர்க்கு அடிமைத்தொழில் செய்பவனென்றும் சொல்லலாம். இக்காலத்தில் ஒருவர்க்கு அடிமைத்தொழில்செய்வதையே சிலர் நற்காரியமாகக்கொண்டிருக்கின்றனர் ஆயினும் சாஸ்திரமானது இந்த அடிமைத் தொழிலை நாய்த்தோழில் என்றே எண்ணுகிறது). இரண்டாவது வீட்டிற் சூரியனும், சனியும், 10 மிடத்தில் சந்திரனும், செவ்வாய் 7 மிடத்திலுமிருக்கப் பிறந்தவன் சரீரவலுவற்றவனுக இருப்பான். சூரியனுடைய நவாம்சத்தில் சந்திரனும் சந்திரனுடைய நவாம்சத்தில் சூரியனுமாக ஓரேயிடத்திலிருப்பார்களானுல் அப்பொழுது பிறந்தவன் அதிகம் தனஸம்பத்துடன் கூடினவனுவான். எல்லாக்கிரஹங்களும் குருவின் அம்சத்திலிருந்தார்களானுலும் கேந்திரத்திலோ, 9, 10மிடங்களிலோ இருந்தார்களானுலும், அப்

பொழுது பிறந்த மனிதன் இளம்வயதிலேயே ஸன்னியாசியாக ஆவதுடன் 51வயது முடிய ஆயுளையடைந்து, வெகு சாஸ்திர கர்த்தாவாகவும் ஆகிறான். சூரியன், செவ்வாய், குரு இவர்கள் சனியினம்சத்திலிருந்தாலும், 10, 9 மிடங்களில் வலுவுபெற்று மிருந்தாலும், ஜன்ம லக்கினத்தின் முடிவில் சந்திரனுமிருந்தாலும் அப்பொழுது பிறந்தவன் 51 வயது முடியும்வரை ஆயுளையடைந்து ஐசுவரியத்தை அடைகிறான். 9க் குடையவன் 9 லேயே யிருந்து செவ்வாயின் அம்சத்தில் சந்திரனுமிருந்து (9க்குடையவனால்) பார்க்கப்பட்டால் முனியோகத்திற் பிறந்தவன் முனீசுவரனாகி (ஸன்னியாஸி என்றும் சொல்லலாம்) சாஸ்திரங்களைச் செய்து 31 வயதுவரை ஆயுளையுமடைகிறான். லக்னாதிபதி கடகத்திலிருந்தும், சூரியன் லக்கினத்திலும் இருந்து சுபக்கிரஹங்களுடன் சேர்ந்தோ பார்வையைப் பெற்றோ இருந்தாலும், லக்னாதிபதி தனது உச்சவீட்டி லிருந்தாலும் அதன் மஹிமை யறிந்த பெரியோர் அதில் பிறந்தவனுக்கு நற்கீர்த்தியுண்டென்கின்றனர். பாபியான கிரஹம் லக்கினத்திலும், லக்கினாம்சபதியானவன் ராஹுவுடன் கூடிகேந்திரத்திலும், அல்லது 10மிடத்தில் பாபக்கிரஹமிருந்தும் நீசனானகிரஹம் லக்கினத்திலிருந்து சனியினாற் பார்க்கப்பட்டுமிருந்தும் அதிற் பிறந்தவன் துஷ்கீர்த்தியை யடைவான் என்கின்றனர்.

லக்கினாதிபதி துர்ப்பலனாய் சுஷ்கராசியிலிருந்தால் (कन्यामिथुनसिंहास्तु सदा निर्जलराशयः என்ற வசனப்படி கன்னி, மிதுனம், சிம்மம் இவைசுஷ்க ராசிகளெனப்படும்) இளைத்த சரீரமும் உஷ்ணமான தேஹமும் உள்ளவனாயிருப்பதுடன் எப்பொழுதும் சோம்பலுள்ளவனாகவும் இருப்பான். சூரியன், சந்திரன் இருவரும் ஒரேராசியில் ஒரே அம்சத்திலு மிருப்பார்களானால் இரண்டு மாதாக்களாலும் இரண்டு பிதாக்களாலும் போஷணத்தை யடைவான். (அதாவது: இவன் பிறந்ததுமே வேறுமாதா பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்களாலும் போஷிக்கப்படுவான் என்றும் சொல்லலாம்) பாபியான லக்கினாதிபதி 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும் அல்லது லக்கினத்திலேயே யிருந்தாலும் ரோகமுள்ளவனாக ஆவான். லக்கினத்தில் பாபரிருந்து லக்கினேசுவரன்

உச்சனுக யில்லாதிருந்தாலும் ரோகபீடிதனுகவே ஆவான். சூரியன், ராகு, செவ்வாய், சனி இவர்கள் லக்கினத்திலிருந்தார்களாஞல் இளைத்த சரீரமுள்ளவனுக ஆவதுடன் ரக்தபாண்டு ரோகமுள்ளவனுகவும், பிறர்க்கு தாபத்தை யுண்டுபண்ணுபவனுகவும், மிக்க சுபமானதும் சாஸ்திரத்திற் சொல்லியதுமான தானத்தைச் செய்பவனுகவும் ஆவான். லக்கினுதிபதியானவன் குரூரக்கிரஹத்துடன் சேர்ந்திருந்தானேயானுல் தேஹத்தினுடைய சவுக்கிய விநாசத்தைச் சொல்லுகின்றனர். அந்த லக்கினுதிபதி 8 மிடத்திலிருந்தாலும் அதே ரோகபீடித பலனே நடக்கும். சுபரின் பார்வை லக்கினுதிபதிக்கிருந்தால் முற்கூறிய பலன் மாறி நடக்கும். 6, 8, 12க் குடையவனுடன் கூடி லக்கினுதிபதி லக்கினத்திலிருந்தாலும், ரோகத்தையே யடைவான். லக்கினுதிபதி பலமற்றவனுயினும் கேந்திரத் திரிகோணத்திலிருந்தால் ரோகத்தை யடைய மாட்டான். லக்கினம் சரராசியாயிருந்தாலும், அந்த லக்கினுதிபதி சரராசியி லிருந்தாலும், அதிற்பிறந்தவன் வெளி தேச ஸஞ்சாரியாவான். லக்கினம் ஸ்திரராசியானுல் சொந்த தேசத்தில் வெகு பாக்கியத்தை யடைவான். ஸ்திரக் கிரஹத்தால் (சூரியனுல்) பார்க்கப்பட்டால் அல்லது கூடினுல் அதிகம் தனமுள்ளவனுக ஆவான். மேலும், லக்கினம் சரராசியானுல் ஸஞ்சாரத்திலேயே பற்றுள்ளவனு யிருப்பான். லக்கினும்சங்களைக்கொண்டும் இவ்வித பலனையே சொல்லுகின்றனர். மேலும், லக்கினம் சரமாகி லக்கினுதிபதி சரராசியிலிருந்து சரகிரஹத்தால் (சந்திரனுற்) பார்க்கப்பட்டால் வேறு தேசத்திலேயே பாக்கியத்தை யடைகிருன். லக்கினுதிபதி பலம்பெற்றவனுய் உச்ச வீட்டிலிருந்தால் கம்பீரமாக நடக்கின்றவனுகவும் ஆவான். இதற்குமாருனுல் புருஷன் முற்கூறியதற்கு மாருக விருப்பான். லக்கினுதிபதி * தீனனுனுல் (சத்துருவீட்டிலிருந்தால்) அப்பொழுது ஜனித்தவன் ஜடனுகவிருப்பான். சுபரின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப்பெற்ருல் முற்கூறியபடி ஜடனுகமாட்

---

* दीनोऽरिभवनान्तस्थः खलवर्गगतः खलः என ஹெளரிக சந்திரிகையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

டான். (இதற்கடுத்துள்ள சுலோகம் வெகு அசுத்தமாயிருத்தல் பற்றி அதற்கு உரை எழுதப்படவில்லை.)

ஸாராவளியிற்சொல்லிய லக்னபாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற் சொல்லியபடி லக்கினாதி 12 பாவங்களிலும் கிரஹங்களிருப்பதன் பலன்.

तुर्येचन्द्रेस्थिते खेटैः शत्रुभिर्वा युतेक्षिते। परेण जायते बालो निश्चितंच यथा पशुः। त्रिषष्ठद्विसुताधीशो यदा लग्ने स्थितस्तदा। तथापिपरजातः स्याद्भृत्याद्यन्यसुतादिभिः। लग्ने क्रूरोऽस्तगः सौम्यः कर्मस्थो रविनन्दनः। अस्मिन्योगे च यो जातो जायते वर्णसंकरः। मूर्तौ चेन्दुश्चदुश्चिक्ये भूमिनन्दन भार्गवौ। (यदा पंचदशावर्णे) तदापि परबालकः। ग्रहराजे स्थिते लग्ने चतुर्थे सिंहिकासुतः। स्वदेवरात्सुतोत्पत्तिर्जाता तस्य न संशयः। लग्ने राहुधरापुत्रौ सप्तमे चन्द्रभास्करौ। नीचेन जायते बालो यदि राज्ञी भवेदपि। सूर्ययुक्तेन्दुलग्नस्थे सप्तमे भौमभार्गवौ। अस्मिन्योगे यदा जन्म परेणैव हि जायते। केन्द्रं शून्यं भवेद्यस्य सोपि जातः परेण हि। द्विषष्ठाष्टमरि:फेषु ग्रहाः स्तिष्ठन्ति यस्य हि। परजातो भवेत्सत्यमन्यत्रापि च संस्थिताः। एकस्थाने यदाऽस्तेशलग्नेशौ सोपिजारजः॥ जीवो निशाकरं लग्नं नेक्षेतापि स जारजः। जीववर्गविहीनांशे तदा योगः पराङ्गनेः। द्विशत्रू चैककेन्द्रस्थावन्यग्रहविवर्जितौ। तदापि परजातः स्यात्स्थिरलग्ने विशेषतः। चतुर्थे दशमे लग्ने पापयुग्विधुसंस्थितः। लग्नेशावीक्षितं लग्नं तदापि परबालकः। लग्नेशेऽसंस्थिते लग्ने परजातः कदाचन। भंगोऽयं सर्वयोगानामिति ते कथितं मया॥

(க—ரை) நான்காமிடத்தில் சந்திரனிருந்து சத்துருக்கிரஹங்களால் பார்வை சேர்க்கை இவற்றை யடைந்தோ இருந்தால் அப்பொழுது பிறந்தபாலன் பசுவைப்போல பிறராலேயே பிறந்தவன் என்பது நிஸ்சயம். 3,6,2,5க்குடைய கிரஹம் லக்கினத்திலிருக்குமானால் வேலைக்காரன் முதலிய வேறுபுருஷர்களால் இவனுண்டுபண்ணப்பட்டவன். லக்கினத்தில் பாபக்கிரஹமும் 7ல் சுபக்கிரஹமும், 10ல் சனியும் இருந்தால் இந்த யோகத்தில் வர்ணக்கலப்பே யுண்டாகும். லக்கினத்தில் சந்திரனும், 3ல் செவ்

வாயும் சுக்கிரனும், (पंचदशावर्ण என்பதற்கு பொருள்விளங்கவில்லை) இருந்தால் அப்பொழுதும் பாலன் பிறர்க்குப் பிறந்தவனே யாவன். சூரியன் லக்கினத்திலும், 4ல் ராஹுவும், இருந்தால் தனது பர்த்தாவின் ஸஹோதரர் மூலம் புத்திரோத்பத்தியெனச் சொல்லுவதில் சந்தேஹமில்லை. லக்கினத்தில் ராஹுவும், செவ்வாயும், 7ல் சந்திரனும் சூரியனும் இருக்கப் பிறந்தவன் அவனுடையதாய் ராஜபத்தினியாயினும் தாழ்ந்த ஜாதிக்குப்பிறந்தவனே ஆவான் இதிலையமில்லை. சூரியனுடன் கூடின சந்திரன் லக்கினத்திலும் 7ல் செவ்வாயும் சுக்கிரனு மிருக்கப்பிறந்தவன் பிறர்க்குப் பிறந்தவனே யாவான். எவனுடைய ஜாதகத்தில் 1, 4, 7, 10மிடங்கள் ஒருகிரஹமு மில்லாதிருக்குமோ அவனும் பிறர்க்குப் பிறந்சவனே ஆகிறான். 2, 6, 8, 12மிடங்களில் கிரஹங்கள் யாவும் எவனது ஜாதகத்திலிருக்கின்றனவோ அவன் பிறர்க்குப் பிறந்தவன் என்பது ஸத்தியமே. லக்கினத்தைத்தவிர்த்து எல்லாக்கிரஹங்களும் எந்த விடத்திலேனும் இதேமாதிரியாகவே ஒன்றுக்கொன்று 2, 6, 8, 12மிடங்களுக்குள்ளேயே இருக்குமாறுலும் அந்த ஜாதகன் பிறர்க்குப் பிறந்தவனே யாவன். ஒரே விடத்தில் 7க்குடையவனும் லக்கினுதிபதியும் சேர்ந்திருந்தாலும் அவன் பிறர்க்குப் பிறந்தவனே யாவான். குரு சந்திரனையோ, ஜன்ம லக்கினத்தையோ பார்க்காவிட்டாலும் ஜீவவர்க்க பேருதிருந்தாலும் பிறர்க்குப் பிறந்தவனே ஆவான். ஒன்றுக்கொன்று சத்துருக்களான இரண்டுகிரஹங்கள் வேறுகிரஹங்களின் சேர்க்கையில்லாமல் ஒரே கேந்திரங்களிலிருந்தால் பிறர்க்குப் பிறந்தவனே யாவான். அவ்விதம் பிறந்த லக்கினம் ஸ்திரமானல் மேற்சொன்ன பலன் மிக்க உறுதியாகவே யேற்படும். 1, 4, 10மிடங்களில் பாபர் இருந்து சந்திரனுடைய சேர்க்கையுமிருந்து லக்கினேசனல் லக்கினம் பார்க்கவும் பட்டால் அப்பொழுதும் பிறர்க்குப்பிறந்தவனே யாவான். லக்னேசன் லக்கினத்திலில்லாதிருந்தால் சில விடங்களில் பிறர்க்குப் பிறந்ததாகவும் ஏற்படுகின்றது. இந்த யோகமானது எல்லாயோகங்களுக்கும் பங்கத்தைத் தாக்கூடியதாகவே ஆகும். (எ-று)

இனி லக்கிஞதிபதி 12 பாவங்களிலிருப்பதன் பலன்.

लग्नेशे लग्नगे पुंस: स्वदेहस्वभुजाक्रमी। मनस्वीचातिचाञ्चल्यो द्विभार्य: परगोऽपि वा। लग्नेशे धनगे लाभे सलाभ: पीडितो नर:। सुशीलो धर्मविन्मानी बहुदारगुणैर्युत:। लग्नेशे सहजे षष्ठे सिंहतुल्यपराक्रमी। सर्वसंपद्युतो मानी द्विभार्यो मतिमान्सुखी। लग्नेशे दशमे तुर्ये पितृमातृसुखान्वित:। बहुभ्रातृयुत: कामी गुणसौन्दर्यसंयुत:। लग्नेशे पञ्चमे मानी सुतसौख्यञ्च मध्यमम्। प्रथमापत्यनाश: स्यात्क्रोधी राजप्रवेशक:॥ लग्नेश: सप्तमे यस्य तस्य भार्या न जीवति। विरक्तो वा प्रवासी वा दरिद्रो वा नृपोपि वा॥ लग्नेशे व्ययगेऽष्टस्थे सिद्धविद्याविशारद:। द्यूती चौरो महाक्रोधी परनार्यतिभोगकृत्। लग्नेशे नवमे पुंसो भाग्यवाञ्जनवल्लभ:। विष्णुभक्त: पटुर्वाग्मी पुत्रदारधनैर्युत:॥

(க—ரை) எந்த ஜாதகனுக்கு லக்னேசன் லக்கினத்திலிருக்கின்றானே அவன் தனது தேஹம் கை இவற்றால் பாடுபட்டுழைப்பவனுகவும், மனஸ்வியாயும், அதிகம் சாஞ்சல்ய முள்ளவனுகவும், இரண்டு பாரியையுள்ளவனுகவோ, வேறு ஸ்திரீயைப் புணருகின்றவனுகவோ இருப்பவனுகவு மிருப்பான். லக்கினேசன் 2, 11 மிடங்களிலிருக்கப் பிறந்தவன் லாபத்துடன் கூடினவனுகவும், பீடிதனுகவும், நல்லொழுக்க முள்ளவனுகவும், தர்மமறிந்தவனுகவும், மானியாகவும், வெகு உதாரகுணங்களுடன் கூடினவனுகவும் இருப்பான். லக்கினுதிபதி 3, 6 மிடங்களிலிருந்தால் சிங்கத்திற்கொப்பான பராக்கிரம முள்ளவனுகவும்,ஸர்வஸம்பத்துள்ளவனுகவும், மானியாகவும், இரண்டு பாரியை யுள்ளவனுகவும், புத்தி யுள்ளவனுகவும், சுகியாகவும் இருப்பான். லக்கினேசன் 10லோ, 4லிலோ இருந்தால் தாய் தகப்பனுடைய சுகமுள்ளவனுகவும், அதிகம் ஸஹோதரருள்ளவனுகவும், காமியாகவும், குணம், சவுந்தரியம் இவையுள்ளவனுகவும் இருப்பான். லக்கினேசன் 5 லிருந்தால் மானியாவான். புத்திர சவுக்கியம் மத்தியமமாயிருக்கும். முதற்பிறந்த குழந்தைக்கு நாசமுண்டாகும். கோபமுள்ளவனுகவும், ராஜப்ரவேசமுள்ளவனுகவும் இருப்பான். லக்கினேசன் 7 லிருந்தால் அவனது பாரியை ஜீவிப்பது ஸந்தேஹம். ராஜனுகவோ, தரித்திரனுகவோ இருந்தபோதிலும் விரக்தனுகவோ, வேறு தேசம் செல்லுகின்றவனுகவோ ஆகிறுன். லக்கினேசன்

8லோ, 12லோ இருந்தால் ஸித்தவித்யை (வாதம் சுடுதல்) யில் ஸமர்த்தனுகவும், சூது, (சீட்டென்றும் சொல்லலாம்) ஆடுகிறவனுகவும், திருடுபவனுகவும், குரோதியாகவும், பிறர் பெண்டீரிடத்தில் அதிகம் போகம் செய்கின்றவனுகவும் ஆவான். லக்கினேசன் 9 லிருந்தால் பாக்கியவானுகவும், ஜனங்களுக்கு வேண்டியவனுகவும், விஷ்ணுபக்தனுகவும், படுவ்ாக (எதிலும் திறமைவாய்ந்தவனுக) வும், பேசுந்திறமை யுள்ளவனுகவும், புத்திரன், தாரம், தனம் இவற்றுடன் கூடினவனுகவும் ஆகிருன். (எ—று)

பராசரஸம்ஹிதையிற் சொல்லியபடி லக்கிளுதிபதி
12 பாவங்களிலுமிருப்பதன் பலன் முற்றிற்று.

---

## ஜாதகதத்துவத்திற் சொல்லிய லக்ன பாவபலன்.

இந்த ஜாதக தத்துவமானது மஹாதேவன் என்ற சோதிடாசிரியராற் செய்யப்பட்டதாகும். இது சூத்திரவடிவமானது. இந்தக் கிரந்தத்திற் சொல்லியவையாவும் மிக்கமிக்க அனுபவத்திலொத்து வருவதால் இதிலுள்ள சூத்திரவடிவமான வாக்கியங்களையும் எழுதி மொழிபெயர்க்கிறோம்.

आलिङ्गनाय संवृत्तौ भवौ देवौ मिथो भिया।
विश्लेषादेकतां यातौ भूयास्तां मङ्गळाय नः॥

तत्रादौ भावानांविचारः॥ यो यो भावःस्वस्वामिशुभैर्युक्तो दृष्टो वा तस्य वृद्धिः पापैर्हानिर्मिश्रैर्मिश्रम् ॥ १ ॥ नीचारिस्थो ग्रहो भावनाशकरः ॥ २ ॥ स्वसुहृत्तुङ्गस्थो भाववृद्धिकरः॥३॥ यद्भावात्त्रिके पापास्तद्भावविनाशः ॥ ४ ॥ यद्भावेशःत्रिके त्रिकेशो वा यद्भावे तद्भावविनाशः ॥ ५ ॥ यद्भावीयकेन्द्रार्थकोणस्थानानि शुभपतियुतानि तद्भावपुष्टिः, पापयुतानि चेद्धानिर्मिश्रयुतानि चेन्मिश्रम् ॥ ६ ॥ यद्भावे सौरिर्नीचास्तगः शुभैरयुतेक्षितश्चेत्तद्भावनाशः ॥ ७ ॥ यद्भावीयरन्ध्रेशसूर्यशनिगुळिकेश गुळिकांशेशानां मध्ये योऽधिकबली तत्पाके मूर्तिवित्तादिनाशः॥ ८ ॥

अथाङ्गविचारः॥ स्वांशेऽङ्गेशे शुभयुते वा शुभदृष्टे देहसौख्यम्॥९॥ अङ्गेशोऽङ्गे देहसौ० ॥ १० ॥ सपापेऽङ्गेशे त्रिके देहसौख्यं न ॥ ११ ॥ लग्ने पापा लग्नेशे च हीनवीर्ये देहसौख्यं न ॥ १२ ॥ शनिचन्द्रौ मेषे देहकार्श्य

म् ॥ १३ ॥ अन्त्येशे लाभकेन्द्रगे वक्रे देहकार्श्यम् ॥ १४ ॥ लग्नेशाधिष्ठितभेशास्त्रिके देहकार्श्यम् ॥ १५ ॥ शुष्काङ्गे शुष्कग्रहे देहकार्श्यम् ॥ १६ ॥ शुष्कयुतेऽङ्गेशे का० ॥ १७ ॥ शुष्कग्रहर्क्षेऽङ्गेशे का० ॥ १८ ॥ लग्नेशांशेशे शुष्के का० ॥ १९ ॥ शुष्काङ्गगैः पापैः का० ॥ २० ॥ राशीशे साङ्गनाथे देहपुष्टिः ॥ २१ ॥ तोयर्क्षेऽङ्गेशे शुभान्विते वा जलखगदृष्टे देहपुष्टिः ॥२२॥ शुभर्क्षेऽङ्गे जलर्क्षेऽङ्गांशेशे देहपुष्टिः ॥ २३ ॥ लग्ने शुभर्क्षे पापदृग्वर्जिते दे० ॥ २४ ॥ लग्ने गुरुयुते वा गुरुदृष्टे दे० ॥ २५ ॥ जलर्क्षेऽङ्गे शुभैर्युते वा दृष्टे दे० ॥ २६ ॥ मिथुनांशे दे० ॥ २७ ॥ लग्नगे सबले सत्खचरे दे० ॥ २८ ॥ लग्नादिराशयः शिरःप्रभृति कालाङ्गेषु कल्प्याः ॥ २९ ॥ यत्राङ्गे दीर्घराशिर्दीर्घपश्च तद्दीर्घं, व्यत्यस्ते ह्रस्वं, मिश्रे मिश्रं, ग्रहानाक्रान्तराशिश्चेद्राशिवत् ॥ ३० ॥

(க—ரை) ஒருவரை யொருவர் தழுவிக்கொள்ள வேண்டி பிரவிருத்தித்தவர்களான பார்வதீபரமேசுவரர்கள் விட்டுப் பிரிவதினின்று முண்டான பயத்தினுல் ஒரு மூர்த்தியாகவே ஆகிவிட்டனரோ அந்த அர்த்தநாரீசுவரர்கள் நமக்கு மங்களத்தைத் தரக்கடவர்.

பாவபலனைப் பார்க்கும்பொழுது கவனிக்கவேண்டியவை.

(1) எந்தப் பாவமானது தனதுபதி சுபக்கிரஹம் இவர்களுடன் சேர்ந்தோ, அவர்களால் பார்க்கப்பட்டோ இருக்குமோ, அந்தப்பாவத்திற்கு விருத்தியுண்டு. பாபர்களுடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருக்குமானுல் அந்தப் பாவத்திற்கு நாசமுண்டாகும். சுபர்பாபர் இருவருடனும் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் பலனும் கலந்தே நடைபெறும். (2) நீசத்திலோ, சத்துருவீட்டிலோ இருக்கும் கிரஹம் பாவநாசத்தைச் செய்யும். (3) தனது மித்திரவீடு, உச்சவீடு இவற்றிலிருந்தால் பாவவிருத்தியுண்டாகும். (4) எந்தப் பாவத்திற்கு 6, 8, 12ல் பாபர்களிருக்கின்றனரோ அந்தப் பாவம் நாசமாகும். (5) எத்தப் பாவேசன் 6, 8, 12லும், 6, 8, 12க் குடையவன் எந்தப் பாவத்திலுமிருக்கின்றனே அந்தப்பாவம் நாசமடையும். (6) எந்தப் பாவத்தின் கேந்திரம், 2 மிடம், 5, 9 மிடம் இவைகள் சுபருடனும், தனது பதியுடனும் கூடியிருக்குமோ அந்தப் பாவத்திற்குப் புஷ்டியுண்டு. பாபரிவ்விதமிருந்தால் குறைவுண்டாகும். சுபர்

பாபர் கலந்திருந்தால் பலனும் புஷ்டியும் குறைவாகவே நடக்கும். (7) எந்தப் பாவத்தில் சனி நீசனுகவோ அஸ்தங்கதனுகவோ, சுபரின் சேர்க்கை, வீக்ஷணம் இவற்றைப் பெறுமலுமிருப்பானே, அந்தப்பாவம் நாசமடையும். (8) எந்தப் பாவத்திர்க்கு 8க் குடையவன், சூரியன், சனி, குளிகன் (மாந்தீ) குளிகனிருக்கும் அம்சேசன் இவர்களுக்குள் எவன் அதிகம் பலம் பெற்றவனே அவனுடைய தசையில் சரீரம், பணம் முதலியவற்றின் நாசமுண் டாகும். (எ—று)

## இனி அங்க (முதல்பாவ) விசாரம்.

(க—ரை) (9) லக்கினுதிபதி தனது நவாம்சத்திலோ சுபரு டன் சேர்ந்தோ, சுபராற் பார்க்கப்பட்டோ இருந்தால் தேஹ சவுக்கிய முண்டாகும். (10) லக்கினுதிபதி லக்கினத்திலிருந்தால் தேஹஸவுக்கியமுண்டு. (11) லக்கினுதிபதி பாபியுடன் கூடியோ, 6, 8, 12 லோ இருந்தால் தேஹஸவுக்கியமில்லை. (12) லக்கினத் தில் பாபரும், லக்கினேசன் பலமற்று மிருந்தால் தேஹஸவுக் கியமில்லை. (13) சனி, சந்திரன் இவர்கள் மேஷத்திலிருந்தால் தேஹம் கிருசமாகும். (14) 12 க்குடையவன் 11, லோ, கேந் திரத்திலோ வக்கிரியாகவோ இருந்தால் தேஹம் கிருசமாகும். (15) லக்கினுதிபதி இருக்கும் வீட்டிற்குடையவன் 6, 8, 12லிருந் தாலும் தேஹகார்ச்ய முண்டாகும். (16) சுஷ்கராசி (கன்னி மிதுனம், சிம்மம்) யில் சூரியன், செவ்வாய், சனி இவர்களிருந் தால் தேஹம் கிருசமாகும். (17) லக்கினுதிபதி சுஷ்ககிரஹமான சூரியன், செவ்வாய், சனி இவர்களுடன் கூடினுல் சரீரம் கிருச மாகும். (18)லக்கினுதிபதி சுஷ்ககிரஹத்தின் வீட்டிலிருந்தாலும் தேஹம் கிருசமாகும். (19) லக்கினுதிபதியிருக்கும் அம்சாதிபதி சுஷ்கராசியிலிருந்தாலும் தேஹம் கிருசமாகும் (20) சுஷ்கமான ராசி லக்கினமாகி அதில் பாபரிருந்தாலும் தேஹம் கிருசமாகும்.

தேஹபுஷ்டிகாரணயோகம்—(21) சந்திர லக்னுதிபதி ஜன்ம லக்கினுதிபனுடன் சேர்ந்தால் தேஹபுஷ்டி யுண்டாகும். (22) லக்கினுதிபதி ஜலராசியான கடகம், மகரம், மீனம், இவ்விடங்களி லிருந்து சுபருடன் கூடியிருந்தாலும், அல்லது ஜலக்கிரஹமான சந்திரன் சுக்கிரன் இவர்களாற்பார்க்கப்பட்டாலும், தேஹபுஷ்டி

யுண்டாகும். (23) லக்கினம் சுபக்ஷேத்திரமாக இருந்து ஜன்ம நவாம்சாதிபன் ஜலராசியான கடகம்,மீனம், மகரம் இவற்றிலிருந் தால் தேஹபுஷ்டி யுண்டாகும். (24) லக்கினம் சுபக்ஷேத்திர மாயிருந்து பாபர் வீக்ஷணம் பெறுமலுமிருந்தால் தேஹபுஷ்டி யுண்டாகும். (25) லக்கினமானது குருவுடன் கூடினதாகவோ, குருவினுற் பார்க்கப்பட்டதாகவோ இருந்தால் தேஹபுஷ்டி யுண்டாகும். (26) கடகம் மகரம், மீனம், இவைகள் ஜன்மலக் கினமாகி சுபர்களுடன் கூடி யிருக்குமாகுலும், பார்வைபெற்று லும் தேஹபுஷ்டி யுண்டாகும். (27) மிதுனம்சத்திலும் தேஹ புஷ்டி யுண்டாகும். (28) சுபக்கிரஹமானது பலம் பெற்று லக்கி னத்திலிருந்தால் தேஹபுஷ்டி யுண்டாகும்.

நீண்டதேஹம் முதலியன—(29) லக்கினம் முதலியராசிகளே தலைமுதலிய காலபுருஷனுடைய அவயவங்களிற் கற்பித்துக் கொள்ளவேண்டும். (30) காலபுருஷனுடைய எந்த அங்கத்தில் நீண்டராசியான கன்னி, விருச்சிகம், துலாம், சிம்மம் இந்த ராசி களும் அந்த ராச்யதிபர்களும் சேர்ந்து இருப்பார்களோ அந்த அங்கமானது நீண்டிருக்கும். இதற்கு மாருய் எந்தக்காலபுருஷ னுடைய அங்கத்தில் ஹ்ரஸ்வராசியான கடகம், மிதுனம், தனுஸ், மகரம் இந்த ராசிகளும், அந்த ராச்யதிபர்களு மிருப்பார்களோ அந்த அங்கம் ஹ்ரஸ்வமா யிருக்கும். ஹ்ரஸ்வராசியில் தீர்க்க ராசியதிபனும் தீர்க்கராசியில் ஹ்ரஸ்வராசியதிபருமாகக் கலந்து நின்ருல் அந்த அங்கமும் ஹ்ரஸ்மும் தீர்க்கமும் கலந்ததாகவே இருக்கும்.

**बुधात्सप्तमे भौमे दीर्घदेहः ॥ ३१ ॥ लग्नपे दीर्घभे दीर्घदेहः ॥ ३२ ॥**

தீர்க்கதேஹ யோகம்—(31) புதனுக்கு 7ல் செவ்வாயிருந் தால் தேஹம் தீர்க்கமாயிருக்கும். (32) லக்கினுதிபதி நீண்ட ராசியிலிருந்தால் தேஹம் நீண்டிருக்கும்.

**मन्दात्तुर्ये चन्द्रे राश्याद्यभागे वाऽल्पतरराश्यन्त्यभागे वामनः ॥ ३३ ॥ लग्नेशोऽल्पतरभे शुभदृग्घीने वामनः ॥ ३४ ॥ पृष्ठोदयगे चन्द्रे तुर्ये शनिदृष्टे चाजेऽङ्गेशे वा० ॥ ३५ ॥ सिंहेऽर्काच्छौ खे मृगे चन्द्रे वा० ॥ ३६ ॥ आद्य-न्त्येशे चन्द्रमन्ददृष्टे सौम्यादृष्टे वा० ॥ ३७ ॥ लग्नेशोऽल्पर्क्षे लग्नदर्शिनि वा० ॥ ३८ ॥**

வாமன யோகம்—(33) சனிக்கு 4மிடத்தில் சந்திரனிருந்தாலும், அல்லது ராசியின் ஆதிநவாம்சத்தி லிருந்தாலும், மிக்க அற்பராசியின் கடைசி நவாம்சத்திலிருந்தாலும் வாமனனுக அதாவது: குள்ளனுக விருப்பான். (34) லக்கினுதிபதி அற்பதரமான ராசியிலிருந்து சுபரின் பார்வை பெருதபக்ஷத்தில் குள்ளனுவான். (35) பிருஷ்டோதயராசிகளான விருஷபம், மேஷம், தனுஸ், கடகம், மிதுனம், மகரம், இவை 4மிடமாகி அதில் சந்திரனிருந்து லக்கினுதிபதி சனியினுற் பார்க்கப்பட்டு மேஷத்திலு மிருந்தால் குள்ளனுவான். (36) சிம்மம் 10மிடமாகி அதில் சுக்கிரன், சூரியன் இவர்களிருந்து மகரத்தில் சந்திரனிருந்தால் குள்ளனுவான். மேஷாதிபதியான செவ்வாயும், மீனுதிபதியான குருவும், சந்திரனுலும், சனியினுலும் பார்க்கப்பட்டு சுபரின் பார்வையை யடையாவிடில் குள்ளனுவான். (38) லக்கினுதிபதி ஹ்ரஸ்வராசியிலிருந்து லக்கினத்தைப் பார்த்தாலும் குள்ளனுயிருப்பான்.

**केन्द्रस्थाः क्रूरा विकलाङ्गः ॥ ३९ ॥ केन्द्रगौ पुष्पवन्तौ विकलाङ्गः ॥ ४० ॥ लग्ने शुक्रे मन्ददृष्टे श्रोणिभागे वैकल्यम् ॥ ४१ ॥ तुर्ये शुक्रे मन्दारज्ञान्यतमयुते जीवे करचरणकट्यन्यतमे वैकल्यम् ॥ ४२ ॥ चन्द्रे खे भौमेऽस्ते मन्दे वेशिगे विकलाङ्गः ॥ ४३ ॥ सुताङ्के भौमे क्रूरैर्दृष्टे हीनाङ्गः ॥ ४४ ॥ मन्देऽर्थे खे चन्द्रे ज्ञेऽस्ते विकलाङ्गः ॥ ४५ ॥ नीचगाः शुक्रेन्दुमन्दाः कुंभेऽर्के विक० ॥ ४६ ॥ नीचे भौमे रक्तपित्तकोपः ॥ ४७ ॥**

அங்கக்குறைவு யோகம்—கேந்திரத்திற் குரூரர் இருந்தார்களானுல் அங்கக்கெடுதலுண்டாகும். (40) கேந்திரத்தில் சூரியன், சந்திரன் இவர்களிருந்தால் அங்கக்கெடுதலுண்டாகும். (41) லக்கினத்தில் சுக்கிரனிருந்து சனியினுற் பார்க்கப்பட்டால் பின்தட்டில் வைகல்யம் (கெடுதல்) உண்டாகும். (42) 4ல் சுக்கிரனிருந்து சனி, செவ்வாய், புதன் இவர்களுள் யாதானு மொருகிரஹத்துடன் குருசேர்ந்திருந்தால் கை, கால், பின்தட்டு இவைகளுள் யாதானுமொரு இடத்தில் வைகல்யம் (கெடுதல்) உண்டாகும். (43) சந்திரன் 10 லும், செவ்வாய் 7 லும், சூரியனுக்கு 2 மிடத்தில் சனியுமிருந்தால் அங்கக்கெடுத லுண்டாகும். (44) 5, 9 மிடங்களில் செவ்வாயிருந்து குரூரக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் அங்கக்குறைவுண்டாகும். (45) சனி 2லும், 10ல்

சந்திரனும், புதன் 7 லுமிருந்தால் அங்கக்கெடுதலுண்டாகும். (46) * சுக்கிரன், சந்திரன் சனி இவர்கள் நீசனுகயிருந்து சூரியன் கும்பத்திலிருந்தாலுமங்கக் கெடுதலுண்டாம். (47) செவ்வாய் நீசனுகயிருந்தால் ரக்தபித்த கோபமுண்டாகும்.

**मन्दर्क्षे शुक्रे देहे दौर्गन्ध्यम् ॥ ४८ ॥ षष्ठेशे ज्ञर्क्षे वा नक्रे देहे दौर्गन्ध्यम् ॥ ४९ ॥ ज्ञर्क्षे शुक्रे ज्ञयुते केन्द्रे देहे दौ० ॥ ५० ॥ मेषगे चन्द्रेऽङ्गे देहे दौ० ॥ ५१ ॥ लग्नेशेऽन्त्ये पापयुतदृष्टे यष्ट्या चलति ॥ ५२ ॥**

இனி தேஹத்தில் கெட்டநாற்ற மூண்டாகும் யோகம்—(48) சனிவீட்டில் சுக்கிரனிருந்தால் தேஹத்தில் கெட்டநாற்ற முண்டாகும். (49) 6க் குடையவன் புதன் வீட்டிலோ, மகரத்திலோ இருந்தால் தேஹத்தில் நாற்றமுண்டாகும். (50) புதன் வீட்டில் சுக்கிரனிருந்து கேந்திரத்தில் புதனிருந்தாலும் தேஹ நாற்ற முண்டாகும். (51) மேஷம் லக்கினமாகி அதில் புதனிருந்தால் தேஹநாற்ற முண்டாகும். (52) லக்கினுதிபதி 12லிருந்து பாபரின் சேர்க்கை, வீக்ஷணம் இவற்றைப் பெற்ருல் கையிற் கோல் ஊன்றிக் கொண்டு நடக்கவேண்டிவரும்.

குறிப்பு—இயற்கையில் பலர் கோலூன்றி வேடிக்கையாக நடந்த போதிலும், இந்த யோகம் அவரைக் குறிக்காமல் கோலின்றி நடக்க வியலாதவரைக் குறிக்கும். (ஏ—று)

**चन्द्रज्ञौ भौमदृष्टौ विलज्जः ॥ ५३ ॥ क्षीणेन्दौ सारे त्रिके विलज्जः ॥ ५४ ॥ ज्ञाऽच्छावङ्गे भौमेऽस्ते विल० ॥ ५५ ॥ जीवेऽङ्गे भौमदृष्टे वि० ॥ ५६ ॥ चन्द्रारौ द्यूने गुरुदृष्टौ सलज्जः ॥ ५७ ॥**

லஜ்ஜை யற்றிருத்தலின் யோகம்—(53) சந்திரன், புதன் இவர்கள் செவ்வாயினுற் பார்க்கப்பட்டால் லஜ்ஜையற்றிருப்பான். (54) க்ஷீணசந்திரன் செவ்வாயுடன் கூடி 6, 8, 12 விருந்தாலும் லஜ்ஜையற்றவனே யாவான். (55) புதன், சுக்கிரன் இவர்கள் லக்கினத்திலிருந்து செவ்வாய் 7லு மிருந்தால் லஜ்ஜையற்றவன்.

---

* இந்தச் சூத்திரத்திற் சொல்லியபடி சுக்கிரன் நீசனுகக் கன்னியிலிருக்கும்பொழுது சூரியன் கும்பத்தில் ஒருபொழுது மிருக்கமாட்டானுயினும், இதை நவாம்சரீதியாகப் பார்க்கவேண்டும். அல்லது, சந்திரன், சனி இவர்கள் நீசனுக இருக்கும் விஷயத்தில் மட்டும் இந்தயோகம் சொல்லப்பட்டதாகக் கொள்ளவும்.

(56) குரு லக்கினத்திலிருந்து செவ்வாயினாற் பார்க்கப்பட்டால் லஜ்ஜையற்றவன்.

லஜ்ஜையுள்ளயோகம்—(57) சந்திரன், செவ்வாய் இவர்கள் 7 லிருந்து குருவினாற் பார்க்கப்பட்டால் லஜ்ஜையுள்ளவனாவன்.

**ज्ञारयोगे कपटी ॥ ५८ ॥ पापान्विते ज्ञे बलाढ्येऽङ्के कपटी ॥ ५९ ॥ सोत्थे कुजे शुभदृग्घीने कप० ॥ ६० ॥ सुखेशे वा भाग्येशे षष्ठे क० ॥ ६१ ॥ मेषे ज्ञे क० ॥ ६२ ॥ पापयुते वा पापदृष्टे सुखे क० ॥ ६३ ॥ पापान्तरे तुर्ये क० ॥ ६४ ॥ कर्मपे वा रंध्रपे सुखे क० ॥ ६५ ॥ शन्यारतमोऽन्यतमे पाताले हृत्कपटी ॥ ६६ ॥ राहुमन्दारयोगे हृत्कपटी ॥ ६७ ॥**

கபடி யோகம்—(58) புதனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் கபடியாவான். (59) புதன் பாபருடன் கூடி பலம் பெற்று 9 மிடத்திலிருந்தால் கபடியாவான். (60) 3ல் செவ்வாயிருந்து சுபர்பார்வை யில்லாவிடில் கபடியாவான். (61) 4க் குடையவனோ, 9க் குடையவனோ 6 லிருந்தால் கபடியாவான். (62) மேஷத்தில் புதனிருந்தால் கபடியாவான். (63) 4ல் பாபரிருந்தாலும் 4ஐ பாபர்பார்த்தாலும் கபடியாவன். (64) 4மிடத்திற்கு இருபக்கத்திலும் பாபர் இருந்தால் கபடியாவான். (65) 10க் குடையவனோ, 8க் குடையவனோ 4ல் இருந்தால் கபடியாவான். (66) சனி, செவ்வாய், ராகு இவர்களுள் ஒருவர் 4ல் இருந்தால் மனதிற்குள் கபடி. (67) ராஹு, சனி, செவ்வாய் இவர்கள் சேர்ந்திருந்தால் மனதிற் கபடி.

**सुखे स्वर्क्षोच्चगे शुभे निष्कपटी ॥ ६८ ॥ सुखेशे बलाढ्ये निष्कपटी ॥ ३९ ॥ तुर्ये शुभर्क्षे मित्रान्वितदृष्टे निष्क० ॥ ७० ॥ हृदयेशे गोपुराद्यंशे निष्क० ॥ ७१ ॥ पाताले मृद्वंशादियुते निष्क० ॥ ७२ ॥ लग्नेशेंबुगे शुभयुतेक्षिते निष्क० ॥ ७३ ॥ लग्नेशे बलाढ्ये निष्क० ॥ ७४ ॥ लग्नपे पारावताद्यंशे निष्क० ॥ ७५ ॥ लग्ने गुरौ शुक्रदृष्टे निष्क० ॥ ७६ ॥ इन्द्वर्कौ तुर्ये क्षणमात्रं कपटी ऊर्ध्वं निष्क० ॥ ७७ ॥**

கபடமற்றயோகம்—(68) சுபர் 4ல் இருந்து அது ஸ்வக்ஷேத்திரமாகவோ, உச்சவீடாகவோ இருந்தால் கபடமற்றவனாவன். (69) 4க் குடையவன் வலுவுபெற்றால் நிஷ்கபடியாவான். (70) 4 மிடம் சுபர் வீடாகி அதில் மித்திரக்கிரஹ மிருந்தாலும், அல்

லது அதனால் பார்க்கப்பட்டாலும் நிஷ்கபடியாவான். (71) 4க்குடையவன் கோபுராம்ச மேறினால் நிஷ்கபடியாவான். (72) 4மிடமானது மிருத்வம்சாதியுடன் கூடுமானால் நிஷ்கபடியாவான். (73) லக்கினாதிபதி 4ல் இருந்து சுபருடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் நிஷ்கபடியாவான். (74) லக்கினாதிபதி பலம் பெற்றால் நிஷ்கபடியாவான். (75) லக்கினாதிபதி பாராவதம் முதலிய அம்சமேறினால் நிஷ்கபடியாவான். (76) லக்கினத்தில் குருவிருந்து சுக்கிரனாற் பார்க்கப்பட்டால் நிஷ்கபடி. (77) சந்திரனும், சூரியனும் 4ல் இருந்தால் க்ஷணமாத்திரம் கபடியாயும், பிறகு நிஷ்கபடியாயு மிருப்பான்.

**तुर्ये तमसि पापयुतदृष्टे बहिश्शुद्धोऽन्तः कपटी ७८ ॥ तुर्ये बहुपापयुते दृष्टे पूर्ववत् ॥ ७९ ॥**

வெளிக்கு நல்லவனாயும் உள்ளில் கபடியாயுமுள்ள யோகம்—(78) 4ல் ராஹு இருந்து பாபரின் வீக்ஷணம், சேர்க்கை இவற்றை யடைந்தால் வெளிக்கு சுத்தனாகவும், உள்ளில் கபடியாகவு மிருப்பான். (79) 4ல் வெகுபாபர் இருந்தோ, பார்க்கவோ நேர்ந்தால் முன்போலவே யாவான்.

**रात्रौ बल्यारेऽङ्गे खे वा शूरः ॥८०॥ भौमेऽस्ते बलवान् शूरश्च ॥८१॥**

இனி சூரனாகும் யோகம்—(80) ராத்திரியிற் பிறந்த ஜாதகர் விஷயத்தில் செவ்வாய் வலுவுபெற்று லக்கினத்திலோ, 10லோ இருந்தால் சூரனாவான். (81) 7ல் செவ்வாயிருந்து பலம் பெற்றால் சூரனாவான்.

**निर्बलारेणाङ्गेदृष्टे कातरः॥ ८२ ॥ रात्रौ शनौ दशमे कातरः॥ ८३ ॥ स्वर्क्षगे भौमदृष्टेऽङ्गेशे का०॥८४॥ अंशाद्विक्रमे पापे शूरश्शुभे कातरः॥८५॥**

இனி பயப்படும் யோகம்—(82) பலமற்ற செவ்வாயினால் லக்கினம் பார்க்கப்பட்டால் பயந்தவனாவான். (83) ராத்திரியில் ஜனித்தஜாதகனுக்கு சனி 10லிருந்தால் பயந்தவனாயாவான். (84)லக்கினாதிபதி ஸ்வக்ஷேத்திரத்திலிருந்து செவ்வாயினாற் பார்க்கப்பட்டால் பயந்தவனாயாவான். (85) லக்கினாம்சத்திற்கு 3ல் பாபரிருந்தால் சூரனாவான், பாபரிருந்தால் பயந்தவனாவான்.

दिवा बल्यारे खेऽङ्गे क्रोधी ॥ ८६ ॥ लग्नेऽस्तेऽवा निर्बलारे शनिदृष्टे क्रोधी ॥ ८७ ॥ लग्ने भौमे क्रोधी ॥ ८८ ॥ द्यूने बलवति भौमे क्रोधी ॥८९॥ त्रिकोणेऽल्पवीर्ये राशिपे क्रोधी ॥ ९० ॥ अन्त्याष्टमेऽङ्गेशे क्रोधी ॥ ९१ ॥ धनेशे गुलिकान्विते क्रोधी ॥ ९२ ॥

கோபியாகும் யோகம்—(86) பகலில் ஜனித்தவர்க்கு செவ்வாய் பலம்பெற்று 10லோ, லக்கினத்திலோ இருந்தால் கோபியாவான். (87) லக்கினத்திலோ, 7மிடத்திலோ துர்ப்பலனான செவ்வாயிருந்து சனியினுற் பார்க்கப்பட்டால் கோபியாகிறுன். (88) லக்கினத்திற் செவ்வாயிருந்தால் கோபியாவான். (89) 7ல் வலுவு பெற்ற செவ்வாயிருந்தால் கோபியாகிறுன். (90) பலம் குறைந்த லக்கினுதிபன் திரிகோணத்திலிருந்தால் கோபியாகிறுன். (91) லக்கினுதிபதி 8, 12 மிடத்திலிருந்தால் கோபியாகிறுன். (92) 2க்குடையவன் குளிகனுடன் கூடினுல் கோபியாகிறுன்.

केतुयुते सोत्थे कलहप्रिय:॥ ९३ ॥ कर्कालिझषेऽर्के भौमदृष्टे क्षमावान् ॥ ९४ ॥ तुर्येऽङ्गेशे वा लग्नेशे तुर्ये क्ष० ॥ ९५ ॥ सबले तुर्ये क्ष० ॥९६॥ शुभे तुर्ये क्ष० ॥ ९७ ॥ शनिगृहे ज्ञारौ हास्यसक्त:॥ ९८ ॥ ज्ञेऽङ्गेचास्ते जीवे हा० ॥९९॥ ज्ञांशेऽङ्गे हा० ॥ १०० ॥

கலகப்ரிய யோகம்—(93) 3ல் கேது இருந்தால் கலஹப்ரியனுவான். (94) கடகம், விருச்சிகம், மீனம், இவற்றில் சூரியனிருந்து செவ்வாயினுற் பார்க்கப்பட்டால் பொறுமையுள்ளவனுவான். (95) 4 க்குடையவன் 1லோ,லக்கினுதிபதி 4லோ இருந்தால் பொறுமையுள்ளவனுவான். (96) 4 மிடம் வலுவுபெற்றுல் பொறுமை யுள்ளவனுவான். (97) சுபன் 4ல் இருந்தால் பொறுமையுள்ளவனுவான். (98) சனியின் வீட்டில் புதனும், செவ்வாயு மிருந்தால் பரிஹாஸம் செய்பவனு யிருப்பான். (99) புதன் லக்கினத்திலும். குரு 7லு மிருந்தால் பரிஹாஸஞ் செய்பவனுயாவான். (100) லக்கினத்தில் புதனுடைய அம்சமுதயமானுல் பரிஹஸிப்பவனுயாவான்.

सोत्थे भौमे ज्ञचन्द्रदृष्टे द्रोही ॥ १०१ ॥ लग्नेशे ज्ञे षष्ठे द्रोही ॥ १०२॥ राह्वर्कजौ धर्मेशाद्गुरुद्रोही ॥ १०३ ॥ लग्नेशेनिर्बले द्रो० ॥ १०४ ॥

துரோகஞ்செய்யும் யோகம் — (101) 3ல் செவ்வாயிருந்து புதன், சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டால் துரோஹஞ்செய்

வான். (102) லக்கினாதிபதி புதனாகி 6மிடத்திலிருந்தால் துரோ ஹஞ் செய்வான். (103) ராஹு, சனி இவர்கள் லக்கினத்திற்கு 9 லிருந்தாலும், அம்சத்திற்கு 9 லிருந்தாலும் குரு துரோஹியா வான். (104) லக்கினாதிபதி பலமற்றிருந்தால் துரோஹியாவான்.

**अंशे केतौ चौरः॥ १०५ ॥ अंशे गुलिके चौरः॥ १०६ ॥ तृतीयेऽन्त्येशे चौरः॥ १०७ ॥ सुखेशे षष्ठे चौरः॥ १०८ ॥ धने रंध्रेशे चौरः॥१०९॥ रिपुगौ सबलौ ज्ञारौ चौरः॥ ११० ॥ ज्ञारौ लग्ने चौरः॥ १११ ॥**

சோர யோகம்—(105) லக்கினம்சத்தில் கேது இருந்தால் சோரனாவான். (106) 12க்குடையவன் 3ல் இருந்தால் சோர னாவான். (107) லக்கினம்சத்தில் குளிகன் இருந்தால் சோர னாவான். (108) 4க் குடையவன் 6 லிருந்தால் சோரனாவா வான். (109) 2ல் 8க் குடையவனிருந்தால் சோரனாவான். (110) புதன் செவ்வாய் இவர்கள் பலம் பெற்று 6ல் இருந்தால் சோரனாவான். (111) புதன் செவ்வாய் இவர்கள் லக்கினத்தி லிருந்தால் சோரனாவான்.

**मृगे जीवेऽङ्गेऽहिपे व्यसनी ॥ ११२ ॥ व्ययेशे नीचे व्यसनी ॥ ११३॥ अङ्गपे नीचे वारिक्षेत्रे व्यसनी ॥ ११४ ॥ व्यये पापे व्य० ॥ ११५ ॥ लग्नपे निर्वले व्य० ॥ ११६ ॥ लग्नपे सारे व्य० ॥ ११७ ॥ अङ्गे पापदृष्टयाधिक्ये व्य० ॥ ११८ ॥**

வியஸன யோகம்—(112) மகரத்தில் குருவும், லக்கினத்தில் ராஹுவும் இருந்தால் வியஸனமுள்ளவனாவான். (113) 12க் குடையவன் நீசனானால் வ்யஸனமுள்ளவனாவான். (114) லக் கினாதிபதி நீசனாகவோ, சத்துரு வீட்டிலோ இருந்தால் வ்யஸன முள்ளவனாவான். (115) 12ல் பாபியிருந்தால் வ்யஸனியாக வாவான். (116) லக்கினாதிபதி பலமற்றிருந்தால் வ்யஸனியாக வாவான். (117) லக்கினாதிபதி செவ்வாயுடன் கூடினால் வ்யஸனி யாகவாவான். (118) லக்கினத்தில் பாபரின் அதிகதிருஷ்டியி ருந்தால் வ்யஸனியாகவாவான்.

**सबलेऽङ्गेशे निर्व्यसनी ॥ ११९ ॥ लग्नेशे लग्ने वा व्यये शुभसंवन्धे निर्व्यसनी ॥१२०॥ धर्मे शुभे निर्व्य० ॥१२१॥ लग्नपे केन्द्रे निर्व्य० ॥१२२॥**

நிர்வ்யஸன யோகம்—(119) லக்கினாதிபதி பலமுள்ளவனா னால் நிர்வ்யஸனியாகவாவான் (வ்யஸனமற்றவன்). (120) லக்கி

னேசன் லக்கினத்திலிருந்து 12ல் சுபஸம்பந்தமு மிருந்தால் வ்ய ஸனமற்றவன். (121) 9ல் சுபரிருந்தால் வ்யஸனமற்றவன். (122) லக்கினதிபதி கேந்திரத்திலிருந்தால் வ்யஸனமற்றவன்.

**अंशात्खे जीवार्कमात्रदृष्टे गोपाल:॥ १२३ ॥**

கோபால (மாடுமேய்க்கும்) யோகம்—(123) லக்கினம்சத்திற்கு 10 மிடமானது குரு சனி இவர்களால் மட்டும் பார்க்கப் பட்டால் மாடுமேய்ப்பவனுயாவான்.

**अंशाद्धर्मे जीवार्काविश्वासी ॥ १२४ ॥**

அவிஸ்வாஸயோகம்—(124) லக்கினம்சத்திற்கு 9ல் குரு சூரியன் இவர்கள் இருந்தால் விஸ்வாஸமற்றவன்.

**उच्चगे वा नीचगे शुक्रे सिंहपूर्वार्द्धे त्रिके कामी ॥१२५॥ स्वांशे शुक्रे कामी ॥ १२६ ॥ पापदृष्टे शुक्रे कामी ॥ १२७ ॥ युग्मे स्वर्क्षे वा शुक्रे कामी ॥ १२८ ॥ खाङ्ग सुतेषु धनेशे का० ॥ १२९ ॥ शनिर्धनुषि वृषे लग्नेऽल्पकाम: ॥ १३० ॥ शुक्रेऽस्तेऽतिकामुक: ॥ १३१ ॥ भौमाच्छ्युतौ जीवे चारीशे कामाधिक्यम् ॥ १३२ ॥**

காமியாகும் யோகம்—(125) சுக்கிரன் உச்சனுகவோ, நீசனுகவோ, சிம்மத்தின் முற்பாதியிலோ, இருந்து அது 6, 8, 12 மிடமாக வாகுமானுல் காமியாவான் (126) சுக்கிரன் தனது அம்சத்திலிருந்தால் காமியாவான் (127) சுக்கிரன் பாபியால் பார்க்கப்பட்டால் காமியாவான் (128) மிதுனத்திலோ, ஸ்வக்ஷேத்திரத்திலோ சுக்கிரனிருந்தால் காமியாவான் (129) 2க் குடையவன் 10, 1, 5மிடங்களிலிருந்தால் காமியாவான் (130) லக்கினம் விருஷபமாகி சனி தனுஸ்ஸிலிருந்தால் அற்பகாமனையிருக்கும். (131) சுக்கிரன் 7ல் இருந்தால் அதிகம் காமனையுள்ளவனுயாவான் (132) சுக்கிரனும் செவ்வாயும் சேர்ந்து, குருவும் 6க் குடையவனுனல் அதிகம் காமனையிருக்கும்.

**विषमोदये शुक्रेऽल्पवीर्य: ॥ १३३ ॥ तुर्ये चन्द्रशनी अल्पवीर्य:॥१३४॥ शुक्रेऽस्तेऽङ्गेशदृष्टेऽल्पवीर्य: ॥ १३५ ॥ शुक्रर्क्षे चन्द्रेऽल्पवीर्य: ॥ १३६ ॥**

வீர்யக்குறைவுயோகம்—(133) ஒற்றைப்பட்ட ராசி லக்கினமாகி அதில் சுக்கிரனிருந்தால் அற்பவீரியமுள்ளவன். (134)

4ல் சந்திரன் சனி இவர்கள் இருந்தால் அற்பவீரியன். (135) சுக்கிரன் 7ல் இருந்து லக்கிஞதிபதியிஞற் பார்க்கப்பட்டால் வீர்யக்குறைவுண்டாகும். (136) சுக்கிரன் வீட்டில் சந்திரனிருந்தால் வீர்யக் குறைவுள்ளவன்.

मन्दाच्छौ खे रन्ध्रे वा शुभदृष्टिराहित्ये षण्ढः ॥ १३७ ॥ षष्ठान्त्ये जलर्क्षे मन्दे शुभदृग्घीने षण्ढः ॥ १३८ ॥ चन्द्रार्कौ वा मन्दज्ञौ वा भौमार्कौ युग्मोजर्क्षगावन्योऽन्यं पश्यतः षण्ढः ॥ १३९ ॥ ओजर्क्षाङ्गे समर्क्षगभौमेक्षितौ ष० ॥ १४० ॥ चन्द्रज्ञौ युग्मोजर्क्षगौ भौमेक्षितौ ष० ॥ १४१ ॥ पुंभागे सितेन्द्वङ्गानि ष० ॥ १४२ ॥ मन्दाच्छौ खे ष० ॥ १४३ ॥ शुक्रात् षष्ठेऽष्टमे मन्दे षण्ढोवा तादृशः ॥ १४४ ॥ अंशे केतौ मन्दज्ञदृष्टे षण्ढः ॥ १४५ ॥ मन्दाच्छौ शुभदृग्घीनौ रंध्रगौ षण्ढः ॥ १४६ ॥ षष्ठान्त्ये नीचगे मन्दे षण्ढः ॥ १४७ ॥

அலி(நபும்ஸக)யோகம்—(137) சனி சுக்கிரன் 10லோ, 8லோ இருந்து சுபர் பார்வைபெருவிடில் நபும்ஸகன் (138) 6, 12மிடங்கள் ஜலராசியாயிருந்து சனியும் அங்கிருந்து சுபர் பார்வை பெருவிடில் நபும்ஸகன் (139) சந்திரனும் சூரியனுமோ, சனியும் புதனுமோ, செவ்வாயும் சூரியனுமோ இரட்டைப்பட்ட ராசியிலோ ஒற்றைப்பட்ட ராசியிலோ இருந்தாலும் ஒருவரை யொருவர் பார்த்தாலும் நபும்ஸகனுவான். (140) லக்கினம் ஒற்றைப்பட்ட ராசியாயிருந்து இரட்டைப்பட்ட ராசியிலிருக்கின்ற செவ்வாயிஞல் பார்க்கப்பட்டால் நபும்ஸகன். (141) சந்திரன் புதன் இவர்கள்முறையே இரட்டைப்பட்ட ராசியிலும், ஒற்றைப்பட்ட ராசியிலும் இருந்து செவ்வாயிஞல் பார்க்கப்பட்டால் நபும்ஸகன். (142) சுக்கிரன், சந்திரன், லக்கினம் இவைகள் புருஷபாகத்தில் (நவாம்சத்தில்) இருந்தால் நபும்ஸகன். (143) சனி, சுக்கிரன் இவர்கள் 10 லிருந்தால் நபும்ஸகன் (144) சுக்கிரனுக்கு 6லோ 8லோ சனி இருந்தால் நபும்ஸகஞகவோ, அவனுக்கொப்பானவஞகவோ இருப்பான். (145) அம்சத்தில் கேதுஇருந்து சனி புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் நபும்ஸகன். (146) சனியும் சுக்கிரனும் சுபதிருஷ்டியற்றவர்களாய் 8லிருப்பார்களாஞல் நபும்ஸகன். (147) சனி நீசஞய் 6, 8மிடங்களிலிருந்தால் நபும்ஸகன்.

राहौ शुक्रेऽर्कजे वोच्चगे कर्केर्के मेषे चन्द्रे वीर्यच्युतिः ॥ १४८ ॥

**लग्ने चन्द्रे गुर्वर्कजौ सुते वीर्यं० ॥ १४९ ॥ कन्योदये मन्दज्ञदृष्टे मन्दर्क्षे शुक्रे वीर्यं० ॥ १५० ॥**

வீர்யம் ஒழுகும்யோகம்—(148)ராஹுவோ, சுக்கிரனோ, சனியோ, உச்சனுயிருந்து கடகத்தில் சூரியனும், மேஷத்தில் சந்திரனும் இருந்தால் வீரியம் ஒழுகும். (149) லக்கினத்தில் சந்திரனும், குருவும் சனியும் 5லும், இருந்தால் வீரியம் ஒழுகும். (150) கன்னி உதயமாகி சனிபுதன் இவர்களால் பார்க்கப்பட்டு சனியின் வீட்டில் சுக்கிரனிருந்தால் வீரியம் ஒழுகும்.

**इज्येऽङ्गे कुजेऽस्ते उन्मादी ॥ १५१ ॥ लग्नेशनौ मन्दत्रिके कुजे उ० ॥ १५२ ॥ मन्देऽङ्गे व्ययेऽर्के कोणे चन्द्रे वा भौमे उ० ॥ १५३ ॥ मूढे नीचे षष्ठे सोत्थेशे पापदृष्टे गरलज उन्मादः ॥ १५४ ॥ भौमेऽस्ते जीवेऽङ्गे उ०॥ १५५ ॥ क्षीणेन्द्वर्कजावन्त्ये उ० ॥ १५६ ॥ मन्दार्थेशौ सपापौ वातज उन्मादः ॥ १५७ ॥ धनेशार्कजौ सूर्ययुतौ राजकोपज उन्मादः ॥ १५८ ॥ यमार्थेशौ भौमयुतौ पित्तज उ० ॥ १५९ ॥ चन्द्रार्कौ कोणाङ्गगौ केन्द्रे जीवे यमारक्षणवारे उ० ॥ १६० ॥**

உன்மாத (காக்கைவலிப்பு) யோகம்—(151) சுக்கிரன்லக்கினத்திலும் செவ்வாய் 7 லுமிருந்தால் உன்மாதரோகமுண்டு. (152) லக்கினத்திற் சனியும், சனிக்கு, 6, 8, 12ல் செவ்வாயுமிருந்தால் உன்மாதரோகமுண்டு. (153) சனிலக்கினத்திலும், 12ல் சூரியனும், திரிகோணத்தில் சந்திரனோ செவ்வாயோ இருந்தால் உன்மாதரோகமுண்டு. (154) 3க் குடையவன் மூடனுகவோ, நீசனுகவோ, 6விருந்து பாபரால் பார்க்கப்பட்டால் நுரைதப்பும் உன்மாதமுண்டாகும். (155) குரு லக்கினத்திலும், 7ல் செவ்வாயுமிருந்தால் உன்மாதமுண்டாகும். (156) சனி க்ஷீணசந்திரன் இவர்கள் 12லிருந்தால் உன்மாதமுண்டு. (157) சனி 2க் குடையவன் இருவரும் பாபருடன் கூடினுல் வாதமூலம் உன்மாதமுண்டாகும். (158) 2க் குடையவனும் சனியும் சூரியனுடன் சேர்ந்தால் ராஜகோபத்தால் உன்மாதமுண்டாகும். (159) சனி 2க் குடையவன் இவர்கள் செவ்வாயுடன் கூடினுல் பித்தத்தால் உன்மாதமுண்டாகும். (160) சந்திரன் சூரியன் இவர்கள் திரிகோணம், லக்கினம் இவற்றிலிருந்து கேந்திரத்தில்

குருவிருந்தால், சனி, செவ்வாய்க்கிழமை, அல்லது அவரின் முகூர்த்தகாலம் இவற்றில் உன்மாதமுண்டாகும்.

इन्द्वर्कजौ लग्नगज्ञदृष्टौ विह्वलः ॥ १६१ ॥ धने केतौ शीघ्रं वार्धक्यचिह्नोदयः ॥ १६२ ॥ राह्वर्कजार्केज्या लग्नगा प्रकृतिवृद्धः ॥ १६३ ॥ चन्द्राच्छौ लग्ने नातिवृद्धो नयुवा ॥ १६४ ॥ सबले भौमे लाभे वृद्धोऽपि तरुणायते ॥ १६५ ॥ खे सुखेशे रसायनव्यसनी ॥ १६६ ॥ सुखेशे विबले रसा० ॥ १६७ ॥ सपापेऽर्थेशे बहुभुक् ॥ १६८ ॥ सपापेऽर्थे क्रूरषष्ट्यंशे बहुभुक् ॥ १६९ ॥ सशुभे धनेशे सुखभुक् ॥ १७० ॥ धने शुभे पापदृग्घीने सुखभुक् ॥ १७१॥ धने शुभदृष्ट्याधिक्ये सुख० ॥ १७२ ॥ धनेशे बलवति सुख० ॥ १७३ ॥ वैशिषिकांशेऽर्थेशे वा गुरुदृष्टे सुख० ॥ १७४ ॥ धनेशे मन्दे नीचगे गुळिकयुते सततं श्राद्धभुक् ॥ १७५ ॥ धनेशे शुभेऽवा स्वोच्चे शुभदृष्टेऽल्पाशी ॥ १७६ ॥ सबलेऽर्थेशे सशुभे शीघ्रभुक् ॥१७७॥ धनेशे चरभे शीघ्रभुक् ॥ १७८ ॥ धने शुभर्क्षे शुभदृष्टे शीघ्र० ॥ १७९ ॥ कोशे पापर्क्षे पापयुतदृष्टे चिरभुक् ॥ १८० ॥ धनेशे स्थिरर्क्षे चि० ॥१८१॥ गुळिकारयोगे कदन्नभुक् ॥ १८२ ॥ लग्ने जीवे भोजनशूरः ॥ १८३ ॥

(161) சந்திரனும் சனியும் லக்கினத்திலிருக்கும் புதனாற் பார்க்கப்பட்டால் விஹ்வல (கலங்கினவ)னாவான். (162) 2ல் கேதுவிருந்தால் வெகுசீக்கிரமாகக் கிழத்தனத்திற்குறிய அடையாள முண்டாகும். (163) ராஹு, சனி, சூரியன், குரு, இவர்கள் லக்கினத்திலிருந்தால் ஸ்வபாவத்தில் கிழவனாவான். (164) சந்திரனும், சுக்கிரனும் லக்கினத்திலிருந்தால் அதிகக்கிழவனும் அல்லன் அதிகம் யுவாவுமல்லன். (165) செவ்வாய் பலம் பெற்று 11ல் இருந்தால் கிழவனாயினும் யுவாவாக வாவான். (166) 10ல் 4க் குடையவனிருந்தால் ரஸாயனஞ் சாப்பிடுவதில் முயற்சியுள்ளவனாவான். (167) 4க்குடையவன் பலமற்றவனாயிருந்தால் ராஸாயனஸேவியாவான். (168) 2குடையவன் பாபியுடன் கூடியிருந்தால் அதிகம் சாப்பிடுவான். (169) 2ல் பாபரிருந்து குரூரஷஷ்டியம் சமாயு மிருக்குமானால் அதிகம் சாப்பிடுவான். (170) இரண்டுக்குடையவன் சுபருடன் சேர்ந்தால் சுகமாக போஜனம் செய்வான். (171) 2ல்சுபர்இருந்து பாபர்பார்க்கா விட்டால் சுகபோஜீ. (172) 2க்கு சுபர்பார்வை

அதிகமானால் சுகபோஜீ. (173) 2க்குடையவன் பலம் பெற்றிருந்தால் சுகபோஜீ. (174) 2க்குடையவன் வைசேஷிகாம்சமேறினாலும், குருவினாற்பார்க்கப்பட்டாலும் சுகபோஜீ. (175) 2க்குடையவனும் சனியும் நீசனாகி குளிகனுடன் சேர்ந்தால் எப்பொழுதுமே சிராத்தபுக்காவான். (176)2க்குடையவன் சுபனாகவோ, தனது உச்சவீட்டிலோ இருந்து சுபராற் பார்க்கப்பட்டால் அற்பபோஜனம் செய்கின்றவனாவான். (177) 2க்குடையவன் பலம்பெற்று சுபருடன் கூடியிருந்தால் சீக்கிரம் போஜனம் செய்கின்றவனாவான். (178) 2க் குடையவன் சரராசியிலிருந்தால் சீக்கிரபோஜியாவான். (179) 2க் குடையவன் சுபர் வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் சீக்கிரபோஜியாவான். (180) 2ண்டாமிடமானது பாபர்வீடாக விருந்து பாபர் சேர்க்கை, அல்லது வீக்ஷணம் இவற்றைப்பெற்றால் வெகுகால போஜியாவான். (181) 2க் குடையவன்ஸ்திர ராசியிலிருந்தால் தாமதமாய் போஜனஞ் செய்பவனாவான். (182) குளிகன், செவ்வாய் இவர்களின் யோகமிருக்குமானால் கெட்டவன்னத்தைச் சாப்பிடுபவனாகிறான். (183) லக்கினத்தில் குருவிருந்தால் போஜனசூரனாவான்.

भ्रातृपे बलिनि केन्द्रकोणगे सौम्यदृष्टे वैशेषिकांशे धीरः ॥ १८४ ॥ विक्रमेशे शुभांशे शुभदृष्टियुते धीरः ॥ १८५ ॥ विक्रमार्केशयोगे धीरः ॥ १८६ ॥ सोत्थेशेन्दुयोगे धीरः ॥ १८७ ॥

தீரனாகும் யோகம்—(184) 4க் குடையவன் பலம் பெற்று கேந்திரத்திலோ கோணத்திலோ இருந்து சுபராற் பார்க்கப்பட்டு வைசேஷிகாம் சமேறி யிருந்தால் தீரனாவான். (185) 3க் குடையவன் சுபரின்ராசி, அம்சம் இவற்றிலிருந்து சுபர்சேர்க்கை, பார்வை இவற்றைப் பெற்றால் தீரனாவான். (186) 3ல்சூரியனும், 3க்குடையவனும் கூடினால் தீரனாவ்ான். (187) 3 க்குடையவனும் சந்திரனும் கூடினால் தீரனாவான்.

सुतेऽङ्गेशे पिशुनः ॥ १८८ ॥ पापेऽङ्गेशे पिशुनः ॥ १८९ ॥ पापदृष्ट्याधिकेऽङ्गे पि० ॥ १९० ॥ पापदृष्टे जीवे सतमसि चण्डालता ॥ १९१ ॥ नीचभांशे जीवे चण्डालता ॥ १९२ ॥ ग्रस्ते चन्द्रेऽङ्गे पापाः कोणे पिशाचग्रनिः ॥ १९३ ॥

பிசுன (கோட்சொல்லும்) யோகம் — (188) லக்கினாதிபதி 5 லிருந்தால் கோட்சொல்லுவான். (தற்காலத்திற்கேற்றார்போல் ரஹஸ்யப் போலீஸ் வேலை என்றும் சொல்லலாம்) (189) லக்கினாதிபதி பாபியானால் கோட் சொல்வான். (190) லக்கினத்தில் பாபர்திருஷ்டி யதிகமானால் கோட்சொல்லுவான். (191) குரு பாபராற் பார்க்கப்பட்டு ராகுவுடனும் கூடினால் சண்டாளத்தன்மை பொருந்தியவனாவான். (192) குரு ராசி அம்சம் இரண்டிலும் நீசனாகவே யிருந்தால் சண்டாளத்தன்மை யமைந்தவனாயிருப்பான். (193) ராஹுக்ரஸ்த சந்திரன் லக்கினத்திலிருந்து 1, 5, 9 மிடங்களிற் பாபக்கிரஹங்களு மிருந்தால் பிசாசப்பிறவியாவான்

केन्द्रे मन्दे ज्ञयुते शिल्पी ॥ १९४ ॥ सबले ज्ञे केन्द्रे शि० ॥ १९५ ॥ इज्यज्ञयोगे शिल्पी ॥ १९६ ॥ ज्ञेज्यौ त्रिके उपदेशप्रियः ॥ १९७ ॥ षष्ठेशे जीवे शुक्रेवा मधुरादिप्रियः ॥ १९८ ॥ सशुभे ज्ञे मधुरप्रियः ॥ १९९ ॥ सपापे ज्ञे मधुरेऽरुचिः ॥ २०० ॥ लग्नेर्कजत्र्यंशे केन्द्रगचन्द्रदृष्टे नीचकर्मा ॥ २०१ ॥ द्यूनेऽर्के लग्ने मन्दे पुण्ये सोत्थे भौमे श्रेष्ठवर्णोऽपि नीचपथगः ॥ २०२ ॥ मन्दार्कविकक्षगौ त्र्यंशे नवांशे त्रिंशांशे वा नीचयोषाऽनुषङ्गान्म्लेच्छोभवति॥ २०३ ॥

சில்பி (கைத்தொழில்) யாகும் யோகம்—(194) சனி 1, 4, 7, 10 மிடங்களிலிருந்து புதனுடன் கூடினால் சில்பியாவான். (195) புதன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்தால் சில்பியாவான். (196) குருபுதயோக மிருந்தால் சில்பியாவான். (197) புதன், குரு இவர்கள் 6, 8, 12 லிருந்தால் உபதேசம் பெறுவதில் அல்லது உபதேசஞ் செய்வதில் பிரியமுள்ளவனாவான். (198) 6, க்குடையவன்குருவாகவோ, சுக்கிரனாகவோ இருந்தால் தித்திப்பு முதலியவற்றிற் பிரீதியுள்ளவனாவான். (199) புதன் சுபருடன் கூடினால் தித்திப்பிற் பிரியமுள்ளவனாவான். (200) புதன் பாபியுடன் சேர்ந்தால் ருசியற்றவனாவான். (201) சனியின் த்ரிம்சாம்சம் லக்கினமாகி கேந்திரத்திலிருக்கும் சந்திரனாற் பார்க்கப்பட்டால் நீசத்தொழிற் செய்பவனாவான். (202) 7 ல்சூரியனும், லக்கினத்தில் சனியும், 3 லோ, 9 லோ செவ்வாயு மிருந்தால்

உயர்ந்த ஜாதியிற் பிறந்தவனுயினும் தாழ்ந்த வழிசெல்லுபவனே யாவான். (203) சனியும், சூரியனும் ஒருராசியிலிருந்து திரேஷ்காணத்திலோ, நவாம்சத்திலோ, திரிம்சாம்சத்திலோ சேர்ந்திருப்பார்களானுல் தாழ்ந்த ஜாதிஸ்திரீயின் சேர்க்கையால் மிலேச்சனுவான்.

**षष्ठाङ्गेशौ लग्नगौ ज्ञातिपीडा ॥ २०४ ॥ लग्नेशे षष्ठे षष्ठेशदृष्टे ज्ञा० ॥ २०५ ॥ शुक्रेज्यौ लग्ने षष्ठेशयुतौ शन्यारतमोदृष्टौ ज्ञा० ॥ २०६ ॥**

க்ஞாதிபீடையுண்டாகும்யோகம்—(204) லக்கினதிபதியும், 6க் குடையவனும் சேர்ந்துலக்கினத்திலிருந்தால் க்ஞாதிபீடையுண்டாகும். (205) ஜன்மலக்கினதிபதி 6 மிடத்திலிருந்து 6 மித்திற்குடையவனுல் பார்க்கப்பட்டால் க்ஞாதிபீடையுண்டாகும். (206) சுக்கிரனும், குருவும் லக்கினத்திலிருந்து 6 க் குடையவனுடனும் சேர்ந்து சனி, செவ்வாய், ராகு இவர்களாற் பார்க்கப்பட்டால் க்ஞாதிபீடையுண்டாகும்.

**लग्नेशाद्वा लग्नात्त्रिकगैः पापैर्जातिच्युतिः ॥ २०७ ॥ ज्ञेन्द्वर्कजानीचारिभागगा जातिच्युतिः॥ २०८ ॥ इन्द्वर्कजौ मित्रर्क्षे जातिपोष्यः॥२०९॥ लाभेशोऽङ्गे कौतुकी ॥ २१० ॥ लाभेशे शुभे वा सबले कौ० ॥ २११ ॥ लाभे शुभेशे कौ० ॥ २१२ ॥**

ஜாதிவிட்டு நீங்கும் யோகம்—(207) லக்கினேசனுக்கோ லக்கினத்திற்கோ 6, 8, 12 ல் பாபர்களிருந்தால் ஜாதிவிட்டு நீங்குவான். (208) புதன், சந்திரன், சனி இவர்கள் நீச நவாம்சத்திலோ, சத்துரு நவாம்சத்திலோ இருந்தார்களானுல் ஜாதி, விட்டு நீங்குவான். (இதை இக்காலத்தில் கிருஸ்து முதலியமதப் பிரவேசஞ் செய்பவரெனச் சொல்லலாம்.) (209) சந்திரன், சனி இவர்கள் மித்திரன் வீட்டிலிருந்தால் தனது ஜாதியைப் போஷிப்பவன். அல்லது தனது ஜாதியால் போஷிக்கத்தக்கவனுவான். (210) 11க் குடையவன் லக்கினத்திலிருந்தால் சந்தோஷமுள்ளவனுவான். (211) 11 க்குடையவன், 9 மிடத்தில் பலம் பெற்றிருந்தால் சந்தோஷமுள்ளவனுவான். (212) 11 ல் 9க்குடையவனிருந்தால் சந்தோஷமுள்ளவனே யாவான்.

इज्यमन्दयोगेऽलसः ॥ २१३ ॥ लग्नेशे मन्दान्विते अल० ॥ २१४ ॥ लग्नेशे निर्बले अल० ॥ २१५ ॥ लग्ने पापदृष्ट्याधिक्ये अल० ॥ २१६ ॥ अंशाद्धर्मे जीवे कृषिकर्ता ॥ २१७ ॥ अंशादरिगौ पापौ कृषि० ॥ २१८ ॥ धनुषि वृषेऽङ्गे क्रूरैर्दृष्टे खल्वाटः ॥ २१९ ॥ सपापे पापर्क्षेऽङ्गे ख० ॥२२०॥ कर्के चन्द्रभौमदृष्टे सिंहचापाल्यङ्गनालग्ने ख० ॥ २२१ ॥ नेत्रे शुभे नेत्रेशे च शुभान्वितेऽङ्गेशयुते शोभननेत्रः ॥ २२२ ॥

சோம்பலுண்டாகும் யோகம்—(213) குரு, சனி இவர்கள் சேர்ந்திருந்தால் சோம்பலுள்ளவனுவான். (214) லக்கிஞதிபதி சனியுடன் கூடினுல் சோம்பலுள்ளவனுவான். (215) லக்கிஞதிபதி பலமற்றிருந்தால் சோம்பலுள்ளவனுவான். (216) லக்கினத்தில் அதிகம் பாபர்திருஷ்டி யிருக்குமானுல் சோம்பலுள்ளவனுவான். (217) ஜன்மநவாம்சத்திற்கு 9ல் குருவிருந்தால் கிருஷி செய்து ஜீவிப்பான். (218) அம்சத்திற்கு 6ல் பாபரிருந்தால் கிருஷி செய்து ஜீவிப்பான். (219) தனுஸ்ஸோ, விருஷபமோ லக்கினமாகி குரூரர்களாற் பார்க்கப்பட்டால் குட்டையாவான். (220) பாபருடன் கூடின பாபர்வீடானது லக்கினமானுல் குட்டையாவான். (221) சிம்மம், தனுஸ், விருச்சிகம், கன்னி இவற்முள் ஒன்று லக்கினமாகி கடகத்தில் சந்திரனிருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் குட்டையாவான். (222) 3 மிடத்தில் சுபரிருந்து, 3 க் குடையவனும் சுபரின் சேர்க்கை பெற்று லக்கிஞதிபதியுடன் சேர்ந்தால் அழகிய நேத்திரமுள்ளவனுவான்.

इन्द्वर्कौलग्ने मित्रादृष्टे बुद्बुदलोचनः ॥ २२३ ॥ धने वा व्यये पापे मिलिताक्षः ॥ २२४ ॥ सक्रूरोऽर्कोऽन्त्ये वात्रिकोणे विकलनयनः॥ २२५॥ धने वाव्यये शुक्रे पापयुते काणो वा मन्दलोचनः ॥ २२६ ॥ पुष्पवन्ताव-सदृष्टौ वक्रगर्क्षगौ वा त्रिके वक्रनेत्रः ॥ २२७ ॥ चन्द्रारावेकभागेऽक्ष्णो-श्चिह्नम् ॥ २२८ ॥ षष्ठेशे वक्रगर्क्षेऽक्षिरोगी ॥ २२९॥ ज्ञारर्क्षे लग्नपे ज्ञारदृष्टेऽक्षिरोगी ॥ २३० ॥ रंध्रांङ्गेशौ षष्ठे सव्यनेत्रे रोगः ॥ २३१ ॥ षष्ठेऽष्टमे शुक्रे दक्षिणनेत्रे रोगः ॥ २३२ ॥ धनेशे शुभेक्षिते लग्नेशे पापयुते सरोगनेत्रः ॥ २३३ ॥ मन्दारगुळिकयुते नेत्रेशे नेत्रे रोगः॥ २३४ ॥ नेत्रपापायमदृष्टा नेत्रं रोगहतं भवेत् ॥ २३५ ॥ नेत्रेशांशेशे पापर्क्षे रोगहतनेत्रः ॥ २३६ ॥ लग्नाऽष्टमे शुक्रे क्रूरदृष्टेऽश्रुपातान्नेत्रपीडा ॥२३७॥ लग्ने भौमे शयने वा नयने गदः॥

खेशशुक्रयोगे नेत्ररोगी ॥ २३९ ॥ शुक्रात्त्रिके नेत्रशे नेत्ररोगी॥ २४० ॥ त्रिकोणे सूर्ये पापदृष्टे निस्तेजो नेत्रः ॥ २४१ ॥

நேத்திரரோகயோகம்—(223) சந்திரனும் சூரியனும் லக்கினத்திலிருந்து சுபர் பாபர் இருவராலும் பார்க்கப்பட்டால் கண்ணில் ரோகமுண்டாகும். (224) 2லோ, 12லோ பாபரிருந்தால் கண்சேர்ந்திருக்கும். (225) சூரியன் பாபியுடன் கூட 12லோ, திரிகோணத்திலோ இருந்தால் கண்ணில் ஊனமுள்ளவனுவன். (226) 2லோ 12லோ சுக்கிரனிருந்து பாபருடன் சேர்ந்தால் ஒருகண் பொட்டையாகவோ, கண்ணிற் பார்வை குறைந்தவனுகவோ இருப்பான். (227) சூரியன் சந்திரன் இவர்கள் பாபராற் பார்க்கப்பட்டு வக்கிரியான கிரஹத்தின் வீட்டி விருப்பார்களானுலும் 6, 8, 12 விருப்பாரானுலும் வக்கிர நேத்திர முள்ளவனுவான். (228) சந்திரன் செவ்வாய் இருவரும் ஒருநவாம்சத்திலிருந்தால் கண்ணில் மருவிருக்கும். (229) 6க் குடையன் வக்கிரத்தை யடைந்த கிரஹத்தின் வீட்டிவிருந்தால் நேத்திர ரோகமுள்ளவனுவான். (230) புதன், செவ்வாய் இவர்கள் வீட்டில் லக்கினுதிபதி யிருந்து, புதன் செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் நேத்திர ரோகமுள்ளவனுவான். (231) 1, 8க் குடையவர் 6லிருந்தால் இடது கண்ணில் ரோகமுள்ளவனுவான். (232) 6லோ, 8லோ, சுக்கிரனிருந்தால் வலதுகண்ணில் ரோகமுள்ளவனுவான். (233) 2க் குடையவன் சுபர் வீக்ஷணம் பெற்று லக்கினேசன் பாபருடன் கூடினுல் நேத்திரரோகமுள்ளவனுவான். (234) 2க் குடையவன் சனி, செவ்வாய், குளிகன் இவர்களுடன் கூடினுல் நேத்திரத்தில் ரோகமுள்ளவனுவான். (235) 2ல் பாபக்கிரஹங்களிருந்து சனியினுற் பார்க்கப்பட்டாரானுல் ரோகத்தால் நேத்திரம் போய்விடும். (236) 2க் குடையவனிருக்கும் அம்சத்திற்குடையவன் பாபர் வீட்டிவிருந்தால் ரோகத்தால் நேத்திரம் போய்விடும். (237) லக்கினத்திற்கு 8ல் சுக்கிரனிருந்து குரூரக்கிரஹத்தாற் பார்க்கப்பட்டால் கண்ணில் நீர்வடிதலால் பீடையுண்டாகும். (238) லக்கினத்திலோ 12லோ செவ்வாயிருந்தால் நேத்திரவியாதி யுண்டாகும். (239) 10க் குடையவனும் சுக்கிரனும் சேர்ந்தால் நேத்திர ரோகி

யாவான். (240) சுக்கிரனுக்கு 6, 8, 12ல் 2க் குடையவனிருந்தால் நேத்திர ரோகியாவான். (241) திரிகோணத்தில் சூரியனிருந்து பாபராற் பார்க்கப்பட்டால் நேத்திரத்தில் பார்வை குறையும்.

लग्नेशे सार्कशुक्रेत्रिके जन्मांध:॥२४२॥ राहुग्रस्तेऽङ्गे मन्दारौ त्रिकोणे जन्मांध: ॥ २४३ ॥ नेत्राङ्गेशौ भान्वच्छयुतौ त्रिके जन्मांध: ॥ २४४ ॥ त्रिके चन्द्रारयोगे पातादन्ध:॥२४५ ॥ सेज्येन्दौ त्रिके सेकादन्ध:॥ २४६ ॥ चन्द्राच्छौ त्रिके कामान्ध: ॥ २४७ ॥ ज्ञेन्दू त्रिके शस्त्रान्ध: ॥ २४८ ॥ इन्द्वर्कौ सोत्थे वा केन्द्रेऽन्ध: ॥ २४९ ॥ पापर्क्षे भौमे केन्द्रेऽन्ध: ॥ २५० ॥ यमर्क्षेऽस्ते सूर्येऽन्ध: ॥ २५१ ॥ सौम्यास्त्रिके क्रूरैर्दृष्टा अन्ध: ॥ २५२ ॥ कुजेऽङ्गे कुंभेऽन्ध: ॥ २५३ ॥ शुक्राङ्गेशयुतौ स्वान्त्येशौ त्रिकस्थावन्ध: ॥ २५४ ॥ शुक्रपापाभ्यां युक्तश्चेन्दुर्धनेंध: ॥ २५५ ॥ सुतांबुगौ पापावन्ध: ॥ २५६ ॥ चन्द्रे त्रिके पापदृष्टेऽन्ध: ॥ २५७ ॥ चन्द्रार्कौ व्यये शुभदृग्हीनौ अन्ध:॥ २५८ ॥ सिंहेऽर्कजेऽङ्गे वा शुक्रेऽन्ध: ॥ २५९ ॥ यमेन्द्वर्का: क्रमादन्त्याऽर्थाष्टमगा नेत्रहीन:॥ २६० ॥ यथा तथा षष्ठाष्टान्त्यधनस्थाश्चन्द्रार्कारयमा बलिग्रहदोषजा नेत्रहीनता ॥ २६१ ॥ लग्नाच्छुक्राद्वा सुते राहु: सूर्यदृष्टश्चेन्नेत्रनाश: ॥ २६२ ॥ मन्दे तुर्ये पापैर्दृष्टे नष्टदृष्टि: ॥ २६३ ॥ सेन्दुश्शुक्रस्त्रिकस्थो निशान्ध:॥ २६४ ॥ शुक्रेन्दुयुते नेत्रेशेऽङ्गे निशान्धो न तुस्वोच्चशुभैर्युते ॥ २६५ ॥ लग्नार्थेशौ त्रिकेऽक्षिनाश: ॥ २६६ ॥ चन्द्रार्कौ सिंहेऽङ्गे शन्यारदृष्टे नेत्रनाश: ॥ २६७ ॥

பிறவிக்குருடனாகும்யோகம்—(242) லக்கினாதிபதி சூரியன் சுக்கிரன் இவர்களுடன் கூட 6, 8, 12ல் இருந்தால் பிறவிக்குருடனாவான். (243) சூரியன் ராஹுக்கிரஸ்தனாய் லக்கினத்திலிருந்து சனி செவ்வாய் திரிகோணத்தி லிருப்பாரானால் பிறவிக்குருடனாவான். (244) 2, 1,க் குடையவர் சூரிய சுக்கிரர்களுடன் கூடினவர்களாய் 6, 8, 12 லிருந்தால் பிறவிக்குருடனாவான். (245) 6, 8, 12,ல் சந்திரன், செவ்வாய் இருவரும் சேர்ந்திருப்பார்களானால் கீழ்விழுதலால் குருடனாவான். (246) குருவுடன் கூடின சந்திரன் 6, 8, 12ல் இருந்தால் நனைவால் குருடனாவான். (247) சந்திரன், சுக்கிரன் இவர்கள் 6, 8, 12ல் இருந்தால் காமத்தாற் குருடனாவான். (248) புதனும், சந்திரனும் 6, 8, 12

விருந்தால் சஸ்திரத்தால் குருடனுவான். (249) சந்திரனும், சூரியனும் 3ல் இருந்தாலும் அல்லது கேந்திரத்திலிருந்தாலும் குருடனுவான். (250) பாபர் வீட்டில் செவ்வாயிருந்து அது கேந்திரமானுல் குருடனுவான். (251) சனியின் வீடு 7மிடமாகி அதில் சூரியனிருந்தால் குருடனுவான். (252) சுபக்கிரஹங்கள் 6, 8, 12ல் இருந்து குரூரக்கிரஹங்களாற் பார்க்கப்பட்டால் குருடனுவான். (253) கும்பம் லக்கினமாகி அதில் செவ்வாய் (தனித்து) இருந்தால் குருடனுவான். (254) 2, 12க் குடைய கிரஹங்கள் சுக்கிரன், லக்கிஞதிபதி இவர்களுடன் கூடினவர்களாய் 6, 8, 12ல் இருந்தார்களானுல் குருடனுவான். (255) சுக்கிரன், பாபக்கிரஹம் இவற்றுடன் கூடின சந்திரன் 2 லிருந்தால் குருடனுவான். (256) பாபக்கிரஹங்கள் 4, 5 மிடங்களிலிருந்தார்களானுல் குருடனுகிருன். (257) சந்திரன் 6, 8, 12 லிருந்து பாபராற் பார்க்கப்பட்டால் குருடனுகிருன். (258) சந்திரன் சூரியன் இவர்கள் சுபரின் பார்வையை யடையாதவர்களாய் 12ல் இருந்தால் குருடனுவான். (259) சிம்மத்தில் சனியும், லக்கினத்திற் சுக்கிரனுமாவதிருந்தால் குருடனுகிருன். (260) சனி, சந்திரன், சூரியன் இவர்கள் முறையே 12, 6, 8இவ்விடங்களிலிருந்தால் கண்ணில்லாதவனுகிருன். (261) சந்திரன், சூரியன், செவ்வாய், சனி இவர்கள் எவ்விதமாயினும் அதாவது: சேர்ந்தோ தனித்தனியேனுமோ 6, 8, 12, 2 மிடங்களிலிருந்தால் அவர்களுள் வலுவான கிரஹத்தின் தோஷமூலமுண்டான நேத்திரஹானி உண்டாகும். (262) லக்கினத்தினின்ருே, சுக்கிரனிருக்குமிடத்தினின்ருே 5 மிடத்தில் ராஹு இருந்து சூரியனுற் பார்க்கப்பட்டால் நேத்திர ஹானியுண்டாகின்றது. (263) சனி 4லிலிருந்து பாபக்கிரஹங்களாற் பார்க்கப்பட்டால் கண்ணிற் பார்வையற்றுவிடும். (264) சுக்கிரன் சந்திரனுடன் கூட 6, 8, 12 விருந்தால் ராத்திரியிற் கண்பார்வை கிடையா. (265) 2க் குடையவன் சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் கூடி லக்கினத்திலிருந்தால் இரவிற் கண்தெரியாது. ஆனுல் தனது உச்ச வீட்டிலோ, சுபருடன் கூடியோ இருந்தால் மேற்கூறிய தோஷங் கிடையா. (266) 1, 2க் குடையவர்கள் 6,8,12 விருந்தாரானுல்

நேத்திரம் நாசமடையும். (267) சிம்மம் லக்கினமாகி அதில் சந்திரனும், சூரியனு மிருந்து சனி செவ்வாய் இவர்களாற் பார்க்கப்பட்டால் நேத்திரநாசமுண்டாகும்.

भौमेऽन्त्ये वामनेत्रे घातः ॥ २६८॥ मन्देऽर्थे दक्षनेत्रे घातः॥ २६९॥ लग्ने धनारिकर्मेशाः शुक्रयुता नृपकोपान्नेत्रोत्पाटनम् ॥ २७० ॥ अच्छाक्षिपौ नीचांशगौ पापयुतौ नृपकोपान्नेत्रोत्पाटनम् ॥ २७१ ॥ राजारिनाथांशेशौ त्रिके लग्नेशयुतौ नृ० ॥ २७२ ॥ शुक्राक्षिपौ षष्ठगौ शुभैर्न दृष्टौ नेत्रप्रमादः ॥ २७३ ॥ लग्ने भौमे वा चन्द्रे शुक्रेज्यदृष्टे काणः ॥ २७४ ॥ व्ययारिगौ चन्द्रार्कौ दंपती काणौ ॥ २७५ ॥ सिंहे चन्द्रेऽस्ते भौमदृष्टे काणः ॥ २७६ ॥ कर्केऽर्के सप्तमे भौमदृष्टे काणः ॥ २७७ ॥ चन्द्राच्छावन्त्ये वा द्यूने वामाक्ष्णा काणः ॥ २७८ ॥

(268) செவ்வாய் 12லிருந்தால் இடது கண்கெடும். (269) சனி 2லிருந்தால் வலது கண் கெடும். (270) லக்கினத்தில் 2, 6, 10க் குடையவர்கள் சுக்கிரனுடன் கூடியிருந்தார்களானால் ராஜ கோபத்தால் நேத்திர மெடுபட்டு விடும். (272) சுக்கிரனும், 2க் குடையவனும் நீசாம்சத்தை யடைந்து பாபருடன் கூடினார்களானால் ராஜகோபத்தால் நேத்திரமெடுபட்டுவிடும். (272) 10, 6க் குடையவர்களிருக்கும் அம்சாதிபதிகள் 6, 8, 12லிருந்து லக்கினாதிபதியுடன் கூடினார்களானால் ராஜகோபத்தால் நேத்திர மெடுபடும். (273) சுக்கிரனும் 2க் குடையவனும் 6 லிருந்து சுபர்பார்வை பெறாவிடில் நேத்திரக் கோளாறுண்டாகும். (274) லக்கினத்தில் சந்திரனோ, செவ்வாயோ இருந்து சுக்கிரன், குரு இவர்களாற் பார்க்கப்பட்டால் ஒரு கண்பொட்டையாவான். (275) சந்திரன், சுக்கிரன் இவர்கள் 12, 6, இவ்விடங்களி லிருப்பாரானால் தம்பதிகள் ஒருகண்ணற்றவர்களே யாவர். (276) சிம்மமானது 7 மிடமாகி அதில் சந்திரனிருந்து செவ்வாயினாற் பார்க்கப்பட்டால் ஒரு கண் பொட்டையாவான். (277) கடகம் 7 மிடமாகி அதில் சூரியனிருந்து செவ்வாயினாற் பார்க்கப் பட்டால் ஒருகண்பொட்டையாவான். (278) சந்திரனும், சுக்கிரனும் 12லோ, 7லோ, இருந்தால் இடதுகண் பொட்டையாவான். *

* இந்த ஜாதகதத்துவத்தில் யோகமூலம் சொல்லப்படும் பலன்கள்

मन्दात्तुर्ये सौम्ये षष्ठेशे त्रिके बधिरः ॥ २७९ ॥ सरिपू पूर्णेन्दु-शुक्रौ ब० ॥ २८० ॥ रात्रौ ज्ञे षष्ठे सुते शुक्रे बधिरः ॥ २८१ ॥ सितेऽन्त्ये ज्ञयुते वामकर्णे श्रुतिन्यूनता ॥ २८२ ॥ ज्ञषष्ठेशौ क्रूरदृष्टौ बधिरः ॥ २८३ ॥ पापास्त्र्यायत्रिकोणे सौम्येक्षिता बाधिर्यकराः ॥ २८४ ॥ षष्ठेशे त्रिके मन्द-दृष्टे बधिरः ॥ २८५ ॥ हंसार्किचन्द्रास्त्रिसुतास्तधर्मगा सौम्याऽदृष्ट्युता कर्णच्छेदः ॥ २८६ ॥ चन्द्रादस्ते मन्दे शुक्रार्कौ लग्ने कर्णच्छेदः ॥ २८७ ॥ नीचे भृगौ फणियुते कर्णच्छेदः ॥ २८८ ॥

செவிடாகும் யோகம்—(279) சனிக்கு 4ல் புதனும் 6க்குடையவன் 6, 8, 12லு மிருக்கப்பிறந்தவன் செவிடனுவான். (280)பூர்ண சந்திரனும், சுக்கிரனும் சத்துருவுடன் கூடியிருப்பாரானல் செவிடனுவான். (281) ராத்திரி ஜனனஜாதகத்தில் புதன் 6 லிருந்து, சுக்கிரன் 5லு மிருந்தால் செவிடனுகிருன். (282) சுக்கிரன் 12 லிருந்து புதனுடன் கூடினல் இடது காதில் கேள்வை குறையும். (283) புதனும், 6க் குடையவனும் குரூரராற் பார்க்கப்பட்டால் செவிடாகிருன். (284)பாபக்கிரஹங்கள் 3, 11, 5, 9 மிடங்களிலிருந்து சுபரின் பார்வை பெருவிடில் செவிட்டைத் தருவர். (285) 6க் குடையவன் 6, 8, 12 லிருந்து சனியினுற் பார்க்கப்பட்டால் செவிடனுகிருன். (286) சூரியன், சனி, சந்திரன், 3, 5, 7, 9 மிடங்களிலிருந்து சுபரின் பார்வையையோ, சேர்க்கையையோ பெருவிடில் காதுவெட்டுண்டு (அல்லது கெட்டு) விடும். (287) சந்திரனுக்கு 7ல் சனியும், சுக்கிரனும், சூரியனும் லக்கினத்திலுமிருந்தால் காது சேதத்தையடை

ஜாதகன் ஜனித்ததும் சிலர்க்கும், சிலர்க்குப் பிற்காலத்திலும் நடைபெறும். ஆனல், எவ்வித கிரஹயோகமூலம் எத்தகைய கெட்டபலனே, நல்லபலனே சொல்லப்படுகின்றதோ அத்தகைய கிரஹத்தின் தசையானது அந்த ஜாதகனுடைய ஆயுட்காலத்தில் நடைபெருவிடில் அந்த யோகமூலம் சொல்லியபலன் சிலஜாதகவிஷயத்தில் நடை பெருமலுமிருக்கக்கூடும். ஏனெனில் ஜாதக சந்திரிகை 76-வது பக்கம் 70-வது சுலோத்திலும், நமது பிருஹத்ஜாதகம் 344வது பக்கம், 21வது சுலோத்திலும் இது விஷய முபதேசித்திருப்பதைக் கொண்டு அதை நிர்ணயித்தறிந்து கொள்ளவும் மேலும் இவ்விதமே மேலுள்ள விடங்களிலும் நிர்ணயஞ் செய்து கொள்க.

யும். (288) சுக்கிரன் நீசனுயிருந்து ராஹுவுடன் கூடினுல் கர்ணச்சேதமுண்டாகும்.

**शुक्रे षष्ठे कुजेऽङ्गे नासाच्छेदः ॥ २८९ ॥**

நாஸிகை (மூக்கு) சேதமடையும் யோகம்—(289) சுக்கிரன் 6லும், செவ்வாய் லக்கினத்திலும், இருந்தால் மூக்கறுபடும் (அல்லது கெட்டுவிடும்.)

**इन्दुशुक्रौ मेषगौ लग्नषष्ठे ज्ञे मुखदौर्गन्ध्यम् ॥ २९० ॥ कर्काजगे शुक्रे मु० ॥ २९१ ॥ लग्ने इन्दौ षष्ठेशे ज्ञे मु० ॥ २९२ ॥**

முகத்திற்கெட்ட நாற்றமுண்டாகும் யோகம்—(290) சந்திரனும், சுக்கிரனும் மேஷத்திலிருந்து லக்கினத்திற்கு 6 மிடத்தில் புதனுமிருந்தால் முகத்தில் கெட்ட நாற்றமுண்டாகும் (இது பெரும்பாலும் துலாம், விருக்சிகம், தனுஸ் மகரம் இந்தலக்கின ஜாதகத்திற்குப் பொருந்தும்.) (291) (கடகம், மேஷம், இவ்விடங்களிற் சுக்கிரனிருந்தால் முகத்தில் நாற்றமுண்டாகும். (292) லக்கினத்தில் சந்திரனிருந்து 6 மிடத்ததிபனுக புதன் ஆனுல் முகத்தில் நாற்றமுண்டாகும்.

**कर्कालिझषे ज्ञे सूर्याधस्थचन्द्रदृष्टे मूकः ॥ २९३ ॥ ज्ञारीशौ लग्नगौ मूकः ॥ २९४ ॥ जीवारीशावङ्गे मूकः ॥ २९५ ॥ धनेशेज्यौ त्रिके मूकः ॥ २९६ ॥ कर्कालिझषगे ज्ञे चन्द्रदृष्टे सुखे सूर्ये षष्ठभे पापदृष्टे गुङ्गस्वरः ॥ २९७ ॥ शुक्रेन्द्वारावङ्गे गुङ्गस्वरः ॥ २९८ ॥ चन्द्रार्कौ मीनस्थौ प्रहसितमुखः ॥ २९९ ॥ धनेशे स्वोच्चगे केन्द्रेप्रह० ॥ ३०० ॥ कोशेशे सौम्ययुते केन्द्रे सुमुखः ॥ ३०१ ॥ धने पापे धनेशे पापयुते नीचारिगे दुर्मुखः ॥ ३०२ ॥ धने पापे दीर्घमुखः ॥ ३०३ ॥**

ஊமையாகும் யோகம்—(293) கடகம், விருச்சிகம், மீனம் இவற்றில் புதனிருந்து சூரியனுக்குக் கீழிருக்கும் சந்திரனுற் பார்க்கப்பட்டால் ஊமையாவான். (294) புதனும், 6க்குடையவனும் லக்கினத்திலிருந்தால் ஊமையாவான். (295) குருவும், 6க் குடையவனும் லக்கினத்திலிருந்தால் ஊமையாகிருன். (296) 2க் குடையவனும், குருவும் 6, 8, 12லிருந்தால் ஊமையாகிருன். (297) கடகம், விருச்சிகம், மீனம், இவ்விடங்கள் 4 மிடமாகி அதில் புதனிருந்து சந்திரனுலும் அவன் பார்க்கப்பட்டு சூரியன்

6 லுமிருந்து பாபராலும் பார்க்கப்பட்டால் கொரகொரத்த குர லுள்ளவனுவான். (298) சுக்லபக்ஷத்திய சந்திரனும், செவ்வாயும் லக்கினத்திலிருந்தால் கொரகொரத்த குரலுள்ளவனுவான். (298) சந்திரனும், சூரியனும் மீனத்திலிருந்தால் சிரித்த முகமுள்ளவனுவான். (300) 2க்குடையவன் தனது உச்சவீட்டிலிருந்து அவ்விடம் கேந்திரமாயு மிருக்குமானல் சிரித்தமுகமுள்ளவனுவான். (301) 9க் குடையவன் புதனுடன் கூடி கேந்திரத்திலிருந்தால் ஸுமுகனுவான். (302) 2ல் பாபரும், 2க் குடையவன் பாபருடன் கூடி நீசவீட்டிலோ சத்துருவீட்டிலோ இருந்தால் துர்முகனுவான். (303) 2ல் பாபரிருந்தால் நீண்ட முகமுள்ளவனுவான்.

**जामित्रे मन्दे चन्द्रे खे वाग्मी ॥ ३०४ ॥ मन्दाच्छौ वित्ते मन्दभेऽर्के वाग्मी ॥ ३०५ ॥ दिवा सिंहे ज्ञे वाग्मी ॥ ३०६ ॥ रात्रौ कर्के ज्ञे वाग्मी ॥ ३०७ ॥ धनेशे सौम्ययुते केन्द्रकोणे वा शुभेक्षिते पुंग्रहयोगे वाग्मी ॥३०८॥ धनेशे पारावतांशे केन्द्रे वा० ॥ ३०९ ॥ सौम्यांशे जीवे वा० ॥ ३१० ॥ वागीशांशपे उच्चे गोपुरे वा वा० ॥ ३११ ॥ सशुभे जीवे वर्गोत्तमे वा० ॥ ३१२ ॥ धनेशे पारावतांशे जीवयुते वा० ॥ ३१३ ॥**

வாக்மீ (பேசுந்திறமையுள்ள) யோகம்—(304) 7ல் சனியும், சந்திரன் 10லு மிருந்தால் வாக்மியாவான். (305) சனியும், சுக்கிரனும் 2லிருந்து சனியின் வீட்டில் சூரியனிருந்தால் வாக்மியாவான். (306) பகலிற் பிறந்தஜாதகத்தில் சூரியன் சிம்மத்திலிருந்தால் வாக்மியாவான். (307) ராத்திரி ஜனித்த ஜாதகத்தில் கடகத்தில் புதனிருந்தால் வாக்மியாவான். (308) 2க் குடையவன் புதனுடன் கூடி கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்து சுபக்கிரஹங்களின் பார்வை பெற்று புருஷக்கிரஹமான சூரியன், செவ்வாய் குரு இவர்களுடன் சேர்ந்து மிருந்தால் வாக்மியாவான். (309) 2க் குடையவன் பாராவதாம்சமேறினுலும், கேந்திரத்திலிருந்தாலும் வாக்மியாவான். (310) புதனுடைய அம்சத்தில் குருவிருந்தால் வாக்மியாவான். (311) இரண்டிற்க் குடையவனிருக்கும் அம்சாதிபன் உச்சனுகவோ, கோபுராம்சத்திலோ இருந்தால் வாக்மியாவான். (312) குரு சுபருடன் கூடி வர்க்கோத்தமாம்சமேறினல் வாக்மியாவான். (313) 2க்குடைய

வன் குருவுடன் கூடி பாராவதாம்சம் ஏறினுல் வாக்மியாவான்.

षष्ठेशे ज्ञे जिह्वादोषः ॥ ३१४ ॥ मन्देशाद्धने केतावस्फुटोक्तिः ॥ ३१५ ॥ मन्दर्क्षे ज्ञे मन्ददृष्टे गद्गदवाक् ॥ ३१६ ॥ धर्मेशे शुक्रे ललरोक्तिः ॥ ३१७ ॥ धनेशे विबले क्रूरांशे पापयुते ल० ॥ ३१८ ॥ पापे धने वा पापदृष्टे क्रूरांशे पापयुते ल० ॥ ३१९ ॥ मन्देन्दुयोगे परुषवाक् ॥ ३२० ॥

ஜிஹ்வா (நாக்கில்) தோஷமுண்டாகும் யோகம்—(314) 6க் குடையவன் புதனுனல் நாக்கில் தோஷமுண்டாகும். (315) அம்சலக்கினத்திற்கு 2ல் கேது சனி இவர்களிருந்தால் தெளிவா யில்லாமல் பேசுவான். (316) சனிவீட்டில் புதனிருந்து சனி யினுற் பார்க்கப்பட்டால் தழைதழைத்த (தெளிவில்லாத) வாக் குள்ளவனுயாவான். (317) 9க்குடையவன் சுக்கிரனுனல் விகார மாகப் பேசுவான். (318) 2க் குடையவன் பலமற்றவனுய் குரு ராம்ச மேறினுல் தெளிவாய் பேசமாட்டான். (319) 2ல் பாபி இருந்தாலும், பாபியினுற் பார்க்கப்பட்டாலும், பாபியுடன் கூடி குரூராம்சமேறினுலும் தெளிவாய் பேசமாட்டான். (320) சனி யும், சந்திரனும் கூடினுல் கடுமையாய் பேசுவான்.

गोऽजधनेऽङ्गे क्रूरैर्दृष्टे वा युते दन्तविकारः ॥ ३२१ ॥ सप्तमे पापाः सौम्यैरदृष्टाः दन्तविकृतिः ॥ ३२२ ॥ चन्द्रार्कार्कर्वा पापा अस्ते दशनाभिघातः ॥ ३२३ ॥ सप्तमेशाद्धने राहौ स्थूलदन्तः ॥ ३२४ ॥ धनारीशौ युतौ सपापौ दन्तरोगी ॥३२५॥ सुतेऽङ्गेराहौ दन्तुरो दन्तरोगी वा॥३२६॥

பல்லில் விகாரமுள்ளயோகம்—(321) விருஷபம், மேஷம் இந்த ராசிகள் முறையே, 2 மிடமாகவும், லக்கினமாகவுமாகி குரூரக்கிரஹங்களுடன் கூடியோ, பார்க்கப்பட்டோ இருந்தால் தந்தவிகாரமுண்டாகும். (322) 7ல் பாபர்களிருந்து சுபக்கிர ஹங்களாற் பார்க்கப் படாவிடில் தந்தவிகாரமுண்டாகும். (323) சந்திரன், சனி சூரியன் இவர்களோ, வேறுபாபர்களோ 7லிருந் தால் பற்களிற் கேடுண்டாகும். (324) 7க் குடையவனுக்கு 2ல் ராகுவிருந்தால்பல்பெருத்திருக்கும். (325) 2, 6க் குடையவர் ஒருராசியில் பாபருடன் கூடினுல் தந்தரோகியாவான். (326) 5லோ, லக்கினத்திலோ ராகுவிருந்தால் கோணப்பல்லுள்ள வனுகவோ, தந்தரோகமுள்ளவனுகவோ இருப்பான்,

शकुबुजीवयुतौ दिवा तुर्यगे शुक्रेच हस्तनाशः॥ ३२७ ॥ शन्यारौ राहुमुखे चारिगौ हस्तनाशः ॥ ३२८ ॥ द्वेष्यर्क्षे मन्दे शुक्रयुते हस्तनाशः ॥३२९॥ मन्देन्द्वर्काः षष्ठाष्टमगा हस्तपीडा ॥ ३३० ॥ तुर्येङ्गेशे वक्रभेऽल्यंशे कुब्जः ॥ ३३१ ॥ रंध्रे स्थिरे ज्ञेज्यशुक्राः कठिनचित्तः ॥ ३३२ ॥ सुखे क्रूरे क्रूरान्विते सुखेशे विरुद्धचित्तः ॥ ३३३ ॥

கைநாசமாகும் யோகம்—(327) சனி, செவ்வாய், புதன், குரு இவர்கள் பகலில் ஜனித்த ஜாதகத்தில் சேர்ந்திருந்து 4ல் சுக்கிரனுமிருந்தால் கையொடியும். (328) சனி, செவ்வாய் இவர்கள் ராஹுவுக்கு எதிர்முகப்பட்டு 6லிருந்தால் கையொடியும். (329) சத்துரு வீட்டில் சனியிருந்து சுக்கிரனுடனும் கூடினுல் கையொடியும். (330) சனி, சந்திரன் சூரியன், இவர்கள் 6,8மிடங்களிலிருந்தால் கையிற் பீடையுண்டாகும். (331) லக்கினுதிபதி 4லிருந்து செவ்வாயின் வீட்டிலோ, விருச்சிக நவாம்சத்திலோ இருந்தால் குட்டையாவான். (332) 8 மிடம் ஸ்திரராசியாகி புதன், குரு, சுக்கிரன் இவர்களுமங்கிருந்தால் கடின சித்தனுவான். (333) 4லில் குரூரனிருந்து 4க்குடையவனும் குரூரனுடன் கூடினுல் விருத்த சித்தமுள்ளவனுவான்.

रंध्रगौ शुक्रारौ वातादण्डवृद्धिः ॥ ३३४ ॥ भौमर्क्षगौ शुक्रारौ वातादण्डवृद्धिः ॥ ३३५ ॥ इन्द्वच्छौ भौमर्क्षगौ मन्देज्यदृष्टौ कललजाण्डवृद्धिः ॥ ३३६ ॥ सगुलिकेंशे ज्ञमात्रदृष्टे स्थूलाण्डः ॥ ३३७ ॥

அண்ட வியாதியுள்ளயோகம்—(334) சுக்கிரனும், செவ்வாயும் 8லிருந்தால் வாயுவினுல் அண்டம் பெருத்துவிடும். (335) சுக்கிரனும், செவ்வாயும் சேர்ந்து சுக்கிரன் வீட்டிலிருந்தால் வாயுவினுல் அண்டம் விருத்தியையடையும். (336) சந்திரனும், சுக்கிரனும் செவ்வாய் வீட்டிலிருந்து சனி குரு இவர்களாற் பார்க்கப்பட்டால் நீரண்ட முண்டாகும். (337) லக்கினுசத்தில் குளிகனிருந்து புதனுல் மட்டும் பார்க்கப்பட்டால் அண்டம் பெருத்துவிடும்.

पूर्णेन्द्वारौ षष्ठे जङ्घाक्षतिः ॥ ३३८ ॥ शनीन्द्वारा व्यये जङ्घाक्षतिः ॥ ३३९ ॥

முழந்தாளில் கேடுதலுண்டாகும் யோகம்—(338) பூர்ண சந்திரனும், செவ்வாயும் 6லிருந்தால் முழந்தாளொடியும். (339) சனி, சந்திரன், செவ்வாய் 12 லிருந்தால் முழந்தாளொடியும்.

झषाल्यजकर्कमृगान्यतमगौ इन्द्वर्कजौ सपापौ नवमपञ्चमगौ वा पङ्गुः ॥ ३४० ॥ षष्ठे सूर्यारमन्दाः पङ्गुः ॥ ३४१ ॥ मन्दारीशौ व्यये पापदृष्टौ प० ॥ ३४२ ॥ रंध्रांकेशौ सपापौ तुर्ये प० ॥ ३४३ ॥ कर्के चन्द्रार्कजौ शुभादृष्टौ प० ॥ ३४४ ॥ मन्दाच्छयुतौ शुभादृष्टौ प० ॥ ३४५ ॥ दारेशे सौरे सपापे प० ॥ ३४६ ॥

॥ इति तनुभावविवेकः ॥

நொண்டியாகும் யோகம்—(340) பாபருடன் கூடின சந்திரன், சனி இவர்கள் மீனம், விருச்சிகம், மேஷம், கடகம், மகரம் இவற்றுளொருராசியிலிருந்தாலும், 5, 9 மிடங்களிலிருந்தாலும் பங்கு வாவான். (341) 6ல், சூரின், செவ்வாய், சனி இவர்களிருந்தால் பங்குவாவான். (342) சனியும், 6க் குடையவனும் 12லிருந்து பாபராற் பார்க்கப்பட்டால் பங்குவாவான். (343) 8, 9க் குடையவர் பாபருடன் கூடி 4ல் இருந்தால் நொண்டியாவான். (344) கடகத்தில் சந்திரன், சனி இவர்களிருந்து சுபக்கிரஹத்தாற் பார்க்கப்படாவிடில் பங்கு வாவான். (345) சனியும், சுக்கிரனும் சேர்ந்து சுபராற் பார்க்கப்படாவிடில் பங்குவாவான். (346) 7க் குடையவன் சனியாகி பாபருடன் கூடினுல் பங்குவாவான்.

குறிப்பு—பொதுவாய் இந்த ஜாதகதத்துவத்தில் இன்னின்ன கிரஹயோகத்தால் இன்னின்ன பலனுண்டாகும் என சொல்லப்பட்டிருக்கின்றதாயினும் எந்தக்கிரஹயோக (சேர்க்கையால்) த்தால் எந்தப்பலன் சொல்லப்பட்டிருக்கின்றதோ அந்த கிரஹங்களின் தசையானது 3, 5, 7, 9—வது தசையாகவோ புக்தியாகவோ, அந்தரமாகவோ நடக்கும்பொழுதும், அல்லது நமது **கோசரபலநிர்ணயத்திற்** சொல்லியபடி கோசரமும் கெட்டதாயிருக்கும்பொழுதுந்தான் மேற்சொல்லிய யோகத்தாலேற்படுவதாகச் சொல்லிய கெட்டபலன் அனுபவத்தில் நடைபெறுமென்றும், கோசரமானது நல்லதாயிருந்து, தசை முதலியன கெடுதலாயிருந்தாலும், தசை முதலியன நல்லதாயிருந்து கோசரமானது கெடுதலாயிருந்தாலும் இத்தகைய கிரஹயோகமூலம் சொல்லிய பலன் அனுபவத்தில் நடைபெறும் போலத் தோன்றி

மறையும் என்றும் கண்டு கொள்ளவேண்டும். இவ்விதம் ஊஹித்தறியாமல் பொதுவாய் ஆங்காங்கெழுதியவற்றை மட்டும் பார்த்தால் அது அனுபவத்தில் மாறியே நடக்கும். ஆதலால் இதுவிஷயமாய் நமது உடுதேசாபலநிர்ணயம், கோசரபலநிர்ணயம், ஜாதகசந்திரிகை, பிருஹத்ஜாதகம் இவற்றையும் படித்தறிந்து கிரஹங்களின் பலாபலங்களேயும் கண்டறிந்து பலன் கண்டு கொள்ளவேண்டுவது மிகவும் அவசியமானது. இவ்விதம் பார்க்கத்தவறினல் இங்கு சொல்லியபலன் அனுபவத்தில் மாறியே காட்டும் என்பது திண்ணம். (எ—று)

ஜாதகதத்துவத்திற் சொல்லியதனுபாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற் சொல்லிய தனுபாவபலன்.

देहाधिपः पापयुतोऽष्टमस्थो व्ययारिगो वांऽगसुखं निहन्ति ।
सर्वत्र भावेषु च योजनीयमेवं बुधैर्भाववशात्फलं हि ॥ १ ॥

एवं तृतीयेऽपि च सप्तमेऽपि फलं विमृश्यं कृतिभिः प्रयत्नात् ।
तथा व्यये मित्रगृहे रिपौ मृते स्थिते विलग्नाधिपतौ फलं स्यात् ॥

पापो विलग्नाधिपतिर्विलग्ने चन्द्रे विलग्ने यदि बालकस्य ।
तदातिरोगं स हि केन्द्रसंस्थस्त्रिकोणलाभेषु गदं निहन्ति ॥

बलोनतामेव तु पापवत्तामेतस्य वित्तं फलमानुरूप्यताम् ।
नीचारिसूर्यस्य गृहेषु तिष्ठन् स्वर्क्षादिगेहादिगृहत्रये च ॥

देहाधिपश्चन्द्रगृहाधिपो वा तृतीयरिःफारिगतोऽबलः स्यात् ।
नीचास्तगोऽद्व्यष्टगृहे स्थितो वा कार्श्यं शरीरेऽतिगदं करोति ॥

लग्नाधिपो वा जीवो वा शुक्रो वा यदि केन्द्रगः ।
तस्य पुत्रस्य दीर्घायुर्धनवान् राजवल्लभः ॥

केन्द्रत्रिकोणनिधनेषु न यस्य पापा लग्नाधिपस्सुरगुरुश्चचतुष्टयस्थः।
भुक्त्वा सुखानि विविधानि च पुण्यकर्मा जीवेत्तु वर्षशतमेव विमुक्त-[रोगः ॥

लग्नेशे चरराशिस्थे शुभग्रहनिरीक्षिते ।
कीर्तिश्श्रीमान् महाभोगी देहपुष्टिसमन्वितः ॥

जीवः शुक्रो बुधश्चन्द्रो लग्ने शशिसमन्विताः ।
लग्नात्केन्द्रगताश्चैव राजलक्षणसंयुतः ॥

लग्ने राहुसमायुक्ते तथा सोमनिरीक्षिते ।
लग्नांशे मन्दसूरी चेज्जातश्च यमळो भवेत् ॥

जातो नरो नाळविवेष्टिताङ्गो लग्ने फणिर्मन्दसमन्वितश्च ।
लग्नेच पार्श्वे द्वितये च पापे निरीक्षिते जीवबुधेन्दुशुक्रैः ॥

रविचन्द्रौच ह्येकस्थावेकांशकसमन्वितौ ।
त्रिमात्रा च त्रिभिर्मासैर्भ्रात्रा पित्रा च पोषितः ॥

(க—ரை) ஜன்ம லக்கினாதிபன் பாபியுடன் சேர்ந்து 6, 8, 12லிருந்தால் சரீரசுகத்தை நாசமாக்குவான். எல்லாபாவங்களி லுமே அந்தந்த பாவத்திற்குத் தக்கபடி இந்தப்பலனைப் பொருத் திப்பார்க்க வேண்டும். இவ்விதமே, 3 மிடத்திலும் 7 மிடத்தி லும் புத்திமான்கள் பிரயத்தினத்துடன் பலன் காணவேண்டும். இவ்விதமே 6, 8, 12லோ, மித்திரன் வீட்டிலோ லக்கினாதிபதி யிருப்பதன் பலனை யறியவேண்டும். லக்கினாதிபதி பாபியாய் லக்கினத்திலிருந்தாலும், சந்திரன் லக்கினத்திலிருந்தாலும் அவன் அப்பொழுது பிறந்த பாலகனுக்கு அதிகரோகத்தை தருவான். அவன் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ, லாபத்திலோ இருந் தால் வியாதியைப் போக்குவான். பலக்குறைவையோ, ஆதிபத் தியமூலம் பாபனாயிருத்தலையோ யடைந்த கிரஹத்திற்கு, வித் தம், அனுரூபமானபலன் இவற்றைச் சொல்லுக. நீசவீடு, சத் துரு வீடு, சூரியன் வீடு, சொந்தவீடு, 6, 8 12மிடம் இவற்றிலிருப் பதை யொட்டியும் பலனைச் சொல்லவேண்டும். ஜன்மலக்கினாதி பனோ, சந்திர லக்கினாதிபனோ 3, 12, 6மிடங்களிலிருந்தால் பல மற்றவனாகிறான். நீசனாகவோ, அஸ்தங்கதனாகவோ, 2, 8மிடங் களிலோ, இருக்கும் கிரஹம் சரீரத்தில் அதிகம் இளைப்பையும், அதிகம் ரோகத்தையும் தருகிறது. லக்கினாதிபனோ, ஜீவனோ, சுக் கிரனோ, கேந்திரத்திலிருந்தால் அப்பொழுது பிறந்தவன் தனவா னாகவும், ராஜப்பிரியனாகவும் இருப்பதுடன் அவனுக்கு நீண்ட வாயுளு மிருக்கும். எவனுடைய ஜாதகத்தில் கேந்திர, திரிகோ ணங்களில் பாபர் இல்லாமலிருந்து லக்கினாதிபனும், குருவும் 1, 4, 7, மிடங்களிலு மிருக்கின்றனரோ அந்த ஜாதகன் பற்பல விதமான சுகங்களை யனுபவித்து புண்ணியகர்மஞ் செய்கின்ற

வனும் எவ்வித ரோகமு மற்றவனும் நூறுவருஷங்கள் ஜீவிப்பான். லக்கினாதிபதி சரராசியிலிருந்து சுபக்கிரஹத்தாற் பார்க்கப்பட்டால் கீர்த்தி, ஐசுவரியம், அதிகம் போகம் இவையுள்ளவனாகவும், தேஹ புஷ்டியுடன் கூடினவனாகவும் இருப்பான். குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இவர்கள் லக்கினத்திலிருந்தாலும், அல்லது குரு, சுக்கிரன், புதன் இவர்கள் சந்திரனுடன் கூட கேந்திரத்திலிருந்தாலும் ராஜலக்ஷணம் பொருந்தியவனாவான். லக்கினமானது ராகுவுடன் கூடியிருந்து சந்திரனாலும் பார்க்கப்பட்டாலும் லக்கின நவாம்சத்தில் சனி, சூரியன் இருவரும் இருந்தாலும் அப்பொழுது பிறந்தவன் இரட்டையாக விருப்பான். லக்கினத்தில் ராஹுவிருந்து சனியுடனும் கூடியிருந்தாலும், லக்கினத்திற்கு இருபுறத்திலும் பாபர் வீக்ஷணமிருந்தாலும், ஜீவன் புதன், சந்திரன் இவர்களால் (பார்கப்படார்விட்டலும்)அப்பொழுது பிறந்தவன் கொடி சுத்திப் பிறப்பான். சூரியனும், சந்திரனும் ஒருவிடத்திலோ, ஒரு நவாம்சத்திலோ இருந்தால் 3 மாஸங்களில் 3 மாதாக்களாலும், பிராதா, பிதா இவர்களாலும் போஷிக்கப்படுவான்.

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய தனுபாவபலன் முற்றிற்று.

## ஸர்வார்த்தசிந்தாமணியிற் சொல்லிய தனுபாவபலன்

लग्नेशे स्वोच्चमित्रांशे स्वनवांशगतेऽपि वा। शुभग्रहयुते दृष्टे देहसौख्यं विनिर्दिशेत्॥ लग्नेशे बलसंयुक्ते केन्द्रकोणगते शुभे। पापग्रहैरसंदृष्टे देहसौख्यं वदेद्बुधः॥ देवलोकांशगे सूर्ये लग्नेशे बलसंयुते। भाग्येशे स्वोच्चराशिस्थे बहुसद्भाग्यकीर्तिमान्॥ लग्नाधिपोऽति बलवाञ्शुभवर्गयुक्तः स्वोच्चे सुहृद्ग्रहयुतः स्वनवांशके वा। लग्नाधिनाथसहिते यदि केन्द्रनाथे सद्भाग्यकीर्ति धनधान्यचिरायुरेति॥ लग्नेश्वरः क्रूरसमन्वितश्चेद्देहस्य सौख्यादिविनाशमाहुः। तादृक्फलं नाशगतोऽपि तस्य शुभेक्षितश्चेत्फलमन्यथा स्यात्॥ दुस्स्थानपेनापि युते विलग्ननाथे विलग्ने सति रोगभाक्स्यात्। बलैर्विहीने सति लग्ननाथे केन्द्रत्रिकोणे नतु रोगभाक्स्यात्॥ लग्नेश्वराधिष्ठितराशिनाथो दुःस्थानगो दुर्बलदेहभाक्स्यात्। तत्तद्भावाधिष्ठितैराशिनाथैर्दुस्थैर्विलग्नादिविनाशमाहुः॥ पापैर्विलग्ने गुळिके त्रिकोणे

लग्नेऽहिनाथे गुळिकेन युक्ते । लग्नेश्वरे पापयुतेऽथ लग्ने राहौ यदा वंचनचोरभीतिः ॥

(க-ரை) லக்கிநாதிபன் தனது உச்சராசியின் அம்சத்திலோ, மித்திரக்கிரஹத்தின் அம்சத்திலோ, தனது நவாம்சத்திலோ இருந்து சுபக்கிரஹத்துடன் சேர்ந்தோ, சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்தால் தேஹஸௌக்கியத்தைச் சொல்லவேண்டும். சுபனான லக்கிநாதிபன் பலம்பெற்று 1, 4, 7, 10 மிடங்களிலோ, 1, 5, 9 மிடங்களிலே இருந்து பாபக்கிரஹங்களால் பார்க்கப்படாமலுமிருந்தால் தேஹஸௌக்கியத்தைச் சொல்லவேண்டும். லக்கிநாதிபதியான ஸூரியன் பலம்பெற்று தேவலோகம் என்ற அம்சத்திலும், 9 மிடத்ததிபன் தனது உச்சராசியிலு மிருந்தால் அதிகமான நல்லபாக்கியம், கீர்த்தி இவையுள்ளவனாக வாவான். லக்கிநாதிபன் அதிகபலம் பெற்றவனாயும், சுபவர்க்கத்துடன் கூடினவனாயுமாகி, தனது உச்சவீட்டிலோ, தனது நவாம்சத்திலோ மித்திரகிரஹத்துடன் கூடியிருந்தாலும், 1, 4, 7, 10 மிடத்ததிபன் லக்கிநாதிபனுடன் கூடியிருந்தாலும் நல்லபாக்கியம், நல்லகீர்த்தி, பொருள், நீண்ட ஆயுள் இவற்றை அடைவான். லக்கிநாதிபன் பாபக்கிரஹத்துடன் கூடினால் தேஹத்தின் ஸௌக்யம் முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். லக்கிநாதிபன் ८ மிடத்திலிருந்தாலும் முற்கூறியபலனை யுண்டாகும். இவ்விருயோகங்களிலும் லக்கிநாதிபன் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் முற்கூறிய பலன் மாறியே நடக்கும். அதாவது: தேஹஸௌக்கியத்திற்கு குறைவு ஏற்படாதென்று கருத்து. லக்கிநாதிபனோ, லக்கினமோ 6, 8, 12 மிடத்திபனுடன் கூடுமானால் ரோகமுள்ளவனாக வாவான். லக்கிநாதிபன் பலமற்றவனாக விருந்தாலும் 1, 4, 7, 10 மிடத்திலோ, 1, 5, 9 மிடத்திலோ இருந்தால் ரோகமுள்ளவனாக வாகமாட்டான். லக்கிநாதிபனிருக்கும் ராசியினதிபன் 6, 8, 12 மிடத்திலிருந்தால் பலமற்ற தேஹமுள்ளவனாக வாவான். இவ்விதமே அந்தந்த பாவநாதர்கள் 6, 8, 12 மிடங்களிலிருந்தால் அந்தந்த பாவத்திற்கு நாசமுண்டாகுமெனப்பொதுவில் சொல்லுகின்றனர். பாபக்கிரஹங்கள் லக்கினத்திலும் 1, 5, 9 மிடங்களில் குளிகனுமிருந்தாலும், லக்கினத்தில் ராஹு-

இருந்து குளிகனுடன் சேர்ந்தாலும், லக்கினாதிபன் பாபியுடன் சேர்ந்தாலும், லக்கினத்தில் ராஹு இருந்தாலும், பிறரால் ஏமாற்றப்படுதல், திருடன் இவர்கள் மூலம் பயமுண்டாகும்.

शनेस्तु योगात्प्रविलोकनाद्वा भीतिर्ध्रुवा वंचनचोरभूपैः । राहौ विलग्ने सकुजेऽर्कपुत्रे राहौ बृहद्बीजमिहाहुरार्याः ॥ लग्नेश्वरे मृत्युगते सराहौ रंध्रे समान्दौ तु तथैव वाच्यः। लग्ने सराहौ गुळिके त्रिकोणे रंध्रे कुजे मान्दियुते तथैव ॥ लग्नेश्वराक्रान्ततदंशनाथो राह्वारमान्द्यादिभिरन्वितश्चेत् । तस्मिन्बृहद्बीजमिहाष्टमेशसंयुक्तराश्यंशपतिः सराहुः ॥ लग्नेश्वरे भूमिसुते तनुस्थे पापान्विते पापविलोकिते वा । शिलाप्रहारैर्व्रणमुत्तमाङ्गे खड्गादिभिर्वा कथयन्ति तज्ज्ञाः॥ शनिस्तथाचेद्व्रणमुत्तमाङ्गे वाताग्निशस्त्रैः पतनेन वापि । यदा भवेत्पञ्चघटीविलग्ने तदाबृहत्को न तदर्धलग्ने । आहुर्बृहत्को मुनयस्तदूनलग्ने शिरस्संकुचितं तु तज्ज्ञाः ॥ शुष्के खगे लग्नगते विलग्ने शुष्के यदा देहकृशत्वमाहुः । लग्नेश्वरे शुष्कयुते तथैव शुष्कग्रहाणां भवनस्थिते वा ॥ लग्नाधिपे नाशगते तु शुष्कराशौ तनौ शुष्कमतीवकष्टम् । लग्नाधिपस्थांशपराशिनाथः शुष्कगृहस्थस्तनुशुष्कमाहुः ॥ शुष्के विलग्ने बहुपापयुक्ते तत्रापि देहस्य कृशत्वमाहुः ॥ लग्ने जलर्क्षे शुभखेचरेन्द्रैर्युक्ते तनुस्थौल्यमुदाहरन्ति । लग्नाधिपस्तोयखगो बलाढ्यः सौम्यान्वितश्चेत्तनुपुष्टिमाहुः ॥ लग्नाधिपश्चेज्जलराशिसंस्थः शुभान्वितस्तोयखगेन दृष्टः । लग्ने शुभक्षेत्रगतेऽपिचैवं लग्नेश्वरस्यांशपतौ जलर्क्षे ॥ पापग्रहाणां च दृशा विहीने लग्ने शुभक्षेत्रगतेऽपि चैवम् ॥ लग्ने गुरौ तेन निरीक्षिते वा जलर्क्षगेणापि जले विलग्ने । सौम्यान्विते शोभनखेचरेन्द्रैर्दृष्टे त्वतिस्थौल्यमुदाहरन्ति।लग्ने शनौ राहु युतेऽथवास्यात्पिशाचबाधां प्रवदन्ति सन्तः॥

(க—ரை) லக்கினத்திற்கு சனியின் சேர்க்கையோ, பார்வையோ ஏற்பட்டால் பிறரால் ஏமாற்றப்படல், திருடன் அரசன் இவர்கள் மூலம் நிச்சயமாய் பயம் இவையுண்டாகும். லக்கினத்தில் செவ்வாயுடன் சேர்ந்த ராஹுவிருந்தாலும், சனியுடன் சேர்ந்த ராஹுவிருந்தாலும் பெரியோர்கள் அண்டம் பெரித்திடுமென்று சொல்லுகின்றனர். லக்கினாதிபன் 8 மிடத்திலிருந்தாலும், 8மிடத்தில் ராஹு, குளின் இவர்களிருந்தாலும் அண்டம் பெருத்திடும் என்றே சொல்லவேண்டும். லக்கினத்தில் ராஹுவும், 5, 9 மிடங்களில் குளினும், 8 மிடத்தில் குளிகனுடன்

செவ்வாயு மிருந்தாலும் அண்டம் பெரித்திடுமென்றே சொல்ல வேண்டும். லக்கினேச்வரனுல் அடையப்பட்ட நவாம்சம் எதுவோ, அதன் அதிபன் ராஹு, செவ்வாய், குளிகன் இவர்களுடன் கூடினுலும் அண்டம் பெருத்திடும். 8 மிடத்ததிபனுல் அடையப்பட்ட ராசியின் அம்சபதி ராஹுவுடன் சேர்ந்தாலும் அண்டம் பெருத்திடும். செவ்வாய் லக்கினுதிபதியாக வாகி அவன் லக்கினத்திலிருந்து, பாபர் சேர்க்கையையோ, பாபர் பார்வையையோ பெற்றிருந்தால் கல்லினுல் அடிபடுதல் மூலமோ, கத்தி முதலியவற்ருலோ தலையில் காயமுண்டாகும் என்கின்றனர். முற்கூறியபடி சனியிருந்தால் (அதாவது: சனிலக்கினுதிபதியாக வாகி அவன் லக்கினத்திலிருந்து பாபர் சேர்க்கை பார்வை இவற்றைப் பெற்றிருந்தால்) காற்று, நெருப்பு, ஆயுதம் இவற்ருலோ கீழ்விழுதலாலோ தலையில் காயமுண்டாகும். லக்கினத்தில் ஜனனகாலத்தில் 5 நாழிகை சென்றிருந்தால் பெருத்ததலையுள்ளவனுக வாவான். $2\frac{1}{2}$ நாழிகைமட்டுமே சென்றிருந்தால் தலைபெருத்திராது. $2\frac{1}{2}$ நாழிகைக்கும் குறைவாகவே ஜன்மலக்கினத்திற் சென்றிருந்தால் தலையானது சிறியதாகவே இருக்கும் என்று சோதிடமறிந்தவர் கூறுகின்றனர். ✻ சுஷ்கராசி ஜன்மலக்கினமாகவாகி, அதில் சுஷ்க கிரஹமுமிருந்தால் சரீரமிளைத்துவிடும் என்கின்றனர். லக்கினுதிபன் சுக்ஷக்கிரஹத்துடன் சேர்ந்தோ, சுஷ்கக்கிரஹத்தின் வீட்டிலோ, இருந்தாலும், லக்கினுதிபன் 8 மிடத்திலிருந்தாலும், சுஷ்கராசி லக்கினமாக வானுலும் மிகுந்த கஷ்டமுண்டாகும். லக்கினுதிபதியா லடையப்பட்ட நவாம்சபதியானவன் சுஷ்கராசியிலிருந்தால் சரீரம் உலர்ந்துவிடும். சுஷ்கராசி லக்கினமாகவாகி அனேகம் பாபக்கிரஹங்களுடன் சேர்ந்திருக்குமானுல் தேஹமிளைத்துவிடும் என்கின்றனர். ஜலராசி லக்கினமாகவாகி சுபக்கிரஹங்களுடன் கூடியிருக்குமானுல் சரீரம் பெருத்திருக்கும் என்கின்றனர். லக்கினுதிபன் ஜலக்கிரஹமாக வாகி பலம் பெற்று ஸௌம்யக்கிரஹத்துடன் கூடியிருந்தால் சரீரபுஷ்டியை யுபதேசிக்கின்றனர். லக்கினுதிபன் ஜலராசியிலிருந்து, சுபக்கிரஹத்தின் சேர்க்கை பெற்று

✻ கன்னி, மிதுனம், சிம்ஹம் இவை சுஷ்கராசிகள் எனப்படும்.

ஜலக்கிரஹத்தால்பார்க்கப்பட்டாலும்,லக்கினம் சுபக்கிரஹத்தின் ராசியாகவானாலும், லக்கினாதிபதியினால் அடையப்பட்ட நவாம்ச பதி * ஜலராசியிலிருந்தாலும் சரீரபுஷ்டியுண்டாகும். சுபக்கிரஹத்தின் ராசி லக்கினமாகவாகி பாபக்கிரஹங்களின் பார்வை இல்லாதிருக்குமானாலும் முற்கூறியபடியே சரீரபுஷ்டி யுண்டாகும். லக்கினத்தில் குருவிருந்தாலும், லக்கினம் குருவினால் பார்க்கப்பட்டாலும், ஜலராசியை யடைந்த கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், ஜலராசி லக்கினமாக வானாலும் சரீரபுஷ்டி யுண்டாகும். லக்கினத்தில் சுபக்கிரஹங்களிருந்து, மற்ற சுபக்கிரஹங்களால் அது பார்க்கப்பட்டால் சரீரம் மிகவும் பெருத்திருக்கும் என்கின்றனர். லக்கினத்தில் சனியோ, ராஹுவோ இருந்தால் பிசாச பாதையை உபதேசிக்கின்றனர்.

लग्ने रविर्भूमिसुतेन दृष्टः श्वासं क्षयं विद्रधिगुल्मभाजम् । भौमे विलग्ने शनिसूर्यदृष्टे खड्गादिभिः पीडितदेहभाक्स्यात् ॥ केतौ विलग्ने बहुपापदृष्टे पिशाचचोरैर्भवति ध्रुवं भीः। लग्ने चरे तद्भवनेश्वरे वा चरस्थिते संचरति प्रजातः ॥ संचारशीलश्चरभे विलग्ने लग्नांशके चैवमुदाहरन्ति । विदेशभाग्यं चरभे विलग्ने चरे तदीशे चरखेटदृष्टे ॥ स्थिरे स्वदेशे बहुभाग्ययुक्तः स्थिरग्रहैर्भूरिधनान्वितस्स्यात् । मिश्रैः ग्रहैस्संयुतभाग्यकीर्तिर्नानाप्रदेशे प्रचरन्कुमार्गी ॥ लग्नेश्वरे वीर्ययुते स्वतुङ्गे गंभीरगामी पुरुषोऽन्यथा स्यात् । हीने तदीशे सजडश्शुभैस्तु दृष्टे युते वा न तथाविधं तत् ॥ लग्ने शुभे शोभनदृष्टियुक्ते बाल्यात्सुखं तन्नहि पापयोगात् । दुःखी भवेत्पापबहुत्वयोगे लग्ने तु बाल्यान्मरणान्तकालः॥ वर्गोत्तमांशे यदि लग्ननाथे स्वोच्चांशके वा स्वसुहृद्दृकाणे । शुभान्विते वा शुभदृष्टियाते नरो भवेदामरणान्तसौख्यः ॥

லக்கினத்தில் ஸூரியனிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால், ச்வாஸம் (பெருமூச்சு விடுதல்) க்ஷயம், வித்ரதி, (பிளவை) வயிற்றுவலி என்ற ரோகம் இவையுண்டாகும். லக்கினத்தில் செவ்வாயிருந்து சனி, ஸூர்யன் இவர்களால் பார்க்கப்பட்டால்

* கடகம், மகரம், மீனம், இவைபூர்ண ஜலராசி யென்றும், விருஷபம், தனுஸ், கும்பம், இவைபாதி ஜலராசி யென்றும், துலாம், விருச்சிகம், மீனம் இவைகால் ஜலராசி யென்றும் சொல்லப்படும்.

கத்தி முதலியவற்றால் பீடிக்கப்பட்ட தேஹமுள்ளவனாக விருப்பான். லக்கினத்தில் கேது இருந்து அவன் அனேகம் பாபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் பிசாசம், திருடன், இவர்களால் நிஸ்சயமாய் பயமுண்டாகும். சரராசி லக்கினமானாலும், லக்கினாதிபன் சரராசியிலிருந்தாலும் ஜாதகன் அலைந்து திரிபவனாக வாவான். சரராசி லக்கினமாகவானாலும், நவாம்ச லக்கினம் சரராசியாகவானாலும் ஜாதகன் அலைந்து திரிபவனாக விருப்பான் என்றே கூறுகின்றனர். சரராசி லக்கினமாகவாகி, லக்கினாதிபனும் சரராசியிலிருந்து சரக்கிரஹத்தால் பார்க்கவும் பட்டால் வேறு தேசம் சென்று பாக்கியத்தைப் பெறுவான். ஸ்திரராசி லக்கினமாக வானால் தனது தேசத்திலேயே அதிகம் பாக்கியம் பெற்றவனாகவாவான். ஸ்திரராசி லக்கினமாகவாகி அதில் ஸ்திரக்கிரஹங்களிருக்குமானால் அதிகம் தனமுள்ளவனாக விருப்பான். ஸ்திரராசி லக்கினமாகவாகி அதில் சரக்கிரஹம், ஸ்திரக்கிரஹம் இரண்டும் கலந்திருக்குமானால் பாக்கியம், கீர்த்தி இவைகளுடன் கூடியவனாகவும், பலவிடங்களில் சஞ்சரிப்பவனாகவும், கெட்ட பாதையில் சஞ்சரிப்பவனாகவும் (நன்னடத்தை யற்றவனாகவும்) இருப்பான். லக்கினாதிபன் பலம்பெற்று தனது உச்சவீட்டிலிருந்தால் கம்பீரமாய் நடப்பவனாக விருப்பான். லக்கினாதிபன் பலமற்றவனாயிருந்தால் ஜாதகன் முற்கூறியதற்கு மாறாகவிருப்பதுடன் ஜடனாகவு மிருப்பான். ஆனால் லக்கினாதிபன் சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தால் ஜடனாக விருக்கமாட்டான். லக்கினத்தில் சுபக்கிரஹமிருந்து மற்றொரு சுபக்கிரஹத்தின் பார்வை பெற்றிருந்தால் பால்யம் முதல் ஸுகியாக விருப்பான். மேற்கூறிய யோகத்தில் பாபஸம்பந்த மிருக்குமானால் பால்யம் முதல் சுகியாக வாகமாட்டான். லக்கினத்தில் அனேகம் பாபக்கிரஹங்களிருந்தால் பால்யம் முதல் மாணம் வரை துக்கியாகவே இருப்பான். லக்கினாதிபன் வர்க்கோத்தமாம்சத்திலோ, தனது உச்ச நவாம்சத்திலோ, தனது ஸுஹிருத்தின் திரேஷ்காணத்திலோ, இருந்து சுபருடன் சேர்க்கையையோ பார்வையையோ பெற்றிருந்தால் மாணகாலம்வரை ஸௌக்கியம் பெற்றவனாக விருப்பான்.

लग्नान्त्यलाभे शुभखेचरेन्द्रे लग्नेश्वरे केन्द्रगते बलाढ्ये। सिंहासनांशे यदि देवपूज्ये जातो भवेदादिममध्यसौख्यः॥ लग्नार्थसोत्थे शुभदृष्टियोगे लग्नेश्वरे शोभनखेचरेन्द्रे। पारातांशे यदि दानवेज्यो जातो भवेदादिममध्यसौख्यः॥ लग्नार्थसोत्थे शुभदृष्टियोगे लग्नेश्वरे शोभनखेचरेन्द्रे। पारावतांशे यदि दानवेज्ये स्त्रीपुत्रमित्रार्थसुखान्वितोऽयम्॥ देवलोकांशगे शुक्रे लग्नेशे गोपुरांशगे। लग्ने शुभग्रहैर्दृष्टे मध्यान्ते सुखमाप्नुयात्॥ लग्ने शुभे धने पापे केन्द्रे पापसमन्विते। लग्नेश्वरे तूत्तमांशे चादौ दुःखं ततः सुखम्॥ लग्ने पापे धने सौम्ये भाग्ये कश्चिच्छुभग्रहः। लग्नेशे देवलोकस्थे बाल्ये सौख्यमतोऽन्यथा॥ लग्नेश्वरे कर्मगते दिनेशे लग्नान्विते शोभनखेचरेन्द्रैः। योगे प्रदृष्टे तनुपे स्वतुङ्गे सत्कीर्तिमाहुर्मुनयोऽत्र तज्ञाः॥ पापे विलग्नेऽशपतौ सराहौ केन्द्रस्थिते कर्मणि पापखेटे। नीचग्रहे लग्नगतेऽर्कदृष्टे दुःष्कीर्तियुक्तस्स भवेत्तदानीम्॥ आरोहवीर्ये तु विलग्ननाथे भाग्याधिपे तादृशवीर्ययुक्ते। विख्यातकीर्तिप्रभवो नरस्तु शुभग्रहेणापि समन्विते स्यात्। आदौ वयसि पूर्वार्द्धे सौख्यं लग्ने भृगोस्सुते। दुःखं तु परभागे च बंधौ पापे सुते तथा॥

ஜன்மலக்கினம், 12, 11 மிடங்கள் இவற்றில் சுபக்கிரஹங்களும், கேந்திரத்தில் பலம்பெற்ற லக்கிஞதிபதியும், ஸிம்ஹாஸனம்சத்தில் குருவுமிருக்கப் பிறந்தவன் அவனது ஆயுட்காலத்தில் ஆதியிலும், மத்தியிலும் ஸௌக்கியம் பெற்றவஞக விருப்பான். லக்கினம், 2 மிடம், 3 மிடம் இவற்றிற்கு சுபக்கிரஹங்களின் பார்வையும், லக்கிஞதிபதி சுபக்கிரஹமாகவும், பாராவதம் என்ற அம்சத்தில் சுபக்கிரஹமுமிருக்கப் பிறந்தவனும் அவனது ஆயுட்காலத்தில் ஆதியிலும், மத்தியிலும் ஸௌக்கியம் பெற்றவஞக விருப்பான். லக்கிஞதிபன் பலசாலியாகவும், குரு 1, 4, 7, 10 மிடங்களிலு மிருக்கப் பிறந்தவன் பால்யத்தில் ஸுகியாகவிருப்பான். லக்கிஞதிபன் பாராவதம் என்ற அம்சத்திலிருந்தால் ஸ்திரீ, பிள்ளை, மித்திரன் பொருள் இவர்கள் மூலம் கிடைத்த ஸுகமுள்ளவஞக விருப்பான். சுக்கிரன் தேவலோகம் என்ற அம்சத்திலும், லக்கிஞதிபன் கோபுரம் என்ற அம்சத்திலுமிருந்து லக்கினம் சுபக்கிரஹங்களால் பார்க்கப்படுமாஞல் நடுவயது கடைவயதுகளில் சுகம் பெற்றவஞக வாவான். லக்கினத்தில் சுபக்கிரஹமும், 2 மிடத்தில் பாபக்கிரஹமும் 1, 4, 7,

10 மிடங்களிலும் பாபக்கிரஹமு மிருந்து லக்கினாதிபன் வர்க்கோத்தமாம்சத்திலு மிருந்தால் முதலில் துக்கமும், பின்வயதில் ஸுகமு முண்டாகும். லக்கினத்தில் பாபக்கிரஹமும், 2, 9 மிடங்களில் சுபக்கிரஹமு மிருந்து லக்கினாதிபன் தேவலோகம் என்ற அம்சத்திலிருந்தால் பால்யத்தில் ஸௌக்கியமும், பிறகு கஷ்டமு முண்டாகும். லக்கினாதிபன் 10 மிடத்திலும், ஸூரியன் லக்கினத்திலுமிருந்து சுபக்கிரஹங்களின் சேர்க்கையையோ, பார்வையையோ பெற்றாலும், அல்லது லக்கினாதிபன் தனது உச்சவீட்டிலிருந்தாலும் நல்ல கீர்த்தியுண்டாகுமென்று சோதிடமறிந்த மஹரிஷிகள் கூறுகின்றனர். பாபக்கிரஹம் லக்கினத்திலும், நவாம்சபதி ராஹுவுடன்கூடி 1, 4, 7, 10டமிங்களிலும், 10 மிடத்தில் பாபக்கிரஹமு மிருந்தாலும், நீசமானகிரஹம் லக்கினத்தையடைந்து ஸூரியனால் பார்க்கப்பட்டாலும் அச்சமயம் ஜனித்தவன் அபகீர்த்தியுள்ளவனாக விருப்பான். லக்கினாதிபன் பாக்கியாதிபன் இவர்கள் நீசராசியினின்று முச்சராசிக்குப் போகின்றவர்களா யிருந்தால் உலகப்பிரஸித்தனாக விருப்பான். லக்கினாதிபன், பாக்கியாதிபன் இவர்களுக்கு சுபக்கிரஹயோகமிருந்தாலும் முற்கூறிய பலனுண்டாகும். சுக்கிரன் லக்கினத்தின் முற்பாதியிலிருந்தால் ஜாதகனுடைய ஆயுட்காலத்தில் முதல் பருவத்தில் ஸௌக்கியமுண்டாகும். பின்பாகத்திலோ துக்கமுண்டாகும். 4, 5 மிடங்களில் பாபக்கிரஹங்களிருந்தாலும் துக்கமுண்டாகும்.

लग्नाधिपे शुभयुते यदि तुङ्गभागे केन्द्रत्रिकोणसहिते शुभदृष्टियुक्ते ! कर्माधिपेन सहिते यदि वा स्वगेहे सद्भाग्यकीर्तिधनधान्यचिरायुरेति ॥ लग्नाधिपोऽतिबलवानशुभैरदृष्टः केन्द्रस्थितः शुभखगैरवलोक्यमानः । मृत्युं विधूय विदधाति सुदीर्घमायुः सार्द्धं गुणैर्बहुभिरूर्जितया च लक्ष्म्या ॥ केन्द्रत्रिकोणनिधनेषु न यस्य पापा लग्नाधिपः सुरगुरुश्च चतुष्टयस्थौ । भुक्त्वा सुखानि विविधानि सुपुण्यकर्मा जीवेच्च वत्सरशतं सविमुक्तरोगः। लग्नेश्वरादतिबली निधनेश्वरोऽसौ केन्द्रस्थितैर्निधनरिःफगतैश्च पापैः । तस्यायुरल्पमथवा यदि मध्यमायुरुत्साहसंकटवशात्परमायुरेपि ॥ एकांशकस्था बुधशुक्रमन्दा धर्मेस्थिता लग्नमुपागता वा । षष्ठाष्टमे वा हिमगुश्च यस्य सहस्रवर्षद्वयमस्य जंतोः । जीवांशकस्थास्सकला ग्रहेन्द्राः केन्द्रा-

श्रिता धर्मधनाश्रिता वा । जातो नरः प्रव्रजितः सबाल्ये युग्मान्तमायुर्बहुशास्त्रकर्ता । मन्दांशकस्था रविभौमजीवा कर्माश्रिता धर्मयुता बलाढ्याः। राशेस्समाप्तौ हिमगौ विलग्ने युग्मान्तमायुः श्रियमादधाति । धर्मेश्वरे धर्मगते च यस्य भौमांशकस्थे हिमगौ च दृष्टे । मुनीश्वरोऽयं मुनियोगजातः शास्त्रार्थकर्ता युगमादधाति । लग्नेशे धनराशिस्थे लग्नेशस्थांशगेऽपि वा । तथास्थिते लाभनाथे विंशद्वर्षात्परं सुखम् । लग्नेशस्थांशनाथे तु केन्द्रकोणोच्चसंयुते । लाभेशे वा तथा युक्ते त्रिंशद्वर्षात्परं सुखम्॥ लग्नेशे शुभराशिस्थे शुभग्रहनिरीक्षिते । गोपुरांशगते वापि षोडशाब्दात्परं सुखम् ॥ लग्नेशे शुभराशिस्थे शुभग्रहनिरीक्षिने । गोपुरांशगते वापि षोडशाब्दात्परं सुखम् ॥ ग्रहयोगेक्षणाभ्यां तु बलाबलवशादपि । लग्नस्यैवं फलं प्रोक्तं श्रीमद्वेङ्कटशर्मणा ॥

லக்கிணுதிபன் சுபக்கிரஹயோகம் பெற்று பரமோச்ச பாகத்திலோ, 1, 4, 7, 10 மிடத்திலோ, 5, 9 மிடத்திலோ இருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், கர்மாதிபனுடன் கூடி தனது வீட்டிலிருந்தாலும் நல்ல பாக்கியம், கீர்த்தி, தனம், தான்யம், நீண்ட ஆயுள், இவற்றை அடைகிறுன். லக்கிணுதிபன் அதிகம் பலம் பெற்றவனுகவும், அசுபக்கிரஹங்களால் பார்க்கப் படாதவனுகவும், சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டவனுகவும் ஆகி 1, 4, 7, 10 மிடங்களிலிருந்தால் அபமிருத்யுவை விலக்கி, ஸ்திரமான ஸம்பத்துடனும், நற்குணங்களுடனும் கூடின நீண்ட தான ஆயுளைச் செய்வான். எவனுடைய ஜாதகத்தில் 1, 4, 7, 10 மிடங்களிலும் 1, 5, 9 மிடங்களிலும் 8 மிடத்திலும் பாபக்கிரஹங்களில்லையோ, லக்கிணுதிபனும் குருவும் 1, 4, 7, 10 மிடங்களி லிருக்கின்றனரோ அந்த ஜாதகன் பலவிதமான ஸுகங்களை அனுபவிப்பவனுகவும், நல்ல புண்யகர்மங்களைச் செய்பவனுகவும், ரோகமற்றவனுகவும் 100 வருஷகாலம் ஜீவிப்பான். லக்கிணுதிபனைக் காட்டிலும் 8 மிடத்ததிபன் அதிகம் பலம் பெற்றவனுயிருந்து, பாபக்கிரஹங்கள் 1, 4, 7, 10 மிடத்திலோ இருந்தால் அத்தகைய ஜாதகனுடைய ஆயுளானது சுவல்பமாகவே இருக்கும். அல்லது மத்யமாயுளுள்ளவனுக விருப்பான். தன் முயர்ச்சி, கஷ்டம் இவைகளால் பரமாயுளை அடைவான். புதன், சுக்கிரன், சனி இவர்கள் ஒரேநவாம்சத்

திலோ, 9 மிடத்திலோ, லக்கினத்திலோ இருந்தாலும், சந்திரன் 6, 8, மிடங்களிலிருந்தாலும் 2000 வருஷகாலம் ஜீவித்திருப்பான். எல்லாக்கிரஹங்களும் குருவின் அம்சத்திலோ 1,4,7,10 மிடத்திலோ, 9, மிடத்திலோ இருந்தால் அச்சமயம் பிறந்தமனிதன் பால்யத்தில் ஸன்யாஸம் செய்துகொள்பவனுகவும், 51-வயதுள்ளவனுகவும், அநேகம் சாஸ்திரகிரந்தங்களைச் செய்பவனுகவுமிருப்பான். சூரியன், செவ்வாய், குரு, இவர்கள் சனியின் அம்சத்தில் 10, 9 மிடங்களில் பலம்பெற்றிருந்து, ராசியின் அந்திய பாகம் லக்கினமாகவாகி அதில் சந்திரனு மிருந்தால் - இந்த யோகத்தில் பிறந்தவனுக்கு 51 வயது ஆயுளையும், ஸம்பத்தையுமுண்டுபண்ணுகின்றது. எவனுடைய ஜாதகத்தில் 9 மிடத்ததிபன் 9 மிடத்திலும், செவ்வாயின் அம்சத்தில் சந்திரனுமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்படுவதுடன் முனீச்வர(ஸன்யாஸ)யோகமும் அமைந்திருக்குமோ அந்த ஜாதகன் சாஸ்திரங்களிலுபதேசிக்கப்பட்டவைகளை அனுஷ்டிப்பவனுகவும், 31வயது ஜீவிப்பவனுகவு மிருப்பான். லக்கினுதிபதியோ, லக்கினுதிபதியிருக்கும் அம்சத்தின் பதியோ, 11மிடத்ததிபனே 2மிடத்திலிருந்தால் 20 வயதிற்குப் பிறகு சுகமுண்டாகும். லக்கினுதிபனிருக்கும் அம்சத்தின் நாதனே, 11 மிடத்ததிபனே 1, 4, 7, 10 மிடத்திலோ, உச்சராசியிலோ இருந்தால் 30 வயதிற்குப் பிறகு ஸுகமுண்டாகும். லக்கினுதிபன் சுபராசியிலிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், கோபுரம் என்ற அம்சத்தி லிருந்தாலும் 16 வயதிற்குப் பிறகு சுகமுண்டாகும். லக்கினத்திற்கு கிரஹத்தின் சேர்க்கை, பார்வை இவற்றைக்கொண்டும், கிரஹங்களின் பலம், பலக்குறைவு இவற்றைக்கொண்டும் ஏற்படுகின்ற முதல் பாவபலனுனது ஸ்ரீ வெங்கடசர்மா என்ற என்னுல் இவ்விதம் கூறப்பட்டது.

ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய தனுபாவ பலன் முற்றிற்று.

குறிப்பு—இந்த ஜாதக த்வாதசபாவபல நிர்ணயத்தில் ஆங்காங்கு தசவர்க்கமூலம் பலன் எழுதப்படுவதால் அந்த தசவர்க்கம் இன்னதென்பதை அறிவதற்கு வேண்டி ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லியிருப்பதன் மொழிபெயர்ப்பை மட்டும் இங்கு

எழுதுகிறேம். அதாவது:—செவ்வாய்,சுக்கிரன்,புதன்,சந்திரன், சூரியன், புதன்,சுக்கிரன், செவ்வாய்,குரு, சனி, சனி, குரு இவர்கள் முறையே மேஷம் முதல் மீனம்முடியவுள்ள ராசிகளுக்கும் மேஷாதிகளின் அம்சங்களுக்கும் அதிபதிகளாவர். மேஷாதியான ராசிஸமூஹமானது காலபுருஷனுக்கு முறையே தலை, முகம், கழுத்து,மார்பு, ஹிருதயம்,வயிறு, இடுப்பு, மூத்திராசயம், ஆண் பெண்குறி, அவ்விதமே தொடை, இரண்டு முழந்தாள், கணுக்கால்,பாதம் இவைகளாகவாகின்றது. இவற்றுள் எது பாபருடன் கூடியதாகிறதோ அது நாசத்தை யடையும். மாறியிருக்கும் இரண்டு மீன்போல மீனராசியும், குதிரையினது காலுள்ள மனுஷ்யனுக தனுர்ராசியும், கதை வீணை இவற்றையுடைய ஸ்திரீ புருஷரூபமாக மிதுனராசியும், கையில் நெருப்பு பயிர் இவைகளையுடையவளும், ஓடத்திலிருப்பவளுமான கன்னிகையாக கன்னியா ராசியும், எடைக்கோல் (தராசு) உள்ள வியாபாரியாக துலா ராசியும், இடைக்கு மேல் மானுருவமுள்ளதாகவும் அதற்குக்கீழ் மகரம் என்ற ஓர்வகை மீனுருவமு முள்ளதாகவும் மகர ராசியும், ஜலமெடுப்பதிலாவல் கொண்ட குடமுள்ள புருஷனுக கும்பராசியும் மீதமுள்ள ராசிகள் தனது பெயருக்குத் தகுதியான ரூபமுள்ளதாகவும் ஆகும். அதாவது: மேஷம் ஆட்டினுருவமுள்ளதாகவும், விருஷபம் காளையுருவ முள்ளதாகவும், கடகம் நண்டினுருவ முள்ளதாகவும், விருச்சிகம் தேளினுருவ முள்ளதாகவும் இருக்கும் என்பதாம். மேலும் இது விஷயமாய் நமது பிருஹத்ஜாதகம் 23 முதல் 29 முடியவுள்ள பக்கங்களைப் பார்க்கவும்.

ராசியை 3 பங்காகப் பிரிப்பதை திரேஷ்காண மென்கின்றனர். அந்த[illegible] திரேஷ்காணங்களுக்கு 1, 5, 9 மிடத்ததிபர் முறையே அதிபதியா[illegible]வர். ராசியை இரண்டாகப் பிரிப்பது ஹோரையெனப்படும். இ[illegible]ரட்டைப்பட்ட ராசியில் முதல் ஹோரைக்கு சந்திரனும், 2-வ[illegible]து ஹோரைக்குச் சூரியனும், ஒற்றைப் பட்ட ராசியில் முதல் [illegible] ஹோரைக்குச் சூரியனும், 2-வது ஹோரைக்குச் சந்திரனும் அ[illegible]திபர்களாவர். சரராசியிலுள்ள நவாம்சங்களுக்கு அந்த சராம்[illegible]ாதிபர் தொடங்கி முறையே 9 கிரஹங்கள் அதிபர்

களாவர். ஸ்திரராசியிலுள்ள நவாம்சங்களுக்கு அந்த ஸ்திரராசியின் 9 மிடத்ததிபர் தொடங்கிமுறையே 9 கிரஹங்கள் அதிபர்களாவர். உபய ராசியிலுள்ள நவாம்சங்களுக்கு அந்த உபயராசியின் 5 மிடத்ததிபர் தொடங்கி 9 கிரஹங்கள் அதிபர்களாவர். என சாஸ்திரார்த்தமறிந்த பெரியோர் சொல்லுகின்றனர். ஒவ்வொரு லக்கினத்தையும் 12 பங்காகப்பிரிப்பது துவாதசாம்சமெனப்படும். அந்தந்த ராசியதிபரே அந்தந்த துவாதசாம்சாதிபராவர். அந்தந்த ராசியதிபன் தொடங்கிக் காண்பது அந்தந்த வர்க்காதிபதியாகிறான். ராசியை 30 பங்காகப்பிரிப்பது த்ரிம்சாம்சமாகும். ஒன்றைப்பட்டராசிகளிலுள்ள த்ரிம்சாம்சங்களுக்கு முறையே செவ்வாய் சனி, குரு, புதன், சுக்கிரன் இவர்கள் 5, 5, 8, 7, 5 இந்த பாகங்களுக்கு அதிபர்களாவர். இவ்விதமே இரட்டைப்பட்டராசிகளிலுள்ள திரிம்சாம்சங்களுக்கு முறையே சுக்கிரன், புதன், குரு, சனி, செவ்வாய் இவர்கள் 5, 7, 8, 5, 5 இந்த பாகங்களுக்கு அதிபர்களாவர். என சோதிடசாஸ்திர மறிந்த பெரியோர் கூறுகின்றனர். ராசியை 7 பங்காகப் பிரிப்பது ஸப்தமாம்சம் எனப்படும். இவற்றுள் ஒற்றைப்பட்டராசியில்முறையே அந்த ராசியதிபர் தொடங்கி 7 அம்சத்திற்கும் 7 கிரகங்கள் அதிபர்களாவர், இரட்டைப்பட்ட ராசியில் அந்த இரட்டைப்பட்ட ராசியினின்றும் 7-வது ராசியதிபர் தொடங்கி முறையே 7 கிரஹங்கள் அந்த ஸப்தமாம்சாதிபர்களாவர். ராசியை 10 பங்காகப் பிரிப்பது தசாம்சம் எனப்படும். ஒற்றைப்பட்ட ராசிகளில் அந்த ராசியதிபர் தொடங்கி முறையே 10 கிரஹங்கள் அந்தப் பத்து அம்சங்களுக்கும் அதிபர்களாவர். இரட்டைப்பட்ட ராசிகளில் அந்த இரட்டைப்பட்ட ராசியினின்றும் ஒன்பதாவது ராசிபதிபர் தொடங்கி முறையே பத்து கிரஹங்கள் அந்தப்பத்து அம்சங்களுக்கும் அதிபர்களாவர். ராசியை 16 பங்காகப் பிரிப்பது கலாம்சம் (ஷோடசாம்சம்) எனப்படும். அவற்றில் சரராசியில் மேஷம் முதலும், ஸ்திரராசியில் ஸிம்ஹம் முதலும், உபய ராசியில் தனுஸ் முதலும் ஷோடசாம்சங்களேற்படுகின்றன. இவற்றில் ஒற்றைப்பட்ட ராசிகளில் முறையே 12 அம்சங்களுக்கு அந்த ராசியதிபர் தொடங்கி 12 ராசியதிபர்களும், மீத

முள்ள 4 அம்சங்களுக்கு சதுர்முகன், விஷ்ணு, ஹரன், தினே சன் இவர்களும் அதிபர்களாவர். இரட்டைப்பட்ட ராசிகளில் முற்கூறியதற்கு நேர்மாறுகவாகும். அதாவது: ஆதிமுதல் 4 அம்சங்களுக்கு தினேசன், ஹரன், விஷ்ணு, சதுர்முகன் இவர்க ளும், மீதமுள்ள 12 அம்சங்களுக்கு அந்தந்த ராசியதிபர்களும் அதிபதிகளாவர் என்றும் ராச்யதிபர்களைத் தலை கீழாகக் கண்டு கொள்ள வேண்டுமென்பதாம். ராசியை 60-வது பங்காகப்பிரிப் பது ஷஷ்டியம்ச மெனப்படும். அவற்றுள் ஒற்றைப்பட்ட ராசி களில் முறையே

| | | | |
|---|---|---|---|
| 1. | கோராம்சம். | 24. | திகம்பராம்சம். |
| 2. | ராக்ஷஸாம்சம். | 25. | தேவாம்சம். |
| 3. | தேவபாகாம்சம். | 26. | ஆர்த்ராம்சம். |
| 4. | குபேராம்சம். | 27. | கலிநாசாம்சம். |
| 5. | ரக்ஷோகணும்சம். | 28. | க்ஷிதீஸ்வராம்சம். |
| 6. | கின்னராம்சம். | 29. | கமலாகராம்சம். |
| 7. | ப்ரஷ்டாம்சம். | 30. | மந்தாத்மஜாம்சம். |
| 8. | குலக்னும்சம். | 31. | மிருத்யு அம்சம். |
| 9. | காளாம்சம். (விஷம்) | 32. | காலாம்சம். |
| 10. | அக்னி அம்சம். | 33. | தாவாக்னி அம்சம். |
| 11. | மாயாம்சம். | 34. | கோராம்சம். |
| 12. | ப்ரேதபுரீசாம்சம். | 35. | மயாம்சம். (பயாம்சம்) |
| 13. | அபாம்பதி அம்சம். | 36. | கண்டகாம்சம். |
| 14. | தேவகணேசாம்சம். | 37. | சுதாம்சம். |
| 15. | காலாம்சம். | 38. | அமிருதாம்சம். |
| 16. | அஹியம்சம். | 39. | பரிபூர்ண சந்திராம்சம். |
| 17. | அமிருதாம்சு அம்சம். | 40. | விஷமப்ரதக்தாம்சம். |
| 18. | சந்திராம்சம். | 41. | கலிநாசாம்சம்.(கலியம்சம்) |
| 19. | ம்ருத்வம்சம். | 42. | முக்கியாம்சம். (நாசாம்சம்) |
| 20. | கோமளாம்சம். | 43. | வம்சக்ஷயாம்சம். |
| 21. | பத்மநாபாம்சம். | 44. | உத்பாதகாம்சம். |
| 22. | லக்ஷ்மீசாம்சம். | 45. | காலரூபாம்சம். |
| 23. | வாகீசாம்சம். | 46. | ஸௌம்யாம்சம். |

47. மிருத்வம்சம்.
48. சுசீதளாம்சம்.
49. தம்ஷ்ட்ராகராளாம்சம்.
50. இந்துமுகாம்சம்,
51. ப்ரவீணும்சம்.
52. காலாக்னியம்சம்.
53. தண்டாயுதாம்சம்.
54. நிர்மலாம்சம்.
55. சுபாம்சம்.
56. அசுபாம்சம்.
57. அதிசீதளாம்சம்.
58. சுதாபயோதி அம்சம்.
59. ப்ரமணும்சம்.
60. இந்துரேகாம்சம்.

என்று 60 அம்சங்களும், அவர்களே அந்த அறுபது அம்சங்களின் அதிபதிகளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இரட்டைப்பட்ட ராசிகளில் இதுவரை சொல்லியதற்கு நேர்மாருகவே அம்சபரிகல்பனையும் அதன் அதிபதிகளும் ஏற்படுகின்றன. அதாவது:—இரட்டைப்பட்ட ராசியில்

1. இந்துரேகாம்சம்.
2. ப்ரமணும்சம்.
3. சுதாபயோதி அம்சம்.
4. அதிசீதளாம்சம்.
5. அசுபாம்சம்.
6. சுபாம்சம்.

என்றுமான முறையையொட்டி அந்தந்த அம்சங்களையும் அதன் அதிபதிகளையும் ஒற்றைப்பட்டராசிக்குச் சொல்லியதைத் திருப்பித் தலைகீழாகக் கண்டுகொள்ளவேண்டும் என்பதாம்

சுபஷஷ்டியம்சமானது பொருந்தியிருந்தால் சோபனமான பலப்ராப்தி யுண்டாகும். ஷஷ்டியம்சத்திலிருக்கின்ற குரூரக் கிரஹங்கள் யாவும் நாசத்தைத்தரும். தனது உச்சவீடு, மூலத்திரிகோணவீடு சொந்தவீடு, கேந்திரவீடு, உத்தமமான அம்சம், மித்திரன்வீடு திரிகோணவீடு, ஏழுவர்க்கத்திலுமுள்ள சொந்த நவாம்சம், தனது* அதிமித்ராம்சம் இவற்றிலுள்ள கிரஹம் பரிபூர்ணபலம் பெற்றவைகளாகும். பூர்வாசாரியர்களான மஹர்ஷிகளாற் சொல்லப்பட்ட தசவர்க்கங்களும் ஒத்துவருமானுல் பாரிஜாதம் முதலிய பெயர்கள் ஏற்படுகின்றன. ஆனுல் 6, 8, 12 மிடங்களி லிருக்கின்றவைகளும், நீசமாகவும், அஸ்தங்கதமாகவு முள்ள கிரஹங்களும் பலமற்றவைகளாகும். அவை

---

* இதுவிஷயமாய் நமது பிருஹத்ஜாதமொழிபெயர்ப்பு 105-வது பக்கம் பார்க்க.

மரணவஸ்தையை யடைந்தவைகளாகவாகுமானல் பாரிஜாதம் முதலியயோகத்தை நாசஞ்செய்கின்றன என்பது சிலர்மதம். இது அவ்வளவு பொருத்த முள்ளதன்று. முக்கியமான பக்ஷம் யாதெனில் கூறுவாம் "தனது திரிம்சாம்சத்திலோ, தனது நவாம்சத்திலோ, சொந்த வீட்டிலோ" என்பனவற்றுற் கூறிய முறையே சரியானதாகும் என்பதாம். முற்கூறிய 10 வர்க்கங் களுள் மூன்றுவர்க்கம் ஒத்துவருமானல் அது உத்தமவர்க்கம் எனப்படும். (4) வர்க்கம் ஒத்துவருமானல் அது கோபுரம் எனப்படும். (5) வர்க்கம் ஒத்துவருமானல் அது ஸிம்ஹாஸனம் எனப்படும். (2) வர்க்கம் ஒத்துவருமானல் அதுபாரிஜாதம் எனப் படும். (6) வர்க்கம் ஒத்துவருமானல் அது பாராவதாம்சம் எனப் படும். (7) வர்க்கம் ஒத்துவருமானல் அது தேவலோகாம்சம் எனப்படும். (8) வர்க்கம் ஒத்துவருமானலும் அதுவும் தேவலோ காம்சம் என்றே சொல்லப்படும். (9) வர்க்கம் ஒத்துவருமானல் அது ஐராவதாம்சம் எனப்படும். இவற்றின் மூலமுண்டாகும் பலன் வெவ்வேறுகவே ஏற்படும். (10) வர்க்கம் ஒத்துவருமானல் அதை வைசேஷிகாம்சம் என்கின்றனர். ஐராவதாம்சத்திற் பிறந் தவன் ஸர்வைஸ்வரியத்துடன் கூடின ஸார்வபௌமனுகிறுன். தேவலோகாம்சத்திற் பிறந்தவன் மஹாதானஞ் செய்கின்ற பூமி பதியான அரசனுகிறுன். பாராவதாம்சத்திற் பிறந்தவன் அம்மானே யண்டிப்பிழைப்பவனுகவும் ஸர்வசாஸ்திரங்களிலும் நிபுணனுகவும் ஆகிறுன். ஸிம்ஹாஸனம்சத்திற் பிறந்தவன் யாவ ராலும் ஸ்துதிக்கப் பெறும் மஹானுன பூமி பதியாகிறுன். கோபுராம்சத்திற் பிறந்தவன் எப்பொழுதுமே தனமுள்ளவனுக வும் எல்லாவித்யைகளிலும் திறமை பெற்றவனுகவும் ஆகிறுன். உத்தமாம்சத்திற் பிறந்தவனுக்கு எல்லாஸம்பத்து முண்டு. பாரி ஜாதாம்சத்திற் பிறந்தவன் தனமுள்ளவனுகிறுன். சொந்த நவாம் சத்திற் பிறந்தவன் புத்திசாலியாயும், நல்லயசஸ்வியாயும் எல்லா ஸவுக்கியத்துடன் கூடினவனுயு மாகிறுன். ஒற்றைப்பட்ட ராசி களில் சூரியாதிகிரஹங்களுக்கு முறையே பாலன் முதலிய அவஸ் தைகளேற்படுகின்றன. இரட்டைப்பட்டராசிகளில் இதற்கு நேர்மாறுக ஏற்படும். அதாவது: (1) பாலன், (2) குமாரன்,

(3) யுவா, (4) வ்ருத்தன், (5) ம்ருதன் என 5 அவஸ்தைகளாம். சூரியன் முதலிய கிரஹங்கள் அவரவரின் தசாபுக்திகாலத்தில் தமது பாலாதி அவஸ்தைக்குத் தக்கபடியே பலனைத் தருகின்றனர்.

மேலும்—சூரியன் முதலிய கிரஹங்களின் பலாபலமறிந்தே அதன் மூலம் பாவபலன் காணவேண்டுமென இந்தச் சாஸ்திரத்திற் சொல்லப்படுவதால் கிரஹங்களின் பலம் இன்னதென்பதையும் பலக்குறைவு இன்னதென்பதையும் அறியும் விஷயமாக ஹோரிகசந்திரிகை என்ற சோதிடசாஸ்திரத்திலுள்ள சுலோகங்களை எழுதி அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதுகிறோம். பொதுவாய் கிரஹங்களுக்கு (1)ஸ்தானபலம், (2)திக்பலம் (3) காலபலம், (4) சேஷ்டாபலம், (5) நிஸர்க்கபலம், (6) திருக் (வீக்ஷண) பலம் என ஆறுவிதமான பலங்களுண்டு. அவற்றுள்

### 1-வது ஸ்தானபலமாவது.

मूलकोणोच्चमित्रर्क्षवर्गोत्तमनवांशका: ।
बिन्द्वाधिक्यारोहवीर्यवैशेषिकसुभागगा: ।
केन्द्रस्ववर्गगा: खेटास्स्यु: स्थानबलशालिन: ।

(க—ரை) மூலத்திரிகோணவீடு, உச்சவீடு, மித்திரன்வீடு, வர்க்கோத்தம நவாம்சம், அஷ்டகவர்க்கத்தில் அதிகபிந்து (பரல்) உள்ள வீடு, நீசத்தினின்று முச்சத்திற்குப் போகுதல், வைசேஷிக நவாம்சத்தை யடைந்திருத்தல் கேந்திரத்திலிருத்தல், சொந்தவர்க்கத்திலிருத்தல், இவற்றையடைந்த கிரஹம் ஸ்தான பலம் பெற்றகிரஹம் எனப்படும்.

नीचारिपापयुतदृष्टपराजिताश्च दुर्वर्गसन्धिलघुबिन्दु दुरंशगाश्च ।
दुस्थानसंस्थितिगता रविरश्मिलुप्तरूपा: खगा: प्रथमवीर्यविशेषहीना:॥

(க—ரை) நீசராகவோ, பாபர்சேர்க்கை பார்வை இவற்றைப் பெற்றோ, யுத்தத்தில் (1) தோல்வியை யடைந்தோ உள்ளவைகளும் கெட்ட வர்க்கம் (அதாவது: 6, 8, 12 மிடத்திற்குடைய

(1) இது விஷயமான விசேஷத்தை நமது பிருஹத்ஜாதகமொழி பெயர்ப்பு 113வது பக்கத்தில் கண்டு கொள்ளவும்.

வரின் ஷட்வர்க்கம் என்பதாம்) ஸந்தி, குறைந்த பிந்துவுள்ள ராசி, கெட்ட அம்சம் இவற்றை யடைந்தவைகளும், 6, 8, 12 லிருப்பவைகளும், சூரியனில் அஸ்தங்கதமடைந்தவைகளும், ஆனகிரஹங்கள் ஸ்தானபலமற்றவைகளாகவாகும். (எ—று)

2-வது திக்பலமாவது.

प्राच्यां शक्तौ सौम्यजीवौ याम्यायां रविमङ्गळौ ।
मन्दोबली प्रतीच्यांच कौबेर्यां चन्द्रभार्गवौ ॥

(க—ரை) புதன், குரு இவர்கள் கிழக்கிலும் அதாவது: லக்கினத்திலும் தெற்குதிக்கில் அதாவது: 10மிடத்தில் சூரியன் செவ்வாய் இவர்களும், மேற்கில் அதாவது: 7 மிடத்தில் சனியும், வடக்கில் அதவாது: 4 மிடத்தில் சந்திரன் சுக்கிரன் இவர்களும் வலுவுடையவர்கள்.

3-வது காலபலமாவது.

(1) बलिनो रात्रिकाले स्युश्चन्द्रमङ्गळभानुजाः।
सदाबली सोमपुत्रस्त्वन्येऽह्नि बलशालिनः ॥

शुक्लपक्षे शुभाश्शक्ताः कृष्णे पापग्रहास्तथा ।
शरद्वासरहोरेशमासपा बलशालिनः ॥

(க—ரை) சந்திரன், செவ்வாய் சனி இவர்கள் ராத்திரிகாலத்தில் பலம்பெற்றவர்கள். புதன் பகலிரவு எக்காலத்திலுமே பலம் பெற்றவன். மற்றகிரஹங்கள் (சூரியன், குரு சுக்கிரன் இவர்கள்) பகலில் பலம் பெற்றவர்கள். சுபக்கிரஹங்கள் சுக்லபக்ஷத்தில் பலம்பெற்றவராவர். பாபக்கிரஹங்கள் கிருஷ்ணபக்ஷத்தில் பலம் பெற்றவராவர். வர்ஷம், தினம், ஹோரை, மாஸம் இவற்றிற்கு அதிபதியான கிரஹங்கள் காலபலமுள்ளவைகளேயாகும்

4-வது சேஷ்டாபலமாவது.

अयने चोत्तरे शक्तौ सूर्याचन्द्रमसौ, परे ।
कुजादयो वक्रतायां युद्धे चोत्तरसंस्थिताः ॥
समागमे विधोस्सौम्यकरे चेष्टाबलान्विताः ।

(1) இது விஷயமாக நமது பிருஹத்ஜாதகம் 114, 115-வது பக்கங்களைப் பார்க்கவும்.

(க—ரை) சூரியன் சந்திரன் இவர்கள் உத்தராயணத்தில் பலமுள்ளவர்கள். குஜன் முதலிய கிரஹங்கள் வக்கிரசாரத்திலும் *யுத்தத்தில் வடக்குதிக்கிலிருக்கும்பொழுதும் சந்திரஸமாகமத்திலும், சுபமானகிரணமுள்ளபொழுதும் சேஷ்டாபலமுள்ளவர்களாவர். (எ—று)

5-வது நிஸர்க்கபலமாவது.

केतु राहु शनि क्ष्माज बुध गीष्पति भार्गवाः ।
चन्द्रसूर्यौ क्रमेणैव नैसर्गिकबलाधिकाः ॥

(க—ரை) கேது, ராகு, சனி, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் சந்திரன், சூரியன் இவர்கள் முறையே நிஸர்க்கபலமுள்ளவர்களாவர்.

6-வது திருஷ்டிபலமாவது.

बलिनस्सौम्यदृग्युक्ताः पापदृग्रहिता यदि ॥

(க—ரை) சுபரின் பார்வைபெற்று பாபரின் பார்வையில்லாமலுமிருந்தால் அந்தக்கிரஹங்கள் திருக்பலமுள்ளவைகளாகும்.

## சூரியாதி கிரஹங்களின் பலவிவரணம்.

(1) சூரியனுடைய பலவிவரணம்.

सौम्यायने कृष्णपक्षे स्ववारेऽह्नश्च मध्यमे ।
तुङ्गातनुस्ववर्गेषु मित्रादिसुनवांशके ॥
दशमे सिंहराशौ च राश्यारंभे रविर्बली ।

(க—ரை) உத்தராயணத்திலும், கிருஷ்ணபக்ஷத்திலும், பானுவாரத்திலும், நடுப்பகலிலும், உச்சவீடு, லக்கினம் தவிர்த்து மீதமுள்ள சொந்தவர்க்கத்திலும் மித்திராதிநவாம்சத்திலும், 10 மிடத்திலும், சிம்மராசியிலும், ராசியின் ஆரம்பத்திலும் சூரியன் பலம்பெற்றவனாவான்.

(2) சந்திரனுடைய பலவிவரணம்.

याम्यायने पूर्णतायां स्ववारे निशि गोगृहे ।

* கிரஹயுத்தம் முதலியவற்றைப்பற்றி நமது பிருஹத்ஜாதகம் 109, 110, 111, 112-வது பக்கங்களில் காண்க.

चतुर्थे स्वीयमित्रादिशुभवर्गेऽखिलेक्षिते ।
शुभदृष्टावसन्धौ च राश्यन्ते वीर्यवान्विधुः ॥

(க—ரை) தக்ஷிணாயனத்திலும், பூர்ணனாயிருக்கும் பொழுதும் திங்கட்கிழமையிலும், இரவிலும், விருஷபராசியிலும், 4 மிடத்திலும், தனது மித்திராதி சுபவர்க்கத்திலும், எல்லாகிரஹங்களாலும்பார்க்கப்பட்டபொழுதும், சுபரின் பார்வை பெற்றபொழுதும், ஸந்தியில்லாத விடத்திலும், ராசியின் முடிவிலும் சந்திரன் பலமுள்ளவனாவான்.

(3) செவ்வாயின் பலவிவரணம்.

याम्यायनायां वक्रतायां कृष्णपक्षे स्ववासरे ।
शर्वर्यां सौम्यविक्षेपे मेषालिमृगराशिषु ॥
स्वमित्रवर्गयोर्माने लाभे चन्द्रसमागमे ।
तनुसूर्यभभिन्नर्क्षे राश्यादौ च कुजो बली ॥

(க—ரை) தக்ஷிணாயனத்திலும், வக்ரகதியிலும், கிருஷ்ண பக்ஷத்திலும், செவ்வாய்க் கிழமையிலும், இரவிலும், மேஷம், விருச்சிகம், மகரம் இந்தராசிகளிலும், சொந்தவர்க்கத்திலும், மித்திரவர்க்கத்திலும், 10 மிடத்திலும் 11 மிடத்திலும், சந்திரனுடன் சேரும்பொழுதும், லக்கினம் ஸிம்மம், இவற்றைவிட வேறுராசியிலும், ராசியின் ஆதியிலும் செவ்வாய் பலமுள்ளவனாவான். (எ—று)

(4) புதனின் பலவிவரணம்.

सौम्यायने शुक्लपक्षे स्ववारेऽहर्निशं स्त्रियाम् ।
वक्रताविधुसंगत्योः सौम्येषौ राशिमध्यमे ॥
तनौ वर्गे निजे मैत्रे बुधो बलयुतो भवेत् ।

உத்தராயணம், சுக்கிலபக்ஷம், புதவாரம் பகலிரவு காலம், கன்யாராசி, வக்கிர சாரம், சந்திரனுடன் சேருதல், சுபக்கிரஹமிருக்குமிடத்திற்கு 5-மிடம், ராசியின் நடுவு, லக்கினம், சொந்த வர்க்கம், மித்திரக் கிரஹ வர்க்கம், இவ்விடங்களில் புதன் அதிகம் பலம்பெற்றவனாவன்.

(5) குருவின் பலவிவரணம்.

सौम्यायने शुक्लपक्षे स्ववारेऽह्नश्च मध्यमे ।
तुङ्गे स्वमित्रवर्गे च केन्द्रे कार्मुकमीनयोः ॥
वक्रतायां विधोर्योगे पञ्चमे नवमे भवे ।
सौम्यविक्षेपसमये बलिष्ठस्तु बृहस्पतिः ॥

உத்தராயணம், சுக்கிலபக்ஷம், குருவாரம், பகலின் நடுவு, உச்சவீடு, சொந்தவர்க்கம், மித்திரக்கிரஹ வர்க்கம், கேந்திர ஸ்தானம் தனுஸ், மீனம் இவ்விரண்டு ராசிகள், வக்கிரசாரம், சந்திரனுடன் சேர்க்கை, லக்கினத்திற்கு 5-9-11, மிடங்கள், சுபக்கிரஹங்களை விட்டு அல்லது புதனைவிட்டு விலகிய காலம், இவ்விடங்களில் குரு அதிகம் பலமுள்ளவனாயாவன்.

(6) சுக்கிரனின் பலவிவரணம்.

याम्यायने शुक्लपक्षे स्ववारेऽह्नि झषे गवि ।
तौल्यां केन्द्रे सौम्यशरे वक्रतायां समागमे ॥
रवेरग्रे राशिमध्ये सद्वर्गे भार्गवो बली ।

தக்ஷிணாயணம், சுக்கிலபக்ஷம், வெள்ளிக்கிழமை, பகல், மீனம், விருஷபம், துலாம் இந்த ராசிகள், கேந்திரம் என்ற 1-4 7-10 மிடங்கள் சுபக்கிரஹத்திற்கு 5 மிடம், வக்கிரகதி, சந்திரனுடன் சேர்க்கை, சூரியனுக்கு முன் செல்லுதல், ராசியின் நடுவு, சுபக்கிரஹ வர்க்கம், இவ்விடங்களில் சுக்கிரன் அதிக பலமுள்ளவனுவான்.

(7) சனியின் பலவிவரணம்.

याम्यायने कृष्णपक्षे स्ववारे शशिसंगमे ।
रात्रौ कलत्रभवने वक्रत्वेऽष्टमलाभयोः ॥
तुलामकरकुंभेषु सद्वर्गे युधि चोत्तरे ।
अनस्तमयकाले च बलिष्ठो भानुनन्दनः ॥

தக்ஷிணாயனம், கிருஷ்ண பக்ஷம், சனிவாரம், சந்திரனுடன் சேர்க்கை, ராத்திரி, லக்கினத்திற் கேழாமிடம், வக்கிரகதி, 8, 11 மிடங்கள், துலாம், மகரம் கும்பம் இந்த ராசிகள், சுபக்கிரஹங்களின் வர்க்கம் யுத்தத்தில் வடக்கிலிருத்தல் (ஜயம்பெறல்) சூரியனிடம் அஸ்தங்கதமாகாதிருத்தல் ஆகிய இன்னிலைகளில் சனி அதிக பலமுள்ளவனுயாவன்.

(9) ராஹுவின் பலவிவரணம்.

**कर्किकन्यान्त्यगोकुंभाजेषु माने बली त्वहिः ।**

கடகம், கன்னி, மீனம், விருஷபம, கும்பம், மேஷம், மகரம் இவ்விடங்களில் ராஹு பலமுள்ளவனுயாவான்.

(9) கேதுவின் பலவிவரணம்.

**गोधनुर्योषिदन्ते च निश्युत्पाते वली ध्वजः ॥**

விருஷபம், தனுஸ், கன்னி, மீனம் இவ்விடங்களிலும், ராத்திரி உத்பாதம்(பூகம்பம் முதலியன)நேரும்ஸமயம் இக்காலங்களிலும் கேது பலமுள்ளவனுயாவான்.

கேந்திராதி பலவிவரணம்.

**रूपं दिशति केन्द्रस्थस्तदर्द्धं तत्परर्क्षगः ।**
**तत्परापोक्लिमगतस्त्वेकपादवलं दिशेत् ॥**
**ददाति स्वोच्चगो रूपं नीचगो बलहीनताम् ।**
**मध्येऽनुपाततो ज्ञेयं स्वल्पं रिपुगतो ग्रहः ॥**
**स्वमूलकोणगः खेटः पादत्रयमितं बलम् ।**
**मित्रर्क्षगः पादबलं स्वर्क्षगोऽर्धं बलं दिशेत् ॥**

(க—ரை) கேந்திரத்திலுள்ள கிரஹம் பூர்ணபலனைத் தரும். பணபரத்தில் (2, 5, 8, 11 மிடங்களில்) இருக்கும் கிரஹம் பாதி பலனைத் தரும். ஆபோக்லிமத்தில் (3, 6, 9, 12ல்) இருக்கும் கிரஹம் கால்பங்கு பலனைத்தரும். தனது உச்சத்திலிருக்கும் கிரஹம் பூர்ணபலனைத் தரும். நீசத்திலிருக்கும் கிரஹம் எவ்வித பலமு மற்றதாகும். உச்சத்திற்கும் நீசத்திற்கும் நடுவிலிருக்கும் கிரஹத்திற்கு திரைராசிகஞ் செய்து பலம்கண்டுகொள்ள வேண்டும். சத்துருவீட்டிலிருக்கும் கிரஹம் ஸ்வல்பபலத்தைத் தரும். மூலத்திரிகோணத்திலிருக்கும்கிரஹம் முக்கால்பங்கு பலத்தைத் தரும். மித்திரன் வீட்டிலிருக்கும் கிரஹம் கால்பங்கு பலத்தைத் தரும். சொந்தவீட்டிலிருக்கும் கிரஹம் அரைப்பங்கு பலத்தைத் தரும். * (எ—று)

---

* மற்றும் இதுவிஷயமான விசேஷத்தை நமது பிருஹத்ஜாதகம் 108-வது பக்கத்திற் காண்க.

## கிரஹங்களின் அவஸ்தைகள்.

दीप्तः स्वस्थश्च मुदितश्शान्तश्शक्तश्च पीडितः ।
दीनः खलश्च विकलो भीतो दश दशाः क्रमात् ॥

(க—ரை) (1) தீப்தம், (2) ஸ்வஸ்தம், (3) முதிதம், (4) சாந்தம், (5) சக்தம், (6) பீடிதம், (7) தீனம், (8) கலம், (9) விகலம், (10) பீதம் என கிரஹங்களுக்கு முறையே, 10 அவஸ்தைகளுண்டு (எ—று)

## அதன் விவரணம்.

मूलकोणोच्चगो दीप्तः स्वस्थः स्वस्थानसंस्थितः ।
मुदितोऽधिहितर्क्षस्थः शान्तः शोभनवर्गगः ॥
शक्तो युद्धे जययुतः पीडितस्तु पराजितः ।
दीनोऽरिभवनान्तस्थः खलवर्गगतः खलः ।
विकलोऽस्तमितःखेटो भीतो नीचगतो ग्रहः ॥

(க—ரை) மூலத்திரிகோணம், உச்சம் இவற்றிலுள்ள கிரஹம் தீப்தம் எனப்படும். சொந்தவீட்டி லிருக்கும் கிரஹம் ஸ்வஸ்தம் எனப்படும். (1) அதிமித்ரன் வீட்டிலிருக்கும் கிரஹம் முதிதம் எனப்படும். சோபனவர்க்கத்தி லிருக்கும் கிரஹம் சாந்தம் எனப்படும். (2) யுத்தத்தில் ஜயடைந்த கிரஹம் சக்தம் எனப்படும். (3) யுத்தத்தில் தோல்வியையடைந்த கிரஹம் பீடிதம் எனப்படும். சத்துருவீட்டிஉள்ள கிரஹம் தீனம் எனப்படும். பாபவர்க்கத்திலுள்ள கிரஹம் கலம் எனப்படும். அஸ்தங்கதமான கிரஹம் விகலம் எனப்படும். நீசத்திலுள்ள கிரஹம் பீதம் எனப்படும். ஆகவே லக்னபாவம் முதல் 12-வது பாவம் முடியவுள்ள 12 பாவபலன்களைப் பார்க்குமிடத்து இதுவரை சொல்லிய முறைப்படி தசவர்க்கத்தையும், கிரஹங்களின் பலாபலங்களையும் நன்கறிந்து கொண்டு அந்தந்த பாவத்திற்குச் சொல்லிய பலன்களை ஊஹித்தறிந்து சொன்னால் அது ஒருபொழுதும்

---

(1) இது விஷயமாய் நமதுபிருஹத்ஜாதகம் 105-வது பக்கம் பார்க்கவும். (2) இதுவிஷயமாய் நமதுபிருஹத்ஜாதகம் 113-வது பக்கம் பார்க்கவும். (3) இதுவிஷயமாய் நமது பிருஹத்ஜாதகம் 113-வது பக்கம் பார்க்கவும்.

பொய்த்துப்போகாதாகையால் இம்முறையை முதலில் நன்கு ஞாபகத்திலிருத்தியும், நமது கோசரபல நிர்ணயம் என்ற புஸ்தகம் 4, 5-வது பக்கங்களிற் சொல்லியபடி கிரஹங்களின் சுபாசுபங்களையுமறிந்தும் பாவபலன்களைப் பார்க்கவேண்டுவது மிக்க மிக்க அவசியமானதாகவும் கண்டுகொள்ள வேண்டும். (எ—று)

தனுபாவ (முதல்பாவ) பலன் முற்றிற்று.

## ॥ अथ धन (द्वितीय) भावफलम् ॥

ஸாராவளியிற் சொல்லிய இரண்டாவது பாவபலன்.

**स्वर्णादिधातुक्रयविक्रयाश्च रत्नादिकोशोऽपि च सङ्ग्रहश्च । एतत्समस्तं परिचिन्तनीयं धनाभिधाने भवने सुधीभिः॥ कौटुम्बाच्छुभकार्यं मुखं च वाक्दक्षिणाक्षिपूर्वार्थान् । विद्याभुक्तिविशेषान् दासान्मित्राणि च प्रवदेत्॥**

தனபவனம் எனப்பெயரிய இரண்டாம் பாவத்தினின்றும், ஸுவர்ணம் முதலிய தாதுக்களின் (லோஹங்களின்) வாங்கல், விற்றல் முதலியவற்றையும், ரத்தினங்களின் ஸமூஹம், அவற்றைச் சேர்த்துவைத்தல் இவற்றையும், கண்டறியவேண்டும். மேலும், இரண்டாமிடத்திலிருந்து நல்லகாரியத்தையும், முகசோபை முதலிய முகஸம்பந்தமான வற்றையும், வாக்கின் திறமையையும், வலதுகண், பூர்வார்ஜிதமான பொருள் இவற்றையும், வித்யையையும், ஆஹாரத்தையும், சேவகஜனங்களையும், சிநேஹிதர்களையும் பற்றியவிஷயங்களைக் கண்டறியவேண்டும்.

இனி இரண்டாம் பாவமாகவமையும் மேஷாதிராசிமூலம் கண்டறிய வேண்டிய பலன்கள்.

**मेषे धनस्थे कुरुते मनुष्यं धनैश्च पूर्णं विविधैः प्रभूतैः । भाग्याधिकं भूरिकुटुम्बयुक्तं चतुष्पदाढ्यं बहुपण्डितज्ञम् ॥ वृषे धनस्थे लभते मनुष्यः कृषिप्रयासेन धनं सदैव । अन्नोभियानं च चतुष्पदाढ्यं तथा हिरण्यं मणिमुक्तकाऽर्थम् ॥ तृतीयलग्ने धनगे मनुष्यो धनं लभेत्स्त्रीजननश्च नित्यम् । रौप्यं तथा काञ्चनजं प्रभूतं दायाधिकं पुष्टिभिरेवसख्युः ॥ चतुर्थराशौ धनगे मनुष्यो धनं लभेदक्षजमेव नित्यम् । जायोद्भवं सत्सुखमिष्टभोज्यं नयार्जितं प्रीतिकरं सुतानाम् ॥ सिंहे धनस्थे लभते मनुष्यो धनान्नपानं नृजनाश्वमानम् । सर्वोपकारप्रवणं प्रभूतं स्वविक्रमोपार्जितमेव नित्यम् ॥**

कन्योदये वित्तगते मनुष्यो धनं लभेद्भूमिपतेस्सकाशात्। हिरण्यरूप्ये मणिमुक्तजातं गजाश्वनानाविधवित्तजालं॥ तुले धनस्थे बहुपुण्यभाजं धनं मनुष्यो लभते प्रभूतम्। पाषाणजं मृण्मयभूमिजातं सस्योद्भवं कर्मजमेष नित्यम्॥ धनेऽलिलग्नप्रभवे च यस्य स्वधर्मशीलं प्रकरोति नित्यम्। विलासिनीकामपरंसदैव विचित्रवाक्यं द्विजदेवभक्तम्॥ धनुर्धरे वित्तगते मनुष्यो धनं लभेद्धैर्यविधानजातम्। चतुष्पदाढ्यं विविधं यशश्च रणोद्भवं धर्मविधानलब्धम्॥ मृगे धनस्थे लभते मनुष्यो धनं प्रपञ्चैर्विविधैरुपायैः। स्वयेच्छयाथो वशकृन्नृपाणां कृषिक्रियाभिश्च विदेशसङ्गात्॥ घटे धनस्थे लभते मनुष्यो धनं प्रभूतं फलपुष्पजातम्। जनोद्भवं साधुजनस्य भोज्यं महाजनाऽर्थं च परोपकारैः॥ मत्स्ये धनस्थे लभते मनुष्यो धनं प्रभूतैर्नियमोपवासैः। विद्याप्रभावान्निधिसङ्गमाच्च मातानृपाभ्यां समुपार्जितं च॥

மேஷராசி 2மிடமாகவாகுமானல் அது பலவிதமாயும், அதிகமாயு மிருக்கின்ற தனத்தினல் நிறைந்தவனுக மனிதனைச் செய்யும். அத்துடன் அதிக பாக்கியமுள்ளவனுகவும், கபடமற்றவனுகவும், பெரிய குடும்பமுள்ளவனுகவும், நாற்கால் பிராணிகளால் நிறைந்தவனுகவும், அனேகம் பண்டிதர்களால் அறியப்பட்டவனுகவும், (அதாவது: பிரபலவித்வானுகவும்) மனிதனைச் செய்யும். விருஷபம் 2 மிடமாக வாகுமானல் எப்பொழுதும் பயிரிடுவதில் முயர்ச்சி செய்வதால் பொருளையும், நாற்கால் பிராணிகளாலிழுக்கப்பட்ட வண்டியால் சஞ்சாரத்தையும், ஸுவர்ணம், ரத்தினங்கள், முத்து முதலிய பொருளையும் மனிதன் அடைகிறுன். மிதுனம் 2 மிடமாகவாகுமானல் தனத்தை யடைவான். அத்துடன் ஸ்திரீ பிரஜையையே உண்டுபண்ணுபவனுகவுமாவான். மேலும், மித்திரர்களினுதவியினல் (அதாவது: உத்தமமான பல மித்திரர்களுடன் கூடி இருத்தலால்) விபாகத்தினல் கிடைத்த பொருளைக் காட்டிலு மதிகமாக விருக்கின்ற வெள்ளி, சுவர்ணம் முதலிய அதிகமான பொருளை யடைகிறுன். கடகம் 2 மிடமாகவானல் எப்பொழுதும் சூதாட்டத்தால் கிடைத்தபொருளையும், பத்னீ மூலம் கிடைந்த நல்ல சுகத்தையும், விரும்பிய உணவையும், பிள்ளைகளுக்கு சந்தோஷத்தை விளைவிக்கின்றதும், நியாயமான மார்க்கத்தால் ஸம்பாதிக்கப்பட்டது மான பொருளையும் அடை

கிருன் ஸிம்ஹம் இரண்டாமிடமாக வானல் மனுஷ்யன், மனிதர்களால் போற்றப்பட்டதும், எல்லோருக்கும் உபகரிப்பதில் உபயோகப்படுகின்றதும், தன் முயார்ச்சியால் ஸம்பாதிக்கப்பட்டதும், அதிகமானதுமான பொருள், அன்னம், பானம் இவற்றை யடைகிருன். கன்னியா ராசி 2 மிடமாகவானல் அரசனிடமிருந்து தனத்தை யடைவான். மேலும், ஸுவர்ணம், வெள்ளி இவற்றையும், ரத்தினங்கள், முத்துக்கள் இவைகளின் கூட்டத்தையும், யானை, குதிரை, இவைமுதலிய பலவிதமான பொருள்கள் மூலமுண்டான ஐசுவர்யத்தையு மடைகிருன்.

துலாராசி 2 மிடமாகவானல் அனேகம் நற்காரியங்களுக்கு உபயோகப்படுகின்றதும், அதிகமானதும், பாறைகளினின்றுமுண்டானதும், மண் பூமியினின்று முண்டானதும், பயிர்களினின்று முண்டானதும், எப்போதும் முயர்ச்சியால் கிடைத்ததுமான அதிகமான தனத்தை மனிதன் அடைகிருன். விருச்சிகம் 2 மிடமாக வாகுமானல் மனிதனை தனது தர்மத்தில் பற்றுள்ளவனகவும், ஸ்திரீபோகத்தில் எப்பொழுதும் பற்றுள்ளவனகவும், ஆச்சரியப்படுமாறு பேசுபவனகவும், பிராம்மணர்கள், தேவர்கள் இவர்களிடத்தில் பக்தியுள்ளவனகவும் செய்கின்றது. தனுர்ராசி 2மிடமாக வாகுமானல் தீரச்செயல்களால் கிடைக்கப்பெற்றதும், நாற்கால் பிராணிகளால் நிறைந்துள்ளதும், பலவிதமாயுள்ளதுமான தனத்தையும், யுத்தமூலமும், தர்மகார்யங்கள் மூலமும் கிடைக்கப் பெற்ற புகழையும், மனிதன் அடைவான். மகரம் 2 மிடமாகவாகுமானல் விரிவுபடுத்தப்பட்டதும், பலவிதமாயுமிருக்கின்ற உபாயங்களால் மனிதன் பொருளை யடைவான். மேலும், பயிர்த்தொழிலாலும், வேறுதேச ஸம்பந்தத்தாலும், தனது இஷ்டப்படி அரசர்களை தன்வசமாக்குபவனகவு மிருப்பான். கும்பராசி 2 மிடமாக வானல் பழம், புஷ்பம் இவைகள் மூலமுண்டாயிருக்கின்ற அதிகமான தனத்தையும் ஜனங்களிடமிருந்துண்டானதும், நல்வர்களாலனுபவிக்கக் கூடியதுமான மஹாஜனங்களின் பொருளை பரோபகாரம் செய்யும் வாயிலாக அடைகிருன். மீனராசி 2 மிடமாகவானல் அதிகமான நியமம், உபவாஸம் இவற்ருல் கிடைத்த தனத்தையும், வித்யையின் பிரபா

வத்தாலும், புதையல் கிடைத்தலாலும், தாய், அரசன் இவர்கள் மூலமும் ஸம்பாதிக்கப்பட்ட பொருளேயும் அடைகிருன்.

2 மிடத்ததிபன் அந்தந்த பாவங்களிலிருப்பதன் மூலம் கண்டறிய வேண்டிய பலன்கள்.

द्रव्याधिपे लग्नगते धनीस्याद्व्यापारवृत्तिः कृपणोऽतिभोगी। सुखान्वितो भूपतिसत्कृतो भवेत्सुकर्मकृत्सुन्दरनेत्रपंक्तिः ॥ द्रव्याधिपे द्रव्यगते धनीस्यात्पुमान्भवेल्लाभयुतोऽपि मन्त्री । कुटुम्बयुक्तो मणिरत्न(भो)गी विभूषितो भोगयुतो जितेन्द्रियः । धनाधिपे भ्रातृगते खलस्स्यात् सोद्वेगयुक् भ्रातृसुखेन हीनः । सूर्योद्भवे भ्रातृगते विरोधी चोरः कुजे चार्कसुते विबन्धुः ॥ धनाधिपे तुर्यगते धनीस्यान्मातुर्गुरोर्लब्धधनस्स्वतेजाः । आयुष्यवान् सौम्यखगैस्सदैव क्रूरैर्दरिद्रो बहुरोगभाक्स्यात् ॥

धनाधिपे पञ्चमगे सुतानां सौख्यं भवेल्लाभसमन्वितं च ।
सौम्यैरुदारः कृपणः खलैश्च दुःखान्वितं दुष्टसुतं विदध्यात् ॥

धनाधिपः षष्ठग्रहे रिपुघ्नस्सदा नर स्संचयकारकश्च । बलाभियुक्तैः खचरैश्शुभैश्च पापैर्दरिद्रस्सरिपुः खलस्स्यात्॥ धनाधिपे सप्तमगे सुरूपः चिन्तान्वितः संग्रहणाद्धनी स्यात् । भार्याविलासेनयुतस्सुताढ्यः क्रूरान्विते हीनसुतो नरस्स्यात् ॥ धनाधिपो मृत्युगतः करोति कायेनिलङ्घातयुतं स्वदेहे। उत्पन्नभुक् भोगयुतं सुरूपं धनाधिपं भावयुतं पुमांसम्॥ धर्माश्रिते द्रव्यपतौ सदाता प्रसिद्धभाग्यस्सबलो व्रती स्यात् । पुण्ये रतस्सौम्ययुते खलैश्च हीनो दरिद्रः कृपणःखलस्स्यात् ॥ द्रव्याधिनाथो दशमे यदि स्यान्नरेन्द्रमान्यः सुभगो यशस्वी । मातुः पितुर्भक्तियुतस्सुभोगी खलोन्यथा स्यात्पितृमातृवैरी ॥ लाभाश्रितो द्रव्यपतिश्श्रियःपतिर्मन्त्री नृपस्स्याद्व्यवहारकाले । व्यापारयुक्तः पुरुषो यशस्वी लाभान्वितो भाग्यपरस्सुखी च ॥ विदेशगो दुष्टमना व्ययाश्रिते द्रव्याधिपे पापयुते जडात्मा । कापालिको म्लेच्छजनाभिसक्तः क्रूरोऽतिचौरो बलवान्नरस्स्यात् ॥

2 மிடத்ததிபன் லக்கினத்திலிருந்தால் பணக்காரனுகவும், வியாபாரியாகவும், லோபியாகவும், அதிகமாய் விஷயசுகங்களை அனுபவிப்பவனுகவும், ஸுகமுள்ளவனுகவும், அரசனுல் வெகு மதிக்கப்பட்டவனுகவும், நல்ல காரியங்களைச் செய்பவனுகவும்,

அழகுபொருந்திய கண், வரிசை இவைகளையுடையவனுகவு மிருப்பான். 2மிடத்ததிபன் 2மிடத்திலேயே இருந்தால் அச்சமயம் பிறந்தமனிதன் தனிகனுகவும், லாபம் பெற்றவனுகவும், மந்திரியாகவும், பெரியகுடும்ப முள்ளவனுகவும், மணிகள், ரத்தினங்கள் இவற்றை அனுபவிப்பவனுகவும், பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவனுகவும், விஷயங்களை யனுபவிப்பனுகவும், இந்திரியங்களை யடக்கினவனுகவு மிருப்பான். 2 மிடத்ததிபன் 3 மிடத்திலிருந்தால் துஷ்டனுகவும், பயமுள்ளவனுகவும், பிராதிருமூலமுண்டாகும் ஸுகமற்றவனுகவு மிருப்பான். சனி மூன்ருமிடத்திலிருந்தால் விரோதமுள்ளவனுயிருப்பான். செவ்வாய் மூன்ருமிடத்திலிருந்தால் திருடனுக விருப்பான். சனிமூன்ருமிடத்தி லிருந்தால் பந்து வற்றவனுகவுமிருப்பான். 2 மிடத்ததிபன் 4 மிடத்திலிருந்தால், பணக்காரனுகவும், மாதாவினிடமிருந்தும், பிதாவினிடமிருந்தும் கிடைத்த தனமுள்ளவனுகவும், ஆத்மசக்தியுள்ளவனுகவும், நீண்ட ஆயுளுள்ளவனுகவு மிருப்பான். 2 மிடத்ததிபன் சுபக்கிரஹமாகவாகி 3 மிடத்திலிருந்தால் தான் மேற்கூறிய பலனுண்டாகும். பாபக்கிரஹமானுல் ஏழையாகவும், அநேகம் ரோகமுள்ளவனுகவு மிருப்பான். 2 மிடத்ததிபன் 5 மிடத்திலிருந்தால் புத்திரர்களுடைய சௌக்யமும், லாபமு முண்டாகும். 2 மிடத்ததிபன் சுபக்கிரஹமாகவாகி 5மிடத்திலிருந்தால் தாராளமான ஸ்வபாவமுள்ளவனுக விருப்பான். 2 மிடத்ததிபன் பாபக்கிரஹமாகவாகி 5 மிடத்திலிருந்தால் கிருபணனுக விருப்பான். அத்துடன், துக்கமுள்ளவனுயும், துஷ்டனுயு மிருக்கின்ற பிள்ளையையும் கொடுப்பான். 2க் குடையவன் 6 மிடத்திலில் வலுவு பெற்ற சுபக்கிரஹங்களுடனிருக்கப் பிறந்தமனிதன் எப்பொழுதும் சத்துருநாசஞ் செய்கின்றவனுகவும், பணஞ்சேர்ப்பதில் பற்றுள்ளவனுகவும், ஆவான். பாபக்கிரஹங்களுட னிருந்தால் வஞ்சகனுவும், தரித்திரனுகவும் ஆவான்.

2க் குடையவன் 7 மிடத்திலிருந்தால் நல்ல ரூபமுள்ளவனுகவும், கவலையுடன் கூடினவனுகவும், சேர்த்து வைத்தலால் தனிகனுகவும் ஆவதுடன், மனையாளின் விலாஸத்துடன் கூடினவனுகவும், புத்திரப் பெருக்குள்ளவனுகவும், ஆவான். பாபக்கிரஹத்

துடன் 7ல் தனாதிபன் கூடினால் புத்திரனற்றவனாகவோ, குறைந்த புத்திரனுள்ளவனாகவோ ஆவான். தனாதிபன் 8 மிடத்திலிருந்தால் சரீரத்தில் வாயுபீடையையும், தனது தேஹத்தில் அடியுடன் கூடினவனா யிருத்தலையும் புதிதா யுண்டானவற்றை யனுபவிக்கின்ற போகமுள்ளவனாக யிருத்தலையும், நல்ல எண்ணமுள்ளவனாகுதலையும் செய்கிறது. 2க் குடையவன் 9 மிடத்திலிருக்கப் பிறந்தவன் கொடையாளியாகவும், பிரசித்தமான பாக்கியமுள்ளவனாகவும், நல்ல பலமுள்ளவனாகவும், வ்ரதானுஷ்டானம் செய்கின்றவனாகவும், 2க் குடையவன் சுபருடன் கூடினால் புண்ணியகாரியத்தில் பற்றுள்ளவனாகவும் ஆவான். பாபருடன் கூடினால் எதிலும் தாழ்ந்தவனாகவும், தரித்திரனாகவும், கிருபணனாகவும், வஞ்சகனாகவு மாவான். 2க் குடையவன் 10 லிருந்தால் ராஜபூஜ்யனாகவும், அழகு பொருந்தியவனாகவும், நல்ல யசஸ்ஸுள்ளவனாகவும், மாதிரு பிதிரு பக்தி யுள்ளவனாகவும், நல்ல போகியாகவு மிருப்பான், பாபரிருந்தால் முற்கூறியதற்கு மாறாக விருப்பதுடன் தாயாரிடத்தில் துவேஷமுள்ளவனாகவுமிருப்பான். 2க் குடையவன் 11 லிருந்தால் அனேகம் திரவியங்களுக்குப் பதியாகவும், லக்ஷ்மீபதியாகவும் (அதாவது: லக்ஷ்மீகடாக்ஷமுள்ளவனாகவும்,) மந்திரியாகவும், வியவஹார காலத்தில் ராஜாவாகவும், (ஒருஜட்ஜியேலே என்றும் சொல்லலாம்) வியாபாரஞ் செய்கின்றவனாகவும், நல்லயசஸ்வியாகவும், லாபமுள்ளவனாகவும், போக்கியவஸ்துவுடன் கூடினவனாகவும், சுகியாகவும் இருப்பான். 2க் குடையவன் பாபருடன் 12 லிருக்கப் பிறந்தமனிதன் வேறு தேசம் (தீவு) இவற்றில் செல்லுகின்றவனாகவும் துஷ்டமான மனதுள்ளவனாகவும், ஜடனாகவும், காபாலிக (பௌத்தஸன்னியாஸி) னாகவும். மிலேச்சஜனங்களுடன் கூடினவனாகவும், குரூரனாகவும், அதிகம் சோரஞ் செய்கின்றவனாகவும், ஆனால் பலமுள்ளவனாகவு மிருப்பான். (எ—று)

**धनगृहे सति भास्करवीक्षितेऽपितृधनः पितृनाशकरश्च हि *सुखपारक्यजीविचतुष्पदाच्छुभकरोऽपि च गुह्यनिपीडनः॥ कुटुम्बभावे यदि**

---

* இந்த சுலோகமானது சுலோகமுறைக்கு நேர்மாறாக விருப்பினும் ஒருவாறு உரை எழுதப்பட்டிருக்கிறது.

चन्द्रदृष्टिः कुटुम्बसौख्यं ह्यतुलं करोति। स्ववंशवृद्धिं स्वशरीरपीडां जलाद्भयं लोहभयं समाष्टके॥ कुटुम्बगेहे यदि भौमदृष्टिः कुटुम्बसौख्यं न भवेन्नरस्य। धनस्य लब्धिर्नभवेद्दिनेदिने रुगौदरे व्याधिसमर्दितस्स्यात्॥ धनगृहे सति चन्द्रसुतेक्षिते धनसुखं ह्यतुलं च नरस्सदा। तदनु भाग्ययुतः खलजीवितस्सकलभोगविलासयुतो नरः॥ धनगृहेऽमरपूजितवीक्षिते धनचयं प्रकरोति नरस्य हि। बहुलभाग्ययुतश्शुभबुद्धिमान् स्वजनपूर्णसुखं प्रकरोति हि॥ धनगृहे सति शुक्रनिरीक्षिते धनसुखं च करोति दिने दिने। स्वजनसौख्यकरो नितरां सदाऽश्रमकरस्स्वजनारिविनाशकः॥ धनगृहे सति मन्दनिरीक्षिते धनविनाशकरस्स्वजनो रिपुः। * तदनु वर्षगुणाम्बरकृष्टकृत्सलिलतो भयमप्यथवा युजम्॥ कुटुम्बभावे यदि राहुदृष्टिः कुटुम्बसौख्यं न करोति पुंसाम्। जलाद्भयं चैव चतुर्दशेऽब्दे तथाष्टमे वर्ष उपैति मृत्युम्॥

இனி திருஷ்டிபலன்.

2 மிடமானது சூரியனால் பார்க்கப்பட்டால் பிதாவின் தனமற்றவனாகவும், பிதாவுக்கு நாசத்தைச் செய்கின்றவனாகவும், சுகம், பராக்கிரமம் இவற்றுடன் ஜீவிப்பவனாகவுமாவதுடன் நாற்கால் ஜந்துமூலம் சுகமுள்ளவனாகவும், குஹ்யஸ்தலத்தில் (ஆண்குறியில்) பீடையுள்ளவனாகவுமிருப்பான். இரண்டாமிடமானது சந்திரனாற் பார்க்கப்படின் ஒப்பற்ற குடும்பஸவுக்கியத்தைச் செய்கிறதுடன் தனது வம்சவிருத்தியையும், தனது சரீரத்திற் பீடையையும், 8-வது வயதில் ஜலத்தினின்றும் பயத்தையும், இரும்பினின்றும் பயத்தையும் செய்கிறது. 2-வது பாவத்திற்கு செவ்வாயின் திருஷ்டியிருக்குமானால் மனிதனுக்கு குடும்பசவுக்கியமிருக்காது. தனத்தின் லாபமுமுண்டாகாது. ஒவ்வொரு நாளிலும் வயிற்றில் வியாதிபீடையும்,வேறு வியாதியால் நன்கு பீடிக்கப்பட்டவனாகவு மாகிறான். 2மிடம் புதனாற் பார்க்கப்பட்டால் மனிதன் எப்பொழுதும் ஒப்பற்ற தனசுகமுள்ளவனாகவும், அதை யொட்டிய பாக்கியசுகமுள்ளவனாகவும், வஞ்சனையால் ஜீவிப்பவனாகவும், போகம், விலாஸம் இவற்றுடன்

---

* பிற்பாதியிலுள்ள சுலோகம் வெகு அசுத்தமாயிருப்பதால் அதற்கு உரை எழுதவில்லை.

12

கூடினவனுகவுமாகிருன். 2 மிடமானது குருவினுற் பார்க்கப் பட்டால் மனிதனுக்கு தனத்தின் குவியலைச் செய்கின்றது. அதிக பாக்கியத்துடன் கூடினவனுகவும், சுபமான புத்தியுள்ள வனுகவும் தனது ஜனங்களால் பூர்ணசுகத்தை யடைகின்றவனுக வும் செய்கிறது. 2மிடம் சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஒவ்வொரு நாளும் தனசுகத்தைச் செய்கிறது. அத்துடன் மனிதன் தனது ஜனங்களுக்கு சவுக்கியத்தைச் செய்கின்ற வனுகவும், தனது ஜனங்களுக்குச் சிரமத்தைச் செய்யாதவனுகவும், எப்பொழுதும் தனது ஜனங்களின் சத்துருவை நாசஞ்செய்கின்றவனுகவும், ஆகிருன். 2 மிடமானது சனியினுல் பார்க்கப்பட்டால், தனவி ஞசமுள்ளவனுகவும், தனது ஜனத்தையே சத்துருவாயுடைய வனுகவும், ஆகிருன். 2 மிடமானது ராஹுவின் பார்வையைப் பெற்ருல் புருஷர்க்கு குடும்பசவுக்கியத்தைச் செய்யமாட்டாது. 14-வது வயதில் ஜலபயமும், 8-வது வயதில் அபமிருத்யுபயமும் உண்டாகும்.

## தந்தம், தாலு இவற்றில் ரோகமும், காது அறுபடுதலு முண்டாகும் யோகம்.

**धनाधिपे षष्ठगते सराहौ राहुस्थितर्क्षाधिपसंयुते वा। दन्तस्य रोगः पतनं च तेषां भुक्तौ तयोर्वा प्रवदन्ति तज्ज्ञाः॥ वाक्स्थानपेनापि युतोऽरिनाथस्तद्भावपस्थांशपयुक्तनाथः। षष्ठेश्वरेणापि युतः स्वभुक्तौ दन्तादिरोगः पतनं च तेषाम्॥ धनेश्वरेणापि युतेन्दुपुत्रे सराहुके तावरिभावयुक्ते। राहुस्थितर्क्षाधिपसंयुते वा भुक्तौ तदा तालुभवस्सरोगः॥ तद्भावपाभ्यामथकारकाभ्यां पित्रादिकानां फलमेवमाहुः। कर्णस्य विच्छेदनमाहुराचार्याः सौरे सभौमे धनपे विलग्ने॥**

2 மிடத்ததிபன் 6மிடத்தில் ராகுவுடன் கூடினுலும். ராகு விருக்கும் ராசியதிபனுடன் கூடினுலும். அவர்களின் புக்தி காலத்தில் பல்லில் ரோகமோ, அல்லது பற்கள் விழுந்துவிடுத லோ, ஏற்படும். 2க்குடையவனுடன் 6க்குடையவன் கூடினு லும், அல்லது 2க் குடையவனிருக்கும் அம்சத்திற்குடைய கிர ஹத்துடன் கூடின ராசிநாதன் 6க் குடையவனுடன் கூடினுலும், அப்பொழுது அவர்களின் புக்திகாலத்தில் பல் முதலியவற்றில்

ரோகமோ, அவை விழுந்து விடுதலோ நடக்கும். 2க் குடையவனுடன் கூடின புதன், ராகு கேது இவர்களுடன் கூட 6மிடத்திலிருந்தாலும், அல்லது ராகு இருக்கும் ராசிக்கதிபருடன் கூடினாலும், அவர் புக்திகாலத்தில் மேவாய்க்கட்டையில் ரோகமுண்டாகும். அவ்விரு பாவாதிபர்களைக் கொண்டும், அல்லது அவ்விரு பாவகாரகர்களைக் கொண்டும் ஜாதகரின் பிதாமுதலியோருக்கும் இம்மாதிரியான பலனைப்பெரியோர் சொல்லுகின்றனர். சனி செவ்வாயுடன் கூடினும், 2க் குடையவன் லக்கினத்திலிருப்பினும் காது அறுந்து (அல்லது கெட்டு) விடும் எனப்பெரியோர் சொல்லுகின்றனர்.

### நிர்தன தனிக யோகங்கள்.

**रविरविजभूमितनयाः कुटुम्बसंस्था विलोकयेयुर्वा । कुर्वन्ति धनविनाशं क्षीणेन्दुनिरीक्षिता विशेषेण ॥ रविभौमौ धनसंस्थौ कुलदोषदरिद्रताकरौ कथितौ । मन्दः कुरुते शुद्धे महार्थयुक्तो बुधेक्षितस्तत्र ॥ रविरपि विधुरं जनयेद्विषमेक्षितयुतेऽन्यदृष्टश्च । सौम्याःकुटुम्बराशौ बहुप्रकारं धनं दद्युः ॥ बुधदृष्टस्त्रिदशगुरुः कुटुम्बराशौ च निःस्वतां कुरुते । सोमो वित्ते भूसुतनिरीक्षितो हन्ति सर्वधनम् ॥ चन्द्रस्तु धनस्थाने क्षीणोऽपि बुधेक्षितस्तदा कुरुते । पूर्वार्जितार्थनाशं निरोधनं वाऽन्यवित्तस्य ॥ सौम्यः कुटुम्बभवने चन्द्रेण निरीक्षितोऽतिधनदाता । सौम्यगृहे शुभदृष्टस्स एव धनदः सदा ज्ञेयः ॥ धनाधिपो गुरुर्यस्य धनराशौ व्यवस्थितः । भौमेन सहितो वापि धनदेन समो भवेत् ॥ धनेशे लाभराशिस्थे लाभेशे वा धनं गते । तावुभौ केन्द्रराशिस्थौ धनदेन समो भवेत् ॥ धनेशे केन्द्रराशिस्थे लाभेशे तत्त्रिकोणगे । गुरुशुक्रयुते दृष्टे धनलाभमुदीरयेत् ॥**

சூரியன், சனி, செவ்வாய் இவர்கள் 2மிடத்திலிருந்தாலும், அல்லது பார்த்தாலும் தனநாசத்தைச் செய்கின்றனர். தேய்பிறைச் சந்திரனாற் பார்க்கப்பட்டால் விசேஷதன நாசத்தைச் சொல்லவேண்டும். சூரியனும் செவ்வாயும் இரண்டா மிடத்திலிருந்தால் குலதோஷத்தையும், தாரித்ரியத்தையும் செய்வர். சனியும் அவ்விதமே தனநாசத்தைச் செய்வான். 2மிடம் சுத்தமாயிருந்து (அதாவது: ஒருகிரஹத்துடனும் கூடாமலுமிருந்து என்பதாம்) புதனால் பார்க்கப்பட்டால் அதிகம் அர்த்தத்துடன் கூடினவனாக வாகிறான். சூரியன் பாபர் சேர்க்கை, பார்வை

இவற்றைப் பெற்றால் களத்திர நாசமுள்ளவனைச் செய்கிறான். அல்லது வேறுகிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் அதே பலன் தானுண்டாகும். சுபர் 2 மிடத்திலிருந்தால் வெகுப்ரகாரமான தனத்தைத் தருவர். புதனாற் பார்க்கப்பட்ட குரு 2 மிடத்தி லிருந்தால் பணமற்றிருத்தலை (ஏழ்மையை) செய்கிறான். செவ் வாயினாற் பார்க்கப்பட்ட சந்திரன் 2லிருந்தால் எல்லாதனத்தை யும் நாசமாக்குகிறான். சந்திரன் க்ஷீணனாய் புதனாற் பார்க்கப் பட்டு 2 லிருந்தால் அப்பொழுது முன்னோர் தேடிய பொருளின் நாசத்தையோ, வேறுபணம் வரும் விஷயத்திற் றடையையோ செய்கிறான். புதன் 2 மிடத்திலிருந்து சந்திரனால் பார்க்கப்பட் டால் அதிகம் தனத்தைத் தருவான். சந்திரன் புதன்வீட்டி லிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் எப்பொழுதுமே தனத் தைத் தருவான். ஒரு ஜாதகத்தில் குரு 2க் குடையவனாகி 2 மிடத்திலேயே இருந்து செவ்வாயுடனும் கூடுவானானால் அப்பொ ழுது குபேரனுக்கொப்பானவனாக வாவான். 2க் குடையவன் 11லும் 11க் குடையவன் 2லு மிருந்தாலும், அல்லது 2, 11க் குடைய கிரஹங்கள் கேந்திர ராசியிலிருந்தார்களானாலும் குபேர துல்லியனாகவாவான். 2க் குடையவன் கேந்திரத்திலிருந்து 11க் குடையவன் அதற்குத் திரிகோணத்திலிருந்து குருசுக்கிரன் பார் வை, இவர்களின் சேர்க்கை இவற்றை அடைந்தால் தனலாபத் தைச் சொல்லவேண்டும்.

## அநேகம் பேயர்களைக் காப்பாற்றுபவனாகவும் தனிகனாகவும் ஆகும் யோகம்.

कुटुम्बभावाधिपतौ च सौम्ये स्वोच्चस्थिते केन्द्रसुहृद्गृहे वा । सौम्यर्क्षके वा यदि पुण्यजातः (सहस्रलक्षो भवति प्रतापी) कुटुम्बसंरक्षणवाग्विभूतिः ॥ कुटुम्बराशौ स्वपतौ यदि स्यात् बुधे भृगौ तादृशभावनाथे । स चेत्सुहृत्क्षेत्रगतोऽथवा स्यात् परोपकारी जनरक्षकस्स्यात् ॥ कुटुम्बनाथे परमोच्चसंस्थे देवेन्द्रपूज्येन समीक्षिते च । तथाविधस्तद्भवनेऽपि जातो सहस्रगोप्ता भवति प्रतापी ॥ प्रसूतिकाले यदि नेत्रनाथे स्वोच्चे प्यनीचे यदि केन्द्रकोणे । महाधनी राजसमानभाग्यः धनित्वमात्रं यदि कोणसंस्थे ॥ वित्तेशे व्ययगेवापि ग्रहद्वयसमन्विते। अधिकैश्वर्यसंपन्नस्स्यादिभेदेन संयुते॥

2க் குடையவன் சுபக்கிரஹமாகி தனது உச்ச வீட்டிலோ, கேந்திரம் மித்திரன் வீடு, இவற்றிலோ, சுபர் வீட்டிலோ இருக்கப் பிறந்தவன் குடும்ப ரக்ஷணத்திற்குரிய வாக்கின் பெருமையை யடைவான். 2 மிடத்தில் 2க் குடையவன் இருந்தாலும் புதனே, சுக்கிரனே 2க் குடையவனனாலும், அல்லது 2க் குடையவன் மித்திர க்ஷேத்திரத்தை யடைந்த போதிலும், பரோபகாரியாகவும் ஜனரக்ஷகனுகவும் ஆவான். 2க் குடையவன் பரமோச்ச பாகத்திலிருந்து குருவினல் பார்க்கப்பட்டாலும் பரமோச்ச பாகத்திலிருக்கும் வேறு கிரஹம் 2 மிடத்திலிருந்தாலும் அப்பொழுது பிறந்தவன் ஆயிரம் பேர்களை ரக்ஷிக்கிறவனுக்வும், பிரதாப முள்ளவனுகவும் ஆகிறுன். ஜனன காலத்தில் 2க் குடையவன் தனது உச்சத்திலோ, அல்லது நீசனுக வில்லாமலோ இருந்து கேந்திரத்திரிகோணங்களி விருந்தால் அதிகம் தனமுள்ளவனுகவும், ராஜாவுக் கொப்பான பாக்கியமுள்ளவனுகவும், ஆவான். ஆனல் 2க் குடையவன் முற்கூறியபடி கேந்திரத்திலிருந்தால் தனிகனுகமட்டும் ஆவான். 2க் குடையவன் 12 விருந்த போதிலும் 2 கிரஹங்களுடன் சேர்ந்திருப்பானேயானுல் அதிகமான ஐசுவரியத்துடன் கூடினவனுக விருப்பான் 3 முதலியகிரஹத்துடன் கூடினவனனாலும் இதேபலன் தான்சொல்லவேண்டும்.

### கணிதமறியும் யோகம்.

**गणितज्ञो भवेज्जातो वाग्भावे भूमिनन्दने । ससोमबुधसंदृष्टे केन्द्रे वा सोमनन्दने ॥ वाग्भावपे बुधे स्वोच्चे लग्ने देवेन्द्रपूजिते । शत्रावष्टमसंयुक्ते गणितज्ञो भवेन्नरः ॥ ५२ ॥**

2 மிடத்தில் செவ்வாயிருந்து சந்திரன், புதன் இவர்களால் பார்க்கப்பட்டால் கணிதமறிந்தவனுக வாவான். புதன் கேந்திரத்திலிருந்தாலும் இதே பலன் தான் சொல்ல வேண்டும். 2க் குடையவன் புதனுகி தனது உச்சவீட்டிலிருந்து லக்கினத்தில் குருவுமிருந்தாலும், குரு, 6, 8 மிடத்திலிருந்தாலும், கணிதமறிந்தவனுக மனிதனுகிறுன்.

### தாரித்திரிய யோகம்.

**वित्तेशे स्वारिभावस्थे लाभेशेऽस्तं गते यदि। वित्तलाभौ पापयुक्तौ दृष्टौ निर्धनवान्भवेत् ॥ वित्तलाभाधिपौ दुःस्थौ पापखेचरसंयुतौ। जन्मप्रभृति दारिद्र्यं भिक्षान्नं लभते नरः ॥**

2க் குடையவன் தனது 6ம்பாவத்திலிருந்து, 11க் குடையவன் அஸ்தங்கதனுகி, 2 11 மிடங்களில் பாபர்களுமிருந்தாலும் பார்த்தாலும் அப்பொழுது தனமற்றவனுக வாகிருன். 2, 11க் குடையவர் 6, 8, 12 லோ பாபக்கிரஹங்களுடன் சேர்ந்தோ இருந்தால் பிறந்தது முதல் தாரித்ரியத்தையும், பிக்ஷையெடுத்துண்ணலேயும் மனிதனடைகிருன்.

ராஜதண்டம், தர்மம் இவற்ருல் தனநாசமுண்டாகும் யோகம்.

**षष्ठाष्टमव्ययस्थाने धनलाभाधिपौस्थितौ। लाभे कुजे धने राहुः राजदण्डाद्धनक्षयः ॥ लाभे जीवे धने शुक्रे तदीशे शुभसंयुते। व्यये शुभ ग्रहैर्युक्ते धर्ममूलाद्धनव्ययः ॥**

6, 8, 12 மிடங்களில் 2, 11க் குடையவர்களிருந்து 11ல் செவ்வாயும், 2ல் ராகுவும் இருந்தால் ராஜசிக்ஷையால் தனநாசத்தை யடைவான். 11ல் ஜீவனும், 2ல் சுக்கிரனும், அவ்விடத்திற்கதிபன் சுபருடன் கூடியும் 12ல் சுபக்கிரஹங்களு மிருக்குமானுல் தர்மகாரிய மூலமாகப் பொருள் செலவுண்டாகும்.

பொய் முகவியாதி இவையுண்டாகும் யோகம்.

**धनेशे पापसंयुक्ते धने पापसमन्विते। असत्यवादी पिशुनःवदने व्याधिसंयुतः॥ लग्ने पापे धने सौम्ये भाग्ये पापग्रहैर्युते। लग्नेशे (देवलोकांशे) दुर्बले यस्य बाल्ये दुःखी दरिद्रता ॥ नेत्रेशे बलसंयुक्ते शोभनाक्षो भवेन्नरः। षष्ठाष्टव्ययसंयुक्ते नेत्रवैकल्यमादिशेत् ॥ वित्तेशे दुःस्थसंयुक्ते दृष्टे पापसमन्विते। स्वोच्चस्वक्षेत्रगे वापि समनुष्यो विवाकभवेत् ॥ लाभेशे रिपुभावस्थे तदीशे लाभभावगे। * एकत्रिंशैकचत्वारिंशात्रमूलाद्धनव्ययम् ॥**

2க்குடையவன் பாபருடன் கூடினுலும், 2ல் பாபரிருந்தாலும் பொய் பேசுகிறவனுகவோ, கோள் சொல்லுகிறவனுகவோ, முகத்தில் வியாதியுள்ளவனுகவோ இருப்பான். லக்கினத்

* இந்த சுலோகம் சுலோக அமைப்பை மீறினதாகவிருந்த போதிலும் ஒருமாதிரி யொப்பி உரை எழுதப்பட்டது.

தில் பாபரும், 2ல் சுபரும். 9ல் பாபக்கிரஹங்களும் இருந்து லக்னேசன் துர்பலனுனல் பால்யத்தில் துக்கியும், தரித்திரனுமாவான். 2க் குடையவன் பலம் பெற்றால் மனிதன் அழகிய கண்ணுள்ளவனுவான். 2க் குடையவன் 6, 8, 12 லிருந்தால் நேத்திரத்தில் ஊனத்தை (குறைவைச்) சொல்லவேண்டும். 2க்குடையவன் 6, 8, 12 லிருப்பவர்களுடன் சேர்ந்தாலும், பார்க்கப்பட்டாலும், பாபருடன் கூடினவனுய் தனது உச்சவீடு சொந்தவீடு இவற்றிலிருந்த போதிலும், அந்த ஜாதகன் வாக்கற்றவனுகவாவான். 11க் குடையவன் 6 மிடத்திலிருந்து 6க் குடையவன் 11லு மிருந்தால் 31, 41 இந்த வயதுகளில் சத்துரு மூலம் தனமற்றவனுகிறுன்.

## பிக்ஷாடன யோகம்.

**दुःस्थे धनेशे परितापयुक्तः भिक्षाशनः प्रेष्यपरोऽटनस्स्यात् ।**
**नीचारिसंस्थे धनपेऽथ मूढे व्ययेशयुक्ते यदि भिक्षुको वा ॥**

2க் குடையவன் 6, 8, 12 லிருந்தால் தாபத்துடன் கூடினவனுகவும், பிக்ஷை யெடுத்துண்பவனுகவும், அடிமைத்தொழில் செய்பவனுகவும், அலேந்து திரிபவனுகவு மிருப்பான். நீசனுகவோ, சத்துருவீட்டிலிருப்பவனுகவோ, சூரியனில் அஸ்தங்கதனுகவோ, 12க் குடையவனுடன் சேர்ந்தோ, 2க் குடையவனிருந்தால் பிக்ஷை யெடுப்பவனுகவாவான்.

## 2 மிடத்திலிருக்கும் கிரஹங்கள் மூலம் பார்வையின் குணமறிதல்.

**चन्द्रे धनराशिस्थे कूपे भार्याम्रियत्यथो भौमे । पावकमूलात्सौम्ये भार्याचौर्या भृगौ तु तूर्णाप्ता ॥ मन्दे स्याद्विषपानी राहावुद्बन्धनप्राप्ता । जीवे दृष्टे युक्ते सर्वेदोषाः प्रयान्ति लघुभावाः ॥ दारस्थानवशाद्वा चैवं प्राहुः कलत्रभावादीन् । द्वित्र्यादिग्रहयोगात्सर्वं चिन्त्यं पृथक् पृथक्सूतौ ॥**

சந்திரன் 2 லிருந்தால் பாரியை கிணற்றில் விழுந்து மரிப்பாள். செவ்வாய் 2லிருந்தால் நெருப்பினுல் மரிப்பாள். புதனிருந்தால் பாரியை திருடுவாள். சுக்கிரனிருந்தால் சீக்கிரம் பாரியை கிடைப்பவளாவாள். சனி 2லிருந்தால் விஷபானம் பண்ணுவாள், (கள் என்றும் சொல்லலாம்) ராகுவிருந்தால் தூக்குப்

போட்டுக் கொள்ளுவாள். ஜீவனுடன் கூடியோ, பார்க்கப்பட்டோ இருந்தால் எல்லா தோஷங்களும் குறைந்துவிடும். 7மிடத்தைக் கொண்டும் இவ்விதம் களத்திர பாவத்தைச் சொல்லுகின்றனர். இரண்டு மூன்று கிரஹயோகம் ஜனனகாலத்தில் 7லிருப்பதைக் கொண்டும் தனித்தனியும் இவ்விதம் ஊஹித்தறிய வேண்டும்.

### சிராத்த போஜன யோகம்.

**भुक्तिस्थानाधिपे मन्दे तदीशे मन्दसंयुते। नीचार्कसूनुना दृष्टे श्राद्धभुक्सततं नरः॥ परान्नभुक्तदीशे तु नीचशत्रुसमन्विते। नीचग्रहेण संदृष्टे तद्दूषणपरो जनः॥**

2க் குடையவன் சனியானாலும், 2க்குடையவன் சனியுடன் கூடினாலும், நீசனான சனியினால் பார்க்கப்பட்டாலும் மனிதன் எப்பொழுதும் சிராத்தம் சாப்பிடுபவனாவான். 2க் குடையவன் நீசனாகவோ சத்துருவீட்டி லிருப்பவனாகவோ இருந்து நீசனான கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பிறர் வீட்டில் சாப்பிடுபவனாக ஆவதுடன், பிறரைத் தூஷணம் செய்பவனாகவும் ஆவான்.

### போஜன யோகம்.

**जलराशिगते कामे जलग्रहसमन्विते। जलग्रहेण संदृष्टे क्षीरदध्याज्यभुग्भवेत्॥ नानाविधरसान् भुङ्क्ते सौम्ये लग्नमदास्पदे। रवौ वा भूमिपुत्रे वा सप्तमेशे शुभेक्षिते॥ ७० ॥ बुद्धिस्थानगते वापि कदाचिद्दधिसूपभाक्। पापे सप्तमभावस्थे तदीशे पापसंयुते॥ क्रूरषष्ट्यंशगे वापि घृतसूपादिहानिभाक्। चन्द्रे गुरौ वा दारेशे जलराश्यंशसंभवे॥ जलग्रहेण वा दृष्टे क्षीरपानान्नभुक् भवेत्।**

7மிடம் * ஜலராசியாகி ஜலக்கிரஹத்துடன் (சுக்கிரனுடன்) கூடினாலும் ஜலக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் பால், தயிர், நெய் இவற்றை அதிகம் சாப்பிடுகிறவனாக வாகிறான். புதன் 1, 7, 10 மிடத்திலிருந்தாலும் சூரியனோ, செவ்வாயோ அங்கிருந்

* கடகம், மீனம், மகரம் இந்த 3ம் ஸம்பூர்ண ஜலராசிகள். விருஷபம், தனுஸ், கும்பம் இவைகள் பாதி ஜலராசிகள். துலாம் விருச்சிகம், மேஷம், இவைகள் கால்பங்கு ஜலராசிகள்.

தாலும் 7க் குடையவன் சுபனுல் பார்க்கப்பட்டாலும் பற்பல ரஸங்களை யனுபவிப்பான். பாபக்கிரஹம் 7 மிடத்திலிருந்து பாபருடன் கூடினுலும் 5மிடத்திலிருந்தாலும் ஏதோவொரு ஸமயம் தயிர், பருப்பு இவற்றை யனுபவிப்பான். சந்திரனே, குருவோ 7க் குடையவனுகி ஜலராசி அதன் அம்சம் இவற்றிலிருந்தாலும் ஜலக்கிரஹத்தினுல் பார்க்கப்பட்டாலும் க்ஷீரபானத்துடன் அன்னபோஜனஞ் செய்பவனுகிறுன்.

## நாயினுல் கடிபடும் யோகம்.

पापेक्षिते रविसुते धनराशियुक्ते पापान्विते शुनकभीतिमुपैति मर्त्यः। तद्भावनाथसहिते दिननाथपुत्रे दृष्टेऽथवा शुनकभीतिमुपैति मर्त्यः॥

சனியானவன் பாபியினுல் பார்க்கப்பட்டு 2 மிடத்திலிருந்தாலும் பாபருடன் கூடினுலும் நாயினுல் பயத்தை மனிதன் அடைகிறுன். 2ம் வீட்டுக் குடையவனுடன்சனி கூடினுலும், பார்க்கப்பட்டாலும் நாயினுல் பயத்தை மனிதனடைகிறுன்.

## பாம்பினுல் பயமுண்டாகும் யோகம்.

राहौ द्वितीये गुलिकेन दृष्टे युक्तेऽथवा सर्पभयं वदन्ति। कदन्नभुक् भूमिसुतेन युक्ते पित्रादिकानां फलमेवमाहुः॥ पापे धने पापनिरीक्षिते वा क्रूरांशगे पापयुते विशेषात्। तत्स्थानपे पापनिरीक्षितेऽपि विषप्रयोगः खलु वञ्चनादेः॥ पित्रादिस्थानपवशादेवं तेषां फलं वदेत्। नाथकारकभावानां बलाबलवशात्तथा॥

ராகு 2லிருந்து குளிகனுல் பார்க்கப்பட்டாலும், குளிகனுடன் சேர்ந்தாலும் பாம்பினுல் பயத்தைச் சொல்லுகின்றனர். அங்காரகனுடன் சேர்ந்தால் கெட்ட அன்னத்தைச் சாப்பிடுகிறுன். பிதாமுதலியோருக்கும் இம்மாதிரியான பலனைச் சொல்லுகின்றனர். பாபர் 2 லிருந்து பாபரால் பார்க்கப்பட்டாலும், குரூராம்சமேறினுலும், பாபருடன் சேர்ந்தாலும் முற்கூறிய பலன் விசேஷித்துண்டாகும். 2ம் வீட்டுக் குடையவன் பாபரால் பார்க்கப்பட்டால் வஞ்சனை முதலியவற்ருல் விஷப்பிரயோகமுண்டெனச் சொல்லுகின்றனர். பிதிருஸ்தானுதிபன் மூலமும் இவ்விதபலனை அவர்கட்க்குச் சொல்லல்வேண்டும். பாவநாதன்,

பாவகாரகன் இவர்களின் பலாபலத்தை முன்னிட்டும் அந்தப் பாவங்களுக்கும் அவ்வித பலனை சொல்லவேண்டும்.

### நேத்திரக் கெடுதலுண்டாகும் யோகம்.

लग्नेश्वरेण सहिते यदि नेत्रनाथे दुःस्थेक्षिनाशनमथास्फुजिदिन्दुयुक्ते । नेत्रेश्वरे तनुगते यदि नैशिकान्धः स्वोच्चे शुभग्रहयुते च तथा वदन्ति ॥ ७८ ॥ भानौ च लग्नपतिनासहिते तदीशे जात्यन्धको भवति रन्ध्रव्रणान्त्यगेऽपि । रिःफे धरासुतगते नयनं हि वामं नाशं तदा व्रजति सूर्यसुते तदन्यत् ॥ चन्द्रार्किसंयुक्तहरौ विलग्ने शन्यारदृष्टेऽक्षिविनाशमाहुः । शुभाशुभैर्बुद्बुदलोचनः स्याच्छुभैर्न दोषस्सहितेक्षणाभ्याम् ॥ निमीलिताक्षश्च धने सपापे तदीश्वरे शोभनदृष्टियुक्ते। लग्नाधिपे पापबहुत्वयोगे यमेन दृष्टे स तु रुग्णनेत्रः ॥ नेत्रेशुभे तद्भवनेश्वरे वा सौम्यान्विते कारकखेचरेन्द्रे । लग्नेश्वरेणापि युतेऽथ दृष्टे विशालदृष्टिस्सनरो विशेषात् ॥ शन्यारयुक्ते गुलिकेन युक्ते नेत्रेश्वरे तत्र तु नेत्ररोगः। नेत्रे यदा पापबहुत्वयोगेयमेनदृष्टे सति काणनेत्रः ॥ (ने)त्रेश्वरस्थांशपतौ सपापे पापग्रहक्षेत्रगते तथैव । नेत्राधिपे वासरनायके तु धरासुते वा गुलिकार्किदृष्टे ॥ उष्णोद्भवेनाप्यथ पित्तकोपै र्नेत्रस्य रोगो भवति प्रमादैः । अव्याजरोगैर्नयनस्य रोगं तत्स्थानपे दुःस्थगते ससौम्ये ॥ ८५ ॥ सहोदरात्मोद्भवशत्रुगेहे कलत्रमित्रादिगृहे तथैव । रव्यारयुक्ते सति नेत्रनाथे दृष्टेतु ताभ्यां नयनान्तरक्तः ॥ अत्यष्टिवर्षे रविजेऽक्षिहानिश्चन्द्रे धने तारकवर्षसंख्ये । कुजे नवाब्दे रुधिरप्रकोपात् षट्त्रिंशदब्दे शशिजात्थलाभम् ॥ जीवोडुसंख्ये नृपमाननं च लक्ष्मीकृपां षष्ठिमिते भृगौ च ! वित्तस्थराहोः कुजवत्फलं च मन्देन वाते रुधिरार्कजाभ्याम् ॥

2க் குடையவன் லக்கினாதிபதியுடன் கூடி 6, 8, 12லிருந்தாலும், சுக்கிரன், சந்திரன் இவர்களுடன் கூடினாலும், நேத்திர நாசமுண்டாகும். 2க் குடையவன் லக்கினத்திலிருந்து தனது உச்சத்திலோ, சுபக்கிரஹத்துடன் கூடியோ இருந்தாலும், அவ்விதமேதான் இரவில் கண் தெரியாதென்கின்றனர். சூரியனும், 2க் குடையவனும், லக்கினாதிபதியுடன் கூடினாலும், 6,8 மிடங்களிலிருந்தாலும், பிறவிக் குருடனாகிறான். 12ல் செவ்வாயிருந்தால் இடது கண் நாசத்தை யடையும். சூரியன் 12லிருந்தால் வலது கண் நாசத்தை யடையும். சந்திரன், சனி, இவர்களுடன் சூரி

யன் லக்கினத்திலிருந்தாலும்,சனி செவ்வாயினுல் பார்க்கப்பட்டாலும் கண்ணின் நாசத்தைச் சொல்லுகின்றனர். சுபர் பாபர் இருவரும் கலந்திருந்தால் கண்ணில் நீர்வடித லுண்டாகும். சுபரால் மட்டும் சேர்ந்தும், பார்க்கப்பட்டுமிருந்தால் ஒரு தோஷமும் உண்டாவதில்லை. 2ல் பாபரிருந்து 2க்குடையவன் சுபர் திருஷ்டி பெற்றுல் கண் மூடியிருக்கும். லக்கினுதிபனுக்கு அதிக பாபருடன் சேர்க்கையிருந்து சனியினுலும் அவன் பார்க்கப்பட்டால் நேத்திர ரோகமுள்ளவனுவான். 2ல் சுபரிருந்து 2க்குடையவன் சுபருடன் கூடி காரகன்(குரு)லக்கினுதிபனுடன்கூடியோ,பார்க்கப்பட்டோ இருந்தால் மனிதன் விசேஷமாக அகண்ட கண்ணுள்ளவனுவான். 2க்குடையவன் சனி, செவ்வாய், குளிகன் இவர்களுடன் கூடி 2லிருந்தால் நேத்திர ரோகமுண்டு. 2ல் அதிகம் பாபரிருந்து சனியின் பார்வையையும் பெற்றுல் ஒற்றைக் கண் பொட்டையாவான். 2க் குடையவனிருக்கும் அம்சநாதன் பாபருடன் கூடினுலும், பாபரால் பார்க்கப்பட்டாலும் நேத்திர ரோகமுண்டாகும். 2க் குடையவன் சூரியனுகவோ, செவ்வாயாகவோ இருந்து குளிகன், சனி இவர்களால் பார்க்கப்பட்டாலும் (அவ்விதமே நேத்திர ரோகமுண்டு.) 2க் குடையவன் 6, 8, 12 மிடங்களில் புதனுடனிருந்தால் உஷ்ண ரோகத்தாலும், பித்த கோசத்தாலும், (பித்தமூல முண்டான மறைவினுலும்) தவறுகளாலும், நேத்திர ரோகம் வருவதுடன் திடீரெனவுண்டாகும் ரோகத்தினுலும் நேத்திர பீடை உண்டாகும். 5, 7க் குடைய கிரஹமானது 3, 5, 6 இந்த வீடுகளிலிருந்தாலும் அவ்விதமே நேத்திர ரோகமுண்டாகும். 2க் குடையவன் சூரியன், செவ்வாய் இவர்களுடன் கூடினுலும், அவர்களால் பார்க்கப்பட்டாலும் கண்ணோரத்தில் சிவந்திருக்கும். சூரியன் மூலம் வரும் நேத்திர நாசமானது 20 வயதிலும், சந்திரன் மூலம் வருவது 4 வயதிலும், செவ்வாய் மூலம் வருவது 27-வது வயது 9-வது வயது இவைகளில் ரக்த கோபத்தாலும், புதன் மூலம் வருவது 36-வது வயதிலும், குரு மூலம் வருவது 27-வது வயதிலும், சுக்கிரன் மூலம் வருவது 60 வயதிலும், 2லிருக்கும் ராகு மூலம் வருவது செவ்வாய்க்குச் சொல்லிய வருஷத்திலும் (அதாவது:

27-வது வயதிலும்) சனி மூலம் வருவது 64-வது வயதிலும், செவ்வாய் சனி இவர்களால் வருவது 64-வது வயதிலும் நேத்திர ரோகமோ பீடையோ வரும். (எ—று)

ஸாராவளியில் சொல்லிய 2-வது பாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற் சொல்லிய தன(2-வது) பாவபலன்.

शुक्रेण युक्तो यदि नेत्रनाथः शुक्रस्यवार्क्षादिगृहत्रयस्य । संबन्धवान्स्याद्यदि देहपेन नेत्रं विधत्ते विपरीतभावम् ॥ तत्र स्थितौ चन्द्ररवी निशान्ध्यं जात्यन्धतां नेत्रपदेहपार्काः । पैत्रर्क्षनाथेन युता स्तदान्ध्यं कुर्वन्ति मात्रादिफलं तथेदृक् ॥ दोषकृन्नच सर्वत्र स्वोच्चस्वर्क्षगतो ग्रहः । षडादित्रयसंस्थश्चेत्तद्विनादोषकृच्छुभः ॥ वागीशवाग्गृहाधीशौ षडादित्रयसंस्थितौ । मूकतां कुरुतोऽप्येवं पितृमातृगृहाधिपाः ॥ विद्याधिपौ जीवबुधाववविद्यामरित्रयस्थौ कुरुतोऽथ तौ चेत् । केन्द्रत्रिकोणस्वगृहोच्चसंस्थौ प्रयच्छतां द्रागनवद्यविद्याम् ॥ एवं बुधस्यांगिरसः षडादित्रयस्थितौ नीचग्रहोऽरिनाथः । केन्द्रत्रिकोणस्वगृहोच्चसंस्थो धनाभिवृद्धिं कुरुतस्तदैव ॥ धनाधिपो गुरुर्यस्य धनराशिस्थितो यदि । भौमेन सहितो वापि धनवान्स नरो भवेत् ॥ धनेशे लाभराशिस्थे लाभेशे वा धनं गते । तावुभौ केन्द्रराशिस्थौ धनवान्स नरो भवेत् ॥ धनेशे केन्द्रराशिस्थे लाभेशे तत्त्रिकोणगे । गुरुशुक्रयुते दृष्टे धनलाभमुदीरयेत् ॥ वित्तेशे रिपुभावस्थे लाभेशे तद्गते यदि । वित्तलाभौ पापयुक्तौ दृष्टे निर्धन एव सः ॥

2க் குடையவன் சுக்கிரனுடன் கூடினுலும், சுக்கிரனுடைய ராசி முதலிய 3 வீட்டின் (அதாவது: திருஷ்டி, கேந்திரஸ்திதி, திரிகோணஸ்திதி இவற்றினுடைய என்பதாம்) ஸம்பந்தத்தை யடைந்தாலும், அல்லது லக்கினதிபனுடன் முற்கூறிய ஸம்பந்தத்தை யடைந்தாலும் நேத்திரத்தை விபரீதமாக்குவான். 2ல் சந்திர சூரியர்களிருந்தாலும் இரவில் கண் தெரியாது. லக்கினதிபதி, 2க் குடையவன், சூரியன், இவர்கள் சேர்ந்திருந்தால் பிறவிக் குருடராக்குவர். அவர்கள் 9க் குடையவனுடன் கூடினர்களேயானல் பிதாவைக் குருடராக்குவர். மாதா முதலியோருக்கும் இவ்விதமே பலன் கண்டுகொள்க. கிரஹமானது தனது உச்சவீடு, சொந்தவீடு இவற்றிலிருந்தால் முற்கூறியுள்ள தோ

ஷத்தை ஒரு ஜாதகத்திற்கும் செய்யமாட்டாது. சுபக்கிரஹமானது 6, 8, 12 மிடங்களிலிருந்தால் அந்தவிடம் தவிர்த்து தோஷத்தைச் செய்யும். இவ்விதமே 2க் குடையவன், 2ம் பாவ காரகன் இவர்கள் 6, 8, 12 விருந்தார்களானல் ஊமையாக்குவர். பிதிரு, மாதிரு பாவாதிபன், அந்தப் பாவகாரகன் இவர்கள் அந்தப் பாவத்திற்கு 6, 8, 12 விருந்தால் பிதா, மாதா முதலியோருக்கும் இதே பலன்தான் சொல்லவேண்டும். 2க் குடையவர், ஜீவனுகவோ, புதனுகவோ இருந்து சத்துருவீட்டிலோ, 6, 8, 12 லோ, இருந்தால் வித்யாநாசத்தைச் செய்வர். அந்த ஜீவபுதர்கள் கேந்திரத் திரிகோணத்திலோ, சொந்த வீட்டிலோ, உச்ச வீட்டிலோ இருந்தாரானுல் விரைவில் நிர்துஷ்டமான வித்யையைத் தருவர். இவ்விதமே புதனுக்கும், குருவுக்கும் 6, 8, 12 மிடத்தில் நீசக்கிரஹமோ, 6க் குடையவனே இருந்து அந்த விடம் லக்கினத்திற்கு கேந்திரம், திரிகோணம் சொந்த வீடு, உச்ச வீடு, இவையாகவானுல் அவர் தனப்பெருக்கைச் செய்வர். 2க் குடையவன் குருவாகி 2மிடத்திலிருந்து செவ்வாயினுடனும் கூடுவானுனல் அந்த மனிதன் தனவானுகவாவான். 2க் குடையவன் 11லும், 11க் குடையவன் 2லு மிருந்தாலும், அவ்விருவரும் கேந்திரத்திலிருந்தாலும் அம்மனிதன் தனவானுவான். 2க் குடையவன் கேந்திரராசியிலிருந்து 11க் குடையவன் அவனுக்கு திரிகோணத்திலிருந்து குரு சுக்கிரன் இவர்களுடன் கூடியோ, பார்வைபெற்றோ இருந்தால் தனலாபத்தைச் சொல்லவேண்டும். 2க்குடையவன் 6லிருந்து 11க்குடையவனும் அங்கிருந்து 2,11ல் பாபருமிருந்தாலும், பார்த்தாலும் நிர்த்தனனுகவே (பணமற்றவனுகவே) அவனுகிறுன்.

**वित्तलाभाधिपौ दुःस्थौ पापखेचरसंयुतौ। जन्मप्रभृति दारिद्र्यं भिक्षान्नं लभते नरः॥ षष्ठाष्टमव्ययस्थाने धनलाभाधिपौ स्थितौ। लाभे कुजे धने राहौ राजदण्डाद्धनक्षयः॥ लाभे जीवे धने शुक्रे तदीशे शुभसंयुते। व्यये शुभग्रहयुते धर्ममूलाद्धनव्ययः॥ कुटुंबराशेरधिपेससौम्ये केन्द्रेऽथ सौम्ये च सुहृद्गृहे वा। सौम्यर्क्षयुक्ते यदि जातपुण्यः कुटुंबसंरक्षणवाग्विलासः॥ कुटुम्बनाथे परमोच्चयुक्ते देवेन्द्रपूज्येन समीक्षितेवा। तथाविधे तद्भवनेऽभिजातः सहस्ररक्षो भुवनप्रतापी॥ तन्नाथे भृगुणा बुधेन सहिते पाराव-**

तांशे तथा स्वोच्चे चाथसुहृद्गृहे धनपतौ स्वस्थानकोलाहलः ॥ कुटुंबराशिस्थपतौ यदि स्याद्भृगौ बुधे तादृशभावनाथे । स्वोच्चे सुहृत्क्षेत्रगतेऽथवा स्यात्परोपकारीजनरक्षकस्स्यात् ॥ नेत्रेशे बलसंयुक्ते शोभनाक्षो भवेन्नरः। षष्ठाष्टमव्ययैर्युक्ते नेत्रे वैकल्यमादिशेत् ॥ धनेशे पापसंयुक्ते धने पापसमन्विते। असत्यवादी पिशुनः पवनव्याधिसंयुतः॥

2, 11க் குடையவர் 6, 8, 12 லிருந்து பாபக்கிரஹங்களுடனும் கூடினுல் பிறந்தது முதல் தாரித்ரிய முள்ளவனுகவும், பிச்சையெடுத் துண்பவனுகவும் ஆவான். 6, 8, 12ல் 2, 11க் குடையவர் இருந்து 11ல் செவ்வாயும், 2ல் ராகுவுமிருந்தால் ராஜதண்டத்தால் தன நாசமுண்டாகும். 11ல் குருவும், 2ல் சுக்கிரனுமிருந்து 2, 11க் குடையவன் சுபருடனும் கூடினுலும் 12ல் சுபக்கிரஹமிருந்தாலும் தர்மமூலம் தனச் செலவுண்டாகும். 2க் குடையவன் புதனுடன் கூடி கேந்திரத்திலிருந்தாலும், புதன் மித்திரன் வீட்டிலிருந்தாலும், அல்லது சுபர் வீட்டிலிருந்தாலும் அதில் பிறந்தபுண்ணியவான் குடும்பத்தை ரக்ஷிப்பதற்குரிய வாக்விலாஸ முள்ளவனுவான். 2க் குடையவன் பரமோச்சபாகத்திலிருந்து குருவினுல் பார்க்கப்பட்டாலும், அல்லது குரு 2 மிடத்திலிருந்தாலும் ஆயிரக்கணக்கான தனத்தை ரக்ஷிப்பவனுகவும் உலகில் பிரதாபமுள்ளவனுகவும் ஆகிறுன். 2க் குடையவன் சுக்கிரனுடனும் புதனுடனும் கூடி பாராவதாம்சமேறியிருந்தாலும், 2க்குடையவன் தனது உச்சவீட்டிலோ, மித்திரன் வீட்டிலோ இருந்தாலும் தனது சொந்த ஸ்தானத்தில் கோலாஹலம் செய்வான். 2 மிடத்திலிருப்பவன் புதனுகவோ, சுக்கிரனுகவோ இருந்து 2க் குடையவன் உச்சத்திலோ, மித்திரன் வீட்டிலோ இருந்தால் பரோபகாரியாகவும் ஜனரக்ஷகனுகவும் ஆவான். 2க் குடையவன் பலம் பெற்றுல் அழகிய கண்ணுள்ளவனுகிறுன். அவன் 6, 8, 12 லிருந்தால் நேத்திரத்தில் குறைவைத் தருவான். 2க் குடையவன் பாபியுடன் சேர்ந்து, 2ல் பாபருமிருந்தால் அஸத்தியவாதியாகவும், கோள் சொல்லுகிறவனுகவும் வாயுவியாதி யுள்ளவனுகவு மாகிறுன். (எ-று)

## अथ धनेशस्य द्वादशभावस्थितिफलम् ॥

धनेशे धनगे सोऽथ धनवान्गर्वसंयुतः । भार्याद्वयं त्रयं चापि सुत-

हीन: प्रजायते ॥ धनेशे सहजे तुर्ये विक्रमी मतिमान्गुणी । परदाराभिगामी च लोभी वा देवनिन्दकः । धनेशे रिपुभेशत्रोर्धनं प्राप्नोति निश्चितम् । शत्रुतो वित्तनाशस्स्याद्गुदे चोर्वोर्भवेच्च रुक् । धनेशे सप्तमे वैद्यः परजायाभिगामिकः । जाया तस्य भवेद्वेश्या मातापि व्यभिचारिणी ॥ धनेशे मृत्युगेहस्थे भूमिद्रव्यं लभेद्ध्रुवम् । जायासौख्यं भवेत्स्वल्पं ज्येष्ठभ्रातृसुखं नहि ॥ धनेशे नवमे लाभे धनवानुद्यमी पटुः । बाल्ये रोगी सुखी पश्चाद्यावदायुस्समाप्यते ॥ धनेशो दशमे यस्य कामी मानी च पण्डितः । बहुदारधनैर्युक्तस्सुतहीनोऽपि जायते ॥ धनेशे व्ययगे मानी साहसी धनवर्जितः । जीविका नृपगेहाच्च ज्येष्ठभ्रातृसुखं नहि ॥ धनेशे च तनौ पुत्रे स्वकुटुंबस्य कण्टकः । धनवान्निष्ठुरः कामी परकार्येषु तत्परः॥

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 2க் குடையவன் 12 ராசியிலிருப்பதாலுண்டாகும் பலன்.

2க் குடையவன் 2லிருந்தால் தனவானுகவும், கர்வமுள்ளவனுகவும், 2, 3 களத்திரமுள்ளவனுகவும், அல்லது புத்திரனற்றவனுகவுமாகிறுன். 2க் குடையவன் 3லோ, 4லோ இருந்தால் பராக்கிரமமுள்ளவனுகவும், நல்ல குணமுள்ளவனுகவும், பிறர் பெண்டீரிடத்தில் பற்றுள்ளவனுகவும், லோபியாகவும், தேவநிந்தை செய்கின்றவனுகவும் ஆவான். 2க் குடையவன் 6 லிருந்தால் சத்துருவின் தனத்தை யடைவது நிச்சயம். அத்துடன் சத்துரு மூலம் தன நாசமும், குதத்திலும், துடையிலும் ரோகமும் உண்டாகும். 2க் குடையவன் 7 லிருந்தால் வைத்யனுகவும், பிறர் பெண்டீரைப் புணருகின்றவனுகவும், அவனது பத்னீ வேசியாகவும், தாயார் வியபிசாரியாகவும் இருப்பாள். 2க் குடையவன் 8மிடத்திலிருந்தால் பூமியினின்று நிஸ்சயமாய்ப் பொருள் கிடைத்தலும், ஸ்வல்பமான பத்னீயின் சவுக்கியமும், மூத்த தமையனது சவுக்கியக் குறைவும் இருக்கும். 2க் குடையவன் 9லோ, 11லோ இருந்தால் தனவானுயும், முயர்ச்சி செய்யும் ஸ்வபாவமுள்ளவனுயும், எதிலும் ஸமர்த்தனுயும், பால்யத்தில் ரோகியாயும், பிறகு ஆயுள் முடியும்வரை சுகியாயுமிருப்பான். 2க் குடையவன் 10 லிருந்தால் காமியாயும், மானியாயும், பண்டிதனுயும், வெகுதாரம் தனம் இவற்றுடன் கூடினவனுயும், புத்திரஹீனனுயும் ஆகிறுன்,

2க் குடையவன் 12 லிருந்தால் மானியாயும், ஸாஹஸ (பிடிவாத) முள்ளவனும், தனமற்றவனும், ராஜ கிருஹத்தினின்றும் பிழைப்புள்ளவனும், மூத்த புத்திரன் மூலம் சவுக்கியமற்றவனும் ஆவான். 2க் குடையவன் 1, 5 மிடங்களிலிருந்தால் தனது குடும்பத்திற்குத் தீங்கிழைப்பவனுகவும், தனவானுகவும், நிஷ்டூரம் பேசுகின்றவனுகவும், பிறர் காரியத்தில் பற்றுள்ளவனுகவும் இருப்பான். (எ–று)

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 2க் குடையவன் 12 இடங்களிலிருப்பதன் மூலமேற்படும் பலன் முற்றிற்று.

## ஜாதகதத்துவத்திற் சொல்லிய 2–வது தனபாவ பலன்.

## ॥ द्वितीयभावे धनविवेकः ॥

धनेङ्गेशे स्वे लाभपे धनेशांशेशे शुभे नामतो धनी ॥ १ ॥ चन्द्राच्छुभैरुपचयगैः सद्यो धनी ॥ २ ॥ खार्थपौ युतौ केन्द्रकोणगौ सद्यो धनी॥३॥ खेशांशेशायेशौ युतौ सद्यो धनी ॥ ४ ॥ सिंहासने धनेशे धनी ॥ ५ ॥ धनेशात् धनाङ्गपेशौ केन्द्रगौ धनी ॥ ६ ॥ चतुर्षु स्वर्क्षगेषु धनी ॥ ७ ॥ बल्यर्थेशः खायाङ्गगो धनी ॥ ८ ॥ चन्द्रारयोगे धनी ॥ ९ ॥ केन्द्रकोणेऽर्थेशे क्रूरषष्ट्यंशे स्वल्पधनम् ॥ १० ॥ लाभेशांशेशे क्रूरषष्ट्यंशे शुक्रजीवान्यतरयुतदृष्टे स्वल्पधनी ॥ ११ ॥ सौम्यैरुपचयगैर्बहुधनः ॥ १२ ॥ लग्नेशांशेशे बलाढ्ये वैशेषिकांशे शुभदृष्टे बहुधनः॥१३॥ खेशांशेशे वैशेषिकांशे सार्थेशलाभेशदृष्टयुते बहुधनः ॥ १४ ॥ केन्द्रचतुष्टये शुभान्विते महाधनी॥ १५ ॥ लग्नार्थायेशा वैशेषिकांशे महाधनी ॥ १६ ॥ कर्के ज्ञे मन्दे लाभे महाधनी ॥ १७ ॥ स्वर्क्षे सुते लाभे मन्दे महाधनी ॥ १८ ॥ लाभे जीवे स्वर्क्षेऽर्के पञ्चमे महाधनी ॥ १९ ॥ स्वर्क्षे गुरौ पुत्रे चन्द्रे महाधनी ॥ २० ॥ सिंहेऽर्केऽङ्गे गुर्वारयुते महाधनी॥ २०॥ कर्केऽङ्गे चन्द्रे गुर्वारयुते महाधनी॥२२॥ भौमेङ्गे स्वर्क्षे मन्दाच्छज्ञयुते महाधनी ॥ २३ ॥ जीवेङ्गे स्वर्क्षे चन्द्रारयुते महाधनी ॥ २४ ॥ स्वर्क्षे ज्ञेऽङ्गे मन्दाच्छयुतदृष्टे महाधनी ॥ २५ ॥ स्वर्क्षे शुक्रेऽङ्गे चन्द्रार्कयुतदृष्टे महाधनी ॥ २६ ॥ कन्यायां यमारराहुच्छा महाधनी ॥ २७ ॥ लग्नपांशेशे धनपांशेशेचसौम्ये गुरुदृष्टे सहस्रनिष्केशः ॥२८॥

(1) 2ல் லக்கினுதிபதியும், 11க் குடையவனும் இருந்து தனேசனிருக்கும் அம்சாதிபதி சுபனுனல் பெயர்மட்டில் தனிக

னுவான். (2) சந்திரனுக்கு 3, 6, 10, 11 மிடங்களில் சுபர் இருந்தால் திடீரெனப் பணக்காரனுவான். (3) 10, 2க் குடைய வர் சேர்ந்து கேந்திரத் திரிகோணத்திலிருந்தால் திடீரெனப் பணக்காரனுவான். (4) 10க் குடையவனிருக்கும் அம்சாதிபதியும், 11க் குடையவனும் சேர்ந்திருந்தால் திடீரெனப் பணக்காரனுவான். (5) 2க் குடையவன் ஸிம்ஹாஸனும்சமேறியிருந்தால் தனிகனுவான். (6) 2, 3க் குடையவர்கள் கேந்திரத்திலிருந்தால் தனிகனுவான். (7) 4 கிரஹங்கள் ஸ்வக்ஷேத்திரத்திலிருந்தால் தனிகனுவான். (8) 2க் குடையவன் பலம் பெற்று 9, 10, 11 மிடங்களிலிருந்தால் தனிகனுவான். (9) சந்திரனும், செவ்வாயும் சேர்ந்திருந்தால் தனிகனுவான். (10) 2க் குடையவன் கேந்திர த்ரிகோணங்களிலிருந்து குரூரஷஷ்டியம்சத்திலு மிருந்தால் ஸ்வல்ப தன முண்டாகும். (11) 11க்குடையவனிருக்கும் அம்சேசன் குரூர ஷஷ்டியம்சத்திலிருந்து சுக்கிரன், குரு இவர்களுள் ஒருவர் சேர்க்கை,வீக்ஷணம் இவற்றையடைந்தால் ஸ்வல்ப தன முள்ளவனுவான். (12) சுபக்கிரஹங்கள் 3,6,10,11மிடங்களிலிருந்தால் வெகு தன முள்ளவனுகிறுன். (13) லக்னேசனிருக்கும் அம்சேசன் பலம் பெற்று வைசேஷிகாம்சமேறி சுபரால் பார்க்கப்பட்டால் வெகு தன முள்ளவனுகிறுன். (14) 10க்குடையவ னிருக்கும் அம்சேசன் வைசேஷிகாம்சமேறி 2க் குடையவன்,11க்குடையவன் இவர்களின் சேர்க்கை,பார்வை இவற்றையடைந்தால் வெகு தன முள்ளவனுவான். (15) 4 கேந்திரத்திலும் அதாவது:—1, 4, 7, 10 இவ்விடங்களில் சுபக்கிரஹ மிருந்தால் அதிகம் தன முள்ளவனுகிறுன். (16) 1, 2, 11க் குடையவர் வைசேஷிகாம்ச மேறினுல் வெகு தன முள்ளவனுகிறுன். (17) கடகத்தில் புதனும், சனி 11லும் இருந்தால் அதிகம் தன முள்ளவனுவான். (18) சனி சொந்த வீட்டிலோ, 5மிடத்திலோ, 11மிடத்திலோ இருந்தால் மஹாதனமுள்ளவனுவான். (19) குரு 11லும், அல்லது ஸ்வக்ஷேத்திரத்திலுமிருந்து சூரியன் 5லுமிருந்தால் அதிக தனமுள்ளவன். (20) குரு சொந்த வீட்டிலும், 5ல் சந்திரனு மிருந்தால் மஹா தன முள்ளவன். (21) சிம்மத்தில் சூரியனிருந்து 1ல் குருவும், செவ்வாயும் சேர்ந்திருந்தால்

மஹா தனமுள்ளவனுவன். (22) கடகம், லக்கினமாகி அதில் சந்திரனிருந்து குரு செவ்வாய் இவ்விருவருடன் கூடினுல் மஹா தனிகனுவான். (23) செவ்வாய் லக்கினத்திலிருந்து அது சொந்த வீடாக விருந்து சனி, சுக்கிரன், புதன் இவர்களுடன் கூடினுல் மஹாதனியாவான். (24) குரு லக்கினத்திலிருந்து அது சொந்த வீடாகவுமாகி சந்திரன், செவ்வாய் இவ்விருவருடனும் கூடினுல் மஹாதனி யாவான். (25) புதன் லக்கினத்திலிருந்து அது சொந்த வீடாகவுமாகி சனி, சுக்கிரன் இவர்கள் சேர்க்கை பார்வை இவற்றை யடைந்தால் மஹாதனியாவான். (26) சுக்கிரன் லக்கினத்திலிருந்து அது சொந்த வீடாகவுமாகி சந்திரன், சூரியன் இவர்கள் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றை யடைந்தால் மஹாதனியாவான். (27) கன்னியில் சனி, செவ்வாய், ராகு, சுக்கிரன் இவர்களிருந்தால் மஹாதனியாவான். (28) லக்கினுதிபதி இருக்கும் அம்சாதிபதியும், 2க் குடையவனிருக்கும் அம்சாதிபதியும் சுபனுகி குருவினுல் பார்க்கப்பட்டால் ஆயிரம் நிஷ்கத்திற்கு (நிஷ்கம் என்பது ஓர்வகை நிறையுள்ள தங்க நாணயம்) அதிபதியாவான்.

**लग्नपेऽर्थे लाभेशे कर्मगे गुरुदृष्टे सहस्रनिष्केशः॥ २९ ॥ अङ्गेशांशेशे गोपुरे कर्मेशदृष्टे सहस्रनिष्केशः ॥ ३० ॥**

ஆயிரம் நிஷ்கத்திற்கு அதிபதியாகும் யோகம்.—(29) 1க்குடையவன் 2லும், 11க் குடையவன் 10லுமிருந்து குருவினுல் பார்க்கப்பட்டால் ஸஹஸ்ர நிஷ்கேசனுவான். (30) லக்கினுதிபதி இருக்கும் அம்சேசன் கோபுராம்ச மேறியிருந்தால் ஸஹஸ்ர நிஷ்கேசனுவான்.

**कर्मेशस्थ नवांशसप्तांशेशौ बलाढ्यौ जीवाच्छदृष्टौ द्विसहस्रनिष्केशः॥ ३१ ॥ धनायेशौ सौम्यषष्ठ्यंशे बलान्वितौ द्विसहस्रनिष्केशः॥ ३२॥**

இரண்டாயிரம் நிஷ்கத்திற்கு அதிபதியாகும் யோகம்.—(31) 10க் குடையவனிருக்கும் நவாம்ச ஸப்தமாம்சேசர்கள் பலம் பெற்று குரு சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் 2 ஆயிரம் நிஷ்காதிபதி யாகிருன். (32) 2, 11க் குடையவர்கள் பலம் பெற்று சுபஷஷ்டியம்ச மேறினுல் இரண்டாயிரம் நிஷ்காதிபதி யாகிருன்.

**लग्नेशस्थत्र्यंशेशयुक्तसप्तमांशेशो वैशेषिकांशे अयुतनिष्केशः ॥ ३३॥ शुक्रे स्वान्त्ये जीवेऽर्थे वैशेषिकांशेङ्गेशे अयुताधिकनिष्केशः ॥ ३४ ॥ गुर्वङ्गेशौ धने वैशेषिकांशे केन्द्रकोणे वायुताधिकनिष्केशः ॥ ३५ ॥**

பதினாயிரம் நிஷ்காதிபதியாகும் யோகம்.—(33) லக்கினாதிபதி யிருக்கும் த்ரிம்சாம்சத்திற்குப் பதியான கிரஹத்துடன் ஸப்தமாம்சேசனானவன் வைசேஷிகாம்ச மேறியிருந்தால் பதினாயிரம் நிஷ்காதிபதியாகிறான். (34) சுக்கிரன் 2க்கு 12லும், குரு 2லும், லக்கினாதிபதி வைசேஷிகாம்சத்திலும் இருந்தால் பதினாயிரத்திற் கதிகமான நிஷ்காதிபதியாவான். (35) குருவும், லக்னாதிபதியும் 2லோ, வைசேஷிகாம்சத்திலோ, கேந்திரத் திரிகோணத்திலோ இருந்தால் பதினாயிரத்திற் கதிகமான நிஷ்கத்திற்கு அதிபதியாவான்.

**कर्मेशस्थत्र्यंशेशसप्तांशेशौ ऐरावतांशे लक्षाधीशः ॥ ३६ ॥ सशुभे केन्द्रचतुष्टये धनपे पारावते सिंहासने वा लक्षद्वयेशः ॥ ३७ ॥ लग्नायेशौ वैशेषिकांशगौ सौम्यषष्ट्यंशगौ च त्रिलक्षाधिपः ॥ ३८ ॥ धनायधर्मेशा बालिनः केन्द्रगास्त्रिलक्षाधिपः ॥ ३९ ॥**

1, 2, 3, லக்ஷத்திற்கு அதிபதியாகும் யோகம்.—(36) 10க்குடையவனிருக்கும் த்ரிம்சாம்ச,ஸப்தாம்சேசர்கள் ஐராவதாம்சமேறினால் லக்ஷாதிபதியாகிறான். (37) 1, 4, 7, 10 மிடங்களில் சுபரிருந்து 2க் குடையவன் பாராவதாம்சத்திலோ, ஸிம்ஹாஸனாம்சத்திலோ இருந்தால் 2 லக்ஷத்திற்கு அதிபதியாகிறான். (38) 1, 11க் குடையவர்கள் வைசேஷிகாம்சத்திலோ, ஸௌம்ய ஷஷ்டியம்சத்திலோ இருந்தால் 3 லக்ஷத்திற்கு அதிபதியாகிறான். (39) 2, 11, 9க் குடையவர்கள் பலம் பெற்று கேந்திரமேறினால் 3 லக்ஷத்திற்கு அதிபதியாகிறான்.

**लग्नांशेशभाग्येशौ परमोच्चांशगौ लाभेशो वैशेषिकांशगः कोटीशः ॥ ४० ॥**

கோடீஸ்வரனாகும் யோகம்.—(40) ஜன்ம லக்னேசனும், 9க்குடையவனும் பரமோச்சாம்சத்திலிருந்து 11க்குடையவன் வைசேஷிகாம்சமேறினால் கோடீஸ்வரனாகிறான்.

**साङ्कार्थेशौ केन्द्रगौ लग्नेशांशेश्वराभ्यां दृष्टौ बाल्ये बहुधनलाभः ॥ ४१ ॥ लग्नार्थायगैः शुभैर्बलाढ्यैर्धनेशस्यांशेशेन दृष्टैर्बाल्ये बहुधनलाभः ॥ ४२ ॥**

பால்யத்தில் வெகு தனலாப முண்டாகும் யோகம்.—(41) 2, 9க் குடையவர் ஒன்று சேர்ந்து கேந்திரத்திலிருந்து லக்னேசன், லக்ன நவாம்சேசன் இவர்களால் பார்க்கப்பட்டால் பால்யத்தில் வெகு தனலாப முண்டாகும். (42) 1, 2, 11 மிடங்களில் சுபர் பலம் பெற்றிருந்து 2க் குடையவனின் அம்சேசனுல் பார்க்கப்பட்டால் பால்யத்தில் வெகு தனலாப முண்டாகும்.

**लाभेशेऽङ्गे लग्नेशेऽर्थे धनेशे लाभे निध्याप्तिः ॥ ४३ ॥ लग्नेशे शुभेऽर्थे निध्याप्तिः ॥ ४४ ॥**

புதையல் கிடைக்கும் யோகம்.—(43) 11க் குடையவன் லக்கினத்திலும், 1க் குடையவன் 2லும், 2க் குடையவன் 11 மிடத்திலும் இருந்தால் *புதையல் கிடைக்கும். (44) லக்கினேசன் சுபனுய் 2விருந்தால் புதையல் கிடைக்கும்.

**सर्वग्रहाधिकबले लग्नपे केन्द्रे जीवयुते वैशेषिकांशेऽर्थेशे स्वोपार्जितधनः ॥ ४५ ॥ अङ्गेशांशेशो बली धनपमित्रं सत्केन्द्रकोणगः स्वोपार्जितधनः ॥ ४६ ॥ लग्नायपयुक्तोऽर्थेशः केन्द्रकोणे शुभदृष्टः कालबलान्वितः स्वोपार्जितधनः ॥ ४७ ॥**

தானே தேடி தனிகனுகும் யோகம்.—(45) எல்லாக் கிரஹங்களைக் காட்டிலும் லக்கினுதிபன் அதிகம் பலம் பெற்று கேந்திரத்திலிருந்து குருவுடனும் கூடி 2க் குடையவனும் வைசேஷிகாம்சமேறினுல் தான் தேடி தனிகனுவான். (46) லக்னுதிபனிருக்கும் அம்சேசன் பலம் பெற்று 2க் குடையவனுக்கு மித்திரனுகி கேந்திரத் திரிகோணமேறியிருந்தால் தான் தேடி தனிகனுவான். (47) 2க் குடையவன் லக்கினுதிபனுடன் கூடி கேந்திரத் திரிகோ

---

* இக்காலத்தில் புதையல் கிடைப்பது அரிதாகையால் புதையல் கிடைத்த மாதிரியாக லாட்டரி முதலிய வழியில் எதிர்பாருதபடி அதிகம் தனம் கிடைக்கும் என்று பொருள் கொள்ளுவதுதான் பொருத்தமானதாகும்.

ணத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டு (1)கால பலமுள்ளவனுகவு மிருந்தால் தான் தேடி தனிகனுவான்.

**बलान्वितौ सोत्थगौ पुंग्रहदृष्टयुक्तौ धनाङ्गपौ वैशेषिकांशगसोत्थेश-युतदृष्टौ भ्रातृधनाप्तिः ॥ ४८ ॥**

பிராதாவின் தனம் கிடைக்கும் யோகம்.—(48) 1,2க்குடையவர் பலம் பெற்று 3 மிடத்திலிருந்து புருஷக் கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தாலும் வைசேஷிகாம்சத்திலிருக்கும் 3க் குடையவனின் சேர்க்கை பார்வை இவற்றையடைந்தோ இருந்தாலும் பிராதாவின் தனம் கிடைக்கும்.

**तुर्येशयुतदृष्टे धनेशे जननीधनलाभः ॥ ४९ ॥**

தாயின் தனம் கிடைக்கும் யோகம்.—(49) 2க் குடையவன் 4க்குடையவனின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப் பெற்ருல் தாயின் தனம் கிடைக்கும்.

**कोशेशे रंध्रे निध्याप्तिः ॥ ५० ॥**

புதையல் கிடைக்கும் மற்றொரு யோகம்.—(50) 9க் குடையவன் 8 விருந்தால் (2) புதையல் கிடைக்கும்.

**धनेशे सुखेशयुतदृष्टे वैशेषिकांशे बन्धुतः कृषेर्वा धनलाभः॥ ५१ ॥**

பந்துவினுலும், கிருஷியினுலும் தனம் கிடைக்கும் யோகம்.—(51) 2க் குடையவன் 4க் குடையவனுடன் சேர்ந்தோ, அல்லது பார்வை பெற்ருே இருந்து வைசஷிகாம்சமேறினுல் கிருஷியினின்றுமோ, பந்துவினிட மிருந்துமோ தனம் கிடைக்கும்.

**सुतेश तत्कारकाभ्यां युते दृष्टे वार्थेशे बलिनि सुततो धनाप्तिः॥५२॥**
**वैशेषिकांशेऽङ्गेशे बलाढ्ये सुपुत्रार्जितधनाप्तिः॥ ५३ ॥**

புத்திரன் மூலம் தனம் கிடைக்கும் யோகம்.—(52) 2க்குடையவன் புத்திர ஸ்தாஞதிபன், அதன் காரகன் இவர்களால் பார்க்கப்பட்டோ, இவர்களுடன் சேர்ந்தோ இருந்து பலம் பெற்ருல்

(1) இது விஷயமாய் நமது பிருஹத்ஜாதகம் 114-வது பக்கத்தைப் பார்க்கவும். (2) இந்த யோகத்தில் 9க் குடையவனுடைய தசையும் சேர்ந்தால்தான் இந்த பலன் நடக்கும் என்று கொள்ளவும்.

புத்திரன் மூலம் தனம் கிடைக்கும். (53) லக்கினாதிபன் வைசேஷிகாம்சமேறி பலம் பெற்றிருந்தால் நல்ல புத்திரனால் தேடப்பட்ட தனப்ராப்த்தி யுண்டாகும்.

**षष्ठेशतत्कारकयुतदृष्टेऽर्थेशे बलिनि शत्रुतो धनाप्तिः ॥ ५४ ॥**

சத்துரு மூலம் தனப்ராப்த்தி யுண்டாகும் யோகம்.—(54) 6க்குடையவன் 6ம் பாவகாரகர்களான சனி, செவ்வாய் இவர்களுடன் பலம் பெற்ற 2க் குடையவன் கூடியோ, இவர்கள் பார்வை பெற்றோ இருந்தால் சத்துரு மூலம் தன ப்ராப்த்தி யுண்டாகும்.

**जायेशतत्कारकयुतदृष्टेऽर्थेशे बलिनि भार्यातो धनाप्तिः ॥ ५५ ॥ खेशतत्कारकयुतदृष्टेऽर्थेशे बलिनि पितृतो धनाप्तिः ॥ ५६ ॥**

களத்திர மூலம் தன ப்ராப்த்தி யோகம்.—(55) 2க் குடையவன் பலம் பெற்று 7க் குடையவன் அவ்வேழாம் பாவகாரகனான சுக்கிரன் இவர்கள் சேர்க்கை பார்வை இவற்றைப் பெற்றால் களத்திர மூலம் தன ப்ராப்த்தி யுண்டாகும். (56) 2க் குடையவன் 10க் குடையவன் 10ம் பாவகாரகர்கள் (அதாவது: குரு, சூரியன், புதன், சனி இவர்கள் 10-வது பாவகாரகர்களாவர்) இவர்களின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்று பலமும் பெற்றால் பிதாவின் மூலம் தன ப்ராப்த்தி யுண்டாகும்.

**कोशेशे बलवति यस्य कारकेण यद्भावेशेन वा युते दृष्टे तद्द्वारा धनाप्तिः ॥ ५७ ॥ तुर्येऽर्के पितृधनाप्तिः॥ ५८ ॥ लाभेशादिशाया धनाप्तिः ॥ लाभगतराशिदिशातो धानाप्तिः ॥ ६० ॥ लाभेशे केन्द्रकोणे लाभे पापे धनलाभः ॥ ६१ ॥ लाभपे धने धनपे लाभे धनलाभः ॥ ६२ ॥ धनायपौ केन्द्रगौ धनलाभः॥ ६३ ॥ लाभेशे पारावतांद्यंशे धनलाभः ॥ ६४ ॥ लाभेशे केन्द्रकोणे शुभसम्बन्धे धनलाभः ॥ ६५ ॥ शुभान्तरे लाभेशे धनलाभः॥ ६६ ॥ लाभपस्यांशेशे शुभसम्बन्धे धनलाभः॥ ६७ ॥ क्षाच्छावर्थे धनलाभः ॥ ६८ ॥ रंध्रे सौम्या धनलाभः ॥ ६९ ॥ मेषे चन्द्रे घटे मन्दे नक्रे शुक्रे चापेऽर्के पैतृकं धनं न लभते ॥ ७० ॥**

தன ப்ராப்தி யுண்டாகும் யோகம்.—(57) 9க் குடையவன் பலம பெற்று எந்தப் பாவகாரகனுடனோ, எந்தப் பாவேசனுடனோ சேர்ந்தோ, பார்வை பெற்றோ இருக்கின்றானோ அதன் மூல

மாக தன ப்ராப்த்தி யுண்டாகும். (58) 4ல் சூரியனிருந்தால் பிதாவின் தனம் கிடைக்கும். (59) 11க் குடையவனிருக்கும் திக்கினின்றும் தன ப்ராப்தி யுண்டாகும். (60) 11 மிடமாக எந்த ராசியாகிறதோ அந்த ராசி எந்த திக்காகச் சொல்லப்பட்டிருக்கிறதோ (1) அந்த திக்கிலிருந்து தன ப்ராப்தி யுண்டாகும். (61) 11க் குடையவன் கேந்திரத் திரிகோணத்திலிருந்து 11ல் பாபருமிருந்தால் தனலாப முண்டாகும். (62) 11க் குடையவன் 2லும், 2க் குடையவன் 11லும் இருந்தால் தனலாப முண்டாகும். (63) 2, 11க் குடையவர் கேந்திரத்திலிருந்தால் தனலாப முண்டாகும். (64) 11க் குடையவர் பாராவதாதி அம்சமேறினுல் தனலாப முண்டு. (65) 11க் குடையவன் கேந்திரத் திரிகோணமேறி சுபர் ஸம்பந்தம் பெற்றுல் தனலாப முண்டாகும். (66) 11க் குடையவன் இரண்டு சுபர்களுக்கு நடுவிலிருந்தால் (அதாவது: அவர்க்கு 2ல் ஒரு சுபரும் 12ல் வேறு சுபருமிருந்தால் என்பதாம்.) தனலாப முண்டாகும். (67) லாபாதிபதியினுடைய அம்சாதிபதி சுபர் ஸம்பந்தம் பெற்றுல் தனலாப முண்டாகும். (68) புதனும், சுக்கிரனும் 2லிருந்தால் தனலாப முண்டாகும். (69) 6ல் சுபர் இருந்தால் தனலாப முண்டாகும். (70) 6ல் மேஷத்தில் சந்திரனும், கும்பத்தில் சனியும், மகரத்தில் சுக்கிரனும், தனுஸ்ஸில் சூரியனுமிருந்தால் பிதாவினது தனத்தை யடையமாட்டான்.

अंशादङ्के राहौ पराङ्गनासक्तेर्द्रव्यनाशः॥ ७१ ॥ व्यये ज्ञे ज्ञातिविवादाद्धनहानिः ॥ ७२ ॥ सक्रूरेऽन्त्येशे मिथ्याकोशान्तकृत् ॥ ७३ ॥

திரவ்ய நாசமுண்டாகும் யோகம்.—(71) லக்கினம்சத்திற்கு 9ல் ராஹு இருந்தால் பிறர் பெண்டீரின் சேர்க்கையால் தன நாசமுண்டாகும். (72) 12ல் புதனிருந்தால் தாயாதிகளுடன் வாதம் புரிவதன் மூலம் தனஹானி யுண்டாகும். (73) 12க் குடையவன் குரூரனுடன் சேர்ந்தால் பொய்யான இருப்புப் பணத்திற்கு நாசத்தை யுண்டாக்குவான். [இது பெரும்பாலும்

(1) ராசியின் திக்விஷயமாய் நமது பிருஹத்ஜாதகம் 209-வது பக்கத்திற் காண்க,

பாங்கில் நடப்புக் கணக்கு (கரண்ட் அக்கௌண்ட்) வைத்து தந்திரமாக வியாபாரஞ் செய்பவர் விஷயத்தில் பொருந்தும்.]

लग्नेशेऽल्पबले सूर्ययुतेऽर्थेशेऽन्त्ये नीचे वा पापदृष्टे राजदण्डनाद्धनक्षयः ॥ ७४ ॥ लाभेशेऽन्त्येऽन्त्येशेऽर्थे त्रिकेऽर्थेशे वा नीचगे राजदण्डनाद्धनक्षयः ॥ ७५ ॥ षष्ठेऽर्थेशे सपापे नीचगे राजकारकयुते वा राजदण्डनाद्धनक्षयः ॥ ७६ ॥ धनेशेऽन्त्ये व्ययेशेऽर्थे सपापेऽङ्गेशेऽरिगे राजदण्डनाद्धनक्षयः ॥ ७७ ॥ लाभे खेशेऽङ्गेशयुते दुःषष्ट्यंशे राजदण्डनाद्धनक्षयः ॥ ७८ ॥ धनायपौ कुजदृष्टौ पापांशगौ हीनबलौ सपापौ चौराग्निभूपकृतो धननाशः ॥ ७९ ॥ सपापे खेशेऽरिगे क्रूरषष्ट्यंशे धनायपे लोकापवादमूलकधनक्षयः ॥ ८० ॥ धनेशांशेशे सपापे त्रिके लग्नेशदृष्टे चौराग्निभूपकृतो धननाशः ॥ ८१ ॥

ராஜதண்டத்தால் தன நாசமுண்டாகும் யோகம்.—(74) லக்கினேசன் அற்ப பலமுள்ளவனாகி சூரியனுடன் சேர்ந்தும் 2க்குடையவன் 12லோ, நீசனாகவோ, இருந்தும் பாபரால் பார்க்கப்பட்டால் ராஜ சிக்ஷையால் தன நாசமுண்டாகும். (75) 11க்குடையவன் 12லும், 12க் குடையவன் 2லு மிருந்தாலும் 2க்குடையவன் 6, 8, 12லிருந்து நீசனானாலும் ராஜ தண்டத்தால் தன நாச முண்டாகும். (76) 2க் குடையவன் 6லிருந்தும் பாபியுடன் கூடி நீசனாகவும் இருந்து ராஜகாரகனுடன் கூடினாலும் ராஜ சிக்ஷையால் தன நாச முண்டாகும். (77) 2க் குடையவன் 12லும், 12க் குடையவன் 2லு மிருந்து லக்கினாதிபதி பாபியுடன் கூடி 6லிருந்தால் ராஜ சிக்ஷையால் தன நாசமுண்டாகும். (78) 11ல் 10க் குடையவன் லக்கினாதிபனுடன் கூடி கெட்டஷஷ்டியம்சத்திலிருந்தால் ராஜ தண்டத்தால் தனநாசமுண்டாகும். (79) 2, 11க் குடையவர் செவ்வாயினால் பார்க்கப்பட்டு பாபருடன் கூடியும் துர்ப்பலர்களாகியும் பாபாம்சத்திலிருப்பாரானால் திருடர், நெருப்பு, அரசர், இவர்களாற் செய்யப்பட்ட தன நாசமுண்டாகும். (80) 10க் குடையவன் பாபருடன் கூடி 6 லிருந்து 2, 11க் குடையவர் குரூர ஷஷ்டியம்சத்திலிருந்தால் லோகாபவாத மூலமான தன நாசமுண்டாகும். (81) 2க் குடையவனிருக்கும் அம்சாதிபதி பாபருடன் கூடி 6, 8, 12லிருந்து லக்

னேசனுல் பார்க்கப்பட்டால் திருடர், நெருப்பு,அரசன் இவர்கள் மூலமான தனநாச முண்டாகும்.

**धनेशांशेशे त्रिके सपापे क्रूरषष्ट्यंशे निर्धनः॥८२॥ सपापा धनधनेशायेशा निर्धनः ॥ ८३ ॥ व्ययेशांशेशे धनेशयुतदृष्टे निर्धनः ॥ ८४ ॥ नीचेऽर्के केन्द्रे सपापे निर्धनः ॥ ८५ ॥ कोशेशांशेशे कालदण्डांशे निर्धनः ॥ ८६ ॥ लाभे लाभपे वा पापसम्बन्धे निर्धनः ॥ ८७ ॥**

நிர்த்தன யோகம்.—(82) தனேசனிருக்கும் அம்சேசன் 6, 8, 12ல் பாபருடன் கூடி குரூரஷஷ்டியம்சமேறினுல் நிர்த்தனனுவான். (83) 2 மிடமோ, 2க் குடையவனே, 11க் குடையவனே பாபருடன் கூடினுல் நிர்த்தனனுகிறுன். (84) 12க் குடையவனிருக்கும் அம்சேசன் தனேசன் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்றுல் நிர்த்தனனுகிறுன். (85) சூரியன் நீசனுகி பாபருடன் கூடி கேந்திரத்திலிருந்தால் நிர்த்தனனுகிறுன். (86) 2க் குடையவனிருக்கும் அம்சேசன் காலதண்டம் என்ற ஷஷ்டியம்சமேறினுல் நிர்த்தனனுகிறுன். (87) 11மிடத்தில் 11க் குடையவனே பாபஸம்பந்தமோ இருந்தால் நிர்த்தனனுகிறுன்.

**व्यये व्ययेशे वा पापसम्बन्धे पापमूलकधनक्षयः ॥ ८८ ॥**

பாப மூலமுண்டாகும் தனநாச யோகம்.—(88) 12ல் 12க்குடையவனே, பாபஸம்ந்தமோ இருந்தால் பாபமூலமாக தனநாசமுண்டாகும்.

**अन्त्येऽन्त्येशे वा शुभसम्बन्धे धर्ममूलकधनक्षयः ॥ ८९ ॥ शुक्रेज्यौ वा चन्द्रज्ञौ व्यये धर्ममूलकधननाशः ॥ ९० ॥**

தர்மமூலம் தனக்குறைவுண்டாகும் யோகம்.—(89) 12 மிடமோ, 12க் குடையவனே சுபஸம்பந்தம் பெற்றுல் தர்மமூலமாக தனக்குறைவுண்டாகும், (90) சுக்கிரன், குரு இவர்களாவது, சந்திரன் புதன் இவர்களாவது 12ல் இருந்தால் தர்மமூலமாக தனக்குறைவு உண்டாகும்.

**व्ययेशे बलहीने गुलिकादियुते वा षष्ठेशसम्बन्धे शत्रुतो धननाशः॥९१॥ क्रूरांशेऽन्त्येशेऽल्पबले जायेशसम्बन्धे जायाकृतो धननाशः॥ ९२ ॥ अन्त्येशेऽल्पबले भौमसम्बन्धे भ्रातृकृतो धननाशः ॥ ९३ ॥ व्ययपेऽल्पबले पुत्र-**

शसम्बन्धे पुत्रकृतो धननाशः ॥ ९४ ॥ व्ययेशे खेशसम्बन्धे पितृकृतो धननाशः ॥ ९५ ॥ सुखेशसम्बन्धेऽन्त्येशे मातृकृतो धननाशः ॥ ९६ ॥ धनेशेऽरिगे शत्रुकृतो धननाशः ॥ ९७ ॥ धने ज्ञे चन्द्रदृष्टे धनहानिः ॥ ९८ ॥ क्षीणेन्दावर्थे ज्ञदृष्टे सञ्चितधननाशः ॥ ९९ ॥

சத்துரு, ஸ்திரீ, ஸஹோதரன், புத்திரன், பிதா, தாய் இவர்கள் மூலமும், பொதுவிலும் தனநாசமுண்டாகும் யோகம்.—(91) 12க்குடையவன் பலமற்றவனுகவோ, குளிகாதிகளுடன் கூடவோ இருந்து 6க்குடையவனின் *ஸம்பந்தம் பெற்றுல் சத்துருமூலம் தனநாசமுண்டாகும். (92) 12க்குடையவன் குரூர ஷஷ்டியம்சமேறி அற்பபலமுள்ளவனுகவும், 7க் குடையவனின் ஸம்பந்தமும் பெற்றுல் ஸ்திரீ மூலமான தனநாசமுண்டாகும். (93) 12க்குடையவன் அற்பபலமுள்ளவனுகி செவ்வாயின் ஸம்பந்தம் பெற்றுல் ஸஹோதர மூலம் தனநாசமுண்டாகும். (94) 12க் குடையவன் அற்பபலமுள்ளவனுகி 5க் குடையவனின் ஸம்பந்தம் பெற்றுல் புத்திரன் மூலம் தனநாசமுண்டாகும். (95) 12க்குடையவன் 10க்குடையவனின் ஸம்பந்தம் பெற்றுல் பிதாவின் மூலம் தனநாசமுண்டாகும். (96) 12க் குடையவன் 4க் குடையவனின் ஸம்பந்தம் பெற்றுல் தாயின் மூலம் தனநாசமுண்டாகும். (97) 2க் குடையவன் 6மிடத்திலிருந்தால் சத்துரு மூலம் தனநாச முண்டாகும். (98) 2ல் புதனிருந்து சந்திரனுல் பார்க்கப்பட்டால் தன ஹானி (குறைவு) உண்டாகும். (99) தேய்பிறைச் சந்திரன் 2லிருந்து புதனுல் பார்க்கப்பட்டால் தேடிவைத்த பொருளுக்கு நாசமுண்டாகும்.

राह्वर्कजावर्थे शुक्रेन्दुयुते राशीशयुते कुमार्गव्ययः ॥ १०० ॥ कोशे कुजेऽर्थनाशोऽग्निचौरादितः ॥ १०१ ॥ त्रिकोणे जीवे भोजने धननाशः ॥ १०२ ॥ लाभार्थान्त्ये राहुः शयने निर्धनो भ्रमते महीम् ॥ १०३ ॥ कोणेशसम्बन्धी योऽर्थगो ग्रहस्त्रिकेशयुतो धननाशकः ॥ १०४ ॥

* ஸம்பந்தம் என்பது ஒருவர் ராசியில் மற்றவர் இருப்பது, ஒருவருடன் மற்றவர்சேர்ந்திருப்பது, ஒருவரை யொருவர் பார்ப்பது, ஒருவர் கேந்திரத்தில் மற்றவர் இருப்பது, ஒருவர் திரிகோணத்தில் மற்றவர் இருப்பது என 5விதமாகும் என்று காண்க.

கேட்டாடத்தை, போஜனம், இவை மூலமும், மற்றவழியிலும் தனநாசமுண்டாகும் யோகம்.—(100) ராஹு, சனி இவர்கள் 2லிருந்து சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் கூடி 2க் குடையவனுடனும் கூடினுல் கெட்டவழியில் தனநாசமுண்டாகும். (101) 2ல் செவ்வாயிருந்தால் நெருப்பு, திருடர் இவற்ருவ் அர்த்தநாசமுண்டாகும். (102) திரிகோணத்தில் குருவிருந்தால் போஜனத்தால் (அன்னதானத்தாலென்றும் சொல்லலாம்) தனநாசமுண்டாகும். (103) 11, 2, 12 இவ்விடங்களில் ராஹுவிருந்தால் படுக்கைவிஷயத்தில் தனமிழந்து பூமியில் அலேந்து திரிவான். (104) எந்தக் கிரஹமானது திரிகோணேசனுடைய ஸம்பந்தமுள்ளதாய் 6, 8, 12க் குடையவனுடன் சேர்ந்து 2மிடத்திலிருக்குமோ அந்தக் கிரஹம் * தனநாசத்தைச்செய்யும்.

**लग्नेशे रन्ध्रे रन्ध्रेशेङ्गे मारकेशयुते निर्धनः ॥ १०५ ॥ षष्ठेशेङ्गे लग्नेशे षष्ठे मारकेशयुते निर्धनः ॥ १०६ ॥ चन्द्रार्कावङ्गे मारकेशयुतदृष्टे निर्धनः ॥ १०७ ॥ धनकारकात् धने वेदे शरे पापे दरिद्रः ॥ १०८ ॥ स्वकारकात् त्रिषष्ठे शुभे दरिद्रः ॥ १०९ ॥ खे शुभा धने पापा दरिद्रः ॥ ११० ॥**

நிர்தன யோகம்.—(105) 1க் குடையவன் 8லும் 8க் குடையவன் 1லும் மாரகக் கிரஹத்துடன் கூடினுல் நிர்த்தனனவான். (106) 6க் குடையவன் லக்கினத்திலும் 1க் குடையவன் 6லுமிருந்து மாரகேசனுடன் கூடினுல் நிர்த்தனனுகிருன். (107) சந்திர சூரியர்கள் லக்கினத்திலிருந்து மாரகேசனது பார்வை, சேர்க்கை இவற்றைப் பெற்ருல் நிர்த்தனனுகிருன். (108) தனகாரகனுக்கு 2, 4, 5 இவற்றில் பாபரிருந்தால் தரித்திரனுகிருன். (109) தனகாரகனுக்கு 3, 6ல் சுபரிருந்தால் தரித்திரனுகிருன். (110) 10ல் சுபரும், 2ல் பாபருமிருந்தால் தரித்திரனுகிருன்.

**धर्मेशेऽन्त्येऽन्त्येशेऽर्थे तृतीयगेषु पापेषु महादरिद्रः ॥ १११ ॥ केन्द्रगाश्चन्द्रेज्यमन्दा गुलिकारौ सुतान्त्याष्टमगौ महादरिद्रः॥ ११२॥ एकभस्थौ पुष्पवन्तावन्योन्यांशगौ सदा दरिद्रः ॥ ११३ ॥**

---

* பொதுவாய் இம்மாதிரியான விடங்களில் தனநாசம் முதலியன சொல்லப்பட்டபோதிலும் அந்தந்தகிரஹத்தின் தசையானது 3, 5, 7, 9-வது தசையாகவும் வந்தகாலத்திற்ருன் அந்த பலன் நடைபெறும் எனப் பகுத்தறிந்து கொள்ளவேண்டுவது அவசியமாகிறது.

மஹாதாரித்திரிய யோகம்.—(111) 9 மிடத்ததிபன் 12லும், 12 மிடத்ததிபன் 2லும், 3 மிடத்தில் பாபக்கிரஹங்களு மிருக்கு மாகில் மஹாதரித்திரனுகவாவான். (112) சந்திரன், குரு, சனி இவர்கள் கேந்திரத்திலும், குளிகன், செவ்வாய் இவர்கள் 5, 12, 8 மிடங்களிலும் இருந்தால் மஹாதரித்திரனுவான். (113) சந்தி ரன் ஸூர்யன் இவர்கள் ஒரேராசியில் ஒருவர் அம்சத்தில் மற்றவர் என்ற முறையில் மாறி இருந்தால் எப்பொழுதுமே தரித்திரனுவான்.

**पुष्पवन्तौ घटे शेषा नीचर्क्षगा राजपुत्रोऽपि दरिद्रः॥ ११४ ॥ ज्ञेन्द्वारयमा नीचगा मृगे शुक्रे राजपुत्रोऽपि दरिद्रः॥ ११५ ॥ नीचेऽर्के कोणे रन्ध्रे भौमे राजपुत्रोऽपि दरिद्रः ॥ ११६ ॥**

ராஜபுத்திரனும் தரித்திரனுகும் யோகம்.—(114) சூரியன் சந்திரன் இவர்கள் கும்பத்திலும், மீதமுள்ளக்கிரஹங்கள் நீசரா சியிலும் இருந்தால் ராஜபுத்திரனுயினும் தரித்திரனுவான். (115) புதன், சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் நீசராசியிலும், மகரத் தில் சுக்கிரனுமிருந்தால் ராஜபுத்திரனுயினும் தரித்திரனுவான். (116) நீசனுன சூரியன் 1, 5, 9 மிடங்களிலும், 8மிடத்தில் செவ் வாயும் இருந்தால் ராஜபுத்திரனுயினும் தரித்திரனுவான்.

**अङ्गेशो गुरुज्ञकवियुतः केन्द्रगः सर्वसम्पदन्वितः ॥ ११७ ॥ स्वोच्चे स्वमित्रे वा शुभभे शुभैर्दृष्टेऽङ्गेशे सम्पत्तिमान् ॥ ११८ ॥ धनेशेज्यौ धने केन्द्रे सम्पत्तिमान्॥ ११९॥ देवलोकांऽशेर्के सबलेऽङ्गेशे सम्पत्तिमान्॥१२०॥ लग्नेशे बलवति शुभवर्गगे केन्द्रपयुते सम्पत्तिमान्॥ १२१ ॥ लग्नेऽर्के शुभैर्दृष्टे खेऽङ्गेशे सम्पत्तिमान् ॥ १२२ ॥ केन्द्रार्थकोणे लग्नेशेज्ययोगे सम्पत्तिमान् ॥ १२३ ॥ लाभधीस्थेषु सौम्येषु सर्वं भद्रम् ॥ १२४ ॥ धर्मेशेङ्गे तुर्याङ्गेशौ स्वभावावलोकिनौ सम्पत्तिमान् ॥ १२५ ॥**

ஸம்பத்தியுண்டாகும் யோகம்—(117) லக்கினுதிபன், குரு புதன் சுக்கிரன் இவர்களுடன் கூடி கேந்திரத்திலிருந்தால் எல் லாவிதமான ஸம்பத்துடனும்.கூடினவனுயாவான். (118) லக்கி னுதிபன் சுபரின் வீட்டிலோ தனது உச்சவீட்டிலோ, தனது மித்திரன் வீட்டிலோ இருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட் டால் ஸம்பத்துள்ளவனுயாவான். (119) தனுதிபனும், குரு

வும், 2 மிடத்திலோ, கேந்திரத்திலோ இருந்தால் ஸம்பத்துள்ள வனுயாவான். (120) ஸூரியன் தேவலோகம் என்ற அம்சத்திலிருந்து, லக்கினுதிபன் பலம் பெற்றிருந்தால் ஸம்பத்துள்ளவனுயாவான். (121) லக்கினுதிபன் பலம்பெற்று சுபவர்க்கத்தை யடைந்து கேந்திராதிபதியுடன் சேர்ந்தால் ஸம்பத்துள்ளவனுயாவான். (122) ஸூரியன் லக்கினத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டும், லக்கினுதிபன் 10 மிடத்திலுமிருந்தால் ஸம்பத்துள்ள வனுயாவன். (123) கேந்திரம், 2 மிடம், 5, 9 மிடம் இவ்விடங்களில் லக்கினுதிபன் குரு இவர்களின் யோகமிருக்குமானுல் ஸம்பத்துள்ளவனு யாவான். (124) சுபக்கிரஹங்கள் 11, 5, மிடங்களிலிருந்தால் எல்லாம் நல்லதாகவே நடக்கும். (125) 9 மிடத்ததிபன் 1 மிடத்திலிருந்து, 4, 9 மிடத்ததிபர் 2 மிடத்தைப்பார்த்தால் ஸம்பத்துள்ளவனுயாவான்.

**ससौम्येऽर्थेशेऽर्थे केन्द्रे वा कुटुम्बी ॥ १२६ ॥ धने धनेशे वा शुभसम्बन्धे कुटुम्बी ॥ १२७ ॥**

குடும்பியாகும் யோகம்.—(126) சுபக்கிரஹங்களுடன் சேர்ந்த 2 மிடத்ததிபன் 2 மிடத்திலோ கேந்திரத்திலோ இருந்தால் குடும்பியாகவாவான். (127) 2 மிடமோ, இரண்டாமிடத்ததிபனே சுபனுடன் கூடுமானுல் குடும்பியாகவாவான்.

**धनेशे गोपुरांशे धनेशांशपे शुभे सिंहासनांशे पञ्चाशज्जनपालकः ॥ १२८ ॥ धनेशे शुभैर्युते पारावतांशे विंशतिजनपालकः ॥ १२९ ॥ सिंहासनांशे जीवे गोपुरांशे शुक्रे धनेशे ऐरावतांशेऽनेकजनपालकः ॥१३०॥ धनेशे सिंहासने वा पारावतांशे जीवयुतदृष्टे त्रिंशज्जनपालकः॥ १३१ ॥**

50, 20, 30, ஜனங்களுக்குத் தலைவனுகும் யோகம்.—(128) 2க் குடையவன் கோபுராம்சத்திலும், 2 மிடத்ததிபனிருக்கும் அம்சத்தின் நாயகன் சுபனுகவாகி ஸிம்ஹாஸனம் என்ற அம்சத்திலுமிருந்தால் 50 ஜனங்களுக்கு நாயகனுகவாவான். (129) தனுதிபன் சுபக்கிரஹத்தின் ஸம்பந்தம் பெற்று பாராவதம் என்ற அம்சத்திலிருந்தால் 20 ஜனங்களுக்குத்தலைவனுகவாவான். (130) குரு ஸிம்ஹாஸனம் என்ற அம்சத்திலும், கோபுரம் என்ற அம்சத்தில் சுக்கிரனும், தனேசன் ஐராவதம் என்ற அம்சத்திலு

மிருந்தால் அனேகம் ஜனங்களைக் காப்பாற்றுபவனாக விருப்பான். (131) தனாதிபன் ஸிம்ஹாஸனம் என்ற அம்சத்திலோ, பாராவதம் என்ற அம்சத்திலோ இருந்து குருவுடன் சேர்ந்தோ, குருவினால் பார்க்கப்பட்டோ இருந்தால் 30 ஜனங்களை ரக்ஷிப்பவனாக விருப்பான்.

**सपापेऽष्टमेशे पापदृष्टे पापान्तरे पापर्क्षे वा रन्ध्रे वा तथा भूरिपरिभवान्वितोऽन्यथा तद्धीनः ॥ १३२ ॥**

அவமரியாதை யுண்டாகும் யோகம்.—(132) 8மிடத்ததிபன் பாபருடன் கூடியோ, பாபரால் பார்க்கப்பட்டோ, பாபருடைய ராசியிலோ, இரண்டு பாபக்கிரஹங்களின் நடுவிலோ, 8 மிடத்திலோ இருந்தால் அதிகமாய் அவமரியாதையைப் பெறுபவனாக விருப்பான். அவ்வித மில்லாவிடில் அவமரியாதையை யடைய மாட்டான்.

**वृषेऽर्के मीने चन्द्रे मेषे मन्दे कर्के भौमे सम्पद्धीनः ॥ १३३ ॥ भाग्येशे व्यये केन्द्रे पापे धनादिहीनः ॥ १३४ ॥ लग्नान्त्यास्ते सर्वे परिवारक्षयः ॥ १३५ ॥**

தனம், பரிவாரம் இவையற்றிருத்தலின் யோகம்.—(133) விருஷபத்தில் ஸூரியனும், மீனத்தில் சந்திரனும், மேஷத்தில் சனியும், கடகத்தில் செவ்வாயுமிருந்தால் தனமற்றவனாக விருப்பான். (134) பாக்கியாதிபன் 12 மிடத்திலும், கேந்திரத்தில் பாபருமிருந்தால் தனாதிகளற்றவனாவான். (135) எல்லாக் கிரஹங்களும் லக்கினத்திலோ, 12 மிடத்திலோ, 7 மிடத்திலோ இருந்தால் தனது பரிவாரங்களுக்கு நாச முண்டாகும்.

ஜாதகதத்துவத்திற் சொல்லிய தனபாவபலன் முற்றிற்று.

## ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய இரண்டாம் பாவபலன்.

**कौटुंबाद्धर्तव्या मुखं च वाग्दक्षिणाक्षिपूर्वार्थान् ।**
**विद्याभुक्तिविशेषान्दासान्मित्राणि च प्रवदेत् ॥ १ ॥**

(1) 2-வது பாவத்திலிருந்து பாரியை, முகம், வாக், வலது கண், முன்னுள்ள தனங்கள், வித்யாவிசேஷம், புக்தி (ஆஹார) விசேஷம், வேலைக்காரர்கள், மித்திரன் இவைகளைச் சொல்ல வேண்டும்.

लग्नेश्वरेण सहिते यदि वित्तनाथे दुःस्थेऽक्षिनाशनमथास्फुजिदिन्दुयुक्ते ।
नेत्रेश्वरे तनुगते यदि नैशिकान्धः स्वोच्चे शुभग्रहयुते न तथा वदन्ति ॥२॥

भान्वच्छलग्नपतिभिस्सहिते तदीशे जात्यंधको भवति रंध्रव्रणान्त्यगेऽपि ।
रिःफे धरासुतगते नयनं हि वामं नाशं तदा व्रजति सूर्यसुते तदन्यत् ॥३॥

चन्द्रार्कसंयुक्तहरौ विलग्ने शन्यारदृष्टेऽक्षिविनाशमाहुः ।
शुभाशुभैर्बुद्बुदलोचनस्स्याच्छुभैर्नदोषः सहितेक्षणाभ्याम् ॥ ४ ॥

निमीलिताक्षश्च धने सपापे तदीश्वरे शोभनदृष्टियुक्ते ।
लग्नाधिपे पापबहुत्वयोगे यमेन दृष्टे स तु रुग्णनेत्रः ॥ ५ ॥

नेत्रे शुभे तद्भवनेश्वरे वा सौम्यान्विते कारकखेचरेन्द्रे ।
लग्नेश्वरेणापि युतेऽथ दृष्टे विशालदृष्टिस्स नरो विशेषात् ॥ ६ ॥

शन्यारयोगे गुळिकेन युक्ते नेत्रेश्वरे तत्र तु नेत्ररोगः ।
नेत्रे यदा पापबहुत्वयोगे यमेन दृष्टे सति रुग्णनेत्रः ॥ ७ ॥

नेत्रेश्वरस्थांशपतौ सपापे पापग्रहक्षेत्रगते तथैव ।
नेत्राधिपे वासरनायके तु धरासुते वा गुळिकार्कदृष्टे ॥ ८ ॥

उष्णोद्भवेनाप्यथ पित्तकासैर्नेत्रस्य रोगो भवति प्रमादैः ।
अव्याजरोगैर्नयनस्य रोगं तत्स्थानपे दुःस्थगते ससौम्ये ॥ ९ ॥

सहोदरात्मोद्भवशत्रुगेहे कलत्रपुत्रादि लभेत्तथैव ।
रव्यारयुक्ते सति नेत्रनाथे दृष्टे तु ताभ्यां नयनान्तरक्तः ॥ १० ॥

सौम्यग्रहौ कारकभावनाथौ स्यातां शुभाऽदृष्टिरसौम्यता तु ।
पापग्रहैर्वीक्षणयोगतश्च पित्रादिकानां फलमेवमाहुः ॥ ११ ॥

நேத்திர ஸம்பந்தமான பலன்களைப்பற்றிய யோகங்கள்.—(2) 2க் குடையவன் லக்கினாதிபதியுடன் கூட 6, 8, 12 லிருந்தால் கண்ணின் நாசத்தைச் சொல்லுக. அல்லது 2க் குடையவன் சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் கூடி லக்கினத்திலிருந்தால் இரவில் கண் தெரியாது. 2க் குடையவன் தனது உச்சத்தில் சுபக் கிரஹத்துடன் கூடியிருந்தால் முற்கூறிய பலன் சொல்லவேண்டு

வதில்லை. (3) 2க் குடையவன் சூரியன், சுக்கிரன், லக்கினாதி பன் இவர்களுடன் கூடி 6, 8, 12 லிருந்தால் பிறவிக்குருடனாகி றான். 12ல் செவ்வாயிருந்தால் இடது கண் அப்பொழுது நாச மடைகிறது. சனி 12 லிருந்தால் வலது கண் நாசமடைகிறது. (4) சந்திரன், செவ்வாய் இவர்களுடன் கூடினவனாய் சூரியன் லக்கினத்திலிருந்து சனி செவ்வாயினால் பார்க்கப்பட்டால் கண் ணுக்கு நாசமுண்டாகும் என்கின்றனர். சுபர் பாபர் இருவருட னும் சேர்ந்தோ, அல்லது அவர்களின் பார்வைபெற்றோ (சூரி யன்) இருந்தால் நேத்திரத்தில் நீர்வடியும். சுபருடன் மட்டும் சேர்ந்தோ, அல்லது பார்வைபெற்றோ இருந்தால் நேத்திரதோஷ முண்டாகாது. (5) 2மிடம் பாபருடன் சேர்ந்திருந்தால் கண் மூடி யிருக்கும். 2க் குடையவன் சுபரின் பார்வைபெற்று லக் கினாதிபன் அனேகம் பாபருடன் கூடி சனியினால் பார்க்கப்பட் டால் நேத்திரத்தில் ரோகமுண்டாகும். (6) 2ல் சுபரிருந்து 2க் குடையவன் சுபருடன்கூடி 2ம் பாவகாரகனான குருலக்கினா திபதியுடன் சேர்ந்தோ, அல்லது பார்வைபெற்றோ இருந்தால் அந்த மனிதன் அதிகம் அகண்ட கண்ணுள்ளவனாக ஆவான். (7) 2க் குடையவன் சனிசெவ்வாயுடனும், குளிகனுடனும் சேர் ந்திருந்தால் கண்ணில் ரோகமுண்டாகும். 2 மிடத்தில் அனே கம் பாபரிருந்து சனியினால் பார்க்கப்பட்டால் நேத்திர ரோக முண்டாகும். (8) 2க் குடையவனிருக்கும் அம்சநாதன் பாப ருடன் கூடி பாபக்கிரஹத்தின் வீட்டிலிருந்தாலும் அவ்விதமே நேத்திரரோகமுண்டாகும். 2க் குடையவன் சூரியனாகவோ, செவ்வாயாகவோ இருந்து குளிகன் சூரியன் இவர்களால் பார்க் கப்பட்டால் (நேத்திரரோகமுண்டாகும்.) (9) 2க் குடையவன் சுபருடன்கூடி 6, 8, 12 லிருந்தால் உஷ்ணத்தாலுண்டான ரோ கத்தாலும், பித்தம், காசம் இவற்றாலும், மற்றும் தவறுகளாலும் காரணமின்றியுண்டாகும் ரோகங்களாலும், கண்ணுக்குப் பீடை யுண்டாகும். (10) முன் சொன்னபடிக்கான கிரஹம் 3, 5, 6 மிடங்களில் இருந்தால் களத்திரம், புத்திரன் முதலியவரும் முற் கூறியபடியே நேத்திர ரோகத்தையடைவர். 2க் குடையவன் சூரியன், செவ்வாய் இவர்களுடன் கூடினாலும் பார்க்கப்பட்டா

னும் கண்ணின் ஓரத்தில் சிவந்திருக்கும். (11) சுபக்கிரஹங்கள் 2ம் பாவகாரகராகவோ, 2ம் பாவாதிபதியாகவோ இருந்து அவர் களின் பார்வை 2ம் பாவத்திற்குண்டானல் அது சோபனமான தாகவே யாகும். பாபக்கிரஹங்களின் பார்வை சேர்க்கை இவற் றின் மூலம் கெடுதலேதானுண்டாகும். பிதா முதலியோருக்கும் இம்மாதிரியான பலனையே சொல்லுகின்றனர்.

कुटुंबराशेरधिपे ससौम्ये केन्द्रस्थिते स्वोच्चसुहृद्ग्रहे वा ।
सौम्यर्क्षयुक्ते सति जात पुण्यः कुटुंबसंरक्षणवाग्विलासः ॥ १२ ॥

स्वोच्चस्थिते शोभनखेचरेन्द्रे कुटुंबराशौ शुभवीक्षिते वा ।
अनेकसंरक्षणजातपुण्यो लग्नेश्वरे वीर्ययुते स्वतुङ्गे ॥ १३ ॥

गुरौ कुटुंबे स्वपतौ यदि स्याद्भृगौ बुधे तादृशभावनाथे ।
स्वोच्चे सुहृत्क्षेत्रगतेऽथ वंधौ परोपकारी जनरक्षकस्स्यात् ॥ १४ ॥

पापे तु तद्राशिपतौ तदानीं पापेक्षिते पापयुते स्वतुङ्गे ।
लग्नेश्वरे हीनबले सपापे स्वजीवनोपायसहायहीनः ॥ १५ ॥

पापे बहुत्वे स्वकुटुंबराशौ पापेक्षिते हीनबले तदीशे ।
दुःस्थे विलग्नाधिपतौ सपापे स्वजीवनं नास्ति सुखेन तस्य ॥१६॥

पत्यौ कुटुंबस्य तृतीयराशौ स्थिते यदा पुंग्रहसौम्यदृष्टे।
शुभस्थिते खेचरनायके स्यात्स्वतुङ्गगे सर्वजनावनेशः॥ १७ ॥

तन्नाथे गोपुरांशस्थे तन्नाथेशांशपे शुभे ।
सिंहासनांशके वापि पञ्चाशज्जनरक्षकः ॥ १८ ॥

स्वोच्चत्रिकोणायगते कुटुंबराशेः पतौ लग्नपतौ बलाढ्ये ।
कुटुंबनाथस्थितराशिनाथे केन्द्रस्थिते सर्व जनावनेशः ॥ १९ ॥

द्वितीये पापसंयुक्ते कुटुंबेशे तथा स्थिते ।
पापग्रहेण संदृष्टे दुर्घटे भावनं लभेत् ॥ २० ॥

आविंशतेरक्षकस्स्यात्कुटुंबेशे शुभैर्युते ।
पारावतांशके तस्मिन्धने चन्द्रसमन्विते ॥ २१ ॥

स्वोच्चे सुहृद्भे स्वगृहे तदीशे सिंहासने तद्भवनेश्वरे वा ।
पारावतांशे गुरुदृष्टियुक्ते शतत्रयं शासति जातपुण्यः ॥ २२ ॥

कुटुंबनाथे परमोच्चयुक्ते देवेन्द्र पूज्येन समीक्षिते वा ।
तथाविधे तद्भवनेऽपि जातः सहस्ररक्षो भवति प्रतापैः ॥ २३ ॥

सिंहासनांशे त्रिदशेशपूज्ये शुक्रे पुनर्गोपुरसंयुते तु।
ऐरावतांशे धनपे बलाढ्ये जातस्त्वसंख्याजनरक्षकस्स्यात्॥ २४॥

வாக்கு, ஜீவனம், தலைவனாகுதல் இவற்றைப்பற்றிய யோகங்கள்.—(12) 2க் குடையவன் சுபருடன் கூடி கேந்திரத்திலோ, தனது உச்சவீட்டிலோ, மித்திரன் வீட்டிலோ, சுபக்கிரஹத்தின் வீட்டிலோ இருந்தால் அது போழ்து பிறந்தவன் குடும்பரக்ஷணத்திற்குப் போதிய வாக்வைபவமுள்ளவனாவான். (13) 2மிடம் உச்சவீடாகி அதில் சுபக்கிரஹமிருப்பினும், அல்லது பார்ப்பினும், லக்கினாதிபதி பலம்பெற்று தனது உச்சவீட்டிலிருப்பினும் அக்காலம் பிறந்தவன் பலரைரக்ஷிப்பதன் மூலம் கிடைத்த புண்ணிய முள்ளவனாகிறான். (14) 2 மிடத்தில், 2க் குடையவனோ, குருவோ இருந்தாலும், சுக்கிரனோ, புதனோ 2ம் பாவாதிபதியாகி தனது உச்சவீடு, மித்திரன் வீடு, 4 மிடம் இவ்விடங்களிலிருந்தாலும் பரோபகாரியாகவும் ஜனரக்ஷகனாகவும் ஆவான். (15) 2க் குடையவன் பாபியாகி பாபரால் பார்க்கப்பட்டோ, சேர்க்கைபெற்றோ இருந்து தனது உச்சவீட்டிலிருக்க, லக்கினாதிபதி பலமற்று பாபருடன் கூடியு மிருந்தால் தனது ஜீவனோபாயத்திற்குப் போதிய உதவியற்றவனாகிறான். (16) வெகுபாபக்கிரஹங்கள் குடும்பராசியிலும், 2க் குடையவன் பலமற்றவனாயும் பாபரால் பார்க்கப்பட்டும் இருந்து, லக்கினாதிபதி பாபியுடன் கூடி 6, 8, 12லிருந்தால் அவனுக்குத் தனது ஜீவனம் சுகமாக நடைபெறாது. (17) 2ம் பாவாதிபதியானவன் 3மிடத்திலிருந்து புருஷக்கிரஹத்தாலோ, (சூரியன், செவ்வாய், குரு) சுபக்கிரஹத்தாலோ பார்க்கப்பட்டாலும், சூரியன் 9ல் உச்சத்திலிருந்தாலும் எல்லாஜனங்களையும் ரக்ஷிப்பதில் ஸமர்த்தனாயாகிறான். (18) 2க் குடையவன் கோபுராம்சத்திலிருந்து 2க் குடையவனிருக்கும் அம்சநாதன் சுபனாயிருந்து ஸிம்ஹாஸனாம்சத்திலிருந்தால் 50 ஜனங்களை ரக்ஷிப்பவனாகிறான். (19) 2 மிடத்திற்குடையவன் தனது உச்சத்திலோ, திரிகோணத்திலோ, 11 மிடத்திலோ இருந்து லக்கினாதிபதி பலம்பெற்று மிருந்து 2க் குடையவனிருக்கும் ராசிநாதன் கேந்திரத்திலு மிருந்தால் எல்லாஜனங்களையும் ரக்ஷிப்பதில் ஸமர்த்தனாயாகிறான். (20) 2 மிடத்தில் பாபரிருந்

தாலும் 2க் குடையவன் பாபருடன் கூடினாலும் பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் கிடைக்கக் கூடாதவற்றை மனத்தால் சிந்திப்பவனாவான். (21) குடும்பாதிபதி சுபருடன் கூடி பாராவதாம்சமேறியும், 2ல் சந்திரனுமிருந்தால் 20 ஜனங்கள் வரை ரக்ஷிப்பவனாகிறான். (22) 2க் குடையவன் உச்சத்திலோ, மித்திரன் வீட்டிலோ, சொந்தவீட்டிலோ இருந்து ஸிம்ஹாஸனாம்சமேறினாலும், 2க் குடையவன் பாராவதாம்சமேறி குருவின் திருஷ்டியை யடைந்தாலும் அதுபோழ்து பிறந்த புண்ணியவான் 300 பெயர்களை அடக்கி ஆளுபவனாகிறான். (23) 2க் குடையவன் பரமோச்சபாகத்திலிருந்து குருவினால் பார்க்கப்பட்டாலும், அல்லது 2 மிடத்திலுள்ள கிரஹம் பரமோச்சபாகத்திலிருந்து குருவினால் பார்க்கப்பட்டாலும் அப்பொழுது பிறந்தவன் தனது பிரதாபத்தினால் ஆயிரம் பெயர்களை ரக்ஷிப்பவனாகிறான். (24) குரு ஸிம்ஹாஸனாம்சத்திலும், சுக்கிரன் கோபுராம்சத்திலும், 2க் குடையவன் கோபுராம்சத்திலும் இருந்து பலமும் பெற்றால் அது போழ்து பிறந்தவன் அளவு கடந்தவர்களை ரக்ஷிப்பவனாக வாகிறான்.

मुखेशे केन्द्रभावस्थे शुभग्रहनिरीक्षिते ।
मुखे सौम्ययुते वाऽपि सुमुखस्स नरो भवेत् ॥ २५ ॥

प्रफुल्लवदनः श्रीमान्केन्द्रे मुखपतौ यदा ।
स्वोच्चमित्र स्ववर्गस्थे तन्नाथे गोपुरांशके ॥ २६ ॥

पापैर्युते मुखस्थाने तन्नाथे पापसंयुते ।
नीचराशिगते वापि दुर्मुखः पापवीक्षिते ॥ २७ ॥

क्रोधयुक्स नरः पापी तदीशे गुळिकान्विते ।
पापयोगबहुत्वेऽस्मिन्नीचशत्रुवशंगतः ॥ २८ ॥

वाक्स्थानपे सौम्युते त्रिकोणे केन्द्रस्थिते तुङ्गसमन्विते वा ।
शुभेक्षिते पुंग्रहयोगयुक्ते वाग्मी भवेद्युक्तिसमन्वितोऽसौ ॥ २९ ॥

முகத்தைப்பற்றிய பலன்களும், கோபியாகுதல் யுக்திமானாயாகுதல், வாக்மியாகுதல், முதலிய பலன்களும்.—(25) 2க் குடையவன் கேந்திரத்திலிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், 2ல் சுபக்கிரஹமிருந்தாலும் அம்மனிதன் நல்ல முகமுள்ளவனா

கிறான். (26) 2க் குடையவன் கேந்திரத்திலிருந்தாலும், 2க் குடையவன் தனது உச்சவீடு, மித்திரன்வீடு, சொந்தவர்க்கம், இவற்றில் கோபுராம்சத்திலிருந்தாலும் ஜாதகன் மலர்ந்த முக முள்ளவனுகவும், ஸ்ரீமானுகவுமாவான். (27) 2 மிடம் பாபருடன் கூடினுலும், 2மிடத்ததிபன் பாபருடன் கூடினுலும், அல்லது நீசராசியை யடைந்தாலும், பாபரால் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் துர்முகனுக வாகிறான். (28) 2க் குடையவன் குளிகனுடன் கூடினுல் அம்மனிதன் கோபமுள்ளவனுக வாகிறான். வெகு பாபரின் சேர்க்கையிருக்குமாயின் நீசனுகவும், சத்துருவசத்தை யடைந்தவனுகவும் ஆகிறான். (29) 2க் குடையவன் சுபருடன் கூடி திரிகோணத்திலோ, கேந்திரத்திலோ, தனது உச்சராசியிலோ, இருந்து சுபரின் பார்வை பெற்று புருஷக்கிரஹத்தின் சேர்க்கையையும் அடைந்தால் ஜாதகன் யுக்திசாலியாயும் வாக்மியாயும் இருப்பான்.

वाक्स्थानपे देवपुरोहितेन युक्ते यदा नाशगतेऽत्र मूकः ।
पित्रादिकानामियमेव रीतिरुक्ता मुनीन्द्रैर्बहुशास्त्रविद्भिः ॥ ३० ॥

ஊமையாகும் யோகம்.—(30) 2 மிடத்ததிபன் குருவுடன் கூடி 8லிருந்தால் ஊமையாகிறான். பிதா முதலியோருக்கும் இதே ரீதிதான் சொல்லவேண்டுமென வெகு சாஸ்திரமறிந்த மஹருஷிகள் சொல்லுகின்றனர்.

वाचालकः केन्द्रगते तदीशे पारावतांशे परमोच्चभागे ।
सिंहासने देवगुरौ भृगौ वा वर्गोत्तमे सोमसुतेन युक्ते ॥ ३१ ॥
वागीशस्थांशपे सौम्ये स्वोच्चे शुभसमन्विते ।
गोपुरांशगते वापि वाग्मी पटुतरो भवेत् ॥ ३२ ॥
वागीशोऽपि बलान्वितश्शुभयुतो वर्गोत्तमांशेऽपि वा
वाग्मी स्याद्भुवनेश्वरो गुरुयुतः पारावतांशेऽपि वा ।
तन्नाथो भृगुणा बुधेन सहितस्त्वैरावतांशे तथा
स्वोच्चे स्वे सुहृदां गृहे धनपतौ वाक्स्थानकोलाहलः ॥ ३३ ॥

வாசாலகனுகும் யோகம்.—(31) 2 மிடத்ததிபன் கேந்திரத்திலிருந்தாலும், பாராவதாம்ச மேறினுலும், பரமோச்ச பாகத்திலிருந்தாலும், ஸிம்ஹாஸனும்சத்தி லிருந்தாலும், குருவோ சுக்

கிரஹே வர்க்கோத்தமாம்சத்தை யடைந்து புதனுடனும் கூடினாலும் வாசாலகனாக (வெகு பேச்சு பேசுகின்றவனாக) ஆகிறான். (32) 2 மிடத்ததிபனிருக்கும் அம்ச நாதன் சுபனாகவோ சுபருடன் கூடியோ, கோபுராம்ச மேறியோ இருந்தால் வெகு ஸமர்த்தனான வாக்மியாகிறான். (33) 2க் குடையவன் பலம் பெற்றும் சுபருடன் கூடியும், வர்க்கோத்தமாம்சத்திலு மிருந்தால் வாக்மியாக (பேசுந்திறமை யுள்ளவனாக) ஆகிறான். 2க் குடையவன் குருவுடன் கூடி பாராவதாம்சத்தி லிருந்தாலும் அதே பலன் தான் நடக்கும். 2க் குடையவன் சுக்கிரனுடனும், புதனுடனும் கூடி ஐராவதாம்சத்தி லிருந்தாலும், அவ்விதமே தனது உச்ச வீட்டிலோ, தனது மித்திரர் வீட்டிலோ இருந்தாலும் பேசும் விஷயத்தில் தங்குதடையிராது.

सभाजडो वागधिपस्सपापः कर्मस्थितो नीचगतोऽर्कयुक्तः ।
मान्द्यन्विते वाग्भवनेऽर्कयुक्ते पापैस्तु दृष्टस्सजडोऽत्र जातः ॥ ३४ ॥

ஸபையில் ஜடனாகும் யோகம்.—(34) 2க் குடையவன் பாபருடன் கூடி 10 மிடத்திலோ, நீசஸ்தானத்திலோ, சூரியனில் அஸ்தங்கத தோஷமடைந்தோ இருந்தால் ஸபையில் ஜடனாவான். 2ம் வீட்டில் மாந்தியும் சூரியனுமிருந்து பாபர்களாலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஜடனாகிறான்.

केन्द्रे बुधे वागधिपे बलाढ्ये शुक्रे धनभ्रातृगते ससौम्ये ।
स्वोच्चे धने दानवपूजिते वा ज्योतिर्विदां श्रेष्ठतमो नरस्स्यात् ॥३५॥

சோதிடவித்வானாகும் யோகம்.—(35) கேந்திரத்தில் புதனும், 2க் குடையவன் பலம் பெற்றும் சுக்கிரன் சுபருடன் கூடி, 2, 3 மிடங்களிலுமிருந்தாலும், சுக்கிரன் தனது உச்சஸ்தானமாகவான 2-வது வீட்டிலிருந்தாலும் ஜாதகன் சோதிடமறிந்தவர்களுள் சிறந்த மனிதனாகவாகிறான்.

गणितज्ञो भवेज्जातो वाग्भावे भूमिनन्दने ।
ससोमे बुधसंदृष्टे केन्द्रे वा सोमनन्दने ॥ ३६ ॥

वाग्भावपे बुधे स्वोच्चे लग्ने देवेन्द्रपूजिते ।
शनावष्टमसंयुक्ते गणितज्ञो भवेन्नरः ॥ ३७ ॥

केन्द्रत्रिकोणगे जीवे शुक्रे स्वोच्चगते सति ।
वाग्भावपेन्दुपुत्रे वा गणितज्ञो भवेन्नरः ॥ ३८ ॥

கணக்கில் நிபுணனுயாகும் யோகம்.—(36) 2ல் செவ்வாயிருந்து சந்திரனுடன் கூடி புதனுல் பார்க்கப்பட்டாலும், அல்லது புதன் கேந்திரத்திலிருந்தாலும் கணித மறிந்தவனுக வாகிறுன். (37) 2ம் பாவாதிபன் புதனுகி தனது உச்ச வீட்டிலிருந்து குரு லக்கினத்திலும் சனி 4லுமிருக்கப் பிறந்தவன் கணித மறிந்தவனுக வாகிறுன். (38) குரு, கேந்திரத் திரிகோணத்திலும், சுக்கிரன் தனது உச்ச வீட்டிலும் 2ம் பாவாதிபதி புதனுகவு மிருந்தால் கணித மறிந்தவனுக வாகிறுன்.

वाग्भावपे रवौ भौमे गुरुशुक्रनिरीक्षिते ।
पारावतांशगे सौम्ये तत्तद्युक्तिपरायणः ॥ ३९ ॥
गुरुशुक्रौ धनेशौ चेद्रविभौमनिरीक्षितौ ।
मूलत्रिकोणतुङ्गे वा तर्कशास्त्रविदां वरः ॥ ४० ॥

தர்க்கசாஸ்திரம் படிக்கும் யோகம்.—(39) 2ம் பாவாதிபதி சூரியனுகி அங்கு செவ்வாயிருந்து குருசுக்கிரர்களால் பார்க்கப்பட்டு புதன் பாராவதாம் சத்தையடைந்து மிருந்தால் அந்தந்த விஷயத்திற்குகந்தயுக்தியுள்ளவனுக இருப்பான். (40) குருவோ, சுக்கிரனே 2க் குடையவனுகி சூரியன் செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டாலும், அல்லது மூலத்திரிகோணத்திலோ, உச்ச வீட்டிலோ இருந்தாலும் தர்க்கசாஸ்திரமறிந்தவர்களுள் சிறந்தவனுகிறுன்.

संपूर्णबलसंयुक्ते गुरौ तद्भवनेश्वरे ।
दिनेशभृगुसंदृष्टे शाब्दिकोऽयं नरो भवेत् ॥ ४१ ॥

வியாகரணபண்டிதனுகும் யோகம்.—(41) குரு 2ம் பாவாதிபதியாகவாகி ஸம்பூர்ண பலம் பெற்று சூரிய சுக்கிரர்களால் பார்க்கப்பட்டால் வியாகரண மறிந்தவனுக வாகிறுன்.

वाग्भावपे बुधे स्वोच्चे गोपुरांशगते शनौ ।
सिंहासने गुरौ वापि वेदान्तज्ञो भवेन्नरः ॥ ४२ ॥
वेदान्तपरिशीलस्स्यात्केन्द्रकोणे गुरौ सति ।
बुधेन भृगुणा दृष्टे शनौ पारावतांशके ॥ ४३ ॥

**उत्तमांशे भृगौ लग्ने केन्द्रे वा तद्विधे भृगौ ।**
**देवलोकगते चन्द्रे वेदान्तज्ञान पारगः ॥ ४४ ॥**

வேதாந்த பண்டிதனுகும் யோகம்.—(42) புதன் 2ம் பாவாதிபதியாகித் தனது உச்ச வீட்டிலிருக்க சனி கோபுராம்சமேறியிருக்க, குருஸிம்ஹாஸனும்சமேறியிருக்கப் பிறந்தவன் வேதாந்தமறிந்தவனுக வாகிறுன். (43) குரு கேந்திரத்திரிகோணத்திலிருந்து சனியினுலும் புதனுலும் சுக்கிரனுலும் பார்க்கப்பட்டு பாராவதாம்சத்திலிருந்தால் வேதாந்த பரிசீலனஞ் செய்தவனுகிறுன். (44) சுக்கிரன் லக்கினத்தில் உத்தமாம்சமேறியோ, உத்தமாம்சமேறி கேந்திரத்திலோ இருக்க, சந்திரன் தேவலோகாம்சமேறியிருந்தால் வேதாந்தக்ஞானத்தின் கரைகடந்தவனுக வாகிறுன்.

**षट्शास्त्रवल्लभः केन्द्रे जीवे दानवपूजिते ।**
**सिंहासने गोपुरांशे वाग्भावस्थांशके बुधे ॥ ४५ ॥**

6 சாஸ்திரமறியும் யோகம். — (45) குரு கேந்திரத்திலும், சுக்கிரன் ஸிம்ஹாஸனும்சத்திலும் அல்லது கோபுராம்சத்திலும், புதன் 2ம் பாவாதிபனிருக்கும் அம்சத்திலும் இருக்கப் பிறந்தவன் 6 சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனுகவாகிறுன்.

**विप्रलंभो धनेशस्थराशीशस्थांशपे शनौ ।**
**सपापे केन्द्रकोणे वा भौमेप्येवं विनिर्दिशेत् ॥ ४६ ॥**

வஞ்சகனுகும் யோகம். — (46) 2ம் பாவாதிபனிருக்கும் ராச்யதிபனிருக்கும் அம்சத்திற்கு அதிபதி சனியாகி பாபியுடன் கூட கேந்திரத் திரிகோணத்திலிருந்தாலும் அல்லது செவ்வாய் முற்கூறியவாறு இருப்பினும் ஜாதகன் வஞ்சனுகவாகிறுன்.

**परिहासकरो नित्यं भानुस्थितनवांशपे ।**
**वाग्भावस्थे बलाढ्ये तु तस्मिन्वैशेषिकांशगे ॥ ४७ ॥**

பரிஹாஸதுசலனுகும் யோகம்.—(47) சூரியனிருக்கும் நவாம்சாதிபன் 2ம் பாவத்திலிருந்து பலம்பெற்றுலும், அல்லது அந்த நவாம்சாதிபதி வைசேஷிகாம்சத்திலிருந்தாலும், எப்பொழுதும் பரிஹாஸஞ்செய்கிறவனுக வாகிறுன்.

गुरौ बलाढ्ये धनराशियुक्ते तदीश्वराक्रान्तनवांशनाथे ।
केन्द्रत्रिकोणे शुभवीक्षिते वा क्रमान्तविच्छास्त्रपरायणश्च ॥ ४८ ॥

लग्नेश्वरे धनस्थे लग्ने वा सौम्यसंयुते तुङ्गे ।
पारावते तदीशे जातो निगमान्तविद्व्यये शुक्रे ॥ ४९ ॥

க்ரமாந்த வேதாத்யயனம், சாஸ்திர பாண்டித்யம் இவை யுண்டாகும் யோகம்.—(48) குரு பலம்பெற்று 2ம் பாவத்திலிருக்க, 2ம் பாவாதிபனிருக்கும் நவாம்சாதிபன் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்து சுபர் வீக்ஷணம் பெற்றால் * க்ரமம் முடிய வேதாத்யயனஞ்செய்து சாஸ்திராப்யாஸமும் செய்தவனாக வாகிறான். (49) லக்கினாதிபன் 2 லிருந்தாலும், லக்கினத்தில் சுபரிருந்து உச்சத்திலிருந்தாலும், லக்கினாதிபதி பாராவதாம்சத்திலிருந்தாலும் 12ல் சுக்கிரனிருந்தாலும் ஜாதகன் வேதாந்தமறிந்தவனாக வாகிறான்.

लग्नेश्वरस्थांशपतिस्थराशि नाथस्थितांशाधिपतौ बलाढ्ये ।
वैशेषिकांशे शुभदृष्टियुक्ते योगे बहुत्वे धनलाभमाहुः ॥ ५० ॥

वित्तेश्वरेण सहिते भवराशिनाथे कर्माधिपस्थनवभागपदृष्टियुक्ते ।
वैशेषिकांशकयुते परमोच्चभागे योगे बहुत्वधनलाभ मिहाहुरार्याः ॥

धर्माधिपेन सहिते धनराशिनाथे लग्नेश्वरस्थितनवांशपतीश्वरेण ।
दृष्टे चतुष्टयगते शुभदृष्टियोगे जातस्तु भूरिधनलाभमुपैति बाल्ये ॥

लग्नार्थलाभभवने शुभखेचरेन्द्रे स्वोच्चे सुहृद्गृहगतेऽत्र विशेषितांशे।
तुङ्गांशके धनपतिस्थनवांशनाथ दृष्टे बहुत्वधनलाभमुपैति बाल्ये ॥

தனலாபமுண்டாகும் யோகம்.—(50) லக்கினாதிபதியிருக்கும் அம்சநாதன் எந்த ராசியிலிருக்கின்றானோ அந்த ராசி நாதனிருக்கும் அம்சாதிபதியானவன் பலம் பெற்று வைசேஷிகாம்சமேறி சுபரின் பார்வையையும் பெற்றால் இவ்வித வெகு யோகத்தில் பிறந்தவனுக்கு தனலாப முண்டெனப் பெரியோர் சொல்லுகின்றனர். (51) 11க்குடையவன் 2க்குடையவனுடன் சேர்ந்து 10க்குடையவனிருக்கும் நவாம்சாதிபதியின் வீக்ஷணத்தையும் அடை

---

* வேதாத்யயனஞ் செய்வதில் முதலில் ஸம்ஹிதை, பிறகு பதம், பிறகு க்ரமம் என முறை யிருக்கிறது.

ந்து வைசேஷிகாம்சத்திலோ, பரமோச்ச பாகத்திலோ இருந்தால் இவ்வித யோகத்தில் அதிகமான தனலாபத்தைச் சொல்லுகின்றனர். (52) 2 மிடத்ததிபன் 9 மிடத்ததிபனுடன் கூடியும் லக்கினுதிபதியிருக்கும் நவாம்சபதியினுல் பார்க்கப்பட்டும் கேந்திரத்திலு மிருந்து சுபரின் திருஷ்டியுடனும் கூடினுல் ஜாதகன் பால்யத்தில் அதிக தனலாபத்தை யடைகிறுன். (53) 1, 2, 11மிடங்களில் சுபக்கிரஹமிருந்து அது உச்ச வீடாகவோ, மித்திரன் வீடாகவோ ஆகி இவ்விடத்திலமையும் வைசேஷிகாம்சம் உச்ச நவாம்சமாகவுமாகி 2க் குடையவனிருக்கும் நவாம்சபதியினுல் பார்க்கவும் பட்டால் பால்யத்தில் அதிகமான தனலாபத்தை யடைகிறுன்.

लग्नेशे धनराशिस्थे धनेशे लाभराशिगे ।
लाभेशे वापि लग्नस्थे बहुनिध्यादिकं भवेत् ॥ ५४ ॥

புதையல் கிடைக்கும் யோகம்.—(54) லக்கினேசன் 2லும், 2க் குடையவன் 11லும், அல்லது 11க் குடையவன் லக்கினத்திலு மிருக்கப் பிறந்தவனுக்கு வெகுவான புதையல் முதலியன கிடைக்கும்.

सर्वग्रहादतिबली यदि लग्ननाथः केन्द्रस्थितस्त्रिदशपूजितसंयुतश्च ।
वैशेषिकांशकयुतो धनराशिनाथो वित्तं स्ववीर्यबलतोर्जितमाहुरार्याः॥५५॥
लग्नेशसंयुतनवांशपतिस्थराशि नाथो बलेन सहितो धनपस्य मित्रम् ।
केन्द्रत्रिकोणसहितः स्वगृहेऽथ यद्वा जातः स्ववीर्यधनमेति बहुप्रकारैः॥

वित्तेश्वरो लाभविलग्नपाभ्यां युक्तस्त्रिकोणे यदि केन्द्रराशौ ।
शुभेक्षितः कालबलान्वितश्च जातस्स्वीर्याद्धनमेति मध्ये॥ ५७ ॥
अन्त्ये धनं याति धनेशयुक्तराशौ विलग्नेशयुते ससौम्ये ।
तदीश्वरे लग्नगते बलाढ्ये लाभेश्वरादेवमुदाहरन्ति ॥ ५८ ॥

ஸ்வார்ஜித தனமுண்டாகும் யோகம்.—(55) லக்கினுதிபதியானவன் எல்லாக் கிரஹங்களைக் காட்டிலும் அதிகம் பலம்பெற்று கேந்திரத்திலிருந்து குருவினுல் பார்க்கவும் பட்டு, 2க் குடையவன் வைசேஷிகாம்சத்திலு மிருந்தால் ஜாதகன் தனது வீர்ய பலத்தைக் கொண்டு அதிகமான நிலைத்ததனத்தை யடைகிறுன் எனப் பெரியோர் கூறுகின்றனர். (56) லக்கினேசனுடன் கூடின

நவாம்சபதி யிருக்கும் ராசிநாதன் பலத்துடன் கூடினவனாய் 2க் குடையவனுக்கு மித்திரனாகி கேந்திரத் திரிகோணத்திலாவது, சொந்த வீட்டிலாவது இருக்கப் பிறந்தவன் வெகுப் பிரகாரங்க ளால் தனலாபத்தை யடைகிறான். (57) 2க் குடையவன் 11, 1க் குடையவனுடன் கூடித் திரிகோணத்திலோ, கேந்திரத்திலோ இருந்து கால பலமும் பெற்று சுபர் பார்வையையும் பெற்றால் ஜாதகன் நடு வயதில் தன் முயர்ச்சியால் தன்லாபத்தை யடைகி றான். (58) 2க் குடையவனிருக்கும் ராசியில் லக்கினாதிபதி சுப ருடன் கூட இருந்து அந்த ராசி நாதன் பலம் பெற்று லக்கினத் திலுமிருந்தால் கடை வயதில் தனலாபத்தை யடைகிறான். முற் கூறியபடி 11க் குடையவனிருப்பதைக் கொண்டும் இதே பல னைச் சொல்லுகின்றனர்.

तृतीयराशौ धनलग्ननाथौ बलान्वितौ पुंग्रहदृष्टियुक्तौ ।
तदीश्वरेणपि युतौ प्रदृष्टौ भ्रातुर्धनं याति विशेषितांशे ॥ ५९ ॥
तृतीयभावाधिपतौ धनस्थे तत्र स्थिते कारकखेचरेन्द्रे ।
दृष्टे युते वा तनुपेन जातो भ्रातुर्धनं याति विशेषितांशे ॥ ६० ॥
परस्परं वित्तपलग्ननाथौ निरीक्षितौ केन्द्रयुतौ शुभांशे ।
निरीक्षितौ लग्नशुभेश्वराभ्यां जातो धनं याति बहुप्रकारैः ॥ ६१ ॥

பிராதாவின் தனம் கிடைக்கும் யோகம்.—(59) 3 மிடத் தில் 2, 1க் குடையவர்கள் பலம் பெற்று இருந்து புருஷக் கிர ஹத்தின் (சூரியன், செவ்வாய், குரு இவர்களின்) சேர்க்கை, அல்லது பார்வை இவற்றை யடைந்தும், 3க் குடையவனின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்று வைசேஷிகாம் சத்திலு மிருக்கப் பிறந்தவன் பிராதாவின் தனத்தை யடைகி றான். (60) 3ம் பாவாதிபன் 2 லிருந்து 3ம் பாவகாரகனான செவ்வாயும் அங்கிருந்து லக்கினாதிபதியின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்று வைசேஷிகாம்சத்திலு மிருக்கப் பிறந்தவன் பிராதாவின் தனத்தையடைகிறான். (61) 2க்குடை யவனும், லக்கினாதிபதியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண் டு கேந்திரத்தில் சுபாம்சத்திலிருந்தாரானாலும், லக்கினாதிபதி 9க் குடையவன் இவர்களால் பார்க்கப்பட்டார்களானாலும் ஜாதகன் வெகுப் பிரகாரமான தனத்தை யடைகிறான்.

वित्तेश्वरं पश्यति लग्ननाथे युते स्ववीर्याद्धनमेति जातः ।
तृतीयभावाधिपकारकाभ्यां दृष्टे युते तादृशमेति वित्तम् ॥ ६२ ॥

दृष्टे युते वित्तपतौ बलाढ्ये सुखेश्वरेणापि धनं जनन्याः ।
बंधोस्सकाशादथवा कृषेश्च धनं प्रयात्यत्र विशेषितांशे ॥ ६३ ॥

दृष्टे युते वित्तपतौ धनस्थे तत्रस्थिते कारकखेचरेन्द्रे ।
दृष्टे युते वा तनुपेन जातो भ्रातुर्धनं याति विशेषितांशे ॥ ६४ ॥

पुत्रेशतत्कारकखेचराभ्यां तथाविधे वित्तपतौ बलाढ्ये ।
दृष्टे युते लग्नपतौ बलाढ्ये वैशेषिकांशे सुततो धनं स्यात् ॥ ६५ ॥

वैशेषिकांशे यदि लग्ननाथे जातः स्वपुत्रार्जितमेति वित्तम् ।
षष्ठेशतत्कारकखेचराभ्यां तथाविधे वित्तपतौ बलाढ्ये ॥ ६६ ॥

शत्रोस्सकाशात्तु धनं प्रयाति वैशेषिके लग्नपतौ बलाढ्ये ।
कलत्रतत्कारकयोस्तथैव वित्तं कलत्राल्लभते हि जातः ॥ ६७ ॥
पितुर्धनं कारकभावपाभ्यां गुरोस्सकाशादपि धर्ममूलात् ।

कर्मेशतत्कारकदृष्टियोगाद्धनं स्वदानग्रहणात्स्वकीर्त्या ॥
लाभेशतत्कारकदृष्टियोगादेवं वदन्त्यत्र धने बहुत्वम् ॥ ६८ ॥

धने पापग्रहाः प्रोक्ता बलाढ्या स्ते तथा भवेत् ।
नीचारिमूढभावस्थैर्दृग्योगात्खेचरैरपि ॥ ६९ ॥

तत्तद्भावाधिपैर्वित्तनाशस्तन्मुखतो भवेत् ।
सहोत्थबंधुपुत्रारिकलत्रादेरयं क्रमः ॥ ७० ॥

தன் முயற்சி, மாதா, பிராதா, புத்திரன், சத்துரு, களத்திரம், தானம், தர்மம் இவை மூலம் தனலாப முண்டாகும் யோகம்.— (62) லக்கினாதிபதி 2க் குடையவனைப் பார்த்தாலும், அவனுடன் சேர்ந்தாலும் ஜாதகன் தன் முயற்சியால் தனத்தை யடைகிறான். அல்லது 3க் குடையவன் செவ்வாய் இவர்களின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்றாலும் முற்கூறியபடியே (தன் முயார்ச்சியால்) தனத்தை யடைகிறான். (63) 2க் குடையவன் பலம் பெற்று வைசேஷிகாம்சத்திலிருந்தாலும், 4க் குடையவனின் பார்வை, அல்லது சேர்க்கை இவற்றைப் பெற்றாலும் தாயின் தனத்தை யடைகிறான். அல்லது பந்துக்களிடமிருந்தாவது, கிருஷித்தொழில் மூலமாவது தனத்தை யடைகிறான். (64) 2க்

குடையவன் (4க் குடையவனின்) சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப்பெற்று 2லிருந்து 2ம் பாவகாரகனுன குருவும் அங்கிருந்து லக்கிஞதிபதியின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெற்று வைசேஷிகாம்சத்திலு மிருந்தால் பிராதாவின் தனத்தை அடைகிறுன். (65) 2க் குடையவன் பலம் பெற்று 5க் குடையவன், 5ம் பாவகாரகனுன குரு இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப்பெற்றும்,லக்கிஞதிபதி பலம் பெற்று வைசேஷிகாம்சத்திலு மிருந்தால் புத்திரனிடமிருந்து தனத்தை யடைகிறுன். (66) லக்கிஞதிபதி வைசேஷிகாம்சத்திலிருந்தால் ஜாதகன் தனது புத்திரன் தேடின தனத்தை யடைகிறுன். 2க்குடையவன் பலம் பெற்று வைசேஷிகாம்சமேறி 6க் குடையவன் 6ம் பாவகாரகர்களான சனி, செவ்வாய் இவர்களுட னிருந்தால் (தனது புத்திரன் தேடின தனத்தை யடைகிறுன்.) (67) லக்கிஞதிபதி பலம் பெற்று வைசேஷிகாம்ச மேறினுல் சத்துருவினிடமிருந்து தனத்தை யடைகிறுன். 7க் குடையவன், 7ம் பாவகாரகனுன சுக்கிரன் இவர்கள் வைசேஷிகாம்ச மேறியிருந்தால் ஜாதகன் களத்திர மூலம் தனத்தை யடைகிறுன். (68) 9க் குடையவன், 9ம் பாவகாரகர்களான சூரியன், குரு இவர்கள் வைசேஷிகாம்சமேறினுல் பிதாவின் தனத்தை யடைவதுடன், குருவி (ஆசாரிய) னிடமிருந்தும், தர்ம மூலமாகவும் தனத்தை யடைகிறுன். 10க் குடையவனும், 10ம் பாவகாரகர்களான குரு, சூரியன், புதன், சனி இவர்களும், சேர்ந்தும் ஒருவரை யொருவர் பார்த்து மிருந்தால் தானம் செய்தல், அல்லது தானம் வாங்கல், அல்லது நல்ல கீர்த்தி இவற்ருல் தனத்தை யடைகிறுன். இவ்விதமே 11க் குடையவன் 11ம் பாவகாரகனுன குரு இவர்களின் திருஷ்டி, அல்லது பார்வை இவற்றைக் கொண்டு இந்த தன விஷயத்தில் ஆதிக்கியத்தைப் பெரியோர் சொல்லுகின்றனர். (69) 2 மிடத்திலிருக்கும் பாபக்கிரஹங்கள் அதிகம் பலமுள்ளவரெனப்படுவர். நீசமாகவோ, சத்துரு வீட்டி லிருக்கின்றதாகவோ, அஸ்தங்கதமாகவோ பாவத்திலிருக்கும் கிரஹங்களின் சேர்க்கை பார்வை இவற்றைக் கொண்டும் 2ம் பாவத்திலுள்ளவர் பலம் பெற்றவராகிறுர். (70) அந்தந்த பாவாதிபர்களைக்

கொண்டு அவரவர் மூலம் வித்த நாசமுண்டாகும். ஸஹோதரன், பந்து, புத்திரன், சத்துரு, களத்திரம் ஆகியவர் விஷயத்திலும் இதே முறை தான் காணத்தக்கது.

लग्नाधिपे हीनबले सपापे रि:फे धनेशे दिननाथयुक्ते ।
नीचस्थिते वाऽशुभदृष्टियुक्ते जातस्य वित्तं हरति क्षितीशः ॥ ७१ ॥

व्ययेशे धनभावस्थे रि:फस्थे लाभनायके ।
दु:स्थे धनेशे नीचे वा राजदण्डाद्धनक्षयः ॥ ७२ ॥

धनेशे नाशराशिस्थे सपापे नीचराशिगे ।
राजकारकसंयुक्ते राजदण्डाद्धनक्षयः ॥ ७३ ॥

धनव्ययेशौ व्ययवित्तसंस्थौ लग्नेश्वरेणापि निरीक्षितौ चेत् ।
लग्नाधिपे नाशगते सपापे राज्ञां प्रकोपाद्धननाशमाहुः ॥ ७४ ॥

कर्मेश्वरे लाभगते विलग्ननाथेन युक्ते यमकंटकांशे ।
दंष्ट्राकराळांशगतेऽथवापि राज्ञां प्रकोपाद्धननाशमाहुः ॥ ७५ ॥

धनायपौ भूमिजदृष्टियुक्तौ क्रूरांशगौ हीनबलौ सपापौ ।
चोरादिभावाधिपदृष्टियुक्तौ चोराग्निभूपैर्धननाशमेति ॥ ७६ ॥

कर्मेश्वरे नाशगते सपापे क्रूरादिषष्ट्यंशयुते विशेषात् ।
धनायपाभ्यां सहिते तदानीं लोकापवादाद्धननाशमाहुः ॥ ७७ ॥

वित्तेशसंयुक्तनवांशनाथयुक्तांशकस्थानपतौ सपापे ।
दु:स्थे विलग्नेश्वरदृष्टियुक्ते चोराग्निभूपैर्धननाशमेति ॥ ७८ ॥

ராஜதண்டம், திருடன், லோகாபவாதம், நெருப்பு இவை மூலம் தனநாச முண்டாகும் யோகம்.—(71) லக்கினுதிபன் பலமற்றவனுய் பாபியுடன் கூட 12லிருக்க 2க் குடையவன் சூரியனுடன் கூடி நீசத்திலிருந்து அசுபர் பார்வையும் பெற்ருல் ஜாதகனுடைய பணத்தை அரசன் அபஹரித்து விடுகிருன். (72) 12க் குடையவன் 2லும் 11க் குடையவன் 12லும் 2க் குடையவன் 6, 8, 12லோ நீசனுகவோ இருந்தால் ராஜ தண்டத்தால் தனநாச முண்டாகும். (73) 2க் குடையவன் 8லிருந்து பாபருடன் கூட நீசராசியிலு மிருந்து ராஜகாரகனுடன் சேர்ந்துமிருந்தால் ராஜதண்டத்தால் தனநாச முண்டாகும். (74) 12க் குடையவன் 2லும், 2க் குடையவன் 12லுமாக மாறியிருந்து லக்

கினதிபதியினால் பார்க்கப்பட்டாரானாலும், லக்கினதிபன் பாபருடன் கூடி 8லிருந்தாலும் ராஜகோபத்தால் தனநாசத்தைச் சொல்லுகின்றனர். (75) 10க் குடையவன் லக்கினதிபதியுடன் கூட 11 மிடத்தில் யமகண்டகாம்சத்திலோ, * தம்ஷ்ட்ரா கராளாம்சத்திலோ இருந்தால் ராஜ கோபத்தால் தனநாசத்தைச் சொல்லுகின்றனர். (76) 2, 11க் குடையவர் செவ்வாயின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றை யடைந்தும் பலமற்றவர்களாகவும், பாபருடன் கூடினவர்களாகவும், குரூராம்சத்தை யடைந்தவர்களாகவும், சோராதி பாவ (6-வது பாவம்) த்திற்கு அதிபதியின் திருஷ்டி அல்லது பார்வை இவற்றைப் பெற்றவர்களாகவுமானால் திருடர், நெருப்பு, அரசர் இவர்களால் தனநாச முண்டாகிறது. (77) 10க் குடையவன் பாபியுடன் கூடி 8லிருந்து குரூராதி ஷஷ்டியம்சத்தில் விசேஷித்திருந்து 2, 11க் குடையவருடனும் கூடினால் அது போழ்து லோகாபவாதத்தால் தனநாசத்தை யடைகிறான் என்கின்றனர். (78) 2க்குடையவனிருக்கும் நவாம்சநாதனிருக்கும் அம்சபதியான கிரஹம் பாபியுடன் கூடி 6, 8, 12 லிருந்து லக்கினதிபதியினுடைய திருஷ்டியைப் பெற்றால் திருடர், நெருப்பு, அரசர் இவர்களால் தனநாசத்தை யடைகிறான்.

धनेशस्थनवांशस्य नाथो दुःस्थोऽथ पापयुक् ।
क्रूरांशकगतो वापि निर्धनोऽयं भवेन्नरः ॥ ७९ ॥

धने क्रूरादिसंयुक्ते तदीशे पापसंयुते ।
तथैव लाभराशीशे धनहीनो भवेन्नरः ॥ ८० ॥

व्ययेशसंयुक्तनवांशनाथो युक्तो धनेशेन निरीक्षितो वा ।
नीचार्कगो हीनबलस्सपापः केन्द्रस्थितश्चेदपि निर्धनस्स्यात् ॥ ८१ ॥

धनेशाश्रितराशीशसंयुक्तांशपतिर्यदि ।
कालदण्डाद्यंशयुक्तो निर्धनोऽयं भवेन्नरः ॥ ८२ ॥

நிர்த்தன யோகம்—(79) 2க் குடையவனிருக்கும் அம்சநாதன் 6, 8, 12 லிருந்து பாபருடனும் கூடினாலும், குரூராம்சத்திலிருந்தாலும் மனிதன் நிர்த்தன (பணமற்றவ) னாக வாகிறான்.

* 49-வது ஷஷ்டியம்சம் தம்ஷ்ட்ராகராளாம்ச மெனப்படும்,

(80) 2ல் குரூராதி கிரஹமிருந்து 2க் குடையவன் பாபருடன் கூடினாலும், அவ்விதமே 11க் குடையவன் பாபருடன் கூடினாலும் ஜாதகன் தனஹீனனாகவாகிறான். (81) 12க் குடையவனிருக்கும் நவாம்சநாதன் 2க் குடையவனுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும், அல்லது நீசனான சூரியனில் அஸ்தங்கதமடைந்து பலமற்றவனாய் பாபருடனும் கூடி கேந்திரத்திலிருந்தபோதிலும் கூட தனமற்றவனாகவே ஆகிறான். (82) 2க் குடையவனிருக்கும் ராசி நாதனிருக்கும் அம்சாதிபதியானவன் (1) காலம், (2) தண்டாயுதம் முதலிய அம்சத்திலிருந்தால் மனிதன் நிர்த்தனனாக வாகிறான்.

यत्किञ्चिद्धनसंयुक्तो धनेशे केन्द्रकोणगे ।
क्रूरषष्ट्यंशसंयुक्ते नीचस्थेऽर्कयुतेऽपि वा ॥ ८३ ॥
यत्किंचिद्वित्तमायाति लाभेशस्थांशराशिपे ।
गुरुणा भृगुणा दृष्टे क्रूरषष्ट्यंशसंयुते ॥ ८४ ॥

சிறிதளவு தனலாபமும், தனநாசமு முண்டாகும் யோகம்.— (83) 2க் குடையவன் கேந்திர கோணத்திலிருந்து குரூர ஷஷ்டியம்சத்திலோ, நீச வீட்டிலோ, சூரியனில் அஸ்தங்கத மடைந்தோ இருந்தாலும் ஏதோ குறைந்த தனமுள்ளவனாக வாகிறான். (84) 11க் குடையவனிருக்கும் அம்சம், ராசி இவற்றிற்குடையவன் குருவினாலோ, சுக்கிரனாலோ பார்க்கப்பட்டு குரூர ஷஷ்டியம்சத்திலு மிருந்தால் குறைந்த தனலாப முண்டாகிறது.

लाभलग्नधनेशानां युक्तांशाः क्रूरसंज्ञकाः ।
केन्द्रत्रिकोणयुक्तानामुत्पन्नो धनिको भवेत् ॥ ८५ ॥
वैशेषिकांशे धनपे स्वोच्चमूलत्रिकोणगे ।
क्रूरषष्ट्यंशसंयुक्ते लाभेशे वार्थनाशभाक् ॥ ८६ ॥
उत्पन्नो धनिको लग्ननाथे वैशेषिकांशगे ।
धनेशे क्रूरषष्ट्यंशे चोक्तौ केन्द्रगतौ तथा ॥ ८७ ॥
सद्यो धनी धनेशेन कर्मनाथो युतो यदि ।
कर्मेशस्थांशपतिना लाभनाथस्तथा विदुः ॥ ८८ ॥

(1) 32-வது ஷஷ்டியம்சம். (2) 53-வது ஷஷ்டியம்சம்.

लग्नेशे धनराशिस्थे लाभेशे कर्मसंयुते ।
धनेशस्थांशपे सौम्ये धनिको नामतो भवेत् ॥ ८९ ॥

தனலாபம், தனநாசம் இவையுண்டாகும் யோகம்.—(85) 11. 1, 2க் குடையவர்கள் கேந்திரத் திரிகோணத்திலிருந்து அவர்கள் இருக்கும் அம்சங்கள் குரூராம்சங்களாக வாகுமானால் ஜாதகன் தனிகனாக வாகிறான். (86) தனது உச்சவீடு, மூலத் திரிகோணவீடு இவற்றிலிருக்கும் 2க் குடையவன் வைசேஷி காம்ச மேறினாலும், 11க் குடையவன் குரூர ஷஷ்டியம்ச மேறினாலும் அர்த்த நாசத்தை யடைகிறான். (87) லக்கினாதிபதி வைசேஷிகாம்சத்திலும், 2க் குடையவன் குரூர ஷஷ்டியம்சத்திலுமிருந்து லக்கினாதிபதி, 2க் குடையவன் இருவரும் கேந்திரத்திலிருந்தாலும் ஜாதகன் தனிகனாகிறான். (88) 2க் குடையவனுடன் 10க் குடையவன் கூடுவானானாலும், 10க் குடையவனிருக்கும் அம்சாதிபதியுடன் 11க் குடையவன் கூடுவானானாலும் ஜாதகன் அப்பொழுதே (அதாவது: திடீரென) தனிகனாகிறான். (89) 1க் குடையவன் 2லிருந்து, 11க் குடையவன் 10லிருந்து 2க் குடையவனிருக்கும் அம்சபதி சுபனானால் பெயருக்குமட்டும் தனிகனாவான்.

सहस्रनिष्कभर्ता स्याल्लग्नेशस्थनवांशपे ।
धनेशस्थांशपे सौम्ये गुरुणा वा निरीक्षिते ॥ ९० ॥
लग्नेशे धनराशिस्थे लभेशे कर्मसंयुते ।
लाभाधिपेन संदृष्टे गुरुणा वा निरीक्षिते ॥ ९१ ॥
सहस्रनिष्कभर्तास्याल्लग्नेशस्थनवांशपे ।
गोपुरांशगते कर्म नाथेन सति वीक्षिते ॥ ९२ ॥
कर्मेशसंयुक्तनवांशनाथसंयुक्तसप्तांशपतौ बलाढ्ये ।
शुक्रेण देवेन्द्रपुरोहितेन दृष्टे सहस्रद्वयनिष्कभर्ता ॥ ९३ ॥
सौम्यषष्ठ्यंशसंयुक्ते धनलाभे बलान्विते ।
तदीशेऽपि तथायुक्ते सहस्रत्रयनिष्कमुक् ॥ ९४ ॥
वैशेषिकांशगे वित्तनाथे गुर्विंदुभास्करे ।
तथाविधे भवेशेऽपि बलवांश्चेत्तथा धनी ॥ ९५ ॥
धनेशस्थदृगाणेशसंयुक्तनवभागपः ।
सर्वोत्तमबलोपेतस्त्वष्टसाहस्रनिष्कयुक् ॥ ९६ ॥

लग्नेशस्थद्रेगाणेशसंयुक्तमुनिभागपः ।
वैशेषिकांशकगतस्त्वयुतं धनमाप्नुयात् ॥ ९७ ॥

व्यये शुक्रे धने जीवे स्वांशे वैशेषिकांशगे ।
लग्नेशोऽपि तथा युक्ते तदूर्ध्वमुपयाति सः ॥ ९८ ॥

गुरौ लग्नेशसंयुक्ते धने वैशेषिकांशगे ।
केन्द्रत्रिकोणगे वापि तदूर्ध्वं वित्तमश्नुते ॥ ९९ ॥

ஆயிரம் நிஷ்காதிபதியாகும் யோகம். — (90) லக்கினேசனிருக்கும் நவாம்சபதியும், 2க் குடையவனிருக்கும் நவாம்சபதியும் சுபனுகி குருவினுல் பார்க்கப்பட்டால் ஆயிரம் நிஷ்கத்திற்குடையவனுகிருன். (91) லக்கினுதிபதி 2மிடத்திலிருந்து 11க் குடையவன் 10 லிருந்து 11க் குடையவனுலோ, குருவினுலோ பார்க்கப்பட்டால் அதே ஆயிரம் நிஷ்கத்திற்குடையவனுகிருன். (92) லக்கினுதிபதியிருக்கும் நவாம்சபதி கோபுராம்சத்திலிருந்து 10க் குடையவனுலும் பார்க்கப்பட்டால் ஆயிரம் நிஷ்கத்திற்குப் பதியாகவாகிருன். (93) 10க் குடையவனுடன் கூடின நவாம்சபதியுடன் கூடின ஸப்தமாம்சபதியானவன் பலம் பெற்று சுக்கிரன், குரு இவர்களால் பார்க்கப்பட்டால் 2 ஆயிரம் நிஷ்கத்திற்குப் பர்த்தாவாகிருன். (94) 2க் குடையவன் வைசேஷிகாம்சத்திலிருந்து, குரு, சந்திரன், சூரியன் இவர்களும் அங்கிருந்து 11க் குடையவனும் வைசேஷிகாம்சமேறி பலம் பெற்றிருந்தால் 3 ஆயிரம் நிஷ்கபதியாகிருன். (95) 2, 11 மிடமானது சுபஷஷ்டியம்சமுள்ள விடமாகவாகி அந்த 2, 11க்குடைய கிரஹம் பலம் பெற்று அந்த சுபஷஷ்டியம்சத்திலு மிருந்தால் 3 ஆயிரம் நிஷ்கத்திற் குடையவனுகிருன். (96) 2க் குடையவனிருக்கும் திரேஷ்காணபதியுடன் கூடின நவாம்சாதிபன் ஸர்வோத்தம பலத்துடன் கூடினுல் 8 ஆயிரம் நிஷ்கத்துடன் கூடினவனுகிருன். (97) லக்கினேசனிருக்கும் திரேஷ்காணேசனுடன் கூடின ஸப்தமாம்சபதியானவன் வைசேஷிகாம்சத்தை யடைந்தானுனல் 10 ஆயிரம் நிஷ்கத்தை யடைகிருன். (98) 12ல் சுக்கிரனும், 2ல் குருவும் லக்கினேசன்சொந்த அம்சத்திலுமோ, வைசேஷிகாம்சத்திலுமோ இருந்தால் 10 ஆயிரத்திற்கு மேலும், நிஷ்கலாபத்தை யடைகி

ஞன். (99) குரு லக்கினேசனுடன் கூடி 2 மிடத்திலோ, வைசேஷிகாம்சத்திலோ, கேந்திரத்திரிகோணத்திலோ இருந்தால் 10 ஆயிரத்திற்குமேலும் தனத்தை யடைகிருன்.

कर्मेशस्थद्दगाणस्य नाथसंयुक्तसप्तपः ।
ऐरावतांशसंयुक्तो धनलक्षं समश्नुते ॥ १०० ॥

लक्षद्वयं धनं याति चतुष्केन्द्रे शुभान्विते ।
सिंहासने धनेशेऽपि सति पारावतांशके ॥ १०१ ॥

लक्षत्रयाधिकारी स्याल्लाभलग्नधनाधिपे ।
वैशेषिकांशकगते मृद्वंशादियुतेऽथवा ॥ १०२ ॥

तदूर्ध्वं वित्तपस्स्यात्तु धनलाभपती यदा ।
वृद्धिकेन्द्रगतौ तौ चेद्बलिनौ भाग्यपस्तथा ॥ १०३ ॥

केन्द्रत्रिकोणपो वीर्ये त्वथवा भवनाथयुक् ।
वैशेषिकांशगश्चेत्तु धनलक्षं समश्नुते ॥ १०४ ॥

லக்ஷாதிபதியாகவாகும்யோகம்.—(100) 10மிடத்ததிபனிருக்கும் திரேஷ்காணத்தின் நாதனுடன் சேர்ந்த ஸப்தமாம்சாதிபன் ஐராவதம் என்ற அம்சமேறி யிருந்தால் லக்ஷாதிபதி யாவான். (101) நான்கு கேந்திரங்களிலும் சுபக்கிரஹங்க ளிருந்தாலும், தனேசன் ஸிம்ஹாஸனம் என்ற அம்சத்திலோ, பாராவதம் என்ற அம்சத்திலோ இருந்தாலும் 2 லக்ஷத்திற்கதிபனுவான். (102) 11, 1, 2 மிடத்ததிபர்கள் வைசேஷிகாம்ச மேறியோ, மிருத்வம்சாதிகளிலோ இருந்தால் 3 லக்ஷத்திற்கதிபனுவான். (103) 2, 11, 9 மிடத்ததிபர்கள் பலம்பெற்று விருத்திகேந்திரத்தை யடைந்திருந்தால் 3 லக்ஷத்திற்கதிகமான பொருளுக்கு நாயகனுக வாவான். (104) கேந்திரம், திரிகோணம் இவற்றிர்க்கதிபன் 3 மிடத்திலோ, அல்லது 11 மிடத்ததிபனுடன் சேர்ந்தோ இருந்து வைசேஷிகாம்சமேறி இருந்தால் லக்ஷாதிபதியாக வாவான்.

लग्नांशनाथभाग्येशाः परमोच्चांशसंयुताः ।
वैशेषिकांशे लाभेशो तदा कोटीश्वरो भवेत् ॥ १०५ ॥

கோடீச்வரனுகவாகும் யோகம்.—(105) லக்கினம், நவாம்சம் இவற்றிற்கதிபன், பாக்கியாதிபன் இவர்கள் பரமோச்ச பாகத்தி

னும், 11க் குடையவன் வைசேஷிகாம்சத்தினுமிருந்தால் கோடீ ஸ்வரனுகவாவான்.

ऋणप्रदो विलग्नेशसंयुक्तनव भागपः ।
दृष्टो देवेन्द्रगुरुणा मृद्वंशादिसमन्वितः ॥ १०६ ॥

वित्तलाभपसंयुक्तौ त्र्यंशकेशनवांशपौ ।
वैशेषिके केन्द्रकोणे ऋणदाता भवेन्नरः ॥ १०७ ॥

ऋणग्रस्तो धने पापे लग्नेशे व्ययसंयुते ।
कर्मेशे लाभनाथेन युते दृष्टे विशेषतः ॥ १०८ ॥

दिनेशकरलुप्तस्तु धनेशो नीचराशिगः ।
पापान्विते धने रंध्रे ऋणग्रस्तो भवेन्नरः ॥ १०९ ॥

धनेशे नीचराशिस्थे क्रूरषष्ट्यंशसंयुते ।
लाभेशेऽपि तथा युक्ते ऋणग्रस्तो भवेन्नरः ॥ ११० ॥

लाभेशस्थितभांशेशनाथे दुःस्थे शुभान्विते ।
क्रूरषष्ट्यंशसंयुक्ते ऋणग्रस्तो भवेन्नरः ॥ १११ ॥

கடன்கொடுப்பவனுகவும், கடனுளியாகவுமாகும் யோகம்.—(106) லக்கினுதிபதியின் ஸம்பந்தம்பெற்ற நவாம்சபதியானவன் குருவினுல் பார்க்கப்பட்டு மிருத்வம்சாதிகளை யடைந்திருந்தால் பிறர்க்குக்கடன் கொடுப்பவனுக வாவான். (107) 2, 11 மிடத்ததிபரின் சேர்க்கையை யடைந்த திரேஷ்காண நவாம்சபதிகள் கேந்திரத்திலோ, 1, 5, 9 மிடங்களிலோ வைசேஷிகாம்சமேறி இருந்தால் பிறர்க்குக் கடன்கொடுப்பவனுக வாவான். (108) 2 மிடத்தில் பாபக்கிரஹமும், லக்கினுதிபன் 12 மிடத்தினுமிருந்து, 10 மிடத்ததிபன் 11 மிடத்ததிபனுடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் அதிகமாய் கடனுள்ளவனுகவாவான். (109) தனுதிபன் அஸ்தங்கதனுகவாகி நீசராசியிலிருந்து 2, 8 மிடம் பாபக்கிரஹத்துடன் கூடியிருக்குமானுல் கடனுளியாக வாவான். (110) 2, 11 மிடத்ததிபர்கள் நீசராசியிலோ, குரூர ஷஷ்டியம்சத்திலோ இருந்தால் மனிதன் கடனுளியாக வாவான். (111) 11 மிடத்ததிபனிருக்கும் ராசியின் அம்சேசன் 6, 8, 12ல் சுபர்களுடன் கூடியிருந்தாலும், குரூரமான ஷஷ்டியம்சமேறி இருந்தாலும் மனிதன் கடனுளியாக வாவான்.

वाक्स्थानपे षष्ठगते सराहौ राहुस्थितर्क्षाधिपसंयुते वा ।
दन्तस्य रोगः पतनं च तेषां भुक्तौ तयोर्वा प्रवदन्ति तज्ज्ञाः ॥११२॥

वाक्स्थानपेनापि युतोऽरिनाथस्तद्भावपस्थांशपयुक्तनाथः ।
षष्ठेश्वरेणापि युतस्स्वभुक्तौ दन्तादिरोगः पतनं च तेषाम् ।' ११३ ॥

वाक्स्थानपेनापि युतोऽर्कपुत्रः पापैर्युतो वातभयात्प्रमादः ।
सूर्येतु कोपाद्भवति प्रमादो राज्ञां कुजे चोष्णभयात्प्रकोपः ॥ ११४ ॥

தந்தஸம்பந்தமான யோகங்கள்.—(112) 2 மிடத்ததிபன் ராஹுவுடன்கூடி 6மிடத்திலிருந்தாலும், ராஹுவிருக்கும் ராஶ்யதிபனுடன் கூடினாலும், பல்லில் ரோகமும், பல்விழுதலும் அவர்களின் புக்திகாலங்களில் நடைபெறும் என்கின்றனர். (113) 2 மிடத்ததிபன் 6 மிடத்ததிபனுடன் கூடினாலும், 2 மிடத்ததிபனிருக்கும் அம்சநாதனுடன் சேர்ந்த கிரஹம் 6 மிடத்ததிபனுடன் கூடினாலும் அவர்களின் புக்தியில் பல்லில் ரோகமும், பல்விழுதலுமுண்டாகும். (114) சனி, 2க்குடையவனுடன் கூடினாலும், அல்லது பாபருடன் கூடினாலும் வாயுபயத்தால் பல்லில் தவறுண்டாகும். சூரியனவ்விதமானால் ராஜாக்களின் கோபத்தால் பல்லில் தவறுண்டாகும். செவ்வாய் அவ்விதமானால் உஷ்ணபயத்தால் பல்லில் கோளாறுண்டாகும்.

तदीश्वरेणापि युतेन्दुपुत्रे सराहुकेतावरिभावयुक्ते ।
राहुस्थितर्क्षाधिपसंयुते वा भुक्तौ तदा तालुभवस्सरोगः ॥ ११५ ॥
राजारिनाथौ तनुभावयुक्तौ साच्छाक्षिपौ भूमिपतेः प्रकोपात् ।
उत्पाटितं नेत्रमुशन्ति तज्ज्ञा नीचांशगौ पापयुतौ तथैव ॥ ११६ ॥
राजारिनाथस्थितभांशकेशौ दुःस्थौ विलग्नेशयुतौ तथैव ।
साच्छाक्षिपौ नाशगतौ तथैव शुभैर्न दृष्टौ नयनप्रमादः ॥ ११७ ॥
तद्भावपाभ्यामथ कारकाभ्यां पित्रादिकानां फलमेवमाहुः ।
कर्णस्य विच्छेदनमाहुरार्यास्सौरे सभौमे धनपे विलग्ने ॥
रोगाधिपे वित्तपतौ विलग्ने नाशस्थिते मन्दसुतारयुक्ते ॥ ११८ ॥
पित्रादिकानां फलमेवमूह्यं तत्स्थाननाथग्रहकारकेभ्यः ।

மோவாய் கட்டையில் ரோகம், கண்பிடுங்கப்படல், காது அறுபடல் இவற்றைப் பற்றிய யோகங்கள்.—(115) 2க்குடையவனு

டன் கூடின புதனானவன் ராகு, அல்லது கேது இவர்களுடன் கூடி 6 லிருந்தாலும், ராஹு இருக்கும் ராசிநாதனுடன் கூடினாலும் அவனுடைய புக்திகாலத்தில் மோவாய்க்கட்டையில் ரோகமுண்டாகும். (116) 10, 6க் குடையவர்கள் லக்கினத்திலிருந்து சுக்கிரன், 2க் குடையவன் இவர்களுடனும் கூடினால் பூமிபதியின் கோபத்தினால் கண்பிடுங்கப்படும் என அதையறிந்த பெரியார் கூறுகின்றனர். அந்த 10, 6க் குடையவர்கள் நீசவீட்டிலோ, சத்துருவீட்டிலோ, பாபருடன் கூடியோ யிருந்தால் அதே பலன்தான் நடைபெறும். (117) 10, 6க்குடையவர்களிருக்கும் ராசி அம்சம் இவற்றின் நாதர்கள் 6, 8, 12விருந்து லக்கினாதிபதியுடனும் கூடினார்களானால் அதே பலன்தான் நடைபெறும். அதே 10, 6க்குடையகிரஹங்கள், சுக்கிரன் 2க் குடையவன் இவர்களுடன் கூடி 8 லிருந்தார்களானாலும் அதே பலன் தான் நடைபெறும். ஆனால் சுபரால் பார்க்கப்பட்டால் நேத்திரத் தவறு (கோளாறு) உண்டாகாது. (118) பிதா முதலியோருக்கும் அந்தந்தப் பாவாதிபர்களைக் கொண்டும், அந்தந்தப் பாவகாரகர்களைக் கொண்டும் இவ்விதபலனையே சொல்லவேண்டு மென்கின்றனர். செவ்வாயுடன் சேர்ந்த சனியும் 2க் குடையவனும் லக்கினத்திலிருந்தால் காது அறுபட்டுவிடும் எனப்பெரியோர் சொல்லுகின்றனர். 6க் குடையவனும், 2க் குடையவனும் 2லிருந்து குளிகனுடனும் செவ்வாயுடனும் கூடினால் காதறுபடுமெனப் பெரியோர் கூறுகின்றனர். (119) பிதாமுதலியோருக்கும், பித்ராதிஸ்தான நாதர், பித்ராதிகாரகர் இவர்களைக் கொண்டு இம் மாதிரியான பலன் ஊஹித்தறியத் தக்கது.

भुक्तीश्वरेह्यच्छनिशाकराभ्यां केन्द्रे युते राजतमत्र पात्रम् ॥ ११९ ॥

सचन्द्रपुत्रामरनाथपूज्ये केन्द्रस्थिते स्वर्णमयं हि पात्रम् ।
तदीश्वरे कोणचतुष्टये वा वैशेषिकांशे यदि तादृशं तत् ॥ १२० ॥

मृद्वंशके वा परमोच्चभांशे स्थिते तदीशे यदि तादृशं तत् ।
स्वांशादिगानां परमोच्चराशौ शशाङ्कजीवाच्छविदां तदेव ॥ १२१ ॥
वीर्यान्वितो भुक्तिपतिस्तदंशे भुक्तेस्तुपात्रं सदृशं हिरण्यम् ।
मृद्वंशके भुक्तिपतौ विशेषात्पारावतांशे बलपूर्णयुक्ते ॥ १२२ ॥

केन्द्रस्थिते मित्रशुभेक्षिते स्याच्छंसन्ति पात्रं बहु भुक्तिकाले ।
विचित्रपात्रं प्रवदन्ति तज्ज्ञा भुक्तीश्वरे केन्द्रगते बलाढ्ये ॥ १२३ ॥
शुक्रामरेज्येन्दुसुता बलाढ्यास्तैरेव युक्तोऽत्र विशेषितांशे ॥
लग्नेश्वरेण सहितो यदि भुक्तिनाथष्षष्ठस्थितो यदि तदा प्रवदन्ति लोहम् ।
पात्रं तदीश्वरयुतो यदि वा विनाशस्थानर्क्षगस्सुदृढमत्र सुलोहपात्रम् ॥
कांस्यं वदन्ति किल भुक्तिपतौ बलाढ्ये वैशेषिकांशरहिते यदि सौम्यदृष्टे।
भुक्तीश्वरस्थितनवांशपतिर्यदंशे तद्राशिपः शुभयुतोऽपि तथैवमाहुः॥१२५॥
पापग्रहेण सहिते यदि भुक्तिराशौ तद्राशिनाथयुतभागपतौ तदंशे ।
तद्राशिपे बलविहीनशुभैरदृष्टे भुक्तौ कृतौ समदृढं कथयन्ति तज्ज्ञाः ॥
धातुद्वययुतं पात्रं भुक्त्यंशे नाथराशिगे ।
पापग्रहेण संदृष्टे कारके बलवर्जिते ॥ १२७ ॥

போஜன பாத்திரத்தைக் கண்டறியும் யோகம்.—2க் குடையவன, சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் கூட கேந்திரத்திலிருந்தால் போஜன விஷயத்தில் வெள்ளிப்பாத்திர முண்டாகும். (120) புதனுடன்கூடின குரு கேந்திரத்திலிருந்தால் தங்கமயமான பாத்திர முண்டாகும். 2க் குடையவன் 4 கேந்திரங்களுளொன்றிலிருந்து வைசேஷிகாம்சமேறினும் போஜன விஷயத்தில் தங்கமயமான பாத்திரத்தையே சொல்லவேண்டும். (121) 2க் குடையவன் ம்ருத்வம்சத்திலோ, பரமோச்ச ராசயம்சத்திலோ இருந்தால் அதே பலன்தான் சொல்லவேண்டும். தனது அம்சாதிகளை யடைந்தவர்களும், பரமோச்சராசியி லிருக்கின்றவர்களுமான சந்திரன், குரு, சுக்கிரன், புதன் இவர்களைக்கொண்டும் அதேபலன் தான் சொல்லவேண்டும். (122) 2க் குடையவன் பலம்பெற்று சொந்த அம்சத்திலிருந்தால் போஜனபாத்திரம் அதற்கு ஒப்பாக (த்தங்கமயமாக)விருக்கும். 2க் குடையவன் ம்ருத்வம்சத்திலிருந்தாலும், பூர்ணபலம் பெற்றுபாராவதாம்சத்திலிருந்தாலும் அதே பலன்தான் சொல்லவேண்டும். (123) (2க் குடையவன்) கேந்திரத்திலிருந்து மித்திரனல், அல்லது சுபனல்பார்க்கப்பட்டால் சாப்பிடும் பொழுது வெகுபாத்திர முண்டென்கின்றனர். 2க் குடையவன் கேந்திரத்தில் பலம்பெற்றிருந்தால் அதையறிந்தவர் விசித்திரமான பாத்திரத்தைச் சொல்லுகின்றனர். (124) சுக்கி

ரன், குரு, புதன் இவர்கள் பலம் பெற்று அவர்களே வைசேஷி காம்சத்திலிருந்தாலும் (முற்கூறியபலனே நடக்கும்) 2க் குடையவன் லக்கினாதிபதியுடன்கூடி 6லிருந்தால் அப்பொழுது இரும்புப்பாத்திரம் (அலுமொனியம், பீங்கான் முதலியன வென்றும் சொல்லலாம்) உண்டாகும் என்கின்றனர். 6க் குடையவனுடன் கூடினாலும், அல்லது 6 லிருந்தாலும் கெட்டியான இரும்புப் பாத்திரமுண்டாகும். (125) 2க்குடையவன் பலம்பெற்று வைசேஷிகாம்சமேறாமல் சுபரின் பார்வையைமட்டும் பெற்றால் வெண்கலபாத்திர முண்டாகும் என்கின்றனர். 2க் குடையவனிருக்கும் நவாம்சாதிபன் எந்த ராசியிலிருக்கின்றானோ அந்த ராசியதிபன் சுபருடன் கூடினாலும் வெண்கலபாத்திரமென்றே சொல்லுகின்றனர். (126) 2 மிடமானது பாபக்கிரஹத்துடன் கூடினாலும், 2க் குடையவனிருக்கும் நவாம்சபதி அதே அம்சத்திலிருந்தாலும் 2க் குடையவன் துர்ப்பலர்களான சுபர்களால் பார்க்கப்படாமலுமிருந்தாலும் அதன்பலனறிந்த பெரியோர் போஜன விஷயத்தில் ஸமமாயும் திருடமாயுமுள்ள பாத்திரம் கிடைக்குமென்கின்றனர். (127) 2-வது அம்சமானது 2-வது பாவபதியினுடையதாக விருந்து (அதாவது: 2ம் பாவமும், 2 வது நவாம்சமும் ஒன்றாகவருமானால் என்பதாம். இது சரராசிகளான மேஷம், கடகம், துலாம், மகரம் இவைகளிலேயே ஸம்பவிக்கும்) பாபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டு 2ம் பாவகாரகனான குரு பலமற்றவனாகவுமிருந்தால் போஜனபாத்திரமானது இரண்டு உலோகங்களால் செய்யப்பட்டதாகவிருக்கும்.

बह्वाशनं भुक्तिपतौ सपापे दावाग्निदंडायुधकालभागे।
नीचांशके पापनिरीक्षिते वा शुभैर्न दोषः सहितेक्षणाभ्याम् ॥ १२८ ॥

அதிக போஜனஞ் செய்யும் யோகம்.—(128) 2க்குடையவன் பாபியுடன் கூட தாவாக்னி, தண்டாயுதம், காலம் என்ற ஷஷ்டியம்சத்திலிருந்தாலும், நீசாம்சத்திலிருந்து பாபரால் பார்க்கப்பட்டாலும் அதிகமாகப் போஜனம் செய்வான். சுபர்களின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றையடைந்தால் மேற்சொன்ன தோஷமிராது.

भुक्तिस्थाने शुभयुते तदीशे शुभसंयुते ।
शुभग्रहेण संदृष्टे सुखभुक्स नरो भवेत् ॥ १२९ ॥

भुक्तिसौख्ययुतः श्रीमान् तदीशे बलसंयुते ।
वैशेषिकांशके वापि गुरुशुक्रनिरीक्षिते ॥ १३० ॥

भुक्तौ स्वोच्चे त्रिकोणे वा तदीशेऽपि बलान्विते ।
कारकेऽपि विशेषांशे शुभदृष्टे सुखाशनी ॥ १३१ ॥

कालोचिताशनी भुक्तिनाथे देहेशवीक्षिते ।
पापग्रहेण वा दृष्टे नीचांशादियुते नतु ॥ १३२ ॥

சுகபோஜனம் செய்வதற்குரிய யோகம்.—(129) 2மிடத்தில் சுபரிருந்து 2க் குடையவன் சுபருடன் கூடி சுபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டால் அந்த ஜாதகன் சுகபோஜனஞ் செய்பவனாக வாகிறான். (130) 2க் குடையவன் பலம்பெற்று வைசேஷிகாம்ச மேறினாலும், குரு, சுக்கிரர்களால் பார்க்கப்பட்டாலும் அதிற் பிறந்த மனிதன் போஜன ஸவுக்கிய முள்ளவனாக வாகிறான். (131) 2க் குடையவன் 2லோ, தனது உச்சவீட்டிலோ, திரிகோணத்திலோ பலம் பெற்றிருந்து 2ம் பாவகாரகனான குரு வைசேஷிகாம்ச மேறி சுபராலும் பார்க்கப்பட்டால் சுக போஜனம் செய்பவனாகவாகிறான். (132) 2க் குடையவன் லக்கினாதிபதியால் பார்க்கப்பட்டால் காலத்திற்குத் தக்கபடி போஜனஞ் செய்வான். 2க் குடையவன் பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, நீச நவாம்சத்தை யடைந்தோ இருந்தால் முற்கூறிய பலனில்லை.

अन्नप्रदो द्वितीयेशे गुरु सौम्ययुतेक्षिते ।
वैशेषिकांशकयुते मृद्वंशादियुतेऽपि वा ॥ १३३ ॥

गुरुशुक्रयुते भुक्तौ नाथे सौम्यनिरीक्षिते ।
वैशेषिकांशकयुते त्वन्नदाता नरो भवेत् ॥ १३४ ॥

भुक्तिराशिपतौ वीर्ये केन्द्रे तूपचयेऽपि वा ।
बलयुक्ते शुभैर्दृष्टे त्वन्नदाता भवेन्नरः ॥ १३५ ॥

सौम्ये स्वोच्चगते भुक्तौ मित्रसौम्यनिरीक्षिते ।
नाथे वैशेषिकांशे वा सुखभुक्तिप्रदो भवेत् ॥ १३६ ॥

அன்னதானம் செய்யும் யோகம்.—(133) 2க்குடையவன் குரு, புதன் இவர்களுடன் சேர்ந்தோ, பார்வைபெற்றோ, வைசேஷிகாம் சமேறியோ, ம்ருத்வம்சமேறியோ இருந்தால் ஜாதகன் அன்ன தானம் செய்பவனுகவாகிறான். (134) 2ல் குரு, சுக்கிரன் இவர்களிருந்து, 2க் குடையவன் புதனால் பார்க்கப்பட்டு வைசேஷிகாம்சத்திலு மிருந்தால் அன்னதானம் செய்பவனுக வாகிறான். (135) 2க் குடையவன் 3லோ, கேந்திரத்திலோ, 6, 10, 11 மிடங்களிலோ, இருந்து பலம்பெற்ற சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் அன்னதானஞ் செய்பவனுக வாகிறான். (136) 2 மிடமுச்சவீடாகி அதில் சுபக்கிரஹமிருந்து மித்திரனுன சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் 2க் குடையவன் வைசேஷிகாம்சமேறினுலும் சுகமான அன்னத்தைத் தானஞ்செய்பவனுகவாகிறான்.

अल्पाशी रुचिकामस्स्याद्भुक्तिनाथे शुभग्रहे ।
स्वोच्चे वा शुभसंदृष्टे मृद्वंशादि समन्विते ॥ १३७ ॥

மிதாஹாரம் செய்யும் யோகம்.—(137) 2க் குடையவன் சுபக்கிரஹமாக விருந்து தனது உச்சவீட்டிலோ, சுபரால் பார்க்கப்பட்டோ, ம்ருத்வம்சாதிகளிலேறியோ இருந்தால் அல்பம்சாப்பிடுபவனுகவும் ருசியில் ஆசையுள்ளவனுகவு மிருப்பான்.

परान्नभुक्तदीशे तु क्रूरषष्ट्यंशसंयुते ।
नीचखेचरसंदृष्टे तद्दूषणपरो नरः ॥ १३८ ॥

பிறர் அன்னத்தைப் புஜித்தல், அதைத் தூஷித்தல் இவற்றிற்குரிய யோகம்.—(138) 2க் குடையவன் குரூரஷஷ்டியம்சமேறியிருந்தால் பிறர் அன்னத்தைப் புஜிப்பான். நீசக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் அவ்விதம் தான் சாப்பிடும் பிறர் அன்னத்தைத் தூஷிப்பவனுகவும் ஆவான்.

भुक्तिस्थानाधिपे मन्दे तदीशे मन्दसंयुते ।
नीचेऽर्कसूनुना दृष्टे श्राद्धभुक्सततं नरः ॥ १३९ ॥

कुभोजी भुक्तिनाथे तु शन्यारगुळिकान्विते ।
नीचशत्रुयमांशादौ शुभदृष्टिविवर्जिते ॥ १४० ॥

तदीशे शुभसंयुक्ते शीघ्रभुग्बलसंयुते ।
द्वितीये शुभराशौ वा शुभखेचरसंयुते ॥ १४१ ॥
तदीशे चरराशौ वा भुक्तौ वा तादृशग्रहे ।
तादृशे पापसंबंधे चिरभोक्ता तु दूषकः ॥ १४२ ॥

சிராத்த போஜனம், கெட்டபோஜனம், சீக்கிரபோஜனம், தாமஸ போஜனம் இவற்றின் யோகங்கள்.—(139) 2க் குடையவன் சனியாகியோ, 2க் குடையவன் சனியுடன் கூடியோ நீசவீட்டிலிருந்து சனியினுல்பார்க்கப்பட்டால் எப்பொழுதுமே சிராத்தபோஜனம் செய்பவனுவான். (140) 2க் குடையவன் சனி, செவ்வாய், குளிகன் இவர்களுடன் கூடி நீசவீட்டிலோ, சத்துருவீட்டிலோ, சனியின் அம்சத்திலோ இருந்து சுபர்பார்வையு மற்றிருந்தால் கெட்ட போஜனஞ்செய்வான். (141) 2க்குடையவன் பலம்பெற்றும் சுபருடன் சேர்ந்தும் இருந்தாலும், 2மிடம் சுபராசியாகி சுபக்கிரஹம் அதிலிருந்தாலும் சீக்கிரமாக போஜனம் செய்வான். (142) 2க்குடையவன் சராசியிலிருந்தாலும் சரக்கிரஹமான சந்திரனுல் பார்க்கப்பட்டாலும் அத்தகைய ராசி, கிரஹம் இவற்றிர்க்குப் பாபஸம்பந்தமிருந்தாலும், தாமதமாகச் சாப்பிடுவதுடன், தூஷணம் செய்பவனுகவுமாவான்.

विलग्नसप्ताष्टमवित्तराशौ दिनेशयुक्ते क्षितिसूनुदृष्टे ।
भौमेऽथवा वासरनाथदृष्टे स्फोटाग्निभीतिं प्रवदेत्खलाद्वा ॥ १४३ ॥

நெருப்பு, கொப்பளம் இவையுண்டாகும் யோகம்.—(143) 1, 7, 8, 2 மிடங்களில் சூரியனிருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டும், அல்லது செவ்வாய் 2லிருந்து சூரியனுல் பார்க்கப்பட்டுமிருந்தால் கொப்பளம், நெருப்பு இவற்றின் மூலமும், அயோக்கியன் மூலமும் பயமுண்டாகும்.

लग्नान्त्यशत्रुमदने सति भूमिपुत्रे मान्द्यन्विते कमलबंधुनिरीक्षिते वा ।
मूढारिनीचभवने यदि वाक्षितीशे त्याज्यासृगादिसहितः सभवेत्तदानीम् ॥
मन्दात्मजेन सहिते यदि भूमिपुत्रे वित्तेऽथवा निधनराशिमुपागते वा ।
तेनैव वीक्षितयुते धनभावनाथे त्याज्यासृगादि नियतं प्रवदन्ति तज्ज्ञाः ॥

கெட்டரக்த முண்டாகும் யோகம். — (144) 1, 12, 6, 7 மிடங்களில் செவ்வாயிருந்து குளிகனுடனும் கூடி சூரியனுல்

பார்க்கப்பட்டாலும், அல்லது செவ்வாய் அஸ்தங்கதனுகவோ சத்துருவீட்டை யடைந்தோ, நீசவீட்டை யடைந்தோ இருந்தாலும் வெறுக்கத்தக்க ரக்தமுள்ளவனுக வாவான். (145) செவ்வாய் சனியுடன்கூடி 2 மிடத்திலோ, 8 மிடத்திலோ இருந்து, 2ம் பாவாதிபன் சனியுடன் கூடியோ, அல்லது பார்வை பெற்றுமோ இருந்தால் வெறுக்கத்தக்க ரக்தம் முதலிய ரோக முண்டாவது நிஸ்சயமென அறிஞர் சொல்லுகின்றனர்.

पापेक्षिते रविसुते धनराशियुक्ते पापान्विते शुनकभीतिमुपैति मर्त्यः ।
तद्भावनाथसहिते दिननाथपुत्रे दृष्टेऽथवा शुनकभीतिमुपैति मर्त्यः॥ १४६ ॥

நாயினுல் பயமுண்டாகும் யோகம்.—(146) சனி பாபியால் பார்க்கப்பட்டோ, பாபியுடன் சேர்ந்தோ 2விருந்தால் நாயினுல் பயமுண்டாகும். சனி 2ம் பாவாதிபதியினுல் பார்க்கப்பட்டோ, அவனுடன் சேர்ந்தோ 2 விருந்தால் நாயினுல் பயத்தை மனிதனடைகிறுன்.

राहौ द्वितीये गुळिकेन दृष्टे युक्तेऽथवा सर्पभयं वदन्ति ।
कदन्नभुक्भूमिसुतेन युक्ते पित्रादिकानां फलमेवमाहुः ॥ १४७ ॥

பாம்பின் பயமுண்டாகும் யோகம்.—(147) 2ல் ராகு, குளிகனுடன் சேர்ந்தோ, பார்வைபெற்ருே இருந்தால் பாம்பின் பயத்தைச் சொல்லுகின்றனர். செவ்வாய் அங்கிருந்தால் கெட்ட அன்னத்தைச் சாப்பிடுகிறுன். பிதா முதலியோருக்கும் இவ்வித பலனையே சொல்லுகின்றனர்.

लग्नेश्वरे शोभनखेचरेन्द्रे निध्यादिलाभं धनभावयुक्ते ।
सौम्ये द्वितीये यदि सत्वहीने पापेक्षिते वाक्चलनं तदाहुः॥ १४८ ॥

*புதையல் கிடைக்கும் யோகம்.—(148) லக்கினுதிபதி சுபக்கிரஹமாக இருந்து 2 மிடத்திலிருந்தால் புதையல் முதலிய லாபத்தை யடைகிறுன். புதன் (அல்லது சுபக்கிரஹம்) 2லிருந்து பலமற்றிருந்து பாபராலும் பார்க்கப்பட்டால் வார்த்தை நிலைத்திருது என்கின்றனர்.

---

* இக்காலம் புதையல்கிடைப்பது அரிதாகையால் லாட்டரி போடுதல் முதலிய வழியில் எதிர்பார்த்ததைவிட அதிகமான பொருள் கிடைக்கும் என்றும் கொள்ளவும்.

वाक्स्थानपेन्दौ यदि सत्वहीनौ क्रूरांशगौ वाक्पवनार्दितस्स्यात् ।
वाक्स्थानपे धीरतया विहीने पापेक्षिते वाक्चलनं तदाहुः ॥ १४९ ॥

வாக்கில் உறுதியின்மை,வாயுபீடை இவற்றின் யோகங்கள்.—(149) 2க் குடையவன், சந்திரன் இவர்கள் பலமற்றவர்களாய் குரூராம்சத்தை யடைந்தார்களானல் வாக்கில் வாயு பீடையுண்டாகும். 2க் குடையவன் பீடிதஞகி (யுத்தத்தில் தோல்வியை யடைந்தவன் பீடிதனெனப்படுவான்) பாபரால் பார்க்கப்பட்டால் சலித்தவாக்குள்ளவஞகிறுன என்கின்றனர்.

पापे धने पापनिरीक्षिते वा क्रूरांशगे पापयुते विशेषात् ।
तत्स्थानपे पापनिरीक्षितेऽपि विषप्रयोगः खलु वंचनादेः ॥ १५० ॥

मित्रादिस्थानपवशादेवं तेषां फलं वदेत् ।
नाथकारकभावानां बलाबलवशात्तथा ॥ १५१ ॥
सर्वेषामुपकारार्थं रहस्यार्थं प्रकाशकः ।
धनभावफलाध्यायो वर्णितो व्ययसूनुना ॥ १५२ ॥

விஷப்பிரயோகமுண்டாகும் யோகம்.—(150) 2ல் பாபரிருந்தாலும், 2 ஐப்பாபர்பார்த்தாலும், 2க் குடையவன் பாபருடன் கூடி குரூராம்சமேறினுலும், பாபரால் பார்க்கப்பட்டாலும் வஞ்சனுதிகள் மூலம் விஷப்பிரயோகமுண்டாகும். (இதைமருந்திடப்படல் என்றும் சொல்லலாம்) (151) மித்திராதிஸ்தானுதிபர் மூலம் இம்மாதிரியான பலனை அவர்களுக்கும் சொல்லவேண்டும். பாவாதிபதி பாவகாரகன், பாவம் இவற்றின் பலாபலத்தைக் கொண்டும் (ஊஹித்துச்) சொல்லுக. (152) யாவர்க்கும் உபகாரம் செய்ய வேண்டி ரஹஸ்யார்த்தத்தை விளக்கும் தன (2ம்) பாவபலாத்தியாயமானது விரித்துரைக்கப் பட்டது. (இங்கு வ்யயஸூனு என்பது விளங்கவில்லை)

ஸர்வார்த்த சிந்தாமணியில் சொல்லிய 2-வது தனபாவ
பலன் முற்றிற்று.

## ஸாராவளியிற் சொல்லிய ஸஹோதர பாவ (மூன்ரும் பாவ) பலன்.

மூன்ரும் பாவமூலம் கண்டறிய வேண்டியவைகள்.

सहोदराणामथ किङ्कराणां पराक्रमाणामुपजीविनां च ।
विचारयेज्जातकशास्त्रदक्षस्तृतीयभावे नियमेन कार्यम् ॥ १ ॥

सहजेन सहजविक्रमौषधसहायान् गलोरसंस्थानम् ।
विन्द्याद्दक्षिणकर्णं भक्ष्यविशेषांश्च मूलादीन् ॥ २ ॥

(1) இந்த 3-வது பாவத்தினின்றும் ஸஹோதரர், வேலைக்காரர், பராக்கிரமம், அண்டிப்பிழைப்பவர், இவர்களைப்பற்றிய கார்ய (பலனை) த்தை சோதிடசாஸ்திரநிபுணன் விசாரித்தறிய வேண்டும். (2) 3ம் பாவத்தினுல் ஸஹோதரன், பராக்கிரமம், ஔஷதம், ஸஹாயம், கழுத்து மார்பு இவற்றின் ஸ்தானம், வலதுகாது, பக்ஷ்யவிசேஷம், மூலம்முதலியன (மருந்திடல்) இவற்றை யறியவேண்டும்.

மேஷாதி ராசிகள் 3-வது பாவமாகவமைவதின் மூலம் கண்டறிய வேண்டிய பலன்கள்.

तृतीयसंस्थे प्रथमे च राशौ मैत्रीं द्विजानां लभते मनुष्यः ।
परोपकारप्रवणश्शुचिश्च प्रभूतविद्यो नृपपूजिताङ्गः ॥ ३ ॥

वृषे तृतीये लभते मनुष्यो मित्रं नरेन्द्रं प्रचुरप्रतापम् ।
सुवित्तदं भूरियशोऽभिधानं शूरं कविं ब्राह्मणचित्तरक्षम् ॥ ४ ॥

तृतीयसंस्थे मिथुने च लग्ने करोति मर्त्यं वरयानसंयुतम् ।
स्त्रीवल्लभं नित्यमुदारचेष्टं कुलाधिकं पूज्यतमं नृपाणाम् ॥ ५ ॥

कुलीरराशौ सहजं प्रयाति मित्रं लभेत्सद्गुणवल्लभञ्च ।
कृषीवलं धर्मकथानुरक्तं सदासुशीलं सुमहत्प्रतिष्ठम् ॥ ६ ॥

सिंहे तृतीये लभते मनुष्यः शूरं कुमित्रं परवित्तलुब्धम् ।
वधात्मकं पापकथानुरक्तं सदार्थसक्तं जनगर्हितञ्च ॥ ७ ॥

तृतीयभावे किल कन्यकाख्ये शास्त्रानुरक्तो मनुजस्सुशीलः ।
नानासुहृत्संश्रित अल्पकोपः प्रियातिथिर्देवगुरुप्रभक्तः ॥ ८ ॥

तृतीयसंस्थे हि तुलाभिधाने मैत्रीं लभेत्पापरतैर्मनुष्यैः ।
त्याज्यात्मकस्तोककथानुरक्तः सार्धं च भृत्यैश्च सुतार्थयुक्तः ॥ ९ ॥

अळौ तृतीये भवने नरस्य मैत्री सदा पापरतैर्नरेन्द्रैः ।
कृतघ्नपापैः कलहानुरक्तैर्व्ययोत्थलक्ष्यैर्मनुजैर्विरोधः ॥ १० ॥

चापे तृतीये लभते मनुष्यो मैत्रीं सुशूरैर्नृपसेवकैश्च ।
वित्तेश्वरैर्धर्मपरैः प्रसन्नैः कृपानुरक्तैर्विधिकोविदैश्च ॥ ११ ॥

मृगस्तृतीयश्च नरस्य यस्य करोति सौख्यं सततं सुखाढ्यम् ।
नित्यं गुरुं देवगुरुप्रसक्तं महाधनं पण्डितमप्रमेयम् ॥ १२ ॥

कुम्भे तृतीये लभते मनुष्यो मैत्रीं व्रतज्ञैर्बहुकीर्तियुक्तैः ।
क्षमाधिकैस्सत्यपरैस्सुशीलैर्गीतप्रियैस्साधुपरैः खलैश्च ॥ १३ ॥

तृतीयभावस्थितमीनराशिः नरं प्रसूते बहुवित्तयुक्तम् ।
पुत्रान्वितं पुण्यधनैरुपेतं प्रियातिथिं सर्वजनाभिरामम् ॥ १४ ॥

(3) மேஷமானது 3-வது பாவமாகவானால் த்விஜர் (பிராம்மணர்)(க்ஷத்திரியவைசியரென்றும்சொல்லலாம்)களுடைய சினேகத்தை மனிதன் அடைவதுடன் பரோபகாரஞ் செய்வதிலீடுபட்டவனாகவும், சுத்தனாகவும், அதிகம் வித்யை யுள்ளவனாகவும், ராஜபூஜிதமான சரீரமுள்ளவனாகவும், ஆவான். (4) விருஷபமானது 3 மிடமானால் அதில் பிறந்த மனிதன் அதிகப்பிரதாபமுள்ளவனும், அதிகம் தனத்தைக் கொடுப்பவனும், அதிகமான கீர்த்தி, பெயர் இவற்றையுடையவனும், சூரனும், கவியும், பிராம்மணனுடைய பணத்தை ரக்ஷிப்பவனுமான அரசனை மித்திரனாக அடைவான். [இங்கு அரசனுக்குச் சொல்லிய அடைமொழி (விசேஷணங்கள்) கள் ஜாதகனுக்கும் பொருந்தும்.] (5) மிதுனமானது 3 மிடமாகவானால் மனிதனை சிறந்த வாஹனத்துடன் கூடியவனாகவும், ஸ்திரீகளிடத்தில் பிரியமாக நடப்பவனாகவும், எப்பொழுதும் மதிப்பு வாய்ந்த நடத்தையுள்ளவனாகவும், குலத்திற் சிறந்தவனாகவும், ராஜாக்களால் அதிகம் பூஜிக்கத்தக்கவனாகவும் செய்கிறது. (6) கடகராசியானது 3 மிடமாகவாகும்பொழுது நற்குணங்களால் யாவர்க்கும் வேண்டியவனையும், பயிரிடுபவனையும், தர்ம கதையில் பற்றுள்ளவனையும், எப்பொழுதும் நல்ல சீலத்துடன் கூடினவனையும், நல்ல கீர்த்தியை யடைந்தவனையும் இருக்கின்ற மித்திரனை யடைகிறான். (ஜாதகனும் இத்தகைய குணமுள்ளவனாவான் என்றும் கொள்ளலாம்.) (7) ஸிம்ஹமா

னது 3 மிடமாக வாகும்பொழுது பிறந்த மனிதன் சூரனும், பிறர் பணத்திலாசையுள்ளவனும், ஹிம்ஸை செய்வதில் மனமுள்ளவனும், பாபகதையில் பற்றுள்ளவனும், எப்பொழுதும் பணத்தில் பற்றுள்ளவனும், ஜனங்களால் நிந்திக்கத் தக்கவனுமான கெட்ட மித்திரனை யடைகிறான். (ஜாதகனும் இவ்வித குணமுள்ளவனாகவே ஆகிறான் என்றும் கொள்ளலாம்) (8) கன்னியா ராசியானது 3 மிடமாகவாகப் பிறந்த மனிதன் சாஸ்திரத்தில் பற்றுள்ளவனாகவும், நல்லொழுக்க முள்ளவனாகவும், பலசினேஹிதர்களுடன் சேர்ந்தவனாகவும், அற்பகோபமுள்ளவனாகவும் அதிதி(விருந்தாளி)களிடத்தில் பிரியமுள்ளவனாகவும், தேவதை குரு இவர்களிடத்தில் அதிகம் பக்தியுள்ளவனாகவும், ஆகிறான். (9) துலாராசியானது 3 மிடமாகவாகப் பிறந்தவன் பாபத்தில் பற்றுள்ளமனிதருடன் சினேஹத்தை யடைவதுடன் வெறுக்கத் தக்க ஸ்வபாவமுள்ளவனாகவும் சுருக்கமான கதைகேட்பதில் பற்றுள்ளவனாகவும், வேலைக்காரர்களுடன் கூடினவனாகவும், புத்திரன், பணம் இவற்றுடன் கூடினவனாகவும் ஆகிறான். (10) விருஸ்சிகராசியானது 3 மிடமாகவாகப் பிறந்தவனுக்கு எப்பொழுதும் பாபப்பற்றுள்ள அரசர்களுடன் மைத்ரியும், செய்நன்றி மறந்த பாபிகளும், சண்டையிடுவதில் பற்றுள்ளவர்களும், செலவுசெய்வதையே குறியாகக் கொண்டவர்களுமான மனிதர்களுடன் விரோதமும் இருக்கும். (11) தனுர் ராசியானது 3 மிடமாகவாகப் பிறந்தமனிதன் ராஜஸேவகர்களும், நல்லசூரர்களும், பணக்காரர்களும், தர்ம மார்க்கத்திலிருப்பவர்களும், கருணையால் பிராணிகளிடத்தில் ஸ்னேஹ முள்ளவர்களும், மனந்தெளிந்தவர்களும், விதிமுறையில் ஸமர்த்தர்களுமானவர்களுடன் சினேஹத்தை யடைவான். (12) மகரராசியானது 3 மிடமாகவாகப் பிறந்தவனுக்கு எப்பொழுதும் சுகம் நிறைந்த சவுக்கியத்தை (போக்யவஸ்துவைச்) செய்வதுடன் தேவர், குரு இவர்களிடத்து பக்தியுள்ளவரும், அதிகம் தனமுள்ளவரும், ஒப்பற்ற பாண்டித்ய முள்ளவருமான குருவையு முண்டாக்குகிறது. (ஜாதகன் விஷயத்திலும் இதைப்பொருத்திக் கொள்ளலாம்.) (13) கும்பராசியானது 3மிடமாக வாகப்பிறந்தமனிதன் நோன்பின் முறை

யறிந்தவர்களும், வெகு கீர்த்தியுள்ளவர்களும், அதிகம் பொருமை யுள்ளவர்களும், ஸத்தியத்தில் குறியுள்ளவர்களும், நல்லொழுக்க முள்ளவர்களும் ஸாதுக்களிடம் பற்றுள்ளவர்களுமான மனிதர்களுடனும், வஞ்சகர்களுடனும் சிநேஹத்தை யடைகிறான். (14) மீனராசியானது 3 மிடமாகவாகும் பொழுது அந்த ராசியானது அதிகம் பணத்துடன் கூடினவனும், புத்திரனுடன் கூடினவனும், புண்ணியமாகக்கிடைத்த தனங்களுடன் கூடினவனும், அதிதிகளிடம் பிரியமுள்ளவனும், எல்லாஜனங்களுக்கும் பிடித்தவனுமாயிருக்கின்ற மனிதனை உண்டாக்குகிறது.

மூன்றும் பாவாதிபதி லக்ஞாதிகளிலிருப்பதாலுண்டாகும் பலன்.

सहजपतौ लग्नगते स्त्रीस्वादालम्पट: स्वजनभेदै: ।
सेवां करोति मित्रैर्भवेत्कटूकारपण्डित: पुरुष: ॥ १५ ॥

यदि धनगे सहजेशे भैक्ष्यधनेनाल्पजीवित: पुरुष: ।
बन्धुविरोधी क्रूरै: सौम्यै: पुनरीश्वर: खचरै: ॥ १६ ॥

सहजगते सहजपतौ नृपमन्त्री सौहृदेऽतिनिपुणश्च ।
गुरुपूजननिरतोसौ नृपसेवाया: परं धनं लभते ॥ १७ ॥

भ्रातृपतौ तुर्यगते पित्तोद्रदु:खमुदरकृत्तेन ।
मातुर्वैरकरश्च हि पापै: पैत्र्यार्थभक्षक: पुरुष: ॥ १८ ॥

सहजपे सुतगे बहुबान्धवै: सुतसहोदरपालधनी सुखी ।
विषयभुक्परकार्यकर: क्षमी ललितमूर्तिरसौ चिरजीवित: ॥ १९ ॥

रिपुगते सहजाधिपतौ भवेन्नयनरोगयुतो रिपुमान्भवेत् ।
सहजसज्जनतोऽपि चतुष्पदाद्व्रणयुतोऽथ रुजा परिपीडित: ॥ २० ॥

युवतिवैरकरोऽल्पपराक्रम: सहजभावपतौ मदगे नर: ।
सुभगसुन्दररूपवती सती युवतिपापगृहेषु रतो भवेत् ॥ २१ ॥

सहजपेऽष्टमगे सरुषो नरो मृतसहोदरमित्रजन: खलै: ।
शुभखगैरशुभता धनयुग्भवेत्स्वयमपि प्रचुरामयवान्भवेत् ॥ २२ ॥

सहजभावपतौ तपसि स्थिते सहजवर्गरतोऽपि वनाश्रय: ।
भवति बाल्ययुतोऽथ पराक्रमी शुभमति: खलखेटग्रहेऽन्यथा ॥ २३ ॥

सहजपे दशमे च नृपात्सुखं पितृजनै: कुलवृद्धिजनाश्रय: ।
बहुसुभाग्ययुतो नयनोत्सवो भवति मित्रयुतोनितरां शुचि: ॥ २४ ॥

सहजपे शुभलाभपराक्रमी भवगते सुतबन्धुभिरन्वितः ।
नृपतिनाभिमतो विजयी नरो बहुळभोगयुतो निपुणस्सदा ॥ २५ ॥
सहजपे व्ययगे व्ययवाञ्शुचिर्निजसुहृद्रिपुरल्पपराक्रमी ।
शुभसमागमतोऽपि शुभं भवेत्खलखगैर्जननीनृपतो भयम् ॥ २६ ॥

(15) 3க் குடையவன் லக்கினத்திலிருந்தால் சொந்த ஜனங்களின் இடையூறுகளால் ஸ்திரீசுகானுபவத்தில் அதிகம் பற்றில்லாதவனுகவும், மித்திரர்களுடன் சேவை (அடிமைத்தொழில்) செய்பவனுகவும், கடுமையான காரியம் செய்வதில் பண்டிதனுகவும் புருஷன் ஆகிறுன். (16) 3க்குடையவன் 2 மிடத்திலிருந்தால் பிச்சையெடுத்துக் கிடைத்தபொருளைக் கொண்டு அற்பஜீவனஞ் செய்கின்றவனுகவும், பாபக்கிரஹங்களுடன் சேர்ந்திருந்தால் பந்துக்களுக்கு விரோதியாகவும், சுபக்கிரஹங்களுடன் சேர்ந்திருந்தால் பந்துக்களுக்கு ஈஶ்வர (ரக்ஷகனுக) னுகவும் புருஷனிருப்பான். (17) 3க் குடையவன் 3 மிடத்திலேயே இருந்தால் ராஜமந்திரியாகவும், சினேஹம் செய்யும் விஷயத்தில் வெகுநிபுணனுகவும், குருக்களைப் பூஜிப்பதில் மிகப்பற்றுள்ளவனுகவும் ராஜஸேவையினுல் மேலான தனத்தை யடைந்தவனுகவும் ஆகிறுன். (18) 3க்குடையவன் 4மிடத்திலிருந்தால் பித்தமூலம் வயிற்றில் துக்கமும், அதனுல் வயிற்றில் ஆயுதத்தினுல் அறுப்புண்டவனுகவும், பாபக்கிரஹங்களுடன் சேர்ந்தால் தாயுடன் சண்டையிடுபவனுகவும், பிதாவினுடையதான பொருளை யழிப்பவனுகவும் புருஷனுகிறுன். (19) 3க் குடையவன் 5 மிடத்திலிருந்தால் வெகுபந்துக்களுடன் கூடினவனுகவும், புத்திரன், ஸஹோதரன், இவர்களை ரக்ஷிப்பவனுகவும் தனிகனுகவுமாவதுடன், சுகியாகவும், விஷயபோகமுள்ளவனுகவும், பிறர் காரியத்தைச் செய்பவனுகவும், பொருமையுள்ளவனுகவும், அழகிய சரீரமுள்ளவனுகவும், வெகுகாலம் ஜீவிப்பவனுகவும் இவனுகிறுன். (20) 3க் குடையவன் 6 மிடத்திலிருந்தால் நேத்திரரோகமுள்ளவனுகவும், சத்துருவுள்ளவனுகவும், உடன் பிறந்தோன், ஸாதுஜனங்கள் இவர்களாலும், நாற்கால்பிராணியாலும் பீடையுள்ளவனுகவும், வியாதிபீடை யுள்ளவனுகவுமாவான். (21) 3க் குடையவன் 7 மிடத்திலிருந்தால் ஸ்திரீயுடன் சண்டையிடுபவ

ஞகவும், அற்பமான பராக்கிரமமுள்ளவஞகவும், இவனதுபத்னீ நல்ல அழகு பொருந்தியவளாயினும் வேறு ஸ்திரீயின் பாபம் நிறைந்த வீடுகளில் செல்லுகின்றவஞகவும் ஆகிருன். (22) 3க் குடையவன் 8 மிடத்திலிருக்க பாபக்கிரஹங்களும் அங்கிருந் தால் அதுபோழ்து பிறந்தமனிதன் கோபத்னுடன் கூடினவஞக வும் இறந்துபோன ஸஹோதரன், மித்திரஜனம் இவர்களையுடை யவஞகவும், ஆவான். சுபக்கிரஹங்கள் அந்த 8 மிடத்திலிருந் தால் முற்கூறியவற்றில் சுபமுண்டாவதுடன், தனத்துடன் கூடின வஞகவும் ஆவான். ஆனல் ஜாதகன் ஸ்வயம் அதிகமான வியாதி யுள்ளவஞக ஆவான். (23) 3க் குடையவன் 9 மிடத்திலிருந் தால் உடன் பிறந்தோரின் வர்க்கத்தை யடைந்தவஞயினும் வனத்தை யாசிரயித்தவஞகவும், இளம் வயதுள்ளவஞயினும் பாராக்கிரமியாகவும், நல்லவிஷயத்தில் சென்ற புத்தியையுடைய வஞகவும், ஆகிருன். பாபக்கிரஹத்தின் வீடாக அந்த 9 மிட மாகுமாஞல் முற்கூறிய பலன் மாறியே நடக்கும். (24) 3க் குடையவன் 10மிடத்திலிருந்தால் ராஜன் மூலமும், பிதிருஜனங் களாலும் சுகமுண்டாகும். அத்துடன் குலவிருத்திக்குரிய ஜனங்களை யாசிரயித்தவஞகவும், அதிகமான நல்லபாக்கியத்து டன் கூடினவஞகவும், கண்ணுக்கு ஸந்தோஷத்தை விளைவிப்ப வஞகவும், ஆகிருன். மித்திரஞன கிரஹத்துடனும் சேர்ந்தால் முற்சொன்னபடி வெகுசுத்தஞகவே இருப்பான். (25) 3க் குடையவன் 11 மிடத்திலிருந்தால் சுபமான லாபம், பராக்கிரமம் இவையுள்ளவஞகவும், புத்திரன் பந்து இவர்களுடன் கூடினவ ஞகவும், ராஜாவினலபிமானிக்கப்பட்டவஞகவும், ஜயமுள்ளவஞ கவும் அதிகம் போகமுள்ளவஞகவும் எப்பொழுதும் நிபுணஞக வும் மனிதன் ஆகிருன். (26) 3க்குடையவன் 12விருந்தால் செல வுள்ளவஞகவும், சுத்தஞகவும் தனது மித்திரனையே சத்துரு வாக வுடையவஞகவும் அற்பபராக்கிரம முள்ளவஞகவும், சுப ஸமாகமத்தால் சுபத்தை யடைபவஞகவும் இருப்பான். பாபக் கிரஹங்களுடன் கூடினல் தாய், அரசர் இவர்களிடமிருந்து பய முண்டாகும்.

## மூன்றும் பாவத்திர்க்கு சூரியாதி கிரஹங்களின் திருஷ்டியாலேற்படும் பலன்.

तृतीयगेहे रविवीक्षिते च सहोदरः पूर्वभवो विनश्यति ।
पराक्रमेशोऽव्ययभे स्वभाग्ये नृपाद्भयं चैव न संशयोऽत्र ॥ २७ ॥

सहजभे यदि चन्द्रविलोकिते भगिनिजन्मकरो न पराक्रमी ।
प्रथमपूर्वधनेन सुखं धनं तदनु चोत्तरगे सकलार्थदः ॥ २८ ॥

तृतीयभावे यदि भौमदृष्टिः पराक्रमे सिद्धिमुपैति नूनम् ।
देशान्तरे राजगृहे च मान्यं सहोदराणां च विनाशनं स्यात् ॥ २९ ॥

सहजभे द्विजराजसुतेक्षिते सहजसौख्ययुतश्च नरस्सदा ।
वणिजकर्मरतोऽत्र विचक्षणो नरवरः खलु तीर्थकरोद्यमी ॥ ३० ॥

सुरगुरौ यदि विक्रममीक्षते सहजसौख्ययुतः पुरुषो भवेत् ।
पितृधनः पितृवर्जितगर्वितः स्वजनबन्धुरतोऽथ च कीर्तिमान् ॥३१॥

सहजभे सति भार्गववीक्षिते सहजसौख्ययुतश्च नरस्सदा ।
सकल पुष्टियुतः किल कन्यकाजनिविदेशगतो नृपपूजितः ॥ ३२ ॥

यदि पराक्रमभं शनिवीक्षितं बहुपराक्रमवान्बलवान्भवेत् ।
सहजपक्षसुसौख्यविनाशकः फलविपाकदशासु फलं नहि ॥ ३३ ॥

तृतीयभे राहुनिरीक्षिते च पराक्रमात्सिद्धिमुपैति नूनम् ।
नानार्थसौख्यं बहुपुत्रदुःखं चोराग्निसर्पान्नच राजतो भयम् ॥ ३४ ॥

(27) 3மிடம் சூரியனால் பார்க்கப்பட்டால், இவனுக்கு முன்னுண்டான ஸஹோதரன் விநாசத்தை யடைகிருன். 3க்குடையவன் 9, 12 லிருந்தால் அரசன் மூலம் பயமுண்டாகும், இதில் சந்தேஹமில்லை. (28) 3 மிடமானது சந்திரனுல் பார்க்கப்பட்டால் ஸஹோதரிகளின் உத்பத்தியைத் தரும். ஜாதகன் பராக்கிரமமற்றவனுகவும் ஆகிருன். முதலில் முன்னுள்ள தனத்தால் சுகமும் தனமும், அதற்குப்பிறகு உத்தரபாகத்தில் ஸகலவிதார்த்தப் பிராப்த்தியும் உண்டாகும். (29) 3 மிடத்தில் செவ்வாயின் பார்வை யிருக்குமானுல் தனது பராக்கிரம விஷயத்தில் ஸித்தியை யடைகிருன் என்பது நிப்சயம். தேசாந்தரத்திலும், ராஜகிருஹத்தில் மான்னிய (பூமிமுதலியன) மும், ஸஹோதரர்களின் நாசமும் உண்டாகிறது. (30) 3 மிடமானது புதனுல்

பார்க்கப்பட்டால் எப்பொழுதும் மனிதன் ஸஹோதரஸவுக்கியத்துடன் கூடினவனாக வாகிறான். அத்துடன் வியாபாரத்தொழிலில் பற்றுள்ளவனாகவும், அதில் ஸமர்த்தனாகவும், தீர்த்தத்தையேற்படுத்துவதில் முயர்ச்சியுள்ளவனாகவும் மனித சிரேஷ்டனாகவுமாகிறான். (31) குரு 3 மிடத்தைப் பார்த்தால் புருஷன் ஸஹோதரஸவுக்கியத்துடன் கூடினவனாகிறான். பிதிருதனத்தையடைந்தவனாகவும், பிதாவைவிட்டு கர்வத்தை யடைந்தவனாகவும், சொந்தஜனம், பந்து இவர்களிடத்தில் பற்றுள்ளவனாகவும், அதன் மூலம் கீர்த்தியுள்ளவனாகவும் ஆகிறான். (32) 3 மிடமானது சுக்கிரனால் பார்க்கப்பட்டால் மனிதன் எப்பொழுதும் ஸஹோதர ஸவுக்கியமுள்ளவனாகவே இருப்பான். எல்லாவித புஷ்டியுள்ளவனாகவும், பெண்குழந்தை பிறத்தல்மூலம் வேறு தேசம் போகின்றவனாகவும், ராஜபூஜிதனாகவும் ஆகிறான். (33) 3 மிடமானது சனியினால் பார்க்கப்படுமானால் அதிகபராக்கிரமமுள்ளவனாகவும், பலவானாகவும் ஸஹோதர வர்க்கத்திற்குரிய நல்ல சவுக்கியத்திற்கு நாசத்தைச் செய்கின்றவனாகவும், பலன் வரக்கூடிய தசைகளில் கூட நல்லபலன் கிட்டாதவனாகவுமாகிவிடுகிறான்.* (34) 3 மிடமானது ராஹுவினால் பார்க்கப்பட்டால் பராக்கிரமத்தால் சித்தியை யடைவது நிஸ்சயம். நானாவிதப் பொருள் மூலம் சவுக்கியமும்,வெகு புத்திரனிருப்பதை யொட்டி துக்கமும் உண்டாகும். ஆனால் ராஜபயமோ, ஸர்ப்ப பயமோ கிடையாது.

மூன்றும் பாவாதிபதிக்கு வேறு கிரஹங்களின் சேர்க்கை முதலியவற்றின் மூலமுண்டாகும் பலன்கள்.

लग्ने गुरौ विक्रमनाथयुक्ते चतुष्पदानां प्रवदन्ति भीतिम् ।
गवां भयं वा जलराशिलग्ने जलप्रमादो भवति ध्रुवं हि ॥ ३५ ॥
वीर्याधिपे राहुसमेतराशिनाथान्विते राहुयुते विलग्ने ।
सर्पाद्भयं विक्रमराशिनाथे बुधेन युक्ते गलरोगमत्र ॥ ३६ ॥
नीचे तृतीयेऽरिगृहे विमूढे पापेक्षिते वा गरळप्रमादः ।
विषप्रयोगाद्विषभक्षणाद्वा तेषामभावेऽत्र विनिश्चितार्थः ॥ ३७ ॥

* இந்தப் பலன் வெகுமுக்கியமான. ஜாதகத்தில் நிரம்பவும் ஒத்து நடந்துவருகிறது.

चापे तृतीये गलरोगमत्र वदन्ति मान्द्यादियुते विशेषात् ।
भौमान्विते प्रेतपुरीशभागे तृतीयराशौ यदि कर्णरोगम् ॥ ३८ ॥

सोत्थे शनौ मान्दियुते तथैव वाताद्भयं सौम्यदृशा विहीने ।
तृतीयराशिस्थितराशिनाथसंयुक्तराश्यंशपतौ च केन्द्रे ॥ ३९ ॥

पापान्विते पापनिरीक्षिते वा वदन्ति कर्णोद्भवरोगमत्र ।
क्रूरादिषष्ट्यंशयुते तदीशे कर्णस्य रोगं कथयन्ति तज्ज्ञाः ॥ ४० ॥

सौम्ययुक्ते तृतीये वा सौम्यखेचरवीक्षिते ।
तदीशे शुभसंयुक्ते कर्णयोर्भूषणं वदेत् ॥ ४१ ॥

सूर्याङ्गारकजीवानां कण्ठभागे विनिर्दिशेत् ।
चन्द्रज्ञयोश्श्रोत्रभागे भृगोर्मूर्ध्नि परे पदि ॥ ४२ ॥

(35) குருவானவன் லக்கினத்தில் 3 மிடத்ததிபனுடன் கூடினுல் நாற்கால் பிராணிகளுக்கோ (குதிரை முதலியவற்றிற்கோ) அல்லது பசுக்களுக்கோ கெடுதலுண்டாகும். ஜலராசி லக்கினமாகவாகி அதில் முற்கூறியபடி குருவிருந்தால் ஜலபயம் (கிணற்றில் விழுதல் முதலிய ஜலகண்டம்) நிஸ்சயமாயுண்டாகும். (36) 3 மிடத்ததிபன் ராஹுவிருக்கும் ராசியின் நாதனுடனே ராஹுவுடனே கூடி லக்கினத்திலிருந்தால் பாம்பினின்றும் பயமுண்டாகும். 3 மிடத்ததிபன் புதனுடன் சேர்ந்தால் கழுத்தில் ரோகமுண்டாகும். (அதாவது: கண்டமாலே, உள்நாக்குப் படருதல் முதலியன வுண்டாகும்.) (37) 3 மிடத்ததிபன் 6 மிடத்திலிருந்தாலும், அஸ்தங்கதனுகவேவா, பாபக்கிரஹத்தால் பார்க்பட்டவனுகவேவா இருந்தாலும். பிறர் விஷமிடுவதாலோ, தானே விஷத்தை யுட்கொள்வதாலோ விஷய முண்டாகும். முற்கூறியபடியில்லாவிடில் விஷபயமில்லை என்பது உறுதிசெய்யப்பட்ட பொருளே. (38) தனுர்ராசி 3மிடமாகவானுல் கழுத்தில் ரோகமுண்டாகும். 3 மிடமாகவான தனுர்ராசிக்கு மாந்தியின் யோகமிருக்குமானுல் விசேஷமாக முற்கூறிய ரோகமுண்டாகும். 3 மிடத்தில் தண்டாயுதம் என்ற ஷஷ்டி அம்சத்தில் செவ்வாயின் சேர்க்கை இருந்தால் காதில் ரோகமுண்டாகும். (39–40) 3மிடத்தில் சனி இருந்து மாந்தியுடன்கூடி சுபக்கிரஹங்களின் பார்வையுமில்லாதிருக்குமானுல் வாயுரோகத்தினின்றும் பயமுண்டாகும்.

3 மிடத்திலிருக்கும் ராசி நாதனுடன் சேர்ந்த ராஸ்யம்சபதி யானவன் கேந்திரத்திலிருந்து பாபருடன் சேர்க்கையையோ, பாபர் பார்வையையோ பெற்றால் இதில் பிறந்தவர்க்கு கர்ணத் தினின்றுமுண்டான ரோகத்தைச் சொல்லுகின்றனர். 3க்கு டையவன் குருராதி ஷஷ்டியம்சத்திலிருந்தால் அஃதறிந்தவர் கர்ணத்தின் ரோகத்தைச் சொல்லுகின்றனர். (41) 3மிடமானது சுபருடன் கூடினாலும், சுபரால் பார்க்கப்பட்டாலும், 3க் குடையவன் சுபருடன் கூடினாலும், இருகாதுகளிலும் ஆபரணத்தைச் சொல்லுக. (42) சூரியன், செவ்வாய், குரு இவர்கள் ஸம்பந்த மான பலனைக் கழுத்திலும், சந்திரன், புதன் இவர்கள் ஸம்பந்த மான பலனைக் காதிலும், சுக்கிர ஸம்பந்தமான பலனைத் தலையி லும், மீதமுள்ள சனி, ராகு, கேது இவர்கட்க்குக் காலிலும் பலனை கண்டுகொள்க.

**पापभवनं तृतीयं समस्तपापैर्युतं सहजहर्तृ ।**
**विपरीतमतः श्रेष्ठं संख्यां तेषां प्रवक्ष्यामि ॥ ४३ ॥**

ஸஹோதர விஷயமான பலன் காணும் யோகம்.—(43) 3 மிடம் பாபர் வீடாகி எல்லாப் பாபக்கிரஹங்களுடனும் கூடுமா னால் ஸஹஜனுக்கு நாசத்தைச் செய்யும். இதற்கு நேர் மாறாக வுள்ளது (அதாவது: 3 மிடமானது சுபர் வீடாகி எல்லாச் சுப ருடனும் அது கூடினால் என்பதாம்.) சிறந்ததாகும். (அதாவது: ஸஹோதர நாசத்தைச் செய்யாது என்பதாம்.)

**यावन्तो नवभागा जन्मनि यातास्सहजराशौ ।**
**तत्संख्यां कुर्वन्ति च दृष्टास्त्वन्यैस्तदा बहवः ॥ ४४ ॥**

ஸஹோதரரின் எண்ணைக் காண்பதற்கு உபாயம்.—(44) ஜா தகன் ஜனித்த காலத்தில் 3 மிடத்தில் எவ்வளவு நவாம்சங்கள் சென்றனவோ அவ்வளவு எண்ணை ஸஹோதரர் விஷயத்தில் செய்கின்றன. பிறரால் பார்க்கப்பட்டால் அது போழ்து வெகு ஸஹோதரர்களைச் செய்கின்றன.

**तत्र स्थितो रविसुतः कुजेन दृष्टो विनाशयति जातान् ।**
**शुक्रो गुरुसंदृष्टः पुष्णाति सदैव दायादान् ॥ ४५ ॥**

सौम्यो भास्करदृष्टः सुहृदां प्रति संक्षयं सदा कुरुते ।
भावाध्याये कथितं शेषं परिकीर्तयेदत्र ॥ ४६ ॥

சனி, சுக்கிரன், புதன் இவர்கள் 3 மிடத்திலிருந்து செவ்வாய், குரு, சூரியன் இவர்களால் பார்க்கப்படுவதின் பலன்.— (45) சனி 3 மிடத்திலிருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் உடன் பிறந்தவர்களை விநாசமாக்குவான். சுக்கிரன் 3லிருந்து குருவினுல் பார்க்கப்பட்டால் தாயாதிகளை எப்பொழுதும் போஷிக்கிறுன். (46) புதன் 3லிருந்து சூரியனுல் பார்க்கப்பட்டால் எப்பொழுதுமே ஸ்நேஹிதர்களின் நாசத்தைச் செய்கிறுன். பாவாத்தியாயத்திற் சொல்லிய மீதமுள்ள விஷயத்தையும் இந்த விடத்திற் சொல்லுக.

भ्रातृपे कारके वापि शुभयुक्ते शुभग्रहे ।
भावेवा बलसंपूर्णे भ्रातॄणां वर्धनं भवेत् ॥ ४७ ॥

केन्द्रत्रिकोणगे वापि स्वोच्चमित्रस्ववर्गगे ।
नाथे वा कारके वापि भ्रातृलाभं वदेद्बुधः ॥ ४८ ॥

भ्रातृस्थाने बुधयुते तदीशे चन्द्रसंयुते ।
कारके मन्दसंयुक्ते भगिन्येकाग्रजा भवेत् ॥ ४९ ॥

पश्चात्सहोदरोऽप्येकस्तृतीयस्तु मृतो भवेत् ।
कारके राहुसंयुक्ते विक्रमेशेऽतिनीचगे ॥
पश्चात्सहोदराभावः तत्पूर्वं तु त्रिकं भवेत् । ५० ।
भ्रातृस्थानाधिपे केन्द्रे कारके तत्त्रिकोणगे ॥ ५१-५२ ॥

जीवेन संयुते स्वोच्चे संख्या द्वादशसोदराः ।
अयं प्रथमगर्भश्च द्वितीयश्च तृतीयकः ॥
सप्तमो नवमश्चैव द्वादशश्चमृतो भवेत् ।
शेषास्सहोदरा दीर्घाः षड्भौयमलो भवेत् ॥
नाशस्थितौ सोदरनाथभौमौ पापेक्षितौ सोदरनाशमाहुः ।
पापेक्षिते पापयुते तृतीये भ्रातॄन्समुत्पाद्य विनाशहेतुः ॥ ५४ ॥

व्ययेशेन युते भौमे गुरुणा संयुतेऽपि वा ।
भ्रातृस्थाने शशियुते सप्तसंख्यास्तु सोदराः ॥ ५५ ॥
एषां प्रजाद्वयं नष्टं शुभयुक्तेन वीक्षिते ।
तृतीये राहुसंयुक्ते तदीशे भौमसंयुते ॥ ५६ ॥

लग्नेशेऽस्तंगते वापि विभिन्नोदरसोदराः ।
भ्रातृस्थाने पापयुते तदीशे पापसंयुते ॥ ५७ ॥

अत्युच्चसंस्थे हिबुकाधिनाथे स्वक्षेत्रगे मित्रग्रहेण दृष्टे ।
तृतीयभे वा न च पापयुक्ते दृष्टे सहोत्था बहवो भवन्ति ॥ ५८ ॥

अयुग्मराशौ यदि कारकेशौ गुर्वर्कभूसूनुनिरीक्षितौ चेत् ।
ओजो ग्रहे स्याद्यदि विक्रमाख्ये पुंभ्रातरस्त्वंशवशाद्भवेयुः ॥ ५९ ॥

युग्मांशके युग्मगृहे तदीशे भावे तथा कारकखेचरेन्द्रे ।
सहोदरीलाभमिहाहुरार्याः नपुंसकांशे किल तत्तदेव ॥ ६० ॥

युग्मराशौ नरांशस्थौ पश्चात्पुरुषमादिशेत् ।
युग्मांशे वाङ्गना चन्द्रे क्षीणे स्यात्तस्य नाशनम् ॥ ६१ ॥

यावद्ग्रहैर्युतो दृष्टो भ्रातृभावस्तु तान्वदेत् ।
नीचारिगै र्वदेन्नष्टानेवं भ्रात्रादिकं वदेत् ॥ ६२ ॥

ஸஹோதர ஸஹோதரிகளுக்குக் கண்டறியவேண்டிய பலன்கள்.—(47) 3ம் பாவாதிபதியோ, 3ம் பாவகாரகனோ சுபருடன் கூடினாலும், 3ம் பாவாதிபதி சுபக்கிரஹமானாலும், 3ம் பாவமானது நிரப்பின பலமுள்ளதாக வானாலும் பிராதாக்களின் விருத்தியை (பெருக்கை) ச் செய்யும். (48) 3 மிடத்ததிபனோ, காரகனோ கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ தனது உச்சவீடு, மித்திரன் வீடு, சொந்த (ஷட்) வர்க்கம் இவற்றிலோ இருந்தால் பிராதாக்களின் லாபத்தைச் சொல்லவேண்டும். (49) 3 மிடத்தில் புதனிருந்து, 3க் குடையவன் சந்திரனுடனும்கூடி 3ம் பாவகாரகன் சனியுடன் கூடினால் மூத்த ஸஹோதரி ஒருவள் பிறப்பாள். (50) இவனுக்குப் பிறகும் ஒரு ஸஹோதரனுண்டாவான். 3-வது ஸஹோதரன் இறந்துவிடுவான். 3ம் பாவகாரகன் ராஹுவுடன் கூடினாலும், 3க் குடையவன் பரம நீசபாகத்திலிருந்தாலும் பின்னால் ஸஹோதரனில்லை. இவனுக்கு முன்னர் 3 ஸஹோதர னிருக்கும். (51–53) 3 மிடத்ததிபன் கேந்திரத்திலிருந்து 3ம் பாவகாரகன் அந்த 3ம் பாவத்திற்குத் திரிகோணத்திலுமிருந்து குருவுடனும் கூடித் தனது உச்ச வீட்டிலுமிருந்தால் 12 ஸஹோதரர் பிறப்பர். அவ்வித ஸஹோதரர்களுள் இவன் முதலாவது கர்ப்பமாவான். 2-வதும், 3-வதும், 7-வதும்,

9-வதும், 12-வதும் இறந்து விடும். மீத முள்ள ஸஹோதரர்கள் உயிருடனிருப்பர். 6-வது கர்ப்பம் இரட்டையாக விருக்கும். (54) 3க் குடையவனும், செவ்வாயும் 8 லிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் ஸஹோதர நாசத்தைச் சொல்லுகின்றனர். 3 மிடமானது பாபரால் பார்க்கப்பட்டோ, பாபருடன் கூடியோ இருந்தால் பிராதாக்களை யுண்டாக்கிப் பிறகு நாசமாக்குவதற்கு ஹேதுவாவர். (55) செவ்வாய் 12க் குடையவனுடன் கூடி குருவினால் பார்க்கப்பட்டோ, 3 மிடம் சந்திரனுடன் கூடியோ இருந்தால் 7 ஸஹோதரர் பிறப்பர். (56) சுபக்கிரஹத்துடன் கூடின கிரஹத்தினால் 3 மிடமானது பார்க்கப்பட்டு ராகுவுமங்கிருந்து 3க் குடையவன் செவ்வாயுடனும் கூடினால் இந்த 7 ஸஹோதரர்களுள் இரண்டுபிரஜைகள் நாசமடையும். (57) 3 மிடமானது பாபருடன் கூடினாலும் 3க்குடையவனும் பாபருடன் கூடினாலும், லக்கினேசன் அஸ்தங்கதனாகவானாலும். வேறுதாயின் வயிற்றில் பிறந்த ஸஹோதரர்களுண்டு. (58) 3மிடத்திற்குடையவன் அத்யுச்சபாகத்திலிருந்தும் அல்லது சொந்தவீட்டிலிருந்து மித்திரனான கிரஹத்தாலும் பார்க்கப்பட்டும் 3மிடத்திற்கு பாபர்வீக்ஷணமோ சேர்க்கையோ இல்லாமலுமிருந்தால் வெகுஸஹோதரர்கள் உண்டாவர். (59) 3க் குடையவர், 3ம் பாவகாரகர் இவர்கள் ஒற்றைப்பட்டராசியிலிருந்து குரு, சூரியன், செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டு, 3மிடம் ஒற்றைப்பட்டராசியாகவுமிருந்தால் ராசியினுதயமாகும் அம்சத்திற்குத் தக்கபடி புருஷ ஸஹோதரர்களுண்டாவர். (60) 3க் குடையவன் இரட்டைப்பட்ட நவாம்சத்திலோ, இரட்டைப்பட்ட ராசியிலோ இருந்து 3ம் பாவத்தில் ஸஹோதரகாரகனுமிருந்தால் (அந்த ஜாதகனுக்கு) பெரியார் ஸஹோதரீலாபத்தைச் சொல்லுகின்றனர். (3க் குடையவன், 3ம் பாவகாரகர் இவர்கள்) நபும்ஸகாம்சத்திலிருந்தால் நபும்ஸக ஸஹோதரன் பிறப்பான். (61) இரட்டைப்பட்ட ராசியில் (3க் குடையவன், காரகன் இவர்கள்) புருஷ நவாம்சத்திலிருந்தால் பிறகு புருஷஸஹோதரத்தைச் சொல்லவேண்டும். இரட்டைப்பட்ட நவாம்சத்திலிருந்தால் பெண் ஸஹோதரீ யுண்டாகும். தேய்பிறைச் சந்திரன் அங்கிருந்தால் அந்த பெண் ஸஹோதரம்

நாசமடையும். (62) 3ம் பாவமானது எவ்வளவு கிரஹங்களுடன் கூடியோ, பார்க்கப்பட்டோ இருக்குமோ அவ்வளவு ஸஹோதரர்களைச் சொல்லவேண்டும். நீசத்தையும், சத்துரு வீட்டையு மடைந்த கிரஹங்களைக் கொண்டு (அவ்வளவு) நாசத்தையும் சொல்லவேண்டும். இவ்விதமே பிராதாமுதலியவற்றைச் சொல்லவேண்டும்.

भ्रातृस्थानं तृतीयं च नवैकादशसप्तमम् ।
तत्तदीशदशायां तु भ्रात्रुत्पत्तिं विनिर्दिशेत् ॥ ६३ ॥

सौम्येन भूमीतनयेन दृष्टः करोति वृद्धिं रविजोऽनुजानाम् ।
शशाङ्कवर्गे सहजे कुजेन दृष्टे सरोगास्सहजा भवेयुः ॥ ६४ ॥

दिवामणौ भ्रातृगृहे स्वगेहे सन्देह एवानुजजीवितस्य ।
एकः कदाचिच्चिरजीवितश्च भ्राता भवेद्भूपतिना समानः ॥ ६५ ॥

चन्द्रमाः पापयुक्तश्च सहजस्थो यदा भवेत् ।
भ्रातृनाशकरो योगो यदि नो वीक्षितश्शुभैः ॥

यदि खलु सहजे च खला ग्रहाः शुभग्रहैस्सहिताश्च विलोकिताः ।
नहि भवति सहोदरबान्धवं बहुविधाग्रजपक्षविघातयुक् ॥

शुभनिजेशयुतेक्षितमायभं भवति ज्येष्ठसहोदरसौख्यभाक् ।
स्वपतिना नयुतं नशुभेक्षितं नसुखमन्यसहोदरजं तदा ॥

यदिखलाः प्रबलाः खलमध्यगं खलयुतेक्षितमग्रजहं तदा ।
नहि कनिष्ठसहोदरजं सुखं भवति ज्येष्ठसुखं न तु जायते ॥ ६९ ॥

प्रथमजातशिशुं तरणिग्रहस्तदनु हन्ति शिशुं लघुमर्कजः ।
धरणिजो लघुबालकघातकृत् बहुखला यदि हन्ति च भार्गवः ॥७०॥

रविराहू भ्रातृगतौ चन्द्रे च भगिनीसुखम् ।
शन्याररहवष्षष्ठे भ्रातृनाशकरा गुरुः ॥ ७१ ॥

सूर्ये धनं नखमिते सहजे विधुश्च त्र्यब्देऽनुजेक्षितिसुतेऽनुजमुच्चविश्वे ।
ज्ञोऽर्काब्दवित्तविलयं गुरुतोऽभ्रनेत्रे मित्राप्तिरत्र नखतः प्रकरोति चार्थम्॥

இன்னின்னவிடம் ஸஹோதரஸ்தானமாகவாகும் என்பதுமுதலியன—(63) 3,9, 11, 7 இந்தவிடங்கள் பிராதிருஸ்தானங்களாகும், அந்தந்தவிடத்ததிபர் தசையில்(அல்லது புக்தியில்)பிராதாவினுத்பத்தியைச் சொல்லவேண்டும். (64) சனியானவன் புதனு

லோ, செவ்வாயினுலோ, பார்க்கப்பட்டால் உடன் பிறந்தவரின் பெருக்கைச் செய்கிருன். சந்திர (ஷட்) வர்க்கமானது 3 மிடமாகவாகி செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் ரோகத்துடன் கூடினவர்களான ஸஹோதரர்களுண்டாவர். (65) சூரியன் 3மிடத்திலிருந்து அது சொந்தவீடாகவும் ஆனுல் ஸஹோதரன் ஜீவிப்பது ஸந்தேஹந்தான். அவ்விதம் ஜீவித்தால் ஒருவன் ஜீவிப்பான் அவன் ராஜர்வுக்கு ஸமானனுக விருப்பான். (66) சந்திரன் பாபருடன் கூடி 3 மிடத்திலிருந்து சுபரால் பார்க்கப்படாவிடில் பிராதாவுக்கு நாசத்தைத் தரும் யோகமாகும். (67) 3 மிடத்தில் பாபக்கிரஹங்களிருந்து சுபக்கிரஹங்களுடன் கூடியோ, அவர்களால் பார்க்கப்பட்டோ இருந்தால் அப்பொழுது ஸஹோதரமுள்ளவனுகவாகமாட்டான். இது நிஶ்சயம். அதுடன் முன்பிறந்த ஸஹோதரவர்க்கத்திற்கும் வெகுவிதமான கெடுதலைச் செய்வதாகவுமாகும். (68) 11 மிடமானது சுபர், தனது வீட்டிற்குடையவர் இவர்களின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப்பெற்ருல் மூத்தஸஹோதர ஸவுக்கியத்தையடைகிருன். 11க் குடையவனுடன் கூடாமலும் சுபரால் பார்க்கப்படாமலு மிருக்குமானுல் வேறு ஸஹோதர மூலமுண்டான சுகம் அப்பொழுதுண்டாகாது. (69) 11 மிடத்தில் பலமுள்ள பாபக்கிரஹங்களிருந்தாலும், 11 மிடத்திற்கு இருபுறத்திலும் பாபக்கிரஹங்களிருந்தாலும், அல்லது பாபரின் சேர்க்கை பெற்ற கிரஹத்தால் அந்த பதினென்ருமிடம் பார்க்கப்பட்டாலும் மூத்ததமையனைக் கொன்றுவிடும். இளைய ஸஹோதரனுலுண்டாகும் சவுக்கியமும் உண்டாகாது. ஜ்யேஷ்ட ஸஹோதர சவுக்கியமும் உண்டாவதில்லை. (70) ஸஹோதரஸ்தானத்தில் சூரியனிருந்தால் முதல் பிறந்த குழந்தையை நாசமாக்கும். சனியிருந்தால் இவனுக்குப் பிறகுண்டான சிறு குழந்தையை நாசமாக்கும். செவ்வாயிருந்தால் இளம் வயதிலுள்ள ஸஹோதரர்களைக் கொன்று விடுவான். வெகுபாபக்கிரஹங்களிருந்தாலும் (அதேபலன் தான் நடக்கும்) சுக்கிரனும் ஸஹோதரரை நாசமாக்குவதுண்டு. (71) சூரியன், ராகு இவர்கள் ப்ராத்ருஸ்தானத்திலிருந்தாலும், சந்திரனிருந்தாலும், ஸஹோதரீ சுகத்தைச் செய்வார். சனி

செவ்வாய், ராஹு இவர்களோ, குருவோ 6லிருந்தால் ஸஹோதர நாசத்தைச் செய்வர். (72) சூரியன் 3லிருந்தால் 8 வருஷத்தில் தனத்தையும், சந்திரனிருந்தால் 3 வருஷத்திலும், 3 மிடத்தில் செவ்வாயிருந்தால் 11 வருஷத்திலும் ஸஹோதரனேயும், புதனிருந்தால் 12 வருஷத்தில் வித்தநாசத்தையும், குருவைக் கொண்டு 22ல் மித்திரப்ராப்தியையும், 20 வருஷத்தில் பொருளேயும் செய்கிறது.

குறிப்பு — இந்த 72-வது சுலோகம் வெகு அசுத்தமாக இருப்பதாலும் வேறு பிரதிகிடைக்காமையாலும் இருப்பதைக் கொண்டு ஒருவாறு உரை எழுதியிருக்கிறேம். வேறு சுத்தப்ரதி கிடைக்குமானல் அதற்குத்தக்கபடி அதன் பொருளே அறிந்து கொள்ளவும்.

ஸாராவளியிற் சொல்லிய மூன்றும் பாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற்சொல்லிய 3 வது (ஸஹோதர) பாவபலன்.

सभौमो भ्रातृभावेशः षडादित्रयसंस्थितः ।
भ्रातृक्षेत्रगतो वापि भ्रात्रभावं विनिर्दिशेत् ॥ १ ॥

तौ पापयोगतः पापक्षेत्रयोगेन वा पुनः ।
उत्पाद्य सहजान्सद्यो निहन्ता शास्त्रनिश्चयात् ॥ २ ॥

स्त्रीग्रहो भ्रातृभावेशस्त्रीग्रहो भ्रातृगोऽपि वा ।
भगिनीस्यात्तदा भ्राता पुंगृहे पुंग्रहो यदि ।
मिश्रे मिश्रफलं चात्र बलाबलविनिर्णयात् ॥ ३ ॥

नाशस्थितौ सोदरनाथभौमौ पापेक्षितौ सोदरनाशमाहुः ।
पापेक्षितौ पापसमन्वितौ वा त्रिसप्तविद्याप्रविनाशहेतू ॥ ४ ॥

भ्रातृपे कारके वापि शुभयुक्तनिरीक्षिते ।
भावेवा बलसंपूर्णे भ्रातृणां वर्द्धनं भवेत् ॥ ५ ॥

केन्द्रत्रिकोणगे वापि स्वोच्चमित्रस्ववर्गगे ।
नाथेवा कारकेवापि भ्रातृलाभं वदेद्बुधः ॥ ६ ॥

भ्रातृभे बुधसंयुक्ते तदीशे चन्द्रसंयुते ।
कारके मन्दसंयुक्ते भगिन्येकाऽग्रतो भवेत् ॥ ७ ॥

पश्चात्सहोदरेष्येतत्तृतीयस्तु मृतो भवेत् ।
कारके राहुसंयुक्ते विक्रमेशस्तु नीचगः॥ ८ ॥

पश्चात्सहोदराभावः पूर्वं तु त्रयकृद्भवेत् ।
भ्रातृस्थानाधिपे केन्द्रे कारके तत्त्रिकोणगे ॥ ९ ॥

जीवेन सहितश्चोच्चे संख्याद्वादशसोदराः ।
अयं तृतीयगर्भश्च प्रथमाच्च तृतीयकः ॥ १० ॥

सप्तमश्चैव नवमो द्वादशश्च मृतिप्रदः ।
शेषास्सहोदरा दीर्घा षड्गर्भो यमलो भवेत् ॥ ११ ॥

व्ययेशेन युते भौमे गुरुणा सहितेऽपि वा ।
भ्रातृस्थाने शशियुते सप्तसंख्यास्तु सोदराः ।
एतेषां द्विप्रजानाशः शुक्रयुक्तेक्षिते नहि ॥

(1) 3ம் பாவாதிபதி செவ்வாயுடன் கூடி 6, 8, 12 லிருந்தாலும், ஸஹோதரஸ்தானத்திலுமிருந்தாலும் ப்ராதாக்களின் அபாவத்தைச் சொல்லவேண்டும். (2) 3க் குடையவர், செவ்வாய் இவர்கள் பாபர் சேர்க்கை பெற்றோ, பாபர் வீட்டிலேறியோ இருப்பாரானல் ஸஹோதரர்களை உண்டுபண்ணி உடன் நாசமாக்குவர் என்பது சாஸ்திர நிஸ்சயம். (3) 3ம் பாவாதிபதி ஸ்திரீக்ரஹ (சந்திரன், சுக்கிரன்) மாயிருந்தாலும், ஸ்திரீக்கிரஹம் 3ம் பாவத்திலிருந்தாலும் அப்பொழுது தங்கையுண்டாவள். 3ம் பாவம் புருஷக்கிரஹத்தின்வீடாகி அதில் புருஷக்கிரஹம் அவ்விதமானல் புருஷஸஹோதரன் உண்டாவான். ஆண் பெண்கிரஹங்கள் சேர்ந்திருந்தால் ஆண்பெண்ஸஹோதரம் கலந்தே கிரஹங்களின் பலாபலத்திற்குத் தக்கபடி பிறக்கும். (4) 3க் குடையவன் செவ்வாய் இவர்கள் 8மிடத்திலிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் ஸஹோதரநாசத்தைச் சொல்லுகின்றனர். பாபர்களால் பார்க்கப்பட்டோ, பாபருடன் கூடியோ இருப்பாரானல் 3, 7, 14 இந்த வயதுகளில் நாசஹேதுவாக வாகின்றனர். (5) 3 மிடத்ததிபதியோ, 3ம் பாவகாரகனே சுபருடன் கூடியோ, பார்வைபெற்றோ இருந்தாலும், 3 மிடம் பலம் பெற்றிருந்தாலும் ப்ராதாக்களின் பெருக்கைச் சொல்லவேண்டும். (6) 3ம் பாவாதிபதியோ, 3ம் பாவகாரகனே கேந்திரத்ரிகோணத்தி

லாவது தனது உச்சவீடு, மித்திரவீடு, சொந்தஷட்வர்க்கம் இவற்றிலாவதிருந்தால் ப்ராதிருலாபத்தை வித்வான் சொல்லவேண்டும். (7) 3ல் புதனிருந்து 3க் குடையவன் சந்திரனுடன் கூடி 3ம் பாவகாரகன் சனியுடன் கூடினல் இவனுக்கு முந்தி ஒருபெண் ஸஹோதரம் உண்டாகும். (8) 3ம் பாவகாரகன் ராகுவுடன் கூடி 3க் குடையன் நீசனுமானல் இவனுக்குப் பின்னுண்டான ஸஹோதரத்திற்குள் மூன்ருவது ஸஹோதரம் இறந்து விடும். (9) 3க் குடையவன் கேந்திரத்திலிருந்து காரகன் அதற்குத்ரிகோணத்திலு மிருந்தால் இவனுக்குப் பின் ஸஹோதரமில்லாமையுடன் இவனுக்கு முன் 3 ஸஹோதரமுண்டாகி யிருக்கும். (10) 3க் குடையவனே, காரகனே குருவுடன் கூடி உச்சவீட்டிலிருந்தால் மொத்தம் 12 ஸஹோதரமுண்டாகும். * இவன் 3-வது கர்ப்பமாவான். 1 லிருந்து 3-வது ஸஹோதரமும். 7-வதும், 9-வதும், 12-வதும் இறந்துவிடும். செவ்வாய் 12க் குடையவனுடன் கூடி குருவினல் பார்க்கப்பட்டால் மீதமுள்ள ஸஹோதரர் தீர்க்கமாக இருப்பர். 6-வது கர்ப்பம் இரட்டையாக இருக்கும். (11) 3 மிடத்தில் சந்திரனிருந்தால் 7 ஸஹோதரர்களுண்டு. இவர்களுள் இரண்டு குழந்தைகள் நாசமாகிவிடும். சுக்கிரனுடன் சேர்ந்தோ, பார்வைபெற்ருே இருந்தால் மேற்கூறியபலன் நடைபெருது. (எ-று)

பராசரஸம்ஹிதையில் சொல்லிய 3ம் பாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 3ம் பாவாதிபதி 12 ராசியிலு மிருப்பதாலுண்டாகும் பலன்கள்.

तृतीयेशो तृतीयस्थे विक्रमी सुतसंयुतः ।
धनयुक्तो महाहृष्टो भुनक्ति सुखमद्भुतम् ॥ १ ॥

तृतीयेशो सुखे कर्मे पंचमे वा सुखी सदा ।
अतिक्रूरा भवेद्भार्या धनाढ्यो मतिमान्भवेत् ॥ २ ॥

तृतीयेशो रिपौ यस्य भ्राता शत्रु र्महाधनी ।
मातुलेन सुखं न स्या न्मातुल्या भोगमिच्छति ॥ ३ ॥

---

* இது பலஜாதகங்களில் ஒத்துவருவதில்லை.

तृतीयेशे व्यये भाग्ये स्त्रीभिर्भाग्योदयो भवेत् ।
पिता तस्य महाचोरः सुखेऽपि दुःखदर्शकः ॥ ४ ॥

तृतीयेशेऽष्टमे द्यूने राजद्वारे मृतिर्भवेत् ।
चोरो वा परगामी वा बाल्ये कष्टं दिने दिने ॥ ५ ॥

तृतीयेशे तनौ लाभे स्वभुजार्जितवित्तवान् ।
मूर्खः कृशो महोत्साही साहसी परसेवकः ॥ ६ ॥

गुदाभंजनिकः स्थूलः परभार्याधनेरुचिः ।
स्वल्पारंभी सुखी नस्यात्तृतीयेशे धनं गते ॥ ७ ॥

(1) 3க் குடையவன் 3 லிருந்தால் பராக்கிரமமுள்ளவனாக வும், புத்திரனுடன் கூடினவனாகவும், தனத்துடன் கூடினவனாக வும், சந்தோஷமுள்ளவனாகவும் அத்புதமான சுகத்தை யனுப விப்பவனாகவும் ஆவான். (2) 3க் குடையவன் 4லோ, 10லோ, 5லோ இருந்தால் எப்பொழுதும் சுகியாகவும் குரூரையான மனை வியுடன் கூடியவனாகவும் (பெண்ஜாதகமானால் குரூரனான பர்த் தாவுடன் கூடியவளாகவும்) தனாட்யனாகவும், புத்திமானாகவும் ஆவான். (3) 3க் குடையவன் எவனுடைய ஜாதகத்தில் 6 லிருப்பானோ அவனது ப்ராதா சத்துருவாவான். அதிகம் தன வானாகவும், அம்மான் மூலம் சுகமில்லாதவனாகவும், அம்மான் பத்னியைப் புணருவதிலிச்சையுள்ளவனாகவும் ஆவான். (4) 3க் குடையவன் 12லோ 9லோ இருந்தால் ஸ்திரீகள் மூலம் பாக்கியோதயம் உண்டாவதுடன் அவனது பிதா அதிகம் சோர னாகவும் சுகத்திலும் துக்கபுத்தியுள்ளவனாகவும் ஆவான். (5) 3க் குடையவன் 8லோ, 7லோ இருந்தால் ராஜத்வாரத்தில் மரணமுண்டாகும். சோரனாகவோ பிறரிடத்தில் செல்லுபவனாக வோ இருப்பதுடன் பால்யத்தில் ஒவ்வொருநாளும் கஷ்டமே உண்டாகும். (6) 3க் குடையவன் லக்கினத்திலோ, 11லோ இருந்தால் தனது கைகொண்டு தேடின தனமுள்ளவனாவான். மூர்க்கனாகவும் இளைத்த சரீரமுள்ளவனாகவும், மஹாரோகமுள்ள வனாகவும், ஸாஹஸ (பிடிவாத) முள்ளவனாகவும், பிறரை ஸே விப்பவனாகவும் ஆவான். (7) 3க் குடையவன் 2 லிருந்தால் குதத்தில் கெடுதலுள்ளவனாகவும், ஸ்தூலனாகவும், பிறர் பெண்

டீர் தனம் இவற்றில் ருசியுள்ளவனாகவும் ஸ்வல்பமான கர்மமுள்ளவனாகவும், இருப்பதுடன் சுகியாகவும் ஆகமாட்டான். (எ-று)

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 3க் குடையவன்
12 பாவங்களிலுமிருப்பதாலுண்டாகும் பலன் முற்றிற்று.

## ஜாதகதத்துவத்திற் சொல்லிய 3வது பாவபலன்.

लग्नलग्नेशान्यतरतस्त्र्यायगैर्ज्ञेन्द्वारेज्यैर्बहुभ्रातरः केतौ तु बहुभगिन्यः ॥ १ ॥ सोत्थेशे स्वर्क्षे सौम्यदृष्टे भ्रातृमान् ॥ २ ॥ सोत्थपे सशुभे केन्द्रे भ्रातृसुखम् ॥ ३ ॥ सोत्थे शुभैर्युते वा दृष्टे सोत्थपे बलिनि भ्रातृलाभः ॥ ४ ॥ भ्रातृपे कारके वा बलिनि शुभसम्बन्धे भ्रातृलाभः ॥ ५ ॥ गोपुरे सोत्थेशे कारके सिंहासने शुभर्क्षे भ्रातृलाभः ॥ ६ ॥ पारावते भ्रातृपे केन्द्रे शुभयुतदृष्टे भ्रातृलाभः ॥ ७ ॥ सोत्थपे सौम्यभांशे भ्रातृलाभः ॥ ८ ॥ सोत्थे सोत्थपे बलाढ्ये भ्रातृलाभः ॥ ९ ॥ मृदंशादियुते सोत्थपे शुभयुतदृष्टे भ्रातृलाभः ॥ १० ॥ वैशेषिकांशे सोत्थपे शुभयुतदृष्टे भ்रातृलाभः ॥ ११ ॥

அதிகம் ஸஹோதரர், பிராதிருஸுகம், பிராதிருலாபம் இவையுண்டாகும் யோகம்—(1) லக்கினம், லக்கினேசன் இவ்விரண்டனுள் ஒன்றிற்கு 3, 11மிடங்களில் புதன் சந்திரன் செவ்வாய் குரு இவர்களிருந்தால் வெகுப்ராதாக்களுண்டாவர். கேதுவிருந்தால் வெகுஸஹோதரிகளுண்டாவர். (2) 3க் குடையவன் சொந்த வீட்டிலிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ப்ரதாக்களுள்ளவன். (3) 3க் குடையவன் சுபருடன் கூடி கேந்திரத்திலிருந்தால் ப்ராதிருசுக முண்டாகும். (4) 3 மிடம் சுபருடன் கூடியோ, அவரால் பார்க்கப்பட்டோ இருந்து 3க் குடையவன் பலம் பெற்றிருந்தால் ப்ராதிருலாப முண்டு. (5) 3க் குடையவனோ காரகனோ பலம்பெற்று சுபரின் ஸம்பந்தம் பெற்றால் ப்ராதிருலாப முண்டு. (6) 3க் குடையவன் (1) கோபுராம்சமேறி காரகன் (2) ஸிம்ஹாஸனம்சமேறி அது சுபர்வீடாகவு மிருந்தால் ப்ராதிருலாபமுண்டு. (7) 3க் குடையவன் (3) பாராவதம்சமேறி கேந்திரத்திலிருந்து சுபராலும் பார்க்கப்பட்டால் பிராதிருலாப முண்டு. (8) 3க் குடையவன் (4)ஸௌம்யாம்சமேறினல் பிரா

(1) (2) (3) இந்த புஸ்தகம் 75-வது பக்கம்பார்க்கவும் (4) 46-வது ஷஷ்டியம்சம்.

திருலாபமுண்டு. (9) 3க் குடையவன் 3ல் பலம் பெற்றிருந்தால் பிராதிருலாபமுண்டாகும். (10) 3க் குடையவன் ம்ருத்வம்சாதிகளிலிருந்து சுபரின்சேர்க்கை பார்வை இவற்றைப் பெற்றால் பிராதிருலாபமுண்டு. (11) 3க்குடையவன் (1) வைசேஷிகாம்சமேறி சுபர்சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப்பெற்றால் பிராதிருலாபமுண்டு.

**सोत्थाङ्गेशौ मित्रे भ्रातृस्नेहः शत्रू चेद्वैरम् ॥१२॥ पुम्भांशे सोत्थकारकेशौ पुंगृहदृष्टौ भ्रातृलाभो वैपरीत्ये भगिनीलाभो मिश्रे उभयलाभः॥१३॥**

பிராதாவின் ஸ்நேஹம், வைரம், ஆண்பெண் என்றபிரிவினை இவற்றை யறிவதின்யோகம்.—(12) 3க் குடையவனும் லக்கினாதிபதியும் மித்திரனானால் பிராதிருஸ்நேஹமும், அவர்கள் சத்துருவானால் பிராதிரு விரோதமுமுண்டாகும். (13) 3ம் பாவகாரகனும், 3க் குடையவனும் புருஷக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பிராதிருலாபமுண்டாகும். இதற்கு மாறியிருந்தால் ஸஹோதரியின் லாபமும், இரண்டும் கலந்திருந்தால் ஸஹோதரஸஹோதரீ லாபமும் உண்டாகும்.

**सोत्थराश्यंशवशाद्भ्रात्रादिसंख्या ॥ १४ ॥ सोत्थगग्रहस्यांशकाद्भ्रात्रादिसंख्या ॥ १५ ॥ सोत्थेशकारकयुतभांशवशाद्वा तत्संख्या ॥ १६ ॥ सोत्थेशयुतभांशवशात्तत्संख्या ॥ १७ ॥**

ஸஹோதரர்களின் எண்ணைக் காணும் யோகம்.—(14) 3 மிடத்திலுதயமான அம்சமூலம் ஸஹோதரரின் எண்ணைக் காணவேண்டும். (15) 3 மிடத்தை யடைந்த கிரஹத்தின் அம்சத்தினின்றும் பிராதாவின் எண்ணைக் காணவேண்டும். (16) 3க்குடையவன் 3ம் பாவகாரகன் இவர்களிருக்கும் ராசியினம்சமூலம் ஸஹோதரர் எண்ணைக் காண்க. (17) 3க் குடையவனிருக்கும் ராசியின் அம்சமூலம் பிராதாக்களின் எண்ணைக்காண்க.

**स्त्रीखेटैर्धर्मगैर्भगिन्यो नृखेटैर्भ्रातरः ॥ १८ ॥ ज्ञेज्यौ घने कन्यायां राहौ भ्रातृत्रयम् ॥ १९ ॥**

ஸஹோதரவிஷயத்தில் ஆண் பெண் இவற்றைக் காண்பதற்கு உபாயம்.—(18) ஸ்திரீக்கிரஹங்கள் 9மிடத்திலிருந்தால் ஸஹோ

(1) 75-வது பக்கம் பார்க்கவும்.

தரிகளும், புருஷகிரஹங்கள் அங்கிருந்தால் ஸஹோதரர்களும் உண்டாவர். (19) புதன், குரு இவர்கள் 2லிருந்து கன்னியில் ராஹுவுமிருந்தால் 3 பிராதாக்களுண்டு.

विक्रमेशारौ त्रिकस्थौ भ्रातृहीनः ॥ २० ॥ षष्ठे सोत्थपारौ पापभगौ पापयुतौ वा भ्रातर उत्पद्य नश्यन्ति ॥ २१ ॥ भ्रातृकारके नीचर्क्षांशे पापदृष्टे दुष्षष्ठ्यंशे भ्रातृहानिः ॥ २२ ॥ सोत्थे पापयुतदृष्टे भ्रातृहानिः॥ २३ ॥ भ्रात्रीशे पापान्तरे भ्रातृहानिः ॥ २४ ॥ पापान्तरे सोत्थे नीचखेटान्विते वा शुभादृष्टे भ्रातृहानिः ॥ २५ ॥ सोत्थपांशेशे षष्ठे नीचास्तारिगे भ्रातृहानिः ॥ २६ ॥ भ्रातृकारके पापान्तरे भ्रातृहानिः ॥ २७ ॥ भ्रातृपे सोत्थे क्रूरषष्ठ्यंशे पापदृष्टे भ्रातृहानिः॥ २८ ॥ सहजेशांशेश्वरांशेशे षष्ठे भ्रातृहानिः ॥ २९ ॥ सोत्थेशांशेश्वरांशेशे नीचास्तारिभे भ्रातृहानिः ॥ ३० ॥ सोत्थपे वा कारके त्रिके पापेक्षितयुते स्वोच्चे वा भ्रातृहानिः॥ ३१ ॥ सोत्थगैः पापैर्बाल्ये भ्रातृहानिः ॥ ३२ ॥ सोत्थपे तत्कारके वा पापैर्युते वा भ्रातृहानिः ॥ ३३ ॥

பிராதாவற்றிருத்தல், பிராதிருநாசம் இவற்றின் யோகம்.—(20) 3க்குடையவனும் செவ்வாயும் 6, 8, 12லிருந்தால் பிராதாகிடையாது. (21) 6ல் 3க் குடையவனும் செவ்வாயுமிருந்து அதுபாபர் வீடாகவும் இருந்து பாபருடனும் சேர்ந்திருந்தால் பிராதாக்கள் பிறந்து நாசமடைவர். (22) 3ம் பாவகாரகன் நீசராசியிலோ, நீசநவாம்சத்திலோ இருந்து பாபரால் பார்க்கப்பட்டு கெட்ட ஷஷ்டியம்சத்திலு மிருந்தால் ப்ராதிருஹானியுண்டாகும். (23) 3 மிடம் பாபரின் சேர்க்கை பார்வை இவற்றைப் பெற்றால் பிராதிருஹானி யுண்டாகும். (24) 3க் குடையவன் பாபரின் நடுவிலிருந்தால் பிராதிருநாச முண்டாகும். (25) 3 மிடம் பாபர்மத்தியிலிருந்து நீசனான கிரஹத்துடனும் கூடி சுபர்பார்வையையும் பெறுவிடில் பிராதிருஹானி யுண்டாகும். (26) 3க் குடையவனிருக்கும் அம்சாதிபதி 6ல் நீசனாகவோ அஸ்தங்கதனாகவோ, சத்துருவீட்டி லிருப்பவனாகவோ இருந்தால் பிராதிருஹானி யேற்படும். (27) ஸஹோதரகாரகன் பாபரின் நடுவிலிருந்தால் பிராதிருஹானி யுண்டாகும். (28) 3க் குடையவன் 3ல் குரூரஷஷ்டியம்சமேறி பாபரால் பார்க்கப்பட்

டால் பிராதிருஹானி யுண்டாகும். (29) 3க் குடையவனிருக்கும் அம்சாதிபதி எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அந்த அம்சாதிபதி ஆறில் இருந்தால் பிராதிருநாச முண்டாகும். (30) 3க் குடையவனிருக்கும் அம்சாதிபதி எந்த நவாம்சத்தி லிருக்கின்றானோ அந்த நவாம்சபதி நீசனாகவோ, அஸ்தங்கதனாகவோ, சத்துருவீட்டிலோ இருந்தால் பிராதிரு ஹானியுண்டு. (31) 3க் குடையவனோ, ப்ராதிருகாரகனோ 6, 8, 12ல் இருந்தாலும் அல்லது பாபரின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றை யடைந்து தனது உச்சவீட்டிலிருந்தாலும் பிராதிருஹானி யுண்டாகும். (32) 3மிடத்தில் பாபர்களிருந்தால் பால்யத்தில் பிராதிரு ஹானி யுண்டாகும். (33) 3க் குடையவனோ, 3ம் பாவகாரகனோ பாபருடன் சேர்ந்தால் பிராதிரு ஹானியுண்டாகும்.

**सोत्थे मन्दे भौमदृष्टेऽनुजहीन:॥३४॥ सिंहेऽर्केऽङ्गे भ्रातृहीन:॥३५॥ धनगा: पापा: सहजे राहौ भ्रातृहीन: ॥ ३६ ॥**

ஸஹோதரஹீன யோகம்.—(34)3ல் சனியிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால் பிராதிருஹீனனாவான். (35) ஸிம்ஹம் லக்கினமாகி அதில் சூரியனிருந்தால் பிராதா இல்லை. (36) 2ல் பாபக்கிரஹங்களும் 3ல் ராகுவுமிருந்தால் பிராதா இல்லை.

**सहजेऽञ्जवर्गे भौमदृष्टे भ्राता रोगी ॥ ३७ ॥ भौमात्सोत्थे पापे भ्रातृसुखं न ॥ ३८ ॥ लग्नान्त्यगौ पापौ अनुजोत्पत्ति: ॥ ३९ ॥**

பிராதிருரோகம், பிராதிரு ஸுகமற்றிருத்தல் இவற்றின் யோகம்.—(37) மூன்றாமிடம் சந்திரவர்க்கமாக இருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால் பிராதாரோகியாவான். (38) செவ்வாய்க்கு 3ல் பாபரிருந்தால் பிராதிரு சுகம் கிடையாது. (39) லக்கினத்திற்கு 12 மிடத்தில் பாபர் இருந்தால் தம்பியுண்டாவான்.

**अंशे रविशुक्रदृष्टे राजप्रेष्य: ॥ ४० ॥ अंशात्खे ज्ञदृष्टे युते राजप्रेष्य:॥ ४१ ॥ सूर्यारमन्दै: शुभदृष्टिहीनै: कर्मगैर्भृतक: ॥ ४२ ॥ मन्दांशे नीचभे शुक्रे व्यये चन्द्रार्कौ भृतक: ॥ ४३ ॥ दशमगै: सौम्यदृष्टैर्भृतक: ॥ ४४ ॥**

ராஜ ஸேவகனாகவும், கூலிவேலைக்காரனாகவுமாகும் யோகம்.—(40) லக்கினாம்சமானது ரவிசுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ராஜசேவைக் காரனாவான். (41) லக்கினாம்சத்திற்கு

10 மிடம் புதனின் சேர்க்கை பார்வை இவற்றை யடைந்தால் ராஜவேலைக்காரனுவான். (42) சூரியன், செவ்வாய், சனி இவர்கள் சுபர்பார்வை யற்றவர்களாய் 10 மிடத்திலிருந்தால் கூலி வேலைபார்க்கிறவன். (43) சனிலக்கினும்சத்திலிருந்து சுக்கிரன் நீசவீட்டிலிருந்து 12ல் சந்திர சூரியர்கள் இருந்தால் கூலிவேலை பார்ப்பான். (44) 10 மிடத்திலிருக்கும் கிரஹங்கள் புதனுல் பார்க்கப்பட்டால் கூலிவேலை பார்க்கின்றவன்.

**षष्ठेशे माने खेशे मन्दयुते केन्द्रे दासान्वितः ॥ ४५ ॥ कर्मेशांशेशे मन्दे षष्ठपसम्बद्धे बहुदासान्वितः॥ ४६ ॥ नृभेऽर्के शुभकर्मपदृष्टे बहुदासान्वितः ॥ ४७ ॥ राज्ये शुभदृष्ट्याधिक्ये दासान्वितः ॥ ४८ ॥**

தாஸர்களுடன் கூடியிருக்கும் யோகம்.—(45) 6க் குடையவன் 10லும் 10க் குடையவன் சனியுடன் கூடி கேந்திரத்திலு மிருந்தால் அடிமைகளுடன் கூடினவனுவான். (46) கர்மேசனிருக்கும் அம்சாதிபதி சனியாகி 6க் குடையவனுடைய ஸம்பந்தத்தையும் அடைவானுனல் வெகு அடிமைகளுள்ளவனுவான். (47) சூரியன் 9, 10க் குடையவனுல் பார்க்கப்பட்டு புருஷராசியிலிருந்தால் வெகு அடிமைகளுள்ளவனுவான். (48) 10 மிடத்தில் அதிகம் சுபர்திருஷ்டி யிருந்தால் அடிமைகளுண்டு.

**सहजे शुभदृष्ट्याधिक्ये वा पापयुते वा सहजपे बलाढ्ये विक्रमी ॥ ४९ ॥ सहजपे केन्द्रे कोणे विक्रमी ॥ ५० ॥ सोऽथाङ्गेशयोगे विक्रमी ॥ ५१ ॥**

பராக்ரம யோகம்.—(49) 3ல் அதிகம் சுபர்பார்வையிருந்தாலும், பாபருடன் கூடினுலும், 3க் குடையவன் பலமுள்ளவனுனுல் பராக்கிரமியாவான். (50) 3க் குடையவன் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்தால் பராக்கிரமி யாவான். (51) லக்கினுதிபதியும் 3க்குடையவனும் சேர்ந்தால் பராக்கிரமமுள்ளவனுவன்.

**अंशे मन्दे प्रसिद्धकर्माजीवी ॥ ५२ ॥ षष्ठेशे सोऽथे काष्ठपाषाणादिविक्रेता ॥ ५३ ॥**

பிரஸித்தகர்மத்தால் ஜீவித்தல், விரகு,கல் இவற்றை வியாபாரம் செய்தல் இவற்றின் யோகம்.—(52) லக்கினும்சத்தில் சனி.

யிருந்தால் பிரசித்தகர்மத்தால் ஜீவிப்பான். (53) 6க் குடைய வன் 3ல் இருந்தால் விரகு, கல் இவற்றை விற்பான்.

**मेषे चन्द्रे भौमदृष्टे भिक्षुकः ॥ ५४ ॥ चन्द्रे शुभदृग्घीने दासोऽथवा भिक्षुकः ॥ ५५ ॥ सर्वग्रहैर्नीचमूढांशगैः कर्मायगैर्भिक्षुकः॥ ५६ ॥ अन्त्ये गुरौ केन्द्रे शनौ लग्नेऽब्जे भिक्षुकः ॥ ५७ ॥**

பிக்ஷுகயோகம்.—(54) *மேஷத்தில் சந்திரனிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டால் பிக்ஷுகன். (55) சந்திரன் சுபதிருஷ்டி பெறாவிடினும், தாஸனாகவோ, பிக்ஷுகனாகவோ இருப்பான். (56) எல்லாக்கிரஹங்களும் நீசாம்சத்தையோ, சூரியனில் அஸ்தங்கதத்தையோ அடைந்து 10, 11மிடங்களிலிருந்தால் பிக்ஷுகனாவான். (57) 12ல் குருவும், கேந்திரத்தில் சனியும், லக்கினத்தில் சந்திரனு மிருந்தால் பிக்ஷுகனாவான்.

**चन्द्राद्धने पुत्रे जीवेऽष्टमे शुभे वा पापे निन्द्यकर्माजीवी ॥ ५८ ॥ एकस्मिन् ग्रहे मित्रभगे पराजीवी॥ ५९ ॥ राज्येऽङ्गेशे त्रिकोणार्थे मन्दे पापैर्मृत्युगैर्नीचवृत्त्या जीवी ॥ ६० ॥**

நீசவிருத்தியால் ஜீவிக்கும் யோகம். — (58) சந்திரனுக்கு 2லோ, 5லோ குருவிருந்து 8ல் சுபரோ பாபரோ இருந்தால் இருதொழில் செய்து ஜீவிப்பான். (59) ஒரு கிரஹம் மித்திரன் வீட்டிலிருந்தால் பிறரைக் கொண்டு ஜீவிப்பான். (60) 10ல் லக்கினாதிபதியும் திரிகோணத்திலோ 2லோ சனியும், பாபர் 8லு மிருந்தால் நீசவிருத்தியால் (அடிமைத் தொழிலால் அதாவது: கவர்ண்மெண்டு உத்யோகம் என்றும் சொல்லலாம்) ஜீவிப்பான். (தத்காலம் மேற்கூறிய தொழில் உயர்ந்ததாக எண்ணப்படினும் சாஸ்திர முறைப்படியும். அவரவருடைய மனச்சாக்ஷிபடியும் நிச்சயமாய் அது நாய்த்தொழிலே யாகும்.)

**लग्नाद्वा चन्द्राद्दर्क्याद्यैर्दशमगैः पितृजननी शत्रुमित्रभ्रातृस्त्रीभृत्येभ्योऽर्थाप्तिः ॥ ६१ ॥**

---

* இந்த யோகத்தில் பிறந்தவர் சிலர் தனிகராயிருந்த போதிலும் எப்பொழுதும் பிறரிடத்தில் யாசிக்கும் ஸ்வபாவமுள்ளவராகவே இருக்கிறார். இந்த அனுபவம் போலவே இங்கு சொல்லிய மீதமுள்ளபலனையும் ஊஹித்துக் கண்டுகொள்ளவும்.

இன்னின்னயோகத்தில் இன்னின்னோர்மூலம் தனலாபமுண்டாகும் என்பது.—(61) * லக்கினத்திற்கோ சந்திரனுக்கோ 10ல் முறையே சூரியன் முதலிய கிரஹங்களிருந்தால் முறையே, பிதா, தாயார், சத்துரு, மித்திரன், ப்ராதா, ஸ்திரீ, வேலைக்காரன். இவர்களிடமிருந்து பொருளுண்டாகும்.

**लग्नेन्द्वर्केभ्यः खेशस्यांशेशवशाद्वृत्तिं वदेत् ॥ ६२ ॥ सूर्यांशे भैषज्यसुगन्धिसुवर्णोर्णामुक्तामणिपण्येन दौत्येन मन्त्रौषधरसवादविनोदमार्गैर्वा वृत्तिः ॥ ६३ ॥ चन्द्रांशे शङ्खमुक्ताप्रवालादिवाणिज्येन कृषिमृद्वाग्विनोदमार्गैः राजयाङ्गनाश्रयेण वृत्तिः ॥ ६४ ॥ भौमांशे मनःशिलाहरितालहिङ्गुलकाञ्जनादिभिः खड्गचक्रकुन्दचापतोमराद्यैः साहसैरग्निक्रियया स्वबलक्रियारम्भैर्धनाप्तिः ॥ ६५ ॥ ज्ञांशेऽक्षरविन्यासेन गणितेन यन्त्रयोगेन काव्येन चित्रपुस्तकपत्रच्छेदबाणमाल्यरचनागन्धयुक्तिप्रभृतिभिर्वृत्तिः॥६६॥ जीवांशे देवब्राह्मणपण्डितेभ्यः सुवर्णलवणाञ्जनगजाद्याकरेभ्यः क्रियावादेन यज्ञदानतीर्थोपवासगुरुसेवनादिभ्यो वृत्तिः ॥ ६७ ॥ शुक्रांशे वज्रमरकतपद्मरागेन्द्रनीलप्रभृतिभिः रौप्येण लोहैर्गोभिः श्रेष्ठमहिषीभिः सुवर्णगजाश्वव्यापारेण वृत्तिः ॥ ६८ ॥ शन्यंशे अध्वगमनादिकेन वध्यघातिकया स्वशरीरताडनाद्येन भारवाहेण स्वकुलानुचितकर्मभिः वृत्तिः ॥ ६९ ॥**

தொழிலை நிர்ணயிக்கவேண்டிய முறை.—(62) லக்கினம், சந்திரன், சூரியன் இவர்களிருக்குமிடத்திற்கு 10க் குடையவனிருக்கும் அம்சம் எதுவோ அதற்குப் பதியின் மூலம் தொழிலைச் சொல்லுக. (63) முன்சொன்ன முறைப்படி சூரியனுல் மருந்து, நறுமணவஸ்து, பொன், கம்பளம், முத்து, மணி, இவற்றின் வியாபாரத்தாலும், தூது செல்லுதலாலும், மந்திரம், ஔஷதம், ரஸவாதம், கேளிவழி (நாடகமாடுதல்) முதலியவற்றுலும் தொழிலுண்டாகும். (64) சந்திராம்சமானுல் சங்கு, முத்து, பவளம், இவற்றின் வியாபாரத்தாலும், பயிற்றொழில், மண், வேடிக்கையாகப் பேசுதல் (விகடம் பேசுதல்) ராஜ்யாதிகாரம் ஸ்திரீயை யாசிரயித்தல் இவற்றுல் தொழிலைச் சொல்லுக. (65) செவ்வாயினம்சமானுல் மனேசிலை, ஹரிதாலம், குங்கிலியம்,

---

* இது விஷயமாய் நமது பிருஹத்ஜாதகம் 10-வது அத்தியாயம் 1-வது சுலோகத்திற் பரக்கக் காண்க.

பொன் முதலியவற்றினாலும், கத்தி, சக்கிரம், வில், கோடாறி, இருப்புலக்கை இவற்றாலும், ஸாஹஸகாரியத்தினாலும் (போலீஷ், டாக்டர்,) அக்னி காரியத்தாலும் (ரயிலில் வேலை செய்வதாலும், அரிசிமில் வைத்தலாலும், சமையல் வேலையாலும், என்றும் ஊஹித்துச் சொல்லவும்) தனது பலத்தைக் கொண்டு செய்யப்படும் கர்மாரம்பத்தினாலும் பணம்கிடைக்கும். (66) புதனின் அம்சமானால் எழுத்து எழுதுதலாலும் (அச்சுகோர்த்தல், டைப் அடித்தல், சுருக்கெழுத்து வேலை முதலியன) கணக்கினாலும் யந்திர சேர்க்கையாலும், காவ்வியமெழுதுதலாலும், சித்திரம், புஸ்தகம் படம் இவற்றை எழுதுதல், பாணம் தயாரித்தல், மாலை, கட்டல், வாஸனை சேர்த்தல், யுக்தி இவை முதலியவற்றாலும் தொழிலுண்டாகும். (67) குருவின் அம்சத்திலிருந்தால் தேவர், ப்ராம்மணன், பண்டிதர் இவர்கள்மூலமும், பொன், உப்பு, மை, யானை இவையுண்டாகு மிடத்திலிருந்தும், கிரியாவாதம் புரிதலாலும் (இதை வக்கில் தொழில் என்றும் சொல்லலாம்) யாகம், தானம், தீர்த்தம், உபவாஸமிருத்தல், குருசேவை (மடங்களில் வேலைபார்த்தல் என்றும் சொல்லலாம்) முதலியவற்றாலும் தொழிலைச் சொல்லுக. (68) சுக்கிரனின் அம்சமானால் வஜ்ரம், மரகதம், பத்மராகம், இந்திரநீலப்பச்சை முதலியவற்றாலும், வெள்ளியினாலும், இரும்புகளாலும், பசுக்களாலும், சிறந்த எருமைகளாலும் பொன், யானை, குதிரை இவற்றின் வியாபாரத்தாலும் தொழிலைச் சொல்லுக. (69) சனியினம்சமானால் வழிநடத்தலாலும் (தபால் மூட்டை சுமத்தல், அல்லது டிராவலிங் எஜெண்டு வேலை என்றும் சொல்லலாம்) கொலைஸ்தலத்தில் வேலைபார்த்தல் (கசாப்புக்கடை வைத்தல் என்றும் சொல்லலாம்) தனது சரீரத்தைத் தட்டிக்கொள்ளல் முதலியவற்றாலும் (இதைஸர்க்கஸ் என்றும் சொல்லலாம்) சுமைசுமப்பதாலும், தனது குலத்திற்கு ஒவ்வாததொழிலாலும் விருத்தியைச் சொல்லுக.

लग्नाद्दशमेशश्चारवशाद्यस्मिन्नवांशे वर्तते तदीशोक्ता वृत्तिः प्रत्यहम् ॥ ७० ॥ द्रव्यदा मित्रारिस्वभावान्यतरत्र यत्र गतास्ताद्दशमित्रारिस्वोद्योगद्वारा धनाप्तिः ॥ ७१ ॥ धनदोऽर्कस्तुङ्गे बलिनि स्वविक्रमाद्धनम् ॥ ७२ ॥ लग्नार्थायगैः सौम्यैर्बलिभिर्बहुप्रकारैर्धनाप्तिः ॥ ७३ ॥

ஒவ்வொரு நாளும் செய்தொழில் காணும் யோகம்.—(70) லக்கினத்திற்கு 10க் குடையவன் கோசரத்தில் எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அந்த நவாம்சபதிக்குச் சொல்லிய விருத்தியானது ஒவ்வொரு நாளுமுண்டாகும். (71) திரவ்யம் தரும் கிரஹங்கள் மித்திரன், சத்துரு ஸ்வபாவமற்ற எந்தவிடத்திலிருக்கின்றனரோ அந்த மித்திரன் சத்துரு ஸ்வபாவமுள்ளவரைவிட வேறிடத்திலிருந்து தனது முயர்ச்சியால் தனப்பிராப்தியுண்டாகும். (72) தனத்தைத் தருபவன் சூரியனாகி உச்சவீட்டிலிருந்து பலம் பெற்றால் தனது பராக்கிரமத்தால் தனமுண்டாகும். (73) 1, 2, 11 இவ்விடங்களில் சுபக்கிரஹங்களிருந்து பலம் பெற்றார்களானால் வெகுப்பிரகாரமாக தனப்பிராப்தியுண்டாகும். (எ—று)

ஜாதகதத்துவத்திற் சொல்லிய 3-வது பாவபலன் முற்றிற்று.

## ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய ஸஹோதர(3வது) பாவபலன்.

सहजेन सहजविक्रमौषधसहायान् गळौरसंस्थानम्।
विंद्याद्दक्षिण कर्ण भक्ष्यविशेषांश्च मूलादीन् ॥ १ ॥

மூன்றாமிடத்தைக்கொண்டு காணவேண்டியவைகள்.—(1) 3மிடத்தைக்கொண்டு ஸஹஜன், பராக்கிரமம், ஔஷதம் ஸஹாயம், கழுத்து, மார்புப்பிரதேசம், வலதுகாது, பக்ஷ்யவிசேஷம், மூலம் (மருந்திடுதல்) முதலியன இவற்றை யறியவேண்டும்.

नाशस्थितौ सोदरनाथभौमौ पापेक्षितौ सोदरनाशमाहुः ।
पापर्क्षगौ पापसमागमौ वा भ्रातृन्समुत्पाद्य विनाशहेतुः ॥ २ ॥

नीचर्क्षगौ सोदरकारकाख्यौ नीचांशगौ पापसमागमौ वा ।
क्रूरादिषष्ट्यंशयुतौ तदानीं भ्रातृन्समुत्पाद्य विनाशमाहुः ॥ ३ ॥

पापग्रहे सोदरभावयुक्ते सोत्थेऽथवा पापनिरीक्षिते स्यात् ।
तदीश्वरे पापखगान्तरस्थे सहोदराणां कथयन्ति नाशम् ॥ ४ ॥

पापान्तरे पापनिरीक्षिते वा पापान्विते नीचगृहान्विते वा ।
तृतीयभावे शुभखेचरेन्द्रैर्न वीक्षिते सोदरनाशमाहुः ॥ ५ ॥

भ्रातृस्थानाधिपस्यांशराशीशे नाशराशिगे ।
नीचारातिगते मूढे त्वाहुः सोदरनाशनम् ॥ ६ ॥

शनिमान्दिसमायुक्ते पापखेचरवीक्षिते ।
तदीशे नीचराशिस्थे सोदराणां विनाशनम् ॥ ७ ॥
पापान्तरे तदीशे तु कारके वा तथाविधे ।
तथैव तद्भावनाथे सोदराणां विनाशनम् ॥ ८ ॥
पापाहिवीक्षिते भावे भावेशे भावसंस्थिते ।
क्रूरषष्ठ्यंशके वापि सोदराणां विनाशनम् ॥ ९ ॥
भ्रातृस्थानाधिपस्यांशरारीशो यन्नवांशके ।
तदीशे नाशराशौ चेत्सोदराणां विनाशनम् ॥ १० ॥
सोत्थेशयुक्तराश्यंशनाथो यत्र नवांशके ।
तन्नाथे नीचमूढारिभावे सोदरनाशनम् ॥ ११ ॥
भ्रातृस्थानाधिपे दुःस्थे कारके वा तथाविधे ।
पापेक्षिते पापयुक्ते स्वोच्चे वा सोदरक्षयः ॥ १२ ॥
अतिक्रूरसमायुक्ते भावे वा कारकेऽपिवा ।
तद्भावनायके वापि बाल्ये सोदरनाशनम् ॥ १३ ॥
यत्किंचित्क्रूरसंयोगे तन्नाशश्चिरकालतः ।
बलहीनवशादेवं सोदरक्षयचिन्तनम् ॥ १४ ॥

ஸஹோதராரிஷ்ட யோகங்கள். — (2) 3க் குடையவனும் செவ்வாயும் 8 லிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் ஸஹோதர நாசத்தைச் செய்வர். பாபர்வீட்டிலிருந்தாலும் பாபருடன் சேர்க்கையை யடைந்தாலும் பிராதாக்களையுண்டாக்கி விநாச மாக்குவர். (3) 3க் குடையவனும், காரகக்கிரஹமும் நீசவீட்டி லிருந்தாலும், நீசாம்சத்திலிருந்தாலும், நீசத்திலிருக்கும் கிரஹ த்துடன் கூடினும், குரூராதி ஷஷ்டியம்சத்திலிருந்தாலும் அதுபொழுது பிராதாக்களை யுண்டாக்கி விநாசமாக்குவர். (4) பாபக்கிரஹம் 3 லிருந்தாலும், 3 மிடம் பாபரால் பார்க்கப்பட் டாலும், 3க் குடையவன் பாபக்கிரஹங்களின் நடுவிலிருந்தா லும், அப்பொழுது ஸஹோதரர்க்கு நாசத்தைச் சொல்லுகின்ற னர். (5) 3ம் பாவத்தில் இருபுறத்திலும் பாபக்கிரஹ மிருந்தா லும், பாபரால் பார்க்கப்பட்டாலும், பாபருடன் கூடினும், நீசத்திலுள்ள கிரஹத்துடன் கூடினும், 3ம் பாவம் சுபக்கிர

ஹத்தால் பார்க்கப்படாவிடினும் ஸஹோதரநாசத்தைச் சொல்லுகின்றனர். (6) 3க் குடையவனிருக்கும், அம்சம், ராசி இவற்றிற்க்குடையகிரஹம் 8 லிருந்தாலும் நீசத்திலோ, சத்துருவீட்டிலோ, அஸ்தங்கதனுகவோ இருந்தாலும் ஸஹோதரநாசத்தைச் சொல்லுகின்றனர். (7) 3க் குடையவன் சனி, குளிகன் இவர்களுடன் கூடினும், பாபக்கிரஹத்தால் பார்க்கப்படினும், நீசராசியிலிருப்பினும் ஸஹோதர நாசமுண்டாகும். (8) 3க் குடையவன், 3ம் பாவகாரகன் இவர்களுக்கு இருபுறத்திலும் பாபர் இருந்தாலும், ஸஹோதரகாரகன் அவ்விதமிருந்தாலும் ஸஹோதரர்களின் நாசமுண்டாகும். (9) 3ம் பாவம் பாபராலும், ராகுவாலும் பார்க்கப்பட்டாலும் 3ம் பாவாதிபதி 3-வது பாவத்திலிருந்தாலும், குரூரஷஷ்டி யம்சத்திலிருந்தாலும் ஸஹோதர விநாச முண்டாகும். (10) 3மிடத்திற்குடையவனிருக்கும் அம்சாதிபதியும் ராச்யதிபதியும் எந்த நவாம்சத்தி லிருக்கின்றனரோ அந்தநவாம்சபதி 8மிடத்திலிருந்தால் ஸஹோதரர்களின் விநாச முண்டாகின்றது. (11) 3க் குடையவனுடன் கூடின ராசியம்ச நாதன் எந்த நவாம்சத்தி லிருக்கின்றானே அதன்பதி நீசனுகவோ, சூரியனில் அஸ்தங்கதனுகவோ, சத்துருபாவத்திலோ இருந்தால் ஸஹோதரநாச முண்டாகும். (12) 3க் குடையவனே, காரகனே 6, 8, 12 லிருந்து பாபரின் சேர்க்கை பார்வை இவற்றையடைந்து தனது உச்சத்திலிருந்தால் ஸஹோதர நாச முண்டாகும். (13) 3ம் பாவாதிபதியோ, 3ம் பாவமோ, காரகனே அதிகம் குரூரனுடன் சேர்ந்தால் பால்யத்தில் ஸஹோதர நாச முண்டாகிறது. (14) ஸ்வல்ப குரூரக்கிரஹத்துடன் சேர்ந்தால் ஸஹோதரநாசம் வெகுகாலம் சென்று உண்டாகும். பலத்தின் குறைவைக் கொண்டு இவ்விதம் ஸஹோதரநாசத்தை ஆலோசனம் செய்யவேண்டும்.

भ्रातृस्थाने शुभैर्युक्ते शोभनग्रहवीक्षिते ।
भावनाथे बलाढ्ये तु भ्रातृलाभमुदीरयेत् ॥ १५ ॥

भ्रातृपे कारके वा पि शुभयोगनिरीक्षिते ।
भावेवा बलसंपूर्णे भ्रातृणां वर्द्धनं भवेत् ॥ १६ ॥

केन्द्रत्रिकोणगे वापि स्वोच्चमित्रस्ववर्गगे ।
नाथे वा कारके वापि भ्रातृलाभमुदीरयेत् ॥ १७ ॥

सौम्यग्रहान्विते वापि सौम्यानामंशके यदि ।
नाथे वा कारके वापि भावे सोदरवर्धनम् ॥ १८ ॥

सोत्थेश्वरे गोपुरभागयुक्ते सिंहासने कारकखेचरेन्द्रे ।
सौम्यग्रहे तद्भवनाधिपे स्याद्भ्रात्रादिलाभं कथयन्ति तज्ज्ञाः ॥ १९ ॥

पारावतांशे यदि केन्द्रराशौ भावेश्वरे शोभनखेटयुक्ते ।
सौम्यांशके सौम्यगृहे तदीशे सोत्थादिबाहुल्यमुदीरयन्ति ॥ २० ॥

भ्रातृभावे स्वतुङ्गेवा स्वर्क्षे मूलत्रिकोणगे ।
बलाढ्ये भावनाथे वा सोदरोत्पत्तिमादिशेत् ॥ २१ ॥

मृद्वंशादिसमायुक्ते भावनाथे शुभैर्युते ।
शुभेक्षिते वा भावेशे सोदरोत्पत्तिमादिशेत् ॥ २२ ॥

वैशेषिकांशे भावेशे ह्यथवा शुभवीक्षिते ।
मृद्वंशादियुते वापि भ्रातृवर्द्धनमेवतु ॥ २३ ॥

लग्ननाथस्तु सोत्थेशमित्रश्चेन्मित्रता भवेत् ।
भ्राता शत्रुर्भवेच्छत्रा वेत्थं सर्वत्र युज्यते ॥ २४ ॥

இனி ஸஹோதரலாப யோகம்.—(15) 3 மிடத்தில் சுபரிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கவும் பட்டு 3ம் பாவநாதன் பலம் பெற்று மிருந்தால் பிராதிருலாபத்தைச் சொல்லுக. (16) 3ம் பாவமோ, காரகனோ சுபர்சேர்க்கை வீக்ஷணம் இவற்றைப் பெற்று 3ம்பாவமும் பூர்ணபலம் பெற்றால் பிராதாக்களின் விருத்தியைச் சொல்லவேண்டும். (17) 3ம் பாவநாதனோ, காரகனோ கேந்திரத் திரிகோணத்திலோ தனது உச்சமித்திர ஸ்வவர்க்கத்திலோ இருந்தால் பிராதிருலாபத்தைச் சொல்லவேண்டும். (18) 3ம் பாவநாதனோ காரகனோ சுபக்கிரஹத்துடன் கூடியோ சுபர்களின் அம்சமேறியோ இருந்தால் பிராதிரு விருத்தியைச் சொல்லவேண்டும். (19) 3க் குடையவன் கோபுராம்சமேறியும், காரகக்கிரஹம் ஸிம்ஹாஸனும்சமேறியும், 3ம் பாவாதிபதி சுபக்கிரஹமாகவு மிருந்தால் பிராதா முதலியோரின் லாபத்தை அறிந்தவர் சொல்லுகின்றனர். (20) 3ம் பாவாதிபதி பாரா

வதாம்சத்திலோ கேந்திரராசியிலோ சுபக்கிரஹங்களுடன் கூடியிருந்தாலும், 3க் குடையவன் சுபர்வீட்டிலோ சுபர் அம்சத்திலோ இருந்தாலும் அதிகம் ஸஹோதரர்களைச் சொல்லுகின்றனர். (21) 3ம் பாவாதிபதியானவன் 3ம் பாவத்திலோ, தனது உச்சவீட்டிலோ, ஸ்வக்ஷேத்திரத்திலோ, மூலத்ரிகோண வீட்டிலோ இருந்து பலம் பெற்றிருந்தால் ஸஹோதர உத்பத்தியைச் சொல்லவேண்டும். (22) 3ம் பாவநாதன் மிருத்வம் சாதிகளிலிருந்து சுபருடன் கூடினாலும் பாவேசன் சுபரால் பார்க்கப்பட்டாலும் ஸஹோதர உத்பத்தியைச் சொல்லவேண்டும். (23) பாவேசன் வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் அல்லது மிருத்வம் சாதிகளிலிருந்தாலும் பிராதிருவிருத்தியைச் சொல்லவேண்டும். (24) லக்கினாதிபதி 3க் குடையவனுக்கு மித்திரனானால் பிராதா மித்திரனாவான், சத்துருவானால் பிராதாவும் சத்துருவேயாவன். இவ்விதமே எல்லாபாவங்களிலும் காண்க.

अयुग्मभांशे यदि कारकेशौ गुर्वर्कभूसूनुनिरीक्षितौ चेत् ।
ओजोगृहे स्याद्यादि विक्रमाख्ये पुंभ्रातरस्तस्य वदन्ति तज्ज्ञाः॥२५॥
युग्मांशके युग्मगृहे तदीशे भावे तथा कारकखेचरेन्द्रे ।
सहोदरीलाभमिहाहुरार्या नपुंसकांशे किल तत्तथैव ॥ २६ ॥

ஆண்பெண் நபும்ஸக ஸஹோதர யோகம்.—(25) 3ம் பாவ காரகனோ, 3க் குடையவனோ ஒத்தைப்பட்டராசி அல்லது நவாம்சம் இவற்றிலிருந்து குரு, சூரியன், செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டவர்களாகி 3மிடமும் ஒத்தைப்பட்டராசியாக விருக்குமானால் ஜன்மலக்கினத்திலுதயமான நவாம்சத்திற்கொப்பான எண்ணுள்ள புருஷஸஹோதரர்களுண்டாவர். (26) 3க் குடையவனோ காரகனோ இரட்டைப்பட்டராசி அல்லது நவாம்சங்களிலிருந்து 3 மிடமும் இரட்டைப்பட்டராசியாக விருந்தால் பெண் ஸஹோதரலாபத்தைச் சொல்லுகின்றனர். முற்கூறியபடி நபும்ஸகராச்யம்சத்திலிருந்தாலும் இவ்விதமே நபும்ஸக ஸஹோதரமே யுண்டாகின்றது.

भ्रातृराश्यंशकवशाद्भ्रातृसंख्यां विनिर्दिशेत् ।
नाथकारकसंयुक्तराश्यंशाद्वा तथाभवेत् ॥ २७ ॥

भ्रातृराशिसमायुक्तखेचरस्यांशकाद्वदेत् ।
सोत्थेशयुक्तराश्यंशात्कारकान्वितभागतः ॥ २८ ॥

तयोस्संयुक्तखेटस्य राश्यंशाद्वा तथाभवेत् ।
एतयोरश्मिमानाद्वा पापयोगाद्विनाशनम् ॥ २९ ॥

संवादे विविधे प्राप्ते तत्कर्मबलतो भवेत् ।
कारकाद्विक्रमेशाद्वा विक्रान्तस्य विनिर्दिशेत् ॥ ३० ॥

ஸஹோதரஸங்கியையைக் காணும் முறை.—(27) ஸஹோதரராசியி லுதயமான அம்சத்திற் கொப்பான ஸஹோதரஸங்கியையைச் சொல்லவேண்டும். அல்லது 3க் குடையவன், காரகன் இவர்களிருக்கும் ராசியிலுதயமான அம்சத்திற் கொப்பான ஸங்கியையையாவது சொல்லவேண்டும். (28) பிராதிரு ராசியிலிருக்கும் கிரஹத்தினது அம்சத்தைக் கொண்டோ, 3க் குடையவனுடன் கூடின ராசியம்சத்தைக் கொண்டோ காரகனிருக்கும் அம்சத்தைக்கொண்டோ சொல்லுக. (29) 3க் குடையவன் காரகன் இவர்களுடன் கூடின கிரஹத்தினுடைய ராஸ்யம்சத்தைக் கொண்டாவது, இவ்விருவருடையவும் * கிரணங்களுக்குத் தக்கபடியாவது பிராதிருயோகத்தைச் சொல்லுக. முற்கூறியபடிக்குள்ள கிரஹம் பாபியானல் பிராதிருநாசமுண்டாகும். (30) அனேகம் ஒத்துவருமானல் காரகனைக் காட்டிலுமோ, 3க் குடையவனைக் காட்டிலுமோ பலமுள்ளவனைக் கொண்டு சொல்லுக.

शौर्याधिपे तुङ्गयुते बलाढ्ये केन्द्रत्रिकोणे यदि सौम्यदृष्टे ।
मूलत्रिकोणे स्वगृहेऽथगेहे वैशेषिकांशे पुरुषस्सधीरः ॥ ३१ ॥

---

* ஸாராவளி 36-வது அத்தியாயத்தில் உச்சத்திலிருக்கும் சூரியனுக்கு 10 கிரணம், சந்திரனுக்கு 9, செவ்வாய்க்கு 5, புதனுக்கு 5, குருவுக்கு 7, சுக்கிரனுக்கு 8, சனிக்கு 5, ரச்மி (கிரணங்) களும் நீசத்திலிருந்தால் கிரணம் கிடையாதென்றும், நீசத்திலிருந்து உச்சத்திற்கு போனல் அபிமுகரச்மி என்றும், உச்சத்திலிருந்து நீசத்திற்குவந்தால் பராங்முக ரச்மி என்றும் உச்சத்திற்கும் நீசத்திற்குமிடையில் த்ரைராசிகம் செய்து கொள்ளவேண்டுமென்றும், சொல்லி மற்றும் இதுவிஷயமாக அதிகமானதொரு முறை உபதேசிக்கப்பட்டிருப்பதை அங்கு காண்க.

धीरो भवेद्विक्रमराशिनाथे सौम्ये गृहांशे शुभखेटयुक्ते ।
तथैव तत्कारकखेचरेन्द्रे सौम्यग्रहाणां भवने तु शूरः ॥ ३२ ॥

धैर्यान्वितो विक्रमराशिनाथसंयुक्तराश्यंशपतिर्यदंशे ।
तदंशनाथे खगृहादिवर्गे युद्धे विदग्धः कलहप्रवीणः ॥ ३३ ॥

विक्रमाधिपतौ स्वोच्चे नाशस्थे पापसंयुते ।
चरभे चरराश्यंशे युद्धात्पूर्वं दृढो भवेत् ॥ ३४ ॥

पापग्रहाणां भवने विक्रमे पापसंयुते ।
तथाविधे तदीशेऽपि युद्धात्पूर्वं दृढो भवेत् ॥ ३५ ॥

क्रूरषष्ट्यंशगे वापि तदीशे नीचराशिगे ।
पापयुक्तेऽथवा दृष्टे युद्धजाड्यो भवेन्नरः ॥ ३६ ॥

युद्धे पराजितः स्वोच्चे विक्रमेशे विनाशभे ।
कारके बलहीने वा क्रूरषष्ट्यंशसंयुते ॥ ३७ ॥

सिंहासनांशे यदि विक्रमेशे पारावते गोपुरभागयुक्ते ।
मृद्वंशके वा शुभदृष्टियोगे महोत्सवो युद्धविशारदस्स्यात् ॥ ३८ ॥

युद्धाभिलाषी समरप्रवीणो वीर्येश्वरे सोमसुते स्वतुङ्गे ।
वैशेषिकांशे बलपूर्णयुक्ते मृद्वंशकेवा विपरीतमन्यत् ॥ ३९ ॥

தீரனகும் யோகம் —(31) 3க் குடையவன் உச்சனுகி பலம் பெற்று கேந்திரத்ரிகோணத்திலிருந்து சுபராலும் பார்க்கப்பட்டாலும் மூலத்திரிகோணத்திலோ, ஸ்வக்ஷேத்திரத்திலோ, மித்திரன் வீட்டிலோ, வைசேஷிகாம்சத்திலோ இருந்தாலும் அவன் தீரனகிறுன் (32) 3க் குடையவன் சுபக்கிரஹத்தின் அம்சத்தில் சுபக்கிரஹத்துடன் சேர்ந்திருந்தாலும், 3ம் பாவகாரகக்கிரஹம் சுபக்கிரஹங்களின் வீட்டிலிருந்தாலும் சூரனேயாகிறுன். (33) 3க் குடையவனிருக்கும் ராசியம்சபதிகள் எந்த அம்சத்திலிருக்கின்றனரோ அந்த அம்சநாதன் சொந்தவீடு முதலியவர்க்கத்திலிருந்தால் சண்டையிடுவதில் ஸமர்த்தனுகவும் கலஹத்தில் நிபுணனுகவும் இருப்பான். (34) 3க் குடையவன் உச்சனுகி 8 மிடத்தில் பாபருடன் கூடியிருந்து சராசியிலோ சரநவம்சத்திலோ இருந்தால் யுத்தத்திற்கு முன் அசையாதவனுவான். (35) பாபக்கிரஹங்களின் வீடு 3 மிடமாகி அதில்

பாபருமிருந்து அந்த 3 மிடத்ததிபனும் அவ்விதமே இருந்தால் யுத்தத்திற்கு முந்தி த்ருடனுகவாகிறுன். (36) 3க் குடையவன் குரூராஷஷ்ட்யம்சத்திலோ நீசவீட்டிலோ பாபரின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப் பெற்றுல் யுத்தஜாட்யமுள்ளவனுக மனிதனுகிறுன். (37) 3க் குடையவன் உச்சனுகி 8 மிடத்திலிருந்தாலும், காரகன் பலமற்றவனுய் குரூராஷஷ்ட்யப்சத்தி லிருந்தாலும் யுத்தத்தில் தோல்வியையடைவான். (38) 3க் குடையவன் ஸிம்ஹாஸனும்சத்திலோ, பாராவதாம்சத்திலோ, கோபுராம்சத்திலோ, மிருத்வம்சத்திலோ இருந்து சுபரின் பார்வை பெற்றுல் அதிகமான சந்தோஷமுள்ளவனுகவும் யுத்தஸமர்த்தனுகவுமாகிறுன். (39) 3க் குடையவன் புதனுகி தனது உச்ச வீட்டிலிருந்து வைசேஷிகாம்சமேறி பூர்ணபலம் பெற்றுமிருந்தாலும் மிருத்வப்சாதி யிலிருந்தாலும் யுத்தாபிலாஷியாகவும், யுத்தத்தில் ஸமர்த்தனுகவும் ஆகிறுன். மற்றவை இதற்குமாறி நடக்கும்.

शौर्याधिपे भानुयुतेऽत्र धीरश्चन्द्रान्विते मानसधैर्यजातः ।
कृष्णो जडो भौमयुते प्रकोपी सौम्यान्विते सात्विकबुद्धियुक्तः ॥ ४० ॥
जीवान्विते धीरतया समेतः सर्वार्थशास्त्रार्थविशारदस्स्यात् ।
कामातुरस्त्वास्फुजिदन्विते स्यात्तन्मूलकोपात्कलहप्रवीणः ॥ ४१ ॥
जडो भवेद्भास्करनाथपुत्रयुक्ते फणीनामधिपेन युक्ते ।
बहिर्दृढो हृद्गतजाड्ययुक्तः केत्वन्विते मान्दियुते तथैव ॥ ४२ ॥

3க் குடையவனுக்கு அந்தந்த கிரஹங்களின்சேர்க்கை மூலமுண்டாகும் பலன்கள்.—(40) 3க் குடையவன் சூரியனுடன் கூடினுல் தீரனுவான். சந்திரனுடன் கூடினுல் மானஸமான தைரியமுள்ளவனுவான். செவ்வாயுடன் கூடினுல் கருப்பாகவும் ஜடனுகவும் அதிகம் கோபமுள்ளவனுகவும், ஆவான். புதனுடன் கூடினுல் ஸாத்விகபுத்தியுள்ளவனு யிருப்பான். (41) குருவுடன் கூடினுல் தைரியமுள்ளவனுகவும், எல்லாப்பொருளுமுள்ள சாஸ்திரார்த்தத்தில் திறமையுள்ளவனுகவும் ஆவான். சுக்கிரனுடன் கூடினுல் காமாதுரனுகவும், அதன் மூலமுண்டான சண்டையில் நிபுணனுகவு மிருப்பான். (42) சனியுடன் கூடினுல் ஜட

னாகவாவான். ராகுவுடன் கூடினால் வெளியில் தைரியமுள்ள வனாயினும் மனதில் ஜாட்யமுள்ளவனாவான். கேதுவுடன் கூடினாலும், குளிகனுடன் கூடினாலும் அவ்விதமே தானாவான்.

लग्ने गुरौ विक्रमनाथयुक्ते चतुष्पदानां प्रवदन्ति भीतिम् ।
गवां भयं वा जलराशिलग्ने जलप्रमादो भवति ध्रुवं स्यात् ॥ ४३ ॥
वीर्याधिपे राहुसमेतराशिनाथान्विते राहुयुते विलग्ने ।
सर्पाद्भयं विक्रमराशिनाथे बुधेन युक्ते गळरोगमत्र ॥ ४४ ॥
नीचे तृतीयेऽरिगृहे विमूढे पापेक्षिते तद्गरळप्रमादः ।
विषप्रयोगाद्विषभक्षणाद्वा तेषामभावेऽत्र विनिश्चितार्थः ॥ ४५ ॥

நாற்கால்பிராணிகளிடமிருந்து பயம், விஷபாதை இவையுண்டாகும் யோகம்.—(43) லக்கினத்தில் குருவிருந்து 3க் குடையவனுடன் கூடினால் நாற்கால் ஜந்துக்களின் பயமும், பசுக்களின் பயமும் ஜலராசிலக்கினமானால் ஜலகண்டமும் உண்டாகிறது நிஶ்சயம். (44) 3க் குடையவன் ராகு இருக்கும் ராசிநாதனுடன் கூடியிருந்தாலும் லக்கினத்தில் ராகுவிருந்தாலும் ஸர்ப்பத்தினின்றும் பயத்தையும், 3க் குடையவன் புதனுடன் கூடினால் கள (கழுத்தில்) ரோகத்தையு மடைகிறான். (45) 3 மிடத்தில் நீசனான கிரஹமிருந்தாலும், அது லக்கினாதிபனுக்கு சத்துரு வீடானாலும், சூரியனில் (3க் குடையவன்) அஸ்தங்கதனானாலும், பாபரால் 3 மிடம் பார்க்கப்பட்டாலும் விஷபாதை யுண்டாகும். முற்கூறியபடிக்கான கிரஹங்களில்லாத பக்ஷத்தில் விஷப்பிரயோகத்தாலோ, விஷஸம்பந்தத்தாலோ பயமுண்டாகும் என்பது நிஶ்சயம்.

शुक्रे बलाढ्ये यदि वा शशाङ्के सौम्येक्षिते शोभनखेटयुक्ते ।
सोत्थस्थिते स्वोच्चसुमित्रवर्गे सुपात्रभोक्ता सुखभुक्तिभाक्स्यात् ॥
पापे तृतीये गळरोगमत्र वदन्ति मान्द्यादियुते विशेषात् ।
भौमान्विते प्रेतपुरीशभागे तृतीयराशौ यदि कर्णरोगम् ॥ ४७ ॥
सोत्थे शनौ मान्दियुते तथैव वाताद्भयं सौम्यदृशा विहीने ।
तृतीयराशिस्थितराशिनाथसंयुक्तराश्यंशपतौ च केन्द्रे ॥ ४८ ॥
पापान्विते पापनिरीक्षिते वा वदन्ति कर्णोद्भवरोगमत्र ।
क्रूरादिषष्ट्यंशयुते तदीशे कर्णस्य रोगं कथयन्ति तज्ज्ञाः ॥ ४९ ॥

போஜனபாத்திரம், கழுத்திலும் காதிலும் ரோகம்,வாயுவினுல் பீடை, இவை விஷயமான யோகம்.—(46) 3 மிடத்தில் பலம் பெற்ற சுக்கிரனோ சந்திரனோ புதனுல் பார்க்கப்பட்டு, சுபக்கிரஹங்களுடன் கூடியுமிருந்தாலும் தனது உச்சவீட்டிலோ, அதிமித்திர வர்க்கத்திலோ, இருந்தாலும் நல்ல பாத்திரத்தில் சாப்பிடுகிறவனுகவும், நல்ல போஜனத்தை யடைந்தவனுகவும் ஆவான். (47) 3ல் பாபரிருந்தால் கழுத்தில் ரோகத்தைச் சொல்லுகின்றனர். மாந்திமுதலியோர் அங்கிருந்தால் அந்த ரோகம் அதிகமாக உண்டாகும். 3 மிடத்தில் ப்ரேதபுரீசபாகத்தில் (இதுஷஷ்டியம்சத்திலொரு அம்சமாகும்) செவ்வாய் இருந்தால் காதில் ரோகமுண்டாகும். (48) 3ல் சனியிருந்து மாந்தியுடனும் கூடி சுபர்பார்வையும் பெருமல் 3மிடத்ததிபனிருக்கும் ராசிநாதனுடன் கூடின ராசி, நவாம்சம் இவற்றிற்குப் பதி கேந்திரத்திலுமிருந்தால் அவ்விதமே வாயுவினுல் பயமுண்டாகும். (49) 3க் குடையவன் பாபரின் சேர்க்கை, பார்வை இவற்றைப் பெற்ருல் காதில் ரோகத்தைச் சொல்லுகின்றனர். குரூராதிஷஷ்டியம்சத்திலிருந்தாலும் கர்ணத்திலுண்டாகும் ரோகத்தையே சொல்லுகின்றனர்.

सौम्ययुक्ते तृतीये वा सौम्यखेचरवीक्षिते ।
तदीशे शुभसंयुक्ते कर्णयोर्भूषणं वदेत् ॥ ५० ॥

शुक्रे तृतीये यदि मौक्तिकं तु जीवेऽतुलं त्वाभरणं वदन्ति ।
भानोस्तु संबंधयुते तृतीये सद्रत्नमानीलमयं हि मन्दे ॥ ५१ ॥

चन्द्रे बहुत्वाभरणं तु सौम्ये श्यामं भवेत्तत्क्षितिसूनुराशौ ।
विचित्ररत्नाभरणं तथैव पापेक्षिते तल्लयमाहुरार्याः ॥ ५२ ॥

शुभग्रहाणां भवनेतु तस्मिंस्तृतीयराशौ श्रवणं कथानाम् ।
पुण्यादिकानां यदि पापराशौ क्रूरश्च तत्कर्णकुठारमाहुः ॥ ५३ ॥

கர்ணபூஷண யோகம்.—(50) 3 மிடத்தில் சுபரிருந்தாலும் சுபர்பார்த்தாலும், 3க் குடையவன் சுபருடன் கூடினுலும் கர்ணபூஷணமுண்டாகும். (51) சுக்கிரன் 3 லிருந்தால் முத்து நகையும், குருவிருந்தால் ஒப்பற்ற ஆபரணமும் உண்டாகும். சூரியனின் ஸம்பந்தம் பெற்ருல் நல்ல ரத்தினத்தாலான நகையை

யும், மாந்தியிருந்தால் நல்ல நீலரத்தினத்தாலான நகையையும் அடைகிறான். (52) சந்திரனிருந்தால் வெகுவான ஆபரணத்தையும், புதனிருந்தால் சிவந்த நிறமான ஆபரணத்தையும், அது செவ்வாயின் ராசியானால் விசித்திரமான ரத்னாபரணத்தையும், சொல்லுகின்றனர். பாபர் பார்த்தால் முற்கூறியவற்றிற்கு நாசத்தைச் சொல்லுகின்றனர். (53) அந்த 3 மிடமானது சுபக்கிரஹங்களின் வீடாக யிருந்தால் புண்ணியாதிகதைகளின் சிரவணத்தையும், பாபராசியாயிருந்து பாபருமிருந்தால் காதுகெட்டுவிடும் என்பதையும் சொல்லுகின்றனர். (எ-று)

ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய ஸஹோதரபாவ பலன் முற்றிற்று.

## ஸாராவளியிற் சொல்லிய 4வது பந்து பாவபலன்.

**सुहृद्गृहं ग्रामचतुष्पदौ वा क्षेत्रोद्यमालोकनकं चतुर्थे।**
**दृष्टेः शुभानां शुभयोगतो वा भवेत्प्रवृद्धिर्नियमेन तेषाम् ॥ १ ॥**
**बन्धुभवने च बन्धून् गृहमातृजलात्मवृद्धिभोज्यादीन्।**
**वाहनहृदयस्कन्धासनशयनसुखान्यधोजलं ब्रूयात् ॥ २ ॥**

நான்காவது பாவமூலம் கண்டறியவேண்டியவைகள்.—(1) நல்லமனது, வீடு, கிராமம், நாற்கால்பிராணி, நெல்விளையும் க்ஷேத்திரம், தன்முயர்ச்சி, பார்வை முதலியன இவைகள் நான்காமிடத்தைக்கொண்டு அறியத் தக்கன. சுபர்களின் பார்வையோ, சேர்க்கையோ இருக்குமானால் முற்கூறியவற்றிர்க்கு நிஸ்சயமாக பெருக்கு உண்டாகும். (2) மேலும் நான்காமிடத்தைக் கொண்டு பந்துக்களையும், வீடு, மாதா, ஜலம், சரீரவிருத்தி, தின்பண்டம் முதலியன, வாஹனம், ஹிருதயம், மரத்தின் ஸ்கந்தம், (கிளைபிரியுமிடம்) ஆஸனம், படுக்கை, ஸுகம், பூமிக்குக் கீழுள்ள ஜலம் இவற்றையும் சொல்லவேண்டும்.

**मेषे सुखस्थे लभते सुखं च चतुष्पदेभ्योऽथ विलासिनीभ्यः।**
**भोगैर्विचित्रैः प्रचुरान्नपानैः पराक्रमोपार्जितसर्वभोगैः ॥ ३ ॥**
**वृषे सुखस्थे लभते सुखानि नरोऽतिमान्यो विविधैश्च मान्यैः।**
**शौर्येण भूपालनिषेवणेन विप्रोपचारैर्नियमैर्व्रतैश्च ॥ ४ ॥**

तृतीयराशौ सुखभे सुखानि लभेन्मनुष्यः प्रमदाकृतानि ।
जलावगाहैर्वनसेवया च प्रभूतपुष्पाम्बरसेघकांश्च ॥ ५ ॥

कुलीरराशौहि यदा सुखस्थे नरं सुरूपं सुभगं सुशीलम् ।
स्त्रीसंमतं सर्वगुणैस्समेतं विद्याविनीतं जनवल्लभं च ॥ ६ ॥

सिंहे सुखस्थे नसुखं मनुष्यः प्राप्नोति योऽसौ प्रचुरप्रकोपात् ।
कन्याप्रसूतिः कुटिलप्रसङ्गी नरो भवेच्छीलविवर्जितश्च ॥ ७ ॥

कुमित्रसङ्गं धनसंश्रयं च कन्यागृहे दुर्मतिमान्मनुष्यः ।
पैशुन्यसङ्गाल्लभते सुखानि चौर्येण युद्धेन च मोहनेन ॥ ८ ॥

तुले सुखस्थे च नरस्य यस्य करोति सौख्यं शुभकर्मदक्षम् ।
विद्याविनीतं सततं सुखाढ्यं प्रसन्नचित्तं विभवैस्समेतम् ॥ ९ ॥

अलौ चतुर्थे च यदा भवेत्तं सुतीक्ष्णभावं परभीतियुक्तम् ।
प्रभूतसेवं गतवीर्यदक्षं परैस्सुरक्षं च गुणैर्विहीनम् ॥ १० ॥

चापे सुखस्थे लभते मनुष्यस्सुखं सदा सङ्गरसेवनं च ।
सत्कीर्तिरेवं हरिसेवकश्च सद्भावसंपन्नतयान्वितश्च ॥ ११ ॥

मृगे सुखस्थे सुखभाङ्मनुष्यः सदा भवेत्तापनिवेशनेन ।
उद्यानवापीतटसङ्गमेन मित्रोपचारैस्सुरतप्रधानैः ॥ १२ ॥

घटे सुखस्थे प्रमदाधनाद्वा प्राप्नोति सौख्यं विविधं मनुष्यः ।
मिष्टान्नपानैः फलशाकपत्रैर्विदग्धवाक्यैः कटुसाह्यकारी ॥ १३ ॥

मीने सुखस्थे तु सुखं मनुष्यः प्राप्नोति सौख्यं जलसंश्रयेण ।
शनैश्चरे देवसमुद्भवैश्च यानैस्सुवस्त्रैस्सुधनैर्विचित्रैः ॥ १४ ॥

மேஷாதி ராசிகள் நான்காம் பாவமாக வருவதின் பலன்—

(3) மேஷமானது நான்காம் பாவமானால் நாற்கால் ஜந்துக்களாலும், ஸ்திரீகளாலும், விசித்திரமான போகங்களாலும், அதிகமான அன்னபானங்களாலும், பராக்கிரமத்தால் ஸம்பாதிக்கப்பட்ட ஸர்வபோகங்களாலும் சுகத்தை யடைகிறான். (4) விருஷபம் நான்காமிடமானால் மனிதன் பற்பல மான்னியங்களாலும், சௌர்ய (பராக்கிரம) த்தினாலும், ராஜஸேவையினாலும் பிராம்மண உபசாரத்தினாலும், நியமங்களாலும், நோன்புகளாலும், வெகு மதிக்கப்பெற்று சுகத்தை யடைகிறான். (5) மிதுனமானது நான்காமிடமாக வானால் மனிதன் ஜலஸ்னானத்தினாலும்,

வன ஸேவையினாலும் சுகத்தை யடைவதுடன் ஸ்திரீ மூலமான சுகத்தையும், அதிகமான புஷ்பம், வஸ்திரம், ஸேவகர் இவற்றையு மடைகிறான். (6) கடகம் நான்காமிடமாக வானால் அப்பொழுது பிறந்த மனிதனை நல்ல ரூபமுள்ளவனாகவும், நல்ல அழகுள்ளவனாகவும், நல்லொழுக்க முள்ளவனாகவும், ஸ்திரீகளின் ஸம்மதியை யடைந்தவனாகவும், எல்லாக் குணங்களுடனும் கூடினவனாகவும், வித்யாவிநீதனாகவும், ஜனங்களுக்குப் பிடித்தமானவனாகவும் செய்கிறது. (7) சிங்கம் 4 மிடமாகவானால் அதிகக் கோபமுண்டாவதன் மூலம் மனிதன் சுகத்தை யடையமாட்டான். கன்யாப்ரகிருதியையும் கெட்டவரின் சேர்க்கையையும் அடைவதுடன் நல்லொழுக்க மற்றவனாகவுமாவான். (8) கன்னியானது 4 மிடமாகவானால் கெட்ட குணமுள்ள ஸ்னேஹிதனின் சேர்க்கையையும், பணச் சேர்க்கையையும் அடைவதுடன் மனிதன் துர்ப்புத்தி யுள்ளவனாகவும் ஆகி கோள் சொல்லுகின்றவனின் சேர்க்கையினாலும், (ரஹஸ்யப் போலீஷ் என்றும் சொல்லலாம்) திருட்டினாலும், சண்டையினாலும், மோஹனத்தினாலும் சுகங்களை யடைவான். (9) துலாம் 4 மிடமாக எவனுக்கு வாகுமோ அவனை சுகமுள்ளவனாகவும், சுபகாரியத்தில் ஸமர்த்தனாகவும், வித்யாவிநீதனாகவும், எப்பொழுதும் சுகத்தின் நிறைவுள்ளவனாகவும், தெளிந்த சித்தமுள்ளவனாகவும் பணத்துடன் சேர்ந்தவனாகவும் செய்கிறது. (10) விருச்சிகம் 4 மிடமாகப்பிறந்தவனை மிகக்கொடுமையான ஸ்வபாவமுள்ளவனாகவும், பிறரிடமிருந்துண்டான பயத்துடன் கூடினவனாகவும், அதிகமான ஸேவை செய்பவனாகவும் வீர்யம் ஸாமர்த்தியம் இவையற்றவனாகவும்,பிறரால் காப்பாற்றக்கூடியவனாகவும்,குணங்களற்றவனாகவும் செய்கிறது. (11) தனுஸ் நான்கா மிடமாகப் பிறந்தமனிதன் எப்பொழுதும் சுகத்தையும், யுத்தத்தில் ஸேவை செய்தலையும் அடைகிறான். இவ்விதமே நல்லகீர்த்தியுள்ளவனாகவுமாகிறான். விஷ்ணுஸேவையையும் செய்கிறான். நல்லஸ்வபாவம் பொருந்தியவருடன் சேர்ந்தவனாகவும் ஆகிறான். (12) மகரம் நான்காமிடமாகவாகும் பொழுது பிறந்தமனிதன் தாபத்தைப் போக்குமிடத்தையமைத்தலாலும், தோட்டம் குளம், இவையுள்

ளவிடத்தில் வஸித்தலாலும், காமானுபவத்தை ப்ரதானமாக வுடைய மித்ரோபசாரங்களாலும் சுகத்தை யடைந்தவனுகவாகிருன். (13) கும்பம் நான்காமிடமாக வாகப்பிறந்தமனிதன் ஸ்திரீதனத்தினுல் பற்பலசுகத்தை யடைகிருன். அதிகமான அன்னபானங்களாலும், பழம் கரி, இலை இவற்ருலும், சாடு வாக்யங்களாலும் துஷ்டனுக்கும் உதவியைச் செய்கிருன். (14) மீனம் 4 மிடமாகவாகப் பிறந்தவன் சுகத்தையடைகிருன். அதுடன் ஜலாஸ்ரயத்தினுலும் அதில் சனியிருந்தால் தேவராலுண்டான வாஹனங்களாலும் விசித்திரமான வஸ்திரம் பணம் இவற்ருலும் நல்ல சுகத்தை யடைகிருன்.

विलोकिते चापि चतुर्थभावे सूर्येण चाप्येति हि मातृपीडाम् ।
बन्धुक्षयं चैव यशस्सुखं च लाभार्थदं पुण्ययशस्सदैव ॥ १५ ॥

तुरीयभावे यदि चन्द्रदृष्टे बन्धुक्षयं चैव यशस्सुखं च ।
लाभार्थदं पुण्ययशस्सदायुः पित्रादिलोकान्न करोति सौख्यम् ॥

तुर्यभावभवनं कुजेक्षितं मातृकष्टमथ तुर्यवर्षके ।
भूपतेर्भवति भूमितस्सुखं दर्शनेन च रिपुर्विनश्यति ॥ १७ ॥

बुधेक्षिते यद्यथ तुर्यभावे मातुश्च सौख्यं प्रचुरं करोति ।
राज्यादिसौख्यं धनवर्धनं च पितुर्धनं चैव हि कामलुब्धम् ॥ १८ ॥

हिबुकसद्मनि चार्यनिरीक्षिते जनकमातृसुखं त्वतुलं भवेत् ।
गजरथाश्वयुतोऽथ च पण्डितः स्वजनवर्गभवं त्वतुलं यशः ॥१९॥

संपूर्णदृष्टिर्यदि तुर्यभावे शुक्रस्तदा मातृसुखं करोति ।
कर्माधिको द्रव्ययुतो नरस्स्यात् यशश्च सौख्यं बहुवाहनोत्थम्॥२०॥

तुर्यभावभवने शनीक्षिते तातमातृमरणं भवेन्नृणाम् ।
जन्मतो हि खलु तुर्यवर्षके षोडशेऽथ गदतो महद्भयम् ॥ २१ ॥

चतुर्थगेहे तमसा निरीक्षिते मातुस्सुखं नैव करोति तस्य ।
कर्मोदयं म्लेच्छकुलाज्जयं च व्यथोदरस्याथ नरस्य दारुणम् ॥ २२ ॥

நான்காவதுபாவத்திற்கு சூரியாதிகளின் பார்வை மூலமுண்டாகும் பலன்.—(15) 4மிடமானது சூரியனுல் பார்க்கப்பட்டால் மாதிருபீடையையும், பந்துக்ஷயத்தையும், லாபம் அர்த்தம் இவற்றைத்தரும் யசஸ்ஸுகத்தையும் புண்ணியகீர்த்தியையும் அடை

கிறான். (16) 4மிடம் சந்திரனால் பார்க்கப்பட்டால் பந்துக்ஷயத்தையும், லாபம், அர்த்தம் இவற்றைத்தரும் யசஸ், ஸுகம் இவற்றையும், புண்ணியகீர்த்தியையும், எப்பொழுதும் ஆயுளையும் பிதாமுதலியோரிடமிருந்து சவுக்கியக்குறைவையும் செய்கிறது. (17) 4மிடமானது சேவ்வாயினால் பார்க்கப்பட்டால் 4-வது வருஷத்தில் மாதாவுக்குக் கஷ்டமுண்டாகும். அரசனுடைய பூமியினின்றும் சுகமுண்டாகும். இவனது பார்வையாலேயே சத்துருநாசத்தை யடைகிறான். (18) 4மிடமானது புதனால் பார்க்கப்பட்டால் மாதாவுக்கு அதிகமான ஸவுக்கியத்தைச் செய்கிறது. ராஜ்யாதி சவுக்கியத்தையும், தனப்பெருக்கையும், பிதாவின் தனத்தையும் கொடுப்பதுடன் காமலுப்தனாகவுமாக்குகிறது. (19) 4மிடமானது குருவினால் பார்க்கப்பட்டால் ஜனகமாதாவினுடைய சுகம் அதிகமாக உண்டாகும். யானை, தேர், குதிரை இவற்றுடன் கூடினவனாகவும், பண்டிதனாகவும் ஆவான். சொந்தவர்க்கத்திலுள்ள ஜனங்கள் மூலம் அதிகமான யசஸ்ஸையும் அடைகிறான். (20) சுக்கிரன் 4 மிடத்தில் ஸம்பூர்ண திருஷ்டியுள்ளவனாக யிருந்தால் மாதிருசவுக்கியத்தைச் செய்கிறான். அதிகம் கர்மாவுள்ளவனாகவும், திரவ்யத்துடன் கூடினவனாகவும், வெகு வாஹனமூல முண்டான யசஸ் சுகம் இவற்றுடன் கூடினவனாகவும் ஆகிறான். (21) 4 மிடமானது சனியினால் பார்க்கப்பட்டால் பிதாவின் மாதாவுக்கு மரணமுண்டாகும். பிறந்ததுமுதல் 4-வது வருஷத்திலோ, 16-வது வருஷத்திலோ வியாதியினால் அதிகம் பயமுண்டாகும். (22) 4 மிடமானது ராஹுவினால் பார்க்கப்பட்டால் அவனது மாதிருசுகத்தைச் செய்யான். கர்மோத்பத்தியையும், மிலேச்சகுலத்தினின்றும் ஜயத்தையும் வீணான வயிற்றையுடைய மனிதனுக்கு பலவிதகஷ்டத்தையும் தருகிறான்.

सुखपतौ सुखवाहनभोगवान् तनुगते तनुते धवलं यशः।
जनकमातृसुखौघकरं नरं सुभगलाभयुतं निरुजं वपुः ॥ २३ ॥
सुखपतौ धनगे खलखेचरैः पितृविरोधकरः कृपणश्शुचिः ।
शुभखगैः पितृभक्तिधनाश्रयः शुभयुतश्श्रुतिशास्त्रविशारदः ॥२४॥
सुखपतौ सहजालयगे क्षमी पितृसुहृज्जननीकलिकारकः ।
रथमहीवृषभादिसुखान्वितश्शुभखगैर्बहुमित्रयुतो नरः ॥ २५ ॥

सुखपतौ सुखगे सुखसंनिधौ नृपसमो धनवान्बहुसेवकः ।
पितृसुखं बहुलं जनमान्यता रथगजाश्व शुभैस्सुखभाक् नरः॥ २६ ॥

सुखपतौ बहुजीवितवान्नर स्सुतगते सुतयुक्तसुधीर्नरः ।
शुभवशात्सुखभोगधनान्वितश्श्रुतिधरोऽतिपवित्रविलेखकः ॥ २७ ॥

भवति मातृपतौ रिपुगे नरो रिपुयुतोऽपि अनर्थविनाशकः।
खलखगेऽपि कलङ्कितमातुलो भवति सौम्यखगैर्धनसञ्चयी ॥ २८ ॥

मदनगेऽम्बुपतौ च सुराकृतिर्धनयुतो युवतीजनवल्लभः।
स्मरयुतस्सुभगश्शुभखेचरैः खलखगेऽतिखलः कठिनः पुमान्॥२९॥

मृतिगते सरुजोऽम्बुपतौ नरोऽसुखयुतः पितृमातृसुखाल्पकः।
भवति वाहननाशकरश्शुभैः खलखगेऽतिसमागमनाशकः ॥ ३० ॥

नवमगे सुखपे बहुभाग्यवान् पितृधनार्थसुहृन्मनुजाधिपः।
भवनतीर्थकरो व्रतवान् क्षमी सुनयनः परदेशसुखी नरः ॥ ३१ ॥

गगनगे सुखपे गृहिणीसुखं जनकमातृकरो धनभुक् क्षमी ।
सुनयनः सुतरां नृपसंमतः खलखगैर्विपरीतफलं वदेत् ॥ ३२ ॥

भवगतेऽम्बुपतौ पितृपालको विविधलाभयुतश्शुभकृत्सदा ।
पितरि मातरि भक्तियुतो नरः प्रचुरजीवितरोगविवर्जितः ॥ ३३ ॥

व्ययगते सुखपे पितृनाशको भवति चास्य पिता परदेशगः ।
भवति दुष्टखगैर्युतजातकश्शुभखगैः पितृसौख्यकरस्सदा ॥ ३४ ॥

तुर्ये रविर्मनुमिते कलहं हि चन्द्रो द्विद्व्यब्दपुत्रमसृगष्टसहोदरार्तिम्।
ज्ञो वित्तहायमयमैर्गुरुराकृतौस्वेशुक्रेऽम्बुजे सुखमथो कुजवच्छनिश्च ॥

4க் குடையவன் லக்கினம் முதலியவற்றிலிருப்பதா லுண்டாகும் பலன்.—(23) 4க்குடையவன் லக்கினத்திலிருந்தால் சுகமுள்ளவனுகவும், வாஹன போகமுள்ளவனுகவும் செய்வதுடன் சுத்தமான யசஸ்ஸையும், மனிதனை ஜனக மாதாவுக்கு அதிகம் சுகத்தைச் செய்கின்றவனுகவும், நல்ல வஸ்துவின் லாபத்தை யடைந்தவனுகவும் ரோகமற்ற சரீரத்தையடைந்தவனுகவும் செய்கிறது. (24) 4க் குடையவன் பாபக்கிரஹங்களுடன் கூட இரண்டாமிடத்திலிருந்தால் பிதிரு விரோதத்தைச் செய்கின்றவனுகவும், கிருபணுகவும், சுத்தனுகவும் ஆவான். சுபக்கிரஹங்களுடன் கூடினல் பிதிருபக்தி தனம் இவையுள்ளவனுகவும், சுபத்துடன் கூடி

னவனாகவும், சுருதி சாஸ்திர ஸமர்த்தனாவும் ஆவான். (25) 4க் குடையவன் 3 மிடத்திலிருந்தால் பொருமை யுள்ளவனாகவும், பிதாவுக்கு ஸுஹிருத்தாகவும், தாயுடன் சண்டை யிடுபவனாகவும், தேர் (வாகனம்) பூமி, விருஷபம் முதலியவற்றின் மூலமுண்டான சுகமுள்ளவனாகவும், சுபக்கிரஹங்களுடன் கூடினால் வெகு மித்திரர்களுடன் கூடினவனாகவு மாகிறான். (26) 4க் குடையவன் நான்காமிடத்தி லிருந்தால் சுகானுபவ விஷயத்தில் அரசனுக்கொப்பாகவும், தனவானாகவும், வெகு ஸேவகருள்ளவனாகவும், வெகுவான பிதிரு சுகமுள்ளவனாகவும் ஜனங்களால் வெகு மதிக்கப் பட்டவனாகவும், தேர், யானை இவற்றுடன் கூடினவனாகவும் சுபருடன் கூடினால் சுகத்தையடைந்தவனாகவும் மனிதன் ஆகிறான். (27) 4க் குடையவன் ஐந்தாமிடத்தில் இருந்தால் மனிதன் வெகுகாலம் ஜீவிதமுள்ளவனாகவும், புத்திரனுடன் கூடினவனாகவும், புத்திமானாகவும், சுபரிருப்பதன்மூலம் சுகம் போகம் தனம் இவற்றுடன் கூடினவனாகவும், வேதாத்யயனஞ் செய்தவனாகவும், அதிகம் சுத்தமான எழுத்து எழுதுபவனாகவும் ஆவான். (28) 4க் குடையவன் 6 மிடத்திலிருந்தால் சத்துருவுள்ளவனாயினும் அனர்த்தத்தை விநாசம் செய்பவனாகவும், துஷ்டனான கிரஹமங்கிருந்தால் களங்கமுள்ள தாய்மாமனையுடையவனாகவும் சுபக்கிரஹங்களுடன்கூடினால் பணத்தின் சேர்க்கையுள்ளவனாகவும் ஆகிறான். (29) 4க் குடையவன் ஏழாமிடத்தி லிருந்தால் தேவருக்கொப்பான ஆகிருதியுள்ளவனாகவும். தனத்துடன் கூடினவனாகவும், ஸ்திரீஜனங்களுக்குப் பிடித்தவனாகவும், சுபக்கிரஹங்களுடன் கூடினால் காமபீடிதனாகவும், அழகு பொருந்தியவனாகவும் ஆவான். பாபக்கிரஹமங்கிருந்தால் மிக வஞ்சகனாகவும், கடினஸ்வபாவ முள்ளவனாகவும் புருஷனிருப்பான். (30) 4க் குடையவன் 8 லிருந்து சுபக்கிரஹங்களுடன் கூடினால் மனிதன் வியாதியுள்ளவனாகவும், சுகத்துடன் கூடாதவனாகவும், பிதாமாதாக்களின் சுகக்குறைவுள்ளவனாகவும், வாஹனநாசகனாகவும் ஆவதுடன் பாபக்கிரஹமிருந்தால் அதிகமான வரவை நாசமாக்குகிறவனாகவும் ஆகிறான். (31) 4க் குடையவன் 9 மிடத்திலிருக்கப் பிறந்தமனிதன், அதிகமான பாக்கிய

முள்ளவனாகவும், தகப்பனால் தேடப்பட்ட தனம், பூஜிக்கத் தகுந்த சிநேஹிதன் இவர்களுடன் கூடினவனாகவும், மனிதர் களுக்குத் தலைவனாகவும், வீடு குளம்கிணறுமுதலிய தீர்த்த ஸ்த லங்கள் இவற்றை ஏற்படுத்துபவனாகவும், விரதமுள்ளவனாகவும், பொறுமை யுள்ளவனாகவும், அழகிய கண்ணுள்ளவனாகவும், அயல் தேசம் சென்று அங்கு சுகமாய் வஸிப்பவனாகவு மிருப் பான். (32) 4க் குடையவன் 10 மிடத்திலிருந்தால் பார்யை மூல முண்டாகின்ற ஸுகமுள்ளவனாகவும், தகப்பன், தாய் இவர்களை (நீண்ட ஆயுளுள்ளவர்களாக) செய்கின்றவனாகவும், தனத்தை அனுபவிப்பவனாகவும், பொறுமை யுள்ளவனாகவும், அழகிய கண்ணுள்ளவனாகவும், அரசனுக்கு மிகவும் வேண் டியவனாகவு மிருப்பான். அவ்விடத்தில் பாபக்கிரஹங்களின் சேர்க்கை இருக்குமானால் மேற்கூறிய பலனுக்கு மாறான பல னையே சொல்லவேண்டும். (33) 4க் குடையவன் 11 மிடத்தி லிருந்தால் தகப்பனை ரக்ஷிப்பவனாகவும், பலவிதமான லாப முள்ளவனாகவும், எப்பொழுதும் நற்காரியத்தையே செய்கின் றவனாகவும், தகப்பன் தாய் இவர்களிடத்தில் பக்தியுள்வனாகவும், நீண்டவாயுள், ரோகமற்றிருத்தல் இவற்றுடன் கூடினவனாகவும் மனிதனாகிறான். (34) 4க் குடையவன் 12 மிடத்திலிருந்து அவனுக்கு பாபக்கிரஹங்களின் சேர்க்கையிருக்குமானால் அச்ச மயம் பிறந்த ஜாதகன் தகப்பனை நாசம் செய்கின்றவனாகவும், அல்லது வேறுதேசம் சென்றதகப்பனுடன் கூடினவனாகவுமாகி றான். அந்த 12 மிடத்தில் சுபக்கிரஹங்களின் சேர்க்கை யிருக் குமானால் எப்பொழுதும் தகப்பனுக்கு நன்மையைச் செய்கின்ற வனாக வாவான். (35) 4 மிடத்தில் சூரியனிருந்தால் 14-வது வயதில் கலஹத்தைச் செய்வான். 4 மிடத்தில் சந்திரனிருந் தால் 54-வது வயதில் கலஹத்தைச் செய்வான். 4 மிடத்தில் செவ்வாயிருந்தால் 38-வது வயதில்பீடையையும், புதனிருந்தால் 55-வது வயதில் தன நாசத்தையும், குருவிருந்தால் 21 வது வய தில் ஸுகத்தையும், சுக்கிரனிருந்தால் 5-வது வயதில் ஸுகத் தையும் கொடுப்பான். சனியிருந்தால் செவ்வாயைப்போல் பலன்

தருவான். அதாவது: 38-வது வயதில் பீடையைத்தருவான்.*

केन्द्रस्थिते रात्रिकरे भृगौ वा पापान्विते पापनिरीक्षिते वा ।
क्रूरांशके वात्ववरोहभागे सोयं जनन्या सह सङ्गमेति ॥ ३६ ॥
क्रूरेक्षिते क्रूरयुते च चन्द्रे दिवाकरे वा यदि केन्द्रराशौ ।
पापे सुखे वा यदि पापदृष्टे जातो नरस्स्याद्यदि मातृगामी ॥ ३७ ॥

தாயுடன் சேருதலுக்குரிய யோகம். — (36) சந்திரனே, சுக்கிரனே கேந்திரத்திலிருந்து பாபக்கிரஹத்தின் சேர்க்கையையோ பார்வையையோ பெற்றாலும், குரூராம்சகத்திலிருந்தாலும், அவரோஹபாகத்திலிருந்தாலும், அச்சமயம் பிறந்தவன் தாயுடன் சேருவான். (37) சந்திரனே, சூரியனே கேந்திரத்தையடைந்து குரூரக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தாலும், அல்லது 4 மிடத்தில் பாபக்கிரஹமிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் அச்சமயம் பிறந்த மனிதன் மாதாவுடன் சேருபவனாக விருப்பான்.

सुखेश भाग्येश विलग्ननाथाः त्रिकोणगाः केन्द्रगताश्च सर्वे ।
भुक्तौ यदा तत्परिपाककाले भर्त्रा सहैवानुमृतिश्च मातुः ॥ ३८ ॥

உடன்கட்டை ஏறுதற்குறிய யோகம்.—(38) 4, 9, மிடம் லக்கினம் இவற்றின் அதிபர்கள் யாவரும் 1, 5, 9 மிடத்திலோ, கேந்திரத்திலோ இருந்தால் அவர்களின் தசாபுக்திகாலங்களில் மாதாவுக்கு பர்த்தாவுடன் உடன்கட்டை ஏறுதலுண்டாகும்.

लग्ने चैव यदा जीवो धने सौरिश्च संस्थितः ।
राहुश्च सहजस्थाने तस्य माता न जीवति ॥ ३९ ॥

மாதாவுக்கு அரிஷ்ட யோகம்.—(39) லக்கினத்தில் குருவும், 2 மிடத்தில் சனியும், 3 மிடத்தில் ராஹுவுமிருந்தால் அந்த ஜாதகனின் தாய் ஜீவிக்கமாட்டாள்.

लग्ने पापो व्यये पापो धने सौम्योऽपि संस्थितः ।
सप्तमे भवने पापः परिवारक्षयङ्करः ॥ ४० ॥

---

*இந்த 35-வது சுலோகம் மிகவும் அசுத்தமாயிருப்பதால் கிடைத்த பிரதிக்குத் தக்கபடி ஒருவாறு உரை எழுதப்பட்டது. வேறு சுத்த பிரதி கிடைத்தால் அதன்படி அதனுரையைக் கண்டுகொள்ளவும்.

பரிவார நாசமுண்டாகும் யோகம்.—(40) லக்கினம், 12, 7 மிடம் இவ்விடங்களில் பாபக்கிரஹங்களும், 2 மிடத்தில் சுபக் கிரஹமுமிருந்தால் பரிவாரங்களுக்கு நாசமுண்டாகும்.

सौम्यदृष्ट्यधिकत्वात्तु मातुर्धनसुखं भवेत् ।
पापदृष्ट्यधिकत्वात्तु मातृकष्टं सुखं न हि ॥ ४१ ॥

மாதாவுக்கு சுகமும், கஷ்டமு முண்டாகும் யோகம்.—(41) 4 மிடத்திற்கு சுபக்கிரஹங்களின் பார்வை அதிகமிருக்குமானல் மாதாவுக்கு தனஸுகமுண்டாகும். பாபக்கிரஹங்களின் திருஷ்டி அதிகமிருக்குமானல் மாதாவுக்குக் கஷ்டமே யுண்டாகும் ஸுகமுண்டாகமாட்டாது.

पापेक्षिते वा सुखभावनाथे पापान्विते सौम्यदृशा विहीने ।
दारेश्वराल्लग्नपतौ विहीने जातो नरो मातृसमानगामी ॥ ४२ ॥

மாதாவுக்கு ஒப்பானவளுடன் சேருதலுக்குரிய யோகம்.—(42) 4க் குடையவன் சுபக்கிரஹத்தின் பார்வையைப் பெருமல் பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்து 7க் குடையவனைக்காட்டிலும் லக்கினதிபதி குறைந்த பலமுள்ளவனயிருந்தால் அச்சமயம் பிறந்த மனிதன் மாதாவுக்கொப்பான ஸ்திரீகளுடன் சேருபவனக விருப்பான்.

सहोदरीसङ्गममाहुरन्ये दारेश्वरे क्रूरयुते सुखस्थे ।
पापेक्षिते पापसमागमे वा क्रूरादिषष्ट्यंशसमन्विते वा ॥ ४३ ॥
सुखे शनौ पापनिरीक्षिते वा पापान्विते तादृशपापयुक्तः ।
पापग्रहाणां भवने सुखे तु क्रूरादिषष्ट्यंशयुते तथैव ॥ ४४ ॥

ஸஹோதரியுடன் சேருதலுக்குரிய யோகம்.—(43) 7க்குடையவன் பாபக் கிரஹத்துடன் சேர்ந்து 4 மிடத்திலிருந்து பாபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டோ பாபரின் ஸமாகமத்தை யடைந்தோ குரூராதி ஷஷ்டியம்சத்திலோ இருந்தால் சிலர் ஸஹோதரியுடன் சேருதலைச் சொல்லுகின்றனர். (44) 4 மிடத்தில் சனியிருந்து பாபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தாலும் ஸஹோதரீ ஸங்கமத்தை யடைவான். இவ்விதமே 4 மிடம் பாபக் கிரஹங்களின் வீடாகவானுலும், அதில் க்ரூ

ராதி ஷஷ்டியம்ச முதயமானுலும் முற்கூறிய பாபகாரியத்தைச் செய்வான்.

षष्ठेशभूनन्दनसंयुतेऽब्जे सुखस्थिते पापनिरीक्षिते वा ।
चन्द्रांशसंयुक्तनवांशनाथे तथाविधे मातरि दोषमाहुः ॥ ४५ ॥

सुखेश्वरे राहुयुते सपापे शनैश्चरेणापि दिवाकरेण ।
मातान्यसक्ता सुखराशिनाथसंयुक्तभागाधिपतौ तथैव ॥ ४६ ॥

மாதாவின் நடத்தையில் தோஷத்தைக் காண்பிக்கும் யோகம்.—(45) 4மிடத்திலிருக்கும் சந்திரன், 6க்குடையவன் செவ்வாய் இவர்களுடன் சேர்ந்தோ, அல்லது பார்க்கப்பட்டோ இருந்தாலும், அல்லது சந்திரனிருக்கும் நவாம்சபதி முற்கூறியபடிக்கிருந்தாலும் தாயின் சாரித்ரிய விஷயமாய் தோஷத்தைக் கூறுகின்றனர். (46) 4க் குடையவன், ராஹு பாபக்கிரஹங்கள் சனி சூரியன் இவர்களுடன் கூடினல் ஜாதகனின் தாய் பரபுருஷனிடம் பற்றுள்ளவளாக விருப்பாள். 4க் குடையவனிருக்கும் நவாம்சபதி முற்கூறியபடிக்கிருந்தாலும் தாய் பரபுருஷனிடம் பற்றுள்ளவளாகவே இருப்பாள்.

सुखेश्वरे लग्नगते बलाढ्ये गुर्विन्दुसौम्याऽऽस्फुजिदर्कदृष्टे ।
वैशेषिकांशे शुभदृष्टियुक्ते पतिव्रता तस्य भवेत्सवित्री ॥ ४७ ॥

மாதா பதிவிரதையாக விருத்தலுக்குரிய யோகம்.—(47) 4க் குடையவன் பலம் பெற்று லக்கினத்தை யடைந்து குரு, சந்திரன், புதன், சுக்கிரன், ஸூரியன் இவர்களால் பார்க்கப்பட்டிருந்தாலும், அல்லது வைசேஷிகாம்சத்தை யடைந்து சுபரால் பார்க்கப்பட்டாலும், அந்த ஜாதகனின் தாய் பதிவிரதையாக விருப்பாள்.

तथाविधे शीतकरे सराहुकेतौ सवित्री यदि नीचसक्ता ।
मन्देन युक्ते यदि शूद्रसक्ता वैश्येन सक्ता यदि सौम्ययुक्ते ॥ ४८ ॥

रव्यन्विते क्षत्रियजातिसक्ता शुक्रेज्ययुक्ते द्विजपुङ्गवैश्च ।
धरासुतेनापि तथाविधेन वदतुः फलं तादृशमेव सत्यम् ॥ ४९ ॥

தாய் இன்னின்ன ஜாதி புருஷனிடம் பற்றுள்ளவளாயிருப்பாள் என்பதை அறிவிக்கும் யோகம்.—(48) சந்திரன் முற்கூறிய

படி லக்கினத்திலோ, வைசேஷிகாம்சத்திலோ இருந்து ராஹு கேதுக்களுடன் கூடினல் தாயானவள் தாழ்ந்த ஜாதி புருஷனிடம் பற்றுள்ளவளாக விருப்பாள். முற்கூறிய யோகத்திலேயே சந்திரன் சனியுடன் கூடினல் தாயானவள் சூத்திரனுடன் பற்றுள்ளவளாகவும், புதனுடன் கூடினல் வைஸ்யனுடன் பற்றுள்ளவளாகவு மிருப்பாள். (49) முற்கூறிய யோகத்திலேயே சந்திரன், ஸூரியனுடன் கூடினல் க்ஷத்திரிய ஜாதியைச்சேர்ந்த மனிதனிடம் பற்றுள்ளவளாகவும், சுக்கிரன் குரு இவர்களுடன் கூடினல் பிராம்மண சிரேஷ்டர்களிடம் பற்றுள்ளவளாகவும், செவ்வாயுடன் கூடினுலும் க்ஷத்திரியனுடன் பற்றுள்ளவளாகவும் ஜாதகனின் தாயிருப்பாள். மேற்கூறியபடியே பலன் சொல்லுபவனுக்கு எல்லாம் உண்மையாகவே நடக்கும்.

मातृस्थाने शुभयुते तदीशे स्वोच्चराशिगे ।
कारके बलसंयुक्ते मातुर्दीर्घायुराभवेत् ॥ ५० ॥

மாதாவுக்கு தீர்க்காயுளேற்படும் யோகம்.—(50) 4 மிடத்திற்கு சுபக்கிரஹ யோகமிருந்து 4க் குடையவன் தனது சொந்த ராசியிலோ, உச்சராசிலோ இருந்து, மாதிருகாரகனும் பலம் பெற்றிருந்தால் மாதாவுக்கு நீண்ட ஆயுளுண்டாகும்.

लग्नेशे सुखगेऽथवा सुखपतौ लग्ने तयोरीक्षणे
योगे वा शशिनस्तथा यदि करोत्याशुस्वमातुः क्रियाम् ।
अन्योन्यं यदि नीचशत्रुभवने षष्ठाष्टमे वा तयो-
र्मातुर्नोपकरोति नाशसमये बन्धस्तयो र्वा न चेत् ॥ ५१ ॥

मातृभावादिवद्वाच्यं पितृभ्रातृसुतादिषु ।
भावकारकभावेशलग्नलग्नेश्वरैर्वदेत् ॥ ५२ ॥

மாதாவுக்கு அற்பாயுளும், மரண காலத்தில் தாய்க்கு உபகரிக்காமையும் ஏற்படும் யோகம்.—(51) லக்கினதிபதி 4 மிடத்திலோ, 4க் குடையவன் லக்கினத்திலோ இருந்து சந்திரனின் சேர்க்கையோ, பார்வையோ அவர்களுக்கிருந்தால் அச்சமயம் பிறந்தவன் தனது தாய்க்கு அபரக்ரியையை சீக்கிர காலத்திலேயே செய்வான் (அதாவது: மாதா சீக்கிர மிறந்து விடுவாள்.) 4க் குடையவன், லக்கினதிபதி இவர்கள் ஒருவருக்கொருவர்

நீசவீடு, சத்துருவீடு இவற்றிலோ, 6, 8 மிடங்களிலோ இருந்தா லும், அவர்களுக்கு மித்திரத்தன்மை யில்லாவிடினும் அச்சமயம் பிறந்த ஜாதகன் தாய்க்கு மரணம் நேரும் ஸமயத்தில் உபகாரம் செய்பவனாக வாகமாட்டான். (52) தகப்பன், ஸஹோதரன், பிள்ளை இவர்களைப் பற்றிய பாவபலன்களையும், பாவகாரகன், பாவாதிபதி, லக்கினம், லக்கினேஸ்வரன் இவர்களைக் கொண்டு மாதிரு பாவாதிகளுக்குச் சொல்லிய முறைப்படி சொல்ல வேண்டும்.

षष्ठेश्वरेण सहिते सुखराशिनाथे भाग्यस्थिते जनकमत्र विटं करोति ।
भाग्याधिपेन सहिते यदि मातृनाथेसौख्यस्थिते जनकमत्र विटं करोति ॥

தகப்பன் பரஸ்திரீ லோலனாவதற்குறிய யோகம்.—(53) 4க் குடையவன் 6க் குடையவனுடன் கூடி 9 மிடத்திலிருந்தால் ஜாதகனின் தகப்பன் பிறர் பெண்டீர்களிடம் பற்றுள்ளவனாக விருப்பான். 4க் குடையவன் 9க் குடையவனுடன் கூடி 4 மிடத் திலிருந்தாலும் ஜனகன் முற்கூறியபடிக்கிருப்பான்.

चन्द्रे बलिष्ठे यदि वा भृगौ वा सौम्येक्षिते शोभनभावयुक्ते ।
चतुष्टये मातृगृहाच्छुभाढ्ये मातुश्च दीर्घायुरुदाहरन्ति ॥ ५४ ॥
भावेशसंयुक्तनवांशनाथयुक्तांशपे केन्द्रयुते बलाढ्ये ।
तस्मिन् शशाङ्काद्यदि केन्द्रयुक्ते मातुश्च दीर्घायुरुदाहरन्ति ॥ ५५ ॥

மாதாவுக்கு தீர்க்காயுளேற்படும் யோகம்.—(54) சந்திரனோ, சுக்கிரனோ பலம் பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டு 6, 8, 12 மிடங்களைத் தவிர்த்து வேறு விடங்களிலிருந்து 4 மிடத் திற்கு கேந்திர ஸ்தானத்தில் சுபக் கிரஹங்களு மிருந்தால் மாதாவுக்கு நீண்ட ஆயுளை உபதேசிக்கின்றனர். (55) நாலுக் குடையவனு லடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபன் எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அதனதிபன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்தாலும், அல்லது அவன் சந்திரனுக்கு கேந்தி ரத்திலிருந்தாலும், தாய்க்கு நீண்டவாயுளை உபதேசிக்கின்றனர்.

पापान्तरे पापयुते शशाङ्के पापेक्षिते मातृविनाशमाहुः ।
शुक्रात्तथैवं प्रवदन्ति सन्तस्तत्स्थानपाद्वा कथयन्ति शेषम् ॥ ५६ ॥

निशाकरात्पापयुते स्मरे वा भृगोस्तथैवं जननीविनाशम् ।
सुखे शनौ मातृविनाशमेति पापेक्षिते चेदचिरेण नाशः ॥ ५७ ॥

शुभेक्षितश्चेच्चिरकालमृत्युमुदाहरन्त्यत्र महानुभावाः ।
पापग्रहाणां भवने शनौ तु पापान्विते मातृविनाशमेति ॥ ५८ ॥

மாதிரு நாசமுண்டாகும் யோகம்.—(56) சந்திரன் இரண்டு பாபக் கிரஹங்களின் நடுவிலோ, பாபருடன் சேர்ந்தோ, பாபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்தால் மாதாவுக்குநாசத்தை உபதேசிக்கின்றனர். சுக்கிரன், 4-வது பாவநாதன் இவர்கள் முற்கூறியபடிக் கிருந்தாலும் மாதாவின் நாசத்தை உபதேசிக் கின்றனர். (57) சந்திரனிருக்கும் ராசிக்கு 7 மிடமோ, சுக்கிர னிருக்கும் ராசிக்கு 7 மிடமோ பாபக்கிரஹத்துடன் கூடுமானல் தாய்க்கு மரணத்தைச் சொல்லவேண்டும். 4 மிடத்தில் சனியி ருந்தால் தாய் இறந்து விடுவாள். அந்த சனியே பாபக்கிரஹத் தாலும் பார்க்கப்பட்டால் அதிசீக்கிர காலத்தில் தாய் மரணமடை வாள். (58) 4ல் சனி இருந்து அவன் சுபக்கிரஹத்தால் பாக்கப் பட்டால் தாய் வெகு காலம் சென்று மரணமடைவாள் என்று பெரியார் உபதேசிக்கின்றனர். பாபக்கிரஹங்களின் வீட்டில் சனி இருந்து அவன் பாபக்கிரஹத்துடனும் கூடுவானுல் தாய்க்கு மரணத்தை யுபதேசிக்கின்றனர்.

यदा लग्नसुखेशौ वा मित्रभूतौ परस्परम् ।
शुभेक्षितौ शुभैर्युक्तौ मातृस्नेहं विनिर्दिशेत् ॥ ५९ ॥

लग्नेश्वरेण संदृष्टे मातृनाथे चतुष्टये ।
शुभग्रहान्विते दृष्टे मातृस्नेहं विनिर्दिशेत् ॥ ६० ॥

மாதிரு பக்தி யுண்டாகும் யோகம்.—(59) லக்கினதிபதியும், 4க் குடையவனும் ஒருவருக்கொருவர் மித்திரர்களாகவாகி சுபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டும், சேர்ந்து மிருந்தால் மாதாவினி டம் சினேஹமுள்ளவனுக விருப்பான். (60) 4க் குடையவன் லக்கினதிபதியால் பார்க்கப்பட்டு கேந்திரத்திலிருந்தாலும், சுபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தாலும் மாதா வினிடம் சினேஹத்தை யுபதேசிக்க வேண்டும்.

शत्रू चेल्लग्ननाथस्य मन्त्रलाभाधिपौ यदि ।
पापेक्षितौ पापयुतौ तच्छत्रुत्वं विनिर्दिशेत् ॥ ६१ ॥

लग्नेशांशपराशिस्थे मन्त्रस्थानाधिपे यदि ।
तथैव लग्नभावे वा तच्छत्रुत्वं विनिर्दिशेत् ॥ ६२ ॥

புத்திரன் மாதாவுக்கு சத்துருவாகுதல்.—(61) 5, 11க்குடையவர்கள் லக்கினாதிபதிக்கு சத்துருக்களாகவாவது பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் ஜாதகன் மாதாவுக்கு சத்துருவாகவிருப்பான் என்பதை உபதேசிக்கவேண்டும். (62) லக்கினேசனால் அடையப்பட்ட அம்சாதிபதியின் ராசியில் 5க் குடையவனிருந்தாலும், லக்கினத்திலிருந்தாலும் ஜாதகன் மாதாவுக்கு சத்துருவாக விருப்பான்.

लग्ने गुरौ दानवपूजितेन युक्ते यदा सोऽतिविशुद्धचित्तः ।
पापे सुखे तद्भवनाधिनाथे पापान्विते तस्य विरुद्धचित्तम् ॥ ६३ ॥

நல்லசித்தம் கெட்டசித்தம் இவையுள்ளவனாகுதல்.—(63) லக்கினத்தில் குருவிருந்து சுக்கிரனுடன் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் மிகவும் சுத்தமான சித்தமுள்ளவனாக விருப்பான். 4 மிடமோ, 4க் குடையவனோ பாபக்கிரஹத்துடன் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனின் சித்தம் கெட்டதாக விருக்கும்.

राहौ सुखे पापदृशा समेते बहिर्विशुद्धः प्रथितश्च भाति ।
अन्तर्गतं तत्कपटं वदन्ति पापे बहुत्वे सुखराशियुक्ते ॥ ६४ ॥

மனதில் கபடமுள்ளவனா யிருத்தல்.—(64) 4ல் ராஹு விருந்து பாபக்கிரஹத்தின் பார்வை பெற்றால் வெளியில் சுத்தனாகவும், பிரசித்தி பெற்றவனாகவும் விளங்குவான். 4ல் அனேகம் பாபக்கிரஹங்க ளிருக்குமானால் உள்ளில் கபடத்தை உபதேசிக்கின்றனர்.

जीवेन दृष्टे यदि वा तदीशे रम्यो गुरौ शोभनखेचरे वा ।
सौम्यान्तरे तद्भवने ससौम्ये सुखी भवेत्सर्वजनेषु मुख्यः ॥ ६५ ॥

நல்லசித்தமுள்ளவனாகுதல்.—(65) 4க் குடையவன் குருவினால் பார்க்கப்பட்டால் நல்லசித்தமுள்ளவனாக விருப்பான். 4ல் குருவோ, மற்றுமுள்ள சுபக்கிரஹமோ இருந்தாலும். 4 மிடம்

சுபக்கிரஹங்களின் நடுவிலிருந்தாலும் புதனுடன் கூடினுலும் ஸுக முள்ளவனுகவும், எல்லா ஜனங்களுக்கும் தலைவனுகவு மிருப்பான்.

सौम्येतरान्विते सौख्ये बलहीने गुरावपि ।
सपापे दुर्बले नाथे दुःखी स्यादर्थसंयुतः ॥ ६६ ॥

துக்கமுள்ளவனுயும், பணமுள்ளவனுயுமிருத்தல்.—(66) 4 மிடத்தில் பாபக்கிரஹங்களிருந்து, குருவும் பலமற்றவனுகவாகி, 4க் குடையவன் பலமற்றவனுய் பாபக்கிரஹங்களுடன் கூடுவானுல் துக்கமுள்ளவனுகவும், பணமுள்ளவனுகவு மிருப்பான்.

स्वकीयस्वांशके स्वोच्चे सुखस्थानाधिपे स्थिते ।
सुखी वाहनवृद्धिस्स्यात् शङ्खभेर्यादिवाद्यभाक् ॥ ६७ ॥

सुखे मन्दे रवियुते चन्द्रे भाग्यं गते यदि ।
लाभस्थानं गते भौमे गोमहिष्यादिलाभवान् ॥ ६८ ॥

வாஹனுதிலாப யோகம்.—(67) 4க் குடையவன் தனது ராசியிலோ, தனது நவாம்சத்திலோ, தனது உச்சவீட்டிலோ இருந்தால் சுகமுள்ளவனுகவும், வாஹனப் பெருக்குள்ளவனுகவும், சங்கம், பேரீ முதலிய வாத்தியங்களை யடைந்தவனுகவுமாவான். (68) 4ல் சனி சூரியனுடன் கூடியிருந்து, சந்திரன் 9 லிருந்து, அங்காரகன் 11 லிருந்தால் பசு, எருமை முதலியவற்றின் லாபத்தைப் பெறுவான்.

तुङ्गराशिं समाश्रित्य सौम्यशुक्रौ तथैव च ।
विंशषड्विंशजे प्राप्ते नरवाहनभाक् भवेत् ॥ ६९ ॥

वाहने रविसंयुक्ते स्वोच्चे तादृशनायके ।
युक्ते शुक्रेण संदृष्टे द्वात्रिंशे वाहनं लभेत् ॥ ७० ॥

कर्मेशेन युते बन्धुनाथे तुङ्गांशसंयुते ।
द्विचत्वारिंशके प्राप्ते नरवाहनलाभभाक् ॥ ७१ ॥

लाभेशे सुखराशिस्थे सुखेशे लाभसंयुते ।
द्वादशे वत्सरे प्राप्ते नरवाहनलाभभाक् ॥ ७२ ॥

सुस्थौ सुखेशभृगुजौ तनुबन्धुयुक्तावान्दोलिकां जनपदेश्वरतां विधत्ते ।
स्वर्णाद्यनर्घमणिभूषणपट्टशय्याकामोपभोगकरणानि च गोगजाश्वान् ॥७३॥

நரவாஹன யோகம்.—(69) புதன், சுக்கிரன் இவர்கள் தத் தமது உச்சராசியிலிருந்தால் முறையே 20, 26-வது வயதுகளில் நரவாஹன (பல்லக்கை) த்தை யடைந்தவனாக வாவான். (70) 4 மிடத்தில் ஸூரியனும், 4க்குடையவன் தனது உச்சவீட்டிலு மிருந்து அவர்கள் சுக்கிரனுடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தால் 32-வது வயதில் வாஹனத்தை அடைவான். (71) 4க் குடையவன் 10க் குடையவனுடன் கூடி உச்சாம்சத்திலிருந் தால் 42-வது வயதில் நரவாஹனத்தை யடைவான். (72) 11க் குடையவன் 4லும், 4க் குடையவன் 11லு மிருந்தால் 12-வது வயதில் நரவாஹனத்தை யடைவான். (73) 4க் குடையவனும், சுக்கிரனும் பலம்பெற்று லக்கினம், 4 மிடம் இவற்றிலிருந்தால் பல்லக்கையும், ஜனபதத்திற்கு அரசனாயிருத்தலையும், சுவர்ணம் முதலிய ரத்தினபூஷணம், பட்டுப்படுக்கை, காமானுபவத்திற்கு (ஸ்ரீ போகத்திற்கு) த்தேவையான ஸாதனங்கள் இவற்றையும், பசு, யானை, குதிரை முதலியவற்றையும் செய்கின்றது.

लग्नवाहनभाग्येशाः कर्मपेन समन्विताः ।
अन्योन्यं बलवन्तश्चेत्तदा देशाधिपो भवेत् ॥ ७४ ॥

तत्र चन्द्रसमायोगे शुक्रयुक्ते विशेषतः ।
आन्दोलिकापदप्राप्तिः राजराजाधिपो भवेत् ॥ ७५ ॥
गुरुणा तत्र संयुक्ते सम्राट् स्यात्सर्वधार्मिकः ॥

शुभेशे लग्नस्थे गृहपयुतदृष्टे च गुरुणा
विलग्ने चाढ्यो वा बहुनृपतिपूज्यो नरपतिः ।
सुखं पश्यन्तौ वा सुखनवमनाथौ भवगतौ
बलाढ्यो राजावा सुखपशुभयुक्ते नवमपे ॥ ७६ ॥

लग्नेशे सुखगेऽथवा सुखपतौ लग्ने यदा संभवेत्
लग्नेशो वा स्वपदस्थे तनुयुजि खपतौ वाहने वा शुभाढ्ये ।
इत्थं भाग्यविनायके भवयुते कर्मेतु वा संस्थिते
भाग्येशेऽथ विलग्नपे यदि भवेल्लग्ने चतुर्थे तु वा ॥ ७७ ॥*

---

* இந்த 77-வது சுலோகம் சுலோக முறைக்குமாறாக விருப்ப தாய்க் காணப்படினும் கிடைத்த பாடத்திற்குத்தக்கபடி ஒருவாறு உரை எழுதப்பட்டிருக்கிறது.

देशानामधिपो महानिधिपतिः स्याच्चक्रवर्ती नृपो
धर्मिष्ठो बहुराजवन्दितपदः स्यात्सागरान्ते विभुः ।
सेनामत्ततुरङ्गदन्तिसहितस्सत्पुत्रदारान्वितो
देवब्राह्मणपालकोऽतिसुभगस्त्यागी सुखी कीर्तिमान् ॥ ७८ ॥

தேசாதிபதியாகாவாகும் யோகம்.—(74) லக்கினாதிபன் 4, 9க் குடையவன் இவர்கள் 10க் குடையவனுடன் கூடினவர்களாய்க் கொண்டு ஒருவருக்கொருவர் பலம்பெற்றவர்களாக விருப்பார் களானால் அப்பொழுது பிறந்தவன் தேசாதிபதியாக விருப்பான். (75) முற்கூறியயோகத்திலேயே சந்திரனுடனே சுக்கிரனுடனே சேர்க்கை இருக்குமானால் விசேஷமாய் பல்லாக்கின் லாபமும், சக்கிரவர்த்தியாயிருத்தலு முண்டாகும். முற்கூறியயோகத்தில் குருவுடன் சேர்க்கை இருக்குமானால் சக்கிரவர்த்தியாகவும், எல்லாதர்மங்களையும் செய்பவனாகவு மிருப்பான். (76) 9க் குடையவன் 4க் குடையவனுடன் கூடியோ, அவனால் பார்க்கப்பட்டோ லக்கினத்திலிருந்தாலும், அல்லது குருவினால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ லக்கினத்திலிருந்தாலும் பணக்காரனாகவும், அநேகம் அரசர்களால் பூஜிக்கத்தகுந்த அரசனாகவு மாவான். 4, 9க் குடையவர்கள் 4 மிடத்தைப் பார்த்தாலும், 11 மிடத்திலிருந்தாலும், 9க் குடையவன் 4க் குடையவன், சுபக்கிரஹம் இவற்றுடன் கூடினாலும் பலம்பொருந்திய ராஜனாகவாவான். (77, 78) லக்கினாதிபதி 4 மிடத்திலோ, 4க் குடையவன் லக்கினத்திலோ இருந்தாலும், லக்கினாதிபதி 10 மித்திலோ, 10க் குடையவன் லக்கினத்திலோ இருந்தாலும், 4 மிடம் சுபக்கிரஹங்களுடன் கூடி இருந்தாலும், இவ்விதமே 9க் குடையவன் 11 மிடத்திலோ, 10 மிடத்திலோ இருந்தாலும், லக்கினாதிபன், 9க் குடையவன் இவர்கள் லக்கினத்திலோ 4 மிடத்திலோ இருந்தாலும் அச்சமயம் பிறந்தவன் பலதேசத்திற்கு அதிபதியாகவும், நிதிகளுக்கு யஜமானனாகவும், சக்கிரவர்த்தியாகவும், தர்மத்தில் பற்றுள்ளவனாகவும், அநேகம் அரசர்களால் வணங்கப்பட்ட சரணத்தை யுடையவனாகவும், சமுத்திரத்தை எல்லையாகவுடைய பூமிக்கு அதிபதியாகவும், ஸைன்யங்கள், மதம்கொண்ட குதிரை, யானை இவற்றுடன் கூடினவனாகவும், நல்லபிள்ளை நல்லகளத்திரம்

இவற்றுடன் கூடினவனாகவும், தேவர்கள், பிராம்மணர்கள் இவர்களை காப்பவனாகவும், மிகவும் அழகு பொருந்தியவனாகவும், கொடையாளியாகவும், ஸுகமுள்ளவனாகவும் நற்கீர்த்தியுடன் கூடியவனாகவு மிருப்பான்.

दुःस्थे विमूढे यदि वाहनेशे भाग्येश्वरेणाप्यसमीक्षिते वा।
दुर्वाहनश्चञ्चलवाहनो वा नीचारिदुःस्थानपसंयुते वा ॥ ७९ ॥

வாஹன விஷயமான குறைவின் யோகம்.—(79) 4க் குடையவன் 6,8,12மிடத்திலோ, அஸ்தங்கதனாகவோ இருந்து பாக்யாதிபதியாலும் பார்க்கப்படாமலிருந்தால் கெட்ட வாஹனங்களை யுடையவனாகவோ, ஸ்திரமற்ற வாஹனங்களை யுடையவனாகவோ இருப்பான். 4க் குடையவன், நீசக்கிரஹம், சத்துருக் கிரஹம், 6, 8, 12க்குடையவன் இவர்களுடன் கூடினாலும் முற்கூறிய பலனே யுண்டாகும்.

सुखेशे केन्द्रभावस्थे चन्द्रे केन्द्रे स्थिते भृगौ ।
शशिजे स्वोच्चराशिस्थे विद्वान्पण्डित एव सः ॥ ८० ॥

பண்டிதனாகும் யோகம்.—(80) 4க் குடையவனும், சந்திரன், சுக்கிரன் இவர்களும் கேந்திரத்திலிருந்து, புதன் தனது உச்ச ராசியிலுமிருந்தால் அச்சமயம் பிறந்த ஜாதகன் வித்வானாகவும், பண்டிதனாகவு மிருப்பான்.

बन्धुस्थानेश्वरे सौम्ये सौम्यग्रहनिरीक्षिते ।
तत्कारके बलाढये वा बन्धुपूज्यो भवेन्नरः ॥ ८१ ॥

பந்து பூஜ்யனாகும் யோகம்.—(81) 4க் குடையவன் சுபனாகவாகி சுபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டாலும், 4ம் பாவகாரகன் பலம் பெற்றிருந்தாலும் பந்துக்களால் பூஜிக்கத்தக்கவனாகவாவான்.

बन्धुस्थानगते जीवे तदीशे शुभसंयुते ।
गुरुदृष्टिसमायुक्ते बन्धुश्रेष्ठो भवेन्नरः ॥ ८२ ॥

பந்து வர்க்கங்களுள் சிறந்தவனாகுதல்—(82) 4ல் குருவிருந்து 4க் குடையவன் சுபக்கிரஹத்துடன் கூடியிருந்து குருவினாலும் பார்க்கப்பட்டால் பந்துக்களுள் சிறந்தவனாவான்.

बन्धूपकर्ता तन्नाथे केन्द्रकोणेऽथ संयुते ।
वैशेषिकांशसंयुक्ते पापदृग्योगवर्जिते ॥ ८३ ॥

बन्धूनामुपकारी स्यात् बन्धौ गुर्वच्छसोमजाः ।
तेषां गृहे वा तैर्दृष्टे मृद्वंशादिसमन्विते ॥ ८४ ॥

பந்துக்களுக்கு உபகாரியாகவாகுதல்.—(83) 4க் குடையவன் பாபர்களால் பார்க்கப்படாமல் கேந்திரத்திலோ, 1, 5, 9 மிடத்திலோ வைசேஷிகாம்சம் பெற்றிருந்தால் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனாக விருப்பான். (84) 4 மிடத்தில் குரு, சுக்கிரன், புதன் இவர்களிருந்தாலும், குரு, சுக்கிரன், புதன் இவர்களின் வீட்டை இவர்களே பார்த்தாலும், அல்லது இவர்கள் மிருத்வம்சாதிகளிலிருந்தாலும் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனாக விருப்பான்.

बन्धुभिस्त्यक्तपुरुषो तदीशे पापसंयुते ।
पापक्षेत्रगते वापि नीचारातिगतेऽपि वा ॥ ८५ ॥

பந்துக்களால் விடப்படல்.—(85) 4க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடினாலும். பாபர்களின் வீட்டிலிருந்தாலும், நீசவீடு, சத்துரு வீடு, இவற்றிலிருந்தாலும் பந்துக்களால் விடப்படுவான்.

बहुपापसमायुक्ते बन्धौ नाथे तथैव हि ।
तत्कारके तथैवात्र बन्धूनां कुत्सितो भवेत् ॥ ८६ ॥

பந்துக்களால் நிந்திக்கப்படுதல்.—(86) 4 மிடமோ, 4 மிடத்ததிபனோ, 4ம் பாவகாரகனோ அனேகம் பாபக்கிரஹங்களுடன் கூடி இருந்தால் பந்துக்களால் நிந்திக்கப்பட்டவனுயாவான்.

बन्धुद्वेषी भवेन्नित्यं पापाक्रान्तं गृहं यदा ।
नीचास्तखेटसंयुक्तं शुभदृग्योगवर्जितम् ॥ ८७ ॥

பந்துத்வேஷியா யாகுதல்.—(87) 4 மிடம் பாபக்கிரஹங்களுடன் கூடியதாகவோ, நீசராசியை யடைந்த கிரஹம், அஸ்தங்கதமான கிரஹம் இவற்றுடன் கூடியதாகவோ இருந்து சுபக்கிரஹத்தின் பார்வையற்றதாகவு மாகுமாஞல் பந்துக்களை த்வேஷிப்பவனுயாவான்.

सामन्तगेहं हिबुकस्य रि:फे द्वितीयराशेस्तु समानरूपम् ।
तस्मिन्गुरौ सौख्यतरं वरिष्ठं विशालगेहं धनधान्ययुक्तम् ॥ ८८ ॥

धनान्वितस्सौख्ययुतस्सुविद्वान् शुक्रे बुधे पूर्णशशाङ्कयुक्ते ।
क्षीणे शशाङ्के त्वथ पापयुक्ते दारिद्र्ययुक्तस्स नरो विदार: ॥ ८९ ॥

कुजे स्थिते तत्स्थितभामिनी स्याद्धनेन हीना कुलटातिदुष्टा ।
पुंस्त्रीविभागग्रहयोगमूलात्प्राबल्ययोगाद्गृहनायकत्वम् ॥ ९० ॥

अपुत्रपुत्रग्रहसंभवत्वं वृक्षादिकं कूपजलादियुक्तम् ।
पापद्वयं तत्र समन्वितं चेत् सामन्तगेहं प्रवदन्ति शून्यम् ॥
द्वन्द्वर्क्षराशिर्यदि तत्रसंस्थ: पार्श्वे च वीधिं प्रवदन्ति सन्त: ॥ ९१ ॥

योराशिर्गृहभावस्स्यात्तस्मादभिमुखं मदम् ।
तस्य पार्श्वद्वयं तद्वदिति सामन्तलक्षणम् ॥ ९२ ॥

ஸாமந்தகேஹத்தைக்கொண்டு காணவேண்டிய பலன்கள்.—(88) 4 மிடத்திற்கு ஸாமந்தகேஹமானது (9,11 மிடமானது)* 12 மிடத்திற்கு 2 மிடமான லக்கினத்திற்கு ஸமானமாயுள்ளது. அதாவது:—லக்கினத்தில் கிரஹஸ்திதி மூலம் எந்தப் பலன்கள் சொல்லப்பட்டனவோ அவற்றை இங்கும் கண்டுகொள்ளவேண்டும். அந்த ஸாமந்தகேஹத்தில் குருவிருந்தால் ஸௌகம் நிறைந்ததாயும், சிறந்ததாயும், தனம் தான்யம் இவற்றுடன் கூடியதாயுமிருக்கின்ற விசாலமான வீட்டை உபதேசிக்கின்றனர். (89) அந்த ஸாமந்த கிருஹத்தில் சுக்கிரனே, புதனே பூர்ணசந்திரனுடன் கூடி இருந்தால் தன முள்ளவனும், சவுக்கிய முள்ளவனும், நன்ருய்ப் படித்தவனுயுமிருப்பான். க்ஷீணசந்திரன் பாபக்கிரஹத்துடன் கூடி ஸாமந்த வீட்டிலிருந்தால் தாரித்ரியத்துடன் கூடியவனுகவும், பார்யையற்றவனுகவு மிருப்பான். (90) அந்த ஸாமந்த கிருஹத்தில் செவ்வாயிருந்தால் அந்த ஜாதகனிடமுள்ள ஸ்திரீயானவள் ஏழையாகவும், வியபிசாரியாகவும், மிகவும் துஷ்டையாகவு மிருப்பாள். அந்த ஸாமந்த கிருஹத்திலிருக்கும்கிரஹங்களின் ஆண்பெண் பிரிவினையை அனுஸரித்தும், அவர்களின் பலாபலத்தை அனுஸரித்தும் வீட்டிற்கு யஜமானனே

* ஸாமந்தகேஹம் இன்னதென்று இனிவரும் 92-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

தீர்மானிக்கவேண்டும். அதாவது: புருஷக்கிரஹம் பலம்பெற்றிருந்தால் புருஷன் வீட்டிற்குநாயகன் என்றும், ஸ்திரீகிரஹம் பலம் பெற்றிருந்தால் ஸ்திரீ வீட்டிற்கு நாயகி என்றும் பகுத்தறிய வேண்டும். (91) ஸாமந்த கிருஹத்தில் புத்திரனைத்தரும் கிரஹம், புத்திர பிரதிபந்தகமான கிரஹம் இவர்களிருந்தால் கிணறு, குளம் முதலியவற்றுடன் கூடின மரம் முதலியவற்றைச் சொல்ல வேண்டும். ஸாமந்த கேஹத்தில் 2 பாபக்கிரஹமிருந்தால் ஸாமந்த கேஹமூல முண்டாகின்ற பலன் எதுவுமில்லை என்கின்றனர். ஸாமந்தகேஹமாக உபயராசி ஆகுமானால் அவற்றின் இருபுறத்திலுமுள்ள ராசியை வீதி என்கின்றனர். (92) எந்தராசி 4 மிடமாக அமைந்துள்ளதோ அதற்கு நேர் 7 மிடம் மதம் எனப்படும். அந்த மதம் என்ற ராசியின் இருபுரத்திலுமிருக்கும் ராசியானது ஸாமந்தம் எனப்படும். அதாவது: லக்கினத்தினின்றும் 9, 11 மிடங்கள் ஸாமந்தம் எனப்படும் என்று கூறியதாய் ஏற்படுகின்றது.

चतुर्थे शुभसंयुक्ते तदीशे बलसंयुते ।
उच्चादिवर्गसंयुक्ते सर्वप्राकारमण्डितम् ॥ ९३ ॥

हर्म्यचित्रसमायुक्तं मण्डितं गृहमादिशेत् ।
नानालङ्कारसंयुक्तं शुभशोभनसंयुतम् ॥ ९४ ॥

ஜாதகனின் கிருஹ மித்தகையதாக விருக்கும் என்பது:—
(93–94) 4 மிடம் சுபக்கிரஹத்துடன் கூடினதாயும், 4க் குடையவன் பலம் பெற்றவனுயு மிருந்து உச்சம் முதலிய வர்க்கத்திலுமிருந்தால் நான்கு புரத்திலும் மதில்சுவரினல் அலங்கரிக்கப்பட்டதாயும், மாடி, சித்திரம் இவற்றுடன் கூடியதாயும், பலவிதமான அலங்காரத்துடன் கூடியதாயும், மங்களத்துடன் கூடியதாயுமிருக்கின்ற கிருஹத்தை உபதேசிக்க வேண்டும்.

जीवे गाढं सदनसहितं श्लक्ष्णविस्तारयुक्तं
शुक्रे तद्वद्बलिबुधयुते रम्यचित्रादियुक्तम् ।
मध्ये श्वभ्रं क्रमिशतयुतं राहुयुक्ते कुजे वा
प्यन्यं ह्रस्वं बहुबलयुतं केतुयुक्ते कवाटम् ॥ ९५ ॥

गेहे चन्द्रार्कवशात: कृमिमिश्रकवाटकम् ।
कुजश्चेत् श्वभ्रसंयुक्तं राहुश्चेत् कृमिबाधितम् ॥ ९६ ॥

गुरुश्चेद्दार्ढ्यसंयुक्त मेककाण्डेन संयुतम् ।
शुक्रश्चेद्दार्ढ्यसंयुक्तं ज्ञश्चेच्चित्रसमन्वितम् ॥ ९७ ॥

एवं लग्नवशाच्चिन्त्यं चतुर्थेश वशादपि ।
गुलिकश्चेत्कवाटस्य केतुवत्फलमादिशेत् ॥ ९८ ॥

வீட்டின் கதவு இத்தகையதாக விருக்கும் என்பது —(95) 4 மிடத்தில் குருவோ, சுக்கிரனோ இருந்தால் வீட்டின் கதவைக் கெட்டியாயும், வழவழப்பு, அகலம் இவற்றுடன் கூடியதாயும், பலம்பெற்ற புதனிருந்தால் அழகிய சித்திரம் முதலியவற்றுடன் கூடின தாயும், ராஹுவிருந்தால் மத்தியில் அனேகம் புழுக்க ளால் நிறைந்த பொந்துகளுடன் கூடியதாயுமுபதேசிக்கின்றனர். 4 மிடத்தில் செவ்வாயிருந்தால் வீட்டின் கதவு புதிதாயும், சிறி தாயு மிருக்கும். கேதுவிருந்தால் அதிகம் பலம் பொருந்தியதாக விருக்கும். (96) 4 மிடத்தில் சந்திரன், ஸூரியன் இவர்களிருந் தால் புழுக்களடர்ந்த கதவையும், செவ்வாயிருந்தால் பொந்துக ளுள்ள கதவையும், ராஹு விருந்தால் புழுக்களால் அரிக்கப் பட்ட கதவையும் (கரையான் பிடித்த கதவையும்) உபதேசிக்கின் றனர். (97) 4ல் குருவிருந்தால் வீட்டின் கதவு பலம் பொருந் தியதாயும், ஒத்தப்பலகையுடன் கூடியதாயுமிருக்கும். சுக்கிர னிருந்தாலும் திருடமாகவே இருக்கும். புதனிருந்தால் சித்தி ரத்துடன் கூடியதாக விருக்கும். (98) இவ்விதம் லக்கினத்தை யும், 4மிடத்தையும் கொண்டு பலன்களைக் கண்டுகொள்ள வேண் டும். 4ல் குளிகனிருந்தால் வீட்டின் கதவை கேதுவிருக்கும் பொழுது சொல்லியபடி கண்டுகொள்ள வேண்டும். அதாவது: வீட்டின் கதவு நன்றாய்ப் பலம் பொருந்தியதாக விருக்கும்.

सप्तमे शुभसंप्राप्ते दक्षिणे चालयं वदेत् ।
एकादशे द्वादशे च वामे देवालयं विदु: ॥ ९९ ॥

ஜாதகனின் கிருஹத்திற்கு எந்தப் புரத்தில் கோயிலிருக்கும் என்பது.—(99) 7ல் சுபக்கிரஹமிருந்தால் ஜாதகனின் வீட்டிர்க்கு

வலது பக்கத்திலும், 11, 12 மிடத்தில் சுபக்கிரஹமிருந்தால் இடது பக்கத்திலும் கோயிலை உபதேசிக்க வேண்டும்.

**जले चतुर्थे हिबुके च सूर्ये रि:फारिरन्ध्राधिपसंयुते सति ।**
**दशाविपाकेषु च कूर्मदर्शनं स्थिरं भवेदत्र उलूकपक्षिण: ॥ १०० ॥**

வீட்டில் ஆமை, கோட்டான் இவை பிரவேசித்தல்.—(100) 4 மிடம் ஜலராசியாகவாகி அதில் ஸூரியனிருந்து அவன் 6, 8, 12 மிடத்ததிபருடனும் கூடுவானானல் அவனது தசாபுக்தி காலங்களில் ஆமை கோட்டான் இவற்றின் தர்சனமானது நிச்சயமாய் வீட்டிலுண்டாகும்.

**चतुष्पदे राहुयुते तथैव जम्बूवराहादिशशादिभिर्युतम् ।**
**पापद्वयं चेत् हिबुके तथा स्याद्दशाविपाकादिषु तत्प्रवर्तते ॥ १०१ ॥**

நரி, பன்றி, முயல் இவற்றை வீட்டில் காணல்.—(101) நாற்காலுள்ள ராசி 4மிடமாகவாகி அங்கு ராஹுவிருந்தாலும், அல்லது வேறு இரண்டு பாபக்கிரஹ மிருந்தாலும் அவர்களின் தசா புக்தி காலங்களில் வீட்டில் நரி, பன்றி, முயல் இவற்றின் சேர்க்கை யுண்டாகும்.

**नीचारिपैर्वा व्ययषष्टपैर्वा दृष्टे गृहे तद्गृहमन्यदीयम् ।**
**स्वोच्चे तु वा स्वर्क्षसमन्विते वा मित्रादिवर्गेऽपि स्वकं गृहं स्यात् ॥**

ஜாதகனுக்கு சொந்த கிரஹமுண்டா, இல்லையா என்பது.—(102) நீச ராசிக்கோ, சத்துரு ராசிக்கோ, 12, 6 மிடத்திற்கோ அதிபர்களால் 4 மிடம் பார்க்கப்பட்டால் ஜாதகன் பிறர் வீட்டில் வஸிப்பவனுயாவான். 4க் குடையவன் தனது உச்சராசியிலோ, சொந்தவீட்டிலோ, மித்திராதி வர்க்கத்திலோ இருந்தால் ஜாதகனுக்கு சொந்தமான கிருஹமுண்டு.

**स्वर्क्षे जीवे मधुरपनसा न्कादलीं चाम्रवृक्षान्**
**शुक्रे पुष्पद्रुममथ बुधे वन्ध्यवृक्षान्करोति ।**
**चन्द्रे क्षीणे हिबुकसहिते नालिकेरादिवृक्षान्**
**भौमे कन्दद्रुमफलयुतान्सूर्यजे निम्बवृक्षान् ॥ १०२ ॥**
**एवं चांबुनि संस्थिते दिनकरे चात्युच्चकान्शाल्मलान्**
**राहुश्चेद्बलवान् शिखी गरलदांश्चित्रांश्च तान्पादपान् ।**

एवं कारकभावयुक्तखगणान्संचिन्त्य बुद्ध्या सुधीः
सामीप्ये जलसंभवं दृढगृहं सौख्यं पशून्वाहनम् ॥ १०४ ॥
ऊर्ध्वाधस्समभेदेन फलमप्यूह्यतां बुधैः ।
उच्चादिनीचवर्गाच्च तद्वत् शीर्षोदयादिभिः ॥ १०५ ॥

ஜாதகனுக்கு இன்னின்ன மரங்களிருக்குமென்பது—(103) குரு தனது சொந்தவீடான 4 மிடத்திலிருந்தால் தேன்பிலா, வாழை, மா, இம்மரங்களைக் கொடுப்பான். சுக்கிரனவ்விதமிருந்தால் புஷ்பப்பிரதானமான வகுளம் (மொகுழம்பூ) முதலிய விருக்ஷங்களைக்கொடுப்பான். புதனவ்விதமிருந்தால் எவ்விதப்பிரயோஜனமுமற்ற விருக்ஷங்களைக் கொடுப்பான். கிருஷ்ணபக்ஷத்திய சந்திரன் 4 மிடத்திலிருந்தால் தென்னை முதலிய மரங்களைக் கொடுப்பான். செவ்வாயிருந்தால் கிழங்கு, பழம் இவற்றுடன் கூடிய மரங்களைக் கொடுக்கிறான். சனி அவ்விதமிருந்தால் வேப்ப மரங்களைக் கொடுப்பான். (104) 4மிடத்தில் ஸூரியனிருந்தால் மிகவுமுயரமான எலவமரங்களையும், ராஹுவோ, கேதுவோ 4 மிடத்தில் பலம் பொருந்தி இருந்தால் விஷத்தைக் கொடுக்கின்ற பலவிதமான மரங்களையும் கொடுக்கின்றனர். இவ்விதம் காரகன், பாவத்திலிருக்கும் கிரஹங்கள் இவர்களை புத்தியால் நன்கு ஆராய்ந்து பார்த்து வீட்டிற்கு ஸமீபத்தில் ஜலமிருத்தலையும், கெட்டியான வீட்டையும், ஸௌக்கியத்தையும், பசுக்களையும், வாஹனத்தையும் கண்டு கொள்ளவேண்டும். (105) பாவாதிபதி, பாவகாரகன் முதலிய கிரஹங்கள் உச்சவர்க்கம், நீசவர்க்கம், சீர்ஷோதயாதிராசி இவற்றிலிருப்பதன்மூலம் பலத்திலும் மேன்மை, தாழ்மை நடுநிலை இவற்றைக்கண்டுகொள்ள வேண்டும்.

लग्नेश्वरे लग्नगते सुखेऽङ्गनाथेन युक्ते यदि गेहलाभः ।
अयत्नतस्स्याच्छुभदृष्टियोगात्स्वोच्चे स्वमित्रे स्वगृहे बलाढ्ये ॥ १०६ ॥
गेहाधिपे केन्द्रगते बलाढ्ये सौम्येक्षिते मन्दिरलाभमाहुः ।
वैशेषिकांशे परमोच्चभागे गेहेश्वरे मन्दिरलाभमाहुः ॥ १०७ ॥

गृहस्थानाधिपस्थांशनाथसंयुक्तराशिपः ।
तदंशाधिपतौ केन्द्रे गृहलाभमुदीरयेत् ॥ १०८ ॥

கிருஹலாப யோகம். — (106) லக்கினாதிபதி லக்கினத்தி

விருந்தாலும், 4 மிடத்தில் லக்கிஞதிபதி இருந்தாலும் வீட்டின் லாபமுண்டாகும். 4க் குடையவன் தனது மித்திரன் வீட்டிலோ, உச்சவீட்டிலோ, சொந்தவீட்டிலோ பலம்பெற்றிருந்து சுபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டால் சிரமமின்றியே கிரஹலாபமுண்டாகும். (107) 4க்குடையவன் கேந்திரத்திலிருந்து பலம்பெற்று சுபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டால் வீட்டின் லாபமுண்டாகும் என்கின்றனர். இவ்விதமே 4க் குடையவன் வைசேஷிகாம்சத்திலோ, பரமோச்சபாகத்திலோ இருந்தாலும் வீட்டின் லாபத்தை உபதேசிக்கின்றனர். (108) 4க் குடையவனிருக்கும் நவம்சாதிபன் எந்தராசியிலிருக்கின்ருனே அதற்கதிபனிருக்கும் நவாம்சாதிபன் கேந்திரத்திலிருந்தால் வீட்டின் லாபத்தைச் சொல்லவேண்டும்.

गेहाधिपे नाशगते यदि स्यात् पापेक्षिते तद्गृहनाशमत्र ।
गेहेशसंयुक्तनवांशनाथे नाशस्थिते स्यादपि गेहनाशः ॥ १०९ ॥

கிருஹநாச முண்டாகும் யோகம்.—(109) 4க் குடையவன் பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டு 8மிடத்திலிருந்தால் வீட்டிற்கு நாசமுண்டாகும். 4க் குடையவனிருக்கும் நவாம்சநாதன் 8 மிடத்திலிருந்தாலும் வீட்டின் நாசமுண்டாகும்.

गृहस्थाने चरे लग्ने तदीशे चरराशिगे ।
तथैव तत्कारकेऽपि बहुस्थाने गृहं भवेत् ॥ ११० ॥

அநேகவிடங்களில் கிருஹலாபமுண்டாகும் யோகம்.—(110) 4மிடம் சரராசியாகவிருந்து அதனதிபனும் சரராசியிலிருந்து காரகனு மவ்விதமிருந்தால் பலவிடங்களில் கிருஹலாபமுண்டாகும்.

अर्थव्ययगृहेशात्तु यावन्तः पापसंयुताः ।
तावद्गेहादिनाशः स्याच्छुभदृष्टा न दोषदाः ॥ १११ ॥

இவ்வளவு வீட்டிற்கு நாசமுண்டாகும் என்பது—(111) 2, 12, 4 மிடத்ததிபர்களுள் எவ்வளவு கிரஹங்கள் பாபர்களுடன் கூடி இருக்கின்றனரோ அவ்வளவு கிரஹங்களுக்கு நாசமுண்டாகும். ஆனல் அவர்கள் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் கெடுதலைச் செய்யமாட்டார்கள்.

अर्थव्ययगृहेशास्तु केन्द्रकोणादिसंयुताः ।
तावद्गेहालयं सर्वं शोभनं तत्र निर्दिशेत् ॥ ११२ ॥

இவ்வளவு வீட்டிற்கு நன்மையுண்டாகும் என்பது.—(112) 2, 12, 4 மிடத்ததிபர்களுள் (எவ்வளவு) கிரஹங்கள் கேந்திரம், 1, 5, 9 மிடம் இவற்றிலிருக்கின்றனரோ அவ்வளவு எண்ணுள்ள வீடுகளுக்கு நன்மையுண்டாகும் என்று உபதேசிக்கவேண்டும்.

नीचान्विते मूढयुते सुखस्थे सपत्नभे वा जलराशिसंज्ञे ।
तदीश्वरे हीनबले तदानीं पतत्यसौ कूपतटाम्बुराशौ ॥ ११३ ॥

सरित्स्थानाधिपे लग्ननाथेन सहिते सुखे ।
कर्माधिपेन संदृष्टे नदीकूपतटादिषु ॥ ११४ ॥

पतनं कूपनद्यादौ सुखेशस्थानराशिपः ।
सरित्स्थाने सुसंदृष्टो यदि वा सुखपेन युक् ॥ ११५ ॥

ஜலகண்ட யோகம்.—(113) ஜலராசி 4 மிடமாகவாகி அதனதிபன் நீசராசியிலோ, அஸ்தங்கதனுகவோ, சத்துருவீட்டிலோ, பலமற்றவனுகவோ இருந்தால் கிணறு, குளம், ஸமுத்திரம் முதலியவற்றில் விழுவான். (114) 4க் குடையவன் லக்கினதிபனுடன் கூடி 4 மிடத்திலிருந்து 10க் குடையவனுல் பார்க்கப் பட்டிருந்தால் ஆறு, கிணறு, குளம் முதலியவற்றில் விழுவான். (115) 4க் குடையவனிருக்கும் ராசியின் நாதன் 4மிடத்திலிந்து 4க் குடையவனுல் பார்க்கப் பட்டோ சேர்ந்தோ இருந்தால் கிணறு ஆறு முதலியவற்றில் விழுதலுண்டாகும்.

शिलाप्रहारस्तस्य स्याद्रविभौमान्विते सुखे ।
दृष्टे युते कर्मपेन सरित्स्थानाधिपेन वा ॥ ११६ ॥

सुखेशे राहुमन्दाभ्यां सहिते कुजवीक्षिते ।
शुभदृष्टिविहीने तु शिलाभिः पीडितो नरः ॥ ११७ ॥

கல்லினு லடிபடுதலுக்குரிய யோகம்.—(116) 4 மிடத்தில் சூரியன், செவ்வாய் இவர்களிருந்து 4க் குடையவனுலோ, 10க் குடையவனுலோ, பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் கல்லினு லடிபடுதலுண்டாகும். (117) 4க் குடையவன் ராஹு சனி இவர்களுடன் கூடியிருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டு,

சுபக்கிரஹத்தின் பார்வையையும் பெருமலிருந்தால் மனிதன் கல்வினல் பீடையை யடைவான்.

स्वतुङ्गसंस्थे हिबुकाधिनाथे स्वक्षेत्रभे मित्रगृहे स्थिते वा ।
शुभेन दृष्टे शुभसंयुते वा क्षेत्राभिवृद्धिं प्रवदेन्नराणाम् ॥ ११८ ॥

गृहेशे कर्मराशिस्थे कर्मेशे गेहमागते ।
बलयुक्ते धरासूनौ बहुक्षेत्रं विनिर्दिशेत् ॥ ११९ ॥

बलाढ्ये कर्मराशीशे बन्धुस्थानाधिपे तथा ।
तयोर्मैत्री यदा तस्य बहुक्षेत्रं विनिर्दिशेत् ॥ १२० ॥

क्षेत्राधिपे पञ्चमस्थे गोपुरांशादिसंयुते ।
मृदंशादिगते वापि बहुक्षेत्रसमन्वितः ॥ १२१ ॥

பூமிவிருத்தி யோகம்—(118) 4க் குடையவன் தனது உச்ச வீட்டிலோ, சொந்த வீட்டிலோ, மித்திரன் வீட்டிலோ இருந்து அவன் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் பூமிவிருத்தியை மனிதர்கட்கு உபதேசிக்கவேண்டும். (119) 4க் குடையவன் 10 மிடத்திலும், 10க் குடையவன் 4மிடத்திலு மிருந்து செவ்வாயும் பலம் பெற்றிருந்தால் அதிகமான பூமியை உபதேசிக்க வேண்டும். (120) 4க் குடையவன் 10 மிடத்திற் குடையவன் இவர்கள் பலம் பெற்றிருந்து அவ்விருவருக்கும் மித்திரத்தன்மை இருக்குமானல் அதிகமான பூமியை உபதேசிக்க வேண்டும். (121) 4க் குடையவன் 5லிருந்தாலும், கோபுராம்சம், மிருத்வம்சம் முதலியவற்றிலிருந்தாலும் அதிகமான பூமியை யுடையவனுக விருப்பான்.

भ्रातृकारकसंयुक्ते भ्रातृनाथेन संयुते ।
क्षेत्रे तदीश्वरे वापि भ्रातृक्षेत्रं विनिर्दिशेत् ॥ १२२ ॥

क्षेत्रेशसंयुक्तनवांशनाथे केन्द्रस्थिते मित्रनिरीक्षिते वा ।
भौमान्विते भौमदृशा समेते भ्रातुर्धनं क्षेत्रमुदाहरन्ति ॥ १२३ ॥

ஸஹோதரனின் பூமி கிடைப்பதற்குரிய யோகம்.—(122) 4 மிடமோ, 4க் குடையவனே 3ம் பாவகாரகனுடனே, 3க் குடையவனுடனே சேர்ந்திருந்தால் ஸஹோதரனின் பூமி கிடைக்கும் என்று உபதேசிக்க வேண்டும். (123) 4க் குடையவனிருக்கும்

நவாம்சநாதன் கேந்திரத்திலிருந்து மித்திரக் கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், அல்லது செவ்வாயினுல் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தாலும் ஸஹோதரனின் தனம், பூமி இவற்றின் லாபத்தை உபதேசிக்கின்றனர்.

लग्नेश्वरे क्षेत्रगते बलाढ्ये लग्ने बलिष्ठे यदि गेहनाथे ।
शुभग्रहैर्दृष्टसमन्विते वा क्षेत्रं स्वकीयेन बलेन याति ॥ १२४ ॥

ஸ்வப்ரயத்தினத்தால் பூமிலாபமுண்டாகும் யோகம்.—(124) லக்கினுதிபன் பலம் பெற்று 4 மிடத்திலும், 4க் குடையவன் பலம் பெற்று லக்கினத்திலு மிருந்தாலும், சுபக் கிரஹங்களால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தாலும் தன் முயர்ச்சியால் பூமியைச் சம்பாதிப்பான்.

कलत्रकारके क्षेत्रे तदीशे वा कलत्रगे ।
तदीशयोस्तथा मैत्र्यां कलत्रात्क्षेत्रमादिशेत् ॥ १२५ ॥

பார்யை மூலம் பூமிலாப முண்டாகும் யோகம்.—(125) களத்திர காரகனுன சுக்கிரன் 4 மிடத்திலிருந்தாலும், அல்லது 4க் குடையவன் 7 மிடத்திலிருந்தாலும், அல்லது 4, 7க் குடையவர்களுக்கு மித்திரத் தன்மை இருந்தாலும் களத்திர மூலம் பூலாபத்தை உபதேசிக்க வேண்டும்.

षष्ठेश्वरे क्षेत्रगते बलाढ्ये षष्ठस्थिते वा गृहभावनाथे ।
षष्ठेश्वरात्क्षेत्रपतौ बलाढ्ये शत्रोस्सकाशात्स धरामुपैति ॥ १२६ ॥

சத்துரு மூலம் பூலாபமுண்டாகும் யோகம்.—(126) 6க் குடையவன் 4 மிடத்தில் பலம் பெற்றிருந்தாலும், 4க் குடையவன் 6மிடத்தில் பலம் பெற்றிருந்தாலும் 6க்குடையவனைக் காட்டிலும் 4க் குடையவன் அதிகம் பலம் பெற்றிருந்தாலும் ஜாதகன் சத்துருவினிடமிருந்து பூமியை அடைவான்.

पारावतांशे स्वगृहे बलाढ्ये क्षेत्रेश्वरे चोपचयं गते वा ।
आरोहभागे शुभदृष्टियुक्ते क्षेत्रे बहुत्वं समुदाहरन्ति ॥ १२७ ॥

அதிகம் பூமியுள்ளவனு யிருத்தல்.—(127) 4க் குடையவன் பாராவதம் என்ற அம்சத்திலோ, சொந்த வீட்டிலோ பலம் பெற்றிருந்தாலும், உபசயம் என்ற 3, 6, 10, 11 மிடங்களிலிருந்

தாலும், உச்சத்திற்கு ஏறும் பாகத்திலிருந்தாலும், சுபர்களின் திருஷ்டி பெற்றிருந்தாலும் பூமி அதிகமாக விருக்கும் என்று உபதேசிக்கின்றனர்.

**धनेशलाभेशसमन्विते वा क्षेत्रे तदीशेऽप्यथ कारके वा ।**
**वैशेषिकांशे शुभदृष्टियुक्ते बह्वर्थरूपं गृहमाहुरार्याः ॥ १२८ ॥**

கிருஹலாப யோகம்.—(128) 4 மிடமோ, 4க் குடையவனோ, 4ம் பாவகாரகனோ 2, 11, இவர்களுக் குடையவனுடன் கூடியோ, வைசேஷிகாம்சம் பெற்றோ இருந்து சுபதிருஷ்டி பெற்றிருந்தால் பெரியோர்கள் அநேகம் பொருளுடன் கூடிய வீட்டின் லாபத்தை யுபதேசிக்கின்றனர்.

**क्षेत्रेश्वरे नीचगते विमूढे पापान्तरे पापनिरीक्षिते वा ।**
**पापग्रहक्षेत्रगतेऽरिगेहे क्षेत्रादिनाशं कथयन्ति तज्ज्ञाः ॥ १२९ ॥**
**पापान्तरस्थे यदि भूमिपुत्रे पापान्विते पापनिरीक्षिते वा ।**
**पापग्रहक्षेत्रगतेऽथवा स्यात् क्रूरांशके भूमिविनाशमाहुः ॥ १३० ॥**
**क्रूरादिषष्ट्यंशगते तदीशे क्षेत्रे सपापे यदि नीचभे वा ।**
**दुःस्थेऽरिगेहेऽतिभीषणेवा क्षेत्रादिनाशं कथयन्ति तज्ज्ञाः ॥ १३१ ॥**
**क्षेत्रेश्वरे पापयुते धनस्थे नीचारिभे क्षेत्रविनाशमेति ।**
**स्वोच्चस्थिते तद्भवनेश्वरे तु पापान्विते विक्रयमेति भूमेः ॥ १३२ ॥**

பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும்யோகம்—(129) 4க் குடையவன் நீச ராசியை யடைந்தவனுகவோ, அஸ்தங்கதனுகவோ, பாபர்களின் மத்தியிலோ, பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்தாலும், அல்லது பாபக்கிரஹத்தின் வீட்டிலோ, சத்துரு வீட்டிலோ இருந்தாலும் பூமி முதலியவற்றிற்கு நாசத்தை உபதேசிக்கின்றனர். (130) செவ்வாய் பாபக் கிரஹங்களின் நடுவிலோ, பாபக் கிரஹத்துடன் சேர்ந்தோ, பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, பாபக்கிரஹத்தின் ராசியிலோ, குரூராம்சத்திலோ இருந்தால் பூமிக்கு நாசமுண்டாகும் என்கின்றனர். (131) 4 மிடம் பாபக் கிரஹங்களுடன் கூடி இருந்தாலும், 4க் குடையவன் குரூராதி ஷஷ்ட்யம்சத்திலோ, நீச வீட்டிலோ, 6, 8, 12 மிடத்திலோ, சத்துருவிட்டிலோ, யுத்தத்தில் தோல்விபெற்றோ

இருந்தாலும் பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (132) 4க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடி 2 மிடத்திலோ, நீச வீடு, சத்துருவீடு இவற்றிலோ இருந்தால் பூமிக்கு நாசமுண்டாகும். 4க் குடையவன் உச்சராசியிலிருந்து பாபக்கிரஹத்தின் சேர்க்கை பெற்றால் பூமி விற்கப்படும்.

ஸாராவளியிற் சொல்லிய 4-வது பந்துபாவ பலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 4வது பாவபலன்.

**गेहाधिनाथेन युते तु गेहे देहाधिपेनाऽपि गृहाभिलब्धिः।**
**युते षडादौ तु विपर्ययस्स्याद्गृहाधिपे देहपतौ च तद्वत्।**
**केन्द्रत्रिकोणे च शुभग्रहेण युते समीचीनगृहाभिलब्धिः ॥ १ ॥**

கிருஹலாபம், கிருஹநாசம் இவற்றின் யோகம்.—(1) 4 மிடமானது 4க் குடையவனாலோ லக்கினாதிபதியினாலோ கூடியிருந்தால் கிருஹ லாபமுண்டாகும். 4க் குடையவனோ, லக்கினாதிபதியோ 6, 8, 12 மிடத்திலிருந்தால் கிருஹநாச முண்டாகும். கேந்திரம், 1, 5, 9மிடம் இவற்றில் சுபக்கிரஹமிருந்தாலும் நல்ல வீட்டின் லாபமுண்டாகும்.

**क्षेत्रस्य चिन्तासदनाधिपेन जीवेन चिन्ता तु सुखस्य कार्या।**
**दिव्याङ्गनावाहनवस्त्रभूषाचिन्ता तु कार्या भृगुणा बुधेन्द्रैः ॥ २ ॥**
**तमश्शनिभ्यामभिचिन्त्यमायुरर्केण तातश्शशिनात्र माता।**
**बुधेन बुद्धिस्सदनर्क्षसंस्थां गतेन सप्तेशयुतेन च स्यात्।**
**केन्द्रत्रिकोणेषु गतेषु सप्त प्रपश्यतावापि स्वतुङ्गगेन ॥ ३ ॥**

இன்னின்னக்கிரஹங்களைக் கொண்டு இன்னின்ன பலன்களை ஆராயவேண்டும் என்பது.—(2, 3) 4க் குடையவனைக் கொண்டு பூமியையும், குருவைக்கொண்டு ஸுகத்தையும், சுக்கிரனைக் கொண்டு சிறந்த ஸ்திரீகள், வாஹனம், வஸ்திரம், அலங்காரம் இவற்றையும், ராஹு, சனி இவர்களைக் கொண்டு ஆயுளையும், சூரியனைக் கொண்டு தகப்பனையும், சந்திரனைக் கொண்டு தாயையும், புதனைக்கொண்டு புத்தியையும் ஆராயவேண்டும். 4 மிடத்திலிருக்கின்ற 7க் குடையவனுடன் கூடின கிரஹத்தாலும், கேந்திரம், 1, 5, 9மிடம் இவற்றிலிருக்கின்ற கிரஹங்களுள் எந்தக்

கிரஹம் 7மிடத்தைப் பார்க்கின்றதோ அந்தக் கிரஹத்தாலும், உச்ச வீட்டையடைந்த கிரஹத்தாலும் புத்தியை ஆராய வேண்டும்.

स्वकीयस्वांशगे स्वोच्चे सुखस्थानस्थितो यदि ।
सुखवाहनवृद्धिस्स्याच्छंखभेर्यादिवाद्ययुक् ॥ ४ ॥

ஸுகம், வாஹனம் இவற்றின் விருத்தி ஏற்படுதல்.—(4) 4மிடத்திலிருக்கும் கிரஹமானது தனது சொந்தவீடு, சொந்த நவாம்சம், உச்சவீடு இவற்றி லிருக்குமானால் ஸுகம், வாஹனம் இவற்றின் விருத்தி ஏற்படும். சங்கம், பேரீமுதலிய வாத்யங்களின் லாபமு முண்டாகும்.

विचित्रसौधप्राकारमण्डितं गृहमादिशेत् ।
कर्माधिपेन सहिते नाथे चन्द्रार्कसूनुना ॥ ५ ॥

ஜாதகனின் வீட்டின் நிலை. — (5) 4க் குடையவன் 10க் குடையவனுடனே, சந்திரன் சூரியன் இவர்களுடனே கூடி இருந்தால் பலவிதமான மாடிகள், மதிள்சுவறு இவற்றாலலங்கரிக்கப்பெற்ற வீட்டை ஜாதகனுக்கு உபதேசிக்கவேண்டும்.

बंधुस्थानेश्वरे सौम्ये शुभग्रहनिरीक्षिते ।
शशिजे लग्नसंयुक्ते बंधुपूज्यो भवेन्नरः ॥ ६ ॥

பந்துக்களால் பூஜிக்கத் தகுந்தவனாகுதல்.—(6) 4க் குடையவன் சுபனாகவாகி சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டு புதன் லக்கினத்திலு மிருந்தால் பந்துக்களால் பூஜிக்கத்தகுந்தவனாவன்.

मातृस्थाने शुभयुते तदीशे स्वोच्चराशिगे ।
कारके बलसंयुक्ते मातुर्दीर्घायुरादिशेत् ॥ ७ ॥

மாதாவுக்கு தீர்க்காயுள் யோகம்.—(7) 4மிடத்தில் சுபனும், 4க் குடையவன் தனது உச்ச ராசியிலுமிருந்து மாதிருகாரகனான சந்திரனும் பலம் பெற்று இருந்தால் மாதாவுக்கு நீண்ட ஆயுளேற்படும்.

स्वतुङ्गसंस्थे हिवुकाधिनाथे स्वक्षेत्रगे मित्रगृहे स्थिते वा ।
शुभेन दृष्टे शुभसंयुते च क्षेत्राभिवृद्धिं प्रवदेन्नराणाम् ॥ ८ ॥

பூலாப யோகம்.—(8) 4க் குடையவன் தனது உச்சராசியிலோ, சொந்தவீட்டிலோ மித்திரன் வீட்டிலோ இருந்தாலும், சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தாலும் பூமியின் விருத்தியை உபதேசிக்கவேண்டும்.

सुखेशे केन्द्रभावस्थे तथा केन्द्रे स्थिते भृगौ।
शशिजे स्वोच्चराशिस्थे विद्वान्पाण्डित एव सः ॥ ९ ॥

பண்டிதனுயாதும் யோகம்.—(9) 4க் குடையவனும் சுக்கிரனும் கேந்திரத்திலிருந்து, புதன் தனது உச்சராசியிலு மிருந்தால் ஜாதகன் வித்வானுகவும், பண்டிதனுகவு மிருப்பான்.

सुखे मन्दे रवियुते चन्द्रे भाग्यं गते यदि।
लाभस्थानगते भौमे गोमहिष्यादिलाभकृत् ॥ १० ॥

பசு, எருமை இவற்றின் லாப யோகம்.—(10) 4 மிடத்தில் சனி இருந்து அவன் சூரியனுடன் கூடினுலும், சந்திரன் 9மிடத்திலிருந்தாலும், செவ்வாய் 11 மிடத்தி லிருந்தாலும் பசு, எருமை இவற்றின் லாபமுண்டாகும்.

चरग्रहसमायुक्ते सुखे तद्राशिनायके।
षष्ठे भौमे व्ययगते मूकत्वं प्राप्नुयान्नरः ॥ ११ ॥

ஊமையாக வாகுதல்.—(11) 4மிடமோ, 4க் குடையவனே சரக்கிரஹத்துடன் (சந்திரனுடன்) கூடியிருந்து செவ்வாயும் 6 மிடத்திலோ, 12 மிடத்திலோ இருந்தால் மனிதன் ஊமையாக விருப்பான். அதாவது: பேசும் திறமை யற்றவனுகவிருப்பான்.

लग्नस्थानाधिपे सौम्ये सुखेशे नीचराशिगे।
कारके व्ययराशिस्थे सुखेशे लाभसंयुते।
द्वादशे वत्सरे प्राप्ते नरवाहनलाभकृत् ॥ १२ ॥

वाहने रविसंयुक्ते स्वोच्चे तद्राशिनायके।
तुर्ये शुक्रेण संयुक्ते द्वात्रिंशे वाहनं लभेत् ॥ १३ ॥

कर्मेशेन युते बंधुनाथे तुङ्गांश संयुते।
द्विचत्वारिंशके प्राप्ते नरो वाहनभाग्भवेत् ॥ १४ ॥

लाभेशे सुखराशिस्थे सुखेशे लाभसंयुते।
द्वादशे वत्सरे प्राप्ते नरवाहनलाभकृत् ॥ १५ ॥

நரவாஹனலாப யோகம்.—(12) லக்கினாதிபன் சுபக்கிரஹமாகவும், 4க் குடையவன் நீசராசியிலும், வாஹனகாரகன் 12லுமிருந்தாலும், 4க் குடையவன் 11லிருந்தாலும் 12-வது வயதில் பல்லாக்கின் லாபமுண்டாகும். (13) 4 மிடத்தில் சூரியனும், 4க் குடையவன் உச்சத்திலும், 4 மிடத்தில் சுக்கிரனுமிருந்தால் 32-வது வயதில் வாஹனத்தை யடைவான். (14) 4க் குடையவன் 10க் குடையவனுடன் உச்ச பாகத்திலிருந்தால் ஜாதகன் 42-வது வயதில் வாஹனத்தை யடைவான். (15) 11க்குடையவன் 4 மிடத்திலும், 4க் குடையவன் 11லு மிருந்தால் 12-வது வயதில் நரவாஹனத்தை (பல்லாக்கை) அடைவான். இக்காலத்திற்கேற்றாற் போல் அந்தந்த வயதுகளில் ஜாதகன் ரிக்ஷா வண்டி, முதலியவற்றை வாங்குவான் எனக் கருத்துக்கொள்ள வேண்டும்.

பராசர ஸம்ஹிதையிற் சொல்லிய, 4க் குடையவன் லக்கினம் முதலியபாவங்களிலிருப்பதன் மூலமுண்டாகும் பலன்கள்.

तुर्येशे तुर्यगे मन्त्री भवेत्सर्वधनाधिपः ।
चतुरश्शीलवान्मानी धनाढ्यः स्त्रीप्रियस्सुखी ॥ १ ॥
तुर्येशे पञ्चमे भाग्ये सुखी सर्वजनप्रियः ।
विष्णुभक्तिरतो मानी स्वभुजार्जितवित्तवान् ॥ २ ॥
सुखेशे शत्रुगेहस्थे तदास्याद्बहुमातृकः ।
क्रोधी चोरोऽभिचारी च दुष्टवित्तो मनस्व्यपि ॥ ३ ॥
सुखेशे सप्तमे लग्ने बहुविद्यासमन्वितः ।
पित्रार्जितधनस्त्यागी सभायां मूकवद्भवेत् ॥ ४ ॥
सुखेशे व्ययरंध्रस्थे सुखहीनो भवेन्नरः ।
पितृसौख्यं भवेदल्पं क्लीबो वा जारजोऽपि वा ॥ ५ ॥
सुखेशे कर्मगेहस्थे राजमान्यो भवेन्नरः ।
रसायनी महाहृष्टो भुनक्ति सुखमद्भुतम् ॥ ६ ॥
सुखेशे सहजे लाभे नित्यरोगी भवेन्नरः ।
उदारो गुणवान्दाता स्वभुजार्जितवित्तवान् ॥ ७ ॥
सर्वसंपद्युतो मानी साहसी कुहकान्वितः ।
कुटुंबसंयुतो भोगी सुखेशे च धनं गते ॥ ८ ॥

(1) 4க் குடையவன் 4 மிடத்திலிருந்தால் ஸகலவிதமான பொருள் களுக்கும் நாயகனுகவும், ஸாமர்த்யம் பொருந்தியவனுக வும், நல்ல ஸ்வபாவமுள்ளவனுகவும், பிறரையாசிக்காதவனுகவும், தனமுள்ளவனுகவும், ஸ்திரீகளால் விரும்பப் பட்டவனுகவும், ஸுகமுள்ள வனுகவு மிருப்பான். (2) 4க் குடையவன் 5மிடத் திலோ, 9 மிடத்திலோ இருந்தால் ஸுகமுள்ளவனுகவும், எல் லோருக்கும் பிடித்தவனுகவும், விஷ்ணுபக்தி செய்வதில் பற் றுள்ளவனுகவும், தனது முயற்சியால் ஸம்பாதிக்கப்பட்ட தன முள்ளவனுகவு மிருப்பான். (3) 4க் குடையவன் 6 மிடத்தி லிருந்தால் அநேகம் தாயுடன் கூடியவனுகவும், கோபமுள்ளவனு கவும், திருடனுகவும், பில்லிசூன்யம் வைப்பவனுகவும், கெட்ட சித்தமுள்ளவனுகவும், மானியாகவு மிருப்பான். (4) 4க் குடை யவன் 7 மிடத்திலோ, லக்கினத்திலோ இருந்தால் அநேகம் வித் தைகளுள்ள வனுகவும், தகப்பனுல் சம்பாதிக்கப்பட்ட தன முள்ளவனுகவும், கொடை யாளியாகவு மிருப்பான். ஆயினும் ஸபையில் ஊமையைப்போலிருப்பான். அதாவது: பெசுந்திற மை யற்றவனுக விருப்பான். (5) 4க் குடையவன் 12, 8 மிடங் களிலிருந்தால் ஸுகமற்றவனுயிருப்பான். தகப்பன் மூலமுண் டாகின்ற ஸுகம் சிறிதளவே உண்டாகும். மேலும் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகன் நபும்ஸகனுகவோ, பரபுருஷனுக் கு பிறந்தவனுகவோ இருப்பான். (6) 4க் குடையவன் 10 மிடத்தி லிருந்தால் அரசர்களால் வெகுமானிக்கத் தகுந்தவனுக வாவான். மேலும் ரஸாயனஸேவை செய்பவனுகவும், மிகவும் சந்தோஷமடைந்தவனுகவு மிருந்துகொண்டு ஆச்சரியப்படத்தக் கமுறையில் ஸுகத்தை அனுபவிப்பான். (7) 4க் குடையவன் 3 மிடத்திலோ, 11 மிடத்திலோ இருந்தால் நித்யம் ரோகமுள்ள வனுகவும், விசாலமான ஸ்வபாவமுள்ளவனுகவும், நற்குணமுள்ள வனுகவும், தனது கையினுல் ஸம்பாதிக்கப்பட்ட பொருளுடன் கூடியவனுகவு மிருப்பான். (8) 4க் குடையவன் 2 மிடத்தி லிருந்தால் ஸகலவிதமான ஸம்பத்துடன் கூடியவனுகவும், கம்பீர சித்தமுள்ளவனுகவும், பிடிவாதமுள்ளவனுகவும், கபடமுள்ள

வனுகவும், குடும்பமுள்ளவனுகவும், ஸுகானுபவம் செய்கின்றவனுகவு மிருப்பான்.

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 4-வது பாவபலன் முற்றிற்று.

## ஜாதகதத்துவத்திற் சொல்லிய 4 வது பாவபலன்.

**वृश्चिकांशे मातुर्दुग्धशोषः ॥ १ ॥ खे कुजेऽष्टमे जीवे बलाढ्ये मातृसुखं न ॥ २ ॥ षष्ठाष्टमे चन्द्रेऽस्ते भौमे सपापे मातृसुखं न ॥ ३ ॥ शुक्रे वा चन्द्रे पापान्तरे पापयुतदृष्टे वा मातृसुखं न ॥ ४ ॥ सुखे सुखेशे वा पापान्तरे पापयुतदृष्टे वा मातृसुखं न ॥ ५ ॥ चन्द्रादस्ते सपापे शुक्रे मातृसुखं न ॥ ६ ॥**

மாதாவுக்கு பால்வற்றிப்போகுதல், மாதிருஸுகமற்றிருத்தல் இவற்றின் யோகம்.—(1) *ஜாதகன் விருச்சிகநவாம்சத்தில் பிறந்தால் தாய்க்கு பால் வற்றிப்போகும். (2) 10 மிடத்தில் செவ்வாயும் 8 மிடத்தில் குருவும் பலம்பெற்றிருந்தால் தாய்மூலமுண்டாகும் ஸுகமேற்படாது. (3) 6, 8 மிடங்களில் சந்திரனும், 7 மிடத்தில் செவ்வாயுமிருந்து பாபருடன் கூடினலும் மாதிருஸுக மேற்படாது. (4) சுக்கிரனே, சந்திரனே பாபக்கிரஹங்களின் நடுவிலோ, பாபக்கிரஹத்துடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் மாதிருஸுகமேற்படாது. (5) 4மிடமோ, 4க் குடையவனே பாபக்கிரஹத்தின் நடுவிலோ, பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் மாதிருஸுகமேற்படாது. (6) சந்திர லக்கினத்திற்கு 7 மிடத்தில் சுக்கிரன் பாபக்கிரஹத்துடன் கூடி இருந்தால் மாதிருஸுகமேற்படாது.*

**सुखे मन्दे पापदृष्टे शीघ्रं मातृनाशः ॥ ७ ॥ सुखे मन्दे शुभदृष्टे चिरेण मातृनाशः ॥ ८ ॥ मन्दे पापयुते पापर्क्षे मातृनाशः ॥ ९ ॥ पुत्रे चन्द्रे मातृसुखं न ॥ १० ॥ चन्द्रारौ खे धर्मे वा मातृसुखं न ॥ ११ ॥ सपापे चन्द्रेऽस्ते मातृसुखं न ॥ १२ ॥ गुरावङ्गे धने मन्दे राहौ द्यूने मातृसुखं न ॥ १३ ॥ जीवेऽङ्गेऽर्थे मन्दे सोत्थे राहौ माता न जीवति ॥ १४ ॥ सोत्थेऽस्तेऽर्के लग्ने भौमे माता न जीवति ॥ १५ ॥ सोत्थपे त्रिके सचन्द्रे परस्त्रीस्तन्यपानम् ॥ १६ ॥ पापान्तरे चन्द्रे वा चन्द्रात्तुर्यनगस्थाः पापा माता न जीवति ॥ १७ ॥ लग्नाम्बुधर्मेशास्त्रिकोणकेन्द्रगाः पिता मात्रा सहैव म्रियते ॥ १८ ॥ रात्रौ चन्द्रात्त्रिकोणे मन्दे मातृवधः ॥ १९ ॥**

மாதாவுக்கு நாசமேற்படும் யோகம்.—(7) 4 மிடத்தில் சனியிருந்து அவன் பாபகிரஹத்தால் பார்க்கப்பட்டால் சீக்கிரகாலத்தில் மாதாவுக்கு நாசமுண்டாகும். (8) 4 மிடத்தில் சனி இருந்து அவன் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் வெகுகாலம் சென்று மாதாவுக்கு நாசமுண்டாகும். (9) சனியானவன் பாபக்கிரஹத்துடன் கூடி பாபராசியிலிருந்தால் மாதாவுக்கு நாசமுண்டாகும். (10) 5 மிடத்தில் சந்திரனிருந்தால் மாதாவின் மூலமுண்டாகும் ஸௌக்கியமிராது. (11) சந்திரன், செவ்வாய் இவர்கள் 10 மிடத்திலோ 9 மிடத்திலோ இருந்தால் மாதிருஸுகமேற்படாது. (12) சந்திரன் பாபக்கிரஹத்துடன் 7 லிருந்தால் மாதிருஸௌக்யமிராது. (13) குரு லக்கினத்திலும், சனி 2லும், ராஹு 7லுமிருந்தால் மாதிருஸுகமேற்படாது. (14) லக்கினத்தில் குருவும், 2ல் சனியும், 3ல் ராஹுவு மிருந்தால் ஜாதகனின் தாய்ஜீவிக்கமாட்டாள். (15) 3லோ, 7லோ, ஸூரியனிருந்தாலும், லக்கினத்தில் செவ்வாயிருந்தாலும் மாதா ஜீவிக்க மாட்டாள். (16) 3க் குடையவன் 6, 8, 12 மிடங்களில் சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகன் மாற்றாந்தாயின் ஸ்தன்யத்தைக் குடிப்பான். (17) சந்திரன் பாபக்கிரஹங்களின் மத்தியிலிருந்தாலும், பாபக்கிரஹங்கள் சந்திரனுக்கு 4, 7 மிடத்திலிருந்தாலும் மாதாபிழைத்திருக்க மாட்டாள். (18) 1, 4, 9 மிடத்ததிபர்கள் 1, 5, 9 மிடங்களிலோ, கேந்திரத்திலோ இருந்தால் தகப்பன் தாயுடன் சேர்ந்தே மரணமடைவான். (19) சந்திரனுக்கு 1, 5, 9 மிடத்தில் சனியிருந்தால் ராத்திரியில் ஜனித்த ஜாதகனுடைய தாய் கொல்லப்படுவாள்.

**सुखे शुभे कारके शुभयुते बलाढ्ये वा सुखे मातुर्दीर्घायुः ॥ २० ॥ चन्द्रे बलाढ्ये वा शुक्रे शुभयुतदृष्टे मातुर्दीर्घायुः ॥ २१ ॥ शुक्रे वा चन्द्रे शुभांशे केन्द्रे मातुर्दीर्घायुः ॥ २२ ॥ सुखपांशेशांशपे केन्द्रे बलाढ्ये मातुर्दीर्घायुः ॥ २३ ॥**

மாதாவுக்கு தீர்க்காயுள் யோகம். — (20) 4 மிடத்தில் சுபக்கிரஹ மிருந்தாலும், மாதிருகாரகன் சுபருடன் கூடி பலம் பெற்று 4 மிடத்திலிருந்தாலும் மாதா நீண்டவாயுளுடன் கூடி இருப்பாள். (21) சந்திரன் பலம் பெற்றிருந்தாலும், சுக்கிரன்

சுபக்கிரஹத்துடன் கூடியோ பார்க்கப்பட்டோ இருந்தாலும், மாதாவுக்கு நீண்ட வாயுளேற்படும். (22) சுக்கிரனே, சந்திரனே சுபநவாம்சத்திலோ கேந்திரத்திலோ இருந்தால் மாதாவுக்கு நீண்டவாயுளேற்படும். (23) 4க் குடையவனுலடையப்பட்ட நவாம்சநாதன் எந்த நவாம்சத்திலிருக்கின்றானே அதனதிபன் கேந்திரத்தில் பலம் பெற்றிருந்தால் மாதாவுக்கு நீண்ட வாயுளேற்படும்.

**सुखेशेऽङ्गे बलाढ्ये माता पतिव्रता ॥ २४ ॥ सुखपे वैशेषिकांशे शुभदृष्टे माता पतिव्रता ॥ २५ ॥ तुर्येशे शुभार्कदृष्टे माता पतिव्रता ॥ २६ ॥**

மாதா பதிவிரதை யாகுதல்.—(24) 4க் குடையவன் லக்கினத்தில் பலம் பெற்றிருந்தால் தாய் பதிவிரதையாக விருப்பாள் (25) 4க் குடையவன் வைசேஷிகாம்சம் பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் தாய் பதிவிரதையாக விருப்பாள். (26) 4க் குடையவன் சுபக்கிரஹத்தாலோ, ஸூரியனாலோ பார்க்கப்பட்டால் தாய் பதிவிரதையாக விருப்பாள்.

**षष्ठेशे कुजेन युते चन्द्रे सुखे पापदृष्टे माता जारिणी ॥ २७ ॥ सुखपे राहुयुते सपापे माता जारिणी ॥ २८ ॥**

மாதா வியபிசாரி யாகுதல்.—(27) 6க்குடையவன் செவ்வாயுடன் கூடியும், 4 மிடத்தில் சந்திரனிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டுமிருந்தால் தாய் வியபிசாரியாக விருப்பாள். (28) 4க் குடையவன் ராஹுவுடனும் பாபக்கிரஹத்துடனும் கூடியிருந்தால் தாய் வியபிசாரியாக விருப்பாள்.

**लग्नसुखेशावन्योन्यमित्रे शुभेक्षितयुते मातृस्नेहः ॥ २९ ॥ तुर्येशे केन्द्रेऽङ्गेशदृष्टे वा शुभदृग्युते मातृस्नेहः ॥ ३० ॥**

மாதிருஸ்னேஹ மேற்படுதல்.—(29) லக்கினதிபதியும் 4க் குடையவனும், ஒருவருக்கொருவர் மித்திரர்களாகவாகி சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் மாதாவின் ஸ்னேஹமுண்டாகும். (30) 4க் குடையவன் கேந்திரத்திலிருந்தாலும், அல்லது லக்கினதிபதியாலோ சுபக்கிரஹத்தாலோ பார்க்கப்பட்டாலும் மாதாவின் ஸ்னேஹமுண்டாகும்.

तुर्ये पापे द्वित्रा मातरः सौम्ये एका ॥ ३१ ॥

மாதாவின் எண்ணிக்கை அறிதல்.—(31) 4 மிடத்தில் பாபக்கிரஹங்களிருந்தால் இரண்டு மூன்று தாய்மார்களும் சுபக்கிரஹமிருந்தால் ஒரு தாயுமிருப்பார்கள்.

वृषांशे चतुष्पदाः सुखदाः ॥ ३२ ॥ सुखे शुभदृष्ट्याधिक्ये चतुष्पदाः सुखदाः ॥ ३३ ॥

நாற்கால் பிராணிகள் மூலம் ஸுகமுண்டாகுதல் — (32) விருஷப நவாம்சத்தில் பிறந்தவனுக்கு நாற்கால் பிராணிகள் மூலம் ஸுகமுண்டாகும். (33) 4மிடத்தில் சுபக்கிரஹங்களின் திருஷ்டி அதிகமிருக்குமானல் நாற்கால்பிராணிகள் மூலம் ஸுகமுண்டாகும்.

वर्गोत्तमेऽङ्गेशे वा स्वोच्चांशके वा स्वमित्रत्र्यंशे वा शुभयुतदृष्टे आजीवं सुखी ॥ ३४ ॥ लग्नादातुरीयगाः शुभाः आद्ये वयसि सुखम् ॥ ३५ ॥ जीवे केन्द्रेङ्गेऽशे पारावते बाल्ये सुखी ॥ ३६ ॥ धर्मे शुभेऽङ्गे पापेर्थे शुभे देवलोके बाल्ये सुखी ॥ ३७ ॥ लग्ने शुक्रे पूर्वार्धे सुखी ॥ ३८ ॥ शुभर्क्षेऽङ्गेशे शुभेक्षिते वा गोपुरे त्रिपादात्परं सुखी ॥ ३९ ॥ लग्नेशे चापे वा लग्नेशांशपे वा तथास्थिते लाभेशे विंशतिवर्षेभ्यः परं सुखी ॥ ४० ॥ लग्नेशांशेशे केन्द्रे तथा लाभेशांशेशे वा त्रिंशद्वर्षतः परं सुखी ॥ ४१ ॥ पञ्चमादष्टमगाः शुभाः मध्ये वयसि सुखी ॥ ४२ ॥ केन्द्रस्था गुरुजन्मतनुपा यौवने सुखी ॥ ४३ ॥ शुभखगैर्लग्नान्त्यलाभगैः केन्द्रे सिंहासने जीवे आद्यमध्यवयसोः सुखी ॥ ४४ ॥ लग्नार्थसोत्थे शुभदृष्टियुते शुभाङ्गे जीवे पारावते आद्यमध्यवयसोः सुखी ॥ ४५ ॥ पापा धने केन्द्रे शुभे लग्नेशे उत्तमांशे बाल्ये दुःखी ततः सुखी ॥ ४६ ॥ धर्मादारिःफगाः शुभाः अन्त्ये वयसि सुखी ॥ ४७ ॥ देवलोकांशे शुक्रे गोपुरे लग्ने शुभदृष्टे मध्यान्त्यवयसोः सुखी ॥ ४८ ॥

ஜாதகனுக்கு இன்னின்ன ஸமயத்தில் ஸுகமுண்டாகும் என்பது.—(34) லக்கினாதிபதி வர்க்கோத்தமாம்சத்திலோ, தனது உச்சாம்சத்திலோ, தனது மித்திரனுடைய திரேஷ்காணத்திலோ இருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் உயிருள்ளளவும் சுகமுள்ளவனாக விருப்பான். (35) சுபக்

கிரஹங்கள் லக்கினம் முதல் 4 மிடத்திற்குள்ளிருந்தால் முதல் வயதில் ஸுகமுண்டாகும். (36) குரு கேந்திரத்திலும் லக்கினாதிபதி பாராவதாம்சத்திலுமிருந்தால் பால்யத்தில் ஸுகியாக விருப்பான். (37) 9 மிடத்தில் சுபக்கிரஹமும், லக்கினத்தில் பாபக்கிரஹமும், 2மிடத்தில் சுபக்கிரஹமுமிருந்து அவர்கள் தேவலோகாம்சத்திலு மிருந்தால் பால்யத்தில் ஸுகியாக விருப்பான். (38) லக்கினத்தில் சுக்கிரனிருந்தால் ஆயுளின் முற்பாதியில் சுகமுள்ளவனா யிருப்பான். (39) லக்கினாதிபதி சுபக்கிரஹத்தின் ராசியிலோ, சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ இருந்து கோபுராம்சம் ஏறியிருந்தால் ஆயுளின் நான்காவது பாகத்தில் ஸுகம் பெறுவான். (40) லக்கினாதிபதியோ, லக்கினேசனிருக்கும் நவாம்சபதியோ லாபாதிபதியோ, தனூர் ராசியிலிருந்தால் 20 வயதிற்குப்பிறகு ஸுகமுண்டாகும். (41) லக்கினேசனிருக்கும் நவாம்சபதியோ, 11க் குடையவனிருக்கும் நவாம்சபதியோ கேந்திரத்திலிருந்தால் 30 வயதிற்குப்பிறகு ஸுகமுண்டாகும். (42)சுபக்கிரஹங்கள் 5மிடத்திற்கு8மிடத்திலிருந்தால்(அதாவது: 12லிருந்தால்)நடுவயதில் ஸுகமுண்டாகும். (43) குரு,சந்திரலக்கினாதிபதி ஜன்மலக்கினாதிபதி இவர்கள் கேந்திரத்திலிருந்தால் யௌவனத்தில் ஸுகமுண்டாகும். (44) சுபக்கிரஹங்கள் 1, 11, 12 மிடங்களிலும், குரு கேந்திரத்தில் ஸிம்ஹாஸனாம்சத்திலு மிருந்தால் முதல் வயது, மத்தியவயது இவற்றில் ஸுகமுண்டாகும். (45) லக்கினம், 2, 3 இவ்விடங்களில் சுபக்கிரஹங்களின் திருஷ்டி இருந்து, சுபராசியாகவான லக்கினத்தில் குரு பாராவதாம்சம் பெற்றிருந்தால் முதல் வயது, நடுவயது இவற்றில் சுகமுள்ளவனா யிருப்பான். (46) பாபக்கிரஹங்கள் 2 மிடத்திலும், கேந்திரத்தில் சுபக்கிரஹங்களும், வர்க்கோத்தமாம்சத்தில் லக்கினாதிபதியு மிருந்தால் பால்யத்தில் துக்கியாகவும், பிறகு ஸுகியாகவு மிருப்பான். (47) சுபக்கிரஹங்கள் 9 மிடம் தொடங்கி 12 மிடத்திற்குள்ளிருந்தால் கடைவயதில் ஸுகமுள்ளவனா யிருப்பான். (48) சுக்கிரன் தேவலோகாம்சத்திலிருந்து லக்கினத்தில் கோபுராம்சமுதயமாகி சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் நடுவயது கடைவயது இவற்றில் ஸுகம்பெறுவான்.

**शुभेङ्गे शुभदृष्टे पापयोगरहिते सुखी ॥ ४९ ॥ पञ्चसु स्वर्क्षगेषु महा-सुखी ॥ ५० ॥ पातालेशे जीवदृष्टे सुखी ॥ ५१ ॥ शुभे सुखे सुखी ॥५२॥ सुखेशे शुभान्तरे सुखी ॥ ५३ ॥ जीवे बलिनि तुर्यपयुते सुखी ॥ ५४ ॥ केन्द्रकोणे सशुभे सुखेशे सुखी ॥ ५५ ॥ पातालेशे मृद्वंशे सुखी ॥ ५६ ॥ लग्नेशाज्जीवे बलिनि सुखी ॥ ५७ ॥ गोपुराद्यंशेऽम्बुपे जीवे च सुखी ॥५८॥ शुभांशे तुर्येशे धनोपचयगे सुखी ॥ ५९ ॥ शुभान्तरे चन्द्रे सुखी ॥ ६० ॥**

சுகமுள்ளவனு யாகுதல்.—(49) லக்கினத்தில் சுபக்கிரஹ மிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டு பாபர்களின் சேர்க்கை யில்லாமலு மிருந்தால் ஸுகமுள்ளவனு யிருப்பான். (50) 5 கிரஹங்கள் ஸ்வக்ஷேத்திரம் பெற்றிருந்தால் அதிகம் சுகம் பெறு வான். (51) 4க் குடையவன் குருவினுல் பார்க்கப்பட்டால் ஸுகியாக விருப்பான். (52) 4 மிடத்தில் சுபக்கிரஹமிருந்தால் ஸுகியாக விருப்பான். (53) 4க் குடையவன் சுபக்கிரஹங்களின் மத்தியிலிருந்தால் ஸுகியாக விருப்பான். (54) குரு பலம் பெற்று 4க் குடையவனுடன் கூடினுல் ஸுகியாக விருப்பான். (55) 4க் குடையவன் கேந்திரத்திலோ, 1, 5, 9 மிடத்திலோ சுபக்கிரஹங்களுடன் கூடி இருந்தால் ஸுகியாக விருப்பான். (56) 4க் குடையவன் மிருத்வம்சத்தி லிருந்தால் ஸுகியாக விருப்பான். (57) லக்கினுதிபதியைக் காட்டிலும் குரு பலம் பெற்றிருந்தால் ஸுகியாகவிருப்பான். (58) 4க் குடையவனும், குருவும் கோபுரம் முதலிய அம்சங்களிலிருந்தால் ஸுகியாக விருப்பான். (59) 4க் குடையவன் 2 மிடத்திலோ, 3, 6, 10, 11 மிடங்களிலோ சுபாம்சத்திலிருந்தால் ஸுகியாகவிருப்பான். (60) சந்திரன் இரண்டு சுபக்கிரஹங்களின் நடுவிலிருந்தால் ஸுகியாகவிருப்பான்.

**मेषांशे मूषिकामार्जारं दुःखदम्॥ ६१ ॥ सिंहांशे श्वादयो दुःखदाः ॥ ६२ ॥ कन्यांशेऽग्निकणा दुःखदाः ॥ ६३ ॥ शराह्वर्काः सुतस्थास्तुर्ये भौमे रन्ध्रे मन्दे दुःखी ॥ ६४ ॥ लग्नगाः पापा दुःखी ॥ ६५ ॥ पापे तुर्ये जीवेऽल्पबलिनि सधनोऽपि दुःखी ॥ ६६ ॥ सपापे सुखपेऽबले सध-नो दुःखी ॥ ६७ ॥ पापांशेम्बुपे नीचगे सधनपुत्रोऽपि दुःखी ॥ ६८ ॥ सभौमार्काम्बुपे क्रूरांशे शुभदृग्घीने नित्यं दुःखी ॥ ६९ ॥ भौमार्कौ नीचा**

रिभागगौ सुखे पापदृष्टौ क्रूरांशे प्रमादाद्गृहार्थनाशो दुःखी च ॥ ७० ॥ रन्ध्रेशे लाभे बाल्ये दुःखी ॥ ७१ ॥ लग्नेऽर्कजेऽष्टमे राहौ षष्ठे भौमे दुःखी ॥ ७२ ॥ पापान्तरे चन्द्रे दुःखी ॥ ७३ ॥ लग्नेशेऽन्त्ये खे पापे चन्द्रा(?)योगे दुःखी ॥ ७४ ॥

துக்கியாக வாகுதல்.—(61) மேஷாம்சத்தில் பிறந்தவனுக்கு எலி, பூனை இவற்றால் துக்கமுண்டாகும். (62) ஸிம்ஹ நவாம்ச த்தில் பிறந்தவனுக்கு நாய்முதலியவைகள் துக்கத்தைக் கொடுப் பனவாக வாகும். (63) கன்யாநவாம்சத்தில் பிறந்தவனுக்கு நெருப்புப்பொறிகள் மூலம் துக்கமுண்டாகும். (64) புதன், ராஹு, ஸூரியன் இவர்கள் 5 மிடத்திலும், செவ்வாய் 4 மிட த்திலும் சனி 8 மிடத்திலு மிருந்தால் துக்கியாகவாவான். (65) பாபக்கிரஹங்கள் லக்கினத்தி லிருந்தால் துக்கியாக வா வான். (66) 4 மிடத்தில் பாபக்கிரஹமும், குருபலமற்றவனுயு மிருந்தால் பணமுள்ளவனுயினும் துக்கியாக வாவான். (67) 4க் குடையவன் பாபக்கிரஹத்துடன் சேர்ந்தாலும், பலமற்றிருந் தாலும், தனமுள்ளவனுயும் துக்கியாயு மிருப்பான். (68) 4க் குடையவன் பாபக்கிரஹத்தின் நவாம்சத்திலோ, நீசராசியிலோ இருந்தால் தனம், புத்திரன் இவற்றுடன் கூடியிருந்தாலும் துக் கியாக விருப்பான். (69) செவ்வாயுடன்கூடின சூரியன், 4க் குடையவன் இவர்கள் பாபக்கிரஹத்தின் அம்சத்திலிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்படாமலு மிருந்தால் எப்பொழுதும் துக்கியாவே இருப்பான். (70) செவ்வாய், சூரியன் இவர்கள் நீசராசியின் அம்சத்திலோ, சத்துருவின் நவாம்சத்திலோ இரு ந்து 4 மிடத்திலிருந்தாலும், 4 மிடத்தில் பாபக்கிரஹ மிரு ந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், கவனக்குறைவினுல் வீடு, பொருள் இவற்றிற்கு நாசமுண்டாகும். மேலும் துக்கியா கவு மிருப்பான். (71) 8க் குடையவன் 11 மிடத்திலிருந்தால் பால்யவயதில் துக்கியாவான். (72) லக்கினத்தில் சனியும், 8 மிடத்தில் ராஹுவும், 6 மிடத்தில் செவ்வாயு மிருந்தால் துக்கி யாகவாவான். (73) சந்திரன் பாபக்கிரஹங்களின் மத்தியிலிருந் தால் துக்கியாவான். (74) லக்கினுதிபதி 12லும், 10 மிடத்தில்

பாபக்கிரஹமுமிருந்து சந்திரன், செவ்வாய் இவர்களுக்கு சேர்க்கையு மிருக்குமானல் துக்கியாவான்.

तुर्यंशाच्चन्द्राच्छौ प्रासादवान् ॥ ७५ ॥ तुर्यंशादुच्चग्रहे प्रासादवान् ॥ ७६ ॥ अंशात्तुर्ये राह्वर्कजौ प्रासादवान् ॥ ७७ ॥ केत्वारौ तुर्यंशादिष्टका-गृहम् ॥७८॥ सुखेंशाज्जीवे काष्ठगृहम् ॥७९॥ सुखेंशादर्के तृणगृहम् ॥८०॥

ஜாதகனின் வீடு இத்தகையதாக விருக்கும் என்பது.—(75) நவாம்சலக்கினத்திற்கு 4 மிடத்தில் சந்திரன் சுக்கிரன் இவர்களிருந்தால் மாடி(மெத்தை) வீடுள்ளவனுவான். (76) நவாம்சலக்கினத்திற்கு 4 மிடத்தில் உச்சமடைந்த கிரஹமிருக்குமால் மாடியுடன் கூடின வீடுள்ளவனுவான். (77) நவாம்சலக்கினத்திற்கு 4 மிடத்தில் ராஹு ஸூரியன் இவர்களிருந்தால் மாடியுடன் கூடின வீடுள்ளவனுவான். (78) நவாம்சலக்கினத்திற்கு 4மிடத்தில் கேதுவும், செவ்வாயுமிருந்தால் செங்கல்லினுல் கட்டப்பட்ட வீடு இருக்கும். (79) நவாம்சலக்கினத்திற்கு 4 மிடத்தில் குரு இருந்தால் மரத்தினுல் கட்டப்பட்ட வீடு இருக்கும். (80) நவாம்சலக்கினத்திற்கு 4மிடத்தில் ஸூரியனிருந்தால் புல்லினுல் செய்யப்பட்ட (கூறை வீடு) கிருஹமிருக்கும்.

लग्नेशेम्बुगे सुखेशेङ्गे गृहलाभः ॥ ८१ ॥ गृहेशे बलाढ्ये केन्द्रे शुभ-दृष्टे गृहलाभः ॥ ८२ ॥ सुखेशे वैशेषिकांशे परमोच्चगे गृहलाभः ॥ ८३ ॥ तुर्येशांशपे केन्द्रे गृहलाभः ॥ ८४ ॥ धर्मपे केन्द्रे गेहेशे स्वोच्चमित्रगे तुर्ये तुङ्गगे ग्रहे विचित्रगृहलाभः ॥ ८५ ॥ सोत्थे सौम्ये तुर्येशे बलिनि गृहेशे बलपूर्णे हर्म्यप्राकारादियुतगृहम् ॥ ८६ ॥ तुर्यपे सिंहासने गोपुरे मृद्वंशे वा हर्म्यप्राकारादियुतगृहम् ॥ ८७ ॥ गृहेशे पारावते गोपुरे चन्द्रे गुरुदृष्टे दैविकं वेश्म ॥ ८८ ॥ खतुर्येशौ चन्द्रमन्दयुतौ विचित्रं वेश्म ॥ ८९ ॥ तुर्याङ्गपौ तुर्येऽकस्माद्गृहाप्तिः ॥ ९० ॥

கிருஹலாப யோகம்.—(81) லக்கினுதிபதி 4 மிடத்திலும், 4க் குடையவன் லக்கினத்திலுமிருந்தால் வீடுகிடைக்கும். (82) 4க் குடையவன் பலம்பெற்று கேந்திரத்திலிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப் பட்டால் வீட்டின் லாபமுண்டாகும். (83) 4க் குடையவன் வைசேஷிகாம்சத்திலோ, பரமோச்சபாகத்திலோ இருந்தால் வீட்டின் லாபமுண்டாகும். (84) 4க்குடையவனின்

நவாம்சநாதன் கேந்திரத்திலிருந்தால் கிருஹலாபமுண்டாகும். (85) 9க் குடையவன் கேந்திரத்திலும், 4க் குடையவன் தனது உச்சவீடு, மித்திரன் வீடு இவற்றிலும், உச்சராசியை யடைந்த கிரஹம் 4 மிடத்திலுமிருந்தால் மனோஹரமான கிருஹத்தின் லாபமுண்டாகும். (86) 3மிடத்தில் சுபக்கிரஹமும், 4க் குடையவன், 4க்குடையவனிருக்கும் நவாம்சநாதன் இவர்கள் பலம்பெற்றுமிருந்தால் மாடி, மதிள் சுவறு இவை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட கிருஹமுண்டாகும் (87) 4க் குடையவன் ஸிம்மாஸனம் என்ற அம்சத்திலோ, கோபுராம்சத்திலோ, மிருத்வம்சத்திலோ, இருந்தாலும் முற்கூறிய கிருஹலாபமுண்டாகும். (88) 4க்குடையவன் பாராவதம் என்ற அம்சத்திலும்,சந்திரன் கோபுராம்சத்திலு மிருந்து குருவினால் பார்க்கப்பட்டால் தேவதா ஸான்னித்தியமுள்ள வீடு கிடைக்கும். (89) 10, 4க் குடையவர்கள் சந்திரன், சனி இவர்களுடன் கூடினால் மனோஹரமான வீட்டின் லாபமுண்டாகும். (90) 4மிடம், லக்கினம் இவற்றின் அதிபர்கள் 4 மிடத்திலிருந்தால் எதிர்பாராமலே கிருஹலாபமுண்டாகும்.

**यावन्तः पापाः खाम्बुस्वान्त्यनाथैः सहितास्त्रिकस्थास्तावन्तो गृहा वह्निना दह्यन्ते ॥ ९१ ॥ राह्वर्कांवंशे कुजमात्रदृष्टे गृहदाहः ॥ ९२ ॥**

வீட்டில் தீப்பிடித்தல்.—(91) 10, 4, 2, 12 இவற்றின் அதிபர்களுடன் எவ்வளவு பாபக்கிரஹங்கள் சேர்ந்து 6, 8, 12 மிடங்களிலிருக்கின்றனரோ அவ்வளவு வீடுகள் அக்கினியினால் பொசுக்கப்படும். (92) ராஹு, ஸூரியன் இவர்கள் நவாம்சலக்கினத்திலிருந்து செவ்வாயினால் மட்டும் பார்க்கப்பட்டால் வீடு பொசுக்கப்படும்.

**केन्द्रकोणेऽर्के गृहे शैथिल्यप्रयुक्तपातभयम् ॥ ९३ ॥ तुर्येशे षष्ठे पापदृष्टे गेहनाशः ॥ ९४ ॥ गेहेशांशेशे षष्ठे गेहनाशः ॥ ९५ ॥ तुर्येशे रन्ध्रे स्वयमेव गेहं पातयति ॥ ९६ ॥ तुर्याङ्गार्थेशाः यावत्पापयुतास्तावतां गेहानां नाशो नतु शुभदृष्टे ॥ ९७ ॥**

கிருஹநாச யோகம்.—(93) ஸூரியன், கேந்திரத்திலோ, 1, 5, 9 மிடத்திலோ இருந்தால் வீடு ஜீர்ணமாய்போய் கீழ்விழு

தல் மூலம் பயமுண்டாகும். (94) 4க் குடையவன் 6 மிடத்தி லிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் வீட்டின் நாசமுண் டாகும். (95) 4க் குடையவனின் நவாம்சநாதன் 6 மிடத்தி லிருந்தால் வீட்டிற்கு நாசமுண்டாகும். (96) 4க் குடையவன் 8 மிடத்திலிருந்தால் தானே வீட்டை இடித்துத் தள்ளிவிடு வான். (97) 4, 2, லக்கினம் இவற்றின் அதிபர்கள் எவ்வளவு பாபக்கிரஹங்களுடன் கூடி இருக்கின்றனரோ அவ்வளவு வீடுக ளுக்கு நாசமுண்டாகும். ஆனால் அவர்கள் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் முற்கூறிய பலனேற்படாது.

**तुर्यतत्पौ चरर्क्षे कारके वा तथा बहुगृहवासः ॥ ९८ ॥ गृहतत्पौ स्थिरे तथा कारके वा स्थिरवासः ॥९९॥ शुभषष्ट्यंशे तुर्ये स्थिरवासः॥**

ஜாதகன் பல வீடுகளில் வஸிப்பானு, ஒரே வீட்டில் வஸிப் பானு என்பது.—(98) 4 மிடம் சரராசியாகவானுலும், 4க் குடை யவனே, கிருஹகாரகனே சரராசியிலிருந்தாலும் அனேகம் வீடு களில் வஸித்தலேற்படும். (99) 4மிடம் ஸ்திரராசியாகவானுலும், 4க் குடையவனே, கிருஹகாரகனே ஸ்திர ராசியிலிருந்தாலும் ஜாதகன் ஒரே கிருஹத்தில் வஸிப்பான். (100) 4 மிடத்தில் சுபமான ஷஷ்டியம்ச முதயமானுலும் ஜாதகன் ஒரே வீட்டில் வஸிப்பான்.

**लग्नाम्ब्वर्थेशा यावन्तः केन्द्रकोणे तावन्तो गृहाश्शोभनाः ॥ १०१ ॥ लाभार्थेशौ तुर्ये तुर्यपे वैशेषिकांशे शुभदृग्योगे बह्वर्थं गृहं लभ्यते ॥ १०२ ॥**

பொதுவில் வீட்டைப்பற்றியவைகள்.—(101) லக்கினம், 2,4 மிடம் இவற்றிற்கு அதிபர்களுள் எவ்வளவு கிரஹங்கள் கேந்திரத் திலோ, 1, 5, 9 மிடத்திலோ இருக்கின்றனரோ அவ்வளவு வீடு கள் நன்மையை விளைவிப்பனவாக வாகும். (102) 11, 2 மிடத் ததிபர்கள் 4மிடத்திலும், 4க்குடையவன் வைசேஷிகாம்சத்திலு மிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் அனேகம் பொரு ளுடன் கூடின வீடு கிடைக்கும்.

**खे सुखेशे कर्मेशेम्बुगे बलिनि भौमे बहुक्षेत्रवान्॥ १०३ ॥ बलाढ्यौ खाम्बुपौ परस्परसुहृदौ बहुक्षेत्रवान् ॥ १०४ ॥ तुर्यतत्पौ शुभयुतौ बहुक्षेत्र-वान् ॥ १०५ ॥ तुर्येशे सुते गोपुराद्यंशे बहुक्षेत्रवान् ॥ १०६ ॥**

க்ஷேத்திர (பூமி) லாப யோகம்.—(101) 4க் குடையவன் 10 லும், 10க் குடையவன் 4லிலு மிருந்து செவ்வாய் பலம் பெற்று மிருந்தால் அதிகம் பூமியுள்ளவனாக விருப்பான். (104) 10, 4க் குடையவர்கள் பலம் பெற்று ஒருவருக்கொருவர் மித்திரர்களா கவு மிருந்தால் அதிகம் பூமியுள்ளவனாக விருப்பான். (105) 4 மிடமோ 4க் குடையவனோ சுபக்கிரஹத்துடன் கூடி இருந்தால் அதிகம் பூமியுள்ளவனாக விருப்பான். (106) 4க் குடையவன் 5 மிடத்தில் கோபுரம் முதலிய அம்சத்திலிருந்தால் அதிகம் பூமி யுள்ளவனாக விருப்பான்.

**भ्रातृपेण तत्कारकेण वा युते तुर्येशे भ्रातृतः क्षेत्राप्तिः ॥ १०७ ॥ बलिन्यङ्गेशेम्बुगे बलिन्यम्बुपेङ्गे शुभदृग्योगे स्वपराक्रमात्क्षेत्राप्तिः ॥ १०८ ॥ स्त्रीकारकेम्बुगे क्षेत्रपे द्यूने तयोर्मैत्र्यां कलत्रतः क्षेत्राप्तिः ॥ १०९ ॥ षष्ठेशे तुर्ये तत्पे षष्ठे षष्ठेशतः क्षेत्रपेऽधिकबले शत्रुतः क्षेत्राप्तिः ॥ ११० ॥ गेहेशे स्वराशौ बलिन्युपचयगे शुभदृष्टे बहुक्षेत्राप्तिः ॥ १११ ॥**

இன்னின்னார் மூலம் பூலாபமுண்டாகும் என்பது—(107) 4க் குடையவன் 3க் குடையவனுடனோ, ஸஹோதரகாரகனுட னோ கூடி இருந்தால் ஸஹோதரனிடமிருந்து பூமி கிடைக்கும். (108) லக்கினாதிபதி பலம் பெற்று 4 மிடத்திலிருந்து, 4க் குடை யவன் பலம் பெற்று லக்கினத்திலுமிருந்து அவர்கள் சுபக்கிரஹத் தால் பார்க்கப்பட்டால் தன் முயற்சியால் பூமி கிடைக்கும். (109) களத்திரகாரகனான சுக்கிரன் 4லும், 4க்குடையவன் 7லு மிருந்து அவ்விருவருக்கும் சிநேஹ மிருக்குமானால் களத்திர மூலம் பூமி கிடைக்கும். (110) 6க் குடையவன் 4லிலும், 4க் குடையவன் 6லு மிருந்து 6க் குடையவனைக் காட்டிலும், 4க் குடையவன் அதிகம் பலம் பெற்றிருந்தால் சத்துரு மூலம் பூமி கிடைக்கும். (111) 4க் குடையவன் ஸ்வக்ஷேத்திரத்திலிருந்து பலம் பெற்று இருந்தாலும், அல்லது 3, 6, 10, 11மிடங்களி லிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் அதிக பூலாப முண்டாகும்.

**गेहेशे नीचारातिमूढगे पापान्तरे पापदृष्टे क्षेत्रादिनाशः ॥ ११२ ॥ पापान्तरे कुजे पापदृष्टे क्रूरांशे क्षेत्रादिनाशः ॥ ११३ ॥ तुर्येशे**

क्रूरषष्ठ्यंशे तुर्ये पापे क्षेत्रादिनाशः ॥ ११४ ॥ तुर्येशे त्रिके क्षेत्रादिनाशः ॥ ११५ ॥ गेहेशेऽर्थे सपापे नीचारिभे क्षेत्रादिनाशः ॥ ११६ ॥ गेहेशे तुङ्गेऽर्थेशे पापे नीचारिभे भूमिविक्रेता ॥ ११७ ॥ कर्मेशेम्बुगे सपापे क्षेत्रनाशः॥ ११८ ॥ क्रूरमृत्युयमाद्यंशे खपे सुखे क्षेत्रनाशः ॥ ११९ ॥ खे ससूर्येऽम्बुपे राजकोपात्क्षेत्रनाशः ॥ १२० ॥ वित्तेशांशेशांशेश्वरेण सहिते सपापेऽम्बुपे राजकोपात्क्षेत्रनाशः ॥ १२१ ॥

பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும் யோகம்.—(112) 4க் குடையவன் நீச வீட்டிலோ, சத்துரு வீட்டிலோ, அஸ்தங்கதனாகவோ, பாபர்களின் மத்தியிலோ, பாபக்கிரஹத்தால் பார்க்கப் பட்டோ இருந்தால் பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (113)செவ்வாய் பாபக்கிரஹத்தின் நடுவிலோ, பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ குரூர நவாம்சத்திலோ இருந்தால் பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (114) 4க் குடையவன் குரூர ஷஷ்டியம்சத்திலும், 4மிடத்தில் பாபக்கிரஹமு மிருந்தால் பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (115) 4க் குடையவன் 6, 8, 12 மிடத்திலிருந்தால் பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (116) 4க் குடையவன் 2 மிடத்தில் பாபக்கிரஹத்துடன் கூடி யிருந்தாலும், நீசவீடு, சத்துருவீடு இவற்றிலிருந்தாலும், பூமி முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். (117) 4க் குடையவன் உச்ச ராசியிலிருந்து 2க் குடையவன் பாபக்கிரஹமாகவாகி நீசராசியிலோ, சத்துரு ராசியிலோ இருந்தால் ஜாதகன் பூமியை விற்பனை செய்வான். (118) 10க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடி 4 மிடத்திலிருந்தால் பூமிக்கு நாசமுண்டாகும். (119) 10க் குடையவன் 4 மிடத்தில் குரூராம்சம், மிருத்யு அம்சம், யமாம்சம் முதலிய துஷ்ட ஷஷ்டியம்சங்களி லிருந்தால் பூமிக்கு நாசமுண்டாகும். (120\ 4க் குடையவன் 10மிடத்தில் ஸூரியனுடன் கூடியிருந்தால் ராஜனின் கோபத்தால் பூமிக்கு நாசமுண்டாகும். (121) பாபக்கிரஹத்துடன் கூடின 4க்குடையவன் 2க் குடையவனிருக்கும் நவாம்சம் எதுவோ அதனதிபனிருக்கும் நவாம்சத்தின் அதிபனுடன் கூடினால் அரசனின்கோபத்தால் பூமிக்கு நாசமுண்டாகும்.

सुताङ्गेशमित्रत्वे पुत्रो मित्रम् ॥ १२२ ॥ द्यूनाङ्गेशमित्रत्वे स्त्रीमैत्री ॥ १२३ ॥ सुखाङ्गेशमित्रत्वे बहुजनमैत्री ॥ १२४ ॥ द्वयोर्मित्रक्षेत्रगयोः सुहृत्पोष्यः ॥ १२५ ॥ सुखे शुभदृष्ट्याधिक्ये बहुजनमित्रता ॥ १२६ ॥

மற்றவர்களின் சினேஹத்தை யடைதல்.—(122) லக்கினதிபதி, 5க் குடையவன் இவர்களுக்கு மித்திரத்தன்மை இருக்குமானல் புத்திரன் மித்திரனவான். (123) 7க் குடையவன், லக்கினதிபதி இவர்களுக்கு மித்திரத்தன்மை இருக்குமானல் களத்திரத்திற்கும், தனக்கும் சினேஹமிருக்கும். (124) 4க் குடையவன், லக்கினதிபதி இவர்களுக்கு மித்திரத்தன்மை இருக்குமானல் பலஜனங்களின் சினேஹமுண்டாகும். (125) லக்கினதிபதி 4க்குடையவன் இவர்கள் மித்திரன்வீட்டி லிருந்தால் சினேஹிதனல் போஷிக்கப்படுவான். (126) 4 மிடத்தில் சுபக்கிரஹங்களின் திருஷ்டி அதிகமிருக்குமானல் பலஜனங்களுக்கு மித்திரனக விருப்பான்.

सुखे सौम्ये सौम्यदृष्टे सुखकारके बलिनि बन्धुपूज्यः ॥ १२७ ॥ गेहे जीवे गेहपे शुभयुते बन्धुपूज्यः ॥ १२८ ॥ तुर्ये स्वोच्चे स्वमित्रभे वा खेटे गुरुदृष्टे बन्धुपूज्यः ॥ १२९ ॥ त्रिभिस्स्वर्क्षगैः बन्धुपूज्यः ॥ १३० ॥

பந்துபூஜ்யன யாகுதல்.—(127) 4 மிடத்தில் சுபக்கிரஹமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டு 4ம் பாவகாரகனும் பலம் பெற்றிருந்தால் பந்துக்களால் பூஜிக்கத்தக்கவன யாவான். (128) 4மிடத்தில் குருவும், 4க்குடையவன் சுபக்கிரஹத்துடன் சேர்ந்துமிருந்தால் பந்துக்களால் பூஜிக்கத்தக்கவன யாவான். (129) உச்சவீட்டிலோ, மித்திரன் வீட்டிலோ, 4 மிடத்திலோ ஒருகிரஹமிருந்து குருவினல் பார்க்கப்பட்டால் பந்துக்களால் பூஜிக்கத்தக்கவனயாவான். (130) 3 கிரஹங்கள் ஸ்வக்ஷேத்திரத்தி லிருந்தால் பந்துக்களால் பூஜிக்கத்தக்கவன யாவான்.

केन्द्रकोणे सुखेशे वैशेषिकांशे पापदृग्योगहीने बन्धूपकारकृत् ॥ १३१ ॥ तुर्ये सौम्ये बन्धूपकारकृत् ॥ १३२ ॥ धनेशे लाभे त्रिकोणे गेहे शुभदृष्टे बन्धूपकारकृत् ॥१३३॥ गेहेशे केन्द्रे शुभांशे बन्धूपकारकृत् ॥१३४॥

பந்துக்களுக்கு உபகாரியாக வாகுதல்.—(131) 4க் குடையவன் கேந்திரத்திலோ, 1, 5, 9, மிடத்திலோ, வைசேஷிகாம்சத்

திலோ இருந்துபாபக்கிரஹத்தின் பார்வைசேர்க்கை இல்லாதிருக்குமானல் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனுக விருப்பான். (132) 4மிடத்தில் சுபக்கிரஹமிருந்தால் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனுகவிருப்பான். (133) 2க் குடையவன் 11லோ, திரிகோணத்திலோ (1, 5, 9 மிடம்) இருந்து 4 மிடம் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனுகவிருப்பான். (134) 4க் குடையவன் கேந்திரத்திலோ சுபநவாம்சத்திலோ இருந்தால் பந்துக்களுக்கு உபகாரம் செய்பவனுகவிருப்பான்.

**सपापे तुर्यपे क्रूरषष्ट्यंशेऽल्पवीर्ये बन्धुभिस्त्यज्यते ॥ १३५ ॥ बन्धुनाथे बहुपापयुते तथैव कारके बन्धुमध्ये कुत्सितः ॥ १३६ ॥ पापर्क्षे तुर्ये नीचास्तखगयुते शुभदृग्योगहीने बन्धुद्वेषी ॥ १३७ ॥ चतुर्षु ग्रहेषु सुहृद्गेहगेषु बन्धुपोष्यः ॥ १३८ ॥**

பந்துக்களால் விடபெட்டவனுயாகுதல்.—(135) 4க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடி குரூரமான ஷஷ்டியம்சத்தில் குறைந்த பலமுள்ளவனுயிருந்தால் பந்துக்களால் விடப்படுவான். (136) 4க் குடையவனே, பந்துகாரகனே அனேகம் பாபக்கிரஹங்களுடன் கூடியிருந்தால் பந்துக்களினிடையில் நிந்திக்கப்பட்டவனுயாவான். (137) 4மிடம் பாபராசியாகவானுலும், நீசமடைந்த கிரஹம், அஸ்தங்கதமான கிரஹம் இவற்றுடன் கூடினுலும்,சுபர்களின் திருஷ்டியற்றிருந்தாலும் பந்துக்களைத்துவேஷிப்பவனுயாவான். (138) 4 கிரஹங்கள் ஸுஹிருத்தின் வீட்டிலிருந்தால் பந்துக்களால் போஷிக்கப்படுவான்.

**अन्त्येशे शुभसम्बद्धे शुभवर्गे स्वोच्चे वा पर्यङ्कशायी ॥ १३९ ॥ व्ययेशे पापसम्बद्धे शयनसुखाभावः ॥ १४० ॥ व्ययेशे पापेऽपि शुभवर्गे शयनसुखम् ॥ १४१ ॥ लग्नेशे त्रिके शयनसुखाभावः ॥ १४२ ॥ नीचेङ्गेशे शयनसुखाभावः ॥ १४३ ॥ देहपे मन्दमान्दियुते शयनसुखाभावः ॥ १४४ ॥**

படுக்கையைப் பற்றிய யோகங்கள்.—(139) 12க் குடையவன் சுபக்கிரஹத்துடன் கூடியோ, சுபர் வர்க்கத்திலோ, தனது உச்ச வீட்டிலோ இருந்தால் கட்டிலில் படுத்துக் கொள்வான். (140) 12க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடினுல் படுக்கை

விஷயத்தில் ஸுகமிராது. (141) 12க் குடையவன் பாபியாயினும் சுபக்கிரஹத்தின் வர்க்கத்திலிருந்தால் படுக்கை விஷயத்தில் ஸுகமிருக்கும். (142) லக்கினாதிபதி 6, 8, 12 மிடத்திலிருந்தால் படுக்கை விஷயத்தில் ஸுகமிராது. (143) லக்கினாதிபதி நீசனானாலும் படுக்கை விஷயத்தில் ஸுகமிராது. (144) லக்கினாதிபதி சனி, மாந்தி, ராஹு இவர்களுடன் கூடினால் படுக்கை விஷயமான ஸுகமிராது.

ஜாதக தத்துவத்திற் சொல்லிய நான்காவது பாவபலன் முற்றிற்று.

## ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய நான்காவது பாவபலன்.

बंधुभवने च बंधून्गृहमातृजलात्मवृद्धिभोज्यादीन् ।
बाहनहृदयस्कंधासनशयनसुखान्यधोजलं ब्रूयात् ॥ १ ॥

நான்காமிடத்தைக் கொண்டு கண்டுகொள்ள வேண்டியவைகள்.—(1) 4மிடத்தில் பந்துக்களையும், வீடு, மாதா, ஜலம் சரீர விருத்தி, போஜ்யம் முதலியவற்றையும், வாஹனம், ஹிருதயம், ஸேனாநிவேசம், ஆஸனம், சயனம், சுகம், பூமிக்குக் கீழுள்ள ஜலம் (அதாவது: கிணற்றிலுண்டாகும் ஊற்று) முதலியவற்றையும் காணவேண்டும்.

लग्नेश्वरे लग्नगते सुखेड्ननाथेन युक्ते यदि गेहलाभः ।
अयत्नतस्स्याच्छुभदृष्टियोगात्स्वोच्चे स्वमित्रस्वगृहे बलाढ्ये ॥ २ ॥

गेहाधिपे केन्द्रगते बलाढ्ये सौम्येक्षिते मन्दिरलाभमाहुः ।
वैशेषिकांशे परमोच्चभागे गेहेश्वरे मन्दिरलाभमाहुः ॥ ३ ॥

गृहस्थानाधिपस्थांशनाथसंयुक्तराशिपः ।
तदंशाधिपतौ केन्द्रे गृहलाभमुदीरयेत् ॥ ४ ॥

भाग्येशे केन्द्रभावस्थे गृहेशे स्वोच्चमित्रगे ।
गृहराशिगते खेटे स्वोच्चे बहुविचित्रकम् ॥ ५ ॥

तृतीये सौम्यसंयुक्ते गृहेशे स्वबलान्विते ।
तदीशे बलसंपूर्णे हर्म्यं प्राकारमण्डितम् ॥ ६ ॥

सिंहासनांशके वापि गृहेशे गोपुरांशके ।
मृद्वंशादियुते वापि तद्गृहं सौधमण्डितम् ॥ ७ ॥

पारावतांशके गेहनाथे गुर्विन्दुवीक्षिते ।
गोपुराद्यंशकेवापि दैविके हर्म्यमादिशेत् ॥ ८ ॥
विचित्रसौधप्राकारमण्डितं गृहमादिशेत् ।
कर्माधिपेन सहिते नाथे केन्द्रेऽर्कसूनुना॥ ९ ॥

கிருஹலாப யோகம்.—(2) லக்கினுதிபதி லக்கினத்திலிருந்தாலும், நாலாமிடத்தில் லக்கினுதிபதி இருந்தாலும் வீட்டின் லாபமுண்டாகும். சுபரின் திருஷ்டி, அல்லது சேர்க்கை இருப்பினும், தனது உச்சவீட்டிலும், தனது மித்திரன் வீட்டிலும், சொந்த வீட்டிலும் பலம் பெற்று மிருந்தால் முயர்ச்சியில்லாமலே வீட்டின் லாபமுண்டாகும். (3) 4க் குடையவன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்து சுபராலும் பார்க்கப்பட்டால் கிருஹலாபமுண்டாகும். 4க் குடையவன் வைசேஷிகாம்சத்திலோ பரமோச்ச பாகத்திலோ இருந்தால் கிருஹலாபமுண்டாகும். (4) 4க் குடையவனிருக்கும் அம்சநாதனுடன் கூடின ராசிநாதனும், அந்த அம்சநாதனும் கேந்திரத்திலிருந்தால் கிருஹலாபத்தைச் சொல்லவேண்டும். (5) 9க் குடையவன் கேந்திர பாவத்திலிருந்து 4க் குடையவன் தனது உச்சவீடு, மித்திரன்வீடு இவற்றிலிருந்து 4 மிடமிருக்கும் கிரஹம் தனது உச்சவீட்டிலிருக்குமானுல் வெகு விசித்திரமான வீடுண்டாகும். (6) 3 மிடத்தில் சுபரிருந்து 4க் குடையவன் பலம் பெற்று 2 மிடத்திலிருந்து 2க் குடையவனும் பலம் பெற்றிருந்தால் மாடி, வீட்டைச்சுற்றிலும் மதில் இவையுள்ள வீடு கிடைக்கும். (7) 4க் குடையவன் ஸிம்ஹாஸனும்சத்திலோ, கோபுராம்சத்திலோ, ம்ருத்வம்சாதிகளிலோ இருந்தால் அந்த வீடு சுண்ணும்பால் கட்டப்பட்டதாக இருக்கும் (மாடியுள்ளது என்றும் சொல்லலாம்). (8) 4க்குடையவன் பாராவதாம்சத்திலிருந்து குரு, சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் கோபுராதியம்சத்திலிருந்தாலும் பூஜைக்குபயோகமான இடத்தில் மாடியிருக்கும் என்று சொல்லவேண்டும். (9) 4க் குடையவன் கேந்திரத்திலிருந்து 10க் குடையவனுடன் கூடினுலும் சனியுடன் கூடினுலும் அழகு பொருந்திய மாடி பிராகாரம் (மதில்) இவற்ருல் அலங்கரிக்கப்பட்ட வீட்டைச் சொல்லவேண்டும்.

गेहाधिपो नाशगतो यदि स्यात्पापेक्षितस्तद्गृहनाशमत्र ।
गेहेशसंयुक्तनवांशनाथे नाशस्थिते स्यादपि गेहनाशः ॥ १० ॥

கிருஹநாச யோகம்.—(10) 4க் குடையவன் 8மிடத்திலிருந்தாலும் பாபரால் பார்க்கப்பட்டாலும் அந்தக் கிருஹத்திற்கு நாசத்தைச் சொல்லவேண்டும். 4க் குடையவனுடன் கூடின நவாம்சநாதன் 8 லிருந்தாலும் வீட்டின் நாசமுண்டாகும்.

बंधुस्थानेश्वरे सौम्ये सौम्यग्रहनिरीक्षिते ।
तत्कारके बलाढ्ये वा बंधुपूज्यो भवेन्नरः ॥ ११ ॥

बंधुस्थानगते जीवे तदीशे शुभसंयुते ।
गुरुदृष्टिसमायुक्ते बंधुश्रेष्ठो भवेन्नरः ॥ १२ ॥

பந்து பூஜ்யனுயாகும் யோகம்.—(11) 4 மிடத்ததிபன் சுபனுகி சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் 4ம் பாவகாரகன் (சந்திரன் புதன் இவர்கள்) பலம் பெற்றுலும் மனிதன் பந்து பூஜ்யனுக வாகிருன். (12) குரு 4மிடத்திலிருந்து 4க் குடையவன் சுபருடன் கூடி குருவினுல் பார்க்கப்பட்டால் மனிதன் பந்துக்களுக்குள் சிறந்தவனுக வாகிருன்.

बंधूपकर्ता तन्नाथे केन्द्रकोणेऽथ संयुते ।
वैशेषिकांशसंयुक्ते पापदृग्योगवर्जिते ॥ १३ ॥

बधूनामुपकारी स्याद्बंधौ गुर्वच्छसोमजाः ।
तेषां गृहे वा तैर्दृष्टे मृद्वंशादिसमन्विते ॥ १४ ॥

பந்துக்களுக்கு உபகரிக்கும் யோகம்.—(13) 4க் குடையவன் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ, வைசேஷிகாம்சத்திலோ இருந்து பாபரின் பார்வை சேர்க்கை இவையில்லாவிடில் பந்துக்களுக்கு உபகரிப்பவனுக வாகிருன். (14) 4 மிடத்தில் குரு, சுக்கிரன், புதன் இவர்களிருந்தாலும் அல்லது அவர்கள் வீடு 4 மிடமாக வானுலும், அல்லது அவர்களால் 4 மிடம் பார்க்கப்பட்டாலும் ம்ருத்வம்சாதிகளுடன் கூடினுலும் பந்துக்களுக்கு உபகாரியாக வாகிருன்.

बंधुभिस्त्यक्तपुरुष स्तदीशे पापसंयुते ।
क्रूरषष्ट्यंशके वा पि नीचारातिगृहेऽपि वा ॥ १५ ॥

பந்துக்களால் விடுபடும் யோகம்.—(15) 4க் குடையவன் பாபருடன் கூடினுலும், குரூர ஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், நீச வீட்டிலோ, சத்துரு வீட்டிலோ இருந்தாலும் புருஷன் பந்துக்களால் விடுபடுவான்.

बहुपापसमायुक्ते बंधौ पापे तथैव हि ।
तत्कारके तथैवात्र बंधूनां कुत्सितो भवेत् ॥ १६ ॥

नाथकारकसंयुक्तनवांशेशांशनायकः ।
नीचराशिगतो मूढो बंधूनां भयकर्मकृत् ॥ १७ ॥

பந்துக்களால் நிந்திக்கப்படும் யோகம்.—(16) 4மிடமோ, 4க் குடையவனே, 4ம் பாவகாரகனே வெகு பாபருடன் சேர்ந்திருந்தால் பந்துக்களுக்குள் வெறுக்கப்பட்டவனாக வாவான். (17) 4க் குடையவன் 4ம் பாவகாரகன் இவர்களுடன் கூடின நவாம்சாதிபதியிருக்கும் அம்சநாதன் நீசராசியிலோ, மூடனுகவோ இருந்தால் பந்துக்களுக்குப் பயத்தைச் செய்கிறவனாக ஆவான்.

बंधूपभोगी केन्द्रस्थे तदीशे शुभवीक्षिते ।
गोपुराद्यंशकेवापि मृदंशादिसमन्विते ॥ १८ ॥
धने लाभे त्रिकोणस्थे तन्नाथे शुभवीक्षिते ।
सौम्यग्रहाणामंशे वा बंधूनामुपकारकृत् ॥ १९ ॥

பந்துக்களின் போகானுபவ யோகம்.—(18) 4க்குடையவன் கேந்திரத்திலிருந்து சுபர் பார்வை பெற்ருே கோபுராதி அம்சமேறியோ ம்ருத்வம்சாதியிலோ இருந்தால் பந்துக்களின் உபபோகத்தை அனுபவிப்பான். (19) 4க் குடையவன் 2லோ, 11லோ, 5, 9லோ இருந்து சுபரால் பார்க்கப்பட்டிருந்தாலும், சுபக் கிரஹங்களின் அம்சத்திலிருந்தாலும் பந்துக்களுக்கு உபகாரம் செய்கிறவனாக ஆவான்.

बंधुद्वेषी भवेन्नित्यं पापाक्रान्तं गृहं यदा ।
नीचास्तखेटसंयुक्तं शुभदृग्योगवर्जितम् ॥ २० ॥

பந்து த்வேஷியாகும் யோகம்.—(20) நான்காமிடம் பாபாக்கிராந்தமானுலும், நீசமாகவோ அஸ்தங்கதமாகவோ உள்ள கிர

ஹத்துடன் கூடினாலும் சுபரின் வீக்ஷணம் சேர்க்கை இவையில்லாவிட்டாலும் எப்பொழுதும் பந்துத்வேஷியாக வாவான்.

**कस्मिंश्चित्खेचरेन्द्रे वा बंधौ स्वोच्चे स्वमित्रभे ।**
**गुरुणा दृष्टिसंपाते बंधुपूज्यो भवेन्नरः ॥ २१ ॥**

பந்து பூஜ்யனாகும் யோகம்.—(21) 4 மிடத்தில் ஒரு கிரஹமிருந்து அந்த நான்காமிடம் அந்தக் கிரஹத்தினது உச்ச வீடாகவோ மித்திரன் வீடாகவோ ஆகி குருவின் வீக்ஷணமிருக்குமானால் பந்து பூஜ்யனாக மனிதனாகிறான்.

**गृहस्थाने चरे लग्ने तदीशे चरराशिगे ।**
**तथैव तत्कारकेऽपि बहुस्थाने गृहं भवेत् ॥ २२ ॥**

பல வீடுகளில் வாஸமேற்படுதல்.—(22) 4மிடம் சராசியாகி அந்த 4க் குடையவன் லக்கினத்திலிருந்து அந்த 4ம் பாவகாரகனான சந்திரன் புதன் இவர்களும் லக்கினத்திலிருந்தால் வெகு இடத்தில் வீடு உண்டாகும். அதாவது: மேஷம், கடகம், துலாம், மகரம், இவற்றில் ஜனித்த ஜாதகர்கள் விஷயத்தில் தான் இந்தச் சுலோகத்திற் சொல்லியபடி அமையும். அவற்றுள் துலாலக்கினத்திற்கு உதாஹரணம் பின்வருமாறு—

ஆகவே இந்த ஜாதகத்தில் ஜன்மலக்கினம் துலாம். அதற்கு 4மிடமாக மகரமாகிறது. அந்த மகரத்திற்கு அதிபதி சனி. அவனும் 4ம் பாவகாரகர்களான சந்திர புதர்களும் சரமான லக்கினத்திலிருக்கின்றனர். இவ்விதமே மற்ற லக்கின விஷயத்திலும் கண்டு கொள்க.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | ராசி | | |
| | | | |
| | | ல. சனி, சந்தி. புதன். | |

**स्थिरे गृहे स्थिरगृहं नाथकारकयोरपि ।**
**षष्ट्यंशे शुभभागे वा तदीशे स्थैर्यतां व्रजेत् ॥ २३ ॥**

ஸ்திரக்கிருஹ வாஸயோகம்.—(123) நான்காமிடம் ஸ்திரராசி யாகவாகி 4க் குடையவர், 4ம் பாவகாரகர் இவர்களும் ஸ்திர ராசியிலிருந்தாலும் 4க் குடையவன் சுபஷஷ்ட்யம்சத்தி லிருந் தாலும் ஜாதகன் ஸ்திரமாய் ஒரேவீட்டில் வஸிப்பான்.

अर्थव्ययगृहेशैस्तैर्यावन्तः पापसंयुताः ।
तावद्गेहादिनाशस्स्याच्छुभदृष्टा न दोषदाः ॥ २४ ॥

अर्थव्ययगृहेशास्तु केन्द्रकोणादिसंयुताः ।
तावद्गेहालयं सर्वं शोभनं तत्र निर्दिशेत् ॥ २५ ॥

கிருஹநாச, கிருஹலாப யோகங்கள்.—(24) 2,12 4க்குடைய கிரஹங்களுடன் எவ்வளவு பாபக்கிரஹங்கள் சேருகின்றனவோ அவ்வளவு வீடு முதலியவற்றிற்கு நாசமுண்டாகும். சுபராற் பார்க்கப்பட்டாரானுல் தோஷத்தைத் தரமாட்டார். (25) 2, 12, 4க்குடையவர்கள் கேந்திரம்,திரிகோணம் இவற்றிலிருந்தார்களா னுல் அவ்வளவு வீடு, ஆலயம் யாவும் உண்டாவதுடன் அதில் சுபமும் உண்டாகும் என்று சொல்லவேண்டும்.

गृहेशे कर्मराशिस्थे कर्मेशे गेहमागते ।
बलयुक्ते धरासूनौ बहुक्षेत्रं विनिर्दिशेत् ॥ २६ ॥

बलाढ्ये कर्मराशीशे बंधुस्थानाधिपे तथा ।
तयोर्मैत्री यदा तस्य बहुक्षेत्रं विनिर्दिशेत् ॥ २७ ॥

क्षेत्रस्थाने शुभैर्युक्ते तदीशे शुभसंयुते ।
तत्कारके तथाप्राप्ते बहुक्षेत्रधनैर्युतः ॥ २८ ॥

क्षेत्राधिपे पंचमस्थे गोपुरांशादिसंयुते ।
मृद्वंशादिगते वापि बहुक्षेत्रसमन्वितः ॥ २९ ॥

வெகு நெல்விளையும் பூமியுண்டாகும் யோகம். —(26) 4க் குடையவன் 10 மிடத்திலும் 10க் குடையவன் 4 மிடத்திலு மிருந்து செவ்வாயும் பலம்பெற்று இருந்தால் வெகு நெல்விளை யும் பூமியுண்டாகும். (27) 10க் குடையவன் 4க் குடையவன் இவர்கள் பலம்பெற்றிருந்து இந்த 4, 10க் குடையவர்கள் ஒருவ ருக்கொருவர் மித்திரர்களாகவு மிருந்தாரானுல் அவனுக்கு வெகு நெல்விளையும் பூமியைச் சொல்லவேண்டும். (28) 4 மிடத்தில்

சுபரிருந்து 4க் குடையவன் சுபருடனும் கூடி 4ம் பாவகாரகனும் சுபருடன் கூடியிருந்தால் வெகு நெல்விளையும் பூமி, தனம் இவற்றுடன் கூடினவனாக வாகிறான். (29) 4க்குடையவன் 5லிருந்து கோபுராம்சாதியிலிருந்தாலும், ம்ருத்வம்சாதியிலிருந்தாலும் வெகு நெல்விளையும் பூமியுடன் கூடினவனாகிறான்.

भ्रातृकारकसंयुक्ते भ्रातृनाथेन संयुते ।
क्षेत्रे तदीश्वरे वापि भ्रातृक्षेत्रं विनिर्दिशेत् ॥ ३० ॥

क्षेत्रेशसंयुक्तनवांशनाथे केन्द्रस्थिते मित्रनिरीक्षिते वा ।
भौमान्विते भौमदृशा समेते भ्रातुर्धनं क्षेत्रमुदाहरन्ति ॥ ३१ ॥

लग्नेश्वरे क्षेत्रगते बलाढ्ये लग्ने बलिष्ठे यदि क्षेत्रनाथे ।
शुभग्रहैर्दृष्टसमागमेवा क्षेत्रं स्वकीयेन बलेन याति ॥ ३२ ॥

कलत्रकारके क्षेत्रे तदीशे वा कलत्रगे ।
तदीशयोस्तथामैत्र्यां कलत्रात्क्षेत्रमादिशेत् ॥ ३३ ॥

षष्ठेश्वरे क्षेत्रगते बलाढ्ये षष्ठस्थिते वा गृहभावनाथे ।
षष्ठेश्वरात्क्षेत्रगते बलाढ्ये शत्रोस्सकाशात्सधरामुपैति ॥ ३४ ॥

पारावतांशे स्वगृहे बलाढ्ये क्षेत्रेश्वरे चोपचयं गते वा ।
आरोहभागे शुभदृष्टियुक्ते क्षेत्रे बहुत्वं समुदाहरन्ति ॥ ३५ ॥

धनेशलाभेशसमन्विते वा क्षेत्रे तदीशेप्यथ कारके वा ।
वैशेषिकांशे शुभदृष्टियुक्ते बह्वर्थरूपं गृहमाहुरार्याः ॥ ३६ ॥

இன்னின்னார் மூலம் பூலாபமுண்டாகும் என்பது.—(30) 4 மிடமோ 4க் குடையவனோ 3க் குடையவனுடனோ 3ம் பாவகாரகனான செவ்வாயுடனோ கூடினால் ஸஹோதரரின் பூமியைச் சொல்லவேண்டும். (31) 4க் குடையவனிருக்கும் நவாம்சநாதன் கேந்திரமேறியோ, மித்திரனால் பார்க்கப் பட்டோ இருந்து செவ்வாயுடன் கூடியோ, செவ்வாயின் பார்வையையடைந்தோ இருந்தால் பிராதாவின் தனத்தையும், க்ஷேத்திரத்தையும் சொல்லுகின்றனர். (32) லக்கினாதிபதி பலம்பெற்று 4 மிடத்திலும், 4க் குடையவன் பலம் பெற்று லக்கினத்திலும் இருந்து சுபக் கிரஹங்களின் பார்வை சேர்க்கை இவற்றையும் அடைந்தால் தனது சொந்தமான ஸாமர்த்தியத்தால் பூமியை யடைகிறான்.

(33) களத்திரகாரகன் 4லிருந்து 4க் குடையவன் 7லுமிருந்து 7, 4க் குடையவர்கள் மித்திரர்களாயிருந்தால் களத்திரமூலம் பூமியுண்டாகும் என்று சொல்லவேண்டும். (34) 6க் குடையவன் பலம்பெற்று 4 மிடத்திலும் 4ம் பாவாதிபதி 6 மிடத்திலுமிருந்து 6க் குடையவனை விட 4 மிடத்திலிருப்பவன் அதிகம் பலமுள்ளவனுயிருந்தால் சத்துருவினிடமிருந்து அந்த ஜாதகன் பூமியையடைகிறுன். (35) 4க் குடையவன் பலம்பெற்று பாராவதாம்சத்திலோ, சொந்தவீட்டிலோ 3, 6, 10, 11 மிடங்களிலோ, * ஆரோஹபாகத்திலோ, சுபரின் திருஷ்டியை யடைந்தோ இருந்தால் வெகுவான க்ஷேத்திரமுண்டாகுதலே உதாஹரிக்கின்றனர். (36) 4 மிடமானது 2க் குடையவன், 11க் குடையவன் இவர்களுடன் கூடி இருந்து 4க் குடையவனே 4ம் பாவகாரகனே வைசேஷிகாம்சமேறி சுபர் பார்வையையும் பெற்றிருந்தால் வெகுரூபாய் மதிக்கக்கூடிய கிருஹமுண்டாகுமெனப் பெரியார் சொல்லுகின்றனர்.

क्षेत्रेश्वरे नीचगते विमूढे पापांतरे पापनिरीक्षितेवा ।
पापग्रहक्षेत्रगतेऽरिगेहे क्षेत्रादिनाशं कथयन्ति तज्ज्ञाः ॥ ३७ ॥
पापांतरस्थे यदि भूमिपुत्रे पापान्तरे पापनिरीक्षिते वा ।
पापग्रहक्षेत्रगतेऽथवा स्यात्क्रूरांशके भूमिविनाशमाहुः ॥ ३८ ॥
क्रूरादिषष्ट्यंशगते तदीशे क्षेत्रे सपापे यदि नीचभे वा ।
दुःस्थेऽरिगेहे त्वतिभीषणांशे क्षेत्रादिनाशं कथयन्ति तज्ज्ञाः॥
क्षेत्रेश्वरे पापयुते धनस्थे नीचारिभे क्षेत्रविनाशमेति ।
स्वोच्चस्थिते तद्भवनेश्वरे तु पापान्विते विक्रयमेति भूमेः॥४०॥
आज्ञाक्षयात्क्षेत्रविनाशमाहूराज्येश्वरे क्षेत्रगते सपापे ।
क्रूरांशके मृत्युयमादिभागे कर्मेश्वरेणापि युते तथैव ॥ ४१ ॥
आज्ञाक्षयाद्भूमिविनाशमेति राज्येशतत्कारकभूमिनाथे।
क्रूरांशके वा त्ववरोहभागे नाशस्थिते मृत्युयमादिभागे ॥४२॥
राजाज्ञया क्षेत्रविनाशमेति भानौ तदीशेन युतेऽपि निम्ने ।
धनेशसंयुक्तनवांशनाथयुक्तांशपेनापि युते सपापे ॥ ४३ ॥

---

* நீசபாகம் விட்டு உச்சத்திற்குப்போக ஆரம்பஞ்செய்தவிடம் ஆரோஹபாகம் எனப்படும்.

பூமிக்கு நாசமுண்டாகும் யோகம்.—(37) 4க் குடையவன் நீசத்தை யடைந்தோ, அஸ்தங்கதனுகியோ, இருபாபக்கிரஹங்களின் நடுவிலோ, பாபரால் பார்க்கப்பட்டோ, பாபரானகிரஹத்தின் வீட்டை யடைந்தோ, அல்லது சத்துருவீட்டிலோ இருந்தால் க்ஷேத்திராதிநாசத்தைப் பெரியாருபதேசிக்கின்றனர். (38) 4 மிடத்திற்கு இருபுறத்திலும் பாபரிருந்தாலும், செவ்வாய் பாபக்கிரஹத்தின் நடுவிலோ பாபராற் பார்க்கப்பட்டோ, பாபக்கிரஹத்தின் வீட்டையடைந்தோ இருந்தாலும், அல்லது குரூராம்சத்திலிருந்தாலும் பூமிநாசத்தைச் சொல்லுகின்றனர். (39) 4க் குடையவன் குரூராதி ஷஷ்ட்யம்சத்தை யடைந்து க்ஷேத்திரத்தில் (4 மிடத்தில்) பாபருமிருந்தாலும், அல்லது 4க் குடையவன் நீசவீட்டிலோ, 6, 8, 12 மிடங்களிலோ, சத்துருவீட்டிலோ அதிபீஷணும்சத்திலோ இருந்தாலும் அறிஞர்யாவரும் க்ஷேத்திராதிநாசத்தைச் சொல்லுகின்றனர். (40) 4க் குடையவன் பாபருடன் கூடி 2 விருந்தாலும், நீசவீடு, சத்துருவீடு இவற்றிலிருந்தாலும் க்ஷேத்திரவிநாசத்தைச் சொல்லுகின்றனர். 4க் குடையவன் உச்சத்திலிருந்து பாபருடன்கூடினுல் பூமியை விக்கிரயம் செய்து விடுகிருன். (41) 10க் குடையவன் பாபருடன் கூடி 4 மிடத்திலிருந்தால் (1) ஆக்ஞையின் குறைவினுல் க்ஷேத்திரவிநாசத்தைச் சொல்லுகின்றனர். 10க் குடையவனுடனும் கூடி குரூராம்சத்திலோ, (2) ம்ருத்யுபாகம், யமபாகம் இவற்றிலோ இருந்தால் ஆக்ஞையின் குறைவினுல் க்ஷேத்திரநாசத்தைச் சொல்லுகின்றனர். (42) 10க் குடையவன், 10ம் பாவகாரகன் 4க்குடையவன் இவர்கள் குரூராம்சத்திலோ, உச்சம்விட்டு நீசத்திற்கு வரும்வழியிலோ, 8மிடத்திலோ, மிருத்யு, யமாதிபாகத்திலோ இருந்தாரானுல் ஆக்ஞையின் குறைவால் பூமி விநாசத்தை யடைகிருன். (43) சூரியன் 4க் குடையவனுடன் கூடி நீசத்திலிருந்தாலும்,2க்குடையவனுடன் கூடின நவாம்சநாதனிருக்கும்

---

(1) ராஜாங்க ஆக்ஞையை மீறிநடந்ததற்காக ராஜாங்கத்தில் பூமியைப் பிடுங்கிக் கொண்டு விடுகின்றனர் என்றும் சொல்லலாம்.

(2) இவை இரண்டும் ஷஷ்டியம்சத்தி லொன்ருகும்.

அம்சாதிபதியுடன் கூடினாலும், பாபருடன் கூடினாலும் ராஜாக்ஞையால் க்ஷேத்திரவிநாசத்தை யுபதேசிக்கின்றனர்.

जीवेन दृष्टे यदि वा तदीशे रम्ये गुरौ शोभनखेचरे वा ।
सौम्यान्तरे तद्भवने ससौम्ये सुखी भवेत्सर्वजनेषु मुख्यः ॥ ४४ ॥

சுகியாகும் யோகம்.—(44) 4க் குடையவன் குருவினாற் பார்க்கப்பட்டாலும், அல்லது குருவோ, வேறு சுபக்கிரஹமோ அஸ்தங்கதனாக இல்லாமலிருந்தாலும், 4மிடம் சுபரின் நடுவிலிருந்தாலும், சுபருடன் கூடினாலும் அப்பொழுது பிறந்தவன் சுகியாகவும் எல்லாஜனங்களுக்குள்ளும் முக்கியனாகவும் ஆகிறான்.

जीवे बलाढ्ये सुखराशिनाथयुक्ते ससौम्ये तु चतुष्टये वा ।
जीवेन दृष्टे यदि वा तदीशे मृद्वंशके वा सुखभाङ्नरस्स्यात् ॥ ४५ ॥
सुखे गुरौ शोभनखेचरेवा सौम्यान्तरे तद्भवने ससौम्ये ।
जीवे बलाढ्ये यदि लग्ननाथात्सुखी भवेत्सर्वजनेषु मुख्यः ॥ ४६ ॥
गोपुराद्यंशकेवापि सुखपे देवपूजिते ।
धनायवृद्धिभावेषु तस्मिन्खेटे सुखी भवेत् ॥ ४७ ॥

சுகியாகும் யோகம்—(45) குரு பலம்பெற்று 4க் குடையவனுடன் கூடினாலும், கேந்திரமானது சுபருடன் கூடியிருந்தாலும், 4க் குடையவன் குருவினால் பார்க்கப்பட்டாலும், ம்ருத்வம்சத்திலிருந்தாலும் மனிதன் சுகத்தையடைந்தவனாக ஆவான். (46) 4 மிடத்தில் குருவோ, வேறு சுபக்கிரஹமோ, இருந்தாலும், 4 மிடத்திற்கிருபுறத்திலும் (அதாவது: 3–5 மிடங்களில்) சுபர் இருந்தாலும், புதனுடன் கூடின குரு லக்கினாதிபதியைக் காட்டிலும் பலம்பெற்றிருந்தாலும் சுகியாகவும், எல்லாஜனங்களுக்குள்ளும் முக்கியனாகவும் ஆவான். (47) 4க்குடையவனை குரு கோபுராத்யம்சமேறியிருந்தாலும், அல்லது அந்தக் குரு 2, 11, 4 மிடங்களிலிருந்தாலும் சுகியாக வாகிறான்.

सौम्येतरान्विते सौख्ये बलहीने गुरावपि ।
सपापे दुर्बले नाथे दुःखी स्यादर्थसंयुतः ॥ ४८ ॥
पुत्रार्थबंधुयुक्तश्चेद्दुःखी स्यान्नीचखेचरे ।
दुःखी तदीशे पापेन युक्ते क्रूरांशसंयुते ॥ ४९ ॥

रव्यारयुक्ते सुखराशिनाथे क्रूरांशके सौम्यदृशा विहीने।
आरोहभागेतरभागयुक्ते जातो नरो दुःखित एव नित्यम्॥५०॥

துக்கியாகும் யோகம்.—(48) 4மிடம் பாபருடன் கூடினும் குரு பலஹீனனுயிருந்தாலும், 4க் குடையவன் பாபருடன் கூடி துர்ப்பலனு யிருப்பினும் பொருளுள்ளவனுயினும் துக்கியாக விருப்பான். (49) நீசத்தை யடைந்தக் கிரஹமானது 5, 2, 4 மிடங்களிலிருப்பினும் துக்கியாக வாகிறுன். 4க் குடையவன் பாபருடன் கூடி குரூராம்ச மேறியிருந்தால் துக்கியாகவாகிறுன். (50) 4க் குடையவன் சூரியன், செவ்வாய் இவர்களுடன் கூடி குரூராம்சத்திலிருந்து சுபர்பார்வை பெறுமல் அவரோஹபாகத் திலு மிருந்தால் எப்பொழுதும் துக்கியாகவே இருப்பான்.

नीचारिभागे रविभूमिपुत्रे सुखस्थिते पापदृशा समेते।
क्रूरांशके तद्भवनाधिनाथे गृहार्थहीनो भवति प्रमादात्॥५१॥

கவனக்குறைவால் கிரஹம், தனம் இவற்றிற்கு நாசமுண்டாகுதல்.—(51) சூரியன் செவ்வாய் இவர்கள் நீசபாகத்திலோ சத்துரு பாகத்திலோ 4மிடத்திலிருந்து பாபர் வீக்ஷணமும் பெற்றுலும், 4க் குடையவன் குரூராம்சத்திலிருந்தாலும் தனது தவறுகளால் கிரஹம், தனம் இவையற்றவனுக ஆகிறுன்.

पापान्विते पापनिरीक्षिते वा पापान्तरे वा सुखपे तदीशे।
क्रूरादिषष्ट्यंशसमन्विते वा पापी नरस्स्याच्छुभदृष्टियुक्ते॥५२॥
पापे बहुत्वे सुखराशियुक्ते तदीश्वरे चारिविमूढयाते।
पापान्विते वा यमसूनुयुक्ते जातो बहुत्वं समुपैति पापम्॥५३॥

பாபியாகவாகும் யோகம்.—(52) 4க் குடையவன் பாபருடன் கூடியோ, பாபரால் பார்க்கப்பட்டோ, பாபரின் நடுவிலோ இருந்தாலும், 4க் குடையவன் சுபரின் பார்வைபெறினும் குரூராதி ஷஷ்டியம்சத்திலிருந்தாலும் மனிதன் பாபியாகவாகிறுன். (53) வெகு பாபர்கள் 4மிடத்திலிருந்து, 4க் குடையவன் சத்துரு வீட்டிலோ அஸ்தங்கதனுகவோ இருந்து, இரண்டு பாபக்கிரஹத்தின் நடுவிலுமிருந்து சனியுடன் கூடினுலும் அப்பொழுது பிறந்தவன் வெகு பாபத்தை யடைகிறுன்.

शुक्रेन्दुविद्देवपुरोहितानां क्षेत्रे सुखे पूर्णबलान्वितानाम् ।
शुभान्विते शोभनदृष्टियाते जातो नरोऽयं भुवि भुक्तिभाक्स्यात् ॥

போகானுபவம் செய்யும் யோகம்.—(54) பூர்ணபலம்பெற்ற சுக்கிரன், சந்திரன், புதன், குரு இவர்களின் வீடு 4 மிடமாக வாகி சுபரின் சேர்க்கை, பார்வை இவற்றை யடையுமானால் அது போழ்து பிறந்த மனிதன் பூமியில் போகானுபவம் செய்கின்றவனுக வாகிறுன்.

बुधयुक्ते सिते सौख्ये सौम्यमध्यगतेऽपि वा ।
गोपुराद्यंशगे वापि पुण्यभाक्सनरो भवेत् ॥ ५५ ॥

புண்யசாலியாகவாகும் யோகம்.—(55) 4 மிடத்தில் புதனுடன் கூடின சுக்கிரனிருந்தாலும், சுபக்கிரஹத்தின் நடுவிலிருந்தாலும், கோபுராத்யம்சத்தில் புதசுக்கிரர்களிருந்தாலும் அந்த மனிதன் புண்ணியத்தை யடைந்தவனுக வாகிறுன்.

नीचान्विते मूढयुते सुखस्थे सपत्नभे वा जलराशिसंज्ञे ।
तदीश्वरे हीनबले तदानीं पतत्यसौ कूपतटांबुराशौ ॥ ५६ ॥
लग्नेश्वरे हीनबले सुखस्थे नीचेऽर्कयुक्ते यदि वा सपापे ।
जलग्रहेणापि युते सुखेशे बलेन हीने जलराशिमग्नः ॥ ५७ ॥

सरित्स्थानाधिपे लग्ननाथेन सहिते सुखे ।
कर्माधिपेन संदृष्टे नदीकूपतटादिषु ॥ ५८ ॥

पतनं कूपनद्यादौ सुखेशस्थानराशिपः ।
सरित्स्थानेशसंदृष्टो यदिवा सुखपेन युक् ॥ ५९ ॥

ஜலத்தில் விழும் யோகம்.—(56) 4க் குடையவன் துர்ப்பலனுய் நீசராசியிலோ சூரியனில் அஸ்தங்கதனுகவோ ஆகி 4மிடத்திலிருந்தாலும் சத்துரு ராசியிலிருந்தாலும், ஜலராசியிலிருந்தாலும் அப்பொழுது பிறந்தவன் கிணறு, குளம், சமுத்திரம் இவற்றில் விழுவான். (57) லக்கினுதிபதி பலமற்றவனுய் 4லி விருந்தாலும், நீசத்தை யடைந்து சூரியனுடன் சேர்ந்தும் பாபருடன் சேர்ந்து மிருந்தாலும், 4க் குடையவன் பலஹீனனுய் ஜலக்கிரஹத்துடன் கூடினுலும் அதிக ஜலமுள்ளவிடத்தில் (ஸமுத்திரமென்றும் சொல்லலாம்) முழுகி விடுவான். (58) 4க் குடைய

வன் லக்கினாதிபதியுடன் கூடி 4லி லிருந்து 10க் குடையவனால் பார்க்கப்பட்டால் ஆறு, கிணறு, குளம் இவைகளில் முழுகி விடுவான். (59) 4க் குடையவனிருக்கும் ராசிநாதன் 4க் குடையவனின் பார்வையையோ சேர்க்கையையோ அடைந்தால் கிணறு, நதி முதலியவற்றில் விழுதலுண்டாகும்.

शिलाप्रहारस्तस्य स्याद्रविभौमान्विते सुखे।
दृष्टे युते कर्मपेन सरित्स्थानाधिपेन वा ॥ ६० ॥
सुखेशे राहुमन्दाभ्यां सहिते कुजवीक्षिते ।
शुभदृष्टिविहीने तु शिलाभिः पीडितो नरः ॥ ६१ ॥

கல்லாலடிபடும் யோகம்.—(60) 4மிடம் சூரியன் செவ்வாய் இவர்களுடன் கூடினாலும் 10க் குடையவனுடனோ, 4க் குடையவனுடனோ, சேர்க்கை, அல்லது பார்வை இவற்றை யடைந்தாலும், அவனுக்குக் கல்லால் அடியுண்டாகும். (61) 4க் குடையவன் ராகு சனி இவர்களுடன் கூடி செவ்வாயினாலும் பார்க்கப்பட்டு சுபர்பார்வையு மில்லாவிடில் மனிதன் கற்களால் பீடிக்கப்பட்டவனாகவாகிறான்.

केन्द्रस्थिते रात्रिकरे भृगौ वा पापान्विते पापनिरीक्षिते वा ।
क्रूरांशके वा त्ववरोहभागे सोऽयं जनन्या सह संङ्गमेति ॥ ६२ ॥
पापेक्षिते पापयुते शशांके दिवाकरे वा यदि केन्द्रराशौ ।
क्रूरे सुखे वा यदि पापदृष्टे जातो नरस्स्यादिह मातृगामी ॥ ६३ ॥
पापेक्षिते वा सुखभावनाथे पापान्विते सौम्यदृशा विहीने ।
दारेश्वराल्लग्नपतौ विहीने जातो नरो मातृसमानगामी ॥ ६४ ॥

மாதிரு கமனம் செய்யும் யோகம்.—(62) சந்திரனோ, சுக்கிரனோ கேந்திரத்திலிருந்து பாபருடன் கூடியோ, பாபரால் பார்க்கப்பட்டோ, குரூராம்சமேறியோ, அவரோஹபாகமேறியோ இருந்தால் *மனிதன் மாதாவுடன் ஸங்கமத்தை யடைகிறான். (63) சந்திரன் பாபரால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தா

---

* இதுபோன்ற சுலோகத்தினுரை எழுதும்பொழுது எமது கை நடுங்குகின்றதாயினும் சாஸ்திரத்திற் சொல்லியிருப்பதைவிட மனமில்லாமை பற்றி மொழிபெயர்த்திருக்கிறோம்.

லும், சூரியனாவது கேந்திரத்திலிருந்தாலும், 4 மிடத்தில் பாப ரிருந்தாலும், பார்த்தாலும் மனிதன் மாதிருகமனம் செய்வான். (64) 4க் குடையவன் பாபரால் பார்க்கப்பட்டோ, பாபருடன் கூடியோ, சுபரின் பார்வை பெறுமலோ இருந்து 7க் குடையவனைக் காட்டிலும் லக்கிணதிபதி குறைந்த பலமுள்ளவனாக யிருப்பானேயானல் மாதாவுக்கு ஸமானமானவருடன் சேர்க்கையை யடைவான்.

सहोदरीसंगममाहुरन्ये दारेश्वरे क्रूरयुते सुखस्थे ।
पापेक्षिते पापसमन्विते वा क्रूरादिषष्ट्यंशसमन्विते वा ॥ ६५ ॥
सुखे शनौ पापनिरीक्षिते वा पापान्विते तादृशपापयुक्तः ।
पापग्रहाणां भवने सुखे तु क्रूरादिषष्ट्यंशयुते तथैव ॥ ६६ ॥

ஸஹோதரீ ஸங்கம யோகம்.—(65) 7க்குடையவன் குரூரக் கிரஹத்துடன் கூடி 4 மிடத்திலிருந்து பாபரின் பார்வை, சேர்க்கை இவற்றை யடைந்தோ இருந்தாலும், குரூராதி ஷஷ்டியம்சத்திலோ இருந்தாலும் ஸஹோதரீ ஸங்கமத்தைச் சிலர் சொல்லுகின்றனர். (66) 4ல் சனியிருந்து பாபரால் பார்க்கப்பட்டோ, கூடியோ இருந்தால் முற்கூறிய பாபச்செய்கையையே செய்வான். 4 மிடமானது பாபக் கிரஹங்களின் வீடாகவாகி குரூராதி ஷஷ்டியம்சத்திலிருந்தாலும் முற்கூறிய பாபச் செய்கையையே செய்வான்.

षष्ठेशभूनन्दनसंयुतेऽब्जे सुखस्थिते पापनिरीक्षिते वा ।
चन्द्रेणसंयुक्तनवांशनाथे तथाविधे मातरि दोषमाहुः ॥ ६७ ॥
सुखेश्वरे राहुयुते सपापे शनैश्चरेणापि दिवाकरेण ।
मातान्यसक्ता सुखराशिनाथसंयुक्तभागाधिपतौ तथैव ॥ ६८ ॥

மாதாவினிடத்தில் தோஷத்தைத் தெரிவிக்கும் யோகம்.—(67) சந்திரன் 6க் குடையவன் செவ்வாய் இவர்களுடன் கூடி பாபரால் பார்க்கப்பட்டாலும், சந்திரனுடன் கூடின நவாம்சநாதன் செவ்வாய், 6க் குடையவன் இவர்களுடன் கூடி பாபரால் பார்க்கப்பட்டாலும் மாதாவினிடத்தில் தோஷத்தைச் சொல்லுகின்றனர். (68) 4க் குடையவன் ராகுவுடனும் வேறு பாபக் கிரஹத்துடனும்கூடினாலும், அல்லது சனியுடனே, சூரியனுடனே

கூடினாலும், அல்லது 4க்குடையவனிருக்கும் நவாம்சநாதன் முற்கூறியபடி யிருந்தாலும் தாய் வேறு புருஷனுடன் ஸம்பந்தத்தை யடைந்தவளாகவாவாள்.

सुखेश्वरे लग्नगते बलाढ्ये गुर्विन्दुसौम्यास्फुजिदर्कदृष्टे ।
वैशेषिकांशे शुभदृष्टियुक्ते पतिव्रता तस्य भवेत्सवित्री ॥ ६९ ॥

மாதாவின் பாதிவ்ரத்யத்தைக் காட்டும் யோகம்.—(69) 4க்குடையவன் பலம் பெற்று லக்கினத்திலிருந்து குரு, சந்திரன், புதன், சுக்கிரன், சூரியன் இவர்களால் பார்க்கப்பட்டாலும்,சுபர் பார்வை பெற்று வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் அவனது தாய் பதிவ்ரதையாக இருப்பாள்.

तथाविधे शीतकरे सराहुकेतौ सवित्री यदि नीचसक्ता ।
मन्देन युक्ते सति शूद्रसक्ता वैश्येन सक्ता शशिसूनुयुक्ते ॥ ७० ॥
रव्यन्विते क्षत्रियजातिसक्ता शुक्रेज्ययुक्ते द्विजपुंगवैश्च ।
धरासुतेनापि तथाविधेन वक्तुः फलं तादृशमेवसत्यम् ॥ ७१ ॥

மாதா இன்னின்ன புருஷனுடன் சேருவாளென்பது.—(70) சந்திரன் முற்கூறியபடி யிருந்து ராஹுவுடனே கேதுவுடனே சேர்க்கையை யடைந்தால் மாதா நீசனுடன் சேருவள். சனியுடன் கூடினல் சூத்திரனுடனும்,புதனுடன் கூடினல் வைசியனுடனும் சேருவள். (71) சூரியனுடன் கூடினல் க்ஷத்திரி ஜாதி புருஷனுடனும், குரு சுக்கிரனுடன் கூடினல் பிராம்மணனுடனும், செவ்வாயுடன் கூடினல் க்ஷத்திரியனுடனும் சேருவாள் என்று சொல்லுபவரின் பலன் அவ்விதமே ஸத்தியமாகநடக்கும்.

षष्ठेश्वरेण सहिते सुखराशिनाथे भाग्यस्थिते जनकमत्र विटं करोति ।
भाग्याधिपेन सहिते यदि मातृनाथे सौख्यस्थिते जनकमत्र विटं करोति ॥

பிதாவிடனுகுதல்.—(72) 4க் குடையவன் 6க் குடையவனுடன் சேர்ந்து 9 மிடத்திலிருந்தால் பிதாவைக் காமுகனுக்குகிறது. 4க் குடையவன் 9க் குடையவனுடன் சேர்ந்து 4லிருந்தாலும் பிதாவை விடனுக்கும்.

लग्नेशभाग्येशसुखेशयुक्ते षष्ठाधिपे स्यात्परजात एव ।
तदंशनाथेन युते तदीशे पापेक्षितस्स्यात्परजात एव ॥ ७३ ॥

पापान्तरे मातृगृहे तदीशे तत्कारके वा शुभदृष्टियुक्ते ।
लग्नेश्वराद्धीनबले शुभेशे जातस्तदानीं परजात एव ॥ ७४ ॥

न वीक्ष्यते तद्गुरुणा विलग्नं निशाकरो वा गुरुणा न दृष्टः ।
दिवाकरेणापि युते शशाङ्के सपापचन्द्रे रविणा तथैव ॥ ७५ ॥

पापे शुभे मातृगृहे सपापे लग्नेश्वरे हीनबले सपापे ।
क्रूरांशकादौ सुखभे तदानीं जातो नरस्स्यात्परजात एव ॥ ७६ ॥

பிறர்க்குப் பிறந்த யோகம்.—(73) 6க்குடையவன், லக்கினேசன் 9க் குடையவன் 4க் குடையவன் இவர்களுடன் கூடியிருந்தால் பிறர்க்குப் பிறந்தவனே ஆவான். 6க் குடையவன் முற்கூறிய அம்சநாதனுடன் சேர்ந்து பாபரால் பார்க்கப்பட்டாலும் பிறர்க்குப் பிறந்தவனே ஆவான். (74) 4 மிடமானது பாபக்கிரஹங்களின் நடுவிலிருந்து 4க் குடையவனோ 4ம் பாவகாரகனோ சுபரின் பார்வையைப் பெற்று 9க் குடையவன் லக்கினாதிபதியைக் காட்டிலும் குறைந்த பலமுள்ளவனாக இருந்தால் பிறர்க்குப் பிறந்தவனே ஆவான். (75) லக்கினமோ, சந்திரனோ குருவினால் பார்க்கப்படாவிட்டாலும், சந்திரன் சூரியனுடன் கூடினாலும், பாபருடன் கூடின சந்திரன் சூரியனுடன் கூடினாலும் பிறர்க்குப் பிறந்தவனே ஆவான். (76) 9ல் பாபரிருந்து, 4லிலும், பாபரிருந்து, பாபருடன் கூடின லக்கினாதிபதியும் பலம் குறைந்து 4 மிடத்தில் குரூராம்சகாதிகளிலிருந்தால் அப்பொழுது பிறந்தவன் பிறர்க்குண்டானவனே ஆவான்.

मातृस्थाने शुभयुते कारके शुभसंयुते ।
तद्भावपे बलाढ्ये वा मातुरायुष्यमादिशेत् ॥ ७७ ॥

चन्द्रे बलिष्ठे यदि वा भृगौ वा सौम्येक्षिते शोभनभागयुक्ते ।
चतुष्टये मातृगृहाच्छुभाढ्ये मातुश्च दीर्घायुरुदाहरन्ति ॥ ७८ ॥

भावेशसंयुक्तनवांशनाथयुक्तांशपे केन्द्रयुते बलाढ्ये ।
तस्मिन् शशांकाद्यदि केन्द्रयुक्ते मातुश्च दीर्घायुरुदाहरन्ति ॥ ७९ ॥

மாதாவுக்கு தீர்க்காயுள் யோகம்.—(77) 4மிடத்தில் சுபரிருந்து மாதிருகாரகனும் சுபருடன் கூடி அந்தப் பாவாதிபதியும் பலம் பெற்றனேயானால் மாதாவுக்கு நீண்டவாயுளைச் சொல்ல

வேண்டும். (78) சந்திரனோ சுக்கிரனோ பலம் பெற்று சுபரால் பார்க்கப்பட்டு சுபாம்சத்திலுமிருந்து 4 மிடத்திற்குக் கேந்திரத்தில் சுபருமிருந்தால் மாதாவுக்குத் தீர்க்காயுளுண்டு. (79) மாதிருபாவேசனிருக்கும் நவாம்சத்தின் பதியுடன் கூடின அம்சபதியானவன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்தாலும், பாவாதிபதியானவன் சந்திரனுக்குக் கேந்திரத்திலிருந்தாலும் மாதாவுக்குத் தீர்க்காயுளைச் சொல்லுகின்றனர்.

पापान्तरे पापयुते शशांके पापेक्षिते मातृगृहे विनाशः ।
शुक्रात्तथैवं प्रवदन्ति सन्तः तत्स्थानपाद्वा कथयन्ति शेषम् ॥ ८० ॥

निशाकरात्पापयुते स्मरे वा भृगोस्तथैवं जननीविनाशम् ।
सुखे शनौ मातृविनाशमेति पापेक्षिते चेदचिरेण नाशः ॥ ८१ ॥

शुभेक्षितश्चेच्चिरकालमृत्युमुदाहरन्त्यत्र महानुभावाः ।
पापग्रहाणां भवने शनौ तु पापान्विते मातृविनाशमेति ॥ ८२ ॥

मातृस्थानाधिपस्थांशराशीशो यन्नवांशके ।
तदंशनाथकिरणान्मातृकालं विनिर्दिशेत् ॥ ८३ ॥

नाथकारकराशीनां मध्ये यो बलवान्भवेत् ।
यावानंशस्तदंशे स्यान्मेषादौ तत्र मृत्युदः ॥ ८४ ॥

वक्रेतु द्विगुणं प्रोक्तं त्रिगुणं त्वतिवक्रगे ।
चतुर्गुणं शुभैर्दृष्टे कालमेवं विनिर्दिशेत् ॥ ८५ ॥

மாதிரு நாச யோகம்.—(80) சந்திரன் பாபர்களின் நடுவிலோ, பாபரின் சேர்க்கையை யடைந்தோ இருந்து 4 மிடம் பாபரால் பார்க்கப்பட்டால் மாதாவுக்கு நாசமுண்டாகும். முற்கூறிய படிக்குள்ள சுக்கிரனைக்கொண்டும் இம்மாதிரியான பலனைப்பெரியார் உபதேசிக்கின்றனர். மாதிரு ஸ்தானாதிபதியைக் கொண்டு மீதமுள்ளதைச் சொல்லுகின்றனர். (81) சந்திரனுக்கு 7 மிடமானது பாபருடன் கூடினாலும், இவ்விதமே சுக்கிரனுக்கு 7மிடமிருந்தாலும் தாயின் நாசத்தைச் சொல்லுகின்றனர். 4ல் சனியிருந்தால் மாதிரு நாசத்தை யடைகிறான். அத்தகைய சனி பாபர் வீக்ஷணத்தையும் அடைந்தால் வெகு சீக்கிரத்தில் தாய் மரிப்பாள். (82) அத்தகைய சனி சுபேக்ஷிதனாக யிருந்தால் தாய்க்கு

வெகு காலஞ் சென்று மரணத்தைப் பெரியாருபதேசிக்கின்றனர். பாபக்கிரஹங்களுடைய வீட்டில் சனியிருந்து பாபரின் சேர்க்கையையுமடைந்தால் தாய்க்கு நாசமுண்டாகும். (83) 4க்குடையவனிருக்கும் அம்சராசீசன் எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அந்த அம்சநாதனுக்குரிய *கிரணத்தைக் கொண்டு மாதாவின் காலத்தைக் குறிக்கவேண்டும். (84) 4க் குடையவன், காரகன், 4மிடம் இவற்றுள் எது வலுவுடையதோ அதன் அம்சமானது மேஷாதியாக எவ்வளவு அம்சமாக வாகிறதோ அவ்விடத்தில் மரணத்தைத் தருவான். (85) கிரஹம் வக்கிரமானால் அதன் மூலமுண்டாகும் பலன் இரண்டு மடங்கு அதிகமாகவும், (1)அதிவக்ரியானால் 3 மடங்கு பலனென்றும், சுபரால்பார்க்கப்பட்டால் 4 மடங்கு பலனென்றும் கண்டு இவ்விதம் காலத்தைக் குறிக்க வேண்டும்.

हृदये पापसंयुक्ते पापदृष्टे तदीश्वरे ।
पापान्तरे वा हृदये हृत्कापट्यं विनिर्दिशेत् ॥ ८६ ॥

शन्यारराहुसंयुक्ते हृदये शुभवर्जिते ।
तथैव तद्भावनाथे हृत्कापट्यं विनिर्दिशेत् ॥ ८७ ॥

पापे कर्मेश्वरे सौख्ये कपटी पापवीक्षिते ।
सपापे रंध्रपे सौख्ये कापट्यं पापसंयुते ॥ ८८ ॥

भानुना क्षीणचन्द्रेण सहितं हृदयं यदा ।
कपटी क्षणमात्रं तु निष्कापट्यं तदूर्ध्वत: ॥ ८९ ॥

மனதில் கபடியாகும் யோகம்.—(86) 4ல் பாபரிருந்தாலும், 4க் குடையவன் பாபரால் பார்க்கப்பட்டாலும் 4க்கு இருபுறத்திலும் பாபர் இருந்தாலும் மனதில் காபட்யத்தைச் சொல்லவேண்டும். (87) 4 மிடம், சனி செவ்வாய் ராஹு இவர்களுடன் கூடி இருந்து சுபக்கிரஹத்தின் சேர்க்கை இல்லாதிருந்தாலும், 4ம் பாவநாதன் முற்கூறியபடி இருந்தாலும் மனத்தில் கபடத்தை உபதேசிக்கவேண்டும். (88) 10க் குடையவன் பாபியாகி பாப

---

* இந்த கிரண விஷயமாய் ஸாராவளியில் 36-வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறது. அங்கு அதைக் காண்க.

(1) பின்னுள்ள ராசியையடைவது அதிவக்ரமெனப்படும்.

ரால் பார்க்கப்பட்டு 4 மிடத்திலிருந்தால் கபடியாவான். பாப ருடன் கூடின 8க் குடையவன் 4ல் இருந்தாலும் பாபருடன் கூடினும் காபட்யத்தைச் சொல்லவேண்டும். (89) 4 மிடத்தில் தேய்பிறைச் சந்திரனுடன் கூடின சூரியனிருந்தால் க்ஷண மாத்திரம் கபடியாகவிருந்து பிறகு நிஷ்கபடியாகவாவான்.

हृदये शुभसंयुक्ते स्वोच्चमित्रगृहान्विते ।
शुभग्रहाणां क्षेत्रे वा निष्कापट्यं विनिर्दिशेत् ॥ ९० ॥

विशुद्धहृदयश्शान्तो हृदयेशे बलान्विते ।
गोपुराद्यंशके वापि मृद्वंशादियुते तथा ॥ ९१ ॥

लग्नेश्वरे हृद्गते वा शुभयुक्तेक्षितेऽपि वा ।
पारावतादिभागस्थे निष्कापट्यं विनिर्दिशेत् ॥ ९२ ॥

लग्ने गुरौ दानवपूजितेन युक्ते यदा तस्य विशुद्धचित्तम् ।
पापे सुखे तद्भवनाधिनाथे पापान्विते तस्य विशुद्धचित्तम् ॥ ९३ ॥

राहौ सुखे पापदृशा समेते बहिर्विशुद्धिन्त्वतिमात्रमेति ।
अन्तर्गतं तत्कपटं वदन्ति पापे बहुत्वे सुखराशियुक्ते ॥ ९४ ॥

நிஷ்கபடயோகம்.—(90) 4 மிடத்தில் சுபரிருந்து, தனது வீடு, உச்சவீடு, மித்திரவீடு இவற்றிலுள்ளக் கிரஹத்துடனும் கூடுமானுலும், சுபக்கிரஹங்களின் வீடாகவானுலும் நிஷ்காபட்டியத்தைச் சொல்லவேண்டும். (91) 4க் குடையவன் பலம் பெற்று கோபுராத்யம்சத்திலோ, ம்ருத்வம்சாதிகளிலோ இருந்தால் சுத்த சித்தனுகவும் சாந்தனுகவுமிருப்பான். (92) லக்கினுதிபதி 4லி லிருந்தாலும், சுபரின் சேர்க்கை பார்வை இவற்றை யடைந்தாலும், பாராவதாதி பாகத்திலிருந்தாலும் கபடமற்றவனுவான். (93) லக்கினம் குரு சுக்கிரனுடன் கூடி இருந்தால் அவனது சித்தம் சுத்தமாகயிருக்கும். 4லில் பாபரிருந்தாலும் 4க் குடையவன் பாபருடன் கூடினுலும் அவனது சித்தம் விருத்தமாகயிருக்கும். (94) 4லில் ராகுவிருந்து பாபர் பார்வைபெற்ருல் வெளிக்கு அதிகம் சுத்தனுகவும் உள்ளில் கபடியாகவு மிருப்பான். 4மிடத்தில் அதிகம் பாபரிருந்தாலும் அதே பலன் சொல்லவேண்டும்.

यदालग्नसुखेशौ वा मित्रभूतौ परस्परम् ।
शुभेक्षितौ शुभैयुक्तौ मातृस्नेहं विनिर्दिशेत् ॥ ९५ ॥

लग्नेश्वरेण संदृष्टे मातृनाथे चतुष्टये ।
शुभग्रहान्विते दृष्टे मातृस्नेहं विनिर्दिशेत् ॥ ९६ ॥

மாதிரு ஸ்னேஹ யோகம்.—(95) லக்கினம், 4 மிடம் இவற்றிர்க்கதிபர்கள் பரஸ்பரம் மித்திரர்களாக வாகி சுபர் பார்வை சேர்க்கை இவற்றை யடைந்தாரானுல் மாதிரு ஸனேஹத்தைச் சொல்லவேண்டும். (96) 4க் குடையவன் லக்கினுதிபதியினுல் பார்க்கப்பட்டு 1, 4, 7, 10மிடங்களிலிருந்து சுபர் பார்வை சேர்க்கை இவற்றை யடைந்தால் மாதிரு ஸ்னேஹத்தைச் சொல்ல வேண்டும்.

शत्रू चेल्लग्ननाथस्य मातृलाभाधिपौ यदि ।
पापेक्षितौ पापयुतौ तच्छत्रुत्वं विनिर्दिशेत् ॥ ९७ ॥

लग्नेशान्ना शराशिस्थे मातृस्थानाधिपे यदि ।
तथैव लग्नभावाद्वा तच्छत्रुत्वं विनिर्दिशेत् ॥ ९८ ॥

மாதாவுக்குச் சத்துருவாகும் யோகம்.—(97) 4, 11க்குடையவர்கள் லக்கினுதிபதிக்குச் சத்துருக்களா யிருந்தாரானுலும், பாபரின் சேர்க்கை பார்வை இவற்றை யடைந்தாலும் மாதாவுக்குச் சத்துருவாகவாவான். (98) 4க் குடையவன் லக்கினுதிபதிக்கு 8லோ லக்கினத்திற்கு 8லோ இருந்தால் மாதாவுக்குச் சத்துருவாவான்.

वाहनेशे बलयुते वाहने शुभसंयुते ।
शुभग्रहेण संदृष्टे वहनादिफलं भवेत् ॥ ९९ ॥

सुवर्णवस्त्राभरणादियानं शुक्राद्बदेत्तत्सुखराशितो वा ।
सेन्दौ चतुर्थाधिपतौ विलग्ने लग्नेश्वरेणापि युतेऽश्वलाभः ॥ १०० ॥

शुक्रेणयुक्ते यदि वाहनेशे देहान्विते वा नरवाहनादि ।
देवेन्द्रपूज्येन युतेऽत्र लग्ने वदन्ति सन्तश्चतुरंगयानम् ॥ १०१ ॥

चन्द्रामरेज्यामरशत्रुपूज्यैर्युक्ते तनौ वा यदि वाहनेशे ।
प्रोक्तं त्रयं वाहनमाहुरार्या नीचारिमूढादिविहीनखेटैः ॥ १०२ ॥

भाग्येशलग्नेशचतुर्थनाथा कर्मस्थिता नीचविमूढहीनाः ।
कर्मेश्वरेणापि युते विलग्ने सिंहासनप्राप्तिमुदाहरन्ति ॥ १०३ ॥

भाग्यस्थिते वाहनराशिनाथे सशुक्रजीवे सुखराशियुक्ते ।
भाग्याधिपे कोणचतुष्टये वा बह्वर्थदेशाभरणार्थयानम् ॥ १०४ ॥

भाग्याधिपेन सहिते यदि वाहनेशे जीवेक्षिते तनुगते बलपूर्णयुक्ते ।
स्वक्षेत्रतुंगसहिते यदि वा त्रिकोणे भूनाथमाननवशाद्धनवाहनादि ॥

भाग्येश्वरेणापि युते सुखेशे यत्रस्थिते पश्यति वा सुखर्क्षम् ।
वैशेषिकांशे यदि वा बलाढ्ये सर्वार्थभाग्यान्वितवाहनस्स्यात् ॥ १०६ ॥

வாஹன லாப யோகம்.—(99) 4க்குடையவன் பலம் பெற்று 4ல் சுபருமிருந்து சுபராலும் பார்க்கப்பட்டால் வாஹனுதி பலனுண்டாகும். (100) சுக்கிரனைக் கொண்டோ, அவனுக்கு 4மிடத்தைக் கொண்டோ ஸுவர்ண வஸ்திராபரணுதிகளுடன் கூடின வாஹனத்தைச் சொல்லவும். 4க் குடையவன் சந்திரனுடன் கூடி லக்கினத்திலிருந்தாலும், லக்கினுதிபதியுடன் கூடினுலும் குதிரை ஸவாரி செய்வான். (101) 4க் குடையவன் சுக்கிரனுடன் கூடி லக்கினத்திலிருந்தால் நரவாஹனம் (பல்லக்கு அல்லது ஆளிழுக்கும் வண்டி) உண்டாகும். குருவுடன் கூடி லக்கினத்திலிருந்தால் பெரியார் ரதம், கஜம், குதிரை, காலாள் என்ற சதுரங்கயானத்தைச் சொல்லுகின்றனர். (102) 4க் குடையவன், நீசனுகவோ சத்துருவாகவோ அஸ்தங்கதனுகவோ இல்லாத சந்திரன் குரு, சுக்கிரன் இவர்களுடன் கூடி லக்கினத்திலிருந்தாலும், முற்கூறிய மூன்றுவிதமான வாஹனமும் உண்டாகுமெனப் பெரியாருபதேசிக்கின்றனர். (103) 9, 1, 4 மிடத்ததிபர்கள் நீசராகவோ அஸ்தங்கதராகவோ இல்லாமல் 10மிடத்திலிருந்து லக்கினமானது கர்மாதிபதியுடன் கூடியுமிருந்தால் ஸிம்ஹாஸன ப்ராப்த்தியைச் சொல்லுகின்றனர். (104) 4க்குடையவன் 9 மிடத்திலிருந்து சுக்கிரனுடன் கூடின குரு 4மிடத்திலுமிருந்து, 9க் குடையவன் கேந்திரத்திரிகோணத்திலு மிருந்தால் வெகுவான அர்த்தம், தேசம், ஆபரணம் இவற்றுடன் கூடின வாஹனத்தை யடைகிறுன். (105) 4க் குடையவன் 9க் குடையவனுடன் கூடி குருவினுல் பார்க்கப்பட்டு பலம் பெற்று லக்கினத்திலிருந்தாலும், ஸ்வக்ஷேத்திரத்திலோ, உச்சவீட்டிலோ, அல்லது திரிகோணத்திலோ இருந்தாலும் பூமிக்கு அரசனது

ஸம்மான மூலம் தனம் வாஹனம் முதலியவற்றை யடைகிறான். (106) 4க் குடையவன் 9க் குடையவனுடன் கூடி எந்த விடத்தி லிருந்த போதிலும் 4 மிடத்தைப் பார்த்தாலும், பலம் பெற்று வைசேஷிகாம்சத்திலிருந்தாலும் எல்லாவிதமான அர்த்தம் பாக் கியம் இவற்றுடன் கூடின வாஹனமுள்ளவனாக ஆவான்.

दुःस्थे विमूढे यदि वाहनेशे भाग्येश्वरेणापि समीक्षिते वा ।
दुर्वाहिनी चंचलवाहिनी वा लाभाधिपेनापि समीक्षिते वा ॥१०७॥

கெட்ட ஸைன்னிய முள்ள யோகம்—(107) 4க் குடைய வன், 9க் குடையவன் 11க் குடையவன் இவர்களால் பார்க்கப் பட்ட போதிலும் 6, 8, 12 லிருந்தால் கெட்ட ஸைன்னியமோ, சஞ்சலமான ஸைன்னியமோ இருக்கும்.

सौख्याधिपे शोभनखेचरेण भाग्येश्वरेणापि युतेऽथवा स्यात् ।
सेनाबहुत्वं समुपैति जातो बहुत्वदेशाभरणानि यानम् ॥ १०८ ॥

भाग्येश्वराल्लाभगते विलग्ननाथे सुखेशे यदि भाग्यराशौ ।
सुखायभाग्ये तनुनायके वा त्वसंख्ययानादियुतः प्रसिद्धः॥ १०९ ॥

सुखेश्वरे केन्द्रगते तदीशे लग्नस्थिते वा बहुवाहनाढ्यः।
कर्मेश्वरे लग्नगते तदीशे कर्मस्थिते वा बहुवाहनाढ्यः ॥ ११० ॥

सुखेश्वरे सौम्ययुते सुखस्थे शस्त्राश्वकोशाधिपतिर्भवेत्तु ।
क्षेत्रेश्वरे लाभगते बलाढ्ये बंधौ भवे वा क्षितिसूनुयुक्ते ॥ १११ ॥

भूसूनुराशौ यदि वा सुखेशे राज्यार्थसौख्याभरणादियानम् ।
सौम्ये विलग्नेऽथबलेन युक्ते धर्मान्विते शोभनखेचरेन्द्रे ॥ ११२ ॥

வாஹனாதி லாப யோகம்—(108) 4க் குடையவன் சுபக்கிர ஹத்துடனோ, 9க் குடையவனுடனோ கூடினாலும் அப்பொழுது பிறந்தவன் அதிகம் ஸேனையை யடைவதுடன், வெகுதேசம், ஆப ரணம், வாஹனம் இவற்றையடைகிறான். (109) லக்கினாதிபதி 9க் குடையவனுக்கு 11ல் இருந்து 4க் குடையவன் 9லுமிருந்தா லும், லக்கினாதிபதி 4, 11, 9மிடங்களிலிருந்தாலும் அளவு கடந்த வாஹனாதிகளுடன் கூடினவனாகவும், பிரசித்தனாகவும் ஆகிறான். (110) 4க் குடையவன் கேந்திரத்திலும் கேந்திராதிபதி லக்கினத் திலு மிருந்தால் அதிக வாஹமுள்ளவனாவான். 10க் குடையவன்

லக்கினத்திலும், லக்கினுதிபதி 10லு மிருந்தாலும் வெகு வாஹன முண்டாகும். (111) 4க் குடையவன் புதனுடன் (அல்லது சுபருடன்) கூடினுல் சஸ்திரம், குதிரை, பொக்கிஷம் இவற்றுக்கு அதிபதியாகிறுன். 4க் குடையவன் பலம் பெற்று 11லோ, 4லோ இருந்தாலும் 11ல் செவ்வாயிருந்தாலும் முற்கூறிய பலனுண்டாகும். (112) அங்காரகனுடைய ராசிகளான மேஷ விருச்சிகங்களில் 4க்குடையவனிருந்தால் ராஜ்யம், அர்த்தம், ஆபரணம், சவுக்கியம் இவற்றுடன் கூடின வாஹனமுண்டாகும். புதன் பலம்பெற்று லக்கினத்திலிருந்து சுபக்கிரஹமானது 9மிடத்திலுமிருந்தால் அதே பலன் நடக்கும்.

स्वोच्चस्थिते वित्तपतौ च केन्द्रे सिंहासनप्राप्तिमुदाहरन्ति ।
सौम्येक्षिते धर्मगृहे तु केन्द्रे सवित्तपाश्शोभनखेचरेन्द्राः ॥ ११३ ॥

उच्चे गृहे वा धनराशियुक्ते सिंहासनप्राप्तिमुदाहरन्ति ।
केन्द्रे शुभाः पापग्रहास्त्रिषष्ठलाभस्थितास्तत्पदमाहुरार्याः॥ ११४ ॥

ஸிம்ஹாஸன லாப யோகம்.—(113) 2க்குடையவன் சொந்த வீட்டிலோ, உச்ச வீட்டிலோ இருந்து அது கேந்திரமாகவுமாகுமாஞலும், 9 மிடமானது சுபரால் பார்க்கப்பட்டு 2க் குடையவனுடன் கூட சுபக்கிரஹங்கள் கேந்திரத்திலிருந்தாலும் ஸிம்ஹாஸன ப்ராப்த்தியைச் சொல்லுகின்றனர். (இதை இக்காலத்திற்கேற்றுர் போல் ஹைக்கோர்ட் ஜட்ஜ் முதலிய பெரியஸ்தானம் வஹித்தலென்றும் ஊஹித்துப்பலன் சொல்லலாம்.) (114) உச்சமான கிரஹம் 2 மிடத்திலிருந்தாலும் ஸிம்ஹாஸன ப்ராப்த்தியைச் சொல்லுகின்றனர். கேந்திரத்தில் சுபர்களும் பாபக்கிரஹங்கள் 3, 6, 11மிடங்களிலுமிருந்தாலும் ஸிம்ஹாஸன ப்ராப்த்தியைப் பெரியார் சொல்லுகின்றனர்.

गेहेशे व्ययराशिस्थे पितुरन्यविदेशगः ।
अष्टमस्थे गृहेशे वा स्वयं संपादयेद्गृहम् ॥ ११५ ॥

கிரஹ லாப யோகம்.—(115) 4க் குடையவன் 12லிருந்தால் பிதா முதலியோரைவிட்டு வேறு தேசத்தையடைவான். 4க்குடையவன் 8லிருந்தால் ஸ்வயமாகவே வீட்டை ஸம்பாதிப்பான்.

धनेशे लग्नभावस्थे कर्मेशे धनमाश्रिते ।
वाहने स्वोच्चखेटस्थे वाहनाधिपतिर्भवेत् ॥ ११६ ॥

लग्नवाहनभाग्येशास्त्वन्योन्यं केन्द्रमाश्रिताः ।
लग्ननाथे बलाढ्ये वा वाहनाधिपतिर्भवेत् ॥ ११७ ॥

गोपुराद्यंशके वापि वाहनेशे बलान्विते ।
लाभकर्मशुभाधीशैर्दृष्टे वाहनसंयुतः ॥ ११८ ॥

परमोच्चांशके युक्ते भाग्येशे केन्द्रमाश्रिते ।
ग्रहद्वये तुङ्गयुते बहुवाहनतुङ्गभाक् ॥ ११९ ॥

धनाधिपेन संयुक्ते व्ययेशे स्वोच्चराशिगे ।
भाग्याधिपेन संदृष्टे वाहनाधिपतिर्भवेत् ॥ १२० ॥

कर्माधिपे चतुर्थस्थे लाभनाथेन संयुते ।
भाग्यनाथेन वा युक्ते बहुवाहनदेशभाक् ॥ १२१ ॥

उच्चद्वये कर्मगते लग्ननाथेन वीक्षिते ।
भाग्याधिपेन वा दृष्टे वाहनाधिपतिर्भवेत् ॥ १२२ ॥

सिंहासनांशकगते कर्मवाहनराशिपे ।
लग्नेश्वरेण संदृष्टे बहुवाहनदेशभाक् ॥ १२३ ॥

वाहनार्थतृतीयेषु भाग्यकर्मभवाधिपाः ।
स्थिता बाल्येऽर्थमानादिसंयुक्ते निधने शुभे ॥ १२४ ॥

स्वोच्चे सुखेशे तन्नाथे केन्द्रकोणसमन्विते ।
वाहने तुङ्गसंयुक्ते व्यये शुद्धे त्रियानभाक् ॥ १२५ ॥

வாஹனுதிபதியாகும் யோகம்.—(116) 2க் குடையவன் லக்கினத்திலும், 10க் குடையவன் 2லும் 4மிடத்தில் உச்சத்திலிருக்கும் கிரஹமு மிருந்தால் வாஹனுதிபதியாக வாவான். (117) 1, 4, 9க் குடையவர்கள் ஒருவர்க்கொருவர் கேந்திரத்திலிருந்து லக்கினுதிபதி பலம் பெற்ருல் வாஹனுதிபதியாவான். (118) பலம் பெற்ற 4க் குடையவன் கோபுராத்யம்சமேறி 11, 10, 9க் குடையவர்களாற் பார்க்கப்பட்டால் வாஹனமுள்ளவனுவான். (119) 9க் குடையவன் கேந்திரத்தை யடைந்து பரமோச்சமேறி யிருந்து இரண்டு கிரஹமுச்சத்திலு மிருக்குமானுல் வெகு வாஹன வுயர்வை யடைவான். (120) 12க் குடையவன் 2க்குடை

யவனுடன் கூடி தனது உச்சராசியிலிருந்து 9க் குடையவனுற் பார்க்கவும் பட்டால் வாஹனுதிபதியாக வாவான். (121) 10க் குடையவன் 4 லிருந்து 11க் குடையவனுடனும் கூடினுலும், 9க் குடையவனுடன் கூடினுலும் வெகுவான வாஹனம், தேசம் இவற்றை யடைகிருன். (122) *உச்சமான இரண்டு கிரஹம் 10 மிடத்திலிருந்து லக்கினுதிபதியினுலோ 9க் குடையவனுலோ பார்க்கவும் பெற்ருல் வாஹனுதிபதி யாகிருன். (123) 10, 4க் குடைய கிரஹங்கள் ஸிம்ஹாஸனும்சத்திலிருந்து லக்கினேஶ்வர னுற் பார்க்கப்பட்டால் வெகுவான வாஹனம் தேசம் இவற்றை யடைவான். (124) 4, 2, 3 மிடங்களில் முறையே 9, 10, 11க் குடையவர்களிருந்து 8ல் சுபருமிருந்தால் பால்யத்தில் பொருள் மரியாதை முதலியவற்றை யடைகிருன். (125) 4க் குடையவன் தனது உச்சவீட்டிலிருந்து அந்த உச்ச வீட்டுக்குடையவன் கேந்திரத் திரிகோணத்திலு மிருந்து, 4ல் உச்சமான கிரஹமு மிருந்து 12 மிடமானது சுத்தமாகவுமிருந்தால் 3 வாஹனத்தை யடைகிருன்.

परमोच्चांशके शुक्रे कर्मेशे गृहसंयुते ।
संभवेत्तादृशे योगे वाद्यघोषादिभिर्युतः ॥ १२६ ॥

शंखवादित्रघोषाद्यैस्संयुक्ते भाग्यपे सुखे ।
केन्द्रोच्चकोणगे वापि कर्मेशे वाहनान्विते ॥ १२७ ॥

शनिना संयुते कर्मनाथे केन्द्रे शुभान्विते ।
लग्नेशे वृद्धिभं याते पणवादिरवैर्युतः॥ १२८ ॥

कर्मभाग्यविलग्नेषु स्वोच्चे सौम्यग्रहास्स्थिताः ।
दृष्टेषु वा लग्नपेन यानाद्दुःखमवाप्नुयात् ॥ १२९ ॥

कर्मषट्सोदरसुखभाग्यलग्नव्ययेश्वराः ।
सुताधिपेन सहिताह्यसंख्याढ्यात्मदेशभाक् ॥ १३० ॥

---

* இது ஸிம்ஹ லக்ன ஜாதகத்தில் பொருந்தும். ஆதாவது: 10 மிடம் விருஷபமாகும். அது ராகுவுக்கு உச்சவீடு, சந்திரனுக்கும் உச்ச வீடு, இவ்விரண்டு கிரஹமும் அங்கிருந்தால் மேற்கூறிய பலன் நடக்கும் என்று கொள்ளவும்.

सुखे शुभयुते नाथे केन्द्रकोणोच्च संयुते ।
लग्ने शुभेन संदृष्टे बहुयानादिलाभभाक् ॥ १३१ ॥

मानेशे सुखराशिस्थे लाभे सौख्येशसंयुते ।
लग्ने शुभेन संदृष्टे बहुयानादिलाभभाक् ॥ १३२ ॥

मृदङ्गभेरीशंखाद्यकाहलादिरवैर्युतः ।
राजयोगे समुद्भूते कर्मपे सौख्यसंयुते ॥ १३३ ॥

बलाबलाच्छोभनदृष्टियोगात्प्रोक्तं तृतीयस्य फलं तु राशेः ।
चतुर्थराशेश्च फलं तथैव श्रीवेंकटेशेन निरीक्ष्य सर्वम् ॥ १३४ ॥

வாத்யானுபவ யோகம்.—(126) சுக்கிரன் பரமோச்சபாகத்திலிருந்து 10க் குடையவன் 4லிலுமிருந்தால் அத்தகைய யோகம் ஸம்பவிக்கும் பொழுது வாத்தியகோஷாதிகளுடன் கூடினவனக ஆவான். (127) 9க் குடையவன் 4லிலும், கேந்திரம், உச்சம், திரிகோணம் இவற்றையடைந்த 10க் குடையவன் 4லிலுமிருந்தால் சங்கம், வாத்யகோஷம் முதலியவற்றுடன் கூடினவனுகிறுன். (128) 10க் குடையவன் சனியுடன் கூடி கேந்திரம், 9 மிடம் இவற்றிலிருந்து லக்கினேசன் 4 மிடத்தையும் அடைந்தால் பணவாதிசப்தங்களுடன் கூடினவனுகிறுன். (129) சுபக்கிரஹங்கள் 10, 9, 1, இந்த விடங்களிலோ, உச்சவீடுகளிலோ இருந்து லக்கினுதிபதியினுல் பார்க்கவும் பட்டால் யானத்தினுல் தூக்கத்தை யடைவான். (130) 10, 6, 3, 4, 1, 12 இவ்விடங்களுக்கதிபர்கள் 5க் குடையவனுடன் கூடினுர்களேயானுல் அளவுகடந்த தனது தேசத்தை யடைந்தவனுக ஆகிறுன். (131) 4லில் சுபரிருந்து 4க் குடையவன் கேந்திரம், திரிகோணம், உச்சவீடு இவற்றிலிருந்து 9க் குடையவன் பரமோச்சாம்சத்திலு மிருந்தால் சுகமானவாஹனுதிலாபத்தை யடைந்தவனுகிறுன். (133) 10க் குடையவன் 4லிருந்து ராஜயோகமும் உண்டாகுமானுல் மிருதங்கம், பேரீ (ஓர்வகை வாத்தியம்) சங்கு முதலியன, எக்காள வாத்தியம், முதலியவற்றின் சப்தத்துடன் கூடினவனுக வாகிறுன். (134) 3-வது ராசிக்கு கிரஹங்களின் பலம், பலக்குறைவு இவற்றைக்கொண்டும், பார்வையைக் கொண்டும், பலன் சொல்லப்பட்டது. 4-வது ராசிக்கும் அவ்விதமே

பலாபலம்யாவையும் நன்கு ஆலோசித்தறிந்து ஸ்ரீவேங்கடேசன் என்றவரால் பலன் சொல்லப்பட்டது. (எ-று)

ஸர்வார்த்த சிந்தாமணியிற் சொல்லிய நான்காவது பந்து பாவபலன் முற்றிற்று.

## पुत्रभावफलम् ५ ॥

सुस्था विलग्नशशिनोः सुतभेशजीवाः सुस्थाननाथशुभदृष्टियुते सुतर्क्षे ।
लग्नात्मपौ यदि युतौ च मिथः सुदृष्टौ क्षेत्रे परस्परगतौ यदिपुत्रसिद्धिः ॥

लग्नामरेड्यशशिनां सुतभेषु पापैर्युक्तेक्षितेष्वथ शुभैरयुतेक्षितेषु ।
पापोभयेषु सुतभेषु सुतेश्वरेषु दुःस्थानगेषु न भवन्ति सुताः कथंचित् ॥

पापे स्वर्क्षगते सुते तनयभाक्तस्मिन्सपापे पुनः
पुत्राः स्युर्बहुलाः शुभस्वभवने सोग्रे सुते पुत्रहा ।
संज्ञां चाल्पसुतर्क्षमित्यलिवृषस्त्री सिंहभानां विदु-
स्तद्राशौ सुतभावगेऽल्पसुतवान्कालान्तरेऽसाविति ॥ ३ ॥

सूर्ये चाल्पसुतर्क्षगे निधनगे मन्दे कुजे लग्नगे
लग्नाष्टव्ययगैः शनीज्यरुधिरैश्चाल्पात्मजर्क्षे सुते ।
चन्द्रे लाभगते गुरुस्थितसुतस्थाने सपापे भवे-
ल्लग्ने नैकखगान्विते तनयभाक्कालान्तरे यत्नतः ॥ ४ ॥

सूर्ये नान्ययुते सुतर्क्षसहिते चन्द्रस्य गेहे स्थिते
भौमे वा भृगुजेऽपिवा सति सुतप्राप्ति र्द्वितीयस्त्रियाम् ।
मन्दे वा बहुपुत्रवान् शशिनि वा सौम्येऽपि वाल्पात्मजो
देवेड्ये बहुदारिकः शशिगृहे तद्वत्सुताधिष्ठिते ॥ ५ ॥

सुखास्तदशमस्थितैरशुभकाव्यशीतांशुभि-
र्व्ययाष्टतनयोदयेष्वशुभगेषु वंशक्षयः ।
मदे कविविदौ मतौ गुरुरसद्भिरम्बुस्थितैः
सुते शशिनि नैधनव्ययतनुस्थपापैरपि ॥ ६ ॥

## புத்திரபாவபலன் 5.

### பலதீபிகையிற் சொல்லிய புத்திரபாவபலன்.

(1) ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் இவற்றிர்க்கு 5மிடத்ததிபர், குரு இவர்கள் 2, 3, 4, 5, 7, 9, 10, 11 மிடங்களிலிருந்

தாலும், அல்லது 5மிடமானது முற்கூறிய ஸ்தான நாதர், சுபர், இவர்களின் பார்வை, அல்லது சேர்க்கை இவற்றைப் பெற்றாலும், 1, 5க் குடையவர்கள் சேர்ந்தாலும், ஒருவரையொருவர் பார்த்தாலும் 1ல் 5க் குடையவனும், 5ல் 1க் குடையவனுமாக யிருந்தாலும் புத்திரஸித்தியுண்டாகும். (2) லக்கினம், குரு, சந்திரன் இவர்களுக்கு 5மிடங்கள் பாபர் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப் பெற்று சுபரின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றைப் பெறாமலுமிருந்தாலும், 5 மிடங்களுக்கு இருபுறத்திலும் பாபக் கிரஹங்களிருந்தாலும், லக்கினம், குரு, சந்திரன் இவர்களுக்கு புத்திரஸ்தானாதிபர்கள் 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும் எத்தகையதோஷ பரிஹாரங்கள் செய்தபோதிலும் புத்திரனுண்டாக மாட்டான். (3) 5 மிடமானது பாபர் வீடாகி அதில் அந்த வீட்டுக்குடையவனிருந்தால் புத்திரனை யடைகிறான். பாபியுடன் கூடின அந்த 5மிடம் சுபர் வீடாகி அந்த வீட்டுக்குடையவன் அங்கிருந்தால் அதிகம் புத்திரர்களுண்டு. செவ்வாய் 5லிருந்தால் புத்திர நாசமுண்டாகும். விருச்சிகம், விருஷபம், கன்னி, ஸிம்மம் இந்த ராசிகள் அற்ப ஸுதஸ்தான மெனப்படும். அந்த ராசிகள் புத்திர ஸ்தானமாக (5 மிடமாக) வருமானால் இந்த ஜாதகன் வெகு காலஞ்சென்று அற்ப புத்திரனுள்ளவனாவான். (4) சூரியன் முற்கூறிய அற்ப புத்திர ஸ்தானத்திலிருந்து சனி 8 மிடத்திலிருந்து, குஜன் லக்கினத்திலிருந்தாலும், அல்லது 1, 8, 12மிடங்களில் முறையே சனி, குரு, செவ்வாய் இவர்களிருந்து 5மிடம் முற்கூறிய அற்பபுத்திர ஸ்தானமாகவுமானாலும், அல்லது சந்திரன் 11 மிடத்திலிருந்து குரு இருக்குமிடத்திற்கு 5மிடத்தில் பாபரிருந்து லக்கினத்தில் அனேகம் கிரஹங்களிருந்தாலும் வெகு காலஞ்சென்று சாந்தி பரிஹாரத்தை முன்னிட்டு புத்திரனை யடைந்தவனாக ஆகிறான். (5) சூரியன் தனித்து 5மிடத்திலிருந்து அது சந்திரன் வீடாகவானாலும், அல்லது செவ்வாயோ, சுக்கிரனோ அவ்விதம் தனித்து 5மிடமான சந்திரன் வீட்டிலிருந்தாலும், இரண்டாவது மனையாளிடத்தில் புத்திர ப்ராப்த்தி உண்டாகும். சனி அவ்விதமிருந்தால் வெகு புத்திரவானாகிறான். சந்திரனாவது, புதனாவது இருந்தால் அற்ப புத்திர

னுண்டாகும். சந்திரன்வீடு 5மிடமாகவாகி அதில் குருவிருந்தால் வெகு பெண்கள் பிறக்கும். (6) 4, 7, 10மிடங்களில் முறையே அசுபன், சுக்கிரன், சந்திரன் இவர்களிருந்தாலும், 12, 8, 5, 1மிடங்களில் பாபகளிருப்பினும், வம்ச க்ஷயமுண்டாகும். அதாவது: இவனுடன் வம்சமானது முடிந்துவிடும் என்பதாம். அல்லது 7ல் சுக்கிரனும் புதனுமிருந்தாலும், 5ல் குருவிருந்தாலும், பாபக்கிரஹங்கள் 4 மிடத்திலிருந்தாலும் 5 மிடத்தில் சந்திரனிருந்தாலும் 8, 12, 1 இவ்விடங்களில் பாபரிருந்தாலும் வம்சக்ஷயமே யுண்டாகும்.

पापे लग्ने लग्नपे पुत्रसंस्थे धीशे वीर्ये वेश्मनीन्दावपुत्रः।
ओजर्क्षेऽङ्के पुत्रभे सूर्यदृष्टे चन्द्रे पुत्रक्लेशभाक्स्यादसूनुः ॥ ७ ॥

मान्दं सुतर्क्षे यदि वाथ बौधं मान्द्यर्कपुत्रान्वितवीक्षितं चेत्।
दत्तात्मजः स्यादुदयास्तनाथसंबन्धहीनो विबलः सुतेशः ॥ ८ ॥

नीचारिमूढोपगते सुतेशे रिःफारिरन्ध्राधिपसंयुते वा।
सुतस्य नाशः कथितोऽत्र तज्ज्ञैः शुभैरदृष्टे सुतभे सुतेशे ॥ ९ ॥

सुतनाथजीवकुजभास्करेषु वै पुरुषांशकेषु च गतेषु कुत्रचित्।
मुनयो वदन्ति बहुपुत्रतां तदा सुतनाथवीर्यवशातः सुपुत्रताम् ॥ १० ॥

पुंराश्यंशे धीश्वरे पुंग्रहेन्द्रैर्युक्ते दृष्टे पुंगृहे पुंप्रसूतिः।
स्त्रीराश्यंशे स्त्रीग्रहैर्युक्तदृष्टे स्त्रीणां जन्म स्यात्सुतर्क्षे सुतेशे ॥ ११ ॥

बलयुक्तौ स्वगृहांशेष्वर्कसितावुपचयर्क्षगौ पुंसाम्।
स्त्रीणां वा कुजचन्द्रौ यदा तदा संभवति गर्भः ॥ १२ ॥

अशत्रुनीचारिनवांशकैः सुते सुतेशयुक्तैरपि तैस्तथाविधैः।
सुतर्क्षगैर्वा गुरुभादिनांशकात्सुते फलैः पुत्रमितिर्विचिन्त्यते ॥ १३ ॥

जीवेन्दुक्षितिजस्फुटैक्यभवने युग्मे च युग्मांशके
स्त्रीणां क्षेत्रबलं वदन्ति सुतदं मिश्रे प्रयासात्फलम्।
भास्वच्छुक्रगुरुस्फुटैक्यभवनेप्योजांशकेऽप्योजभे
पुंसां बीजबलं सुतप्रदमिदं मिश्रे तु मिश्रं वदेत् ॥ १४ ॥

पञ्चघ्नाच्छशिनः स्फुटादिषुहतं भानुस्फुटं शोधये-
न्नीत्वा तत्र तिथिं सिते शुभतिथौ पुत्रोऽस्त्ययत्नादपि।

कृष्णे नास्ति सुतस्तिथेर्बलवशाद्भूयाद्द्वयोः पक्षयो-
र्दर्शे छिद्रतिथौ च विष्टिकरणे न स्यात्स्थिराख्ये सुतः॥१५॥
विष्टिः स्थिरं वा करणं यदि स्यात्कृष्णं यजेत्पौरुषसूक्तमन्त्रैः।
षष्ठ्यां गुहाराधनमत्र कार्यं यजेच्चतुर्थ्यां किल नागराजम्॥ १६॥

(7) லக்கினத்தில் பாபக்கிரஹமிருந்து லக்கினுதிபதி 5மிடத்திலிருந்து 5க் குடையவனும் 3 மிடத்திலிருந்து சந்திரன் 4மிடத்திலுமிருந்தால் புத்திரனற்றவனுகிறுன். (இத்தகைய யோகமுள்ளவர்க்கு ஸ்வீகாரம் செய்துகொண்டாலும் புத்திரன் கிடையாதெனப் பெரியாருபதேசிக்கின்றனர்) ஒற்றைப்பட்ட ராசியானது லக்கினமாகவாகி 5 மிடத்தில் சந்திரனிருந்து சூரியனுலும் பார்க்கப்பட்டால் புத்திர விஷயமான கிலேசத்தை யடைவானேயொழிய புத்திரன் கிடைப்பதில்லை. (இந்த யோக விஷயத்திலும் முற்கூறியபடியே சொல்லுகின்றனர்.) (8) சனியின் வீடோ புதனது வீடோ புத்திரஸ்தானமாகவாகி மாந்தி, சனி இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையும் அடைவதுடன் 5க் குடையவன் துர்பலனுய் லக்கினுதிபதி, 7க்குடையவன் இவர்களின் *ஸம்பந்தத்தையு மடையாவிடில் ஸ்வீகிருத புத்திரனுண்டாகும். (9) 5க் குடையவன் நீசனுகவோ, சத்துருவீட்டையடைந்தோ சூரியனில் அஸ்தங்கதமாகியோ, இருந்தாலும், 6, 8, 12க் குடையவருடன் சேர்ந்திருந்தாலும், 5 மிடமோ, 5க்குடையவனே சுபரால் பார்க்கப்படாமலுமிருந்தால் அதையறிந்த பெரியாரால் புத்திர நாசமானது சொல்லப்பட்டிருக்கிறது. (10) 5க்குடையவன், குரு, செவ்வாய், சூரியன் இவர்கள் புருஷாம்சமேறி எந்தவிடத்திலிருந்தாலும் அதுபோழ்து முனிகள் வெகு புத்திரனுண்டாகுதலைச் சொல்லுகின்றனர். அதில் 5க் குடையவனின் வலுவைக் கொண்டு நல்ல குணமுள்ள புத்திரனுண்டாகுதலைச்

* ஒருவர் ராசியில் மற்றவரிருப்பது, ஒருவரோடொருவர் சேருவது, ஒருவரையொருவர் பார்ப்பது, ஒருவருடைய கேந்திரத்தில் மற்றவரிருப்பது, ஒருவருடைய திரிகோணத்தில் மற்றவரிருப்பது ஆகிய 5ம் கிரஹங்களின் ஸம்பந்தமெனப்படும். இனிவருமிடத்தும் இவ்விதமே காண்க.

சொல்லுகின்றனர். (11) 5க் குடையவன் (1)புருஷக்கிரஹமாகி புருஷ ராசியிலோ புருஷாம்சத்திலோ இருந்து புருஷக்கிரஹங்களால் பார்க்கவும்பட்டால் புருஷப் பிரஜை யுண்டாகும். 5க்குடையவன்(ஸ்திரீக்கிரஹமாகி)ஸ்திரீராசியிலோ,ஸ்திரீநவாம்சத்திலோ இருந்து 5மிடமோ, 5க் குடையவனோ (2)ஸ்திரீக்கிரஹங்களால் பார்க்கப்பட்டோ, சேர்ந்தோ இருந்தால் ஸ்திரீ ப்ரஜைகளின் பிறவியுண்டாகும். (12) புருஷ ஜாதகத்தில் சூரியன், சுக்கிரன் இவர்கள் பலம் பெற்று சொந்த வீட்டிலோ, சொந்த அம்சத்திலோ இருந்து 3, 6, 10, 11 மிடங்களிலிருக்கும் பொழுதும், ஸ்திரீ ஜாதகத்தில் செவ்வாய் சந்திரன் இவர்கள் பலம்பெற்று சொந்த வீட்டிலோ, சொந்த அம்சத்திலோ இருக்கும்பொழுதும் கர்ப்பத்தின் உத்பத்தி யேற்படுகிறது. (13) 5 மிடத்திலிருக்கின்ற சத்துருவான கிரஹம், நீசனான கிரஹம், சத்துரு நவாம்சம் ஆகிய இவைகளற்றக் கிரஹங்களைக்கொண்டாவது சத்துருக் கிரஹம், நீசக்கிரஹம், சத்துரு நவாம்சம் இவைகளற்ற 5க்குடையவனுடன் கூடின கிரஹங்களைக் கொண்டாவது, குருவிருக்கும் வீட்டுக்கு 5 மிடத்திலிருக்கின்ற முற்கூறியபடிக்கான கிரஹங்களைக் கொண்டாவது, சூரியனிருக்கும் அம்சத்திற்கு 5 மிடத்திலிருக்கின்ற பிந்துக்களைக் கொண்டாவது புத்திர ஸங்கியையை (எண்ணை) க் கண்டு கொள்ளவேண்டும். (14) ஸ்திரீ ஜாதகத்தில் குரு சந்திரன் செவ்வாய் இவர்களின் ஸ்புடங்களைச் செய்து அது ஒத்துவரும் ராசி இரட்டைப்பட்ட ராசியாகவோ, இரட்டைப்பட்ட அம்சமாகவோ இருக்குமாயின் புத்திரனைத் தரும் க்ஷேத்திர பலமுண்டென்கின்றனர். மிஸ்ரமாயிருந்தால் சாந்தி பரிஹாரத்தை யொட்டிப் பலனுண்டாகும் என்கின்றனர். புருஷ ஜாதகத்தில் சூரியன், சுக்கிரன், குரு இவர்களின் ஸ்புடங்களைச் செய்து அது ஒத்துவரும் ராசி ஒற்றைப்பட்ட ராசியாகவோ, ஒற்றைப்பட்ட நவாம்சமாகவோ இருக்குமாயின் புத்திரனைத் தரும் பீஜபல முண்டென்கின்றனர். மிஸ்ரமானால் மிஸ்ரமான

(1) சூரியன், செவ்வாய், குரு இவர்கள் புருஷக்கிரஹங்களெனப் படுவர். (2) சந்திரன், சுக்கிரன் ஸ்திரீக் கிரஹங்களாகும். சனி, புதன் நபும்ஸகக் கிரஹங்களாகும்.

பலனுண்டாகுமென்று சொல்லவேண்டும். (15) சந்திரனுடைய ஸ்புடத்தை 5ஞல் பெருக்கி 5ஞல் பெருக்கின சூரிய ஸ்புடத்தைக் கழித்துக்கொண்டு மீதம் வருவதில் திதியைச்சேர்த்துக்கொண்டு வருவது சுக்கில பக்ஷத்தில் சுபமான திதியாஞல் யத்தினமில்லாவிடினும் புத்திரனுண்டு. கிருஷ்ண பக்ஷமாஞல் புத்திரனில்லை. ஆகவே இருபக்ஷங்களிலும் திதியின் பலத்தைக்கொண்டு சொல்லவேண்டும். அமாவாஸ்யையிலும், (1) சித்ர (छिद्र) திதியிலும் (2) ஸ்திரமென்ற (3) விஷ்டிகரணத்திலும் புத்திரனில்லை.

தோஷ பரிஹாரம் செய்யும் முறை.

रामायणस्य श्रवणं नवम्यां यद्यष्टमी चेच्छ्रवणव्रतं च ।
चतुर्दशी चेद्यदि रुद्रपूजा स्याद्द्वादशी चेत्स्मृतमन्नदानम् ॥ १७ ॥
तृप्तिं पितॄणामिह पञ्चदश्यां कृष्णे दशम्याः परतोऽतियत्नात् ।
पक्षत्रिभागेष्वपि नागराजं स्कन्दं च सेवेत हरिं क्रमेण ॥ १८ ॥

पुत्रेशो रिपुनीचगोऽस्तमयगो रिःफाष्टमारिस्थित-
स्तद्वत्पुत्रगृहस्थितोऽपि यदिवा दुःस्थानपस्तद्वशात् ।

---

(1) षष्ठ्यष्टमी चतुर्थी च नवमी द्वादशी कलिः । षट् पक्षछिद्रसंज्ञाः स्युरशुभकर्मणि निन्दिताः । ஷஷ்டி, அஷ்டமீ, சதுர்த்தி, நவமீ, துவாதசி, த்ரயோதசி ஆகிய இந்த ஆறுதிதிகளும் பக்ஷச்சித்திரங்கள். சுபகர்மத்தில் இவைவிலக்கத்தக்கன.

(2) शकुन्याख्यश्चतुष्पाच्च नागवाह्वय एव च । किंस्तुघ्नञ्च स्थिराख्यानि चत्वारि करणानिहि ॥ சகுனி, சதுஷ்பாத், நாகவம், கிம்ஸ்துக்னம் என்ற இந்நான்கும் ஸ்திரகரணமெனப்படும்.

(3) राकापूर्वदलेऽष्टमीति दिनयोर्विष्टिस्सिते मृत्युदा सैकादश्यपि मृत्युकृत्परदले विष्टिश्चतुर्थी तयोः । सप्तम्यत्र चतुर्दशीति दिनयो र्जातातु पूर्वा तयोर्विष्टिः स्याद्दशमी तयोः परदले कृष्णे तृतीया सदा ॥ சுக்கிலபக்ஷத்தில் அஷ்டமீ பூர்ணிமா இவற்றின் முற்பாதியும், சதுர்த்தி, ஏகாதசி இவற்றின் பிற்பாதியும், கிருஷ்ணபக்ஷத்தில் ஸப்தமீ, சதுர்த்தி இவற்றின் முற்பாதியும் தசமியின் பிற்பாதியும், கிருஷ்ணதிருதீயை பூராவுமே விஷ்டி எனப்படும்.

குறிப்பு—இந்த 14, 15-வது சுலோகங்களில் பின்னும் விரிவாக அறியவேண்டிய பொருளடங்கியிருப்பதால் அதை அவரவர் குருவினிடம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்க.

पुत्राभावनिदानमेव कथयेत्तत्खेचराक्रान्तभ-
प्रोक्तैर्दैवतभूरुहैरपि मृगैः संतानहेतुं वदेत् ॥ १९ ॥
द्रोहाच्छम्भुसुपर्णयोर्नहि सुतः शापात्पितॄणां रवे-
रिन्दोर्मातृसुवासिनीभगवतीकोपान्मनोदोषतः ।
स्वग्रामस्थितदेवतागुहरिपुन्नात्युत्थदोषात्कुजे
शापाद्वालकृताद्विडालवधतः श्रीविष्णुकोपाद्बुधे ॥ २० ॥
पारंपर्यसुरप्रियद्विजगुरुद्रोहात्फलाढ्यद्रुम-
च्छेदाद्देवगुरौ तथा सति भृगौ पुष्पद्रुमच्छेदनात् ।
साध्वीगोकुलजातदोषवशतो यक्ष्यादिकामेन वा
मन्देऽश्वत्थवधाद्रुषा पितृपतेः प्रेतैः पिशाचादिभिः ॥ २१ ॥
स्वर्भानौ सुतगे सुतेशसहिते सर्पस्य शापात्तथा
केतौ ब्राह्मणशापतश्च गुळिके प्रेतोत्थशापं वदेत् ।
शुक्रेन्दू गुळिकान्वितौ यदि वधूगोहत्तिमाहुः सुते
जीवो वाथ शिखी समान्दिरिह चेद्भूदेवहत्याऽसुतः ॥ २२ ॥

एवं हि जन्मसमये बहुपूर्वजन्मकर्मार्जितं दुरितमस्य वदन्ति तज्ज्ञाः ।
तत्तद्ग्रहोक्तजपदानशुभक्रियाभिस्तद्दोषशान्तिमिह शंसतु पुत्रसिद्ध्यै ॥

सेतुस्नानं कीर्तनं सत्कथायाः पुजां शंभोः श्रीपतेः सद्व्रतानि ।
दानं श्राद्धं कर्म नागप्रतिष्ठां कुर्या देतैः प्राप्नुयात्संततिं सः॥ २४ ॥

(16) விஷ்டி ஸ்திரகாரணமானால் *புருஷ சூக்த மந்திரங்களால் ஸ்ரீகிருஷ்ணனை பூஜை ஹோமம், இவற்றால் ஆராதிக்கவேண்டும். ஷஷ்டியானால் ஸ்கந்தனை ஆராதிக்கவேண்டும். சதுர்த்தியானால் நாகராஜனை யாராதிக்கவேண்டும். (17) நவமியில் ஸ்ரீமத்வால்மீகிராமாயணஶ்ரவணஞ் செய்யவேண்டும். அஷ்டமீயானால் ஶ்ரவணத்வாதசி விரதமிருக்கவேண்டும். சதுர்த்தசியானால் ஸ்ரீருத்ரபாராயணத்துடன் மஹாதேவனை ஆராதிக்கவேண்டும். துவாதசியானால் ஸஹஸ்ரப்ராம்ஹணபோஜனத்தை முறைப்படி செய்பவிக்கவேண்டும். (18) அமாவாஸ்யையோ பூர்ணிமையோ வருமானால் பிதிருக்களுக்குத் திருப்த்தியைச் செய்விக்க

* புருஷ சூக்த ஹோமவிதியை நமது புருஷ சூக்த புஸ்தகத்தின் முகவுரையில் காண்க,

வேண்டும். (இங்குதிலஹோமத்தைப் பெரியோரைக் கொண்டு செய்யவேண்டுமென்பது பெரியாரின் கொள்கை) கிருஷ்ணபக்ஷத்தில் தசமிக்கு மேலானுல் வெகுப்பிரயாஸத்தாலுண்டாகும். பக்ஷத்தின் 3 பாகங்களுள் முறையே முதல் பாகத்தில் நாகராஜனேயும், 2-வது பாகத்தில், ஸ்கந்தனேயும், 3-வது பாகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவையும் முறைப்படி ஆராதிக்கவேண்டும். (19) 5க் குடையவன் சத்துருவீடு, நீசவீடு இவற்றையடைந்தாலும் சூரியனில் அஸ்தங்கதமானுலும், 6, 8, 12 லிருந்தாலும், அல்லது 6, 8, 12க் குடையவன் 5 மிடத்திலிருந்தாலும் அதை புத்திரனில்லாமைக்குக் காரணமெனச் சொல்லவேண்டும். முற்கூறிய கிரஹங்களடைந்த ராசிகளுக்குச் சொல்லிய தேவதை, மரம், மிருகம்இவைகளேக் கொண்டு(அதாவது: அந்த தேவதாராதனஞ் செய்தல், அம்மாதிரியான மரம்வளர்த்தல், அம்மாதிரியான மிருகங்களேத்தானஞ் செய்தல் இவைகளேக்கொண்டு என்பதாம்) ஸந்தானத்திற்கு ஹேதுவுண்டாகும் என்று சொல்லவேண்டும். (20) சூரியன் புத்திரதோஷத்தைச் செய்பவனுனல்சிவன், கருடன், இவர்களுடைய துரோஹத்தாலும், பிதிருக்களின் சாபத்தாலும் புத்திரனுண்டாவதில் தடையென்றும், சந்திரன் தோஷகாரகனுகவானுல் மாதா, ஸுமங்கலிஸ்திரீகள், பகவதீ, (துர்க்கையென்றும் சொல்லலாம்) இவர்களின் கோபத்தாலும், மனேதோஷத்தாலும் புத்திரனுண்டாவதில் தடையென்று சொல்லவேண்டும். செவ்வாய் தோஷகாரகனுனல் சொந்த ஊரிலிருக்கும் கிராமதேவதை, ஸ்கந்தன், சத்துரு, தாயாதி இவர்கள்மூலமுண்டான தோஷத்தாலும், புதன் தோஷகாரகனுனல் பாலசாபத்தாலும், பூனேயை வதைத்தலாலும் ஸ்ரீவிஷ்ணுகோபத்தாலுமுண்டான தோஷத்தாலும், (21) குரு தோஷகாரகனுனல் பரம்பரையாய் வரும் குலதேவதை, பிரியனுன பிராம்மணன், புரோஹிதன், இவர்களின் துரோஹத்தாலும், பழம் நிறைந்த மரத்தை வெட்டுதலாலுமுண்டான தோஷத்தாலும், சுக்கிரன் தோஷகாரகனுனல் புஷ்பம் நிறைந்தமரத்தை வெட்டுதலாலும், பதிவிரதைகள், பசுவின் குலம், இவற்ருல் உண்டானதோஷ வசத்தாலும், யக்ஷீ முதலிய துர்த்தேவதையின் கோபத்தாலும் (காமத்தாலும் என்

றும் பாடமுண்டு) சனி தோஷகாரகனுனல் உயிருடனிருக்கும் அஸ்வத்தமரத்தை வெட்டுதலாலும், பிதிருபதியின் (யமனின்) கோபத்தாலும், ப்ரேதங்கள், பிசாசம் முதலியவற்ருலும் புத்திரனுண்டாவதில் தடையுண்டாகும். (22) ராகு 5 மிடத்திலிருந்தாலும், 5க் குடையவனுடன் கூடினுலும், ஸர்ப்ப சாபத்தால் தடையுண்டாகும். கேது விருந்தால் பிராம்மண சாபத்தாலும், குளிகனிருந்தால் ப்ரேத சாபத்தாலும் தடையுண்டாகும். சுக்கிரனும் சந்திரனும் குளிகனுடன் கூடி 5லிருந்தால் ஸ்திரீ ஹத்தி பசு ஹத்தி இவற்றை முந்தின ஜன்மத்தில் செய்திருப்பதால் புத்திர ப்ராப்த்திக்குத் தடையென்கின்றனர். குருவோ, கேதுவோ குளிகனுடன் கூடி 5லிருந்தால் பிராம்மண ஹத்தியினுல் புத்திரோத்பத்தியில் தடையுண்டாகும் என்கின்றனர். (23) இவ்விதமன்றே ஜாதகன் ஜனித்த ஸமயத்தில் முந்தின ஜன்மத்திற் செய்த கர்மத்தாலுண்டான வெகு தோஷத்தை இவனுக்குப் பெரியார் சொல்லுகின்றனர். ஆகவே அந்தந்தக் கிரஹத்திற்குச் சொல்லிய ஜபம், தானம், ஹோமம், முதலிய சுபகாரியங்களினுல் அந்தத் தோஷ சாந்தியை புத்திரசித்திக்கு வேண்டி சொல்ல வேண்டும். (24) அவ்விதம் தோஷமுள்ளவன் ஸேது ஸ்னுனம், ராமாயணம் முதலிய ஸத்கதாசிரவணம் (அல்லது பாராயணம்) சிவ பூஜை, விஷ்ணுவைப்பற்றிய விரதம் (அதாவது: சிரவண த்வாதசீவிரதம்) தானம், தீர்த்த சிராத்தம். நாகப்பிரதிஷ்டை, ஆகிய இவற்றைச் செய்தால் ஸந்ததியை யடைவான்.

### புத்திரனுண்டாகும் காலம்.

लग्नास्तपुत्रपतिजीवदशापहारे पुत्रेक्षकस्य सुतगस्य च पुत्रसिद्धिः।
पुत्रेशराशिमथवा यमकण्टकर्क्षे जीवे गते तनयसिद्धिरथांशके वा ॥

लग्नाधीशः पुत्रनाथेन योगं स्वोच्चे स्वर्क्षे चारगत्या समेति ।
पुत्रप्राप्तिः स्यात्तदा लग्ननाथः पुत्रर्क्षं वायाति धीशास्तभं वा ॥ २६ ॥

विलग्नकामात्मजनायकानां योगात्समानीय दशां महाख्याम् ।
सुतस्थतद्वीक्षकतत्पतीनां दशापहारेषु सुतोद्भवः स्यात् ॥ २७ ॥

सुतपतिगुर्वोरथ वा तद्युक्तराश्यंशकाधिपानां वा ।
बलसहितस्य दशायामपहारे वा सुतप्राप्तिः ॥ २८ ॥

जीवे तु जीवात्मजनाथभांशकत्रिकोणगे पुत्रजनिर्भवेन्नृणाम् ।
अथान्यशास्त्रेण च जन्मकालतो निरूपयेत्सन्ततिलक्षणं बुधः ॥ २९ ॥

जन्मनक्षत्रनाथस्य प्रत्यरक्षाधिपस्य च ।
स्फुटयोगं गते जीवे त्रिकोणे वा सुतोद्भवः ॥ ३० ॥

निषेकलग्नाद्दिनपस्तृतीये राशौ यदा चारवशादुपैति ।
आधानलग्नादथ वा त्रिकोणे रवौ यदा जन्म वदेन्नराणाम् ॥ ३१ ॥

(25) லக்கினாதிபதி, 7க் குடையவன், 5க் குடையவன், குரு இவர்களின் தசாபுக்திகாலத்திலும், 5மிடத்தைப் பார்ப்பவன், 5லிருப்பவன் இவர்களுடைய தசாபுக்திகாலத்திலும், அல்லது கோசரத்தில் குரு 5க் குடையவனிருக்கும் ராசியையோ, அம்சத்தையோ, யமகண்டகமிருக்கும் ராசியையோ அடையும் பொழுதும் புத்திரசித்தியுண்டாகும். (26) லக்கினாதிபதியானவன் கோசரத்தில் சொந்த வீட்டிலோ, உச்ச வீட்டிலோ இருக்கின்ற புத்திர ஸ்தானாதிபதியுடன் எப்பொழுது சேருவானோ அப்பொழுதாவது, லக்கினாதிபன் புத்திர க்ஷேத்திரத்தையோ, 5க் குடையவனிருக்கும் வீட்டையோ அடையும்பொழுதாவது புத்திர ப்ராப்த்தி யுண்டாகும். (27) லக்கினாதிபதி, 7க்குடையவன் 5க் குடையவன் இவர்கள் சேர்க்கையைக் கொண்டு மஹா தசையைக் கண்டுகொண்டு 5லிருப்பவன், 5ஐப் பார்ப்பவன், 5க் குடையவன் இவர்களின் தசாபஹாரங்களில் புத்திரப் பிராப்த்தி யுண்டாகும். (28) 5க் குடையவன், குரு இவர்களுடையவோ, அல்லது அவர்களிருக்கும் ராசி, அம்சம் இவற்றின் அதிபதிகளுடையவோ பலம் பெற்றவரின் தசையிலோ, புக்தியிலோ புத்திரப் பிராப்த்தி யுண்டாகும். (29) குருவானவன் கோசரத்தில் குரு, 5க் குடையவன் இவர்களின் ராசி, அம்சம் இவற்றிற்குத் திரிகோணத்தை யடைந்தபொழுது மனிதர்களுக்கு புத்திரப்பிராப்த்தியுண்டாகும். பின்னும் வேறு சாஸ்திரத்தைக் கொண்டும், ஜன்மகால நிர்ணயத்தைச்செய்து கொண்டு ஸந்ததி லக்ஷணத்தை புத்திமான் நிருபணம் செய்யவேண்டும். (30) ஜன்ம நக்ஷத்திராதிபதி 5-வது நக்ஷத்திராதிபதி இவர்களுடைய ஸ்புடத்திலோ, திரிகோணத்திலோ குருகோசரத்தில் வரும்பொழுது புத்திரோத்

பத்தி யுண்டாகும். (31) நிஷேக லக்கினத்திற்கு 3 மிடத்தில் கோசரத்தில் சூரியன் எப்பொழுது சஞ்சரிக்கின்றானோ அல்லது ஆதான லக்கினத்திற்குத் திரிகோணத்திலோ சூரியன் ஸஞ்சரிக்கின்றானோ அப்பொழுது புத்திரோத்பத்தியைச்சொல்லவேண்டும்.

பிறந்த புத்திரனைப்பற்றிய விஷயம்.

आधानलग्नात्सुतभेऽथ जन्मभाग्येऽपि वा पुण्यवशाच्च वाच्यम् ।
आधानलग्ने शुभदृष्टियोगे दीर्घायुरैश्वर्ययुतो नरः स्यात् ॥ ३२ ॥

तत्कालेन्दुर्द्वादशांशे मेषाद्यावति भेऽपि वा ।
तस्मात्तावति भे वापि जन्मचन्द्रात् वदेद्बुधः ॥ ३३ ॥

प्रश्नात्मजस्वीकरणोपनीतिकन्याप्रदानाभिनवार्तवेषु ।
आधानकालेऽपि च जन्मतुल्यं फलं वदेल्लग्नविलग्नतश्च ॥ ३४ ॥

(32) ஆதான லக்கினத்திற்கு 5 மிடத்திலோ, 9 மிடத்திலோ, புத்திரன் பிறப்பது புண்ணிய வசத்தாலென்றே சொல்ல வேண்டும். ஆதான லக்கினத்திற்கு சுபர் பார்வை யிருந்தால் பிறந்த புத்திரன் தீர்க்காயுளுள்ளவனாகவும், ஐஸ்வரியத்துடன் கூடினவனாகவு மிருப்பான். (33) ஆதான காலத்திய சந்திரன் துவாதசாம்சத்தில் மேஷம் முதல் எத்தனையாவது ராசியிலிருக்கின்றானோ சந்திர லக்கினத்தினின்றும் அத்தனையாவது ராசியில் புத்திர ஜன்மத்தைப் புத்திமானுயுள்ளவன் சொல்லவேண்டும். (34) ப்ரஸ்னம், புத்திரஸ்வீகாரம் உபநயனம், கன்னிகாதானம், புதிதான ருது இவைகள் விஷயத்திலும், கர்ப்பாதானகாலத்திலும் உதய லக்னம், சந்திர லக்கினம் இவற்றைக்கொண்டும் ஜன்மகாலபலனுக் கொப்பான பலனைச் சொல்லவேண்டும்.

பலதீபிகையிற் சொல்லிய புத்திரபாவபலன் முற்றிற்று.

## ஸாராவளியிற் சொல்லிய புத்திரபாவபலன். (5)

बुद्धिप्रबन्धात्मजमन्त्रविद्या विनेयगर्भस्थितिनीतिसंस्थाः ।
सुताभिधाने भवने नराणां होरागमज्ञैः परिचिन्तनीयाः ॥ १ ॥

सुतभवनात्सुतबुद्धी मन्त्रिणमपि मन्त्रभोजनपितॄंश्च ।
हृदयोदरप्रदेशौ विवेकशक्ती च निर्दिशेन्मतिमान् ॥ २ ॥

ஐந்தாம் பாவத்தைக் கொண்டு அறிய வேண்டியவைகள்.—(1) புத்தி, ப்ரபந்தம், புத்திரன், மந்திரம், வித்யை, சிஷ்யன், கர்ப்பஸ்திதி, நீதியின் நிலை, ஆகிய இவைகளை 5 மிடத்தைக் கொண்டு ஹோரா சாஸ்திரமறிந்த பெரியோர் அறிந்து கொள்ள வேண்டும். (2) 5 மிடத்தைக்கொண்டு புத்திரன் புத்தி இவைகளையும், மந்திரியையும், மந்த்ராலோசனையையும், போஜனம், பிதா இவர்களையும், ஹிருதயம், வயிற்றிலுள்ள இடம், விவேகம், சக்தி இவைகளையும் புத்திமானுயுள்ளவன் குறிப்பிடவேண்டும்.

मेषे सुतस्थे लभते मनुष्यः प्रियेण पुत्रेण युतिं तथा च ।
सुरात्सुखं नित्यकृतां मुदं च पापानुरक्तः कुलवित्तयुक्तः ॥ ३ ॥

वृषेतु राशौ सुतगे मनुष्यः प्राप्नोति कन्यास्सुभगास्सुरूपाः ।
अपत्यहीना बहुकान्तियुक्ता स्वसदानुरक्ता निजभर्तृधर्मे ॥ ४ ॥

तृतीयराशौ सुतगे मनुष्यः प्राप्नोत्यपत्यानि च सौख्यधर्मान् ।
गीतानि सद्गानगुणाधिकानि प्रभासमेतानि बलाधिकानि ॥ ५ ॥

कर्कस्सुतस्थो जनयेन्मनुष्यं शीतस्वभावं जलकेलिरक्तम् ।
पुत्रान्वितं प्राप्तयशोऽधिकं च स्त्रीवल्लभं कामरतेन युक्तम् ॥ ६ ॥

सिंहस्सुतस्थो जनयेन्मनुष्यान्क्रूरस्वभावान्नयनीतिहीनान् ।
मांसप्रियान् स्त्रीजनकान् सुतीव्रान्विदेशभाजः क्षुधया समेतान् ॥७॥

कन्या यदा पञ्चमगा तदा स्यात्कन्या नराणां तनयैर्विहीना ।
पतिप्रिया पुण्यपरा प्रगल्भा प्रशान्तपापा प्रियभूषणा च ॥ ८ ॥

तुला यदा पञ्चमगा नराणां तदा सुशीलानि मनोहराणि ।
भवन्त्यपत्यानि सुरूपकाणि क्रियासमेतानि शुभेक्षितानि ॥ ९ ॥

कीटे सुतस्थे जनयेत्त्रयोनौ पुत्रान्मनुष्यः सुभगान्सुशीलान् ।
अज्ञातदोषान् प्रणयेन युक्तान् सक्तांश्च धर्मे सततं मनुष्यैः ॥ १० ॥

चापे सुतस्थे जनयेन्मनुष्यः पुत्रांश्च पापान्कुमतीन्कुरूपान् ।
गम्भीरचेष्टान्मतिसत्ययुक्तान्पुत्रान्मनुष्ये जनयेत्प्रसिद्धान् ॥ ११ ॥

मृगे सुतस्थे जनयेन्मनुष्यस्सुतान्विचित्रान्हयलुब्धलक्षान् ।
धानुष्कचर्यान् हतशत्रुपक्षान्सेवाप्रियान्पार्थिवमानयुक्तान् ॥ १२ ॥

कुम्भे सुतस्थे जनयेन्मनुष्यः प्रसन्नमूर्तिर्धनधान्ययुक्तः ।
पुत्रान्वितो भूरिगुणैरुपेतः कुपुत्रतः कष्टमथ प्रयाति ॥ १३ ॥

मीने सुतस्थे सति हास्ययुक्तान् पुत्रान्मनुष्यो लभते नृवर्यान् ।
रोगैर्विमुक्तान्सुतरां सुरूपान् सुहास्यदासीसहितान्सदैव ॥ १४ ॥

மேஷாதி ராசிகள் புத்திரஸ்தானமாக ஆவதன் பலன்.—(3) மேஷம் புத்திரஸ்தானமாகவானுல் மனிதன் பிரியனுன புத்திரனுடன் சேர்க்கையையும், தேவதையினிடமிருந்து சுகத்தையும், எப்பொழுதுமே செயர்க்கையாலுண்டானஸந்தோஷங்களேயும் அடைகிருன். அத்துடன் பாப காரியத்தில் பற்றுள்ளவனுகவும் குல தனத்துடன் கூடினவனுகவும் ஆகிருன். (4) விருஷபம் புத்திரஸ்தானமாக ஆனுல் மனிதன் நல்ல அழகுள்ளவர்களும், நல்லவுருவமுள்ளவர்களுமான பெண்களேயடைகிருன். அப்பெண்கள் குழந்தை யற்றவர்களாகவும், வெகுகாந்தி (ஆசை) யுள்ளவர்களாகவும் தனது பர்த்திரு தர்மத்தில் எப்பொழுதும் பற்றுள்ளவர்களாகவுமிருப்பர். (5) மிதுன ராசியானது 5 மிடமாக வாகும்பொழுது மனிதன் குழந்தைகளேபடைவதுடன் ஸவுக்கியம் தர்மம் இவைகளேயுமடைகிருன். நல்லகான குணத்துடன் கூடினவைகளும், சோபையுடன்கூடினவைகளும், அர்த்தபுஷ்டியுள்ளவைகளுமானகீதங்களேயும் அடைகிருன். (6) கடகமானது 5மிடமாக வாகுமானுல் அது பிறந்த மனிதனேக் குளிர்ந்த (சாந்தமான) ஸ்வபாவமுள்ளவனுகவும், ஜலக்ரீடையிற் பற்றுள்ளவனுகவும், புத்திரனுடன் கூடினவனுகவும், அதிகமான கீர்த்தியை யடைந்தவனுகவும், ஸ்திரீகளிடத்தில்ஸமர்த்தனுகவும், காமப்பற்றுடன் கூடினவனுகவும் செய்கிறது. (7) 5மிடமாகவான சிங்கமானது குரூர ஸ்வபாவமுள்ளவர்களும் விநயம், நீதி இவையற்றவர்களும், மாம்ஸத்தில் பிரீதியுள்ளவர்களும், ஸ்திரீப் பிரஜையை யுண்டாக்குகின்றவர்களும், மிக்க கொடூரமானவர்களும், வேறு தேசத்தை யடைந்தவர்களும், அதிகம் பசியுடன் கூடினவர்களுமான மனிதர்களே யுண்டாக்குகிறது. (8) கன்னி 5மிடமாகவானுல் அப்பொழுது மனிதர்களுக்குப் பிறக்கும் பெண்ணுனவள் புத்திரர்களற்றவளாகவும், பர்த்தாவினிடத்தில் பிரியமுள்ளவளாகவும், புண்ணியத்தில் நோக்கமுள்ளவளாகவும், சதுரையாகவம், பாபமற்றவளாகவும் ஆபரணத்தில் பிரீதியுள்ளவளாகவும் இருப்பாள். (9) துலா ராசியானது 5 மிடமாகவானுல் அப்பொழுது மனிதர்கட்குப்

பிறக்கும் குழந்தைகள், நல்லொழுக்கமுள்ளவைகளாகவும், மனோஹரங்களாகவும், நல்ல ரூபமுள்ளவைகளாகவும், கர்மத்துடன் கூடினவைகளாகவும், சுபமான பார்வை யுள்ளவைகளாகவும் இருக்கும். (10) விருச்சிக ராசியானது 5மிடமாக வரும்பொழுது பிறந்த மனிதன் நிந்திதமான யோநியில், நல்ல அழகு, நல்லொழுக்கம், தோஷமின்மை,பிரீதியுடன் கூடல்,தர்மத்தில் பற்று, மனிதருடன் எப்பொழுதும்பற்று இவை நிறைந்த புத்திரர்களை யுண்டாக்குவர். (11) தனுஸ் 5மிடமாகப் பிறந்த மனிதன் பாபச்செயலுள்ளவர்களும்,குரூபர்களும், கெட்ட புத்தியுள்ளவர்களும், கம்பீரமான நடத்தை யுள்ளவர்களும், புத்தி, ஸத்தியம் இவற்றுடன் கூடினவர்களும், மனிதர்களுள் பிரசித்தர்களுமான புத்திரர்களை யுண்டாக்குவான். (12) மகரம் 5 மிடமாகவாகப் பிறந்த மனிதன் விசித்திரமானவர்களும், குதிரையில் குறியுள்ளவர்களும், வில்லாளியின் சேஷ்டையுள்ளவர்களும், சத்துருபக்ஷத்தை நாசமாக்குகிறவர்களும், ஸேவை செய்வதில் பிரியமுள்ளவர்களும், ராஜமரியாதையுடன் கூடினவர்களுமான புத்திரர்களை யுண்டாக்குவான். (13) கும்பராசியானது 5 மிடமாகவாகப் பிறந்த மனிதன் ப்ரஸன்னமான சரீரமுள்ளவனாகவும் தனதான்ய யுக்தனாகவும், புத்திர யுக்தனாகவும், வெகு (நல்ல) குணங்களுடன் கூடினவனாகவும், ஆகிப் பிறகு கஷ்டத்தை யடைகிறான். (14) மீனராசியானது 5மிடமாகவாகப் பிறந்த மனிதன் ஹாஸ்யயுக்தர்களும், ரோகமற்றவர்களும், மிகவும் நல்ல ரூபமுள்ளவர்களும் எப்பொழுதுமே ஹாஸ்யம், தாஸீ இவர்களுடன் கூடினவர்களும், மனித ஶ்ரேஷ்டர்களுமான புத்திரர்களை யடைகிறான்.

लग्नं गते सन्ततिपे सुतानां सुखं सुविद्यारतिमन्त्रसिद्धिः ।
शास्त्राणि जानाति सुकर्मकारी राजाङ्गयुक्तः खलु विष्णुभक्तः ॥

सुतेशे गते द्रव्यभावं नरस्स्यात् कुलेशाप्तवित्तः कुडुम्बे विरोधी ।
भवेद्दानिकारी जनैर्भोगसक्तः शुभैर्जीवपुत्रो भवेद्द्रव्यनाथः॥ १६ ॥

सुतेशे गते विक्रमं विक्रमी स्यात्सुहृच्छान्तियुक्तो वचो माधुरीयुक् ।
शुभे खेटयुक्ते शुभप्राप्तिकारी मनः कार्यसिद्धिस्सुखी शान्तनम्रः॥

सुतपतिः कुरुते सुखभावगो जनकभक्तिकरं कुशलं नरम् ।
तदनु पूर्वजकर्मकरं सदा कविजनं वसुवस्त्रनिरूपणम् ॥ १८ ॥

तनयभावपतिस्तनयस्थितो मतियुतं वचनप्रबलं जनम् ।
बहुळमानयुतं पुरुषोत्तमं प्रवरलोकवरं कुरुते नरम् ॥ १९ ॥

रिपुगतस्तनयाधिपतिर्यदा रिपुजनाभिरतं कुरुते नरम् ।
स्थिततनुं बहुदोषयुतं सदा धनसुतैरहितं खलखेचरैः ॥ २० ॥

मदनगस्तनयस्थलनायकस्सुभगपुत्रवती दयिता सदा ।
स्वजनभक्तिरता प्रियवादिनी सुजनशीलवती तनुमध्यमा ॥ २१ ॥

सुतपतौ निधनस्थलगे नरः कुवचनाभिरतो विहताङ्ककः ।
भवति चण्डरुचिश्चपलो नरो गतधनो विकलश्शठतस्करः ॥ २२ ॥

सुकृतभावगतस्तनयाधिपः समवितर्कविभाजनवल्लभः ।
सकलशास्त्रकलाकुशलो भवेन्नृपतिदत्तरथाश्वयुतो नरः ॥ २३ ॥

दशमगः कुरुते सुतनायको नृपतिकर्मकरं सुखसंयुतम् ।
विविधलाभयुतं प्रवरं नरं प्रवरकर्मकरं वनितारतम् ॥ २४ ॥

सुतपतिर्भवगस्सुतसंयुतं प्रकुरुते सुतमित्रयुतं नरम् ।
प्रवरगानकलाप्रवरं विभुं नृपतितुल्यकुलं च सदैव हि ॥ २५ ॥

व्ययगतो व्ययकृत्सुतनायको विगतपुत्रसुखः खचरैः खलैः ।
सुतयुतं च शुभैः कुरुते नरं स्वपरदेशगमागमनोत्सुकम् ॥ २६ ॥

5ம்பாவாதிபதி லக்கினாதிபாவங்களிலிருப்பதன் மூலம் காண வேண்டிய பலன்கள்.—(15) 5க் குடையவன் லக்கினத்திலிருந்தால் புத்திரர்களுடையசுகமும், நல்லவித்யையில் பற்றும், மந்திர ஸித்தியும் உள்ளவனாவதுடன், நல்லகாரியம் செய்கின்றவனாகவும், ராஜாங்கத்தில் சேர்க்கை யுள்ளவனாகவும், விஷ்ணுபக்தனாகவும் ஆகி சாஸ்திரங்களையும் அறிகிறான். (16) 5க் குடையவன் 2 மிடத்திலிருந்தால் மனிதன் குலேசன் மூலம் கிடைத்த பணமுள்ளவனாகவும், குடும்பத்தில் விரோதியாகவும், நாசத்தைச் செய்பவனாகவும் ஜனங்களு (அவிவேகிகளு) டன் சேர்ந்து போகானுபவப் பற்றுள்ளவனாகவும், நற்கர்மங்களின் மூலமான ஜீவிதத்துடன் கூடின புத்திரனுள்ளவனாகவும், திரவியநாதனாகவும் ஆவான். (17) 5க் குடையவன் 3 மிடத்திலிருந்தால் பராக்ரம

முள்ளவனுகவும், ஸுஹிருத்துக்களிடத்தில் பொறுமையுள்ள வனுகவும், வாக்கில் மாதுர்யமுள்ளவனுகவும், சுபக்கிரஹமும் அங்கிருந்தால் சுபப்ராப்த்தியைச் செய்பவனுகவும், மனத்தால் காரியஸித்தியை யுடையவனுகவும்,சுகியாகவும், சாந்தகுணமுள்ள வரிடத்து வணக்கமுள்ளவனுகவும் இருப்பான். (18) 5க் குடையவன் 5 மிடத்திலிருந்தால் அதில் பிறந்தமனிதனை தகப்ப னிடத்தில் பக்திசெய்பவனுகவும், குசலனுகவும் எப்பொழுதும் முன்னுள்ள பெரியாருடைய கர்மத்தைச் செய்பவனுகவும், கவ னம் செய்யும் ஜனங்களின் சேர்க்கை யுள்ளவனுகவும், தனம் வஸ்திரம் இவற்றை பிறர்க்கெடுத்துரைப்பவனுகவும் (அதாவது: வஸ்திர வியாபாரம், லேவாதேவீ நடத்தல் முதலியனவாம்.) செய்கிறது. (19) மேலும் 5க்குடையவன் 5லிருந்தால் மனிதனை புத்தியுடன் கூடினவனுகவும், வார்த்தை பேசுவதில் பிரபல மனி தனுகவும், அதிகமான மரியாதையுடன் கூடினவனுகவும், புருஷ சிரேஷ்டனுகவும், சிறந்த லோகமுள்ளவனுகவும், செய்கிறது. (20) 5க் குடையவன் 6 மிடத்தை யடைந்தானுனல் மனிதனைச் சத்துரு ஜனங்களிடத்தில் பற்றுள்ளவனுகவும், நிலைத்த சரீர முள்ளவனுகவும், வெகு தோஷமுள்ளவனுகவும் செய்கிறது. பா பக்கிரஹங்களுடன் கூடினுல் தனம்,புத்திரன் இவையற்றவனுக்கு கிறது. (21) 5க் குடையவன் 7 மிடத்திலிருந்தால் இவனது பத்னியானவள் எப்பொழுதும் நல்ல புத்திரனுள்ளவளாகவும், சொந்த ஜனங்களிடத்தில் பக்தியுள்ளவளாகவும், பிரியமாகப் பேசுகிறவளாகவும், நல்லோரொழுக்கமுள்ளவளாகவும் சிறுத்த இடையுள்ளவளாகவும் இருப்பாள். (22) 5க் குடையவன் 8 மிடத்திலிருந்தால் அப்பொழுது பிறந்த மனிதன் கெட்டவசனத் தில் பற்றுள்ளவனுகவும், கெடுக்கப்பட்ட அங்கமுள்ளவனுகவும், மிக்க கோபமுள்ளவருடன் பற்றுள்ளவனுகவும், சபல ஸ்வபாவ முள்ளவனுகவும், தனமற்றவனுகவும்,வஞ்சகர்களிடத்தில் பயந்த வனுகவும், அவயவக்குறைவுள்ளவனுகவும் ஆகிறுன். (23) 5க் குடையவன் 9 மிடத்திலிருக்கப் பிறந்த மனிதன் சண்டை வரு மிடத்து ஸமமாகப்பாகம் பிரித்துவைப்பதில் ஸமர்த்தனுகவும், எல்லா சாஸ்திரவித்தையிலும் ஸமர்த்தனுகவும், அரசனுற் கொ

டுக்கப்பெற்ற தேர் (வண்டி) குதிரை இவையுள்ளவனுகவு மாகிறுன், (24) 5க் குடையவன் 10 மிடத்திலிருக்கப் பிறந்தமனிதனை ராஜகாரியத்தைச் செய்கின்றவனுகவும், சுகத்துடன் கூடினவனுகவும், பற்பலலாபத்துடன் கூடினவனுகவும், எதிலும் சிறந்தவனுகவும், சிரேஷ்டமான தொழில் செய்கின்றவனுகவும், ஸ்திரீயினிடத்தில் பற்றுள்ளவனுகவும் செய்கிறது. (25) 5க் குடையவன் 11லிருந்தால் புத்திரனுடன் சேர்ந்தவனுகவும், புத்திரனின் மித்திரனுடன் சேர்க்கை யுடையவனுகவும், சிறந்த கானவித்தையில் பெயர்போனவனுகவும், எங்கும் புகழுடம்பு பெற்றவனுகவும், எப்பொழுதும் அரசனுக்கொப்பான குலமுள்ளவனுகவும், மனிதனைச் செய்கிறது. (26) 5க் குடையவன் 12 லிருந்து பாபக்கிரஹங்களுடனும் கூடினுல் வியயத்தைச் செய்வதுடன் புத்திர சுகமில்லாதவனுகவு மாக்குகிறது. சுபக்கிரஹங்களுடன் கூடினுல் புத்திரனுடன் கூடினவனுகவும் சொந்த தேசம், வேறு தேசம் இவ்விடங்களில் போக்குவரத்தில் பற்றுள்ளவனுகவும் மனிதனைச் செய்கிறது. (எ—று)

सुतगृहे यदि सूर्यनिरीक्षिते प्रथमसन्ततिनाशकरश्च हि ।
तदनु पीडितवातयुतस्सदा गृहभवाल्पसुखः कथितस्सदा ॥ २७ ॥

सुतस्थानगा चन्द्रदृष्टिर्यदा स्यात् प्रसूते सुखं मित्रजन्यं सदैव ।
नरेन्द्रादितुल्यस्स्ववंशे प्रधानो ऽप्यथैवान्यदेशे क्रये जीवितं च ॥ २८ ॥

सुतगृहे यदि भौमनिरीक्षिते प्रथमसन्ततिनाशकरश्च हि ।
जठरगः खलु वह्निरथाधिको भ्रमति भोजनके च गृहे गृहे ॥ २९ ॥

संपूर्णदृष्टिर्यदि पञ्चमे च बुधो यदा स्यात्तनया प्रसूतिः ।
चतुष्टयान्ते खलु पुत्रजन्म सुकीर्तिरैश्वर्ययुतो नरो हि ॥ ३० ॥

सन्तानभावे गुरुपूर्णदृष्टिस्सन्तानसौख्यं प्रचुरं करोति ।
शास्त्रेषु नैपुण्यमथो च लक्ष्मीं विद्यां धनं वै चिरजीवितं च ॥ ३१ ॥

सुतगृहं यदि काव्यनिरीक्षितं तनयजन्मपुनश्च सुता भवेत् ।
द्रविणवान्खलु धान्यसुखस्सुधीः पठति शास्त्रकथामपि च सौख्यभाक् ॥

सुतगृहं यदि मन्दनिरीक्षितं सुतसुखं न करोति नरस्य हि ।
स्थिरमना यश आमयवृद्धिभाक् स्वकुलधर्मरतश्च चिरं भवेत् ॥३३॥

सुतगृहं यदि राहुसमन्वितं सुतसुखं नकरोति नरस्य हि।
तदनु भाग्ययुतिर्नृपतेर्जयः श्रमकृता विफलापि हि भारती ॥ ३४ ॥
भानुर्भयं पितृमृतिं नवमे च चन्द्रष्षष्ठेऽग्निभीर्धरणिजोऽथबुधश्शराब्दे ।
मातुः क्षयं सुरगुरुर्यदि सप्तवर्षे रुङ्मातुलस्य भृगुजश्शरवर्षलक्ष्मीम्॥३५॥

திருஷ்டி பலன்.—(27) 5மிடமானது சூரியனால் பார்க்கப் பட்டால் முதல் பிறந்த ஸந்ததிக்கு நாசத்தைச் செய்வான். பிறகு வாயு பீடிதனாகவும், எப்பொழுதும் வீட்டிலற்பசுகமுள்ள வனாகவும், சொல்லப்படுகிறான். (28) 5மிடமானது சந்திர திருஷ்டியை யடையுமானால் மித்திர மூலமான சுகத்தை யுண்டாக்குகிறது. நரேந்திராதி துல்யனாகவும் சொந்த வம்சத்தில் பிரதானனாகவும், வேறு தேசத்தில் வியாபாரஞ்செய்து ஜீவனத்தைச்செய்பவனாகவும் ஆகிறான். (29) 5மிடமானது சேவ்வாயினாற் பார்க்கப் பட்டால் முதல் பிறந்த பிள்ளை நாசத்தை யடைகிறது. வயிற்றில் ஜாடராக்னி அதிகமாகி (பசியின் மிகுதியால்) போஜனத்திற்கு வேண்டி வீடு வீடாய் அலைந்து திரிவான். (30) 5மிடத்தில் புதனுடைய ஸம்பூர்ண திருஷ்டி யிருக்குமானால் (அதாவது: 7-வது பார்வையாகப் பார்த்தால்) புத்திரீ பிறக்கும். கேந்திரத்தின் கோடியிலிருந்து பார்த்தால் புத்திர ஜன்ம, நல்ல கீர்த்தி ஐஸ்வரியம் இவற்றுடன் கூடினவனாக வாகிறான். (31) 5மிடத்தில் குருவின் பூர்ண திருஷ்டி யிருக்குமானால் அதிகமான ஸந்தான ஸவுக்கியத்தைச் செய்கிறது. சாஸ்திரங்களில் நைபுண்ணியத்தையும், லக்ஷ்மியையும், வித்தையையும், தனத்தையும், நீண்ட கால ஜீவிதத்தையும் செய்கிறது. (32) 5மிடமானது சுக்கிரனால் பார்க்கப்பட்டால் முதலில் புத்திரனும், பிறகு பெண்ணும் பிறக்கும். பணமுள்ளவனாகவும், தான்னிய சுகமுள்ளவனாகவும், புத்திமானாகவும் சாஸ்திரத்தைப் படிக்கிறவனாகவும் ஸவுக்கியத்தை யடைந்தவனாகவும் ஆகிறான். (33) 5 மிடமானது சனியினால் பார்க்கப்பட்டால் மனிதனுக்குப் புத்திர சுகமிராது. நிலைத்த மனதும் யசஸ், வியாதியின் பெருக்கு, சொந்தகுல தர்மத்தில் பற்று இவையிருக்கும். (34) 5 மிடமானது ராஹுவுடன் கூடுமானால் புத்திர சுகமுண்டாகாது. பிறகு பாக்கியத்தின் சேர்க்கை, ராஜ ஜயம், சிரமத்தாற் கிடைத்த வித்தையானது பய

னற்றதாகுதல் இவை நடக்கும். (35) சூரியன் 9-வது வருஷத்தில் பயத்தையும், பிதாவின் மரணத்தையும், சந்திரன் 6-வது வருஷத்திலும், செவ்வாய் (அதே வருஷத்தில்) அக்னிபயத்தையும், புதன் 5-வது வருஷத்தில் மாதிருநாசத்தையும், குரு 7-வது வருஷத்தில் அம்மானுக்கு வியாதி (யை) யும், சுக்கிரன் 5-வது வருஷத்தில் லக்ஷ்மீயையும் செய்வர்.

सुतभवनं सुगुरुयुतं शुभदृष्टं वा शुभर्क्षमिह येषाम् ।
तेषां प्रसवः पुंसां भवत्यवश्यं न विपरीते ॥ ३६ ॥

போதுவில் புத்திரலாப யோகம்.—(36) 5 மிடமானது சுபருடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும், சுபர்வீடாக இருந்தாலும், அம்மனிதர்க்கு புத்திரன்பிறப்பது நிஸ்சயம், இதற்கு மாறானால் இல்லை.

एकतमे गुरुवर्गे शुभराशावौरसो भवेत्पुत्रः ।
लग्नाच्चन्द्रादथवा बलयोगाद्वीक्षिते सौम्यैः ॥ ३७ ॥

संख्या नवांशतुल्या सौम्यांशे तावती सदा दृष्टा ।
शुभदृष्टे तद्द्विगुणा क्लिष्टा पापांशके तथा दृष्टे ॥ ३८ ॥

सौरर्क्षे सौरगणो बुधदृष्टो गुरुकुजार्कदृग्घीनः ।
क्षेत्रजपुत्रं जनयति बौधोऽपि गणो रविजसंदृष्टः ॥ ३९ ॥

मान्दं सुतर्क्षमिन्दुर्निरीक्षते यदि शनैश्चरेण युतम् ।
दत्तकपुत्रोत्पत्तिः क्रीतस्य बुधस्य चैवं स्यात् ॥ ४० ॥

सप्तमभागे कौजे सौरयुते पञ्चमे सदा भवने ।
कृत्रिमपुत्रं विन्द्याच्छेषग्रहदर्शनान्मुक्ते ॥ ४१ ॥

वर्गे पञ्चमराशौ सौरे सूर्ये च तत्र संयुक्ते ।
लोहितदृष्टे वाच्यो जातस्य सुतोऽधमप्रभवः ॥ ४२ ॥

चन्द्रे भौमांशगते धीस्थे मन्दावलोकिते भवति ।
गूढोत्पन्नः पुत्रः शेषग्रहदर्शनातीते ॥ ४३ ॥

तस्मिन्नेव च भौमे शनिवर्गस्थे निरीक्षिते रविणा ।
पुरुषस्य भवति पुत्रो ऽपविद्ध इति चरकमुनिवचनम् ॥ ४४ ॥

शनिवर्गस्थे चन्द्रे शनियुक्ते पञ्चमे यदा भवने ।
रविशुक्राभ्यां दृष्टे पुत्रः पौनर्भवो भवति ॥ ४५ ॥

चूडा यदार्कसक्ता कलाच तस्यैव पञ्चमे भवने ।
रविदृष्टेऽप्यथ सहिते कानीनस्संभवति पुत्रः ॥ ४६ ॥

वर्गे रविचन्द्रमसोः सुतगेहे चन्द्रसूर्यसंयुक्ते ।
शुक्रेण दृष्टमात्रः पुत्रः कथितः सहोढश्च ॥ ४७ ॥

पापैर्बलिभिर्युक्ते पापर्क्षे पञ्चमे सदा राशौ ।
जातोऽपुत्रः पुरुषः सौम्यग्रहदर्शनातीते ॥ ४८ ॥

शुक्रनवांशे तस्मिन् शुक्रेण निरीक्षिते त्वपत्यानि ।
दासीप्रभवानि वदेच्चन्द्रादपि केचिदाचार्याः ॥ ४९ ॥

ஔரஸ புத்திராதி 12வித புத்திரர்களின் யோகம்.—(37) பலம் பெற்ற ஜன்ம லக்கினத்திலிருந்தோ சந்திர லக்கினத்திலிருந்தோ, ஐந்தாவது வீடாகவான புத்திரஸ்தானத்தில் குருவின் ஷட்வர்க்கங்களுள் ஒன்றிருக்குமானல் அதாவது:—குருவின் வீடு, குருவின் திரேஷ்காணம், குருவின் நவாம்சம், குருவின் த்ரிம்சாம்சம், குருவின் துவாதசாம்சம் இவற்றுள் யாதானுமொன்றிருக்குமானல் ஔரஸ புத்திரனுண்டாவான். புத்திரஸ்தானம் சுபரால் பார்க்கப்பட்டாலும் ஔரஸ புத்திர னுண்டாவான். (38) புத்திர ராசியிலுள்ள சுபக்கிரஹ நவாம்சத்தின் எண் எவ்வளவு சென்றிருக்கின்றதோ அவ்வளவு எண்ணுள்ள புத்திரர்கள் பிறப்பார்களென்பது எப்பொழுதும் அனுபவத்திற் கண்டதோர் முறையாகும். புத்திர ராசியிற் சென்றுள்ள சுபக்கிரஹ நவாம்சம் சுபக்கிரஹங்களால் பார்க்கப்பட்டால் முற்கூறிய புத்திரஸங்கியையானது இரண்டுமடங்கு அதிகமானதாயாகும். புத்திரஸ்தானத்திற் சென்றிருக்கும் பாபக்கிரஹ நவாம்சம் சுபரின் பார்வையைப் பெறுமாயின் கிலேசத்தை முன்னிட்டு செல்லான பாபக்கிரஹ நவாம்ச ஸங்கியைக்கொப்பான புத்திர ஸங்கியையேற்படும். (39) சனியின் வீடு புத்திரஸ்தானமாகவாகி சனியின் வர்க்கம் புதனுல் பார்க்கப்பட்டு குரு, செவ்வாய், சூரியன், இவர்களால் பார்க்கப்படாமலு மிருக்குமானல் இத்தகைய யோகமுள்ள ஜாதகனுக்கு க்ஷேத்திரஜ புத்திரலாபமுண்டாகும். புதன் வீடு புத்திரஸ்தானமாகவாகி புதனின் வர்க்கம் சனியினுற் பார்க்கப்பட்டு குரு, செவ்வாய், சூரியன் இவர்களின் பார்வையை

ப்பெருவிடில் இத்தகைய யோகமுள்ள ஜாதகனுக்கும் க்ஷேத்திரஜ புத்திரலாப முண்டாகும். (40) புத்திரஸ்தானம் சனியின் வீடாகி அதைச் சந்திரன் பார்த்தாலும், அல்லது புத்திரஸ்தானம் சனியுடன் சேர்ந்திருந்தாலும் தத்தன் என்ற (ஸ்வீகிருத) புத்திரலாப முண்டாகும். புத்திரஸ்தானம் புதன் வீடாகி சந்திரனுற் பார்க்கப்பட்டாலும் அல்லது புதன் புத்திரஸ்தானத்திலிருந்தாலும் க்ரீதன் என்ற (விலைக்கு வாங்கின) புத்திரலாபமுண்டாகும். (41) புத்திரஸ்தானத்தில் செவ்வாயின் ஸப்தமாம்சமுதயமாகி அந்த ஸப்தமாம்சத்தில் சனியுமிருந்து சனியைத்தவிற மற்றக் கிரஹங்களின் பார்வையுமதற்கில்லாதிருந்தால் அப்பொழுது பிறந்தவனுக்கு கிருத்திரிம (வளர்ப்பு) புத்திரலாப முண்டாகும். (42) 5 மிடத்திலுள்ள சனியின் வர்க்கமானது சூரியனுடன் சேர்ந்தோ அல்லது செவ்வாயினுற் பார்க்கப்பட்டோ இருந்தால் இத்தகைய யோகமமைந்த ஜாதகனுக்கு அதமப்ரபவன் என்ற (தாழ்ந்தவனுக் குண்டான) புத்திரலாப முண்டாகும். (43) சந்திரன் செவ்வாயின் நவாம்சத்தை யடைந்து ஐந்தாமிடத்திலுமிருந்து சனியினுற் பார்க்கப்பட்டு வேறு கிரஹங்களின் பார்வையைப் பெருவிடில் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு கூடோத்பன்னன் என்ற (ரஹஸ்யமாயுண்டானவன்) புத்திரலாபமுண்டாகும். (44) செவ்வாய் புத்திரஸ்தானத்தில் சனியின் வர்க்கத்திலிருந்து சூரியனுற் பார்க்கப்பட்டால் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு அபவித்தன் என்ற புத்திரலாபமுண்டாகும். (45) சந்திரன் சனியின் வர்க்கத்திலிருந்து 5 மிடத்தில் சனியுமிருந்து சுக்கிரன் சூரியன் இவர்களாற் பார்க்கவும் பெற்றால் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு பௌனர்ப்பவன் என்ற (விதவைக்குப் பிறந்தவன்) புத்திரனுண்டாகும். (46) மேஷாதி ராசியோ, மேஷ ஷோடசாம்சமோ சூரியனுடன் சேர்ந்தோ அல்லது 5-வது வீடு சூரியனுடன் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு கானீனன் என்ற (கன்னிப் பருவத்தில் பிறந்த) புத்திரப் பிராப்தியுண்டாகும். (47) புத்திர ஸ்தானத்திலுள்ள சூரியன், சந்திரன் இவர்களின் வர்க்கமானது சந்திரன் சூரியன் இவர்களுடன் சேர்ந்து

சுக்கிரனாலும் பார்க்கப்பட்டால் இவ்வித யோகத்திற் பிறந்தவனு க்கு ஸஹோடன் என்ற (ஒரு ஸ்திரீயை இருவர் மணந்து அவ ளுக்குப் பிறந்தவன்) புத்திரலாப முண்டாகும். (48) 5 மிடம் பாபர் க்ஷேத்திரமாகவாகி வனுவுள்ள பாபர்களுடனும் கூடி சுபர்களின் பார்வையையும் பெறுவிடில் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு புத்திரப்ராப்த்தியே ஏற்படாது. (49) புத்திர ஸ்தானத்தில் சுபக்கிரஹநவாம்ச முதயமாகி அது சுக்கிரனாற் பார்க்கப்பட்டால் இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு தாஸீ ப்ரபவன் என்ற புத்திரலாப முண்டாகும். சந்திரனைக் கொண் டும் இவ்விதம் சொல்லவேண்டுமென சில ஆசிரியர் சொல்லுகின் றனர். அதாவது: புத்திரஸ்தானத்தில் சந்திர நவாம்சமுதயமாகி அதுசந்திரனாற் பார்க்கப்பட்டு மிருந்தால் தாஸீப்ரபவன் என்ற புத்திரலாபமுண்டாகும் என்பதாம்.

सितशशिवर्गे धीस्थे ताभ्यां दृष्टेऽथवापि संयुक्ते ।
प्रायेण दारिकास्स्युस्समराशिगतेऽपि चान्यथा पुत्रः ॥ ५० ॥

அதிகமாய்ஸ்திரீபிரஜை, புருஷப்பிரஜை, இவையுண்டாகும் யோகம்.—(50) சுக்கிரன் சந்திரன் இவர்களின் வர்க்கம் 5 மிடத் திலிருந்து சுக்கிரன் சந்திரன் இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றைப் பெற்றே இருந்து அவர்கள் இருக்கும் கணம் (வர்க்கம்) இரட்டைப்பட்ட ராசியின் (கணம்) வர்க்கமாகவு மிருந்தால் அந்த ஜாதகனுக்குப் பிறப்பது பெரும்பாலும் பெண் களாகவே யிருக்கும். மேற்கூறியதற்கு மாறாக அதாவது: ஒற் றைப்பட்ட ராசியின் வர்க்கத்தில் சுக்கிரன் சந்திரன் இவர்களிருந் தால் அப்பொழுது புருஷப் பிரஜையே பிறக்கும் என்பதாம்.

लग्नाद्दशमे चन्द्रे सप्तमभवनस्थिते भृगोः पुत्रे ।
पापे पातालस्थे वंशच्छेत्ता भवेज्जातः ॥ ५१ ॥

पापैः पञ्चमसंस्थैः व्ययसंस्थैर्वा पराभवस्थैर्वा ।
मूर्तिस्थानगतैर्वा वंशच्छेत्ता भवेज्जातः ॥ ५२ ॥

வம்சச்சேத யோகம்.—(51) லக்கினத்திற்கு 10ல் சந்திர னும், 7ல் சுக்கிரனும். 4ல் பாபருமிருந்தால் ஜாதகன் வம்சச் சேத்தாவாக வாகிறான். (52) பாபக்கிரஹங்கள் 5, 12, 8, 1மிடங்

களில் இருந்தால் ஜாதகன் வம்சச்சேத்தாவாக வாகிறான்.

भौमः पञ्चमभवने * जातः पुत्रो विनाशमायाति ।
दृष्टो गुरुणा प्रथमं सितेन नच सर्वदृष्टश्च ॥ ५३ ॥

धनजनसुखहीनः पञ्चमस्थैश्च पापैः
भवति विकलएव क्ष्मासुते तत्र जन्तुः । (जातः)
दिवसकरसुते च व्याधितप्तस्वदेहः
सुरगुरुबुधशुक्रैस्सौख्यसम्पद्धनाढ्यः ॥ ५४ ॥

पञ्चमसंस्थः पापः पुत्रविनाशं करोति बलहीनः ।
सौम्यश्शुभं विधत्ते बलसहितश्चाष्टमाधिपं हित्वा ॥ ५५ ॥

புத்திர நாசமுண்டாகும்.—(53) 5ல் செவ்வாயிருக்கப் பிறந்தவனுக்கு பிறக்கப் பிறக்க புத்திரநாசமுண்டாகும். (அல்லது பிறந்த புத்திரனை நாசமாக்குவான் என்பது வேறு பாடம்) குருவினாலோ, சுக்கிரனாலோ பார்க்கப்பட்டால் முதல் பிறந்த குழந்தை நாசமாகும். எல்லாக் கிரஹங்களாலும் பார்க்கப்பட்டால் புத்திர நாசமில்லை. (54) 5ல் பாபரிருந்தால் தனம், ஜனம், சுகம் இவை யற்றவனாக வாகிறான். செவ்வாய் அங்கிருந்தால் ஜாதகன் விகலனாக (அங்க ஹீனனாக) ஆகிறான். சனியிருந்தால் வியாதி பீடிதமான தேஹமுள்ளவனாகிறான். குரு, புதன் சுக்கிரன் இவர்களிருந்தால் சவுக்கியம் ஸம்பத் தனம் இவை நிறைந்தவனாக வாகிறான். (55) 5லிருக்கும் பலஹீனனான பாபியானவன் புத்திர விநாசத்தைச் செய்கிறான். 8க் குடையவனைத் தவிர்த்து பலம் பெற்ற சுபன் சுபத்தைச் செய்வான்.

कर्क्यलिमीना धीस्था देवगुरावल्पसन्ततिर्भवति ।
इन्दोर्वेश्मनि धीस्थे मन्दे बहुपुत्रभाग्यसंयुक्तः ॥ ५६ ॥

அற்பபுத்திர பஹுபுத்திர யோகங்கள்.—(56) கடகம், விருச்சிகம், மீனம் இவ்விடங்கள் 5 மிடமாகவாகி அதில் குருவிருந்தால் அற்பமான ஸந்ததி யுண்டாகும். 5 மிடமாகவான கடகத்தில் சனியிருந்தால் வெகு புத்திர பாக்கியத்துடன் கூடினவனாகிறான்.

---

* जातं जातं विनाशयति पुत्रम् என்றும் பாடமுண்டு.

भौमे शशिवेश्मस्थे द्वितीयपाणिग्रहे सुतं विन्द्यात् ।
तत्रस्थेऽपि शशाङ्के त्वल्पापत्यो गुरौ बहुस्त्रीकः ॥ ५७ ॥

இரண்டாம் தாரத்தினிடம் பிள்ளையுண்டாகும் யோகம்.—(57) செவ்வாய்(5 மிடமான)கடகத்திலிருந்தால் இரண்டாவதாக கல்லியாணம் செய்தவளிடத்தில் புத்திரனையடைவான். சந்திரன் கடகத்திலிருந்தால் அற்பமான குழந்தையுண்டாகும். குருவிருந்தால் வெகு ஸ்திரீயை யடைகிறான்.

भार्याधिपे सुतस्थे भार्यानाशोऽथवाऽल्पपुत्रो वा ।
सबले सर्वं शुभदं विबले नाशं सुताधिपे कामे ॥ ५८ ॥

जीवे स्थिते च नाशः पञ्चमभे पापसंयुते भवति ।
पुत्रविनाशं दद्या त्सौम्यक्षेत्रे तु शोभनं भवति ॥ ५९ ॥

स्वर्क्षस्थे वा पापे पञ्चमभे पुत्रसम्पदं विन्द्यात् ।
पापद्वयेन युक्ते पञ्चमभे बहुप्रजालाभः ॥ ६० ॥

पुत्रस्थानपवित्तपौ गतबलौ पापेक्षितौ पुत्रभे
जातो नैककलत्रवानपि सुताभावं समेति ध्रुवम् ।
तज्जाया यदि पुत्रयोगजनिता सौम्येन वा पञ्चमात्
षष्ठेशेन निरीक्षिते सुतवती जारेण संजायते ॥ ६१ ॥

यदि मन्दकुजौ चन्द्रशुक्रयोस्सप्तमे स्थितौ ।
भार्याहीनो भवेन्नूनं पुत्रहीनोऽथवा भवेत् ॥ ६२ ॥

भौमार्कमन्दा लग्नान्त्यसप्तमेषु च संस्थिताः ।
पञ्चमे क्षीणचन्द्रश्चेत् पुत्रहीनो भवेन्नरः ॥ ६३ ॥

பொதுவில் புத்திரபாவத்தை பற்றியவைகள்.—(58) 7க்குடையவன் 5 லிருந்தால் பாரியாநாசமாவது, அற்பபுத்திரனாவது உண்டாகும். 7க் குடையவன் பலம் பெற்றால் எல்லாம் சுபத்தையே தரும். பலமற்றிருந்தால் நாசமுண்டாகும். 5க் குடையவன் 7 மிடத்திலிருந்தாலும் இதே பலன் தான் நடைபெறும். (59) குரு 5மிடத்தில் பாபருடன் கூடியிருந்தால் புத்திரநாசமுண்டாகும். சுபக்ஷேத்திரமானால் சோபனமுண்டாகும் (புத்திர நாசமுண்டாகாது.) (60) பாபக் கிரஹமானது சொந்த வீடான 5 மிடத்திலிருந்தால் புத்திர ஸம்பத்தைத் தருவான். 5

மிடமானது இரண்டு பாபருடன் கூடினால் வெகுப்பிரஜாலாப முண்டாகும். (61) 5, 2க் குடையவர்கள் பலமற்றவர்களாய் பாபர் பார்வை பெற்று 5 மிடத்திலிருந்தால் அந்த யோகத்திற் பிறந்தவன் வெகு களத்திரமுள்ளவனாயினும் புத்திரனில்லாமை யை யடைவது நிஸ்சயம். ஆனால் அவனது பாரியை யானவள் புத்திரயோக முள்ளவளாக இருப்பின் 5மிடத்திற்கு 6மிடத்தின் (அதாவது: 10 மிடத்தின்) அதிபதியாலும், சுபனாலும் 5மிடம் பார்க்கப்படுமானால் சோர புருஷன் மூலம் புத்திரவதியாக ஆகி றாள். (62) சனி செவ்வாய் இவர்கள் சந்திர சுக்கிரர்களுக்கு 7 மிடத்திலிருந்தார்களானால் பார்யா ஹீனனாகவோ அல்லது புத் திர ஹீனனாகவோ ஆவது நிஸ்சயம். (63) செவ்வாய், சூரியன், சனி இவர்கள் முறையே 1, 12, 7 மிடங்களிலிருந்து 5மிடத்தில் தேய்பிறை சந்திரனுமிருந்தால்புத்திரஹீனனாக வாகிறான்.

स्त्री पुत्रभे बलिनि शोभनखेटदृष्टे षष्ठाधिपेन सहिते सति वीक्षिते वा ।
जारेण पुत्रजनिलाभमुपैति जाया तस्याथवा बहुकलत्रयुतोऽप्यपुत्रः॥ ६४॥

द्यूनेशे कुजसंयुक्ते कुटुम्बस्थानसंस्थिते ।
जारेण लभते पुत्रं तस्य भार्यान्यगामिनी ॥ ६५ ॥

द्यूने कुटुम्बेशयुते कुजयुक्ते कुजेक्षिते ।
जारपुत्रो भवेत्तस्य भार्यास्यादन्यगामिनी ॥ ६६ ॥

पुत्रेशे द्यूनगे वापि कुटुम्बस्थानगेऽपि वा ।
भौमयुक्तेक्षिते तस्य भार्या जारसुतान्विता ॥ ६७ ॥

तेषु मन्दस्य सम्बन्धाद्राहुकेत्वोर्यदा तदा ।
तत्समानात्मवर्गैश्च नृभिस्संयोगकारणैः ॥ ६८ ॥

ஜாரனுக்குப் பிறக்கும் புத்திர யோகம்.—(64) ஸ்திரீயின் புத் திரக்ஷேத்திரமானது பலம்பெற்று சுபக்கிரஹத்தாலும் பார்க்கப் பட்டு 6க் குடையவனுடன் கூடியோ, பார்வையையடைந்தோ யிருந்தால் இவனுடைய பத்தினியானவள் சோரபுருஷனால் புத் திரலாபத்தை யடைவாள். இவன் வெகுகளத்திரமுள்ளவனாயி னும் புத்திரனற்றவனே யாவான். (65) 7க் குடையவன் செவ் வாயுடன் சேர்ந்து 2 மிடத்திலிருந்தால் அவனது பாரியை ஜார புருஷன் மூலம் புத்திரனையடைவதுடன் பரபுருஷனிடம் பற்று

ள்ளவளாகவுமிருப்பாள். (66) செவ்வாயின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையடைந்த 2 மிடத்ததிபன் 7 மிடத்திலிருந்தால் அவனுக்கு ஜாரஜ புத்திரனுண்டாவதுடன் பார்யை வேறு புருஷனிடம் பற்றுள்ளவளாகவுமாவாள். (67)5க்குடையவன் 7மிடத்திலோ, 2 மிடத்திலோ இருந்து செவ்வாயின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையடைந்தால் அவனது பாரியை சோரன் மூலம் புத்திரனுள்ளவளாக வாகிறுள். (68) முற்கூறியவற்றில் சனியினுடையவோ, ராஹு-கேதுக்களுடையவோ ஸம்பந்தமிருக்குமானுல் அப்பொழுது அவனுக்கொப்பான ஆப்தவர்க்கங்களுடனும், ராஜாக்களுடனும் சேர்க்கையேற்படும் காரணங்களால் புத்திரப் பிராப்தியுண்டாகும்.

मन्त्रेशः कारको वा स्वगृहमुपगतौ तुङ्गगौ मन्त्रसिद्धि
मीने षष्ठाष्टरिःफेऽप्यशुभग्रहयुते मन्त्रभे मारणं स्यात् ।
मिश्रे मिश्रग्रहे स्यादशुभशुभयुते मन्त्रभे मन्त्रनाथे
नीचे षष्ठाष्टरिःफेऽप्यशुभग्रहयुते मन्त्रहीनो भवेद्धि ॥ ६९ ॥

மந்த்ரஸித்தி, அஃதின்மை இவற்றைப்பற்றியயோகம் —(69) 5க் குடையவனே 5ம் பாவகாரகனே ஸ்வக்ஷேத்திரத்தை யடைந்தாலும், உச்சவீட்டை யடைந்தாலும் மந்த்ரஸித்தி யுண்டாகும். மீனமானது 5மிடமாகவாகி 6, 8, 12ல் பாபக்கிரஹங்களிருந்தால் மந்த்ரமூலம் மரணமுண்டாகும். 6, 8, 12ல் சுபாசுபக்கிரஹம் கலந்திருக்குமானுல் பலனும் சுபாசுபம் கலந்தே இருக்கும். 5 மிடத்தில் அசுபசுபக்கிரஹமிருந்து மந்த்ரநாதனும் நீசத்திலிருந்து 6, 8, 12லும் அசுபக்கிரஹமிருக்குமானுல் மந்த்ர ஹீனனுக வாகிறுன்.

पुत्रेऽर्के गुरुसंयुते शशिधरं चन्द्रात्मजे भैरवं
भौमे भैरवशङ्करौ शनियुते श्रीशूलिनीं देवताम् ।
पुत्रेऽर्के भृगुसंयुते गिरिसुतां भौमार्कयोश्शारभं
शन्याराहिसमन्विते शुभग्रहे मांसाशिनां देवताम् ॥७०॥

पञ्चमे भृगुसंयुक्ते चन्द्रेण सहिते ऽथवा ।
ताभ्यां दृष्टेऽथवा पुत्रे स्त्रीदेवोपास्तिमादिशेत् ॥ ७१ ॥

पञ्चमे पुंग्रहयुते पुंदेवोपास्तिमादिशेत् ।
पञ्चमे भानुसम्बन्धे सूर्यो वा शंकरो भवेत् ॥ ७२ ॥
चन्द्रे तथाविधे जाते यक्षिणी देवता भवेत् ।
स्कन्दो वा भैरवी वापि सौम्यसम्बन्धवीक्षिते ॥ ७३ ॥
उपास्या शारदा सौम्ये विष्णुर्वा सात्त्विको गुरौ ।
चामुण्डां पञ्चमे शुक्रसम्बन्धे तु विनिर्दिशेत् ॥ ७४ ॥
शनौ प्रेताशनी प्रोक्ता श्मशाननिलया भवेत् ।
राहुकेतुयुते तत्र परपीडनदेवता ॥ ७५ ॥

இன்னின்ன ஜாதகனுக்கு இன்னின்ன தேவதோபாஸனம் ஸித்தமாகும் என்பது—(70) 5 மிடத்தில் சூரியனிருந்து குருவுடன் கூடினல் சிவனேயும், சந்திரபுத்திரனிருந்தால் பைரவனேயும், செவ்வாயிருந்தால் பைரவன் சிவன் இவர்களேயும், சனியுடன் கூடினல் சூலினீ தேவதையையும், 5ல் சூரியனிருந்து சுக்கிரனுடன் கூடினல் பார்வதியையும், செவ்வாய் சூரியன் இவர்களிருந்தால் சரபதேவதையையும், சனி, செவ்வாய், ராகு இவர்களுடன் சுபக்கிரஹம் கூடினல் மாம்ஸம் சாப்பிடும் தேவதையையும் (காளி முதலியன) பூஜிப்பான். (71) 5 மிடத்தில் சுக்கிரனிருந்தாலும் சந்திரனுடன் கூடினலும், அல்லது அவர்களால் 5 மிடமானது பார்க்கப்பட்டாலும் ஸ்திரீதேவதோபாஸ்தியைச் சொல்லவேண்டும். (72) 5ல் புருஷக்கிரஹமிருந்தால் புருஷதேவதோபாஸ்தியைச் சொல்லவேண்டும். 5 மிடத்தில் சூரியஸம்பந்தமிருந்தால் சூரியன் வசப்பட்டவனக ஆகிருன். (73) சந்திரன் அவ்விதமானல் யக்ஷிணீதேவதை வசப்பட்டவளாக ஆவாள். சுபரின் ஸம்பந்தமோ வீக்ஷணமோ பெற்ருல் ஸ்கந்தனே, பைரவீயோ வசப்பட்டவளாக ஆவாள். (74) 5ல் புதனிருந்தால் சாரதையோ விஷ்ணுவோ உபாஸிக்கத் தக்கவராகின்றனர். குருவிருந்தால் ஸாத்விகமான தேவதை உபாஸ்யமாகவாகும். 6ல் சுக்கிரஸம்பந்தமிருக்குமானல் சாமுண்டோபாஸ்தியைச் சொல்லவேண்டும். (75) சனியிருந்தால் சுடுகாட்டில் வஸிக்கும் பிரேதாசனீ தேவதையினுபாஸ்தியைச் சொல்லவேண்டும். அவ்விடமானது ராகுகேதுவுடன் கூடுமானல் பிறரைப்பீடிக்கும் தேவதையைச் சொல்லவேண்டும்,

पुत्रवित्तकलत्रेशसंयुक्तनवभागपाः ।
पापांशगाः पापयुतास्त्वनपत्यत्वमादिशेत् ॥ ७६ ॥

व्ययेशसंयुताष्टेशे मृत्युराशिस्थिते यदि ।
पुत्रेशे क्रूरषष्ट्यंशे त्वनपत्यत्वमादिशेत् ॥ ७७ ॥

क्रूरषष्ट्यंशगे जीवे पुत्रस्थे नाशराशिगे ।
पुत्रेशे नीच (नाश) राशिस्थे त्वनपत्यत्वमादिशेत् ॥ ७८ ॥

लग्ने पुत्रेश्वरे दुःस्थे कारके नीचराशिगे ।
अनपत्यग्रहे पुत्रे त्वनपत्यत्वमादिशेत् ॥ ७९ ॥

सुतपतिरस्तगतो वा पापयुतः पापवीक्षितो वापि ।
सन्ततिबाधां कुरुते केन्द्रे पापान्विते चन्द्रे ॥ ८० ॥

सन्तानाधिपतौ पुत्रे रिःफषष्ठस्थिते खले ।
पुत्राभावो भवेत्तस्य जातोऽपि म्रियते शिशुः ॥ ८१ ॥

पञ्चमे भौमसंयुक्ते लग्नेशे वित्तमागते ।
जातं जातं विनश्येच्च नदीर्घायुर्भवेत्सुतः ॥ ८२ ॥

रिःफरन्ध्रारिभावेशास्तेषामधिपकारणात् ।
नीचारिमूढसम्बन्धादनपत्यत्वमादिशेत् ॥ ८३ ॥

புத்திரனில்லாமைக்குரிய யோகம்.—(76) 5, 2, 7க் குடையவர்களுடன் கூடின நவாம்சபதிகள் பாபாம்சத்திலிருப்பார்களானாலும், பாபருடன் கூடுவார்களானாலும் புத்திரனில்லாமையைச் சொல்லவேண்டும். (77) 12க் குடையவனுடன் கூடின 8க் குடையவன் 8 மிடத்திலிருந்தாலும் 5க் குடையவன் குரூரஷஷ்ட்யம்சத்தில் 8 மிடத்திலிருந்தாலும் புத்திரனில்லை. (78) குரு குரூரஷஷ்ட்யம்சமேறி 5மிடத்திலோ, 8மிடத்தில் புத்திரேசனோ நீசராசியிலிருந்தால் புத்திரனில்லை. (79) 5க் குடையவன் லக்கினத்திலிருந்து காரகன் 6, 8, 12மிடங்களிலிருந்து அதுநீசராசியாகவுமிருந்து 5 மிடம் புத்திரனற்ற வீடாகவுமாகுமானால் புத்திரனில்லை என்றே சொல்லவேண்டும். (80) 5க் குடையவன் 7லிருந்தாலும் பாபரின் வீக்ஷணம், சேர்க்கை இவற்றை யடைந்தாலும், சந்திரன் பாபருடன் கூடி கேந்திரத்திலிருந்தாலும் ஸந்ததிக்குப் பாதத்தை (நாசத்தை)ச் செய்கிறான். (81) 5க் குடை

யவன் 5லிருந்து 12, 6ல் பாபருமிருந்தால் அவனுக்குப் புத்திரா பாவமாவது குழந்தை பிறந்தாலும் இறந்துவிடலாவது நடக்கும். (82) 5ல் செவ்வாயிருந்து லக்கிஞதிபதி 2லு மிருந்தால் பிறக்கப் பிறக்க நாசமடையுமே யொழிய திர்க்கமான ஆயுளுள்ள புத்திரனிராது. (83) 6, 8, 12க் குடையவர்கள் அந்தக் கெட்ட ஸ்தானுதிபர்களாக ஆவதன் மூலமும், நீசன், சத்துரு, அஸ்தங்கதன் இவர்களின் ஸம்பந்தமிருப்பதைக் கொண்டும் புத்திராபாவத்தைச் செய்வர்.

निशाकरे लग्नगते सजीवे तत्सप्तमे भूमिसुते शनौ वा ।
लग्नान्त्यपुत्राष्टमराशियुक्तैः पापग्रहैर्वंशविनाशहेतुः ॥ ८४ ॥

शुभेतरा रंध्रविलग्नरिःफे वंशस्य विच्छेदकरास्सुतेऽब्जे ।
दारस्थिते सोमसुते सशुक्रे पापाः सुखे देवगुरौ सुतस्थे ॥ ८५ ॥

रन्ध्रे शशाङ्कात्सहिते तु पापैर्वंशस्य विच्छेदकरोऽत्र जातः ।
पापे विलग्ने सुखगे शशाङ्के लग्नेश्वरे पञ्चमराशियुक्ते ॥ ८६ ॥

बलैर्विहीने यदि पुत्रनाथे वंशस्य विच्छेदकरोऽत्र जातः ।
क्षीणे शशाङ्के तनुभावयुक्ते मूढान्विते मन्दग्रहे सुरेज्ये ॥ ८७ ॥

त्रिकोणगैः पापखगैश्च सर्वैः प्रागेव पुत्रस्य सुखाद्विनाशः ।
चन्द्रात्मजे पञ्चमराशियुक्ते लग्ने सुखे वा यदि पापयुक्ते ॥ ८८ ॥

शुभेतरैः पञ्चमभावयुक्तैः न दृश्यते पुत्रमुखं हि तेन ।
जातो यदि स्यात्क्षितिसूनुलग्ने रंध्रे शनौ पञ्चमगे रवौ वा ॥ ८९ ॥

வம்சச்சேத யோகம்.—(84) சந்திரன் குருவுடன் கூட லக்கினத்திலும், அதற்கு 7 மிடத்தில் செவ்வாயோ சனியோ இருந்து 1, 12, 5, 8 மிடங்களில் பாபக்கிரஹங்களு மிருந்தால் வம்ச விஞசஹேதுவாக வாகிறது. (85) பாபக்கிரஹங்கள் 8, 1, 12 மிடங்களிலும், 5ல் சந்திரனும், 7ல் சுக்கிரனுடன் கூடின புதனும், 4லில் பாபக்கிரஹங்களும், குரு 5லு மிருந்தால் வம்சத்திற்கு விச்சேதத்தைச் செய்வர். (86) சந்திரனிருக்கு மிடத்திற்கு 8மிடம் பாபர்களுடன் கூடி இருந்தால் வம்சவிச்சேதமேற்படும். லக்கினத்தில் பாபரும் 4ல் சந்திரனுமிருந்து லக்கிஞதிபதி 5 மிடத்திலிருந்தாலும் (புத்திர விச்சேதமுண்டாகும்.) (87) 5க்

குடையவன் பலமற்றவனுயிருந்து க்ஷீணசந்திரன் லக்கினபாவத்திலுமிருந்து சனியோ, குருவோ மூடனுன (அஸ்தங்கதனுன) கிரஹத்துடன் கூடினல் இதில் பிறந்தவன் வம்சவிச்சேதகானுக வாகிருன். (88) பாபக்கிரஹங்களெல்லாம் த்ரிகோணத்திலிருந்து புதன் 5மிடத்திலும் 1லோ, 4லோ பாபருமிருந்தால் புத்திரசுகானுபவத்திற்கு முன்னரே இறந்துவிடுவான். (89) பாபக்கிரஹங்கள் 5ம் பாவத்திலிருந்து ஜன்மலக்கினம் செவ்வாயின் வீடான மேஷமாகவோ விருஸ்சிகமாகவோ ஆகி 8ல் சனியோ 5ல் சூரியனே இருந்தால் அவனுல் புத்திரமுகம் காணப்படமாட்டாது.

लग्नपुत्रेश्वराभ्यां तु मित्रत्वेनैव मित्रताम् ।
शत्रुत्वे शात्रवं प्रोक्तं समत्वे समता भवेत् ॥ ९० ॥
लग्नपुत्रेश्वरौ खेटौ परस्परनिरीक्षितौ ।
परस्परग्रहांशस्थौ शुश्रूषां कारयेत्सुतः ॥ ९१ ॥

புத்திரன் சத்துருவாகவோ மித்திரனுகவோ, ஸமனுகவோ ஆகும் யோகம்.—(90) லக்கினுதிபதியும், 5க் குடையவனும் மித்திரனுல் புத்திரனது மித்திரத்தன்மையும், சத்துருவானுல் சத்துருத்தன்மையும், ஸமனுல் ஸமத்தன்மையு மிருக்கும். (91) லக்கின புத்திரேஸ்வரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு ஒருவருக்கொருவர் வீடு அம்சம் இவற்றில் மாறி இருந்தாரானுல் புத்திரன் பிதிரு சுஸ்ரூஷையைச் செய்வான்.

लग्नाधिपे कुजे स्वोच्चे रंध्रे मन्दचरे रवौ ।
शुभदृष्टिसमायोगे चिरात्पुत्रमुपैति सः ॥ ९२ ॥
लग्ने मन्देगुरौ रंध्रे व्यये भौमसमन्विते ।
शुभदृष्टे स्वतुङ्गे वा चिरात्पुत्रमुपैति सः ॥ ९३ ॥
पुत्रस्था मन्दजीवज्ञाः लग्ने पुत्राधिपे शुभे ।
पुत्रेशे शुभराशिस्थे चिरात्पुत्रमुपैति सः ॥ ९४ ॥
सुते राह्वर्कशुक्रेज्याश्शुभर्क्षे शुभवीक्षिते ।
पुत्रेशे शुभराशिस्थे चिरात्पुत्रमुपैति सः ॥ ९५ ॥
लग्ने सौम्ये धने पापे तृतीये पापखेचराः ।
शुभेशे शुभराशिस्थे चिरात्पुत्रमुपैति सः ॥ ९६ ॥

வெகுகாலம் சென்று புத்திரனுண்டாகும் யோகம்.—(92) லக்கினாதிபதி செவ்வாயாகி அவன் உச்சத்திலுமிருந்து சனியுடன் சஞ்சரிக்கும் சூரியன் 8லிருந்து சுபர்பார்வையையும் பெற்றால் அந்த ஜாதகன் வெகுகாலம்சென்று புத்திரனை யடைவான். (93) லக்கினத்தில் சனியும், குரு 8லும், 12ல் செவ்வாயும் இருந்து சுபரால் பார்க்கப்பட்டோ, தனது உச்சவீட்டிலோ இருந்தால் தாமதித்து புத்திரனை யடைவான். (94) 5ல் சனி, குரு, புதன் இவர்களும் 1ல் 5க் குடையவனும் புத்திரேசன் சுபனாகி சுபராசியிலுமிருந்தால் தாமதித்துப் புத்திரனை அவனடைகிறான். (95) சுபர்வீடு புத்திரஸ்தானமாகி அதில் ராகு சூரியன், சுக்கிரன், குரு இவர்களிருந்தாலும், புத்திரேசன் சுபரின் வீக்ஷணம் பெற்று சுபராசியிலுமிருந்தால் தாமதித்து அவன் புத்திரனையடைகிறான். (96) லக்கினத்தில் சுபக்கிரஹமும், 2ல் ஒரு பாபக்கிரஹமும், 3ல் மீதமுள்ளபாபக்கிரஹங்களு மிருந்து 9க் குடையவன் 9 மிடத்திலுமிருந்தால் தாமதித்து புத்திரனை அவனடைகிறான்.

पुत्रस्थानाधिपे स्वोच्चे लग्नकेन्द्रत्रिकोणगे ।
गुरुणासंयुते दृष्टे पुत्राद्भाग्यमुपैति सः ॥ ९७ ॥

புத்திரமூலம் பாக்கியமுண்டாகும் யோகம்.—(97) புத்திரஸ்தானாதிபன் உச்சம்பெற்று லக்கினத்திற்குக் கேந்திரத்திரிகோணத்தை யடைந்து குருவினால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் புத்திரன் மூலம் பாக்கியத்தை அவன் அடைகிறான்.

पुत्रस्थानं गते जीवे तदीशे भृगुसंयुते ।
शुभग्रहयुते दृष्टे द्वात्रिंशात्पुत्रलाभभाक् ॥ ९८ ॥

सुतेशे केन्द्रभावस्थे कारकेण समन्विते ।
षड्विंशे त्रिंशदब्देवा पुत्रोत्पत्तिं विनिर्दिशेत् ॥ ९९ ॥

लग्नाद्भाग्यंगते जीवे जीवाद्भाग्यं गते भृगौ ।
लग्नेशे बलसंयुक्ते चत्वारिंशे सुतं लभेत् ॥ १०० ॥

सूनवस्सप्तसंख्याश्च द्विगर्भो यमलो भवेत् ।
वित्तेशे पञ्चमस्थाने सुतस्थे पञ्चमाधिपे ॥ १०१ ॥

இன்னின்னவயதில் புத்திரனுண்டாகும் என்பது.—(98) குரு புத்திரஸ்தானத்தையடைந்து 5க்குடையவன் சுக்கிரனுடன் சேர்ந்து சுபக்கிரஹத்தின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றையும் அடைந்தால் 32 வயதிற்குப் பிறகு புத்திரலாபமுண்டாகும். (99) 5க் குடையவன் கேந்திரபாவத்திலிருந்து புத்திரகாரகனுடனும் சேர்ந்திருந்தால் 26-வது வயதிலோ, 30-வது வயதிலோ புத்திரோத்பத்தியைச் சொல்லவேண்டும். (100) லக்கினத்திற்கு 9 மிடத்தை குருவடைந்து குருவுக்கு 9 மிடத்தைச் சுக்கிரனுமடைந்து லக்கினேசனும் பலம் பெற்றால் 40-வது வயதில் புத்திரனையடைகிறான். (101) 2க் குடையவன் 5 மிடத்திலும் 5க் குடையவன் 5லுமிருந்தால் 7 குழந்தைகள் பிறக்கும். அவற்றுள் இரட்டையாக இரண்டு கர்ப்பமிருக்கும்.

षट्संख्या च सुतप्राप्तिरेतेषां त्रिप्रजामृतिः ।
पुत्रस्थानं गते राहौ तदीशे पापसंयुते ॥ १०२ ॥

नीचारातिगते जीवे द्वात्रिंशे सूनुमृत्युदः ।
जीवात्पञ्चमगे पापे लग्नात्पञ्चमगेऽपि वा ॥ १०३ ॥

षड्विंशे वा त्रयस्त्रिंशे चत्वारिंशे सुतक्षयः ।
लग्ने गुलिकसंयुक्ते लग्नेशे नीचराशिगे ॥ १०४ ॥

पञ्चपञ्चाशदब्देऽथ पुत्रदुःखसमाकुलः ।
चतुर्थे क्रूरसंयुक्ते षष्ठे पापसमन्विते ॥ १०५ ॥

सुतेशे नाशराशिस्थे लग्नेशेन नसंयुते ।
कारके शुभसंयुक्ते मृत्युगाः पञ्चसूनवः ॥ १०६ ॥

पञ्चमे पापसंयुक्ते गुरोः पञ्चमभे शनौ ।
पत्न्यन्तरे पुत्रलाभं कलत्रत्रयभाक् भवेत् ॥ १०७ ॥

पुत्रादिलाभं मुनयो वदन्ति कालान्तरे शोभनदृष्टियोगात् ।
लग्नेशनौ देवगुरौ तु रंध्रे व्यये कुजे पुत्रभवः पुरोक्तः ॥ १०८ ॥

புத்திர நாசகாலம்.—(102) ராஹு 5 மிடத்திலிருந்து 5க் குடையவன் பாபருடன் கூடியிருக்க 6 எண்ணுள்ள புத்திரப் பிராப்த்தி யுண்டாகும். இவற்றுள் இரண்டு இறந்து விடும். (103) குரு நீசவீட்டையோ, சத்துருவீட்டையோ அடைவானு

ளுல் 32-வது வயதில் புத்திரநாசமுண்டாகும். அல்லது குருவுக்கு 5மிடத்தில் பாபரிருந்தாலும், அல்லது லக்கினத்திற்கு 5மிடத்தி லிருந்தாலும், அதேபலன்தான் நடைபெறும். (104) லக்கினத் தில் குளிகனிருந்து லக்கினேசன் நீசராசியிலிருந்தால் 26 லோ, 33லோ, 40லோ, புத்திர நாசமுண்டாகும். (105) 4 மிடத்தில் குரூரக் கிரஹமிருந்து 6 மிடத்திலும் பாபக்கிரஹமிருந்தால் 55-வது வயதில் புத்திரதுக்கத்தால் கலங்கினவனுகவாகிருன். (106) 5க் குடையவன் 8மிடமேறி லக்கினேசனுடன் கூடாமலும், புத் திரகாரகன் சுபருடன் கூடியுமிருந்தால் 5 குழந்தைகள் மரணத் தை யடைந்து விடுவர். (107) லக்கினத்திற்கு 5 மிடத்தில் பாப ரும், குருவுக்கு 5மிடத்தில் சனியும் இருந்தால்வேறு களத்திரத்தி னிடத்தில் புத்திர லாபத்தையும், 3 களத்திரத்தையும் அடை வான். (108) லக்கினத்தில் சனியும், குரு 8லும், 12ல் செவ்வா யுமிருந்து சுபர் பார்வை, சேர்க்கை இவை இருக்குமானுல் வெகு காலஞ்சென்று புத்திர லாபத்தை முனிகள் சொல்லுகின்றனர்.

पुत्रेशे शुभराशिस्थे शुभदृष्टिसमन्विते ।
कारके केन्द्रभावस्थे बहुपुत्रं समादिशेत् ॥ १०९ ॥

(लग्नेशे पुत्रराशिस्थे पुत्रेशे लग्नमाश्रिते)
बुधार्कराहवः पुत्रे कारके शुभसंयुते ।
शुभेन वीक्षिते वापि बहुपुत्रं समादिशेत् ॥ ११० ॥

लग्नेशे पुत्रराशिस्थे पुत्रेशे लग्नमाश्रिते ।
केन्द्रत्रिकोणगे जीवे बहुपुत्रयुतो नरः ॥ १११ ॥

पुत्रस्थानगते राहौ मन्दांशकविवर्जिते ।
बहुपुत्रं नरं विन्द्याच्छुभग्रहनिरीक्षिते ॥ ११२ ॥

पुत्रस्थानाधिपे स्वोच्चे लग्नेशे शुभसंयुते ।
कारके शुभसंयुक्ते बहुपुत्रयुतो नरः ॥ ११३ ॥

पुत्रस्थाने तदीशे वा गुरौ वा शुभवीक्षिते ।
शुभेन सहितो वापि बहुपुत्रयुतो नरः ॥ ११४ ॥

வெகு புத்திர யோகம்.—(109) 5க் குடையவன் சுபராசியில் (9 மிடத்தில் என்றும் சொல்லலாம்) இருந்து சுபர் பார்வையை யும் பெற்று புத்திரகாரகன் கேந்திர பாவத்திலுமிருந்தால் வெகு

புத்திரனைச் சொல்லுக. (110) லக்கினேசன் புத்திரராசியிலும் புத்திரேசன் லக்கினத்திலும் 5ல் புதன் சூரியன் ராஹு இவர்களும், காரகன் சுபருடன் கூடியும் சுபரால் பார்க்கப்பட்டுமிருந்தால் வெகு புத்திரனைச் சொல்லுக. (111) லக்கினேசன் 5லும் 5க் குடையவன் லக்கினத்திலுமிருந்து குரு கேந்திரத் திரிகோணத்திலுமிருந்தால் மனிதன் வெகு புத்திரனுடன் கூடினவனாக வாகிறான். (112) புத்திர ஸ்தானத்திலிருக்கும் ராஹு சனியின் அம்சமேறுமலிருந்து சுபக்கிரஹத்தின் வீக்ஷணத்தையும் அடைந்தால் மனிதனை வெகு புத்திரனுள்ளவனாக அறியவேண்டும். (113) புத்திரஸ்தானாதிபன் உச்சத்திலிருந்து லக்கினேசன் சுபருடனும் கூடி காரகனும் சுபருடன் கூடினால் வெகு புத்திரனுள்ளவனாக மனிதனாகிறான். (114) 5மிடமோ, அதனதிபனோ, குருவோ சுபனால் பார்க்கப்பட்டாலும், சுபருடன் கூடினாலும் அனேகம் பிள்ளைகளுடன் கூடினவனாயாவான்.

परिपूर्णबले जीवे लग्नेशे पुत्रराशिगे ।
पुत्रेशे बलसंयुक्ते पुत्रप्राप्तिर्नसंशयः ॥ ११५ ॥

वर्गोत्तमांशगे जीवे लग्नेशस्थांशपे शुभे ।
पुत्रेशेन युते दृष्टे पुत्रप्राप्तिर्न संशयः ॥ ११६ ॥

वित्तस्थे पुत्रभावेशे परिपूर्णबलान्विते ।
वैशेषिकांशके जीवे पुत्रप्राप्तिर्न संशयः ॥ ११७ ॥

लग्नपुत्राधिपौ स्वोच्चे चान्योन्यं त्वभिवीक्षितौ ।
परस्परस्थानगतौ पुत्रयोगा इमे स्मृताः ॥ ११८ ॥

पुत्रलग्नाधिपौ युक्तावन्योन्यंचाभि वीक्षितौ ।
पुत्रे परस्परस्थे च पुत्रयोगा इमे स्मृताः ॥ ११९ ॥

पुत्रस्थानाधिपस्थांशराशीशे शुभसंयुते ।
शुभेन वीक्षिते वापि पुत्रप्राप्तिकरा इमे ॥ १२० ॥

लग्नपुत्राधिपौ केन्द्रे शुभग्रहसमन्वितौ ।
कुटुम्बेशे बलाढ्ये तु पुत्रप्राप्तिकरा इमे ॥ १२१ ॥

लग्नेशे दारभावस्थे दारेशे लग्नमाश्रिते ।
द्वितीयेशे विलग्नस्थे पुत्रप्राप्तिकरा इमे ॥ १२२ ॥

दारेशेन च संयुक्ते नवांशभवनाधिपे ।
पुत्रलग्नविलग्नेशे पुत्रप्राप्तिकरा इमे ॥ १२३ ॥

पुत्रस्थाने गुरुयुते स्वोच्चवर्गादिसंस्थिते ।
पापादिवर्गरहिते बहुपुत्रं वदेद्बुधः ॥ १२४ ॥

सुतभवने भृगुजे च सौम्यनाथे बलसहिते सुतपेऽवलोकिते वा ।
बहुसुतजननं वदन्ति सन्तः सुतभवनेशबलेन चिन्त्यमेतत् ॥ १२५ ॥

புத்திர லாப யோகம்.—(115) குரு பரிபூர்ண பலம் பெற்றும் லக்கினேசன் புத்திர ஸ்தானமேறியும் புத்திரேசன் பலம் பெற்று மிருந்தால் புத்திரப் பிராப்த்தி யுண்டாவதில் ஸந்தேஹமில்லே. (116) குரு வர்க்கோத்தமாம்சமேறி லக்கினேசனிருக்கும் அம்சநாதன் சுபனுய் புத்திரேசனின் வீக்ஷணம் சேர்க்கை இவற்றை யடைவானுனல் புத்திரப் பிராப்த்தியில் சந்தேஹமில்லே. (117) 5க் குடையவன் பரிபூர்ண பலம் பெற்று 2லிருந்து குருவும் வைசேஷிகாம்சத்திலிருந்தால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லே. (118) லக்கினுதிபன் 5மிடத்ததிபன் இவர்கள் தமது உச்ச வீட்டிலிருந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலும் ஒருவர் வீட்டில் மற்ருெருவரிருந்தாலும் இவை புத்திர யோகங்களென்றே எண்ணப்படுகின்றன. (119) 5, 1க் குடையவர்கள் சேர்ந்திருத்தல், ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளல், ஒருவருடைய 5 மிடத்தில் மற்ருெருவரிருத்தல் ஆகிய இவை புத்திர யோகங்களாக எண்ணப்பட்டன. (120) புத்திரஸ்தானுதிபனிருக்கும் அம்சத்தின் ராசீசன் சுபருடன் கூடினுலும், சுபரால் பார்க்கப்பட்டாலும் இவை புத்திரப் பிராப்த்திகரங்களாகவே ஆகின்றன. (121) லக்கின புத்திராதிபர்கள் கேந்திரத்திலிருந்து சுபக்கிரஹத்துடன் கூடியும் 2க் குடையவன் பலம் பெற்றுமிருந்தால் இவை புத்திரப் பிராப்த்திகரங்களே யாகும். (122) 1க் குடையவன் 7லும், 7க் குடையவன் 1லும், 2க் குடையவன் சந்திர லக்கினத்திலுமிருந்தால் இவை புத்திரப் பிராப்த்திகரங்களாகும். (123) ஜன்ம நவாம்ச பவனுதிபனும், 5, 1 சந்திர லக்கினம் இவற்றுக்குடையவனும் 7க்குடையவனுடன் கூடினுல் இவை புத்திரப் பிராப்த்திகரங்களாகும்.

(124) குருவுடன் கூடின புத்திரஸ்தானமானது குருவினது உச்சம், சொந்த ஷட்வர்க்கம் இவற்றைப்பெற்று பாபஷட்வர்க்கம் பெறுவிடில் வெகு புத்திரனை அறிஞன் சொல்லவேண்டும். (125) சுபனை நாதனாகவுடைய 5மிடத்தில் சுக்கிரனிருந்து 5க் குடையவன் பலம் பெற்றாலும், அல்லது 5 மிடமானது சுபனை நாதனாகவுடையதாகி 5க் குடையவனும் பலம் பெற்று சுக்கிரனால் பார்க்கப்பட்டாலும், கற்றறிந்த ஸாதுக்கள் வெகு ஸுதஜனனத்தைச் சொல்லுகின்றனர். 5க் குடையவனுடைய பலத்தை முன்னிட்டு இப்பலனை ஊஹித்தறிய வேண்டும்.

सुतेशशशिशुक्रेषु स्त्रीराश्यंशगतेषु च ।
तथैव कन्यकालाभं प्रवदेन्मतिमान्नरः ॥ १२६ ॥

வெகு ஸ்திரீப் பிரஜாலாப யோகம்.—(126) 5க்குடையவன், சந்திரன், சுக்கிரன் இவைகள் ஸ்திரீ ராசி, ஸ்திரீ நவாம்சத்திலிருக்குமானால் அது போலவே வெகு கன்னிகாலாபத்தைப் புத்திசாலியாயுள்ளவன் சொல்லவேண்டும்.

परमोच्चगते जीवे वित्तेशे राहुसंयुते ।
भाग्येशे शुभ (भाग्य) संयुक्ते संख्याता नव सूनवः ॥ १२७ ॥

पुत्राद्भाग्यगते जीवे सुतेशे बलसंयुते ।
दारेशे कर्मभावस्थे वसुसंख्यास्तु सूनवः ॥ १२८ ॥

पञ्चमात्पञ्चमे मन्दे सुतस्थेतु तदीश्वरे ।
सूनवस्सप्तसंख्याश्च द्वौ गर्भौ यमलौ वदेत् ॥ १२९ ॥

परमोच्चगते सुताधिनाथे सुतभावे शुभखेचरेण दृष्टे । (युक्ते)
धिषणे बलसंयुते च केन्द्रे बहुपुत्रं प्रवदन्ति बुद्धिमन्तः ॥ १३० ॥

तुलामीनमेषे वृषे दैत्यपूज्ये धनी राजमानी कलाकौतुकी च ।
त्रयोऽस्यात्मजा वै चिरं जीविताश्च भवेद्वत्सरे वह्निभीतिर्द्वितीये ॥

புத்திரனின் எண்ணையறியும் யோகம்.—(127) குரு பரமோச்சத்திலும், 2க்குடையவன் ராஹுவுடன் கூடியும் 9க்குடையவன் சுபருடன் (அல்லது பாக்கியஸ்தானத்துடன் என்றும் பாடமுண்டு) கூடியுமிருந்தால் 9 புத்திரர்கள் பிறப்பர். (128) குரு புத்திர ஸ்தானத்திற்கு 9ல் (அதாவது; ஜன்ம லக்கினத்தில்)

இருந்து 5க்குடையவனும் பலம்பெற்று 7க்குடையவன் 10மிடத்தி லுமிருந்தால் 8 புத்திரர்களுண்டாவர். (129) 5 மிடத்திற்கு 5 மிடத்தில் (9மிடத்தில்) சனியிருந்து 9க்குடையவன் 5லிருந்தால் 7 புத்திரர்களுண்டாவர். அவற்றில் இரண்டு கர்ப்பம் இரட் டைப்பிள்ளையாக விருக்கும். (130) 5க்குடையவன் பரமோச்ச பாகத்திலிருந்து 5 மிடமானது சுபக்கிரஹத்தால் பார்க்கவும் பட்டு குருபலம்பெற்று கேந்திரத்திலு மிருந்தால் புத்திமான்கள் வெகுபுத்திமனைச் சொல்லுகின்றனர். (131) சுக்கிரன், துலாம் மீனம் மேஷம் விருஷபம் இவ்விடங்களிலிருந்தால் தனிகனுகவும், ராஜமரியாதையுள்ளவனுகவும் வித்தை ஸம்பாதிப்பதில் கவலே யுள்ளவனுகவும் ஆவான். அவனுக்கு 3 பிள்ளைகளுண்டாவர். வெகுகாலம் உயிருடனுமிருப்பர். 2-வது வருஷத்தில் அக்கினி பயமுண்டாகும்.

एकः पुत्रो रवौ पुत्रस्थाने चन्द्रे सुताद्वयम् ।
भौमे पुत्रत्रयं चन्द्रपुत्रे पुत्रीचतुष्टयम् ॥ १३२ ॥

गुरौ पुत्रे सुताः पञ्च षट्पुत्राः भृगुनन्दने ।
शनौ च गर्भपातस्स्याद्राहौ गर्भो भवेन्नहि ॥ १३३ ॥

कारकस्थितराशेर्वा पञ्चमे बिन्दुसंख्यया ।
नीचारिमूढगानां हि बिन्दुं त्यक्त्वा सुतान्वदेत् ॥ १३४ ॥

पुत्रस्थानगते भौमे मेषसिंहालिमीनगे ।
जीवदृष्टियुते वापि पुत्रप्राप्तिं विनिर्दिशेत् ॥ १३५ ॥

5 மிடத்திலிருக்கின்ற கிரஹங்களையனுஸரித்து புத்திர ஸங்கி யையைக் கூறல் —(132) *புத்திரஸ்தானத்தில் சூரியனிருந்தால் ஒரேபிள்ளைபிறக்கும். சந்திரனிருந்தால் இரண்டுபெண்கள் பிறக் கும். செவ்வாயிருந்தால் 3 புத்திரனும், புதனிருந்தால் நான்கு பெண்களும், (133) குரு 5லிருந்தால் 5 புத்திரர்களும், சுக்கிர னிருந்தால் 6 புத்திரர்களும், உண்டாவர். சனியிருந்தால் கர்ப்

* 132 133-வது சுலோகபலன் பொதுவாகச் சொல்லப்பட்டிருக் கிறது. ஆகவே மற்றவிடங்களிற் சொல்லியவற்றையும் சேர்த்துப்பார் க்கும் பொழுது இங்கு சொல்லியதற்குமாருன பலனே அனுபவத்திற் காணப்படுகிறது.

பம் அழிந்துவிடும். ராஹுவிருந்தால் கர்ப்பமுண்டாகாது. (134) புத்திரகாரகனிருக்கும் ராசிக்கு 5 மிடத்திலுள்ள நீசர், சத்துரு, அஸ்தங்கதர் இவர்களின் பிந்துவை நீக்கி மீதமுள்ள அஷ்டகவர்க்கப் பிந்துவின் எண்ணைக்கொண்டு புத்திரர்களைச் சொல்லவேண்டும். (135) செவ்வாய் புத்திரஸ்தானத்திலிருந்து அந்தப் புத்திரஸ்தானம் மேஷம், சிங்கம், விருச்சிகம், மீனம் இந்தவீடாகவாகி குருவின் பார்வையோ சேர்க்கையோ இருந்தால் புத்திரப்பிராப்த்தியைச் சொல்லவேண்டும்.

यावन्तः पुरुषांशगास्सुतगृहे पुत्रेशयुक्ताश्च वा
स्त्र्यंशाच्चापि सुतास्तथैव कथितास्सौम्येक्षितांशाधिपाः ।

पुत्रेशे पुरुषग्रहे पुरुषभे पुंराशिभागे स्थिते
पुंपुत्राञ्जनयेद्ग्रहन्बलवशात्तद्व्यत्यये कन्यकाः ॥ १३६ ॥

सुतेशशशिशुक्रेषु स्त्रीराश्यंशगतेषु च ।
तथैव कन्यकालाभं प्रवदेन्मतिमान्नरः ॥ १३७ ॥

ஸ்திரீ புருஷபிரஜைகளின் எண்முதலியன—(136) புத்திரஸ்தானத்தில் எத்துணை கிரஹங்கள் புருஷநவாம்சத்தை யடைந்திருக்கின்றனரோ, அல்லது எத்துணை கிரஹங்கள் புத்திரேசனுடன் சேர்ந்திருக்கின்றனரோ, அல்லது எத்துணை அம்சாதிபர்கள் சுபரால் பார்க்கப் பட்டிருக்கின்றனரோ (அவ்வளவு புத்திரர்களுண்டாவர்) இவ்விதமே ஸ்திரீ நவாம்சத்தை யடைந்திருப்பதைக் கோண்டும் ஸ்திரீ ராசிசனின் சேர்க்கையைக் கொண்டும் அம்சாதிபர் சுபர்பார்வை பெற்றிருப்பதைக்கொண்டும் புத்திரிகள் பிறப்பர் என்றறிய வேண்டும். 5க் குடையவன் புருஷக்கிரஹமாகவாகி,புருஷராசியிலிருந்தாலும் புருஷராசி நவாம்சத்திலிருந்தாலும் அவர்களின் பலத்தை முன்னிட்டு அதிகமான புருஷப் பிரஜைகளையுண்டாக்குவான். இதற்குமாருக இருந்தால் பெண்குழந்தைகளுண்டாவர். (137) 5க் குடையவன், 5மிடம், சுக்கிரன் இவைஸ்திரீராசி, ஸ்திரீநவாம்சம் இவற்றையடையுமானல் அவ்விதமே கன்னிகையின் லாபத்தைப் புத்திமானுயுள்ளவன் சொல்லவேண்டும்.

नाथैः कलत्रात्मजधर्मभानां पुत्रादिचिन्तां कथयेत्सजीवैः ।
बुद्धिं तथा सोमसुतात्मजाभ्यां पितुस्तथैवात्मजभाग्यसूर्यैः ॥ १३८ ॥
पितुर्धनं याति सुखे सभानौ पुत्रे शशाङ्के मरणं च मातुः ।
सुते शुभे शोभनदृष्टियोगे पुत्रं ददात्येव तदा तदीशे ॥ १३९ ॥
पुत्राधिपस्थांशपतौ विलग्ने लग्नेश्वरस्थांशपतौ सुतस्थे ।
गुरुस्थितांशाधिपतौ च केन्द्रे पुत्राप्तिमाहुर्मुनयो महान्तः ॥ १४० ॥
पारवतांशादियुते सुतेशे भाग्येश्वरे तादृशभावयुक्ते ।
लग्नेश्वरे शोभनदृष्टियुक्ते पुत्राप्तिमाहुर्मुनयो महान्तः ॥ १४१ ॥
पुत्राधिपदशायां तत्संयुक्तग्रह (कारके) पाकके ।
ये ये ग्रहाश्च संयुक्तास्तेषां भुक्तौ प्रजोद्भवः ॥ १४२ ॥

பொதுவில் புத்திரபாவத்தைப் பற்றியவைகள்.—(138) 7, 9 மிடத்ததிபர், குரு இவர்களைக் கொண்டும் புத்திரனைப்பற்றிய சிந்தையைச் செய்யவேண்டும். (அதாவது: மேற்கூறிய விடங்களைக் கொண்டும் புத்திரபாவபலனைக் காணவேண்டுமென்பதாம்.) புதன், 5மிடம் இவற்றைக்கொண்டு புத்தியையும் 5, 9, சூரியன் இவற்றைக்கொண்டு பிதாவைப்பற்றியபலனையும் காணவேண்டும். (139) 4ல் சூரியனிருந்தால் பிதாவின் தனத்தையடைகிறான். 5ல் சந்திரனிருந்தால் மாதாவுக்குமரணமுண்டாகின்றது. 5 மிடமோ, 5க் குடையவனோ சுபருடன் கூடினாலும் சுபரின் பார்வையைப் பெற்றாலும் புத்திரனைத் தருவது நிச்சயம். (140) புத்திராதிபனிருக்கும் அம்சநாதன் லக்கினத்திலும், லக்கினாதிபனிருக்கும் அம்சநாதன் 5லு மிருந்தாலும், குருவிருக்கும் அம்சபதியானவன் கேந்திரத்திலிருந்தாலும் மஹான்களான பெரியார் புத்திரப்ராப்த்தியைச் சொல்லுகின்றனர். (141) 5க் குடையவன் பாராவ்தாம்சாதியிலும், 9க் குடையவன் புத்திரபாவத்திலும் லக்கினாதிபன் சுபர்திருஷ்டிபெற்று மிருந்தால் புத்திரப்ராப்த்தியைப் பெரியார் சொல்லுகின்றனர்.

चरे यथा गुरुर्धीस्थः सुतेशस्थग्रहेऽपि च ।
सुतयोगः सुतं पश्येत्सुतपो वा सुरेड्यतः ॥ १४३ ॥
सुतपस्थांशपश्चापि लग्नजन्मपती अपि ।
उक्तस्थानेषु संचारात्सुतदस्तु नचान्यथा ॥ १४४ ॥

तद्दशान्तर्दशाकाले सुतप्राप्तिर्भवेद्ध्रुवम् ।
गुरुलग्नेशदारेशसुतेशानां तथा दशा ॥ १४५ ॥

पुत्रलाभस्तथा प्रोक्तो रविहोरागतै स्तथा ।
लग्नेशपञ्चमेशस्थराशौ गोचरगे गुरौ ॥ १४६ ॥

तथा चरति पुत्रेशे सुतप्राप्तिर्न संशयः ।
गुलिकस्थितराश्यंशभवनेशस्थितांशकैः ।
सन्तानं कल्पयेल्लग्नात् रिःफषष्ठाष्टवर्जितैः ॥ १४७ ॥

पुत्राधिपे वा सुरनाथपूज्ये केन्द्रेशदारेशयुते बलाढ्ये ।
दिवाकरारौ सुतभं न वीक्षितौ विंशत्यब्दे संभवेत्पुत्रसिद्धिः ॥१४८॥

புத்திரனுண்டாகும் காலம்.—(142) புத்திராதிபனுடைய தசையிலோ, அவனுடன் சேர்ந்த கிரஹத்தின் தசையிலோ, அவருடன் எந்த எந்தக் கிரஹங்கள் சேர்ந்திருக்கின்றனவோ அவர்களின் புக்திகாலத்தில் புத்திரப்ராப்த்தியைச் சொல்ல வேண்டும். (143) சரராசியான 5 மிடத்திலோ, 5க் குடைய வனிருக்கும் வீட்டிலோ குருவிருந்தாலும், குருவிருக்குமிடத் திற்கு 5மிடத்துக்குடையவன் 5 ஐப்பார்த்தாலும் புத்திரயோக முண்டு. (144) 5க் குடையவனிருக்கும் அம்சபதியும், ஜன்ம லக்கின சந்திரலக்கினபதிகளும் முற்கூறிய ஸ்தானங்களில் கோச ரத்தில் சஞ்சரிப்பாரானல் புத்திரனைத் தருவர். இதற்கு மாறு னல் இல்லை (145) அவரது தசைபுக்திகாலங்களில் புத்திரப்ரா ப்த்தி உண்டாவது நிஸ்சயம். குரு, லக்கினேசன், 7க் குடைய வன், 5க் குடையவன் இவர்களுடைய தசையும் (புத்திரனைத் தரும்) (146) சூரியஹோரையி லுள்ளவர்களைக் கொண்டும் புத்திரப்ராப்த்தி சொல்லப்பட்டிருக்கிறது. லக்கினேசன், 5க் குடையவன் இவர்களிருக்கும் ராசியில் கோசரத்தில் குருவருங் காலத்திலும் புத்திரப்ராப்த்தி யுண்டு. (147) முற்கூறியபடி புத்திரேசன் ஸஞ்சரித்தாலும் புத்திரப்ராப்த்தியில் ஸந்தேஹ மில்லை. குளிகனிருக்கும் ராசி, அம்சம் இவற்றிற்குடையவர் இருக்கும் அம்சங்களைக் கொண்டும் ஸந்தானத்தைச் சொல்ல வேண்டும். ஆனல் லக்கினத்திற்கு 6, 8, 12 மிடங்களைத்தவிர்த்து மேற்கூறியபடிபலன் சொல்லவேண்டும். (148) 5க் குடை

யவனே, குருவோ பலம்பெற்று கேந்திரேசன் ஏழுக்குடையவன் இவர்களுடன் கூடினாலும், சூரியனும் செவ்வாயும் 5 மிடத்தைப் பார்க்காமலுமிருந்தாரானால் 20-வது வயதில் புத்திரசித்தியுண்டாகும்.

पुत्रस्थाने कुजे मन्दे बुधक्षेत्रे विलग्नपे ।
बुधदृष्टे युते वापि तदा दत्तसुतादयः ॥ १४९ ॥

पुत्रस्थाने बुधक्षेत्रे मन्दक्षेत्रेऽथवा भवेत् ।
मन्दमान्दियुते दृष्टे तदा दत्तादयस्सुताः ॥ १५० ॥

पुत्रस्थाने बुधक्षेत्रे बुधस्वांशेक्षितेऽपि वा ।
लग्नाधिपे शनौ वापि दत्तपुत्रा भवन्ति हि ॥ १५१ ॥

पुत्रेशे मन्दसंयुक्ते कुजसौम्यनिरीक्षिते ।
लग्नाधिपे बुधांशे वा दत्तपुत्रा भवन्ति हि ॥ १५२ ॥

कामेशे लग्नभावस्थे पुत्रेशे शुभसंयुते ।
पुत्रे मन्दे बुधे वापि दत्तपुत्रा भवन्ति हि ॥ १५३ ॥

தத்த (ஸ்வீகிருத) புத்ர யோகம்.—(149) 5 மிடத்தில் செவ்வாய் சனி இவர்களிருந்து புதன்வீடு லக்கினமாகி புதனின் பார்வையையோ, சேர்க்கையையோ அடைந்தால் அதுபோழ்து ஸ்வீகிருத புத்திரப்ராப்த்தி உண்டாகும். (150) 5மிடம் புதன் வீடாகவோ, சனி வீடாகவோ ஆகி, சனி மாந்தி இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையடைந்தால் ஸ்வீகிருத புத்திரனுண்டாவன். (151) 5மிடம் புதன்வீடாகி புதனுடைய அம்சமானது புதனால் பார்க்கவும் பட்டு, லக்கினாதிபன் சனியாகவுமானால் தத்த (ஸ்வீகிருத) புத்திருண்டாவர். (152) 5க்குடையவன் சனியுடன் கூடி செவ்வாய் புதன் இவர்களால் பார்க்கவும் பட்டாலும், லக்கினாதிபன் புதாம்சத்திலிருந்தாலும் தத்த (ஸ்வீகிருத) புத்திரர் உண்டாவர். (153) 7க் குடையவன் லக்கினத்திலும் புத்திரேசன் சுபருடன் கூடியுமிருந்து, 5ல் சனியோ, புதனேயிருந்தாலும் தத்த(ஸ்வீகிருத)புத்திருண்டாவர்.

पुत्रेशे भाग्यभावस्थे भाग्येशे कर्मराशिगे ।
पुत्रेशे शुभदृष्टे तु दत्तपुत्रस्य सन्ततिः ॥ १५४ ॥

लग्नाधिपे भृगौ स्वोच्चे पुत्रे मन्दसमन्विते ।
कारके बलसंयुक्ते दत्तपुत्रस्य सन्ततिः ॥ १५५ ॥

पुत्रस्थानाधिपे चन्द्रे लग्ने पुत्रे शनैश्चरे ।
परिपूर्णबले जीवे दत्तपुत्रात्सुतावहः ॥ १५६ ॥

पुत्राधिपे रवौ लग्ने पुत्रस्थौ शनिसोमजौ ।
पुत्राधिपयुतौ दृष्टौ दत्तपुत्रात्सुतो भवेत् ॥ १५७ ॥

लग्नाधिपे बुधे पुत्रे कुजदृष्टिसमन्विते ।
कारके लाभराशिस्थे दत्तपुत्रात्सुतो भवेत् ॥ १५८ ॥

लग्नाधिपे गुरौ पुत्रे शनिदृष्टिसमन्विते ।
पुत्रेशे भौमराशिस्थे दत्तपुत्रात्सुतावहः ॥ १५९ ॥

लग्नाधिपे गुरौ पुत्रे कुजदृष्टिसमन्विते ।
पुत्रेशे मन्दराशिस्थे दत्तपुत्रात्सुतावहः ॥ १६० ॥

पञ्चमे षट्ग्रहयुते तदीशे व्ययराशिगे ।
लग्नेशो दुर्बलो यस्य दत्तपुत्रो भवेदयम् ॥ १६१ ॥

रविचन्द्रौ यदेकस्थावेकांशकसमन्वितौ ।
द्विमातृभिरसौ बालः द्विपितृभ्यां प्रपोषितः ॥ १६२ ॥

தத்த புத்திர மூலம் ஸந்ததி விருத்தி யுண்டாகும் யோகம்.—(154) 5க் குடையவன் 9லும், 9க் குடையவன் 10லும், இருந்து 5க் குடையவன் சுபராலும் பார்க்கப்பட்டால் ஸ்வீகிருத புத்திர மூலம் ஸந்ததிப் பெருக்குண்டாகும். (155) சுக்கிரன் லக்கினாதிபனாகி தனது உச்ச வீட்டிலிருந்து 5ல் சனியுமிருந்து காரகன் பலம் பெற்று மிருந்தால் தத்த புத்திர ஸந்ததியுண்டாகும். (156) புத்திரஸ்தானாதிபன் சந்திரனாகி லக்கினத்திலும், 5ல் சனியுமிருந்து குரு பரிபூர்ண பலமும் பெற்றால் தத்த புத்திரன் மூலம் புத்திரலாபமுண்டாகும். (157) புத்திராதிபன் சூரியனாகி லக்கினத்திலும் 5ல் சனியும் புதனும் சேர்ந்திருந்து புத்திராதிபன் சேர்க்கை, பார்வை இவற்றைப்பெற்றால் தத்த புத்திரன் மூலம் புத்திரனைச் சொல்லவேண்டும். (158) லக்கினாதிபன் புதனாகி 5மிடத்திலிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டு காரகன் 11 மிடத்திலுமிருந்தால் தத்த புத்திரன் மூலம் புத்திரனைச்

சொல்லவேண்டும். (159) லக்கினாதிபன் குருவாகி 5லிருந்து சனியினால் பார்க்கப்பட்டு 5க் குடையவன் செவ்வாயின் வீட்டிலிருந்தால் தத்த புத்திரன் மூலம் புத்திரனுண்டாவன். (160) குரு லக்கினாதிபனாகி 5 மிடத்திலிருந்து செவ்வாயினால் பார்க்கப்பட்டு 5க்குடையவன் சனியின் வீட்டிலிருந்தால் தத்த புத்திரன் மூலம் புத்திரனுண்டாகும். (161) 5மிடத்தில் 6 கிரஹமிருந்து 5க் குடையவன் 12லிருந்து லக்கினேசனும் துர்ப்பலனானால் இவன் தத்த புத்திரனுள்ளவனாக ஆவான். (162) சூரிய சந்திரர்கள் ஒரு ராசியில் ஒரே அம்சத்திலுமிருப்பாரானால் இந்தப் பாலன் இரண்டு மாதாவினாலும், இரண்டு பிதாவினாலும் போஷிக்கப் பட்டவனாக ஆவான்.

गुरुलग्नेशदारेशपुत्रस्थानाधिपेषु च ।
सर्वेषु बलहीनेषु वक्तव्या त्वनपत्यता ॥ १६३ ॥
रव्याररराहुशनयः पुत्रस्था बलसंयुताः ।
कारकाद्याः क्षीणबलास्त्वनपत्यत्वमादिशेत् ॥ १६४ ॥

புத்திர ஹீனனாயாகும் யோகம்.—(163) குரு, லக்கினேசன், 7க் குடையவன், புத்திரஸ்தானாதிபன் ஆகிய யாவரும் பலஹீனர்களா யிருந்தால் புத்திரஹீனனென்று சொல்லவேண்டும். (164) சூரியன், செவ்வாய், ராஹு, சனி இவர்கள் பலம் பெற்று 5 மிடத்திலிருந்து காரகாதிகள் பலமற்றவர்களாகவுமிருந்தாரானால் புத்திரஹீனனென்று சொல்லவேண்டும்.

पुत्रस्थानगते राहौ कुजेनापि निरीक्षिते ।
कुजक्षेत्रगते वापि सर्पशापात्सुतक्षयः ॥ १६५ ॥
पुत्रेशे राहुसंयुक्ते पुत्रस्थे भानुनन्दने ।
चन्द्रदृष्टियुते वापि सर्पशापात्सुतक्षयः ॥ १६६ ॥
कारके राहुसंयुक्ते पुत्रेशे बलवर्जिते ।
लग्नाधिपे भौमयुते सर्पशापात्सुतक्षयः ॥ १६७ ॥
कारके भौमसंयुक्ते लग्नेशे राहुसंयुते ।
पुत्रस्थानेचेन्दुयुक्ते सर्पशापात्सुतक्षयः ॥ १६८ ॥
भौमांशे भौमसंयुक्ते पुत्रेशे सोमनन्दने ।
राहुमन्दयुते लग्नेऽप्यहिशापात्सुतक्षयः ॥ १६९ ॥

पुत्रस्थाने कुजक्षेत्रे पुत्रेऽप्यहिसमन्विते ।
सौम्यदृष्टियुते वापि सर्पशापात्सुतक्षयः ॥ १७० ॥
पुत्रस्थाः भानुमन्दाराः स्वर्भानुशशिजौ गुरुः ।
निर्बलौ पुत्रलग्नेशौ सर्पशापात्सुतक्षयः ॥ १७१ ॥
लग्नेश्वरे राहुयुक्ते पुत्रेशे भौमसंयुते ।
कारके राहुसंयुक्ते सर्पशापात्सुतक्षयः ॥ १७२ ॥

ஸர்ப்ப சாபத்தால் புத்திர நாசமேற்படும் யோகம்.—(165) ராஹு 5லிருந்து செவ்வாயினாலும் பார்க்கப்பட்டாலும், செவ்வாயின் வீட்டிலிருந்தாலும் ஸர்ப்ப சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (166) 5க் குடையவன் ராகுவுடன் கூடி சனியும் 5 மிடத்திலிருந்து சந்திரனது பார்வையையும் பெற்றால் ஸர்ப்ப சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (167) புத்திரகாரகன் ராஹுவுடன் கூடி புத்திரேசனும் பலமற்றவனாகி லக்கினாதிபனும் செவ்வாயுடன் கூடினால் ஸர்ப்ப சாபத்தால் புத்திர க்ஷயமுண்டாகும். (168) புத்திர காரகன் செவ்வாயுடன் கூடி லக்கினேசனும் ராஹுவுடன் சேர்ந்து, 5மிடத்தில் சந்திரனு மிருந்தால் ஸர்ப்பசாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (169) புதன் 5க் குடையவனாகி செவ்வாயுடன் கூடி செவ்வாயின் அம்சத்திலிருந்து லக்கினத்தில் ராஹு சனி இவர்களிருந்தால் ஸர்ப்ப சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (170) 5மிடம் செவ்வாயின் வீடாகி 5ல் ராஹுவுமிருந்து புதனாலும் பார்க்கப்பட்டால் ஸர்ப்ப சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (171) 5 மிடத்தில் சூரியன், சனி, செவ்வாய், ராஹு, புதன், குரு இவர்களிருந்து 5க்குடையவனும் லக்கினாதிபதியும் துர்ப்பலர்களாயிருந்தால் ஸர்ப்பசாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (172) லக்கினேசன் ராஹுவுடனும், 5க்குடையவன் செவ்வாயுடனும் கூடி காரகன் ராஹுவுடன் கூடியு மிருந்தால் ஸர்ப்ப சாபத்தால் ஸுத க்ஷய முண்டாகும்.

तद्दोषपरिहारार्थं नागपूजां समाचरेत् ।
स्वगृह्योक्तविधानेन प्रतिष्ठां कारयेत्सुधीः ॥ १७३ ॥
नागमूर्तिं सुवर्णेन कृत्वा पूजां समाचरेत् ।
गोभूतिलहिरण्यादि दद्याद्वित्तानुसारतः ।
एवं कृतेतु नागेन्द्रप्रसादाद्वर्धते कुलम् ॥ १७४ ॥

ஸர்ப்பசாபதோஷபரிஹாரம் செய்யும்முறை.—(173) அந்தத் தோஷம் விலகவேண்டி புத்திமானுயுள்ளவன் நாகபூஜையைச் செய்யவேண்டும். தனது கிருஹ்ய சூத்திரத்திற் சொல்லிய முறைப்படி நாகப்ரதிஷ்டையைச் செய்யவேண்டும். (174) பூஜைசெய்யும் பொழுது தங்கத்தால் நாகமூர்த்தியைச் செய்து பூஜிக்கவேண்டும். பசு, பூமி, எள்ளு, ஸுவர்ணம் இவைகளைச் சக்திக்குத்தக்கபடி தானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் நாகேந்திரப் பிரஸாதத்தால் குலமானது விருத்தியை யடையும்.

पुत्रस्थानगते भानौ नीचे मन्दांशके स्थिते ।
पार्श्वयोः क्रूरसम्बन्धे पितृशापात्सुतक्षयः ॥ १७५ ॥

पुत्रस्थानाधिपे भानौ त्रिकोणे पापसंस्थिते ।
क्रूरान्तरे पापदृष्टे पितृशापात्सुतक्षयः ॥ १७६ ॥

भानुराशिस्थिते जीवे पुत्रेशे भानुसंयुते ।
पुत्रलग्ने पापयुते पितृशापात्सुतक्षयः ॥ १७७ ॥

लग्नेशे दुर्बले पुत्रे पुत्रेशे भानुसंयुते ।
पुत्रलग्ने पापयुते पितृशापात्सुतक्षयः ॥ १७८ ॥

पितृस्थानाधिपे पुत्रे पुत्रेशे वा तथास्थिते ।
लग्नपुत्रे पापयुते पितृशापात्सुतक्षयः ॥ १७९ ॥

पुत्रस्थानस्थिते भानौ पुत्रेशेन समन्विते ।
लग्ने पुत्रे पितृस्थाने पापास्सन्ततिनाशकाः ॥ १८० ॥

पितृस्थानाधिपे दुःस्थे कारके पापराशिगे ।
पुत्रे लग्नेश्वरे पापे पितृशापात्सुतक्षयः ॥ १८१ ॥

लग्नपञ्चमभावस्थाः भानुभौमशनैश्चराः ।
रन्ध्ररिःफे राहुजीवौ पितृशापात्सुतक्षयः ॥ १८२ ॥

व्ययेशे लग्नभावस्थे रन्ध्रेशे पुत्रराशिगे ।
पितृस्थानाधिपे रन्ध्रे पितृशापात्सुतक्षयः ॥ १८३ ॥

लग्नादष्टमगे भानौ पुत्रस्थे भानुनन्दने ।
पुत्रेशे राहुसंयुक्ते लग्ने पापास्सुतक्षयः ॥ १८४ ॥

रोगेशे पुत्रभावस्थे पितृस्थानाधिपे तथा ।
कारके राहुसंयुक्ते पितृशापात्सुतक्षयः ॥ १८५ ॥

பிதிருசாபத்தால் புத்திர நாசமேற்படும் யோகம்.—(175) சூரியன் புத்திரஸ்தானத்திலிருந்து அது நீசவீடாகி சனியின் அம்சத்திலுமிருந்து அவனுக்கு இருபுரத்திலும் பாபக்கிரஹங்களுமிருக்குமானல் பிதிருசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (176) சூரியன் 5க் குடையவனுகி திரிகோணத்தில் பாபருமிருந்து இரண்டு குரூரக்கிரஹங்களின் நடுவிலுமிருந்து பாபராலும் பார்க்கப்பட்டால் பிதிருசாபமூலம் ஸுதக்ஷயமுண்டாகும். (177) குரு சிங்கத்திலிருந்து 5க் குடையவன் சூரியனுடன் சேர்ந்திருந்து 5மிடத்தில் பாபருமிருந்தால் பிதிருசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (178) லக்கினேசன் துர்ப்பலனுகி 5லிருந்து 5க் குடையவன் சூரியனுடன் கூடி புத்திரலக்கினமானது பாபருடனும் கூடினுல் பிதிருசாபத்தால் புத்திரக்ஷய முண்டாகிறது. (179) 9க் குடையவன் 5லும், 5க் குடையவன் 9லுமிருந்து லக்கினம், 5மிடம் இவற்றில் பாபருமிருந்தால் பிதிருசாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (180) புத்திரஸ்தானத்தில் சூரியனிருந்து புத்திரஸ்தானுதிபனுடனும் கூடி 1, 5, 9 மிடங்களில் பாபருமிருந்தால் ஸந்ததிவிநாசமேற்படும். (181) 9க் குடையவன் 6, 8, 12 மிடங்களிலும், புத்திரகாரகன் பாபராசியிலும், பாபியான லக்கினேஶ்வரன் 5மிடத்திலுமிருந்தால் பிதிருசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகிறது. (182) சூரியன், செவ்வாய் சனி இவர்கள் 1, 5மிடங்களிலும், ராஹு குரு இவர்கள் 8, 12மிடங்களிலுமிருந்தால் பிதிருசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (183) 12க் குடையவன் லக்கினபாவத்திலும், 8க் குடையவன் 5ம் பாவத்திலும், 9க் குடையவன் 8மிடத்திலுமிருந்தால் பிதிருசாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (184) லக்கினத்திற்கு 8மிடத்தில் சூரியனும், சனி 5 மிடத்திலும், 5க் குடையவன் ராகுவுடன் கூடியும் இருந்து, லக்கினத்தில் பாபர்களுமிருந்தால் (பிதிருசாபத்தால்) புத்திர நாசமுண்டாகும். (185) 6க் குடையவனே 9க் குடையவனே 5லிருந்து புத்திரகாரகன் ராஹுவுடன் கூடியுமிருந்தால் பிதிருசாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும்,

तद्दोषपरिहारार्थं गयाश्राद्धं च कारयेत् ।
ब्राह्मणान्भोजयेदेवमयुतं वा सहस्रकम् ॥ १८६ ॥

कन्यादानं ततः कृत्वा गां च दद्यात्सहस्रकम् ।
एवं कृते तु मनुजः पितृशापात्प्रमुच्यते ॥ १८७ ॥

वर्धते च कुलं तस्य पुत्रपौत्रादिभिस्तदा ।
दृष्टियोगपदैस्सर्वं फलं ब्रूयाद्विचक्षणः ॥ १८८ ॥

பிதிருசாப தோஷத்திற்குப் பரிஹாரம்—(186) அந்தத் தோஷம் விலகவேண்டி கயாசிராத்தத்தைச் செய்து பின்னர் இவ்விதம் 10000 பிராம்மணர்களுக்கோ 1000 பிராம்மணர்களுக்கோ போஜனத்தைச்செய்து வைக்கவேண்டும். (187) பிறகு கன்னிகாதானத்தையும் சக்தியிருந்தால் 1000 கோதானத்தையும் செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் மனிதன் பிதிருசாபத்தினின்றும் விடுபடுவான். (188) அதன்மூலம் இவனது குலமானது புத்திர பௌத்திராதிகளுடன் அதுபோழ்து விருத்தியை யடைகிறது. ஆகவே புத்திசாலியானவன் கிரஹங்களின் திருஷ்டி சேர்க்கை, ஸ்தானம் இவற்றைக் கொண்டு எல்லா பலனையும் சொல்லவேண்டும்.

पुत्रस्थानाधिपे चन्द्रे नीचे वा पापमध्यगे ।
हिबुके पञ्चमे पापे मातृशापात्सुतक्षयः ॥ १८९ ॥

लग्ने मन्दसमायोगे मातृस्थाने शुभेतरे ।
नीचे पञ्चमगे चन्द्रे मातृशापात्सुतक्षयः ॥ १९० ॥

पुत्रस्थानाधिपे दुःस्थे लग्नेशे नीचराशिगे ।
चन्द्रे पापसमायोगे मातृशापात्सुतक्षयः ॥ १९१ ॥

पुत्रस्थानाधिपे दुःस्थे मन्दराह्वारसंयुते ।
भाग्ये वा पुत्रराशौ वा कारके पुत्रनाशनम् ॥ १९२ ॥

पुत्रस्थानाधिपे दुःस्थे लग्नेशे नीचराशिगे ।
चन्द्रे पापसमायोगे मातृशापात्सुतक्षयः ॥ १९३ ॥

मातृस्थानाधिपे भौमे शनिराहुसमन्विते ।
भानुचन्द्रयुते पुत्रलग्ने सन्ततिनाशनम् ॥ १९४ ॥

लग्नात्मजेशौ शत्रुस्थौ रंध्रे मात्रधिपे स्थिते ।
पितृस्थानाधिपे लग्ने मातृशापात्सुतक्षयः ॥ १९५ ॥

षष्ठाष्टमेशौ लग्नस्थौ व्यये मात्रधिपे स्थिते ।
चन्द्रे जीवे पापयुते मातृशापात्सुतक्षयः ॥ १९६ ॥

पापमध्यगते लग्ने क्षीणे चन्द्रे च सप्तमे ।
मातृपुत्रे राहुमन्दौ मातृशापात्सुतक्षयः ॥ १९७ ॥

नाशस्थानाधिपे पुत्रे पुत्रेशे नाशराशिगे ।
चन्द्रे मातृपतौ दुःस्थे मातृशापात्सुतक्षयः ॥ १९८ ॥

चन्द्रक्षेत्रे तथालग्ने कुजराहुसमन्विते ।
पुत्रस्थाने मन्दचन्द्रौ मातृशापात्सुतक्षयः ॥ १९९ ॥

लग्नरंध्रारिरिःफेषु कुजराहू रविश्शनिः ।
मातृलग्नाधिपौ दुःस्थौ मातृशापात्सुतक्षयः ॥ २०० ॥

मृत्युस्थानगते जीवे कुजराहुसमन्विते ।
पुत्रस्थाने मन्दचन्द्रौ मातृशापात्सुतक्षयः ॥ २०१ ॥

ग्रहयोगपदैस्सर्वं फलं ब्रूयाद्विचक्षणः ।
शुभे सौख्यं विनिर्दिष्टं मिश्रिते मिश्रितं फलम् ॥ २०२ ॥

மாதிரு சாபத்தால் புத்திரதோஷமேற்படும் யோகம்.—(189) சந்திரன் புத்திரஸ்தானாதிபனாகி நீசனாகவோ, பாபர்களின் நடுவிலோ இருந்து 4லும், 5லும் பாபரிருந்தால் மாதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (190) லக்கினத்தில் சனியும், 4மிடத்தில் பாபியும், நீசனான சந்திரன் 5லு மிருந்தால் மாதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (191) 5க் குடையவன் 6, 8, 12 லும், லக்கினேசன் நீசராசியிலும், சந்திரன் பாபருடன் சேர்ந்துமிருந்தால் மாதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (192) புத்திரஸ்தானாதிபன் 6, 8, 12 மிடத்திலிருந்து, சனி ராஹு செவ்வாய் இவர்களுடனும் கூடி பாக்கியத்திலோ, புத்திரராசியிலோ காரகனுமிருந்தால் (மாதிரு சாபத்தால்) புத்திரநாசமேற்படும். (193) 5க் குடையவன் 6, 8, 12லிருந்து லக்கினாதிபன் நீசராசியிலுமிருந்து சந்திரன் பாபருடனும் கூடினால் மாதிரு சாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (194) 4மிடத்திற் கதிபதியான செவ்வாய், சனி ராகு இவர்களுடன் கூடி, சூரியன் சந்திரன் இவர்கள் 5லு மிருந்தால் ஸந்ததி நாசமுண்டாகும். (195) 1,

5க் குடையவர்கள் 6மிடத்திலும், 4க் குடையவன் 8மிடத்திலும் 9க் குடையவன் லக்கினத்திலுமிருந்தால் மாதிரு சாபத்தால் ஸுதக்ஷயமேற்படும். (196) 6, 8க் குடையவர்கள் லக்கினத்திலும், 4க் குடையவன் 12லும், சந்திரன், குரு இவர்கள் பாபருடன் கூடியுமிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திரநாச மேற்படும். (197) லக்கினத்திற்கு இரு புரத்திலும் பாபரும், தேய் பிறைச் சந்திரன் 7மிடத்திலும், 4, 5மிடங்களில் முறையே ராகு சனி இவர்களுமிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (198) 8க் குடையவன் 5லும், 5க் குடையவன் 8லும், நான்காமிடத்ததிபதியான சந்திரன் 6, 8, 12லு மிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (199) சந்திரன்வீடு லக்கினமாகி செவ்வாய், ராகு இவர்களுடனும்கூடி சனி, சந்திரன் இவர்கள் 5லு மிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திரநாச முண்டாகிறது. (200\ லக்கினம், 8, 6, 12மிடங்களில் முறையே செவ்வாய், ராஹு, சூரியன், சனி இவர்களிருந்து 4, 1க் குடையவர்களும் 6, 8, 12லிருந்தாரானல் மாதிரு சாபத்தால் புத்திரநாச மேற்படும். (201) 8 மிடத்தில் குருவிருந்து செவ்வாய், ராகு இவர்களுடனும் கூடி 5மிடத்தில் சனி, சந்திரர்களுமிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (202) புத்திசாலியானவன் கிரஹங்களின் சேர்க்கை, இருப்பிடம், இவற்றைக் கொண்டு எல்லாப் பலனேயும் சொல்லவேண்டும். சுபராஞல் சுப பலனென்றும் மிஸ்ரமாஞல் மிஸ்ரபலனென்றும் காணவேண்டும்.

सेतुस्नानं प्रकुर्वीत गायत्रीलक्षसंख्यकम् ।
गृहदानं च कर्तव्यं रौप्यपात्रे पयस्तथा ॥ २०३ ॥

ब्राह्मणान्भोजयेत्तद्वदश्वत्थस्य प्रदक्षिणम् ।
कर्तव्यं भक्तियुक्तेन ह्यष्टाविंशत्सहस्रकम् ॥ २०४ ॥

एवं कृते मनुष्याणां शापमोक्षो भविष्यति ।
सत्पुत्रं लभते तेन रूपशीलगुणान्वितम् ॥ २०५ ॥

மாதிரு சாப தோஷ பரிஹாரம்.—(203) ஸேது ஸ்ஞனத்தையும், லக்ஷம் காயத்திரீ ஜபத்தையும், கிருஹ தானத்தையும், பால் நிறம்பிய வெள்ளிப் பாத்திரத்தையும், தானம் செய்யவேண்டும்.

(204) (ஸஹஸ்ர) பிராம்மணர்களுக்கு போஜனம் செய்து வைப்பதுடன் 28 ஆயிரம் அரசப் பிரதக்ஷிணத்தையும் பக்தியுடன் செய்யவேண்டும். (பூர்ண தக்ஷிணை கொடுத்து நல்லப் பிராம்மணர்களைக் கொண்டும் செய்யச்செய்யலாம். இரண்டிற்கும் பலன் ஒன்றே.) (205) இவ்விதம் செய்தால் மனிதர்கட்கு நேர்ந்த சாபத்தினின்றும் விடுதலேற்படுகின்றது. அதனுல் ரூபம், ஒழுக்கம், குணம் இவையமைந்த ஸத்புத்திரனை யடைகிறுன்.

अतः परं प्रवक्ष्यामि भ्रात्रादेशापकारणम् ।
पापयोगेन भावेन कारकस्य बलाबले ॥ २०६ ॥

भ्रातृस्थानाधिपे पुत्रे कुजराहुसमन्विते ।
पुत्रलग्नेश्वरौ रंध्रे भ्रातृशापात्सुतक्षयः ॥ २०७ ॥

लग्ने कुजे सुते मन्दे भ्रातृपे भाग्यराशिगे ।
कारके नाशराशिस्थे भ्रातृशापात्सुतक्षयः ॥ २०८ ॥

भ्रातृस्थाने गुरौ नीचे मन्दः पञ्चमगो यदि ।
पुत्रेशे रंध्रभावस्थे भ्रातृशापात्सुतक्षयः ॥ २०९ ॥

मूर्तिस्थानाधिपे रिःफे भौमः पञ्चमगो यदि ।
सुतेशे मृत्युभावस्थे भ्रातृशापात्सुतक्षयः ॥ २१० ॥

पापमध्यगते लग्ने सुतपे पापमध्यगे ।
नाथे च कारके दुःस्थे भ्रातृशापात्सुतक्षयः ॥ २११ ॥

कर्मेशे भ्रातृभावस्थे पापयुक्ते सुते शुभे ।
पुत्रेशे कुजसंयुक्ते भ्रातृशापात्सुतक्षयः ॥ २१२ ॥

पुत्रस्थाने बुधक्षेत्रे शनिराहुसमन्विते ।
रिःफे विदारसंस्थानाद्भ्रातृशापात्सुतक्षयः ॥ २१३ ॥

लग्नेशे भ्रातृराशिस्थे भ्रातृस्थानाधिपे सुते ।
लग्नभ्रातृसुते पापे भ्रातृशापात्सुतक्षयः ॥ २१४ ॥

रन्ध्रपे नाशराशिस्थे पुत्रस्थे कारके तथा ।
राहुमन्दयुते दृष्टे भ्रातृशापात्सुतक्षयः ॥ २१५ ॥

नाशस्थानाधिपे पुत्रे भ्रातृनाथेन संयुते ।
रन्ध्रे चारार्किसंयुक्ते भ्रातृशापात्सुतक्षयः ॥ २१६ ॥

பிராதிரு சாபத்தால் புத்திர தோஷமேற்படுதல்.—(206) இதற்குப் பின்னர் பிராத்ராதி சாபத்திற்குரிய காரணத்தைப் பாப யோகத்தைக் கொண்டும், பாவத்தைக் கொண்டும் காரகனுடைய பலாபலத்தைக் கொண்டும் சொல்லுகிறேன். (207) 3க்குடையவன் 5லிருந்து செவ்வாய், ராகு இவர்களுடனும் கூடி 5, 1க்குடையவர்கள் 8லு மிருந்தால் பிராதிரு சாபத்தால் புத்திரநாச மேற்படும். (208) லக்கினத்தில் செவ்வாயும், 5ல் சனியும், 3க்குடையவன் 9லும், காரகன் 8லு மிருந்தால் பிராதிருசாபத்தால் புத்திரநாச முண்டாகும். (209) 3மிடத்தில் குரு நீசனாகவிருந்து 5ல் சனியுமிருந்து 5க்குடையவன் 8மிடத்திலுமிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (210) லக்கினாதிபதி 12லும், 5ல் செவ்வாயும், 5க் குடையவன் 8மிடத்திலு மிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (211) லக்கினத்திற்கும் 5 மிடத்ததிபனுக்கும் இருபுறத்திலும் பாபரிருந்து 5க்குடையவனோ, 5ம் பாவகாரகனோ 6, 8, 12லிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (212) 10க் குடையவன் 3ம் பாவத்திலும், பாபருடன் கூடின சுபன் 5மிடத்திலும், 5க் குடையவன் செவ்வாயுடனும் கூடியிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (213) புத்திர ஸ்தானம் புதன் வீடாகி சனி, ராகு இவர்களுடனும் கூடி, 12ல் புதனும் செவ்வாயுமிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (214) லக்கினாதிபதி 3மிடத்திலும், 3க் குடையவன் 5லும், 1, 3, 5ல் பாபருமிருந்தால் பிராதிரு சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (215) 8க் குடையவன் 8லும் புத்திரகாரகன் 5லும், இருந்து ராகு சனியின் சேர்க்கை பார்வை இவற்றையும் பெற்றால் பிராதிரு சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (216) 8க் குடையவன் 3க் குடையவனுடன் கூடி 5லும், 8மிடத்தில் செவ்வாய், சனி இவர்களுமிருந்தால் பிராதிரு சாபத்தால் புத்திரநாச முண்டாகும்.

भ्रातृशापविमोक्षार्थं विष्णोः श्रवणकीर्तने ।
चान्द्रायणं चरेत्पश्चाद्यमुनाकृष्णसंनिधौ ॥ २१७ ॥
अश्वत्थस्थापनं कार्यं दशधेनुं प्रदापयेत् ।

प्राजापत्यं चरेत्तत्र भूमिं दद्यात्फलान्विताम् ।
एवं यः कुरुते भक्त्या पुत्रवृद्धिः प्रजायते ॥ २१८ ॥

பிராதிரு சாப நிவிருத்திக்காகச் செய்யவேண்டியன.—(217) பிராதிரு சாபம் விலகவேண்டி விஷ்ணுகதா சிரவணம், விஷ்ணு நாம கீர்த்தனம், இவற்றைச் செய்தபின்னர் யமுனே கிருஷ்ணன் இவர்களின் ஸன்னிதியில் சாந்திராயண விரதத்தைச் செய்ய வேண்டும். (218) அரசமரத்தை ஸ்தாபிக்கவேண்டும். தசதேனு தானஞ் செய்யவேண்டும். பிராஜாபத்திய கிருச்சிரானுஷ்டானம் செய்து பழ வர்க்கத்துடன் கூடின பூமியையையும் தானஞ்செய்தல் வேண்டும். இவ்விதம் எவன் பக்தியுடன் செய்கிறானே அவனுக்கு புத்திர விருத்தியானது உண்டாகிறது.

अतः परं प्रवक्ष्यामि शापं मातुलकस्य च ।
येन पुत्रस्य नाश स्स्याद्गृहदोषेण भामिनि ॥ २१९ ॥

पुत्रस्थाने बुधे नीचे कुजराहुसमन्विते ।
लग्ने मन्दसमायोगे मातुलात्सुतनाशनम् ॥ २२० ॥

लग्ने पुत्रेश्वरे रन्ध्रे राहुभौमसमन्विते ।
मन्दे मातुलशापात्तपुत्रसन्ततिनाशनम् ॥ २२१ ॥

लुप्ते पुत्राधिपे लग्ने सप्तमे भानुनन्दने ।
लग्नेशे बुधसंयुक्ते तस्य सन्ततिनाशनम् ॥ २२२ ॥

पापग्रहयुते लग्ने पुत्रेशे नीचराशिगे ।
दारेशे पापसंयुक्ते बुधे सन्ततिनाशनम् ॥ २२३ ॥

ज्ञानस्थानाधिपे लग्ने व्ययेशेन समन्विते ।
शशिसौम्यकुजाः पुत्रे पुत्रसन्ततिनाशनम् ॥ २२४ ॥

மாதுலசாபத்தால் புத்திர நாசயோகம்.—(219) ஓபாமினி! இதற்குப் பின்னர் மாதுலசாபத்தைச் சொல்லுகிறேன் எந்தக்கிரஹதோஷத்தினல் புத்திர நாசமுண்டாகக் கூடுமோ அதைக்கேட்பாயாக. (220) புத்திரஸ்தானத்தில் புதனிருந்து அது புதனுக்கு சொந்த வீடாகவுமாகி செவ்வாய் ராகு இவர்களுமங்கிருந்து லக்கினத்தில் சனியுமிருந்தால் அம்மான் சாபமூலம் புத்திர நாசமுண்டாகும். (221) லக்கினத்தில் 5க் குடையவனும் 8ல் ராஹு

செவ்வாய் இவர்களுடன் கூடின சனியுமிருந்தால் மாதுலசாபத்தால் புத்திர ஸந்ததிநாச முண்டாகும். (222) 5க் குடையவன் அஸ்தங்கதனுகி லக்கினத்திலும் 7ல் சனியும் லக்கினேசன் புதனுடன் கூடியுமிருந்தால் அவனுக்கு (மாதுல சாபத்தால்) ஸந்ததி நாசமுண்டாகும். (223) லக்கினத்தில் பாபக்கிரஹமிருந்து, புத்திரேசன் நீசராசியிலுமிருந்து 7க் குடையவன் புதன் இவர்கள் பாபருடனும் கூடினுல் ஸந்ததி நாசமுண்டாகும். (224) 5க் குடையவன் லக்கினத்திலிருந்து 12க் குடையவனுடனும் கூடி 5ல் சனி, செவ்வாய் இவர்களு மிருந்தால் அவனுக்குப் புத்திர ஸந்ததி நாசமுண்டாகும்.

तद्दोषपरिहारार्थं विष्णोः स्थापनकं स्मृतम् ।
वापीकूपतडाकादिबन्धनात्सुतदर्शनम् ॥ २२५ ॥
पुत्रवृद्धिर्भवेत्तस्य सम्पद्वृद्धिः प्रजायते ।
इदं योगग्रहेणैव फलं ब्रूयाद्विचक्षणः ॥ २२६ ॥

மாதுல சாப தோஷ பரிஹாரம்.—(225) அந்தத் தோஷம் விலகவேண்டி விஷ்ணு மூர்த்தியை ஆலயத்தில் ஸ்தாபிப்பது ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. வாபீ, கிணறு, குளம், முதலியவற்றின் நிர்மாணத்தால் புத்திர தர்சனமுண்டாகும். (226) அவனுக்குப் புத்திரவிருத்தியும், ஸம்பத்விருத்தியும் உண்டாகும். இந்தப் பலனைக் கிரஹங்களின் சேர்க்கையைக் கொண்டே புத்திமானுயுள்ளவன் சொல்லவேண்டும்.

विद्यागर्वेण यो मर्त्यो ब्राह्मणानवमन्यते ।
ब्रह्मशापोद्भवाद्दोषात्सन्ततेस्तस्य नाशनम् ॥ २२७ ॥
गुरुक्षेत्रे यदा राहुः पुत्रे जीवारभानुजाः ।
धर्मस्थानाधिपे नाशे ब्रह्मशापात्सुतक्षयः ॥ २२८ ॥
धर्मेशे पुत्रभावस्थे पुत्रेशे नाशराशिगे ।
जीवारराहवो मृत्यौ ब्रह्मशापात्सुतक्षयः ॥ २२९ ॥
धर्माधिपे नीचगते प्रियेशे पुत्रराशिगे ।
राहुयुक्तेक्षिते वापि ब्रह्मशापात्सुतक्षयः ॥ २३० ॥
जीवे नीचगते राहौ लग्ने वा पुत्रराशिगे ।
पुत्रस्थानाधिपे दुःस्थे ब्रह्मशापात्सुतक्षयः ॥ २३१ ॥

पुत्रस्थानाधिपे जीवे रन्ध्रे पापसमन्विते ।
पुत्रे राह्वर्किचन्द्राराः ब्रह्मशापात्सुतक्षयः ॥ २३२ ॥

मन्दांशे मन्दसंयुक्ते जीवे भौमसमन्विते ।
पुत्रेशे व्ययराशिस्थे ब्रह्मशापात्सुतक्षयः ॥ २३३ ॥

பிராம்மண சாபத்தால் புத்திர நாசமேற்படுதல்.—(227) வித்யாகர்வத்தால் பிராம்மணர்களை எவன் அவமதிக்கின்றானோ அவனுக்கு ப்ராம்ஹண சாபத்தாலுண்டான தோஷம் காரணமாய் புத்திர ஸந்ததிக்கு நாசமுண்டாகும். (228) குருவின் வீட்டில் ராஹுவிருந்து, 5ல் குரு செவ்வாய் சனி இவர்களுமிருந்து, 9க் குடையவன் 8லு மிருந்தால் பிராம்மண சாபத்தால் புத்திர நாச முண்டாகிறது. (229) 9க் குடையவன் 5லும், 5க் குடையவன் 8லு மிருந்து குரு செவ்வாய்ராகு இவர்களும் அங்கிருந்தால் பிராம்மண சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (230) 9க் குடையவன் நீசத்திலும், 1க் குடையவன் 5 மிடத்திலு மிருந்து ராஹுவின் சேர்க்கை பார்வை இவற்றையும் பெற்றால் பிராம்மண சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (231) குரு நீசத்திலும், ராஹு லக்கினத்திலோ, 5மிடத்திலோ இருந்து 5க் குடையவன் 6, 8, 12லு மிருந்தால் பிராம்மண சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (232) 5க் குடையவனான குரு பாபியின் சேர்க்கைபெற்று 8லும், 5ல் ராஹு, சனி, சந்திரன், செவ்வாய் இவர்களுமிருந்தால் பிராம்மண சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (233) குரு, செவ்வாயுடன் கூடியோ சனியுடன் கூடியோ சனியின் அம்சமேறியோ இருந்து 5க் குடையவன் 12லுமிருந்தால் பிராம்மண சாபத்தால் புத்திரநாசமுண்டாகும்.

तद्दोषपरिहारार्थं व्रतं चान्द्रायणं चरेत् ।
ब्रह्मकूर्चत्रयं कृत्वा धेनुं दद्यात्सदक्षिणाम् ॥ २३४ ॥

पञ्चरत्नानि देयानि सुवर्णेन समन्वितम् ।
अन्नदानं भोजनं चायुतं साहस्रकं चरेत् ॥ २३५ ॥

एवं कृते तु सत्पुत्रं लभते नात्र संशयः ।
ब्रह्मशापविशुद्धात्मा स पुमान्सुखमेधते ॥ २३६ ॥

பிராம்மண சாப தோஷம் போக்கும் முறையாவது.—(234) அந்தத்தோஷத்தைப்போக்கவேண்டி சாந்திராயண விரதத்தைச் செய்யவேண்டும். மூன்று பிரும்ம கூர்ச்சத்தைச்செய்து தக்ஷிணை யுடன் கூடின பசுவையும் தானஞ் செய்தல் வேண்டும். (235) சுவர்ணத்துடன் கூட 5 விதரத்தினங்களைத் தானஞ்செய்தல் வேண்டும். அன்னதானத்தையும், பதினாயிரமோ, ஆயிரமோ பிராம்மணர்களுக்கு போஜனத்தையும் செய்விக்க வேண்டும். (236) இவ்விதம் செய்வதால் ஸத்புத்திரனையடைகிறான். இதனால் பிராம்மண சாபத்தினின்றும் விடுபட்டு அந்தப் புருஷன் சுகத்தை யடைகிறான் ஸந்தேஹமில்லை.

दारेशे पुत्रभावस्थे दारेशस्यांशपे शनौ ।
पुत्रेशे नाशराशिस्थे पत्नीशापात्सुतक्षयः ॥ २३७ ॥

कलत्रेशे नाशसंस्थे रि:फेशे पुत्रराशिगे ।
कारके पापसंयुक्ते पत्नीशापात्सुतक्षयः ॥ २३८ ॥

पुत्रस्थानगते शुक्रे कामपे रन्ध्रमाश्रिते ।
कारके पापसंयुक्ते पत्नीशापात्सुतक्षयः ॥ २३९ ॥

भाग्यस्थानगते शुक्रे दारेशे नाशराशिगे ।
लग्ने पापग्रहयुते पत्नीशापात्सुतक्षयः ॥ २४० ॥

भाग्यस्थानाधिपे शुक्रे पुत्रेशे शत्रुराशिगे ।
गुरुलग्नेशदारेशाः दुःस्थास्सन्ततिनाशनम् ॥ २४१ ॥

कुटुम्बे पापसम्बन्धे कामेशे नाशराशिगे ।
पुत्रे पापग्रहयुते पत्नीशापात्सुतक्षयः ॥ २४२ ॥

पुत्रस्थाने भृगुक्षेत्रे राहुचन्द्रसमन्विते ।
व्यये लग्ने धने पापे पत्नीशापात्सुतक्षयः ॥ २४३ ॥

सप्तमे मन्दशुक्रौ चेत् रन्ध्रेज्ये पुत्रभे रवौ ।
लग्ने राहुसमायोगे पत्नीशापात्सुतक्षयः ॥ २४४ ॥

धने कुजे व्यये जीवे पुत्रस्थे भानुनन्दने ।
राहुयुक्तेक्षिते वापि पत्नीशापात्सुतक्षयः ॥ २४५ ॥

नाशस्थौ पुत्रदारेशौ पुत्रे लग्ने कुजे शनौ ।
कारके पापसंयुक्ते पत्नीशापात्सुतक्षयः ॥ २४६ ॥

**लग्नपञ्चमभाग्यस्थाः राहुमन्दकुजाः क्रमात् ।**
**रन्ध्रस्थौ पुत्रदारेशौ पत्नीशापात्सुतक्षयः ॥ २४७ ॥**

பத்தினீ சாபமுண்டாகும் யோகம்.—(237) 7க் குடையவன் 5ம்பாவத்திலிருந்து தாரேசனுடைய அம்சபதியாக சனியுமிருந்து 5க் குடையவன் 8லு மிருந்தால் பத்தினீ சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (238) 7க் குடையவன் 8லும், 12க் குடையவன் 5லும், காரகன் பாபருடன் சேர்ந்தும் இருந்தால் பத்தினீ சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (239) 5மிடத்தில் சுக்கிரனிருந்து 7க் குடையவன் 8மிடத்திலும், காரகன் பாபருடன் கூடியுமிருந்தால் பத்தினீ சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (240) 9மிடத்தில் சுக்கிரனும், 7க் குடையவன் 8லும், லக்கினத்தில் பாபக்கிரஹமுமிருந்தால் பத்னீ சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும் (241) சுக்கிரன் 9க் குடையவனுகி, 5க் குடையவன் சத்துரு ராசியிலிருந்து குரு, லக்கினேசன், தாரேசன் இவர்கள் 6, 8, 12 லிருந்தாரானுல் ஸந்ததி நாசமுண்டாகும். (242) 2மிடம் பாப ஸம்பந்தம் பெற்று 7க்குடையவன் 8லிருந்து, 5ல் பாபக்கிரஹமுமிருந்தால் பத்தினீ சாபத்தால் ஸுதக்ஷய முண்டாகும். (243) சுக்கிரன்வீடு புத்திரஸ்தானமாகவாகி ராஹு,சந்திரன் இவர்களுடனும் கூடி 12,1,2மிடங்களில் பாபருமிருந்தால் பத்தினீ சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும். (244) 7ல் சனி சுக்கிரன் இவர்களும், 8ல் குருவும், 5ல் சூரியனும், லக்கினத்தில் ராஹுவுமிருந்தால் பத்தினீ சாபத்தால் புத்திரநாச முண்டாகும். (245) 2ல் செவ்வாயும், 12ல் குருவும், 5ல் சனியுமிருந்து ராஹுவுடனும் கூடினுல் பத்தினீ சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (246) 5, 7க் குடையவர்கள் 6 மிடத்திலிருந்து 5ல் செவ்வாயும், லக்கினத்தில் சனியும்,காரகன் பாபருடன் கூடியுமிருந்தால் பத்தினீசாபத்தால் புத்திர க்ஷயமுண்டாகும். (247) 1, 5, 9 மிடங்களில் முறையே ராஹு, சனி, செவ்வாய் இவர்களிருந்து 5, 7க்குடையவர் 8லுமிருந்தால்பத்தினீ சாபத்தால் ஸுதக்ஷயமுண்டாகும்.

**तस्य दोषस्य शान्त्यर्थं दशकन्यां प्रदापयेत् ।**
**लक्ष्मीनारायणं देवं सर्वाभरणभूषितम् ॥ २४८ ॥**

मूर्तिदानं च कर्तव्यं दशधेनुं प्रदापयेत् ।
शय्यां सभूषणां चैव दम्पत्योस्संप्रदापयेत् ॥ २४९ ॥

एवंकृते मनुष्याणां वाञ्छासिद्धिश्च जायते ।
पुत्रस्संजायते सम्यग्भाग्यवृद्धिश्च सर्वदा ॥ २५० ॥

பத்தினீ சாபதோஷ பரிஹாரம்.—(248) அந்தத்தோஷத்தின் சாந்திக்கு வேண்டி 10 கன்னியாதானஞ் செய்யவேண்டும். ஸர்வாபரண பூஷிதமான லக்ஷ்மீ நாராயண பிம்பம் தயார் செய்து (249) அம்மூர்த்தியைத் தானஞ் செய்வதுடன் தசதேனுதானத்தையும் செய்யவேண்டும். அதுடன் படுக்கையை அதற்கு வேண்டிய அலங்காரத்துடனும் தம்பதிகளுக்குத் தானஞ்செய்ய வேண்டும். (250) இவ்விதஞ் செய்தால் மனிதர்க்கு இஷ்டஸித்தியுண்டாவதுடன் புத்திரனும் நன்கு உண்டாகி பாக்கியப் பெருக்கும் எப்பொழுது முண்டாகிறது.

मन्त्रशापान्मनुष्याणां पिशाचाद्बाध्यते सदा ।
कर्मलोपात्पितॄणाञ्च शापाद्वंशविनाशनम् ॥ २५१ ॥

पुत्रस्थितौ मन्दसूर्यौ क्षीणचन्द्रस्तु सप्तमे ।
लग्ने व्यये राहुजीवौ प्रेतशापात्सुतक्षयः ॥ २५२ ॥

पुत्रस्थानाधिपे मन्दे नाशस्थे लग्नगे कुजे ।
कारके नाशराशिस्थे प्रेतशापात्सुतक्षयः ॥ २५३ ॥

लग्नेपापे व्यये भानुः सुते चारार्किसोमजाः ।
पुत्रेशे रन्ध्रभावस्थे प्रेतशापात्सुतक्षयः ॥ २५४ ॥

लग्ने राहुसमायोगे पुत्रस्थे भानुनन्दने ।
कारके नाशराशिस्थे प्रेतशापात्सुतक्षयः ॥ २५५ ॥

लग्ने राहुश्च शुक्रेज्ये चन्द्रमन्दयुतेऽथवा ।
लग्नेशो मृत्युराशिस्थे प्रेतशापात्सुतक्षयः ॥ २५६ ॥

लग्ने राहुसमायोगे सुतस्थे भानुनन्दने ।
कुजदृष्टियुते वापि प्रेतशापात्सुतक्षयः ॥ २५७ ॥

कारके नीचराशिस्थे पुत्रस्थानाधिपे स्थिरे ।
नीचदृष्टे नीचयुते प्रेतशापात्सुतक्षयः ॥ २५८ ॥

लग्ने मन्दयुते राहौ रन्ध्रे भानुसमन्विते ।
व्यये भौमसमायोगे प्रेतशापात्सुतक्षयः ॥ २५९ ॥

कामस्थानाधिपे दुःस्थे पुत्रे चन्द्रसमन्विते ।
मन्दमान्दियुते लग्ने प्रेतशापात्सुतक्षयः ॥ २६० ॥

बाधस्थानाधिपे पुत्रे शनिशुक्रसमन्विते ।
कारके नाशराशिस्थे प्रेतशापात्सुतक्षयः ॥ २६१ ॥

மந்திர சாபம் பிரேத சாபம் இவைகளால் நேரும் தோஷ விவரணம்.—(251) மனிதர்கள் மந்திர சாபத்தால் பிசாசத்தால் எப்பொழுதுமே பாதிக்கப்படுகின்றனர். பிதிருக்களின் கர்ம லோபத்தாலும், அதன் மூலம் அவர்களின் சாபத்தாலும் வம்சவிநாச முண்டாகிறது. (252) சனி சூரியன் இவர்கள் 5லிருந்து, தேய்பிறைச் சந்திரன் 7மிடத்திலுமிருந்து, லக்கினம் 12மிடம் இவற்றில் முறையே ராஹு குரு இவர்களுமிருந்தால் பிரேதசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (253) புத்திரஸ்தானாதிபன் சனியாகி 8மிடத்திலிருந்து லக்கினத்தில் செவ்வாயும், புத்திரகாரகன் 8லுமிருந்தால் பிரேதசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (254) லக்கினத்தில் பாபரும், 12ல் சூரியனும், 5ல் செவ்வாய், சனி, புதன் இவர்களும் புத்திரேசன் 8லுமிருந்தால் பிரேதசாபத்தால் புத்திரக்ஷயமுண்டாகும். (255) லக்கினம் ராஹுவின் சேர்க்கையை யடைந்து 5ல் சனியுமிருந்து காரகன் 8லுமிருந்தால் பிரேத சாபத்தால் புத்திரநாசமுண்டாகும். (256) லக்கினத்தில் ராஹுவும், சுக்கிரன் குரு இவர்கள் சந்திரன் சனி இவர்களுடன் கூடியும், லக்கினேசன் 8லுமிருந்தால் பிரேதசாபத்தால் புத்திர நாசமுண்டாகிறது. (257) லக்கினத்தில் ராஹுவும், 5ல் சனியும், இருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் பிரேதசாபத்தால் புத்திரநாச முண்டாகும். (258) காரகன் நீசராசியிலிருந்து புத்திரஸ்தானாதிபன் ஸ்திரராசியிலுமிருந்து நீசரின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றை யடைந்தால் பிரேத சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (259) லக்கினத்தில் சனியுடன் கூட ராஹுவும், 8ல் சூரியனும், 12ல் செவ்வாயுமிருந்தால் பிரேதசாபத்தால் புத்திரநாச முண்டாகும். (260) 7க் குடையவன் 6, 8,

12லிருந்து, 5ல் சந்திரனுமிருந்து லக்கினத்தில் மாந்தியும் சனியுமிருந்தால் பிரேத சாபத்தால் புத்திர நாசமுண்டாகும். (261) 8க் குடையவன் 5மிடத்திலிருந்து சனி, சுக்கிரன் இவர்களுடனும் கூடி காரகனும் 8லிருந்தால் பிரேத சாபத்தால் புத்திரநாசமுண்டாகும்.

तद्दोषस्य प्रशान्त्यर्थं विष्णुश्राद्धं च कारयेत् ।
रुद्रस्थानं प्रकुर्वीत प्रेतमूर्तिं च दापयेत् ॥ २६२ ॥

धेनुं रजतपात्रं च तिलशैलं प्रदापयेत् ।
एतस्मिन्कर्मणि कृते शापमोक्षः प्रजायते ।
पुत्रप्राप्तिर्भवेत्तेन विप्रेभ्यो दक्षिणां दिशेत् ॥ २६३ ॥

பிரேத சாபதோஷ பரிஹாரம் செய்யும் முறை.—(262) அந்தத் தோஷம் விலகுவதற்கு வேண்டி விஷ்ணு சிராத்தத்தைச் செய்வதுடன், ருத்திராலயத்தையும் கட்டி பிரேத மூர்த்தியைத் தயார்செய்து அதையும் தானஞ் செய்யவேண்டும். (263) அத்துடன் பசுவையும், வெள்ளிப் பாத்திரத்தையும், திலபர்வதத்தையும் தானம் செய்யவேண்டும். இக்கர்மத்தைச் செய்தால் சாபமோக்ஷமுண்டாவதுடன் அதனுல் புத்திரப் பிராப்த்தியு முண்டாகும். பிராம்மணர்களுக்குத் தக்ஷிணையையும் கொடுக்கவேண்டும்.

குறிப்பு—இந்த ஸாராவளியில் புத்திரபாவபலன் சொல்லியவிடத்தில் 165-வது சுலோகம் தொடங்கி 263-வது சுலோகம் வரையுள்ள 99 சுலோகங்களால் வெகு விரிவாக புத்திரதோஷமுண்டாகும் முறையும், அதன் பரிஹாரஞ் செய்யும் முறையும் சொல்லியிருப்பதையொட்டி நாமும் அவற்றை அப்படியே மொழிபெயர்த்து எழுதியிருக்கிறோம். ஆயினும் அவரவரும் அந்தந்தப் பலன்களை தங்கள் தங்கள் அனுபவத்திற்குத் தக்கபடி பொருத்திப் பார்த்துக் கொள்ளவும். மேலும் திலபர்வதம், தசதேனு, முதலிய விஷயத்தைக் கர்மவிபாகம் என்ற புஸ்தகமூலம் கண்டு கொள்ளவும்.

ஸாராவளியிற் சொல்லிய ஐந்தாவது புத்திரபாவபலன் முற்றிற்று.

## பராசரஸம்ஹிதையிற்சொல்லிய புத்திரபாவபலன்.

षडादित्रयसंस्थे तु सुताधीशेत्वपुत्रता ।
केन्द्रत्रिकोणसंस्थे तु पुत्रलाभाभिसंभवः ॥ १ ॥

सत्पुत्रलाभः सुतपे सुरेज्ये शुभेषु गेहेषु गते च भानौ ।
एकस्स्थिरस्स्यात्सुत एक एव स्थितश्शुभः केन्द्रनवात्मजस्थे ॥ २ ॥

पितापि चिन्त्यो नवमे सुतर्क्षे चैवं विधं चिन्तनमूहनीयम् ।
क्षेत्रस्य कारको भौमः कर्मस्थानेप्ययं विधिः ॥ ३ ॥

புத்திரலாப யோகம்.—(1) 5க் குடையவன் 6, 8, 12 மிடங்களிலிருந்தால் புத்திரனில்லை. கேந்திரத்திரிகோணத்திலிருந்தாலோ புத்திரலாப முண்டாகும். (2) குரு 5க் குடையவனுகியும், சூரியன் சுபர் வீடுகளிலுமிருந்தால் ஸத்புத்திரலாப முண்டாகும். கேந்திரம், 9, 5மிடம் இவைகளில் ஒரே சுபனிருந்தால் ஸ்திரனுன ஒரே புத்திரனுண்டாவான். (3) 9மிடத்தில் பிதாவைப் பற்றிய சிந்தையைச் செய்வதுபோல 5மிடத்திலும் இம்மாதிரியான சிந்தனத்தைச் செய்யவேண்டும். பூமிக்குக் காரகன் செவ்வாய். 10மிடத்திலும் இவ்விதி பொருந்தும்.

अस्तंगते पंचमेशे पापाक्रान्ते च दुर्बले ।
षष्ठेनीचे सुताधीशे काकवंध्या विशेषतः ॥ ४ ॥

षष्ठस्थाने सुताधीशे लग्नेशे कुजवेश्मनि ।
म्रियते प्रथमापत्यं काकवंध्यात्वमाप्नुयात् ॥ ५ ॥

सुताधीशोऽहि नीचस्थष्षडादित्रयसंस्थितः ।
काकवंध्या भवेन्नारी सुते केतुबुधौ यदि ॥ ६ ॥

सुतेशो नीचगो यस्य सुतस्थानं न पश्यति ।
तत्र सौरिबुधौ स्यातां काकवंध्यात्वमाप्नुयात् ॥ ७ ॥

காகவந்த்யாத்வ யோகம்.—(4) 5க் குடையவன் அஸ்தங்கதனுகி பாபருடன் கூடி துர்ப்பலனுகவு மிருந்தாலும், 5க் குடையவன் அஸ்தங்கதனுகி பாபருடன் கூடி துர்ப்பலனுகவுமிருந்தாலும், 5க் குடையவன் நீசனுகி 6மிடத்திலிருந்தாலும், காகவந்த்யாத்வத்தை யடைவான். (5) 6மிடத்தில் 5க் குடையவனும், லக்கினேசன் செவ்வாய் வீட்டிலும் இருந்தால் முதற் பிறந்த

பிள்ளை இறந்து காகவந்தியாத்வத்தை யடைகிறான். (6) 5க்குடையவன் நீசனாகி 6, 8, 12லிருந்தாலும், 5ல் கேது, புதன் இவர்களிருந்தாலும் இவனது பத்தினியானவள் காகவந்தியாத்வத்தை யடைகிறாள். (7) 5க் குடையவன் நீசனாகி 5மிடத்தைப் பார்க்காமலுமிருந்து 5ல் சனி, புதன் இவர்களுமிருந்தால் காகவந்த்யாத்வத்தை யடைகிறான்.

भाग्येशो मूर्तिवर्ती च सुतेशो नीचगो यदि ।
सुते केतुबुधौ स्यातां सुतं कष्टाद्विनिर्दिशेत् ॥ ८ ॥

षडादित्रयसंस्थोऽपि नीचो वा प्यरिसंस्थितः ।
पापाक्रान्ते सुतस्थाने पुत्रं कष्टाद्विनिर्दिशेत् ॥ ९ ॥

கஷ்டத்தால் புத்திரனுண்டாகும் யோகம்.—(8) 9க் குடையவன் லக்கினத்திலும் 5க் குடையவன் நீசத்திலும் இருந்து 5ல் கேது புதன் இவர்களிருந்தால் வெகு கஷ்டத்தை முன்னிட்டுப் புத்திரனுண்டாவனெனச் சொல்லவேண்டும். (9) (5க் குடையவன்) 6, 8, 12லோ, நீசத்திலோ, சத்துரு வீட்டிலோ, இருந்து 5 மிடம் பாபாக்கிராந்தமாகவு மாகுமானால் வெகு கஷ்டத்தை முன்னிட்டுப் புத்திரோத்பத்தியைச் சொல்லவேண்டும்.

पुत्रस्थाने बुधक्षेत्रे मन्दक्षेत्रेऽथवा पुनः ।
मन्द मान्दियुते दृष्टे तदा दत्तादयस्सुताः ॥ १० ॥

रविचन्द्रौ यदैकस्थावेकांशकसमन्वितौ ।
त्रिमातृभिरसौ पुत्रो द्विपित्राऽपि च पोषितः ॥ ११ ॥

पंचमे षड्ग्रहैर्युक्ते तदीशे व्ययराशिगे ।
लग्नेशो दुर्बलो यस्य दत्तपुत्रो भवेदयम् ॥ १२ ॥

தத்த புத்திர யோகம்.—(10) 5மிடம், புதன் வீடாகவோ, சனி வீடாகவோ ஆகி சனி, அல்லது மாந்தி (குளிகன்) இவர்களின் சேர்க்கை அல்லது பார்வை இவற்றையும் அடைந்தால் தத்த புத்திராதிகளுண்டாவர். (11) சூரிய சந்திரர்கள் ஒரே ராசியில் ஒரே நவாம்சத்திலுமிருந்தாரானால் இந்தப் புத்திரன் 3 மாதாவினாலும், இரண்டு பிதாவினாலும் போஷிக்கப்படுவான். (12) 5மிடத்தில் 6 கிரஹங்களிருந்து 5க் குடையவன் 12மிடத்

தையு மடைந்து லக்கினேசன் துர்ப்பலனுயுமானுல் இவன் தத்த புத்திரனுள்ளவனுயாகிறுன்.

सुतभवने भृगुजीवसौम्यनाथैर्बलसहितैरवलोकिते युते वा ।
बहुसुतजननं वदन्ति सन्तस्सुतभवनेशबलेन चिन्त्यमेतत् ॥ १३ ॥

பஹு புத்திரலாப யோகம்.—(13) 5மிடமானது சுக்கிரனையோ, குருவையோ, புதனையோ நாதனுகவுடையதாகி பலம் பெற்ற அவர்களின் பார்வையையோ, சேர்க்கையையோ, அடையுமானுல் வெகு புத்திர ஜனனத்தை ஸாதுக்கள் சொல்லுகின்றனர். 5க் குடையவனின் வலுவைக் கொண்டும் இதைச் சிந்தித்தறிய வேண்டும்.

सुतेशे शशियुक्ते च स्त्रीराश्यंशगतेऽपि च ।
तथैव कन्यकालाभं प्रवदेन्मतिमान्नरः ॥ १४ ॥

பஹுபுத்திரீலாப யோகம்.—(14) 5க் குடையவன் சந்திரனுடன் கூடினுலும், ஸ்திரீராசியிலோ, ஸ்திரீநவாம்சத்திலோ இருந்தாலும் அவ்விதமே கன்னிகாலாபத்தைப் புத்திமானுயுள்ளவன் சொல்லவேண்டும்.

सुतेशे नरराशिस्थे राहुणा सहितश्शशी ।
पुत्रस्थानं गते मन्दे परजातं वदेच्छिशुम् ॥ १५ ॥

सुतेशे राहुसंयुक्ते सुतस्थानं समाश्रिते ।
न वीक्षतेन्दुगुरुणा परजातो भवेन्नरः ॥ १६ ॥

न लग्नमिन्दुं च गुरुर्निरीक्षते नवा शशांकं रविणा समागतम् ।
सपापकार्केण युते नवांशके परेण जातं प्रवदन्ति निश्चितम् ॥ १७ ॥

लग्नाद्द्वादशगे चन्द्रे चन्द्रादष्टमगे गुरौ ।
पापग्रहेण संदृष्टे चान्यबीजं न संशयः ॥ १८ ॥

பிறர்க்குப் பிறவியை யறியும் யோகம்.—(15) 5க் குடையவன் புருஷராசியிலிருந்து, சந்திரன் ராஹுவுடன் கூடியுமிருந்து, 5ல் சனியுமிருந்தால் பிறர்க்குப்பிறந்த குழந்தையென்றறிய வேண்டும். (16) 5க் குடையவன் ராஹுவுடன் கூடி 5மிடத்திலிருந்து சந்திரன் குரு இவர்களால் பார்க்கப்பட்டால் அதுபோழ்து பிறந்தமனிதன் பிறர்க்குப் பிறந்தவனுயாவான். (17)

* லக்கினத்தையும், சந்திரனையும் குருபார்க்காவிட்டாலும், அல்லது சூரியனுடன் சேர்ந்து சந்திரனைக் குருபார்க்காவிட்டாலும், ஜன்மநவாம்சமானது பாபியுடன் கூடின சூரியனுடன் கூடினுலும் அது போழ்து பிறந்தவனைப் பிறர்க்குப் பிறந்தவனென நிஸ்சயமாகச் சொல்லவேண்டும். (18) லக்கினத்திற்கு 12ல் சந்திரனும், சந்திரனுக்கு 8ல் குருவுமிருந்து பாபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டால் பிரர் பீஜமென்பதில் ஸந்தேஹமில்லை.

पुत्रस्थानाधिपे स्वोच्चे लग्नाच्चेद्द्वित्रिकोणगे ।
गुरुणासंयुते दृष्टे पुत्रभाग्यमुपैति सः ॥ १९ ॥
त्रिचतुष्पापसंयुक्ते पुत्रस्थानाधिपे तथा ।
सुतेशे नाशराशिस्थे नीचजातो भवेच्छिशुः ॥ २० ॥

புத்திர பாக்கிய யோகம்.—(19) புத்திரஸ்தானுதிபன் உச்சனுகி லக்கினத்திற்கு 2மிடத்திலோ, 5மிடத்திலோ, 9மிடத்திலோ இருந்து குருவின் சேர்க்கை, அல்லது பார்வை இவற்றையடைந்தால் அந்த ஜாதகன் புத்திர பாக்கியத்தையடைகிறுன். (20) 5மிடத்திற்குடையவன் 3, 4பாபர்களுடன் கூடி 5மிடத்திற்குடையவன் 8 மிடத்திலு மிருந்தால் சிசுவானது நீசனுக்குப் பிறந்ததாகவாகும்.

पुत्रस्थानं गते जीवे तदीशे भृगुसंयुते ।
द्वात्रिंशे च त्रयस्त्रिंशे वत्सरे पुत्रलाभकृत् ॥ २१ ॥
सुतेशे केन्द्रभावस्थे कारकेण समन्विते ।
षट्त्रिंशे त्रिंशदब्दे च पुत्रोत्पत्तिं विनिर्दिशेत् ॥ २२ ॥
लग्नाद्भाग्यंगते जीवे जीवाद्भाग्यंगते भृगौ ।
लग्नेशे भृगुसंयुक्ते चत्वारिंशे सुतं लभेत् ॥ २३ ॥

புத்திரலாப காலம்.—(21) குரு புத்திரஸ்தானத்திலும் 5க்குடையவன் சுக்கிரனுடனும் கூடியுமிருந்தால் 32-வது வயதிலோ, 33-வது வயதிலோ புத்திரலாபமுண்டாகும். (22) 5மிடத்ததிபன் கேந்திரத்தில் காரகனுடன் சேர்ந்திருந்தால் 36-வது வயதிலோ,

* இந்த சுலோகத்தின் விசேஷமான பொருளை நமது பிருஹத்ஜாதகம் 5-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தின் உரையில் பாக்கக்காண்க.

30-வது வயதிலோ புத்திரோத்பத்தியைச் சொல்லவேண்டும். (23) லக்கினத்திற்கு 9ல் குருவும், குருவுக்கு 9ல் சுக்கிரனுமிருந்து லக்கினேசன் சுக்கிரனுடனும் கூடினால் 40-வது வயதில் புத்திரனை யடைகிறான்.

पुत्रस्थानं गते राहौ तदीशे पापसंयुते ।
नीचराशिगते जीवे द्वात्रिंशे पुत्रमृत्युदः ॥ २४ ॥

जीवात्पञ्चमगे पापे लग्नात्पुत्रं गतेऽपि च ।
षड्विंशे च त्रयस्त्रिंशे चत्वारिंशे सुतक्षयः ॥ २५ ॥
लग्ने मान्दिसमायुक्ते लग्नेशे नीचराशिगे ।
षट्पंचाशद्वत्सरेषु पुत्रशोकसमाकुलः ।
चतुर्थे पापसंयुक्ते षष्ठे पापसमन्विते ॥ २६ ॥

புத்திர நாசகாலம்.—(24) ராஹு 5மிடத்திலும், 5க்குடையவன் பாபருடன் கூடியும், குரு நீசராசியிலுமிருந்தால் 32-வது வயதில் புத்திர நாசமுண்டாகும். (25) பாபக் கிரஹமானது குருவிருக்கும் ராசிக்கு 5 மிடத்திலோ அல்லது லக்கினத்திற்கு 5 மிடத்திலோ இருந்தால் 26-வது வயதிலோ, 33-வது வயதிலோ, 40-வது வயதிலோ புத்திரநாசமுண்டாகும். (26) லக்கினத்தில் மாந்தியும், லக்கினேசன் நீசராசியிலுமிருந்தால் 56-வது வயதில் புத்திர சோகமுள்ளவனுயாவான். 4மிடத்தில் பாபரிருந்தாலும், 6மிடத்தில் பாபரிருந்தாலும் புத்திர சோகமுண்டாகும்.

सुतेशे परमोच्चस्थे लग्नेशेन समन्विते ।
कारके शुभसंयुक्ते दशसंख्यास्तु सूनवः ॥ २७ ॥

परमोच्चगते जीवे धनेशे राहुसंयुते ।
भाग्येशे भाग्यसंयुक्ते संख्याता नव सूनवः ॥ २८ ॥

पुत्राद्भाग्यं गते जीवे सुतेशे बलसंयुते ।
धनेशे कर्मराशिस्थे वसुसंख्यास्तु सूनवः ॥ २९ ॥

पंचमात्पंचमे मन्दे सुतस्थे च तदीश्वरे ।
सूनवस्सप्तसंख्याश्च द्वौगर्भौ यमलौ वदेत् ॥ ३० ॥

वित्तेशे पंचमस्थे च सुतस्थे पंचमाधिपे ।
षट्संख्याकसुतप्राप्तिस्तेषां च त्रिप्रजामृतिः ॥ ३१ ॥

लग्नात्पंचमगे जीवे जीवात्पंचमगे शनौ ।
मन्दात्पंचमगे राहौ पुत्रमेकं विनिर्दिशेत् ॥ ३२ ॥

पंचमे पापसंयुक्ते गुरोः पंचमगे शनौ ।
कलत्रान्तरेपुत्रलाभं कलत्रत्रयभाग्भवेत् ॥ ३३ ॥

पंचमे भौमसंयुक्ते लग्नेशे धनसंगते ।
जातं जातं विनश्येच्च न दीर्घायुस्सुतो भवेत् ॥ ३४ ॥

புத்திரனின் எண்ணை யறிதல்.—(27) 5க் குடையவன் பரமோச்ச பாகத்திலிருந்து லக்கினாதிபனுடன் கூடியும், புத்திரகாரகனான குரு சுபக்கிரஹத்துடன் கூடியுமிருந்தால் 10 புத்திரர்களுண்டாவர். (28) குரு பரமோச்ச பாகத்திலும், 2க் குடையவன் ராஹுவுடன் கூடியும், 9க் குடையவன் 9லு மிருந்தால் 9 பிள்ளைகள் பிறப்பர். (29) குரு 5 மிடத்திற்கு 9 மிடத்திலும், 5க் குடையவன் பலம் பெற்றும், 2க் குடையவன் 10மிடத்திலு மிருந்தால் 8 புத்திரர்கள் பிறப்பர். (30) 5மிடத்திற்கு 5மிடத்தில் சனியும், 5க் குடையவன் 5லுமிருந்தால் 7 பிள்ளைகள் பிறப்பர். அவற்றில் இரண்டு கர்ப்பம் இரட்டையாகவிருக்கும். (31) 2க் குடையவன் 5லும், 5க் குடையவன் 2 மிடத்திலு மிருந்தால் 6 பிள்ளைகள் பிறப்பர். அவர்களுள் 3 பிரஜை இறந்து விடும். (32) லக்கினத்திற்கு 5மிடத்தில் குருவும், குருவுக்கு 5மிடத்தில் சனியும், சனிக்கு 5மிடத்தில் ராஹுவு மிருந்தால் ஒருபிள்ளை தானுண்டாகும். (33) 5மிடத்தில் பாபரிருந்தாலும், குருவுக்கு 5மிடத்தில் சனியிருந்தாலும் வேறு களத்திரத்தினிடம் புத்திரலாபமுண்டாகும். அத்துடன் 3 களத்திரத்தையு மடைவான். (34) 5 மிடத்தில் செவ்வாயும், லக்கினேசன் 2 மிடத்திலுமிருந்தால் பிறக்கப் பிறக்க இறந்துவிடும். நீண்டவாயுளுள்ள புத்திரனுண்டாகமாட்டான்.

குறிப்பு—இந்தப் பராசர ஸம்ஹிதையில் புத்திரபாவவிஷயமாக உள்ள சுலோகங்கள் பெரும்பாலும் ஸாராவளியிலும் காணப் படுகின்றனவாயினும் இதுவரை மொழிபெயர்த்தெழுதியிருப்பதை யொட்டி பராசர ஸம்ஹிதையிலும் காணப்படுகின்ற

இந்தச் சலோகங்களையும் இடையில் விட்டுவிட மனமில்லாமல் மொழிபெயர்த்தெழுதி வெளியிட்டிருக்கிறோம்.

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 5-வது பாவபலன் முற்றிற்று.

## 5க்குடையவன் லக்கினாதி பாவங்களிலிருப்பதன் பலன்கள்.

सुतेशः पंचमे यस्य तस्य पुत्रो न जीवति ।
क्षणिकः क्रूरभाषी च धार्मिको मतिमान्भवेत् ॥ १ ॥

सुतेशे षष्ठरिःफस्थे पुत्रश्शत्रुत्वमाप्नुयात् ।
मृतापत्यो ग्राह्यपुत्रो धनपुत्रोऽथवा भवेत् ॥ २ ॥

सुतेशे कामगे मानी सर्वधर्मसमन्वितः ।
तुङ्गयष्टितनुस्वामी भक्तियुक्तोऽप्यपुत्रवान् ॥ ३ ॥

सुतेशे चायुषि धने बहुपुत्रो न संशयः ।
कासश्वासी सुखी न स्यात्क्रोधयुक्तो धनान्वितः ॥ ४ ॥

सुतेशे नवमे धर्मे पुत्रो भूपसमो भवेत् ।
अथवा ग्रन्थकर्ता वा विख्यातः कुलदीपकः ॥ ५ ॥

सुतेशे लाभभवने पण्डितो जनवल्लभः ।
ग्रंथकर्ता महादक्षो बहुपुत्रधनान्वितः ॥ ६ ॥

सुतेशे लग्नसहजे मायावी पिशुनो महान् ।
लोष्टं तु दत्तवान्नैव किंचिद्द्रव्यस्य का कथा ॥ ७ ॥

सुतेशे मातृभवने चिरं मातृसुखं भवेत् ।
लक्ष्मीयुक्तस्सुबुद्धिश्च सचिवोऽप्यथवा गुरुः ॥ ८ ॥

(1) 5க் குடையவன் 5மிடத்திலிருந்தால் அவனது பிள்ளை ஜீவிக்கமாட்டான் அத்துடன் க்ஷண சித்தமுள்ளவனாயும், கொடுமையாய்ப் பேசுகிறவனாயும், தர்மம் செய்பவனாயும், புத்திசாலியாகவுமிருப்பான். (2) 5க் குடையவன் 6 மிடத்திலிருந்தால் பிள்ளை சத்துருவாக வாவான். அல்லது பிறக்கும் பொழுதே உயிரற்ற புத்திரனை யுடையவனாகவேனா, தத்த புத்திரனுள்ளவனாகவோ ஆவான். (3) 5க் குடையவன் 7 மிடத்திலிருந்தால் மானியாகவும், எல்லாவிதமான தர்மங்களுடன் கூடினவனாகவும்

உயரமான கழிபோன்ற சரீரத்தையுடையவனாகவும், தைவபக்தியுள்ளவனாயினும் பிள்ளை யற்றவனாகவுமிருப்பான். (4) 5க்குடையவன் 8 மிடத்திலோ 2மிடத்திலோ இருந்தால் அனேகம் புத்திரர்களுடன் கூடினவனாகவும், காஸஸ்வாஸரோகமுள்ளவனாகவும், ஸுகமற்றவனாகவும், கோபமுள்ளவனாகவும், தனத்துடன் கூடியவனாகவு மிருப்பான். (5) 5க் குடையவன் 9மிடத்திலோ, 10 மிடத்திலோ இருந்தால் அவனது பிள்ளை அரசனுக் கொப்பானவனாக விருப்பான். அல்லது பற்பலக்கிரந்தங்களைச் செய்பவனாகவும், கீர்த்திவாய்ந்தவனாகவும் வம்சத்திற்கு மேன்மையை உண்டாக்குபவனாகவு மிருப்பான். (6) 5க்குடையவன் 11 மிடத்திலிருந்தால் பண்டிதனாகவும் ஜனங்களுக்குப் பிடித்தவனாகவும், கிரந்தங்களைச் செய்பவனாகவும், மிகுந்தஸாமர்த்யமுள்ளவனாகவும், அனேகம் புத்திரன் தனம் இவற்றுடன் கூடினவனாகவு மிருப்பான். (7) 5க் குடையவன் லக்கினத்திலோ, 3 மிடத்திலோ இருந்தால் வஞ்சகனாகவும், கோட்சொல்லுபவனாகவு மிருப்பான். அவன் அற்பவஸ்துவைக்கூடப் பிறருக்குக் கொடுக்கமாட்டான் என்றால் பொருள்கொடுக்கும் விஷயமாகச் சொல்லவேண்டுமோ! அதாவது: மிகவும் கிருபணனாகவிருப்பான். (8) 5க்குடையவன் 4மிடத்திலிருந்தால் வெகுகாலம் தாய்மூலமுண்டாகும் ஸுகமுள்ளவனா யிருப்பான். மேலும், லக்ஷ்மீயுடன் கூடினவனாகவும், நல்லபுத்தியுள்ளவனாகவு மிருப்பான். மேலும், அவன் மந்திரியாகவோ, அல்லது லோகாசாரியனாகவோ இருப்பான்.

பராசரஸம்ஹிதையிற் சொல்லிய 5க் குடையவன் லக்கினாதி பாவங்களிலிருப்பதன் மூலம் காணவேண்டிய பலன் முற்றிற்று.

## ஜாதகதத்துவத்திற் சொல்லிய ஐந்தாம் பாவபலன்.

सुतर्क्षे शुभे शुभदृष्टयुते बुद्धिमान् ॥ १ ॥ सुतेशे तुङ्गे वा शुभान्तरे बुद्धिमान् ॥ २ ॥ गुरौ केन्द्रकोणे बुद्धिमान् ॥ ३ ॥ शुभभे सुतेशे सुते जीवे बुद्धिमान् ॥ ४ ॥ ज्ञे सुते वा सुतेशे बलिनि केन्द्रे वा बुद्धिमान् ॥ ५ ॥

புத்திமானாயாகும் யோகம்.—(1) 5மிடம் சுபக்கிரஹத்தின் வீடாகவோ, சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ

இருந்தால் புத்திசாலியாக வாவான். (2) 5க் குடையவன் உச்சத்திலோ, சுபர்களின் நடுவிலோ இருந்தால் புத்திசாலியாக விருப்பான். (3) குரு கேந்திரத்திலோ, 1. 5, 9மிடத்திலோ இருந்தால் புத்திசாலியாக விருப்பான். (4) 5க் குடையவன் சுபராசியிலும், 5ல் குருவுமிருந்தால் புத்திசாலியாக விருப்பான். (5) 5ல் புதனிருந்தாலும், 5க் குடையவன் பலம் பெற்று கேந்திரத்திலிருந்தாலும் புத்திசாலியாக வாவான்.

**पुत्रेशे केन्द्रे शुभान्विते धारणादिपटुः॥ ६ ॥ सुतेशे कारके मृद्वंशादियुते शुभदृग्युते धारणादिपटुः॥ ७॥ सुतपे गोपुरादौ धारणादिपटुः॥८॥**

மறதியற்றவனுயாகும் யோகம்.—(6) 5க் குடையவன் கேந்திரத்தில் சுபக்கிரஹத்துடன் கூடி இருந்தால் தாரணை (மறதியற்றிருத்தல்) முதலியவற்றில் ஸமர்த்தனுயாவான். (7) 5க்குடையவனோ, காரகனோ, மிருத்வம்சாதிகளிலிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் தாரணை முதலியவற்றில் சமர்த்தனுயாவான். (8) 5க் குடையவன் கோபுராத்யம்சத்திலிருந்தாலும் தாரணை முதலியவற்றில் ஸமர்த்தனுயாவான்.

**सुतकारके गोपुरादौ परेङ्गितज्ञो मेधावी ॥ ९ ॥ लग्नकोणे चन्द्रार्कौ चञ्चलधीः ॥ १० ॥ केन्द्रे जीवे चञ्चलधीः ॥ ११ ॥ ज्ञेन्द्वारा बलिग्रहदृष्टाः क्षिप्रोत्तरदानशीलः ॥ १२ ॥ सौम्येऽर्थेऽबले पापदृष्टे चलचित्तः॥ १३ ॥ ससोत्थपे ज्ञे सात्विकः ॥ १४ ॥ व्ययेशेऽङ्गे सुवाक् ॥ १५ ॥ लग्ने चन्द्रे मन्दारदृष्टे हीनधीः ॥ १६ ॥ सुतेशे क्रूरषष्ट्यंशे हीनधीः॥ १७ ॥ मन्दाराकश्चिन्द्रं पश्यन्ति मौर्ख्यकराः ॥ १८ ॥ त्रिके चन्द्रे शुक्रदृष्टे विस्मयशीलः ॥ १९ ॥ सपापे सुतपे विस्मयशीलः ॥ २० ॥ धीकारके सपापे वा क्रूरषष्ट्यंशे विस्मयशीलः ॥ २१ ॥**

பொதுவில் புத்தியைப்பற்றிய பலன்கள்.—(9) 5ம் பாவகாரகன் கோபுராத்யம்சத்தி லிருந்தால் பிறருடைய இங்கிதத்தை (குறிப்பை) அறிபவனுகவும், மேதாவியாகவு மிருப்பான். (10) லக்கினத்திலோ, 5, 9 மிடத்திலோ சந்திரன் ஸூரியன் இவர்களிருந்தால் சஞ்சலமான புத்தியை யுடையவனுக வாவான். (11) கேந்திரத்தில் குருவிருந்தாலும் நிலையற்ற புத்தியை யுடையவனுக

விருப்பான். (12) புதன், சந்திரன், செவ்வாய் இவர்கள் பலமுள்ள கிரஹத்தால் பார்க்கப்பட்டால் சீக்கிரமாய் பதில் கொடுப்பதில் ஸாமர்த்தியமுள்ளவனுவான். (13) 2 மிடத்தில் புதனிருந்து பலமற்றவனுகி பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் சஞ்சலமான சித்தமுள்ளவனுவான். (14) புதன் 3க் குடையவனுடன் கூடினுல் ஸத்வகுணம் நிறைந்தவனுவான். (15) 12க் குடையவன் லக்கினத்திலிருந்தால் நல்லவாக்குள்ளவனுவான். (16) லக்கினத்தில் சந்திரனிருந்து சனி, செவ்வாய் இவர்களால் பார்க்கப்பட்டால் தாழ்மையான புத்தியுள்ளவனுவான். (17) 5க்குடையவன் குரூரமான ஷஷ்ட்யம்சத்திலிருந்தால் தாழ்ந்த புத்தியுள்ளவனுவான். (18) சனி, செவ்வாய், சூரியன் இவர்கள் சந்திரனைப் பார்த்தால் ஜாதகனை மூர்க்கனுயாக்குவர். (19) 6, 8, 12ல் சந்திரனிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஆச்சரியமடையும் ஸ்வபாவமுள்ளவனுவான். (20) 5க் குடையவன் பாபக்கிரஹத்துடன் கூடினுல் ஆச்சரிய மடையும் ஸ்வபாவமுள்ளவனு யிருப்பான். (21) புத்திகாரகன் பாபக்கிரஹத்துடன் சேர்ந்தோ, குரூர ஷஷ்டியம்சத்திலோ இருந்தால் ஆச்சரியமடையும் ஸ்வபாவமுள்ளவனுவான்.

**केन्द्रगा मन्देन्दुगुलिका जडः ॥ २२ ॥ धने गुलिकार्कौ पापदृष्टौ वा, सार्कजे सोत्थपे जडः ॥ २३ ॥ सपापे धनेशे खे सभाजडः ॥ २४ ॥ सतमसि सोत्थपे जडः ॥ २५ ॥ सुते मन्दे लग्नेशे मन्ददृष्टे सुतेशे सपापे जडः ॥ २६ ॥ गुलिकार्कजौ सुते शुभयोगहीने जडः ॥ २७ ॥ सुते जीवे मेधानाशः ॥ २८ ॥**

ஜடனுகும் யோகம்—(22) சனி, சந்திரன், குளிகன், இவர்கள் கேந்திரத்திலிருந்தால் ஜடனுவான். (23) 2 மிடத்தில் குளிகன், ஸூரியன் இவர்களிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், 3க் குடையவன் சனியுடன் கூடினுலும் ஜடனுகவிருப்பான். (24) 2க் குடையவன் பாபருடன் கூடி 10மிடத்திலிருந்தால் ஸபையில் ஜடனுவான். (ஸபையில் எவ்விஷயத்தையும் பேசத் திறமையற்றவனுக விருப்பான் என்பது கருத்து.) (25) 3க் குடையவன் ராஹுவுடன் கூடினுல் ஜாதகன் ஜடனுக விருப்

பான். (26) 5ல் சனியும், லக்கினாதிபதி சனியினால் பார்க்கப்பட்டும், 5க்குடையவன் பாபருடன் கூடியுமிருந்தால் ஜடனாக விருப்பான். (27) குளிகன் சனி இவர்கள் 5லிருந்து சுபக்கிரஹத்தின் சேர்க்கை யற்றிருந்தால் ஜடனாக விருப்பான். (28) 5மிடத்தில் குருவிருந்தால் மேதைக்கு (அறிந்த விஷயத்தை மறவாதிருத்தலுக்கு) நாசமுண்டாகும்.

अंशे केतौ शुक्रमात्रदृष्टे याज्ञिकः ॥ २९ ॥ अंशात्कोणे पापद्वये मान्त्रिकः ॥ ३० ॥ अंशात्कोणे पापद्वये पापदृष्टे भूतादिनिग्रहकर्ता ॥ ३१ ॥ अंशात्कोणे पापे शुभदृष्टेऽनुग्राहकः ॥ ३२ ॥ अंशे ज्ञेन्दुशुक्रदृष्टे वा धनेशे द्यूने भिषक् ॥ ३३ ॥ शुक्रेन्दुदृष्टेंऽशे रसवादी ॥ ३४ ॥ अंशात्सुते सपापौ चन्द्रेज्यौ ग्रन्थकृत् ॥ ३५ ॥ अर्थसुतयोरंशाज्जीवे वैयाकरणः ॥ ३६ ॥ धने सोत्थे सुतेंशात् ज्ञेज्यौ मीमांसकः ॥ ३७ ॥ अंशात्सुतार्थसोत्थे जीवारौ तार्किकः ॥ ३८ ॥ अंशाद्धने पुत्रे सोत्थे जीवेन्दू सांख्यज्ञः॥ ३९ ॥ अंशाद्धने पुत्रे सोत्थे जीवार्कौ वेदान्तसङ्गीतज्ञः ॥ ४० ॥

✓ யாக்ஞிகன், மாந்திரிகன், வைத்தியன், ரஸவாதம் செய்பவன், கிரந்தமெழுதுபவன், இலக்கணமறிந்தவன், மீமாம்ஸை யறிந்தவன், தார்க்கிகன், ஸாங்கியமறிந்தவன், ஸங்கீதமறிந்தவன் இவர்களாயாகும் யோகம்.—(29) நவாம்ச லக்கினத்தில் கேதுவிருந்து சுக்கிரனால் மட்டும் பார்க்கப்பட்டால் யாகம் செய்து வைப்பவனாகவோ, தானே யாகஞ் செய்பவனாகவோ இருப்பான். (30) நவாம்ச லக்கினத்திற்கு 5, 9மிடங்களில் 2 பாபர்களிருந்தால் மாந்திரிகனாக விருப்பான். (31) நவாம்ச லக்கினத்திற்கு 5, 9 மிடத்தில் 2 பாபர்களிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பூதாதிகளை நிக்கிரஹம் செய்பவனாக விருப்பான். (பிசாசங்களை ஓட்டுபவனாயாவான் என்று கருத்து.) (32) நவாம்ச லக்கினத்திற்கு 5, 9மிடத்தில் பாபக்கிரஹமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பிறருக்கு அனுக்கிரஹம் செய்பவனாக விருப்பான். (33) நவாம்ச லக்கினம், புதன் சந்திரன் சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், 2க் குடையவன் 7மிடத்திலிருந்தாலும் வைத்தியனாக விருப்பான். (34) நவாம்ச லக்கினம், சுக்கிரன் சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டால் ரஸவா

தம் செய்பவனுக விருப்பான். (35) நவாம்சலக்கினத்திற்கு 5மி டத்தில் பாபர்களுடன் கூடின சந்திரன் குரு இவர்களிருந்தால் கிரந்தம் எழுதுபவனுவான். (36) நவாம்ச லக்கினத்திற்கு 2, 5மிடங்களில் குருவிருந்தால் வியாகரண (இலக்கண) மறிந்தவனுக வாவான். (37) நவாம்சலக்கினத்திற்கு 2,3,5மிடங்களில் புதன், குரு இவர்களிருந்தால் மீமாம்ஸா சாஸ்திரமறிந்த வனுவான். (38) நவாம்ச லக்கினத்திற்கு 5, 2, 3மிடங்களில் குரு, செவ்வாய் இவர்களிருந்தால் தர்க்க சாஸ்திர மறிந்தவனுவான். (39 நவாம்சலக்கினத்திற்கு 2, 3, 5மிடங்களில் குரு சந்திரன் இவர் களிருந்தால் ஸாங்கிய சாஸ்திர மறிந்த வனுவான். (40) நவாம்ச லக்கினத்திற்கு 2, 3, 5மிடங்களில் குரு, ஸூரியன் இவர்களிருந்தால் வேதாந்தம், ஸங்கீதம் இவை யறிந்தவனுக விருப்பான்.

**अंशात्सोत्थे सुतेऽर्थे केतुजीवौ गणितज्ञः ॥ ४१ ॥ धने भौमे शुभ-दृष्टे गणितज्ञः ॥४२॥ चन्द्रारौ युतौ ज्ञदृष्टौ केन्द्रे बुधे वा कुजे गणितज्ञः॥४३॥ बल्यष्टमेशे ज्ञे गुरौ लग्ने अष्टमे मन्दे गणितज्ञः ॥ ४४ ॥ जीवे केन्द्रकोणे बलिनि शुक्रे ज्ञेऽर्थे गणितज्ञः ॥ ४५ ॥**

கணிதமறிந்தவனு யாகுதல்.—(41) நவாம்ச லக்கினத்திற்கு 3, 5, 2மிடங்களில் கேது, குரு, இவர்களிருந்தால் கணிதமறிந்த வனுவான். (42) 2 மிடத்தில் செவ்வாயிருந்து அவன் சுபக் கிரஹத்தால் பார்க்கப்பட்டால் கணிதமறிந்தவனுவான். (43) சந்திரன், செவ்வாய் இவர்கள் சேர்ந்திருந்து புதனுல் பார்க்கப் பட்டாலும், கேந்திரத்தில் புதனே செவ்வாயோ இருந்தாலும் கணித மறிந்தவனுவான். (44) பலம் பெற்றும் 8க் குடையவ னுகவுமான புதன் குரு இவர்கள் லக்கினத்திலும், 8 மிடத்தில் சனியுமிருந்தால் கணிதமறிந்த வனுவான். (45) குரு பலம் பெற்று கேந்திரத்திலோ, 1, 5, 9மிடத்திலோ இருந்து சுக்கி ரன், புதன் இவர்கள் 2 மிடத்திலு மிருந்தால் கணிதமறிந்த வனுவான்.

**ज्ञाच्छौ सोत्थार्थगौ ज्योतिर्विदां श्रेष्ठः॥ ४६ ॥ धनेशे बलिनि केन्द्रा-यकोणे ज्ञे ज्योतिर्विदां श्रेष्ठः॥ ४७ ॥ स्वोच्चे धने जीवे ज्योतिर्विदां श्रेष्ठः॥**

சோதிடமறிதலுக்குரிய யோகம். — (46) புதன், சுக்கிரன் இவர்கள் 3, 2 மிடத்திலிருந்தால் சோதிடமறிந்தவர்களுள் சிறந்த வனுவான். (47) 2க் குடையவன் பலம் பெற்றும், கேந்திரம், 11 மிடம் 1, 5, 9மிடம் இவ்விடங்களில் புதனுமிருந் தால் சோதிடமறிந்தவர்களுள் சிறந்தவனுவான். (48) குரு, தனது உச்சவீட்டிலோ, 2 மிடத்திலோ இருந்தால் சோதிட மறிந்தவர்களுள் சிறந்தவனுவான்.

सारे ज्ञे शुभर्क्षे विदुषां रञ्जकः ॥४९॥ ज्ञारौ मन्दभेऽर्कदृष्टौ राजवि-दुषां रञ्जकः ॥ ५० ॥ बलिनि सुतेशे केन्द्रकोणे विद्वान् ॥ ५१ ॥ धने ला-भेऽङ्गेशे पण्डितो धर्मवित् ॥ ५२ ॥ खे लाभे सुतेशे पण्डितः ॥ ५३ ॥ खेशेऽङ्गे कविः ॥ ५४ ॥ लाभेशे लाभे कविः ॥ ५५ ॥ तुर्येशेऽङ्गेऽस्ते पण्डितोऽपि सभामूकः ॥ ५६ ॥ चन्द्रात्कोणे जीवे ज्ञात्कोणे भौमे सर्व-विद्यः ॥ ५७ ॥ जीवाच्छौ धनेशौ रव्यारदृष्टौ तार्किकः ॥ ५८ ॥ जीवाच्छौ तुङ्गस्वर्क्षत्रिकोणगौ तार्किकः ॥ ५९ ॥ बलिनि गुरौ तद्धेशे रविशुक्रदृष्टे शाब्दिकः ॥ ६० ॥

போதுவில் இன்னின்ன வித்தைகளில் தேர்ந்தவனுயாவான் என்பதை அறிதற்குரிய யோகம்.—(49) புதன் செவ்வாயுடன் கூடி சுபராசியிலிருந்தால் வித்வான்களை சந்தோஷிக்கும்படி செய்பவனுவான். (50) புதன் செவ்வாய் இவர்கள் சனியின் ராசியான மகரகும்பங்களிலிருந்து சூரியனுல் பார்க்கப்பட்டால் ராஜாக்களின் வித்வான்களை சந்தேஷப்படுத்து பவனுவான். (51) 5க் குடையவன் பலம்பெற்று கேந்திரம், 1, 5, 9மிடங்களி லிருந்தால் வித்வானுவான். (52) லக்கினுதிபதி 2மிடத்திலோ, 11 மிடத்திலோ இருந்தால் பண்டிதனுகவும் தர்மமறிந்தவ னுகவு மாவான். (53) 5க் குடையவன் 10 மிடத்திலோ, 11 மிடத்திலோ இருந்தால் பண்டிதனு வான். (54) 10க்குடை யவன் லக்கினத்தி லிருந்தால் கவியாக விருப்பான். (55) 11க் குடையவன் 11லிருந்தால் கவியாகவாவான். (56) 4க் குடைய வன் லக்கினத்திலோ 7மிடத்திலோ இருந்தால் பண்டிதனுயினும் ஸபையில் ஊமையாகவே ஆவான். (57) சந்திரனுக்கு 5, 9 மிடத்தில் குருவும், புதனுக்கு 5, 9மிடத்தில் செவ்வாயு மிருந் தால் எல்லா வித்தைகளையு மறிந்தவனுவான். (58) குருவோ,

சுக்கிரனோ 2க் குடையவர்களாகவாகி சூரியன், செவ்வாய் இவர்களால் பார்க்கப் பட்டால் தர்க்க சாஸ்திர மறிந்த வனாவான். (59) குரு, சுக்கிரன் இவர்கள் உச்சம், ஸ்வக்ஷேத்திரம், மூலத்ரிகோணம் இவற்றையடைந்திருந்தால் தர்க்க சாஸ்திரமறிந்தவனாவான். (60) குரு பலம்பெற்றும், குருவிருக்கும் ராச்யதிபன், சூரியன் சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டு மிருந்தால் சப்த சாஸ்திரமறிந்த வனாவான்.

धनेशे ज्ञे तुङ्गे, गोपुरेऽर्कजे, सिंहासने जीवे च वेदान्तज्ञः ॥ ६१ ॥ पारावते मन्दे, ज्ञेन गुरौ दृष्टे वेदान्तज्ञः॥ ६२ ॥ केन्द्रकोणे जीवे वेदान्तज्ञः॥ ६३ ॥ उत्तमांशे भृगौ लग्ने वेदान्तज्ञः ॥ ६४ ॥ देवलोके चन्द्रे उत्तमांशे, भृगौ केन्द्रे वेदान्तज्ञः ॥ ६५ ॥

வேதாந்த சாஸ்திரக்ஞான யோகம்.—(61) புதன் 2க்குடையவனாகி உச்சவீட்டிலும், சனி கோபுராம்சத்திலும், குரு ஸிம்மாஸனாம்சத்திலு மிருந்தால் வேதாந்த மறிந்தவனாவான். (62) சனி பாராவதாம்சத்திலிருந்து புதனால் குருவும் பார்க்கப்பட்டால் வேதாந்த மறிந்தவனாவான். (63) குரு, கேந்திரத்திலோ, 1, 5, 9மிடத்திலோ இருந்தால் வேதாந்த மறிந்தவனாவான். (64) வர்க்கோத்தமாம்சம் பெற்ற சுக்கிரன் லக்கினத்திலிருந்தால் வேதாந்தமறிந்தவனாவான். (65) சந்திரன் தேவலோகாம்சத்தையோ வர்க்கோத்தமாம்சத்தையோ அடைந்து, சுக்கிரன் கேந்திரத்திலிருந்தால் வேதாந்த மறிந்தவனாவான்.

केन्द्रे जीवे सिंहासने शुक्रे धनपस्थभांशे ज्ञे गोपुरे षट्शास्त्रवल्लभः ॥ ६६ ॥ कोशेशस्थानेश्वरांशेशे मन्दे वा भौमे सपापे केन्द्रकोणगे षट्शास्त्रवल्लभः ॥ ६७ ॥ सूर्यांशेशे वैशेषिकांशे बलिन्यर्थे षट्शास्त्रवल्लभः ॥ ६८ ॥ गुरौ बलिन्यर्थे, धनेशांशेशे केन्द्रे शुभदृष्टे षट्शास्त्रवल्लभः ॥६९॥

ஆறு சாஸ்திரங்களிலும் நிபுணனாகுதலுக்குரிய யோகம்.—(66) குரு கேந்திரத்திலும், சுக்கிரன் ஸிம்ஹாஸனாம்சத்திலும், புதன் 2க் குடையவனிருக்கும் நவாம்சம், கோபுராம்சம் இவற்றிலுமிருந்தால் 6 சாஸ்திரங்களிலும் நிபுணனாக விருப்பான். (67) 2க் குடையவனாலடையப்பட்ட ராசியின் நாதன் எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அதனதிபனாக சனியோ, செவ்வா

யோ ஆகி அவர்கள் பாபக்கிரஹத்துடன் சேர்ந்து கேந்திரத்திலோ, 1, 5, 9மிடத்திலோ இருந்தால் 6 சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனுவான். (68) ஸூரியனுல் அடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபதியானவன் வைசேஷிகாம்சம்பெற்று பலமுள்ளவனுகி 2லிருந்தால் 6 சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனுவான். (69) குரு பலம் பெற்று 2மிடத்திலும், 2க்குடையவனுல் அடையப்பட்ட நவாம்சபதி கேந்திரத்திலுமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் 6 சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனுயிருப்பான்.

**कोशेऽङ्गेशे, कोशेशे पारावते वेदान्ती ॥ ७० ॥ स्वोच्चेऽङ्गे ज्ञे कोशेशे पारावते, व्यये शुक्रे वेदान्ती ॥ ७१ ॥ धीकारके केन्द्रकोणे शुभदृष्टे भविष्यद्वक्ता ॥ ७२ ॥ जीवे स्वांशे मृद्वंशे त्रिकालज्ञः ॥ ७३ ॥ जीवे गोपुरे शुभदृष्टे त्रिकालज्ञः ॥ ७४ ॥ खेशे देवलोके शुभदृष्टे ब्रह्मनिष्ठः ॥ ७५ ॥ भाग्यपे पारावते शुभदृष्टे ब्रह्मनिष्ठः ॥ ७६ ॥ ध्वजाहिमन्दैः सहिते इज्ये शुक्रेक्षिते शूद्रोऽपि विद्वान् ॥ ७७ ॥ सशुभराह्वर्कांशे पापयुतौ विषवैद्यः॥**

வேதாந்த மறிந்தவனு யாகுதலுக்குரிய யோகம்.—(70) லக்கினுதிபதி 2மிடத்திலும், 2க்குடையவன் பாராவதாம்சத்திலுமிருந்தால் வேதாந்தமறிந்தவனுவான். (71) புதன் தனது உச்சமான லக்கினத்திலும், 2க்குடையவன் பாராவதாம்சத்திலும், 12ல் சுக்கிரனுமிருந்தால் வேதாந்த மறிந்தவனுவான். (72) புத்திகாரகன், கேந்திரத்திலோ, 1, 5, 9மிடத்திலோ இருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் வரப்போகும் ஸமாசாரத்தை முன்னரே அறிந்து சொல்லுபவனுக விருப்பான். (73) குரு தனது சொந்த நவாம்சத்திலோ, மிருத்வம்சத்திலோ இருந்தால் முக்காலத்தையு மறிந்தவனுவான். (74) குரு கோபுராம்சம் பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் மூன்று காலத்தையு மறிந்தவனுபாவான். (75) 10க்குடையவன் தேவலோகாம்சம் பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் ப்ரம்ஹ நிஷ்டனுக விருப்பான். (76) 9க்குடையவன் பாராவதாம்சம் பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் ப்ரம்ஹ நிஷ்டனுக விருப்பான். (77) குரு, கேது ராஹு சனி இவர்களுடன் கூடி சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் சூத்திரனும் வித்வானுவான்.

(78) சுபக்கிரஹத்தின் சேர்க்கைபெற்ற ராஹு, சூரியன் இவர்கள் நவாம்ச லக்கினத்தை யடைந்து பாபக்கிரஹத்துடனும் கூடினுல் விஷவைத்தியம் செய்பவனுவான்.

विवीर्याः सर्वेऽनपत्यता ॥ ७९ ॥ सुते राहौ भौमदृष्टे सर्पशापाद्विपुत्रः ॥ ८० ॥ यमे सुते चन्द्रदृष्टे सुतेशे राहुयुते सर्पशापाद्विपुत्रः ॥ ८१ ॥ सराहौ पुत्रकारके, पुत्रेशेऽबले, भौमांशेशौ युतौ, सर्पशापाद्विपुत्रः ॥ ८२॥ सुतेकारकयुते राहावङ्गेशयुते पुत्रेशे त्रिके सर्पशापाद्विपुत्रः ॥ ८३ ॥ स्वांशे भौमे, पुत्रेशे ज्ञे पापयुते, सर्पशापाद्विपुत्रः ॥ ८४ ॥ सुतेशे भौमे, सुते राहौ सौम्यादृष्टे सर्पशापाद्विपुत्रः ॥ ८५ ॥ सुताङ्गेशौ विबलौ, सुते पापाः सर्पशापाद्विपुत्रः॥८६॥ लग्नेशे राहुयुते, पुत्रेशे भौमयुते, सर्पशापाद्विपुत्रः॥

ஸர்ப்ப சாபத்தால் ஸந்ததியற்றவனுயாகுதல்.—(79) எல்லாக் கிரஹங்களும் பலமற்றிருந்தால் ஸந்ததிபற்றவனுவான். (80) ராஹு, 5லிருந்து செவ்வாயினுல் பார்க்கப்பட்டால் பாம்பின் சாபத்தால் பிள்ளையற்றவனுவான். (81) சனி 5லிருந்து சந்திரனுல் பார்க்கப்பட்டும், 5க் குடையவன் ராஹுவுடன் கூடியுமிருந்தால் பாம்பின் சாபத்தால் பிள்ளையற்றவனுவான். (82) புத்திரகாரகன் ராஹுவுடன் கூடியும், 5க் குடையவன் பலமற்றும், செவ்வாய், நவாம்சநாதன் இவர்கள் சேர்ந்து மிருந்தால் பாம்பின் சாபத்தால் புத்திரனற்றவனுவான். (83) 5க் குடையவன், புத்திரகாரகனுடன் சேர்ந்தும், ராஹு லக்கினுதிபதியுடன் சேர்ந்து மிருந்து 5க் குடையவன் 6,8,12லுமிருந்தால் ஸர்ப்பத்தின் சாபத்தினுல் பிள்ளையற்றவனுவான். (84) செவ்வாய் தனது நவாம்சத்திலும், 5 மிடத்திற் கதிபதியான புதன் பாபக்கிரஹத்துடன் சேர்ந்து மிருந்தால் ஸர்ப்ப சாபத்தால் புத்திரனற்றவனுவான். (85) செவ்வாய் 5க் குடையவனுகியும், 5ல் ராஹுவுமிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்படாமலு மிருந்தால் பாம்பின் சாபத்தால் புத்திரனற்றவனுவான். (86) 5 மிடம், லக்கினம் இவற்றிற்கு அதிபர்கள் பலமற்றவர்களாகவும், 5ல் பாபக்கிரஹங்களு மிருந்தால் பாம்பின் சாபத்தினுல் புத்திரனற்றவனுவான். (87) லக்கினுதிபன் ராஹுவுடன் சேர்ந்தும், 5க் குடையவன் செவ்வாயுடன் சேர்ந்துமிருந்தால் பாம்பின் சாபத்தால் புத்திரனற்றவனுவான்.

**पुत्रपेऽर्के क्रूरान्तरे त्रिकोणे पापदृष्टे पितृशापाद्विपुत्रः ॥ ८८ ॥ सुतेऽर्के पापान्तरे मन्दारौ नीचगौ पितृशापाद्विपुत्रः ॥ ८९ ॥ सिंहे इज्ये, पुत्रेशेऽर्कयुते, पुत्राङ्गगौ पापौ, पितृशापाद्विपुत्रः ॥ ९० ॥ सूर्ये रंध्रे, सुते मन्दे, पुत्रेशे राहुयुते, पितृशापाद्विपुत्रः ॥ ९१ ॥ व्ययपेऽङ्गे रन्ध्रपे पुत्रे, खपे रंध्रे, पितृशापाद्विपुत्रः ॥ ९२ ॥**

பிதிரு சாபத்தால் புத்திரதோஷ மேற்படுதல்.—(88) 5க்குடையவனன ஸூரியன் பாபக்கிரஹங்களின் நடுவிலோ, 1, 5, 9 மிடத்திலோ இருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் பிதிரு சாபத்தால் புத்திரனற்றவனுவான். (89) சூரியன் 5 மிடத்தை யடைந்து பாபக்கிரஹத்தின் நடுவிலும், சனி, செவ்வாய் இவர்கள் நீசத்திலுமிருந்தால் பிதிரு சாபத்தால் புத்திரனற்றவனுவான். (90) ஸிம்ஹ ராசியில் குருவும், 5க் குடையவன் ஸூரியனுடன் சேர்ந்தும், பாபர்கள் 5மிடம் லக்கினம் இவற்றையடைந்து மிருந்தால் பிதிரு சாபத்தால் புத்திரனற்றவனுவான். (91) சூரியன் 8 மிடத்திலும், 5ல் சனியும், 5க் குடையவன் ராஹுவுடன் சேர்ந்துமிருந்தால் பிதிருக்களின் சாபத்தினல் புத்திரனற்றவனுவான். (92) 12க் குடையவன் லக்கினத்திலும், 8க் குடையவன் 5லும், 10க் குடையவன் 8லு மிருந்தால் பிதிருக்களின் சாபத்தால் புத்திரனற்றவனுவான்.

**पुत्रपे चन्द्रे नीचगे वा पापान्तरे, सुताम्बुगौ पापौ मातृशापाद्विपुत्रः ॥ ९३ ॥ अल्यङ्गे मन्दे, तुर्ये पापाः, पुत्रे चन्द्रे, मातृशापाद्विपुत्रः ॥ ९४ ॥ सुतेशे त्रिके, लग्नेशे नीचे, पापयुते चन्द्रे, मातृशापाद्विपुत्रः ॥ ९५ ॥ सुतेशे चन्द्रे मन्दराह्वारयुते मातृशापाद्विपुत्रः ॥ ९६ ॥ सुखेशे भौमे राह्वर्कजयुते, लग्ने पुष्पवन्तौ मातृशापाद्विपुत्रः ॥ ९७ ॥ सुखेशेऽष्टमे पुत्राङ्गेशौ षष्ठे, खारीशौ लग्ने मातृशापाद्विपुत्रः ॥ ९८ ॥ पुत्राङ्गाष्टारिगा राह्वर्कारमन्दा लग्नेशे त्रिके, मातृशापाद्विपुत्रः ॥ ९९ ॥ राह्वारेज्यास्त्रिकस्थाः, मन्दचन्द्रौ पुत्रे मातृशापाद्विपुत्रः ॥ १०० ॥**

மாதிரு சாபத்தால் புத்திரனற்றிருத்தல்.—(93) 5க்குடையவனுயான சந்திரன் நீசனுகவோ, பாபக்கிரஹத்தின் மத்தியிலோ இருந்து பாபர்கள் 5, 4மிடத்திலு மிருந்தால் மாதிரு சாபத்தால் புத்திரனற்றவனுவான். (94) ஜன்மலக்கினமான விருச்சிக

த்தில் சனியும், 4 மிடத்தில் பாபர்களும், 5 மிடத்தில் சந்திரனு மிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான். (95) 5க் குடையவன் 6, 8, 12லும், லக்கினாதிபதி நீசத்திலும் சந்திரன் பாபருடன் கூடியுமிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான். (96) சந்திரன் 5க் குடையவனாகியும், சனி, ராஹு, செவ்வாய் இவர்களுடன் கூடியுமிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான். (97) செவ்வாய் 4க் குடையவனாகி ராஹு சனி இவர்களுடன் கூடியும், லக்கினத்தில் சந்திரன் ஸூரியன் இவர்களு மிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான். (98) 4க்குடையவன் 8மிடத்திலும், 5, 1க் குடையவர்கள் 6லும், 10, 6க் குடையவர்கள் லக்கினத்திலு மிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான். (99) ராஹு, ஸூரியன், செவ்வாய், சனி இவர்கள் 5, 1, 8, 6 மிடங்களிலும், லக்கினாதிபன் 6, 8, 12 மிடங்களிலு மிருந்தால் மாதாவின் சாபத்தால் புத்திரனற்றவனாவான். (100) ராஹு, செவ்வாய், குரு இவர்கள் 6, 8, 12லும், சனி, சந்திரன் இவர்கள் 5மிடத்திலு மிருந்தால் மாதாவின் சாபத்தினால் புத்திரனற்றவனாவான்.

**सूर्येऽङ्गे सुते भौमे सुतहीनः ॥ १०१ ॥ जीवात्सुतेशे त्रिके, पुत्राङ्गाङ्गेशा लग्नात् त्रिकस्थाः सुतहीनः ॥ १०२ ॥ जीवे पञ्चमे, जीवात्सुते क्रूरे सुतहीनः ॥ १०३ ॥**

புத்தினற்றவனாகும் யோகம்.—(101) ஸூரியன் லக்கினத்திலும், 5ல் செவ்வாயு மிருந்தால் பிள்ளையற்றவனாவான். (102) 5க் குடையவன் குருவுக்கு 6, 8, 12லும், 5, 9, 1 மிடத்ததிபர்கள் லக்கினத்திற்கு 6, 8, 12லு மிருந்தால் பிள்ளையற்றவனாவான். (103) குரு 5லும், குருவுக்கு 5 மிடத்தில் பாபரு மிருந்தால் பிள்ளையற்றவனாவான்.

**लग्नेऽर्केऽस्ते मन्दे वा, द्यूनेऽर्कशनी खे जीवदृष्टे गर्भानुत्पादः॥ १०४॥ मन्दारौ षष्ठे वा तुर्ये गर्भानुत्पादः ॥ १०५ ॥ सारीशोऽर्कजः षष्ठे, चन्द्रे चास्ते गर्भानुत्पादः ॥ १०६ ॥**

கர்ப்பம் தரியாமைக்குரிய யோகம்.—(104) லக்கினத்தில் ஸூரியனும், 7ல் சனியு மிருந்தாலும், அல்லது 7ல் சூரியன்

சனி இவர்களிருந்து 10மிடம் குருவினால் பார்க்கப்பட்டாலும் கர்ப்பமுண்டாகாது. (105) சனி, செவ்வாய் இவர்கள் 6மிடத்திலோ, 4மிடத்திலோ இருந்தால் கர்ப்பமுண்டாகாது. (106) சனி 6க் குடையவனுடன் கூடி 6லும், சந்திரன் 7லு மிருந்தால் கர்ப்பமுண்டாகாது.

पापान्तरे सुतभे वा तदीशे वा, कारके पापसंयुते पुत्रनाशः॥१०७॥ स्त्रीधर्मपुत्रेशांशपाः पापांशगाः पापयुताः पुत्रनाशः ॥ १०८ ॥ पुत्रेशे क्रूरांशे नीचास्तभे पापदृष्टे पुत्रनाशः ॥ १०९ ॥ व्ययेशांशेशस्थत्र्यंशेशेन युते वा दृष्टे सुतेशे पुत्रनाशः॥११०॥ क्रूरषष्ट्यंशे पुत्रपे पापदृष्टयुते पुत्रार्तिः॥

புத்திரநாச யோகம்.—(107) 5மிடமோ, 5க் குடையவனோ, பாபக்கிரஹங்களின் நடுவிலிருந்தாலும், புத்திரகாரகன் பாபருடன் கூடினாலும் புத்திர நாசமுண்டாகும். (108) 7, 9, 5க் குடையவர்களாலடையப்பட்ட நவாம்சாதிபர்கள் பாபாம்சத்தைப்பெற்று பாபருடன் கூடினால் புத்திர நாசமுண்டாகும். (109) 5க் குடையவன் குரூராம்சத்திலோ, நீசவீடு, 7 மிடம் இவ்விடங்களிலோ இருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் புத்திரநாசமுண்டாகும். (110) 5க் குடையவன், 12க் குடையவனாலடையப் பட்ட நவாம்சத்தில் இருக்கின்ற த்ரிம்சாம்சாதிபனுடன் கூடியோ சேர்ந்தோ இருந்தால் புத்திர நாசமுண்டாகும். (111) 5க் குடையவன் குரூரஷஷ்டியம்சத்திலிருந்து, பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்தால் புத்திரனுக்குப் பீடையுண்டாகும்.

ज्ञाङ्गपौ लग्नेतरकेन्द्रगौ वंशविच्छेदः ॥ ११२ ॥ पापग्रहा व्ययसुताष्टमगा वंशविच्छेदः ॥ ११३ ॥ चन्द्रेज्यौ लग्ने, द्यूने मन्दे वा भौमे वंशविच्छेदः ॥ ११४ ॥ सुखे पापा वंशविच्छेदः ॥ ११५ ॥ लग्नान्त्यसुताष्टमगैः पापैर्वंशविच्छेदः ॥ ११६ ॥ सुते चन्द्रे पापा रन्ध्राङ्गान्त्यगा वंशविच्छेदः॥ ११७ ॥ ज्ञाच्छौ मन्देऽन्त्ये वा, सुखे पापे, सुते जीवे वंशविच्छेदः॥ ११८॥ चन्द्रादष्टमे पापा वंशविच्छेदः ॥ ११९ ॥ पापेऽङ्गे, सुखे चन्द्रे, सुतेऽङ्गेशे सुतपेऽल्पबले वंशविच्छेदः ॥ १२० ॥ पञ्चमे पापा वंशविच्छेदः ॥ १२१ ॥ शुक्रे स्मरे, खे चन्द्रे, सुखे पापा वंशविच्छेदः ॥ १२२ ॥ भौमेऽङ्गे, मन्दे रन्ध्रे, सुतेऽर्के वंशविच्छेदः ॥ १२३ ॥

வம்ச விச்சேத யோகம்.—(112) புதன், லக்கினாதிபதி இவர்கள் லக்கினகேந்திரம் தவிர்த்து மற்றகேந்திரத்திலிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (113) பாபக்கிரஹங்கள், 12, 5, 8 இவ்விடங்களிலிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (114) சந்திரன் குரு இவர்கள் லக்கினத்திலிருந்து, 7ல் சனியோ செவ்வாயோ இருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (115) 4மிடத்தில் பாபரிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (116) பாபக்கிரஹங்கள், லக்கினம், 12, 5, 8மிடம் இவற்றிலிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (117) 5ல் சந்திரனும், பாபர்கள் 8, 1, 12மிடங்களிலு மிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (118) புதன், சுக்கிரன், சனி இவர்கள் 12லிருந்தாலும், 4மிடத்தில் பாபரும், 5 மிடத்தில் குருவு மிருந்தாலும் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (119) சந்திரனுக்கு 8மிடத்தில் பாபரிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (120) லக்கினத்தில் பாபரும், 4ல் சந்திரனும், 5ல் லக்கினாதிபனும், 5க்குடையவன் அற்பபலமுள்ளவனாயு மிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (121) 5ல் பாபரிருந்தால் வம்சத்திற்கு முடிவு ஏற்படும். (122) சுக்கிரன் 7லும், 10ல் சந்திரனும், 4ல் பாபருமிருந்தால் வம்சத்திற்கு முடிவு உண்டாகும். (123) செவ்வாய் லக்கினத்திலும், சனி 8 மிடத்திலும், சூரியன் 5லுமிருந்தால் வம்சத்திற்கு முடிவு ஏற்படும்.

सोत्थेशचन्द्रौ केन्द्रकोणगौ पुत्रसुखं न॥ १२४ ॥ दाराङ्गे पुत्रपे बलिनि षष्ठेशयुतदृष्टे ऽपुत्रः ॥ १२५ ॥ धीधर्मपौ सदारेशौ दुःस्थानगौ हीनबलौ शुभादृष्टे सुते बहुदारोऽप्यपुत्रः ॥ १२६ ॥ मन्दारौ खे धर्मे वाऽपुत्रता ॥ १२७ ॥ मन्दारशुक्रा दारगा अपुत्रता ॥ १२८ ॥ राह्वर्कारास्सुतगाः शान्तितः सुतसौख्यदाः ॥ १२९ ॥ सिंहेऽर्कजारौ सुतगौ सुतेशे षष्ठे सुतसौख्यं न ॥ १३० ॥ भौमर्क्षे सुते राहौ भौमदृष्टे सुतसौख्यं न ॥ १३१ ॥ नीचे गुरौ भृगौ वा समे ज्ञे विषमेऽर्के सुतसौख्यं न ॥ १३२ ॥ सुते पापयुतदृष्टे गर्भच्युतिः ॥ १३३ ॥ पुत्रेऽर्के प्रकाशे जातं जातं म्रियते ॥ १३४ ॥ पापाः पञ्चमे जातं जातं म्रियते ॥ १३५ ॥ धीस्थे मन्दे पुत्रसुखं न ॥ १३६ ॥ सुते सूर्ये मृतापत्यः ॥ १३७ ॥ अन्त्याङ्गार्थसुते सहजपे सुतसुखं

**न ॥ १३८ ॥ पञ्चमे जीवर्क्षे सुतसुखं न ॥ १३९ ॥ मन्दक्षावङ्गे, अलौ शुक्रेज्यौ सुतसुखं न ॥ १४० ॥**

புத்திர ஸுகமற்றிருத்தலின் யோகம்.—(124) 3க் குடையவன் சந்திரன் இவர்கள் கேந்திரம், 1, 5, 9மிடம் இவ்விடங்களிலிருந்தால் புத்திரஸுக மிராது. (125) 5க்குடையவன் 7மிடம், லக்கினம் இவற்றிலிருந்து பலம் பெற்று 6க் குடையவனுடன் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் புத்திரனற்றவனுவான். (126) 5 9க் குடையவர்கள் 7க் குடையவனுடன் கூடி 6, 8, 12 மிடங்களை யடைந்து பலமற்றவர்களா யிருந்து, 5மிடம் சுபக்கிரஹத்தால் பார்க்கப்படாமலு மிருந்தால் அனேகம் பத்தினிகளுடன் கூடினவனுயினும் புத்திரனற்றவனுவான். (127) சனி,செவ்வாய் இவர்கள் 10 மிடத்திலோ, 9 மிடத்திலோ இருந்தால் புத்திரனற்றவனுவான். (128) சனி, செவ்வாய், சுக்கிரன் இவர்கள் 7 மிடத்திலிருந்தால் புத்திரனற்றவனுவான். (129) ராஹு, ஸூரியன்,செவ்வாய் இவர்கள் 5லிருந்தால், சாந்தி செய்தலால் புத்திர ஸௌக்யமுண்டாகும். (130) சனி, செவ்வாய் இவர்கள் 5 மிடமாகவான ஸிம்ஹத்திலிருந்து, 5க் குடையவன் 6லிருந்தால் புத்திர ஸௌக்கியமிராது. (131) செவ்வாயின் வீடான மேஷவிருச்சிகங்கள் 5 மிடமாகவாகி அதில் ராஹு இருந்து செவ்வாயினுல்பார்க்கப்பட்டால் புத்திரஸௌக்கியமிராது. (132) குருவோ, சுக்கிரனே நீசராசியிலிருந்து, இரட்டைப்பட்டராசியில் புதனும், ஒற்றைப்பட்டராசியில் சூரியனு மிருந்தால் புத்திர ஸௌக்கியமிராது. (133) 5 மிடம் பாபக்கிரஹத்துடன் சேர்ந்தோ, பார்க்கப்பட்டோ இருந்தால் கர்ப்பம் அழிந்து விடும். (134) 5ல் சூரியன் கிரணங்களுடன் கூடியிருந்தால் புத்திரன் பிறக்கப்பிறக்க நாசமடைவான். (135) 5 மிடத்தில் பாபரிருந்தால் பிறக்கப்பிறக்க இறக்கும். (136) 5 மிடத்தில் சனியிருந்தால் புத்திரஸுகமிராது. (137) 5ல் ஸூரியனிருந்தால் ஸந்ததிக்கு நாசமுண்டாகும். (138) 3க் குடையவன் 12, 1, 2, 5 இவ்விடங்களி லிருந்தால் புத்திர ஸுகமிராது. (139) குருவின் வீடான தனுஸ், மீனம் இவைகள் 5 மிடமாகவானுல் புத்திர

ஸூகமிராது. (140) சனி புதன் இவர்கள் லக்கினத்திலும், சுக்கிரன், குரு இவர்கள் விருச்சிகத்திலு மிருந்தால் புத்திரஸூகமிராது.

**शत्रुभे लग्नपे ज्ञेन्दुदृष्टे षष्ठार्थे सूर्ये विपुत्रः ॥ १४१ ॥ सुतेशेऽस्तांशे पापयुते विपुत्रः ॥ १४२ ॥ गुरौ सुतेशे सपापेऽबले विपुत्रः ॥ १४३ ॥ सपापेऽङ्गेशे, त्रिके सुतेशे विपुत्रः ॥ १४४ ॥ कोणे गुरौ पापयुते विपुत्रः ॥ १४५ ॥ लग्नेशे कुजर्क्षे षष्ठे पुत्रेशे विपुत्रः ॥ १४६ ॥**

புத்திரனற்றிருத்தலின் யோகம்.—(141) 6 மிடத்தில் லக்கிஞதிபன் இருந்து புதன், சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டு, 6லோ 2லோ ஸூரியனிருந்தால் புத்திரனற்றவனுவான். (142) 5க் குடையவன் ஸப்தமாம்சத்தை யடைந்து பாபருடன் கூடி இருந்தால் புத்திரனற்ற வனுவான். (143) குருவோ, 5க்குடையவனே பாபருடன் கூடி பலமற்றவனுயிருந்தால் புத்திரனற்றவனுவான். (144) லக்கிஞதிபன் பாபருடன்கூடியும், 5க்குடையவன் 6, 8, 12லு மிருந்தால் புத்திரனற்றவனுவான். (145) 1, 5, 9, மிடத்தில் குருவிருந்து பாபருடன் சேர்ந்திருந்தால் புத்திரனற்றவனுவான். (146) லக்கிஞதிபதி செவ்வாயின் வீட்டிலும், 5க் குடையவன் 6லு மிருந்தால் புத்திரனற்றவனுவான்.

**मन्दारिगेहे ज्ञेन्दुसूर्यदृष्टे लग्ने पापदृष्टे कुलदैवदोषाद्विपुत्रः ॥ १४७ ॥ मन्दर्क्षे सूर्ये पापदृष्टे वा पापवर्गेऽङ्गे कुलदैवदोषाद्विपुत्रः ॥ १४८ ॥ व्ययेशे खाद्ये विपुत्रः ॥ १४९ ॥ कन्याङ्गे सूर्ये, भौमे सुते विपुत्रः ॥ १५० ॥**

குலதைவ தோஷத்தால் புத்திரனற்றவனுகுதல்.—(147) சனிக்கு 6மிடம் புதன் சந்திரன் ஸூரியன் இவர்களால் பார்க்கப்பட்டு லக்கினமும்பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் குலதைவமூலமுண்டான தோஷத்தால் புத்திரனற்றவனுவான். (148) ஸூரியன் சனியின் வீட்டிலிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும், லக்கினம் பாபஷட்வர்க்கத்தையடைந்திருந்தாலும், குலதைவமூலமுண்டான தோஷத்தால் புத்திரனற்றவனுவான். (149) 12க் குடையவன் 10லோ, லக்கினத்திலோ இருந்தால் புத்திரனற்றவனுவான். (150) கன்னிலக்கினமாகி அதில் ஸூரியனும், 5ல் செவ்வாயுமிருந்தால் புத்திரனற்றவனுவான்.

कोणगाः पापाः, क्षीणेन्दावङ्गे, मन्दर्क्षे जीवे मूढे पुत्रसुखं भूत्वा नश्यति ॥ १५१ ॥ ज्ञे पञ्चमे, लग्ने सुखे पापे पुत्रसुखं भूत्वा नश्यति ॥१५२॥ सशुभा अङ्गाङ्कसुतेशास्त्रिकस्था विलम्बतः प्रजाः॥ १५३ ॥ कर्के सुते चन्द्रे कन्यावान्वाल्पापत्यः ॥ १५४ ॥ सुते गोऽजकर्के राहुकेतू सन्तानोत्पत्तौ नो विलम्बः ॥ १५५ ॥

புத்திரசுகமுண்டாகி நாசமடைதல், தாமதித்தோ, சீக்கிரமாகவோ பிரஜையுண்டாகுதல் இவற்றின் யோகம்.—(151) பாபர்கள் த்ரிகோணத்திலும், க்ஷீணசந்திரன் லக்கினத்திலும், சனியின் ராசியில் அஸ்தங்கதனான குருவுமிருந்தால் புத்திரஸௌக்கியமுண்டாகி நாசமடையும். (152) புதன் 5லும், லக்கினம், 4மிடம் இவற்றில் பாபருமிருந்தால் புத்திரஸுகமுண்டாகி நாசமடையும். (153) 1, 9, 5க் குடையவர்கள் சுபருடன் கூடி 6, 8, 12லிருந்தால் தாமதித்துப் பிரஜையுண்டாகும் (154) கடகம் 5மிடமாகவாகி அதில் சந்திரனிருந்தால் கன்னிகைகளையுடையவனாகவோ, குறைந்த ஸந்ததியை யுடையவனாகவோ விருப்பான். (155) விருஷபம், மேஷம், கடகம் இவைகள் 5மிடமாகவாகி அவற்றில் ராஹுவோ கேதுவோ இருந்தால் ஸந்ததி ஏற்படுவதில் தாமதமேற்படாது.

सप्तमेशांशेशे लग्नार्थधर्मेशैर्दृष्टे पुत्राप्तिः ॥ १५६ ॥ सुतेशे शुभयुतदृष्टे वा, सुतेऽङ्गे पुत्राप्तिः ॥ १५७ ॥ लग्नेशे पुत्रे पुत्रेशेज्यौ बलिनौ पुत्राप्तिः ॥ १५८ ॥ पुत्रे इज्ये बलिनि लग्नेशदृष्टे पुत्राप्तिः ॥ १५९ ॥ वैशेषिकांशे जीवे तथा पुत्रेशे च शुभदृष्टे पुत्राप्तिः ॥ १६० ॥ वित्तेशे सुते बलाढ्ये गुरुदृष्टे पुत्राप्तिः ॥ १६१ ॥ पुत्राङ्गपौ परस्परं पश्यतः पुत्राप्तिः ॥ १६२ ॥ पुत्राङ्गपावन्योन्यभगौ वा युतौ पुत्राप्तिः ॥ १६३ ॥ सुताङ्गेशौ केन्द्रगौ शुभान्वितौ, धनपे बलिनि पुत्राप्तिः ॥ १६४ ॥ पुत्रेशांशेशे शुभयुतदृष्टे पुत्राप्तिः ॥ १६५ ॥ धर्माङ्गेशौ सप्तमे धनेशेऽङ्गे पुत्राप्तिः ॥ १६६ ॥ सुतेशे मृदंशादिगे पुत्राप्तिः ॥ १६७ ॥ गोपुरादौ सुतेशे पुत्राप्ति. ॥ १६८ ॥ पुत्रेशांशेशेऽङ्गे लग्नेशांशेशे सुते पुत्राप्तिः ॥ १६९ ॥ जीवांशेशे केन्द्रे पुत्राप्तिः ॥ १७० ॥ धर्माद्यसुतेशाः पारावतादिगाः शुभदृष्टाः पुत्राप्तिः ॥ १७१ ॥

புத்திரலாப யோகம்.—(156) 7க்குடையவனாலடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபன் 1, 2, 9க் குடையவர்களால்

பார்க்கப்பட்டால் புத்திரலாபமுண்டாகும். (157) 5க் குடைய வன் சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்து 5லோ லக்கினத்திலோ இருந்தாலும் புத்திர லாபமுண்டாகும். (158) லக்கினுதிபன் 5லும், 5க் குடையவன், குரு இவர்கள் பலம்பெற்று மிருந்தால் புத்திரலாபமுண்டாகும். (159) குருபலம் பெற்று 5லிருந்து லக்கினுதிபனுல் பார்க்கப்பட்டால் புத்திரலாபமுண்டாகும். (160) குருவும், 5க் குடையவனும், வைசேஷிகாம்சம்பெற்று சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் புத்திரலாபமுண்டாகும். (161) 2க் குடையவன் பலம்பெற்று 5லிருந்து குருவினுல் பார்க்கப்பட்டால் புத்திரலாபமுண்டாகும். (162) 5க் குடையவன், லக்கினுதிபன் இவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டால் புத்திரலாபமுண்டாகும். (163) 5க்குடையவன், லக்கினுதிபதி இவர்கள் ஒருவருடைய லக்கினத்தில் மற்றவர் என்றமுறையி லிருந்தாலும், அல்லது சேர்ந்திருந்தாலும் புத்திரலாபமுண்டாகும். (164) 5, 1க் குடையவர்கள் கேந்திரத்திலிருந்து சுபக்கிரஹங்களுடன் சேர்ந்தும், 2க் குடையவன் பலம்பெற்று மிருந்தால் புத்திரலாபமுண்டாகும். (165) 5க் குடையவனுலடையப்பட்ட நவாம்சநாதன் சுபக்கிரஹத்துடன் சேர்ந்தோ பார்க்கப்பட்டோ இருந்தால் புத்திரலாப முண்டாகும். (166) 9, 1க் குடையவர்கள் 7லும், 2க் குடையவன் லக்கினத்திலு மிருந்தால் புத்திரலாப முண்டாகும். (167) 5க் குடையவன் மிருத்வம்சாதிகளி லிருந்தால் புத்திரலாபமுண்டாகும். (168) 5க் குடையவன் கோபுராத்யம்சத்திலிருந்தால் புத்திரலாப முண்டாகும். (169) 5க் குடையவனு லடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபன் லக்கினத்திலும், லக்கினேசனு லடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபன் 5லு மிருந்தால் புத்திரலாபமுண்டாகும். (170) குருவினுலடையப்பட்ட நவாம்சம் எதுவோ அதனதிபன் கேந்திரத்திலிருந்தால் புத்திரலாப முண்டாகும். (171\ 9, 1, 5க் குடையவர்கள் பாராவதம்முதலிய அம்சத்தை அடைந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் புத்திரலாபமுண்டாகும்.

खभे सौम्या सुते पापाः सुतसुखं विलम्बात् ॥ १७२ ॥ सुतेशे नीचे,

**धर्मेशेऽङ्गे, ज्ञकेतू पुत्रे, कष्टात्पुत्राप्तिः ॥ १७३ ॥**

வெகுகாலம்சென்றும், கஷ்டப்பட்டும் புத்திரலாபமுண்டாகுதல்—(172) 10மிடத்தில் சுபரும், 5ல் பாபருமிருந்தால் புத்திர ஸௌக்கியமானது வெகுகாலஞ்சென்று உண்டாகும். (173) 5க்குடையவன் நீசவீட்டிலும், 9க் குடையவன் லக்கினத்திலும், புதன் கேது இவர்கள் 5லு மிருந்தால் கஷ்டப்பட்டு புத்திரலாபமுண்டாகும்.

**पापो जीवो वा तुर्ये सुते षष्ठे चन्द्रे त्रिंशद्वर्षोर्ध्वं सन्ततिः ॥ १७४ ॥ पापर्क्षे पापयुते लग्ने सूर्येऽबले युग्मर्क्षे कुजे त्रिंशद्वर्षोर्ध्वं सन्ततिः ॥ १७५ ॥ कर्के चन्द्रे पापयुतदृष्टे च मन्ददृष्टे सूर्ये षष्टितमेऽब्दे पुत्राप्तिः ॥ १७६ ॥**

இத்தனை வயதிற்குப் பிறகு ஸந்ததியுண்டாகும் என்பது.—(174)4மிடத்தில் பாபனோ,குருவோ இருந்து,5லோ,6லோ,சந்திரனிருந்தால் 30வருஷத்திற்குப் பிறகு ஸந்ததியுண்டாகும். (175) பாபராசியில் பாபரும், லக்கினத்தில் வலுவற்ற ஸூரியனும், இரட்டைப்பட்டராசியில் செவ்வாயுமிருந்தால் 30 வயதிற்குப் பிறகு ஸந்ததி யுண்டாகும். (176) சந்திரன் கடகத்திலிருந்து பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ சேர்ந்தோ இருந்து, ஸூரியனும் சனியினுல் பார்க்கப்பட்டால் 60-வது வயதில் புத்திரலாபமுண்டாகும்.

**अर्थाङ्गे लग्नपे प्रथमः सुतः ॥ १७७ ॥ द्विस्वभावगाश्चन्द्रारशुक्राः प्रथमः सुतः ॥ १७८ ॥ लाभे पापे पञ्चमे चन्द्राच्छौ प्रथमा कन्या ॥१७९॥**

முதற்பிறப்பது பிள்ளையா? பெண்ணு? என்பதை அறிதலின் யோகம்—(177) லக்கினுதிபதி 2, 1 மிடத்திலிருந்தால் முதலில் புருஷப்பிரஜைபிறக்கும். (178) சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இவர்கள் இரட்டைப்பட்ட ராசியிலிருந்தால் முதலில் புருஷப்பிரஜை பிறக்கும். (179) பாபக்கிரஹம் 11லும், 5ல் சந்திரன் சுக்கிரன் இவர்களு மிருந்தால் முதலில் ஸ்திரீப்பிரஜை பிறக்கும்.

**पुत्रे यावत्पुंग्रहदृष्टिस्तावत्पुत्राः ॥१८०॥ पुत्रे स्त्रीग्रहदृक्तुल्या कन्या ॥ १८१ ॥ राहौ लाभे वार्धके पुत्रसुखम् ॥ १८२ ॥ नीचेपुत्रेशे षष्ठादित्रयगे पापयुते काकवन्ध्या ॥ १८३ ॥ पुत्रेशे नीचे मन्दयुते काकवन्ध्या ॥ १८४ ॥**

सुते शुक्रभौमान्यतराहष्टे द्वित्रविवाहेष्वप्यसन्तानः ॥ १८५ ॥ कोणे शुक्रक्षगेन्दावेकपुत्रः ॥ १८६ ॥ सुते राहुकेतू कुपुत्रः ॥ १८७ ॥ धीस्थेऽर्के शुभदृष्टे त्रिपुत्रः ॥ १८८ ॥ मृगेऽर्कजे सुते त्रिपुत्रः ॥ १८९ ॥ सुते मृगगे भौमे त्रिपुत्रः ॥ १९० ॥ कुम्भे मन्दे सुते पञ्चपुत्रः ॥ १९१ ॥ सुते सूर्यभौमगुर्वन्यतमे क्रमादेकत्रिपञ्चपुत्रोत्पत्तिः ॥ १९२ ॥

பெண், ஆண் குழந்தைகளின் எண்ணையறிதலின் யோகம்.— (180) 5 மிடத்தை எவ்வளவு புருஷக்கிரஹங்கள் பார்க்கின்றனவோ அவ்வளவு புருஷப்பிரஜைகளுண்டாகும். (181) 5 மிடத்தை எவ்வளவு ஸ்திரீக்கிரஹங்கள் பார்க்கின்றனவோ அவ்வளவு பெண்குழந்தைகளுண்டாகும். (182) ராஹு 11 லிருந்தால் கிழவயதில் புத்திரஸுகமுண்டாகும். (183) 5க் குடையவன் நீசனாகி 6, 8, 12 மிடங்களை யடைந்து பாபருடன் சேர்ந்து மிருந்தால் காகவந்த்யாத்வத்தை யடைவாள். (184) 5க் குடையவன் நீசனாகி சனியுடன் கூடினால் காகவந்த்யாத்வத்தை யடைவாள். (185) 5 மிடம், சுக்கிரன் அங்காரகன் இவர்களுள் ஒருவராலும் பார்க்கப்படாம லிருந்தால் இரண்டு மூன்று கல்யாணம் செய்துகொண்டாலும் ஸந்ததியற்றவனாகவே யாவான். (186) சுக்கிரனின் ராசி த்ரிகோணமாகி அதில் சந்திரனிருந்தால் ஒரேபிள்ளையுடன் கூடினவனாவான். (187) 5மிடத்தில் ராஹு, கேது இவர்களிருந்தால் கெட்டபுத்திரனுடன் கூடினவனாவான். (188) சூரியன் 5லிருந்து சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் 3 பிள்ளையுடன் கூடினவனாவான். (189) மகரம் 5மிடமாகவாகி அதில் சனியிருந்தால் 3 பிள்ளையுள்ளவனாவான். (190) மகரம் 5மிடமாகவாகி அதில் செவ்வாயிருந்தால் 3 பிள்ளையுடன் கூடினவனாவான். (191) கும்பம் 5மிடமாக ஆகி அதில் சனி இருந்தால் 5 பிள்ளையுடன் கூடினவனாவான். (192) 5ல் ஸூரியன், செவ்வாய், குரு இவர்களுள் யாதானுமொருகிரஹ மிருக்குமானால் முறையே 1, 3, 5 பிள்ளைகளுண்டாவர்.

सुते चन्द्रज्ञसितशनयो द्वित्रिपञ्चसप्तकन्योत्पत्तिः ॥ १९३ ॥ पुत्रे ज्ञे पुत्रपेऽरौपुत्रहानिः कन्याप्तिश्च ॥ १९४ ॥ पुत्रे द्यूने ज्ञसमवस्थाने कन्याधिक्यम् ॥ १९५ ॥ सुतपे समर्क्षवर्गे ज्ञमन्दान्यतरयुते शुक्रचन्द्रान्यतरदृष्टे

**कन्याप्रजावान् ॥ १९६ ॥ शुक्राब्जवर्गे सुतभे समक्षे शुक्राब्जदृष्टे बहुकन्यावान् ॥ १९७ ॥**

அனேகம் பெண்குழந்தை பிறத்தலின் யோகம்.—(193) 5ல், சந்திரன், புதன் சுக்கிரன் சனி இவர்களிருந்தால் முறையே 2, 3, 5, 7 பெண்குழந்தை களுண்டாகும். (194) 5ல் புதனும், 5க் குடையவன் 6லு மிருந்தால் புத்திர நாசமும் கன்யாலாபமு முண்டாகும். (195) 5லோ, 7லோ புதனிருந்தால் பெண்குழந்தைகள் அதிகமாய் பிறக்கும். (196) 5க் குடையவன், வர்க்கத்தில் இரட்டைப்பட்ட ராசியைப் பெற்று புதன், சனி இவர்களுளொருவருடன் கூடி சுக்கிரன், சந்திரன் இவர்களுள் யாதானுமொருவரால் பார்க்கப்பட்டால் பெண்குழந்தைகளுடன் கூடினவனுவான். (197) இரட்டைப்பட்டராசி 5 மிடமாகவும், சுக்கிரன், சந்திரன் இவர்களின் வர்க்கமாகவுமாகி சுக்கிரன் சந்திரன் இவர்களால் பார்க்கவும் பட்டால் அனேகம் பெண் குழந்தைகளுடன் கூடினவனுவான்.

**सितेन्दुवर्गे पुत्रक्षे ओजभे सितेन्दुयुते बहुपुत्रः ॥ १९८ ॥ सुते शुक्रभांशौ वा शुक्रदृष्टे बहुप्रजः ॥ १९९ ॥**

பஹுபுத்திரலாப யோகம்.—(198) ஒற்றைப்பட்டராசி 5 மிடமாகவாகி சுக்கிரன், சந்திரன் இவர்களின் வர்க்கம் பெற்று சுக்கிரன், சந்திரன் இவர்களுடன் கூடினுல் அனேகம் புத்திரர்களுடன் கூடினவனுவான். (199) 5 மிடம் சுக்கிரன் வீடாகவோ, சுக்கிரனின் நவாம்சமாகவோ ஆனுலும், சுக்கிரனுல் பார்க்கப்பட்டாலும் அனேகம் பிரஜைகளுடன் கூடினவனுவான்.

**लाभे ज्ञे शुक्रे चन्द्रे वा कन्याप्रजः ॥ २०० ॥ सुतेशेऽर्थेऽष्टमे बहुकन्याः ॥ २०१ ॥ लग्नाद्वा चन्द्रात्पञ्चमे शुभक्षे शुभसम्बन्धे पुत्रसंभवो नान्यथा ॥ २०२ ॥ पुत्रेशे पुंभांशगे पुंग्रहे प्रथमं पुत्रोऽन्यथा कन्या ॥ २०३ ॥**

வெகுபுத்திரீலாப யோகம்.—(200) 11ல் புதனே, சுக்கிரனே, சந்திரனே இருந்தால் பெண்குழந்தைகளுடன் கூடினவனுவான். (201) 5க் குடையவன் 2லோ, 8லோ இருந்தால் அனேகம் பெண் குழந்தைகள் பிறப்பர். (202) ஜன்மலக்கினத்திற்கோ, சந்திரலக்கினத்திற்கோ 5 மிடம் சுபராசியாக வாகி சுபக்கிரஹத்

துடன் கூடுமானல் புத்திரனுண்டாவன். இவ்விதமில்லாவிடி லுண்டாகமாட்டான். (203) 5க் குடையவன் புருஷக்கிரஹ மாகவாகி புருஷராசி புருஷநவாம்சம் இவற்றிலிருந்தால் முதலில் புத்திரனுண்டாவான். இதற்குமாருனல் அதாவது: 5க் குடையவன் ஸ்திரீ கிரஹமாகவாகி ஸ்திரீராசி, ஸ்திரீநவாம்சம் இவற்றிலிருந்தால் முதலில் பெண்குழந்தை பிறக்கும்.

**सुताङ्गेशौ समौ पुत्रेण सहौदासीन्यम् ॥२०४॥ लग्नपुत्रेशयोरन्योन्यदृष्टौ सुत आज्ञानुवर्ती ॥ २०५ ॥ पुत्राङ्गेशावन्योन्यभांशगौ सुत आज्ञानुवर्ती ॥ २०६ ॥ पुत्रपेऽङ्गेऽङ्गेशे पुत्रे पुत्रो वाक्यवश्यः ॥ २०७ ॥ सुतेशदृष्टेऽङ्गे सुतेऽङ्गेशदृष्टे पुत्रोवाक्यवश्यः ॥ २०८ ॥ ज्ञेन्दुच्छानामन्यतमे सुते कन्योत्पादः ॥ २०९ ॥ लाभे सेन्दौ मन्देऽप्रजात्वम् ॥ २१० ॥**

புத்திரனின் குணமறிதல்.—(204) 5, 1க் குடையவர்கள் ஸமர்களாயிருந்தால் ஜாதகன் பிள்ளையுடன் உதாஸீனனுக விருப்பான். (205) 1, 5க் குடையவர்கள் ஒருவரை யொருவர்பார்த்துக் கொண்டால் பிள்ளை உத்திரவுப்படி நடப்பவனுவான். (206) 5, 1க் குடையவர்கள் ஒருவர் ராசியில் மற்றவர் என்றமுறையில் ராசியிலோ,அம்சத்திலோ இருந்தால் பிள்ளை உத்திரவுப்படி நடப்பவனுவான். (207) 5க் குடையவன் லக்கினத்திலும், லக்கினதிபன் 5லு மிருந்தால் பிள்ளைவார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடப்பவனுவான். (208) லக்கினம் 5க் குடையவனுல் பார்க்கப்பட்டும், 5 மிடம் லக்கினதிபனுல் பார்க்கப்பட்டு மிருந்தால் பிள்ளை வார்த்தைக்குக்கட்டுப்பட்டு நடப்பவனுவான். (209) 5 மிடத்தில் புதன் சந்திரன் சுக்கிரன் இவர்களுள் யாதானுமொருவரிருந்தால் கன்னிகையுண்டாவாள். (209) 11 மிடத்தில் சந்திரனுடன்கூடின சனி இருந்தால் ஸந்ததி யுண்டாகாது.

**पञ्चमे एकतमे गुरुवर्गे शुभराशौवौरसः पुत्रः ॥ २११ ॥ मन्दर्क्षांशे सुते चन्द्रमन्दान्यतरयुते दत्तपत्रः ॥ २१२ ॥ तुर्ये मन्दारौ दत्तपुत्रः॥२१३॥ वंशविच्छेदयोगे दत्तपुत्रः ॥ २१४ ॥ धीस्थे मन्दे ज्ञेन्दुयुते क्रीतपुत्रः ॥ २१५ ॥ पुत्रस्थनवांशो यावत्पापदृष्टः शुभादृष्टस्तावद्गर्भपातः ॥ २१६ ॥ जीवात्सुते पापे सन्तानसुखाभावो नान्यथा ॥ २१७ ॥ सकेतावंशे ज्ञशुक्रदृष्टे दासीपुत्रः ॥ २१८ ॥ शुक्रेऽन्त्ये सौरांशे दासीपुत्रः ॥ २१९ ॥**

ஔரஸாதி புத்திரலாப யோகம்.—(211) 5 மிடம் குருவின் வர்க்கங்களுள் யாதானுமொன்ருக வானுலும், 5 மிடம் சுபராசியாக வானுலும் ஔரஸபுத்திரனுண்டாவான். (212) 5 மிடம் சனியின் வீடாகவோ, சனியின் அம்சமாகவோ ஆகி அதில் சந்திரனிருந்து சனி, செவ்வாய் இவர்களுள் ஒருவரால் பார்க்கப் பட்டால் தத்த (ஸ்வீகிருத) புத்திர னுள்ளவனுவான். (213) 4மிடத்தில் சனி, செவ்வாய் இவர்களிருந்தால் தத்த புத்திரனுள்ளவனுவான். (214) வம்சவிச்சேதயோகத்திற் பிறந்தவன் தத்த புத்திரனுள்ளவனுவான். (215) சனி 5லிருந்து புதன் சந்திரன் இவர்களுடன் கூடினுல் விலைக்குவாங்கின புத்திரனுள்ளவனுவான். (216) புத்திரஸ்தானத்தி லிருப்பவனுல் அடையப்பட்ட நவாம்சம் எவ்வளவு பாபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டும் சுபக்கிரஹத்தால் பார்க்கப்படாமலு மிருக்குமோ அவ்வளவு கர்ப்பத்திற்கு நாசமுண்டாகும். (217) குருவுக்கு 5மிடத்தில் பாபரிருந்தால் புத்திரஸௌக்யமிராது. இதற்குமாருனுல், அதாவது: குருவுக்கு 5மிடத்தில் சுபரிருந்தால் புத்திரஸௌக்ய மிருக்கும். (218) நவாம்சலக்கினம் கேதுவுடன் கூடி புதன் சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டால் தாஸியினிடம் பிறந்த பிள்ளையுடன் கூடினவனுவான். (219) சுக்கிரன் 12மிடத்தில் சனியின் அம்சத்திலிருந்தால் தாஸியினிடம் பிறந்த புத்திரனுடன் கூடினவனுவான்.

ஜாதக தத்துவத்திற்சொல்லிய ஐந்தாம் பாவபலன் முற்றிற்று.

## ஸர்வார்த்தசிந்தாமணியிற் சொல்லிய 5ம்பாவபலன்.

**सुतभवनात्सुतबुद्धी मन्त्रिणमपि मन्त्रभोजनपितॄंश्च ।**
**हृदयोदरप्रदेशं विवेकशक्तिं च निर्दिशेन्मतिमान् ॥ १ ॥**
**नाथैः कलत्रात्मजधर्मभानां पुत्रादिचिन्तां कथयेत्सजीवैः ।**
**बुद्धिं तथा सोमसुतात्मजाभ्यां पितुस्तथैवात्मजभाग्यसूर्यैः ॥ २ ॥**

5 மிடத்தைக் கொண்டு காணவேண்டியவைகள்.—(1) 5 மிடத்தைக் கொண்டு, புத்திரன், புத்தி, மந்திரி, மந்திரம், போஜனம், பிதா இவர்களையும், ஹிருதயம், வயிற்றுப் பிரதேசம்,

விவேகசக்தி இவற்றையும் புத்திமானுயுள்ளவன் குறிப்பிடவேண்டும். (2) குருவுடன் கூடின 7, 5, 9 மிடத்ததிபர்களைக் கொண்டு புத்திராதிசிந்தையைச் செய்யவேண்டும். புதன், 5 மிடம் இவற்றைக்கொண்டு புத்தியையும், 5, 9, சூரியன் இவற்றைக் கொண்டு பிதாவைப்பற்றியதையும் அறியவேண்டும்.

पितुर्धनं याति सुखे सभानौ पुत्रेशशांके मरणं च मातुः ।
सुते शुभे शोभनदृष्टियोगे पुत्रं ददात्येव तथा तदीशे ॥ ३ ॥

पुत्रस्थाने तदीशे वा गुरौ वा शुभवीक्षिते ।
शुभेन सहिते वापि पुत्रप्राप्तौ न संशयः ॥ ४ ॥

लग्नेशे पुत्रभावस्थे पुत्रेशे बलसंयुते ।
परिपूर्णबले जीवे पुत्रप्राप्तौ न संशयः ॥ ५ ॥

पुत्रस्थानाधिपे जीवे परिपूर्णबलान्विते ।
लग्नाधिपेन वा दृष्टे पुत्रप्राप्तौ न संशयः ॥ ६ ॥

वैशेषिकांशके जीवे पुत्रेशेऽपि तथास्थिते ।
शुभग्रहेण वा दृष्टे पुत्रप्राप्तिं समादिशेत् ॥ ७ ॥

पुत्रस्थानंगते वित्तनाथे पूर्णबलान्विते ।
दृष्टे देवेन्द्र गुरुणा पुत्रप्राप्तौ न संशयः ॥ ८ ॥

लग्नपुत्राधिपौ युक्तावन्योऽन्यं वापि वीक्षितौ ।
क्षेत्रे परस्परस्थौवा पुत्रप्राप्तौ न संशयः ॥ ९ ॥

लग्नपुत्राधिपौ केन्द्रे शुभग्रहसमन्वितौ ।
कुटुंबेशे बलाढ्ये तु पुत्रप्राप्तौ न संशयः ॥ १० ॥

पुत्रस्थानाधिपस्थांशराशीशे शुभसंयुते ।
शुभेन वीक्षिते वापि पुत्रप्राप्तौ न संशयः ॥ ११ ॥

लग्नेशे दारभावस्थे भाग्येशे दारसंयुते ।
द्वितीयेशे विलग्नस्थे पुत्रप्राप्तौ न संशयः ॥ १२ ॥

दारेशग्रहसंयुक्तनवांशभवनाधिपे ।
भाग्यवित्तविलग्नेशैर्दृष्टे तत्प्राप्तिमादिशेत् ॥ १३ ॥

புத்திரலாப யோகம்.—(3) 4மிடமானது சூரியனுடன் கூடினால் பிதிருதனத்தை யடைகிறான். 5ல் சந்திரனிருந்தால் மாதா

வுக்கு மாணமுண்டாகிறது 5மிடமோ, 5க் குடையவனே சுபரு டன் கூடியோ, சுபரின் பார்வையைப்பெற்ளே இருந்தால் புத்தி ரனைக் கொடுப்பான். (4) 5 மிடமோ, 5க் குடையவனே, குரு வோ சுபரால் பார்க்கப்பட்டாலும், சுபருடன் கூடினுலும் புத்தி ரப்பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (5) லக்கினதிபதி 5ம்பாவத் திலும், 5க் குடையவன் பலம்பெற்றும், குரு பரிபூர்ணபலம் பெற்று மிருந்தால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (6) குரு புத்திரஸ்தாஞதிபனுகவாகி பரிபூர்ணபலமும் பெற்று லக்கி ஞதிபனுலும் பார்க்கப்பட்டால் புத்திரப்பிராப்த்தியில் ஸந்தேஹ மில்லை. (7) குருவோ, 5க் குடையவனே வைசேஷிகாம்சமேறி சுபக்கிரஹத்தால் பார்க்கப்பட்டால் புத்திரப்ராப்த்தியைச் சொல் லவேண்டும். (8) 2க்குடையவன் 5மிடத்திலிருந்து பூர்ணபலம் பெற்று குருவினுலும் பார்க்கப்பட்டால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (9) லக்கின புத்திராதிபர்கள் சேர்ந்திருந்தா லும் ஒருவரையொருவர் பார்த்தாலும், ஒருவர் வீட்டில் மற்ற வரிருந்தாலும் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (10) லக்கின புத்திராதிபர்கள் கேந்திரத்தில் சுபக்கிரஹங்களுடன் சேர்ந்திருந்து. 2க் குடையவனும் பலம்பெற்றிருந்தால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (11) புத்திரஸ்தாஞதிபனிருக் கும் அம்சராசிசன் சுபருடன் கூடியோ, சுபர்பார்வையைப் பெற் ளே இருந்தால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (12) லக்கினேசன் 7லும், 9க்குடையவன் 7லும், 2க் குடையவன் 1லு மிருந்தால் புத்திரப் பிராப்த்தியில் ஸந்தேஹமில்லை. (13) 7க் குடையவனிருக்கும் நவாம்சவீட்டுக்குடையன் 9, 2, 1க் குடைய வர்களால் பார்க்கப்பட்டால் புத்திரப் பிரப்த்தியைச் சொல்ல வேண்டும்.

पापमध्ये तु तद्भावे तदीशेऽपि तथास्थिते ।
कारके पापसंयुक्ते पुत्रनाशं वदेत्तदा ॥ १४ ॥
भाग्यपुत्रकलत्रेशसंयुक्तनवभागपाः ।
पापांशगाः पापयुताः पुत्रनाशं वदेत्तदा ॥ १५ ॥
क्रूरांशे पुत्रभावेशे नीचमूढसमन्विते ।
पापैर्दृष्टेऽथवा दुःस्थे पुत्रनाशं वदेत्तदा ॥ १६ ॥

व्ययेशसंयुतांशेशे त्र्यंशनाथसमन्विते ।
दृष्टे पुत्रेश्वरे तेन पुत्रार्तिं कथयन्ति हि ॥ १७ ॥
पुत्रस्थानाधिपे दुःस्थे क्रूरषष्ट्यंशसंयुते ।
क्रूरग्रहेण वा दृष्टे पुत्रनाशं वदेत्तदा ॥ १८ ॥

புத்திரநாச யோகம்.—(14) புத்திரபாவமோ, புத்திரேசனோ பாபமத்யத்தை யடைந்து, காரகனும் பாபருடன் சேர்ந்திருந்தால் புத்திரநாசத்தைச் சொல்லவேண்டும். (15) 9, 5, 7க்குடையவர்களிருக்கும் நவாம்சவீட்டுக்குடையவர்கள் பாபாம்சத்தை யடைந்தோ, பாபருடன் கூடியோ இருந்தால் புத்திரநாசத்தைச் சொல்லவேண்டும். (16) புத்திரபாவேசன் க்ரூராம்சமேறி நீசனும், மூடனும் (அஸ்தங்கதனும்) ஆன கிரஹத்துடன் கூடி, பாபரால் பார்க்கப்பட்டோ, அல்லது 6, 8, 12மிடத்திலோ இருந்தால் அதுபோழ்து புத்திரநாசத்தைச் சொல்லவேண்டும். (17) 12க் குடையவனிருக்கும் அம்சேசன் த்ரிம்சாம்சநாதனுடன் கூடி புத்திரேசன் அவனால் பார்க்கவும்பட்டால் புத்திரநாசத்தைச் சொல்லவேண்டும். (18) புத்திரஸ்தானதிபன் 6, 8, 12 மிடங்களில் க்ரூரஷஷ்ட்யம்சத்திலிருந்தாலும், க்ரூரக்கிரஹத்தால் பார்க்கப்பட்டாலும் புத்திரநாசத்தைச் சொல்லவேண்டும்.

मृद्वंशादिसमायुक्ते पुत्रस्थानेश्वरे दृढे ।
गोपुरांद्यंशके वापि पुत्रसिद्धिर्न संशयः ॥ १९ ॥
पुत्राधिपस्थांशपतौ विलग्ने लग्नेश्वरस्थांशपतौ सुतस्थे ।
गुरुस्थितांशाधिपतौ च केन्द्रे पुत्राप्तिमाहुर्मुनयो महान्तः ॥ २० ॥
पारावतांशादियुतेसुतेशे भाग्येश्वरे तादृशभावयुक्ते ।
लग्नेश्वरे शोभनदृष्टियुक्ते पुत्राप्तिमाहुर्मुनयो महान्तः ॥ २१ ॥
वंशक्षयादि च खगेन्द्रसमागमाद्यैश्शास्त्रादिपारगमना मुनयो वदन्ति ।
पुत्रादियोगमखिलं तदभावयोगं प्रोक्तं विलोक्य मनसा च वदेत्सुविद्वान् ॥

புத்திரஸித்தி யோகம்.—(19) புத்திரஸ்தானேஸ்வரன் ம்ருத்வம்சாதிகளில் நிலைபெற்றிருந்தாலும், கோபுராத்யம்சங்களிலிருந்தாலும் புத்திரஸித்தியில் ஸந்தேஹமில்லை. (20) புத்திராதிபனிருக்கும் அம்சாதிபதி லக்கினத்திலும், லக்கினேஸ்வரனி

ருக்கும் அம்சபதி 5லும், குருவிருக்கும் அம்சபதி கேந்திரத்திலு மிருந்தால் மஹான்களான முனிகள் புத்திரப்பிராப்த்தியைச் சொல்லுகின்றனர். (21) 5க் குடையவன் பாராவதாதி அம்சத் திலிருந்து, 9க் குடையவன் 5லு மிருந்து, லக்கினேஶ்வரன் சுபர் திருஷ்டியையும் பெற்றால் புத்திரப்பிராப்த்தியை மஹான்களான முனிகள் சொல்லுகின்றனர். (22) வம்சக்ஷயம் முதலியவற்றை யும் சாஸ்திரத்தின் கறைகண்ட முனிகள் கிரஹங்களின் சேர்க் கையைக் கொண்டு சொல்லுகின்றனர். இதுவரை சொல்லிய புத் திராதியோகத்தையும் புத்திராபாவயோகத்தையும் மனத்தால் நன்கு ஆலோசித்தறிந்து பலன் சொல்லவேண்டும்.

वंशस्य विच्छेदकरः प्रजातः चंद्रास्फुजित्पापखगाः क्रमेण ।
खदारसौख्येषु युतास्तथैव लग्नेश्वरे चन्द्रसुतेन युक्ते ॥ २३ ॥
पापग्रहा रिःफसुताष्टमस्था वंशस्य विच्छेदकरोऽर्थहीनः ।
निशाकरे लग्नगते सजीवे तत्सप्तमे भूमिसुते शनौ वा ॥ २४ ॥
पापग्रहा बंधुगताश्च सर्वे वंशस्य विच्छेदकरोऽत्र जातः ।
लग्नान्त्यपुत्राष्टमराशियुक्तैः पापग्रहैर्वंशविनाशहेतुः ॥ २५ ॥
शुभेतरा रंध्रविलग्नरिःफे वंशस्य विच्छेदकरस्सुतेऽब्जे ।
दारस्थिते सोमसुते सशुक्रे पापे सुखे देवगुरौ सुतस्थे ॥ २६ ॥
रंध्रे शशाङ्कात्सहिते तु पापैर्वंशस्य विच्छेदकरोऽत्र जातः ।
पापे विलग्ने सुखगे शशांके लग्नेश्वरे पञ्चमराशियुक्ते ॥ २७ ॥
बलैर्विहीने यदि पुत्रनाथे वंशस्य विच्छेदकरोऽत्र जातः ।
क्षीणे शशांके तनुभावयुक्ते मूढान्विते मन्दगृहे सुरेज्ये ॥ २८ ॥
त्रिकोणगैः पापखगैश्च सर्वैः प्रागेव पुत्रस्य सुखाद्विनाशः ।
चन्द्रात्मजे पंचमराशियुक्ते लग्ने सुखे वा यदि पापयुक्ते ॥ २९ ॥
शुभेतरैः पंचमभावयुक्तैर्न दृश्यते पुत्रसुखं हि तेन ।
जातो यदिस्यात्क्षितिसूनुलग्ने रंध्रे शनौ पंचमगे शनौ वा ॥ ३० ॥

வம்சவிச்சேத யோகம்.—(23) சந்திரன், சுக்கிரன், பாபக் கிரஹங்கள் இவைகள் முறையே 10, 7, 4மிடங்களிலிருந்தாலும், அவ்விதமே லக்கினாதிபதி புதனுடன் சேர்ந்தாலும், வம்சத்திற்கு விச்சேதத்தைச் செய்கின்றவனாகவாகிறான். (24) பாபக்கிரஹங் கள் 12, 5, 8 மிடங்களிலிருந்தால் வம்சவிச்சேதகாரனாகவும்,

பொருளற்றனுகவும், ஆகிருன். இவ்விதமே சந்திரன் குருவுடன் கூடி லக்கினத்திலிருந்து அதற்கு 7மிடத்தில் செவ்வாயோ, சனியோ இருந்தாலும் வம்சவிச்சேதமுண்டாகும், (25) பாபக்கிரஹங்கள் 4 மிடத்திலிருந்தாலும், 1, 12, 8 மிடங்களிலிருந்தாலும் வம்சவிச்சேதமேற்படும். (26) பாபர் 8, 1, 12லும், 5ல் சந்திரனும், சுக்கிரனுடன் கூடின புதன் 7லும், பாபக்கிரஹங்கள் 4மிடத்திலும், குரு 5மிடத்திலு மிருக்கப் பிறந்தவன் வம்சவிச்சேதம் செய்பவனுவான். (27) சந்திரனுக்கு 8மிடம் பாபக்கிரஹங்களுடன் கூடியும், லக்கினத்தில் பாபியும், 4லில் சந்திரனும், லக்கினேஶ்வரன் 5லு மிருக்கப்பிறந்தவன் வம்சவிச்சேதம் செய்பவனுகவாகிருன். (28) 5க் குடையவன் பலமற்றவனுகவாகியும், தேய்பிறைச்சந்திரன் லக்கினத்தில் அஸ்தங்கதக் கிரஹத்துடன் கூடியுமிருந்து சனியின்வீட்டில் (மகரத்தில்) குருவுமிருக்கப்பிறந்தவன் வம்சவிச்சேதம் செய்பவனுக வாகிருன். (29) பாபக்கிரஹங்கள் எல்லாம் திரிகோணத்திலிருந்தாலும், அல்லது புதன் 5லும், 1, 4 மிடம் பாபருடன் கூடியு மிருந்தாலும் இதில்பிறந்தவன் புத்திரசுகத்திற்கு முந்தியே நாசமடைந்து விடுகிருன். (30) பாபக்கிரஹங்கள் 5ம் பாவத்திலிருந்து, ஜன்ம லக்கினம் செவ்வாயின்வீடாகி 8ல் சனியும் 5ல் சூரியனுமிருந்தால் அவனுல் புத்திரசுகம் காணப்படமாட்டாது.

पुत्रादिलाभं मुनयो वदन्ति कालान्तरे शोभनदृष्टियोगात् ।
लग्ने शनौ देवगुरौ तु रंध्रे व्यये कुजे पुत्रभवश्चिरेण ॥ ३१ ॥

காலம் சென்று புத்திரனுண்டாகும் யோகம்.—(31) லக்கினத்தில் சனியும், குரு 8லும், 12ல் செவ்வாயு மிருந்து சுபர் பார்வை 5மிடத்திற்கிருந்தால் கடை காலத்தில் தாமதித்துப் புத்திரலாபத்தை முனிகள் உபதேசிக்கின்றனர்.

बुद्धिस्थानाधिपे सौम्ये शुभदृष्टिसमन्विते ।
शुभग्रहाणां क्षेत्रे वा बुद्धिमान्नीतिमान्भवेत् ॥ ३२ ॥
परमोच्चांशके बुद्धिनाथे सौम्यनिरीक्षिते ।
शुभग्रहाणां मध्यस्थे तीव्रबुद्धिं समादिशेत् ॥ ३३ ॥
कारके बलसंपूर्णे तदीशे शुभवीक्षिते ।
बुद्धिस्थानेऽथवा सौम्ये तीव्रबुद्धिं समादिशेत् ॥ ३४ ॥

बुद्धिस्थानाधिपस्थांशराशीशे शुभवीक्षिते ।
वैशेषिकांशके वापि तीव्रबुद्धिं समादिशेत् ॥ ३५ ॥
कारकस्थितराश्यंशनाथे केन्द्रत्रिकोणगे ।
बुद्धीश्वरेण संदृष्टे तीव्रबुद्धिं समादिशेत् ॥ ३६ ॥
शुभग्रहाणां मध्यस्थे बुद्धिराशौ शुभान्विते ।
गुरौ केन्द्रत्रिकोणे वा बुद्धिमार्गविशारदः ॥ ३७ ॥
बुद्धिस्थानाधिपे सौम्ये बुद्धिराशिगते गुरौ ।
शुभग्रहाणां मध्यस्थे भावे बुद्धिं विनिर्दिशेत् ॥ ३८ ॥

தீவ்ர (கூர்மையான) புத்தியுள்ளவனாகவாகும் யோகம்.—(32) 5க் குடையவன் சுபனாகி சுபர் பார்வையை யடைந்தாலும், 5 மிடம் சுபர் வீடானாலும் புத்திமானாயும், நீதியறிந்தவனாயு மாவான். (33) 5க் குடையவன் பரமோச்சாம்சத்திலிருந்து சுபர் பார்வைபெற்றாலும், சுபக்கிரஹங்களின் நடுவிலிருந்தாலும் தீவ்ர மான புத்தியைச் சொல்லவேண்டும். (34) காரகன் பூர்ண பலம் பெற்று, 5க் குடையவனாலும் அவன் பார்க்கப்பட்டாலும், 5 மிடத்தில் சுபரிருந்தாலும் தீவ்ர புத்தியைச் சொல்லவேண்டும். (35) 5க் குடையவனிருக்கும் அம்சராசீசன் சுபரால் பார்க்கப் பட்டு வைசேஷிகாம்சமேறினாலும் தீவ்ர புத்தியைச் சொல்ல வேண்டும். (36) புத்திகாரகன் (குரு) இருக்கும் ராசி, அம்சம் இவற்றிற்குடையவன் கேந்திரத்திரிகோணத்திலிருந்து 5க்குடை யவனால் பார்க்கப்பட்டால் தீவ்ரபுத்தியைச் சொல்லவேண்டும். (37) 5 மிடமானது சுபக்கிரஹங்களின் நடுவிலிருந்து சுபருட னும் கூடி, குரு கேந்திரத்திரிகோணத்தினு மிருந்தால் புத்தி வழியில் ஸமர்த்தனுவான். (38) புத்திஸ்தானாதிபன் புதனாகி 5 மிடத்தில் குருவுமிருந்து 5ம் பாவமானது சுபக்கிரஹங்களின் நடுவினுமிருந்தால் (தீவ்ர) புத்தியைச் சொல்லவேண்டும்.

बुद्धिस्थानेश्वरे केन्द्रे शुभग्रहसमन्विते ।
उच्चग्रहसमायुक्ते ग्रहणादिपटुर्भवेत् ॥ ३९ ॥
मृद्वंशादिसमायुक्ते नाथकारकखेचरे ।
शुभग्रहेण संदृष्टे धारणादिपटुर्भवेत् ॥ ४० ॥
गोपुराद्यंशके वापि धारणादिपटुर्भवेत् ।
परेङ्गितज्ञो मेधावी कारकस्थितभागपे ॥ ४१ ॥

केन्द्रत्रिकोणसंयुक्ते कारकग्रहवीक्षिते ।
नाथकारकसंयुक्ते त्र्यंशभागपतौ शुभे ।
चतुष्टये त्रिकोणे वा शुभदृष्टेङ्गितज्ञकृत् ॥ ४२ ॥

க்ரஹணாதி ஸமர்த்தனாகும் யோகம்.—(39) 5க் குடையவன் கேந்திரத்தில் சுபக்கிரஹத்துடனே உச்சத்திலிருக்கும் கிரஹத்துடனே கூடினால் க்ரஹணாதிகளில் (அறிவதில்) ஸமர்த்தனாகிறான். (40) 5 மிடத்ததிபனே, காரக (குரு)னே மிருத்வம்சாதிகளிலிருந்து சுபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டால் தாரணாதிகளில் (கேட்டவிஷயத்தை அப்படியே மனத்தில் தரிப்பதில்) ஸமர்த்தனாக வாவான். (41) புத்திகாரகனான குருவிருக்கும் அம்சபதியானவன் கோபுராத்யம்சமேறியிருந்தால் பிறர் இங்கித (குறிப்பு) மறிபவனாகவும், மேதாவியாகவும், தாரணாதி ஸமர்த்தனாகவும் ஆவான். (42) த்ரிம்சாம்சாதிபதியானவன் சுபனாகி கேந்திரத் திரிகோணமேறியோ, புத்திகாரகக்கிரஹத்தால் பார்க்கப்பட்டோ, 5ம் பாவாதிபதி, அல்லது காரகன் இவர்களுடன் சேர்ந்தோ இருந்து கேந்திரத்திரிகோணங்கள் சுபரால் பார்க்கப்பட்டு மிருந்தால் பிறர் இங்கித (குறிப்பு)மறிந்தவனாக வாகிறான்.

पंचमे पापसंयुक्ते तदीशे पापसंयुते ।
क्रूरषष्ट्यंशकेवापि बुद्धिनाशो भवेत्तदा ॥ ४३ ॥
नीचारिमूढगेहस्थे पापखेचरवीक्षिते ।
क्रूरषष्ट्यंशसंयुक्ते बुद्धिनाशो भवेत्तदा ॥ ४४ ॥
पंचमे मन्दसंयुक्ते लग्नेशे मन्दवीक्षिते ।
तदीशे पापसंयुक्ते बुद्धिजाड्यं समादिशेत् ॥ ४५ ॥
मन्दमान्दिगुसंयुक्ते पंचमे शुभवर्जिते ।
तदीशे पापसंदृष्टे विस्मृतिः प्रायशो भवेत् ॥ ४६ ॥
बुद्धिर्विस्मृतिपूर्वा स्यात्कारके शुभसंयुते ।
तदीशे पापसंयुक्ते क्रूरषष्ट्यंशकेपि वा ॥ ४७ ॥

புத்திநாச யோகம்.—(43) 5 மிடமோ 5க் குடையவனே பாபருடன் கூடினாலும், அல்லது குரூரஷஷ்டியம்சத்தி லிருந்தாலும் அப்பொழுது புத்திநாசமுண்டாகும். (44) 5க் குடைய

வனோ காரகனோ நீசவீடு, சத்துருவீடு அஸ்தங்கதமான கிரஹத்தின் வீடு, இவற்றிலிருந்து பாபக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டோ, குரூரஷஷ்டியம்சமேறியோ இருந்தால் அப்பொழுது புத்திநாசமுண்டாகும். (45) 5ல் சனியிருந்தாலும், லக்கினேசன் சனியினால் பார்க்கப்பட்டாலும், 5க் குடையவன் பாபருடன் கூடினாலும் புத்தியில் ஜாட்டியத்தைச் சொல்லவேண்டும். (46) 5மிடத்தில் சுபரில்லாது சனி, மாந்தி ராகு இவர்களிருந்து 5க் குடையவன் பாபராலும் பார்க்கப்பட்டால் பெரும்பாலும் விஸ்மிருதியாக (பைத்தியம் பிடித்தவனாக) ஆவான். (47) புத்திகாரகனான குரு சுபருடன் கூடியிருந்து 5க் குடையவன் பாபருடன் கூடியோ, குரூரஷஷ்டியம்சமேறியோ இருந்தால் பைத்தியத்தை முன்னிட்ட புத்தியுள்ளவனாவான்.

सौम्ये तु बुद्धिभावस्थे गुरुशुक्रनिरीक्षिते ।
तादृशे बुद्धिनाथे वा सर्वेषां बुद्धिदो भवेत् ॥ ४८ ॥
ऊहापोहसमर्थस्स्यात्तदीशे गोपुरांशके ।
कारकस्थितराशीशे लग्ननाथेन वीक्षिते ।
राजमन्त्री भवेद्दाता वाक्पतौ बलसंयुते ॥ ४९ ॥
बुद्धीश्वरेण संयुक्ते गोपुराद्यंशकान्विते ।
आगामिसूचको मन्त्री कारके केन्द्रकोणगे ॥ ५० ॥
भृगौ सौम्यसमायुक्ते दृष्टे तेन शुभांशके ।
त्रिकालज्ञो भवेज्जीवे स्वांशे मृद्वंशसंयुते ॥ ५१ ॥

புத்திசாலியாக வாகுதலின் யோகம்—(48) 5ம் பாவத்தில் புதனிருந்து குரு சுக்கிரன் இவர்களாலும் பார்க்கப்பட்டாலும், 5க் குடையவன் குரு சுக்கிரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும் எல்லாருக்கும் புத்தியைத்தருகின்றவனாக ஆவான். (49) 5க் குடையவன் கோபுராத்யம்ச மேறினாலும், புத்திகாரகனிருக்கும் ராசீசன் லக்கினாதிபதியினால் பார்க்கப்பட்டாலும் குருபலம்பெற்றாலும் ஊஹா போஹ ஸமர்த்தனாகவும், ராஜமந்திரியாகவும், கொடையாளியாகவு மிருப்பான். (50) புத்திகாரகன் கேந்திர கோணத்தையடைந்து 5க் குடையவனுடன் சேர்ந்தோ, கோபுராத்யம்ச மேறியோ இருந்தால் பின்னர் வருவதை முன்னரே

தெரிவிக்கும் மந்திரியாக வாவான். (51) சுக்கிரன் சுபனுடன் கூடியோ, அல்லது சுபனுல்பார்க்கப்பட்டோ சுபாம்சத்திலோ இருந்தாலும், குரு சொந்தநவாம்சத்திலோ, மிருத்வம்சத்திலோ இருந்தாலும் முக்காலமறிந்தவனுக வாகிருன்.

गोपुराद्यंशके वापि शुभांशे शुभवीक्षिते ।
पुंगृहे पुंग्रहप्राप्ते पुंभागे पुत्रनायके ।
सुपुत्रजननं विन्द्यात्प्रथमं नात्र संशयः ॥ ५२ ॥

முதலில் ஆண்குழந்தையுண்டாகும் யோகம்.—(52) 5க்குடையவன் புருஷநவாம்சத்தை யடைந்தோ, அல்லது புருஷக்கிரஹமானது புருஷராசியையடைந்தோ இருந்தாலும், கோபுராத்யம்சத்திலிருந்தாலும், சுபாம்சமேறி சுபரின் வீக்ஷணத்தை யடைந்தாலும் முதலில் நல்ல ஆண்குழந்தையின் பிறவியைச் சொல்லவேண்டும். இதில் ஸந்தேஹமில்லை.

स्त्रीराशौ स्त्रीग्रहप्राप्ते स्त्रीभावे पुत्रनायके ।
दारिकां प्रथमं विन्द्यात्षण्ढांशे षण्ढमादिशेत् ॥ ५३ ॥

முதலில் பெண்குழந்தை பிறக்கும் யோகம்.—(53) ஸ்திரீ ராசியில் ஸ்திரீகிரஹமிருந்தும், 5க் குடையவன் 7 மிடத்திலுமிருந்தால் முதலில் பெண்பிறக்கும் என்றறியவேண்டும். அலிக்கிரஹத்தின் அம்சத்திலிருந்தால் அலிப்பிறவியுண்டாகும் எனச் சொல்லவேண்டும்.

कारकस्थितराशेर्वा पंचमे बिन्दुसंख्यया ।
नीचारिमूढगेहानां बिंदुं त्यक्त्वा सुतान्वदेत् ॥ ५४ ॥
पुत्रस्थानेशकिरणात्पुत्रभावांशकाद्वदेत् ।
रश्मिजालैर्गुरोर्वापि बलोत्कर्षाद्वदेत्तथा ॥ ५५ ॥

புத்திரனின் எண்ணையறிதலின் யோகம்.—(54) புத்திரகாரகனிருக்கும் ராசிக்கு 5 மிடத்திலிருக்கும் அஷ்டகவர்க்கபிந்துக்களில் நீசக்கிரஹம், சத்துருக்கிரஹம் அஸ்தங்கதமானக் கிரஹம் இவர்கள்மூலம் கிடைத்த பிந்துக்களை நீக்கி மீதமுள்ள பிந்து எவ்வளவோ அவ்வளவு புத்திரர்களைச் சொல்லவேண்டும். (55) புத்திரபாவேசனுடைய கிரணத்தைக்கொண்டோ, புத்திர

பாவாம்சத்தைக் கொண்டோ, குருவின் கிரணங்களைக்கொண்டோ, அதனதன் பலதாரதம்மியத்தை முன்னிட்டு புத்திரஸங்கியைச் சொல்லவேண்டும்.

लग्नपुत्रेशयोश्चैव मित्रत्वेनैव मित्रता ।
शत्रुत्वे शात्रवं प्रोक्तं समत्वे समता भवेत् ॥ ५६ ॥

लग्नपुत्रेश्वरौ खेटौ परस्परनिरीक्षितौ ।
परस्परगृहांशस्थौ शुश्रूषां कुरुते सुतः ॥ ५७ ॥

लग्नं पश्यति वा पुत्रनाथे लग्नान्विते यदि ।
लग्नेश्वरे सुतर्क्षे वा पुत्रो वाक्यवशानुगः ॥ ५८ ॥

पुत्रस्थानेश्वरे दुःस्थे लग्नेशेनापि वीक्षिते ।
संदृष्टे कुजराहुभ्यां नित्यं पितृविदूषकः ॥ ५९ ॥

पञ्चमे गुरुशुक्राभ्यां सवित्रा सहितेऽथवा ।
एतेषां भवने वापि सोऽयं योजयिता भवेत् ॥ ६० ॥

புத்திரனின் குணமறிதலின் யோகம்.—(56) லக்கினபுத்திராதிபர்களுக்கு மித்திரத்வமிருந்தால் புத்திரனுடைய மித்திரத்தன்மையும், சத்துருத்வமிருந்தால் சத்துருத்தன்மையும், ஸமத்வமிருந்தால் ஸமத்தன்மையும் இருக்கும். (57) லக்கினபுத்திரேஸ்வரர்களான கிரஹங்கள் ஒருவராலொருவர் பார்க்கப்பட்டு ஒருவர் வீடு அம்சம் இவற்றில் மற்றவர் மாறியிருந்தால் புத்திரன் பிதாவுக்குச் சுஸ்ரூஷையைச் செய்வான். (58) 5க்குடையவன் லக்கினத்தைப் பார்த்தாலும் லக்கினத்திலிருந்தாலும், அல்லது லக்கினாதிபதி 5லிருந்தாலும் புத்திரன் பிதாவின் வாக்கியத்துக்கு வசப்பட்டிருப்பான். (59) 5க்குடையவன் 6, 8, 12லிருந்து லக்கினேசனாலும் பார்க்கப்பட்டு குஜன், ராஹு இவர்களாலும் பார்க்கப்பட்டால் புத்திரன் பிதாவைத் தூஷிப்பவனாவான். (60) 5மிடமானது குரு சுக்கிரர்களுடன் கூடினாலும், அல்லது சூரியனுடன் கூடினாலும், அல்லது இவர்களுடைய வீடு 5மிடமாகவானாலும் அவன் ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்த்துவைப்பவனாகவாவான்.

तृतीयेशे तृतीयस्थे पञ्चमेशे सुखं गते ।
शुभोच्चखेटसंयुक्ते जातो भोजयिता भवेत् ॥ ६१ ॥

अन्नदानपरो नित्यं पञ्चमेशे शुभं गते ।
शुभग्रहैस्समायुक्ते युक्तीशे शुभसंयुते ॥ ६२ ॥

அன்னதானம் செய்யும் யோகம்.—(61) 3க் குடையவன் 3 லிருந்து, 5க் குடையவன் 4மிடத்தை யடைந்து சுபனும் உச்சத்திலிருப்பவனுமான கிரஹத்துடன் கூடியுமிருந்தால் அது போழ்து பிறந்தவன் போஜனம் செய்துவைப்பவனுக வாவான். (62) 5க் குடையவன் சுபஸ்தானத்தை யடைந்து சுபக்கிரஹங்களுடன் கூடினுலும் 5க் குடையவன் சுபருடன் கூடினுலும் நித்தியம் அன்னதானபரனுகவாகிறுன்.

हृदये पापसंयुक्ते तदीशे पापसंयुते ।
पापग्रहाणां मध्यस्थे हृद्गतं रोगमादिशेत् ॥ ६३ ॥
तन्नाथे नाशभावस्थे नाशस्थानेशसंयुते ।
नीचारिमूढभावे वा हृद्गतं रोगमादिशेत् ॥ ६४ ॥
तदीशस्थांशराशीशे क्रूरषष्ट्यंशसंयुते ।
क्रूरग्रहेण संदृष्टे हृद्गतं शल्यमादिशेत् ॥ ६५ ॥

ஹிருதயரோகமுண்டாகும் யோகம்.—(63) 5ல் பாபரும் 5க் குடையவன் பாபருடன் கூடியுமிருந்தாலும், பாபக்கிரஹங்களின் நடுவிலிருந்தாலும் மனத்தில் ரோகத்தைச் சொல்லவேண்டும். (64) 5க் குடையவன் 8 மிடத்திலிருந்தாலும் 8க் குடையவனுடன் கூடினுலும், நீசம், சத்துருவீடு அஸ்தமனம் இவற்றை யடைந்தாலும் ஹிருதயத்தில் ரோகத்தைச் சொல்லவேண்டும். (65) 5க் குடையவனிருக்கும் அம்சம், ராசி, இவற்றிற்குடையவன் குரூரஷஷ்டியம்சத்திலிருந்து குரூரக்கிரஹத்தாலும் பார்க்கப்பட்டால் ஹிருதயசல்ய(பீடை)த்தைச் சொல்லவேண்டும்.

ஸர்வார்த்த சிந்தமணியிற்சொல்லிய 5-வது பாவபலன் முற்றிற்று.

ஜாதகத்வாதசபாவபல நிர்ணயத்தில் முதலாவதுபாகம்
முற்றிற்று.

சுபம்.

## தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

## சோதிட சாஸ்திரக் கிரந்தங்கள்.

# பிருஹத் ஜாதகம்

## தமிழ் மொழிபெயர்ப்பு

இதையே ஹோரை என்றும், வராஹ ஹோரை என்றும் சொல்லுவர். இதற்குப் பல வியாக்யானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக் கிணங்கவும் சுலபமான தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட் டிருக்கிறோம். யாவராலும் மிக்க கடினம் எனக் கருதப்படும் ஆயுர்த்தாயம், தசாந்தர்த்தசை, நஷ்ட ஜாதகம் முதலிய பாகங்களுக்கு யாவர்க்கும் புரியக்கூடிய நிலையில் மிக்க விரிவாக உரை எழுதப்பட் டிருக்கின்றது. உதாஹரணமாய் பலஅனுபவ ஜாதகங்களும் கட்டங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட் டிருக்கின்றன. கர்க்கர், பராசரர், சத்தியா சாரியர், யவனேசுவரர் முதலியோரின் கிரந்தங்களினின்றும், ஸாராவளியினின்றும் அந்தந்த விடத்திற்குத் தேவையான வசனங்களை எடுத்து எழுதி தமிழில் உரையுமெழுதப்பட் டிருக்கிறது. இதன் முகவுரையில் சோதிட சாஸ்திரம் நம்பத்தக்கதல்ல என்றது முதலிய வாதங்களுக்குத் தக்க சமாதானமும், வராஹ மிஹிரரின் கால நிர்ணயமும் செய்யப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்கால நிலையை யறிந்து கொள்வது அவச்யமாதலால் சோதிடத்தை யப்யசிக்க விருப்பமுள்ளோரும், பல சாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப் புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். புஸ்தகம் டிம்மி எட்டு பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கில்ட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டு செய்தது. கிளேஸ். ரூ. 8 ரப். ரூ. 7.

## ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம்.

### முதற்பாகம் 1ம் பாவம் முதல் 5ம் பாவம் முடிய.

தேவநாகரலிபியில் மூலமும் தமிழுரையுமுள்ளது (புதுப் பிரசுரம்.)

(2) இதில் பராசரஸம்ஹிதை, ஸாராவளீ, பலதீபிகை, ஸர்வார்த்த சிந்தாமணி, ஜாதகதத்துவம் முதலிய கிரந்தங்களில் ஒவ்வொரு பாவ விஷயமாகவும் விரிவாகக் கூறியுள்ள வசனங்கள் யாவையும் தனித்தனியே அந்தந்த பாவபலன் கூறுமிடத்து எடுத்து எழுதி அவற்றை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து தமிழ்மக்கள் யாவர்க்கும் பயன்படுமாறு வெளியிட்டிருக்கிறோம். இதில் (1) லக்கினபாவம், (2) தனபாவம், (3) ஸஹோதரபாவம்,

(4) பந்துபாவம், (5) புத்திரபாவம் என்ற ஐந்து பாவங்களின் பலன்கள் விரிவாய் கூறப்பட்டுள்ளன. இப்புஸ்தகமொன்று கை வசமிருக்குமானால் பாவபல நிர்ணயத்திற்காகப்பலக்கிரந்தங்களைப் பார்ப்பதாலுண்டாகும் சிரமம் நீங்கும் என்பதில் ஐயமில்லை. இதன் உதவியால் எவரும் அந்தந்த பாவபலனைச்சுலபமாய் நிர்ணயித்துக் கொண்டுவிடலாம். இதில் கூறிய முறைகள் யாவும் பெரும்பாலும் அனுபவத்திற்கு ஒத்திருப்பதால் இப்புஸ்தகத்தை ஒவ்வொரு சோதிடாபிமானிகளும் வாங்கிப் படித்துப் பயன டைவது மிகவுமவசியம். டெம்மி 1க்கு 8ல் 400 பக்கங்களுள்ளது.

விலை கிளேஸ் ரூ. 3–8–0. ரப் ரூ. 3.

குறிப்பு—இப்புஸ்தகத்தின் முதற்பாகம் வாங்குபவர்களின் விலாஸத்தை பதிவுசெய்து வைத்திருந்து இரண்டு, மூன்றுவது பாகங்கள் வெளியானதும் கடித மூலம் தெரிவிக்கப்படும். இரண்டாம் பாகத்தில் 6, 7, 8-வது பாவங்களும், மூன்றும் பாகத்தில் 9, 10, 11, 12-வது பாவங்களு மடங்கியிருக்கும்.

# உடுதசாபல நிர்ணயம்.

(3) இத்தலையங்கத்தின் கீழ் பாராசரஸம்ஹிதை, பலதீபிகை, ஸாராவளீ, ஜாதகசந்திரிகை, ஸர்வார்த்தசிந்தாமணி, தமிழ்ஜாதகாலங்காரம் முதலிய புராதன சோதிடக்கிரந்தங்களில் உடுதசாவிஷயமாகச் சொல்லிய பலன்களையும், ஷ தசையைப் பரிசீலனம் செய்யவேண்டிய முறையையும் ஒருங்கே சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இதில் தேவநாகரலிபியில் அந்தந்தக்கிரந்தங்களிலுள்ள மூலசுலோகங்களும், பல அனுபவஜாதகங்கள் உதாஹரணங்கள் இவைகளுடன் கூட எளியதமிழ்நடையில் எழுதப்பட்ட கருத்துரையும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு தசையையு மெடுத்துக்கொண்டு, புக்தி, அந்தரம், ஸூக்ஷ்மம், பிராணன் வரையுள்ள காலப் பிரிவினைகளை கட்டம்போட்டு காண்பித்து ஒவ்வொன்றிலும் நடக்கும் பலன்களும் விவரமாய் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்புஸ்தகமொன்று கைவசமிருக்குமானால் உடுதசாபலனை யறிவதற்கு வேறு புஸ்தகம் தேவையாக விருக்காதென்பதுடன், மனம்போனவாறு தசா, புக்தி, அந்தர, சூக்ஷ்ம, பிராண பலன்களைச் சொல்லும் ஏனைய சோதிட வித்வான்களையணுகி அவர் மொழி கேட்பதன் மூலம் நேரும் சிரமமும் உங்களுக்கு ஒருபொழுதும் நேராதென்பதும் திண்ணம். மேலும், நாம்பலவருஷகாலமாய்ச்சோதிடத்தில்பாடு பட்டு எந்த அனுபவமுறைகளைக்கண்டுகொண்டிருக்கின்றோமோ அவற்றையும் ஆங்காங்கு குறிப்பிட்டுமிருக்கிறோம். சோதிடத்தில் பரிசிரமப் படுகின்றவர்களுக்கு எந்தப் புஸ்தக மொன்றிருந்தால்

மற்றபுஸ்தகங்கள் தேவையாக விராதென்பதை நமது அனுபவத்தினின்றும் கண்டு இப்புஸ்தகத்தை வெளியிட்டிருப்பதால் யாவர்க்கும் இப்புஸ்தகம் நிரம்பவும் தேவையாகவிருக்கும் என்பதில் யாதும் ஐயமில்லை. டிம்மி 1க்கு 8 பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. விலை கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3–8–0.

(4) சகுனபல நிர்ணயம்.—ஸ்ரீவராஹ மிஹிராசிரியரால் பிருஹத்ஸம்ஹிதை என்ற கிரந்தத்தில் 85-வது அத்தியாயம் முதல் 95-வது அத்தியாயம் முடியவுள்ள 11 அத்தியாயங்களால் உபதேசிக்கப்பட்ட சகுனபலன்களை சகுனபல நிர்ணயம் என்ற தலையங்கத்தின் கீழ் நாகரலிபியில் மூலத்துடனும், தமிழுரையுடனும் வெளியிட்டிருக்கிறோம். இதில் மிகவும் அனுபவத்தில் ஒத்துவருகின்ற சகுனங்களும் அதன் பலன்களும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதில் அக்ஷரகோசாத்தியாயம் என்றதொருபாகம் சேர்த்து உரை எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதை ஒருவன் நன்கு படித்து அறிந்து கொள்வானேல் கேட்போர் ஆச்சரியப்படும்படி அவரின் பெயரையும், அவரால் கேட்கப்படும் பொருளின் பெயரையும் எளிதில் சொல்லிவிடக் கூடும் என்பதில்யாதும் ஐயமில்லை. கிளேஸ் ரூ. 1–8–0. ரப் ரூ. 1–4–0.

(5) கோசரபல நிர்ணயம்—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன. தசாபுக்திபலன்களும், கோசரபலன்களும் சிலவிடங்களில் மாறி நடப்பதற்குரிய காரணங்களும், கோசரபலன், தசாபுக்திபலன் இவற்றை எவ்விதம் கவனித்தால் அனுபவத்தில் அது ஒத்துவரக்கூடும் என்பதும் பல திருஷ்டாந்தங்கள் வாயிலாக விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. பள்ளியிற்பயிலும் மாணவர்கள் கூட இதனுதவியால் அந்தந்த வருஷத்தில் மேல் வகுப்புக்கு மாற்றம், பரீக்ஷையில் தேர்ச்சி இவற்றை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும் என்றால் மற்றவர் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? விலை அணா 12. 14 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

## ஜாதக சந்திரிகை தமிழ் மொழிபெயர்ப்பு.

(6) இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். இதிற் சொல்லிய முறைகள் யாவும் அனுபவத்திற்கு மிக்க ஒத்தவைகளாகும். இதனுதவியின்றி பலன் சொன்னால் அப்பலன்கள் பெரும்பாலும் அனுபவத்திற்கு ஒத்திருக்கமாட்டா. மேலும் இதில் விவாஹத்திற்குவேண்டிய 10 விதப் பொருத்தங்களைப் பார்க்கவேண்டிய முறைகள், அங்காரகதோஷ நிர்ணயம் முதலிய முக்கியமான விஷயங்களுமடங்கியிருக்கின்றன. விலை ரூ 1. 1-2-0 க்கு ஸ்டாம்பு அனுப்பியும் இதைப்பெறலாம்.

(7) நஷ்ட ஜாதகம்.—தேவநாகரலிபியில் மூலத்துடனும் தமிழில் விரிவான பதவுரை கருத்துரைகளுடனும் கூடியது. வாராஹமிஹிரரால்செய்யப்பட்டநஷ்ட ஜாதகாத்யாயத்தை யனுஸரித்தது. இதனுல் ஜாதகமில்லாதவனும் தனது ஜாதகத்தைக்கணித்து கொண்டுவிடலாம். விலை அணு 4. 5 அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

(8) நவக்கிரஹாராதனக் கிரமம். இதில் நவக்கிரஹங்களை யாராதிப்பதேன்? என்ற விஷயமாய்ப் பலவாக்ஷேப சமாதானங்களடங்கிய விரிவான உபன்னியாசமும், எந்தெந்தக் காலங்களில் ஆராதிக்க வேண்டும் என்பதும், நவக்கிரஹப் பிரதிமை, நவக்கிரஹ ஹோம குண்டம் முதலியவற்றைத் தயாரிக்கவேண்டிய முறையும், ஆராதனத்திற்கு வேண்டிய மந்திரங்கள் தமிழுரையுடனு மடங்கி இருக்கின்றன. அத்துடன் நவக்கிரஹ மந்திரம், நவக்கிரஹ ஸ்தோத்திரம், நவக்கிரஹ கவசம், நவக்கிரஹ அஷ்டோத்தரம், விஷ்ணு கவசம், ஆதித்யஹிருதயம் இவைகள் பாராயணத்திற்கு உபயோகப்படுமாறு நாகரலிபியில்தனியே பிழையின்றி அச்சிடப்பட் டிருக்கின்றன. விலை கிளேஸ். ரூ. 1-4-0 ரப் 1-0-0

## வைதிக க்ரந்தங்கள்.

(9) மந்திரப்பிரச்னம்—இதில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம் சவுளம், உபநயனம், ஸமாவர்த்தனம், சிராத்தம், அஷ்டகை, ஸர்ப்பபலி ஈசானபலி முதலிய ஸம்ஸ்காரங்களில் உபயோகிக்கப்படும் மந்திரங்களும், ஷை கர்மங்களை நிரூபிக்கின்ற ஆபஸ்தம்ப கிருஹ்யஸூத்திரங்களும், ஷை கர்மங்களைச் செய்யவேண்டிய முறைகளும் தமிழுரையுடனடங்கி இருக்கின்றன. தேவநாகர லிபியில் மூலம் அச்சிடப்பட்டிருக்கிறது. விவாஹாதி ஸம்ஸ்காரங்களி லுபயோகப்படும் மந்திரங்களின் கருத்தைத் தெரிந்துக் கொண்டால் ஷை கர்மங்களில் மிக்கசிரத்தை யுமுண்டாகுமென்பதில் யாதும் தடையில்லை. ஒவ்வொரு ஆஸ்திகனிடத்துமிப்புஸ்தக மொன்றிருப்பது மிகவுமவசியமாகும். கிளேஸ் காலிகோ பைண்டு ரூ. 3–8–0. சாதா பைண்டு ரூ. 3. ரப் ரூ. 2–8–0.

(10) தைத்திரீயோபநிஷத்து —இதில் சிக்ஷாவல்லீ, ஆனந்தவல்லீ, பிருகுவல்லீ என்ற மூன்று உபநிஷத்துக்களுக்கு—ஸ்ரீசங்கர பாஷ்யத்திற் கிணங்கிய அத்வைத ஸம்பிரதாயா னுஸாரியான அர்த்தமும், ஸ்ரீரங்கராமானுஜ பாஷ்யத்திற்கிணங்க விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயானுஸாரியான அர்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழுதப்பட்ட விசேஷமான பொருள்களும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமுள்ளது. ஸ்ரீசங்கரபாஷ்யத்திற் கூறிய விஷயங்கள் யாவும் தெளிவுபடுத்தி எழுதப்பட்டுள்ளன. கிளேஸ் காலிகோ பைண்டு ரூ. 3–8–0. சாதா பைண்டு ரூ. 3. ஆண்டிக் பேபர் ரூ. 4.

(11) தைத்திரீயாரண்யகம் முதல்பிரச்னம்.—இதுவே அருணம் என்றும் சூர்யநமஸ்கார பிரச்னம் என்றும் சொல்லப்படும். இதன் ஆரம்பம் भद्रंकर्णेभिः श्रृणुयामदेवाः என்பது. இதில் 130 பஞ்சாசத்துக்க ளடங்கியிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமும், நியாய வியாகரண பாரகதர் மீமாம்ஸா சிரோமணி பிரும்மஸ்ரீ பெரம்பூர் கணேச சாஸ்திரிகளால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, இவைகளுமுள்ளன. இம் மந்திரங்களைச் சொல்லி சூரிய நமஸ்காரஞ் செய்வதால் ஆரோக்ய முண்டாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. கிளேஸ் காலிகோபைண்டு ரூ. 3. சாதாபைண்டு ரூ. 2–8–0. ரப் ரூ. 2.

(12) புருஷ சூக்தம் முதலியன.—இதில் புருஷசூக்தம் ஸ்ரீ சூக்தம், துர்க்கா சூக்தம், ஆதிசங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமிகளவர்களால் செய்யப்பட்ட கனகதாராஸ்தவம் என்ற லக்ஷ்மீ ஸ்தோத்திரம் இவை எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷவுரை இவைகளுடன் அடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியில் மந்திரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீசூக்த முகவுரையில் ஸ்ரீ சூக்த ஹோமவிதி ஸ்ரீ மந்திரம் முதலிய அருமையான விஷயங்களும், புருஷ சூக்த முகவுரையில் புருஷ சூக்த ஹோமவிதியும் சேர்க்கப் பட்டிருக்கிறது
விலை 1-8-0

(13) ஸ்ரீ ருத்திரம்.—கிரந்த லிபியில் மூலமும் தமிழுரையு முள்ளது. கிளேஸ் காபி 1-8-0. ரப் காபி 1-0-0.

## (14) த்ரிவேதி ஸந்த்யாவந்தனம்.

முதற் பதிப்பு.—இதில் தேவநாகரலிபியில் மட்டும் மூலமும், தமிழுரையுமுள்ளது. கிளேஸ் ரூ. 2. ரப் ரூ. 1–4–0.

இரண்டாம் பதிப்பு—இதில் ருக், யஜுஸ், ஸாமவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள் யாவும், தேவநாகரம், கிரந்தம், தமிழ் ஆகிய மூன்று எழுத்துக்களிலும் அச்சடிக்கப்பட்டிருப்பதுடன் தமிழில் பதவுரை எழுதும்பொழுதும் அதே மூன்று எழுத்துக்களிலும் மந்திரபதங்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன.

உதாஹரணமாய்—(மூலம்) आयातु वरदादेवि (ஆயாது வரதாதேவி ஆயாது வரதாதேவீ) (பதவுரை) वरदा (வரதா வரதா)= வேண்டிய வரனைத்தருகின்ற देवी (தேவீ தேவீ)=தேவியானவள் आयातु (ஆயாது ஆயாது)=என்னை யனுக்கிரஹிக்கவேண்டி வரட்டும். என்ற மாதிரியாய் எல்லா மந்திரங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தப்பதிப்பானது ஸந்தியா மந்திரார்த்தங்களை அறிந்து கொள்ள ஆவலுள்ள எவர்க்கும் மிக்க மிக்க உபயோகமான தென்பதில் யாதும் ஆக்ஷேபமில்லை. மேலும், பிராணாயா

ணத்தைப்பற்றியும், காயத்திரீ மந்திரார்த்தத்தைப் பற்றியும், அர்க்கியம் விடுதலைப்பற்றியும், ஆஸனக்கிரமத்தைப் பற்றியும், காலையில் ஜபிக்கவேண்டிய (ப்ராத: ஸ்மரணீயம்) தைப் பற்றியும், மற்றும் பல விஷயங்களைப்பற்றியும், பலவாசங்கா ஸமாதானங்களுடன் இப்புஸ்தகத்திலெழுதியிருப்பதுபோல் வேறு எந்தப்புஸ்தகத்திலும் இதுகாறும் வெளிவந்ததில்லையென்று நாம் சொல்லுவது மிகையாகா. மேலும், இப்பதிப்பில் தனியாய் மூன்றுவேதிகளின் ஸந்தியாமந்திரங்கள்யாவையும் தேவநாகரம், கிரந்தம், தமிழ் மூன்று எழுத்திலும் அச்சிட்டிருப்பதுடன், மூன்றுவேதிகளின் ஸமிதாதானம், ஔபாஸனம், பிருமயக்ஞம் யக்ஞோபவீத தாரண மந்திரம், பீஷ்மதர்ப்பணம் ஆகிய இவ்விஷயங்களும் தேவநாகரம், கிரந்தம் ஆகிய இரண்டெழுத்தில் மட்டும் அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் டபிள்கிரௌன் 16 பக்க அளவில் 25 பாரங்களும், 400 பக்கங்களும் கொண்டது.

புல்காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3—0—0.

சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2—4—0.

## மூன்றுவேதிகளின் ஸந்தியாதி மந்திரங்கள்.

(15) இதில் சந்தியா மந்திரங்களும், ஔபாஸனம் முதலியவற்றின் மந்திரங்களும் முற்கூறியபடி அச்சடித்துத் தனியாய் விலைக்குக் கொடுக்கப்படுகிறது. இதில் 144 பக்கங்க ளடங்கியது.

சாதா பைண்டு விலை அணா 12.

(16) யாஜுஷ ஸூர்ய நமஸ்கார மந்திரங்கள்.—பிரதி தினமும் செய்யவேண்டிய சூர்யநமஸ்கார மந்திரங்கள் தமிழில் பதவுரை, கருத்துரை விசேஷ வுரைகளுட னிதிலடங்கி இருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே மந்திரங்கள் போடப்பட் டிருக்கின்றன. தேவநாகரலிபியிலேயே நவக்கிரஹ நமஸ்கார மந்திரம், ஆதித்ய ஹிருதயம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணா 4. 5 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியும் பெறலாம்.

## தர்சன க்ரந்தங்ள்.

(17) சாங்கியதத்துவ காரிகா — இதில் ஈசுவரகிருஷ்ணர் என்ற மஹானால் செய்யப்பட்ட காரிகைகளும், வாசஸ்பதி மிச்ரர் என்ற மஹானால் செய்யப்பட்ட "ஸாங்கியதத்துவ கௌமுதீ" என்ற அவற்றின் வியாக்கியானமும் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு சுலோகங்களுக்கும் எளிய தமிழ்நடையில் எழுதப்பட்ட பதவுரை கருத்துரைகளும் ஸாங்கிய தத்துவ கௌமுதீ என்ற வியாக்யானத்தின் கருத்தை உள்ளது உள்ளபடி வெளியிடும் தமிழ் மொழிபெயர்ப்புமடங்கி இருக்கின்றன. ஸாங்கிய சித்தாந்தத்தைத் தெரிந்து கொள்வதற்கு இதற்

கு நிகரான நூல் உலகில் கிடையா என்பது திண்ணம். கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2.

## பாதஞ்ஜலயோக ஸூத்திரம்

(18) இது பதஞ்ஜலி மஹருஷியால் செய்யப்பட்டது. இதில் 4 பாதங்களுண்டு. இப்பதிப்பில் ஒவ்வொரு ஸூத்திரமும் தேவநாகரம் தமிழ் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரை எழுதுமிடத்தும் ஷை இரண்டு எழுத்துக்களிலும் சூத்திரபதங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதற்கு (1) வியாஸபாஷ்யம், (2) வாசஸ்பதி மிச்ரரின் வியாக்கியானம், (3) நாகோஜிபட்டவிருத்தி, (4) பாவாகணேசீய வியாக்கியானம், (5) ராமானந்த ஸ்வாமிகளின் வியாக்கியானம், (6) ஸதாசிவேந்திர ஸரஸ்வதிகளின் விருத்தி, (7) போஜவிருத்தி ஆகிய 7 வியாக்கியானங்களைத் தழுவி விரிவாய் தமிழில் பதவுரை, கருத்துரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆரிய சாஸ்திரங்களின் தத்துவம் யாவும் இப்புஸ்தகத்தைப் படித்தால்தான் நன்கு புலப்படும். இச்சமயத்தை வீணுக்க வேண்டாம். புல் காலிகோ பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3-8-0. சாதா பைண்டு செய்த கிளேஸ் காபி ரூ. 3-0-0. சாதா பைண்டு செய்த ரப் காபி ரூ. 2-8-0.

## ॥ स्वाराज्यसिद्धिः ॥

(19) **सर्वतन्त्रस्वतन्त्रैः श्रीगङ्गाधरेन्द्रसरस्वतीन्द्रैः विरचिता** तैरेव विरचितया **कैवल्यकल्पद्रुमाख्यव्याख्यया** वेदान्तविभूषणशास्त्ररत्नाकरादिबिरुदाञ्चितैः चेन्नपुरीस्थ-संस्कृतकलाशालाप्रधानाद्वैतवेदान्त शास्त्राध्यापकैः ब्रह्मश्रीयुत करुङ्गुळं **कृष्ण शास्त्रिभिः** विरचितया **परिमळाख्य** विषमस्थलटिप्पण्या च समेता ॥

**भोमहाशयाः!**

**अयं च ग्रन्थः कृत्स्नमद्वैतसिद्धान्तसर्वस्वं प्रसन्नसरळगंभीरमधुरैः मूलश्लोकैः, तद्विवरणैश्च करतलामलकवत्प्रकटीकरोतीत्ये तदनुभवसाक्षिकं वाचकमहाशयानाम्। यथायं ग्रन्थः सुस्पष्टमामूलाग्रमद्वैतसिद्धान्तं प्रकाशयति न तथान्यः प्रकरणग्रन्थ इति मुक्तकण्ठं वक्तुं पार्येत । अयं च ग्रन्थः यद्यपि काश्यां शिलालिपिभिः मुद्रित आस्ते, अथापि सुन्दराक्षरैरमुद्रणात्, अशुद्धिबहुलत्वात्, विषमस्थलटिप्पण्यभावाच्च न पठितॄणां हृदयङ्गमो वर्तत इति सुन्दरैः सीसकाक्षरैः अतिधवळश्लक्ष्णायां पत्रिकायां अर्थावबोधोपयोगिचिह्नैः परिष्कृत्य इदानीमस्माभिः स्वकीयार्यमतसंवर्द्धनीमुद्राक्षरशालायां मुद्रितः। एतत्पुस्तकमेकं ग्रहीत्वा अस्मदुद्यमं सफलयेयुरत्रभवन्त इति विश्वसिमः ॥**

**मूल्यम्...ग्लेस् . ४-०-०. रफ्. ३-८-०,**

## ஸ்தோத்திர கிரந்தங்கள்.

(20) ஸ்ரீகோபிகாகீதம் — ராஸக்ரீடா காலத்தில் பகவானைக் காணாது அவரை நேரில் வரவழைப்பதற்காக ஸ்ரீகோபிகைகள் உள்ளம் உருகிப்பாடிய சுலோகரூபமான பாடல்கள். பதவுரை, கருத்துரைகளும் ராஸக்ரீடா ரஹஸ்யார்த்தமும் உள்ளது அ. 12.

(21) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—இதில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், விஷ்ணுஸஹஸ்ரநாமாவளி, துவாதசநாம பஞ்சரம், பஞ்சாயுதஸ்தோத்திரம், ஸ்ரீ தேசிகனால் ஸாதிக்கப் பட்ட—தசாவதார ஸ்தோத்திரம், பகவத்தியான ஸோபானம், ஸ்ரீ கோபாலவிம்சதி, திருவிச நல்லூர் அய்யாவாள் அவர்களால் செய்யப்பட்ட ஸ்ரீகிருஷ்ணத்வாதச மஞ்சரீ, ஸ்ரீகிருஷ்ணாஷ்டோ த்தர சதநாமாவளி இவைகளடங்கி யிருக்கின்றன. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. (நாகரலிபி) விலை

(22) இந்திராக்ஷீ சிவகவச ஸ்தோத்திரம்—தேவநாகரலிபி

(23) நீதிசதகம்—தேவநாகரலிபியில் மூலம் மட்டும் அணா. 2.

(24) வள்ளீபரிணய மணிப்ரவாளசதகம்.—இதில் தமிழும் தமும் கலந்த 100 சுலோகங்களில் ஸ்ரீசுப்பிரமணியர் வள்ளீ விவாஹம் செய்து கொண்டமுறைகள் மிக்க ஸரஸமாய் வர் டுள்ளன. இத்துடன் ஸ்ரீராமாயண ஸங்கிரஹ கன்னிகள், புகழ், ஸ்வரஸாஹித்யத்துடன் சேர்ந்த திருப்புகழ் நவரத் இவைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. வி 4.

## எளியதமிழ் நடையிலுள்ள உபன்யாஸங்கள்.

(25) சிராத்தம்.—விரிவான ஓர் தமிழ் உபன்யாஸம் தில் தத்காலம் சிராத்தத்தைப் பற்றி செய்யப்படும் எல்லாவித கைகளுக்கும் லோகானுபவத்தை யொட்டித் தக்க சமாதா பட்டிருக்கின்றன. 3.

(26) மறுபிறப்பும் லோகாந்தரமும்—பலவாக்ஷேப ஸமா கிய இனிய தமிழ் உபன்யாஸம். சரீரத்தைக் காட்டிலும் ஒரு வனிருக்கிறு னென்பதும், அவன் லோகாந்தரம் செல் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 4.

எல்லாப்புஸ்தகங்களுக்கும் வீ. பி. சார்ஜ் பிரத்

புஸ்தகம் கிடைக்குமிடம்:—

**கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,**

72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி,

சென்னை.